www.padippakam.com



# சாதி தேசம் பண்பாடு

ந.இரவீந்திரன்

சவுத்விஷன்

South Vision



**Saathi Thesam Panbaadu**
**Na.Raveendran**
First Published : June 2010

Published by

**South Vision**
132 (New No.251), Avvai Shanmugam Salai,
Gopalapuram, Chennai - 600 086.
e-mail : southvisionbalaji@gmail.com

People`s Publishing Price
Pages : 232
Rs. 60

**சாதி தேசம் பண்பாடு**
ந.இரவீந்திரன்

முதல்பதிப்பு : ஜூன் 2011

வெளியீடு

சவுத் விஷன்
ப. எண் 132, பு. எண் 251, அவ்வை சண்முகம் சாலை,
கோபாலபுரம், சென்னை - 600 086.
e-mail : southvisionbalaji@gmail.com

மக்கள் பதிப்பு விலை
பக்கங்கள் : 232
ரூ. 60

அச்சு : பாரதி அச்சகம், ஒளி அச்சு, அட்டை : த.மணிமாறன்

படிப்பகம்

www.padippakam.com



நூலாசிரியர் அறிமுகம்

இலங்கையின் வடபுலத்தில் யாழ்ப்பாண நகரிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள பண்டத்தெருப்புக்கு உட்பட்ட காலையடி எனும் கிராமத்தில் 1955இல் பிறந்தவர் நடேசன் இரவீந்திரன். காலையடி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராய்க் கலைப் பட்டதாரியாகவும், பின்னர் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களின் நெறிப்படுத்துகையில் ''திருக்குறளின் கல்விச் சிந்தனை'' எனும் பொருளில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் பண்பாட்டுப் பணி வாயிலாகக் கிராமத்தின் கலாசார மாற்றச் செயற்பாட்டு நடவடிக்கை முன்னெடுப்பில் முனைப்பாக இயங்கியதன் மூலமாக சமூக அறிவை வளர்த்துக் கொண்டவர். மன்றத்தின் தேடலில் கண்டடைந்த மார்க்ஸியத்தைத் தனது தத்துவத் தளமாக்கிக் கொண்டார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இப்போது புதிய ஜனநாயக கட்சி) இவரது அரசியல் பார்வையை விரிவுபடுத்தியது. மலையகத்தில் 1977இல் ஆசிரியராகச் செயற்படத் தொடங்கியதிலிருந்து மேலும் தனது சமூகவியல் பார்வையை வளர்த்துக்கொண்டார். மலையகத்தின் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் 1992இல் விரிவுரையாளராக இணைந்து, 1995இல் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று 2008வரை பணியாற்றினார். இப்பொழுது தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

தேசிய கலை இலக்கியப் பேரவையில் (இலங்கை) செயலாளராக 1988 முதல் 2008வரை இயங்கியவரான நூலாசிரியர், 1986இல் பாரதியின் மெய்ஞ்ஞானம் வாயிலாக தமிழிலக்கிய உலகுக்கு அறிமுகமானார். பாரதியைத் தனது பிரதான ஆய்வுக்கு உட்படுத்தியவர்; பாரதி தமிழ்த் தேசியம், இந்தியத் தேசியம், பூரண சமத்துவத்துடனான மனிதகுல விடுதலை என்பவை சார்ந்த மெய்யியலாளர். இது பாரதியில் சாத்தியப்பட்டவாறினை ஆய்வுக்கு உட்படுத்தியதன் பேறு இவரது ஏனைய நூல்கள். அத்தகைய இயங்கியல் செல் நெறியின் சமகால வெளிப்பாடும், எதிர்கால மார்க்கத்துக்கான மார்க்சியப் பிரயோகமும் பெறத்தக்க வடிவங்களைத் தேடுவதாக அமைவன இவரது தொடர்ந்த எழுத்தாக்கங்கள்.



ஆசிரியரின் பிற நூல்கள்

- பாரதியின் மெய்ஞ்ஞானம் - 1986
- ஏன்? (சிறுகதைத் தொகுதி) - 1992
- கலாசாரம், எதிர்க்கலாசாரம், புதிய கலாசாரம் - 1999
- பின்நவீனத்துவமும் அழகியலும் - 2001
- இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும் - 2001
- சாதியமும் சமூக மாற்றங்களும் - 2002
- இந்துத்துவக் காலச்சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம் - 2003
- இந்துத்துவம், இந்து சமயம், சமூகமாற்றங்கள் - 2003
- மதமும் மார்க்சியமும் - 2006
- திருக்குறளின் கல்விச் சிந்தனை - 2010

படிப்பகம்

www.padippakam.com



சமர்ப்பணம்

கே.ஏ.சுப்பிரமணியம் வாயிலாக
என் கருத்தியலை வடிவப்படுத்திய
1966 ஒக்டோபர் 21
எழுச்சி மார்க்கத்தின்
முன்னணிப் படையாகத் திகழ்ந்து,
எச்சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நெருப்பெறிந்து நீறாக்கித்
தீரமுடன் போராடிய
நிச்சாமத்துக்கு.



இந்த சிறப்புப் பதிப்பில் வெளிவந்துள்ள ஆக்கங்கள் முழுவதையும் தயாரித்து, ஒளிஅச்சு செய்து, பதிப்புத் திருத்தங்கள் செய்து, வடிவமைத்தது **சமூக ஆய்வு மையம்** ஆகும்.

இன்று பல பெரும் பதிப்பகங்கள் பதிப்புத் தொழிலில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் சமூக ஆய்வு மையம் லாப நோக்கமற்ற ஒரு மாற்றுப் பதிப்பக முயற்சியாகும்.

இம்மையம் பொதுநலன் கருதி கல்வி, பண்பாடு, அரசியல், பொருளாதாரம், வரலாறு போன்று இன்னும் பிற துறைகளில் பதிப்பு முயற்சிகளைக் கையேற்று வெளியிட உள்ளது. இம்முயற்சிகளுக்கு தங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குவதோடு உங்களின் ஆலோசனைகளையும் கருத்துகளையும் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



# பதிப்புரை

வரலாறு நம் கண்களுக்கு புலப்படுவது போல் இருப்பதில்லை. அதற்குள் பல உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. அவற்றை கிண்டி கிளறி தோண்டி எடுக்க நமக்கு பல ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. முதலில் நமது அகத்தை சரி செய்ய வேண்டும். நாம் ஏற்கனவே கற்றவற்றை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். அகம் நமக்கு உண்மையை தரிசிக்க விடுவதில்லை. நமக்குள்ளே உள்ள பல திரைகள் நமக்கு உண்மையைக் காண விடுவதில்லை. எனவே கற்றவற்றை மறப்பதும் கைவிடுவதும் புதியன கற்பதும் அவசியமாகும். அதுபொழுதுதான் வரலாற்றை நாம் கண்டறிய முடியும். சாதி தேசம் பண்பாடு பற்றி இதுவரை நாம் அறிந்திருந்ததை கைவிடவில்லை யெனில் நாம் வரலாற்றை புரிந்து கொள்வதில் தொடர்ந்து தவறு இழைப்போம். இதன் விளைவு சமூக புரட்சி நடந்திடாமல் தடுப்பவர்கள் வரிசையில் தான் சற்று முன் பின்னாக இருப்போமே தவிர வேராக விதையாக இருக்கப் போவதில்லை.

தேசியத்திற்குள் சிக்கிக் கொண்டு சாதிய ஒடுக்குமுறையைப் புறம் தள்ளுகிறோம். பண்பாட்டை ஒற்றை பரிமாணத்தில் பார்த்து விட்டு ஒடுக்கப்பட்டோரின் பண்பாட்டையும் ஒடுக்குகின்றவரின் பண்பாட்டையும் வேறுபடுத்தி பார்க்க தவறுகிறோம். ஒடுக்குகின்றவர்களின் பண்பாடு நிச்சயமாக கேள்விக்கும் விமர்சனத்திற்கும் உட்படுத்த வேண்டியே நிற்கிறது. ஜனநாயக விரோத அம்சங்கள் பல அது தாங்கி சுமந்து செல்கிறது. எனவே நாம் ஒடுக்குதலுக்குள்ளானவர்களின் பக்கம் நின்றே பலவற்றையும் அலசி பார்க்க வேண்டிய நிலையில் உள்ளோம். இப்புரிந்துணர்வை நாம் வளர்த்து கொள்ளாதவரை நாம் நமது அணிதிரட்டலில் எந்தவொரு முன்னேற்றத்தையும் காண முடியாது. ஒரு அங்குளம் கூட முந்த முடியாது. முன்னேற முடியாது.

இந்த தேடலின் பொழுதுதான் ந.இரவீந்திரனின் பிரசுரிக்கப்படாத சில கட்டுரைகளைப் பார்த்தேன், வாசித்தேன், பின் கூட்டாக சிலருடன் வாசித்தேன். விவாதித்தோம். கற்றல் முறையிலே பல புதியன சேர்ந்தன. பல உண்மைகள் தரிசிக்கப்பட்டன. நீங்களும் வாசித்து இதில் உள்ள கருத்துரைகளை உங்கள் அனுபவங்களோடு இணைந்து மேலும் பலப்படுத்துங்கள்.

*6. டிசம்பர் 2010*

*எம்.பாலாஜி*

*சென்னை*



# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 9 |
| என்னுரை | 26 |
| நுழைவாயிலாக ஒரு பின்னுரை | 33 |
| 1. பஞ்சமர் இலக்கியம் (ஈழத் தமிழ் தலித் இலக்கியம்) | 39 |
| 2. சுயநிர்ணய உரிமைத் தீர்வில் இரட்டைத் தேசியம் | 107 |
| 3. தேசிய எழுச்சியின் இன்றைய போக்கில் தலித் பிரச்சினை | 121 |
| 4. அம்பேத்கரும் எம்.சி.சுப்பிரமணியமும் | 137 |
| 5. சாதியச் சமூகத்தில் தேசியம் | 152 |
| 6. சாதி தேசம் பண்பாடு | 171 |
| 7. மார்க்சியப் பிரயோகத்தில் தேசம் சாதி பண்பாடு | 192 |


படிப்பகம்

www.padippakam.com



# முன்னுரை

ஆனையிறவுக்கு அங்காலை எல்லாரும் ஒண்டுதானா? இல்லை.

## 1

சாதியத்தைப் பற்றிய பேச்சைத் தொடங்கும்போதெல்லாம் இல்லாத ஒன்றைப்பற்றி பேசி எதற்கப்பா பிரச்னையைக் கிளப்புறீங்க என்ற குற்றச்சாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. கிளப்பிவிடாத வரைக்கும் சாதியை பத்தோட பதினொன்னு, அத்தோட இதுவு மொன்னு என்று ஒரு பிரச்னையாகக்கூட கருதத் தயாராயில்லாத வர்களின் இந்தக் குற்றச்சாட்டை புறந்தள்ளி அப்படியா, எப்போது ஒழித்துக்கட்டினீர்கள் என்று கேட்டால் நாங்களும் அவங்களும் என நீண்டதொரு பிரசங்கம் தொடங்கிவிடுகிறது. இந்த நாங்களும் அவங்களும் என்ற சொற்பயன்பாடே சாதியைத்தான் குறிக்கிறது என்று சுட்டிக்காட்டினால், இப்படி எடுத்ததற்கெல்லாம் குதர்க்கம் பேசினால் என்னத்துக்கு ஆகும் என்று முகத்தை திருப்பிக் கொள்கிறார்கள். நியாய மான கேள்விக்கு பதிலளிக்க வக்கில்லாதபோது தர்க்கம் குதர்க்கமாக பழித்துரைக்கப்படுகிறது. விவாதிக்க வேண்டிய ஒரு தலையாயப் பிரச்னை இப்படியாகத்தான் தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடு போல திரிந்துபோகிறது.

உண்மையிலேயே சாதி என்பது ஒழித்துக்கட்டப்பட்டுவிட்ட கடந்தகாலமாய் இருக்க நாம்தான் அதை அம்பேத்கர் சொன்னது போல வாழும் கடந்தகாலமாக கருதி தூக்கி வைத்துக்கொண்டு அலைகிறோமா என்கிற சந்தேகத்தில் சாதியொழிப்பு என்று உரிமை கோரப்பட்டவற்றை தொகுத்துப் பார்த்தால், தீண்டாமையின் சில வடிவங்கள் ஒழித்துக் கட்டப்பட்டிருப்பதைத்தான் சாதியொழிப்பு என்று தப்பிதமான பொருள்மயக்கத்துடன் கூறப்பட்டு வருவதை உணரமுடிகிறது. சிலவகையான தீண்டாமை வடிவங்கள் ஒழித்துக் கட்டப்பட்டதும்கூட ஒடுக்கப்பட்ட சாதிகளின் இடையறாத போராட்டங்களாலும் மீறல்களாலும் அதன்பேரில் உருவான சட்டத்தின் தலையீடுகளாலும் தானேயன்றி, ஒடுக்கும் சாதியினருக்குள் ஏற்பட்ட மனமாற்றத்தினாலோ மனிதப்பண்பினாலோ அல்ல.

தீண்டாமையின் பல்வேறு வடிவங்களை- அவை தீண்டாமையின் வடிவங்கள்தான் என்று புரிந்து கொள்வதிலேயே தீண்டத்தக்க சாதி யினருக்கு பெரும் மனத்தடைகள் உள்ளன. சாதிமுறைமை வழங்கி யுள்ள முற்றுரிமைகள் சிலவற்றால் புரையேறிப் போயிருக்கும் அவர்க ளது கண்களுக்கு ஏற்றத்தாழ்வும் புறக்கணிப்பும் இயல்பானதாகத்



தெரிவதால் சொல் செயல் தொனி உடல்மொழி மௌனம் ஆரவாரம் என்று சாத்தியமான வழிகளிலெல்லாம் வெளிப்படும் தீண்டாமையின் புதிய வடிவங்களை காணும் திறன் பெறாதிருக்கின்றது அவர்களது சாதியமனம். சாதிமறுப்பாளர்கள் என்று தம்மை அறிவித்துக் கொண்ட வர்களும்கூட தலித்துகளைப் பற்றி வைத்திருக்கும் மதிப்பீடுகளும் அதன்பேரிலான அவர்களது மொழிப்பிரயோகமும் புதுவகையான தீண்டாமை வடிவங்களை உற்பவிக்கின்றன. அதாவது சாதியெதிர்ப்பு வாதம் பேசி கிடைக்கும் அங்கீகாரத்தை தலித்தை அவமதிப்பதற்கான அதிகாரமாக உருமாற்றிக்கொள்ள முடிகிறது.

நிலையான புத்தியில்லாதவர்கள், எடுப்பார் கைப்பிள்ளைகள், கைக்கூலிகள், அடிமை மனோபாவிகள், ஆளுங்கூட்டத்து விசுவாசிகள், விலைபோகக்கூடியவர்கள், காசுக்காக எதையும் செய்யத் தயங்காதவர் கள், துரோகிகள், பண்பற்றவர்கள், தலைமைப்பண்பு இல்லாதவர்கள், தன்னாளுமை இல்லாதவர்கள் என்பதாக தலித்துகளின் மீது (இஸ்லாமியர் மீதும்கூட) இந்துமதம் படரவிட்டுள்ள பழிச் சொற்களை யும் அவமதிப்புகளையும் வழித்தெடுத்து பயன்படுத்துவதற்கு ஒருவரை அவரது சாதி உளவியலே நெட்டித்தள்ளுகிறது என்று சுட்டிக்காட்டி னால் ஹா... இவர்களை குத்தம் சொல்வதே சாதியமாகிவிடுமா என்று அடுத்துவரும் எகத்தாள கேள்விக்குள்ளும் சாதியமே துருத்தி நிற்கிறது. எல்லாவற்றையும் இயல்பாக பார்க்கப்பழகிய அந்த சாதிய மனம், இதெப்படி தலித் விரோதமாகும் என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டே அடுத்தடுத்த அவமதிப்புகளை நிகழ்த்துகிறது. அதாவது எது தலித் விரோதம் என்பதை வரையறுக்கும் உரிமையைக்கூட தலித்துக்கு விட்டுத்தர தயாரில்லாத இந்த மனநிலையைத் தான் ஆதிக்கசாதி உளவியல் என்று இவர்கள் ஒருபோதும் புரிந்துகொள்ளப் போவதில்லை என்பதால் அவர்களுக்கு பதிலளிப்பதை வீண் வேலையெனக் கருதி தலித்துகள் அமைதிகாத்தால், வாயடைக்க வச்சுட்டேன் பார்த்தியா என்று அதையும் முண்டா தட்டி வெற்றியாகக் கொண்டாடித் தீர்க்க தயாராயிருக்கிறது சாதிய மனம்.

எனவே வெளிப்படையாகத் தெரிந்த வடிவங்கள் மறைந்ததும்/ ஒழிக்கப்பட்டதும் தீண்டாமை ஒழிந்துவிட்டதாகவும், ஆகவே சாதியும் ஒழிந்துவிட்டதாகவும் அறிவிப்பதில் சாதியவாதியும் சாதிமறுப்பாள ரும் ஒருசேரத் துடிக்கின்றனர். ஒரு இடத்தில் அடைத்ததும் மறு இடத்தில் புடைக்கிற இந்த வினோத சீழ்க்கட்டியை கவனியாத இப்படி யான வெற்று அறிவிப்புகளும் பிரகடனங்களும் சாதியின்/ தீண்டா மையின் மேற்தோலைக்கூட கீறிவிடவில்லை. இலைகளைக் கிள்ளி விட்டாலும் கிளைகளை வெட்டிவிட்டாலும் வேர் இருக்கும்வரை எதுவும் துளிர்க்கும் என்கிற அடிப்படை அறிவுகூட இங்கு நிராகரிக்கப்பட்டுவிடுகிறது.

இந்துமதத்தில் மட்டுமல்லாது இந்தியாவிலுள்ள சகல மதங்களிலும் வட்டாரத்தன்மைகளுடன் கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட வடிவங்களில்

படிப்பகம்

www.padippakam.com



தீண்டாமை அப்பட்டமாக தலை விரித்தாடுவதை நிரூபிக்க ஆய்வுகள் எதுவும் தேவையில்லை. சீக்கியத்திற்குள் வந்துவிட்ட தலித்துகள் பற்றிய இளக்காரமான பார்வையிலிருந்தே சர்தார்ஜி ஜோக்குகள் புனையப்பட்டன. தேவாலயம் தொடங்கி கல்லறைவரை கிறிஸ்தவத்தில் சாதியம் பேணப்படுகிறது. தங்கும் விடுதியிலிருந்து அம்பேத்கரை பெட்டிப்படுக்கையோடு தெருவுக்கு விரட்டியடித்தன் மூலம் பார்சி மதமும் தனது தீண்டாமையை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. அஜ்லப், அஷ்ரப், அர்சால் என்பதாக இஸ்லாத்தின் சாதிப்படிநிலையும் அதனடியான விலக்குகளும் பாகுபாடுகளும் இருப்பது இப்போது பரவலாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

மதுரையில் நடத்தப்பட்ட ஒரு வன்கொடுமை பற்றிய வழக்கின் மேல்முறையீடு மீதான தீர்ப்பில், இரட்டைக் குவளை முறைகூட ஒழிக்கப்படாமலிருப்பதை உச்சநீதிமன்றமே உறுதி செய்துள்ளது. கேரளத்தில் பதிவுத்துறை ஐ.ஜி என்கிற உயரிய பொறுப்பிலிருந்த ஒரு தலித் அதிகாரி பணி ஓய்வு பெற்று வெளியேறியதும் அங்கிருந்த ஊழியர்கள் அவரது அறையை சாணமும் கோமியமும் ( மாட்டு மூத்திரம்தான்) தெளித்து சுத்தப்படுத்தி அவமதித்த விசயத்தில் மனிதவுரிமை ஆணையம் தலையிட்டுள்ளது. இவையெல்லாம் கர்ணபரம்பரை கதைகளல்ல, 2011ம் ஆண்டின் ஏப்ரல், மே மாத நிலவரங்கள். ( பார்க்க - கங்காணி மே 2011)

## 2

சாதியத் தகர்ப்பு போராட்டங்கள் என அறிவிக்கப்பட்ட எல்லாவிதமான நடவடிக்கைகளையும் அதிகபட்சமாக பிரச்சாரம் என்ற தலைப்பின்கீழ் தான் வகைப்படுத்தமுடியும். எதனை முன்வைத்தும் பிரச்சாரம் செய்யலாம், ஏற்பும் மறுப்பும் அவரவர் உரிமை. எனவே பிரச்சாரங்களுக்கு செவிமடுத்து எவரேனும் சாதியை விட்டுவிடுவார்கள் என நினைத்துக்கொள்வதை விடவும் முட்டாள் தனமானது எதுவும் இருக்கமுடியாது. தவிரவும் சாதியை விட்டுவிடு வதானது தனிப்பட்ட ஒருவர் தனித்து முடிவெடுத்து செயல்படுத்திவிட முடியாததாயும் உள்ளது. அப்படியானால் ஒவ்வொரு சாதியும் சாதியை கைவிட்டுவிடுவதாக கூட்டுமுடிவெப்பதாவது சாத்தியமா என்றால் அதற்கும் இல்லை என்பதே பதிலாக இருக்கிறது. சாதி, ஒரு சமூக உறவாகவும் கிஞ்சித்தும் நகன்றுவிட முடியாத வலைப்பின்னலுடன் வாழ்வின் எல்லாநிலையிலும் வழிநடத்துவதாயும் பிறப்பிலும் இறப்பிலும் பின்தொடர்வதாயும் இருக்கிறது. தனித்தியங்க முடியாத தனிநபர்களின் தொகுப்பாக இருக்கும் ஒரு சமுதாயத்தில் சாதியைக் கைவிடுவதை தனிநபர் பொறுப்பாக்கும்போது விளையப்போவது எதுவுமில்லை. வேண்டுமானால், ஒரு தனிநபர் சாதியை தனது சொந்தவிசயமாக வைத்துக் கொண்டு பிறர்மீது தீண்டாமைக் காட்டாமல் வாழ்வதற்கு முயற்சிக்கலாம். ஆனால் அதுவுமே பிரக்ஞைபூர்வமான விழிப்புநிலையில் மட்டுமே சாத்தியம். ஆனால்



தேவைப்படுவதெல்லாம் ஒருவர் தன்னியல்பில் எவ்வாறிருக்கிறார் என்பதே. இது மிகவும் சிக்கலும் சவாலுமானது. ஏனெனில், சகமனிதர்பால் சமத்துவம் பேணுகிறவராக இருந்துவிடும் போதும்கூட ஒருவர் தனது பழக்கவழக்கங்கள், வாழ்க்கைவட்டச் சடங்குகள் போன்றவற்றின் வழியே தனது சாதிய அடையாளத்தை பேணுகிறவராக வெளிப்பட்டுவிடும் நிலையில் அவர் எப்படிதான் சாதியைத் துறப்பார் என்று பேசப்படுவதில்லை. ஆனால் சாதியைத் துறக்க வேண்டுமென்று பொத்தாம் பொதுவாக அறிக்கைவிட்டு பிரச்சாரம் செய்வதில் சளைக்காதவர்களாய் இருக்கிறோம். எனவே பிரச்சாரம் செய்து சாதியை ஒழித்துவிட முடியுமென்றால் பிரச்சாரம் செய்து புதுப்புது சாதிகளை உருவாக்கிவிடவும் முடியும் தானே என்ற எளிய கேள்வி பலரையும் எரிச்சலடைய வைக்கிறது. வேறு என்னதான் செய்யச் சொல்கிறீர்கள் என்கிற எதிர்க்கேள்வி, பிரச்சாரத்தைத் தவிர வேறு எதையும் செய்யமாட்டோம் என்ற பிடிவாதத்தையும் உள்ளடக்கியே வெளிப்படுகிறது. இந்த அரைகுறை பிரச்சாரம்கூட சாதியத்தின் அடிப்படைகளை தகர்ப்பது பற்றியதாக அல்லாமல் தீண்டாமை ஒழிப்பு பற்றியதாகவே சுருங்கிவிடுவதைக் காண மறுக்கிறோம். யாழ்ப்பாணத்தில் சாதியத்தைத் தகர்க்க நடைபெற்ற போராட்டங்கள் என மிகைப்படுத்தி விளிக்கப்படுகிற தேநீர்க்கடைப் பிரவேசம், ஆலயப்பிரவேசம் போன்றவையும்கூட தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கை என்ற எல்லையைத் தாண்டவியலாதவையே. ( தலித்துகளால் தலைமையேற்று நடத்தப்படுகிற போராட்டங்களையெல்லாம் சாதியொழிப்பு போராட்டம் என்று மிகைப்படுத்தியும், தலித்தல்லா தாரால்/ அமைப்புகளால் நடத்தப்படும் போராட்டங்களை வெறும் தீண்டாமை எதிர்ப்பு நடவடிக்கைகளென மட்டம்தட்டியும் கூறிக் கொள்கிற தொண்டு நிறுவனங்களுக்கு சாதி/தீண்டாமை ஒழிப்பு என்பதெல்லாம் வெறும் ப்ராஜக்ட்டுகள் மட்டுமே. சாதியத்தை எதிர்க்கச் சொல்லி ஃபண்டு கிடைத்தால் சாதியை ஒழிக்காமல் தீண்டாமை ஒழியுமா என்றும், தீண்டாமை ஒழிப்பு ப்ராஜக்டுக்கு ஃபண்டு கிடைத்தால் சாதியொழியும் வரை தீண்டாமையை எதிர்க் காமல் காத்திருக்க வேண்டுமா என்றும் களமிறங்கி குழப்புவார்கள்)

சாதியமே தீண்டாமையின் தோற்றுவாய் என்கிற உள்ளிணைப்பைக் கண்டு சொன்ன பூலேவும் அம்பேத்கரும் பெரியாரும்கூட தமது ஆற்றலின் பெரும்பகுதியை தீண்டாமைக்கு எதிராகத்தான் செலவிட வேண்டியிருந்தது. அதேவேளையில் தீண்டாமைக்கு எதிராக திரட்டப்படக்கூடிய மக்களது போராட்டவுணர்வானது ஒட்டுமொத்த சாதியமைப்புக்கும் எதிரானதாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதில் குறியாயிருந்தார்கள். எனவே அவர்கள் இந்துமதத்தின் புராணங்களையும் இதிகாசங்களையும் பழுதறப் பயின்று அவற்றின் புனைவுகளையும் பொய்களையும் அம்பலப்படுத்தினர். ஒரு இந்துவாக நீடிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளையும் இந்துமதத்திலிருந்து வெளியேறுவதால் உண்டாகும் சுயமரியாதையையும் அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



எடுத்தியம்பினர். முப்பத்து முக்கோடி தேவர்களையும் நடுத்தெருவில் அநாதைகளாக விட்டுவிட்டு வெளியேறிவிடும்படி அவர்கள் விடுத்த அறைகூவல் விஞ்ஞப்பூர்வமான நாத்திகமாக வளர்த்தெடுக்கும் சாத்தியங்களைக் கொண்டது. பொதுஇடங்களில் புழங்குவதற்கான உரிமையை நிலைநாட்டத்தான் கோயில் குளங்களில் நுழையும் போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கிறதேயன்றி அவ்விடத்தின் புனிதங்கள் பற்றிய பிரமையினால் அல்ல என்பதை அவர்கள் தொடர்ந்து தெளிவுபடுத்தி வந்துள்ளனர்.

...இந்தக் கோவிலில் நுழைவது பிரச்னை முழுவதையும் தீர்த்து வைக்காது. நமது பிரச்சினை அரசியல், சமூகம், மதம், பொருளாதாரம், கல்வி முதலியவற்றுடன் தொடர்பு கொண்டது... கோவிலில் உறையும் கடவுள் கல்லால் செய்யப்பட்டது என்பதை நாமறிவோம். அவரைச் சும்மா உற்று நோக்குவதோ அல்லது வழிபடுவதோ நமது பிரச்னையை எவ்வகையிலும் தீர்த்துவைக்காது... - என்கிற தெளிவுடன் நாசிக் காலாராம் கோவில்நுழைவுப் போராட்டத்திற்கு தலைமையேற்ற அம்பேத்கர் அதற்குப் பிறகு கோவில்நுழைவுப் போராட்டம் எதற்கும் முன்னுரிமை வழங்கியதில்லை என்பதை கவனிக்க வேண்டியுள்ளது. அந்த நாசிக் காலாராம் கோவில் நுழைவையொட்டி நடைபெற்ற விவாதத்தில் காந்திக்கு அவர் பதிலளிக்கும் போது, கோவில் நுழைவை நீங்கள் இறுதி லட்சியமாக கருதுகிறீர்கள். எங்களைப் பொறுத்தவரை அது வெறும் தொடக்கம் தான் என்கிறார். தெய்வத்தின் சன்னிதியை விடவும் மனிதர்களின் வசிப்பிடத்திலும் வாழ்வாதாரத்திலும் சமத்து வம் நிலவ வேண்டும் என்கிற விருப்பம் வெறுமனே தீண்டத்தகாத மக்களின் பாற்பட்டதல்ல. அது ஒட்டுமொத்த சமூகத்திற்குமான விழைவு.

ஆனால் தமக்கு மேலேயுள்ள சாதியினருடன் உணவுறவும் மணவுறவும் கொள்ள முடியாத நிலை நீடிக்கும் அதேவேளையில் சிலவகையான தீண்டாமை வடிவங்களிலிருந்து விடுபட்டுவிட்டதைக் கொண்டே தாம் தொடத்தக்க சாதியினராக உயர்ந்துவிட்டதான போலிப் பெருமிதத்தில் திளைக்கத் தொடங்கிய சூத்திரசாதியினர் சாதியமைப்பின் ஆகப்பெரும் காவலர்களாக தம்மை வளர்த்தெடுத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் மநுசாஸ்திரம் என்கிற பெயரையே கேள்விபட்டிராத போதும்கூட அந்த சட்டத்தொகுப்பில் வகுக்கப்பட் டுள்ள பல்வேறு தீண்டாமை வடிவங்களையும் ஒடுக்குமுறைகளையும் இயல்பான சாதி முனைப்பிலிருந்து கடைபிடிக்கிறவர்களாயுள்ளனர். எஜமானனிடம் நல்லப்பேரெடுக்கத் துடிக்கும் அடியாளைப் போல அவர்கள் சாதியமைப்புக்கு விசுவாசம் தெரிவிக்கிறவர்களாய் மாறியுள்ளனர். எனவே, இப்போது பார்ப்பன, சத்திரிய, வைசிய சூத்திர சாதிகளின் தீண்டாமைக்கு ஆட்படுபவர்களாக தலித்துகள் மட்டுமே எஞ்சியுள்ளதாக சட்டகப்பரப்பை சுருக்க வேண்டியுள்ளது. இந்துமதத்திற்கு வெளியேயும் இந்துக்களின் ஊருக்கு வெளியேயும்



ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்த தீண்டத்தகாதார் யார் என்பதற்கான பதில் வரலாற்றில் காணக்கிடைக்கிறது. பார்ப்பன/ வேதத்தின் முதன்மையை ஏற்கமறுத்ததால் வர்ணப்பாகுபாட்டிற்கு வெளியே அவர்ணர்களாக ( பஞ்சவர்ணர்களாக அல்ல) நிறுத்தப்பட்டவர்களும், வர்ணக்கலப்பில் பிரதிலோமச் சாதியினராக பிறந்தவர்களும், பௌத்தம் தோற்கடிக்கப்பட்டதால் நொறுக்கித் தள்ளப்பட்டவர் களும், போர்க்கால அடிமைகளும் கொண்ட மக்கள் தொகுப்பே இந்தத் தீண்டத்தகாதவர்கள். இந்த வரலாற்றுக் காரணங்களையும் மாட்டுக்கறி உண்ணும் வழக்கத்தையும் அடிப்படையாக வைத்து தீண்டத்தகாதார் யார் என்பதை அடையாளப்படுத்தும் 10 நெறிமுறை கள் 1911ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் வகுக்கப் பட்டது. தீண்டாதார் யார் என்கிற தனது வரையறுப்புக்கு இந்த நெறிமுறைகளையும் அம்பேத்கர் கணக்கிலெடுத்துக் கொண்டாரென முனவர்.தர்மராஜன் சுட்டுவதை இங்கு கவனங்கொள்ள வேண்டியுள் ளது. எனில் இந்தியத் தீண்டத்தகாதார் பற்றிய இந்த வரையறைகளும் பௌத்தப் பின்புலமும் யாழ்ப்பாண தீண்டாதாருக்குப் பொருந்துமா என்கிற ஆய்வுகள் இனிவரக்கூடும். இன்றைய அரசியல் தேவை யிலிருந்து தமிழ்ப்பகுதிக்கும் பௌத்தத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று சொல்லிவிடத் துணிவோமானால் அது வரலாற்றைத் திரிக்கும் மோசடியாகிவிடும்.

## 3

அம்பேத்கர் பிறப்பதற்கு முன்பிருந்தே தீண்டத்தகாதார் பற்றி யோசிக்கத் தொடங்கிவிட்டதாக உரிமைகோரும் காந்தி, தீண்டா மையை ஒரு பாவம் என்று சொன்னதன் மூலம் அந்தப் பாவத்திற்கு பரிகாரம் தேடும் பொறுப்பை தனிமனிதனின் மனசாட்சியிடம் ஒப்படைத்தார். மனசாட்சியின்றியும் பழிபாவங்களுக்கு அஞ்சாமலும் மனவிகாரங்களை வெளிப்படுத்துவதில் நெடுங்காலப் பயிற்சி பெற்றிருக்கும் சாதிய மனங்கள் காந்தியின் பாவபுண்ணிய சாபங்களைக் கண்டு அஞ்சிவிடவில்லை. பாவத்திலிருந்து விடுபடுவதை விடவும் பாவத்தை செய்துகொண்டே அதற்கு பரிகாரத்தையும் செய்கிற சூட்சுமங்களை அறிந்திருந்த சாதிய மனங்கள் தீண்டாமையைக் கைவிடாமல் போனதில் ஆச்சர்யமில்லை. ஆனாலும் அறிவுறுத்தி இணங்க வைப்பது தான் தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதற்கு சிறந்த மார்க்கம் என்பதே கடைசிவரை காந்தியின் நிலைப்பாடாக இருந்தது. காந்தியை பல்வேறு கோணங்களில் விமர்சிக்கிறவர்கள்கூட-சாதி/ தீண்டாமை என்கிற விசயத்தில் அவர்கள் கைராட்டை சுற்றாத போதும் கதராடை அணியாதபோதும்- காந்தியின் பக்தர்களாகவே காட்சியளிக்கின்றனர்.

கணநேரத்தில் தோன்றி மறையும் புனையுறு தோற்றம் போல் மகாத்மாக்கள் தூசியைக் கிளப்புகிறார்களே தவிர, இலக்குகளை குறிவைப்பதில்லை... என்று காந்தியைப் பற்றிய சரியான புரிதல்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருந்த அம்பேத்கர் அவரிடம் சாதியொழிப்பு பற்றி பேசுவது வீணென உணர்ந்திருந்தார். எனவே காந்தியுடனான முதற்சந்திப்பில் தீண்டாமை ஒழிப்பு பற்றி மட்டுமே அவர் உரையாடினார். கதராடை அணிகிறவர்களை மட்டுமே உறுப்பினராக ஏற்க முடியும் என்று அறிவிக்க முடிந்த காங்கிரஸ், தீண்டாமையை கடைபிடிக்காதவர் மட்டுமே காங்கிரசில் சேரமுடியும் என்கிற நிபந்தனையை ஏன் அறிவிக்கவில்லை என்று அப்போது காந்தியிடம் அம்பேத்கர் எழுப்பிய கேள்வி இன்னும் விடையளிக்கப்படாமல்தான் இருக்கிறது. அக்கேள்வி காந்தியையும் காங்கிரசையும் கடந்து எல்லாக்கட்சிகளையும் கடந்த 80 ஆண்டுகாலமாக மறித்து நிற்கிறது. சாதியுணர்வை வெளிப்படுத்து வோருக்கு எம்மில் இடமில்லை என்று பேசாத கட்சியில்லை. அப்படியானால் சாதி யாரிடத்தில்தான் தங்கியிருக்கிறது? காந்தியைப் போலல்லாமல் அம்பேத்கர் தீண்டாமையை ஒரு குற்றமென அறிவித்தார். அந்தக் குற்றத்தில் ஈடுபடுவோரை சட்டத்தின் துணைகொண்டு தண்டிப்பதை அரசின் பொறுப்பாக்கினார். சாதியை அப்படியே வைத்துக்கொண்டு தீண்டாமையை மட்டும் ஒழித்து விட முடியுமா என்ற கேள்வியை தொடர்ந்து எழுப்பி வந்த அம்பேத்கர் தீண்டாமை ஒழிக்கப்படுவதை சாதியொழிப்பின் முதற்படியெனும் வாதத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அதேவேளையில் சாதியொழியும் போது தான் தீண்டாமை ஒழியும் என்று தத்துவ விளக்கம் கொடுத்துவிட்டு - ஆகவே இப்போது போராடி எதுவும் மாறிவிடப் போவதில்லை- என்று அவர் களத்திலிருந்து ளியேறிப் போய் விடவுமில்லை. தீண்டாமைக்கு எதிராக கடுமையானச் சட்டங்களும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் மற்றும் நிர்வாக உறுதியும் காட்டப்படுமானால் தீண்டாமையை வெளிப்படுத்தும் சாதியமனத்தை அடக்கி நிறுத்தமுடியும் என்று நம்பினார். அதற்கான சட்டங்களை நிறைவேற்ற வைப்பதற்காக தம் சொந்த மக்களை அணிதிரட்டி ஆட்சியாளர்களுக்கு நெருக்கடிகளை உருவாக்கினார். ஆனால் எரிவதைப் பிடுங்கினால்தான் கொதிப்பது அடங்கும் என்கிற எளியவிதியை அறிந்திருந்த அவர் தீண்டாமையை எதிர்த்து நடக்கும் எந்தவொரு போராட்டத்யும் சாதியத்தின் அடிப்படையை தகர்க்க வேண்டியதன் அவசியத்தோடு இணைத்தே வந்திருந்தார்.

எனில், தீண்டாமையை ஒரு குற்றம் என அறிவித்ததுபோல அவர் ஏன் சாதியை ஒரு குற்றமாக அறிவிக்கவில்லை? தீண்டாமையை ஒழிப்பதற்குரிய சட்டங்களை முன்மொழிந்த அவர் ஏன் சாதியொழிப்புக்கான சட்டவரைவு எதையும் முன்வைக்கவில்லை? மதச்சார்பற்ற அரசு என்று அரசியல் சட்டத்தில் குறிப்பிட முடிந்த அவரால் சாதிச்சார்பற்ற அரசு என்று ஏன் சொல்லமுடியவில்லை என்பதான கேள்விகள் எழும்புகின்றன. இங்கேதான் சாதியின் உருவாக்கம் பற்றிய அம்பேத்கரது ஆய்வுகள் கவனம் பெறுகின்றன.

சாதியை யார், எப்போது, எங்கே, எதற்காக, எப்படி உருவாக்கினார்கள் என்பதில் வரலாற்றுரீதியான தெளிவுள்ளவர்கள்,



சாதியின் இன்றைய இருப்பையும் அதன் போக்கையும் அவதானிப்பதில் திசைமாறிப் போகிறார்கள். சாதியின் தோற்றத்தைக் கண்டுபிடித்து விட்டால் அதை ஒழிப்பது எளிதாகிவிடும் என்று சொல்லிக்கொண்டு ஆய்வுக்குள் தலையைக் கவிழ்த்தியவர்கள் அதற்கப்புறம் ஒருபோதும் நிமிர்ந்து தமது சுற்றுப்புறத்தை பார்க்கவேயில்லை. மறுதலையாக, சாதியின் இருப்பையும் போக்கையும் நடப்புலகத்தின் அனுபவங்களி லிருந்து துல்லியமாக உணர்ந்துள்ளவர்களோ சாதியை அதன் வர லாற்றுத் தொடர்ச்சியில் வைத்துப் பார்க்கத் தவறுகின்றனர். கைப்புண் ணுக்கு கண்ணாடி தேவையா என்ற வாதத்தின் பின்னே ஒளிந்துகொள் வதில் உள்ள சவுகரியங்கள் தருகிற மயக்கம், சாதியை அதன் முழுப் பரி மாணத்தில் வைத்துப் பார்ப்பதிலிருந்து இவர்களை தடுத்துவிடுகிறது.

சாதி என்றால் இன்னதுதான் என்று அதன் ஆதரவாளர்களைப் போலவே எதிர்ப்பாளர்களும் திட்டவட்டமாக வரையறுப்பதில்லை. சாதி என்பது இந்தியச் சமூகத்தில் ஒரு கருத்தாகவும் உணர்வாகவும் நம்பிக்கையாகவும் இருக்கிறது. அது தனது சகமனிதரின் பாலான உறவு/ உறவின்மைக்கான வடிவங்கள் மற்றும் காரணங்களின் வழியே தன்னை அடையாளப்படுத்துகிறது. ஓரிடத்தில் கூடி வாழவும், சேர்ந்துண் ணவும், மணவுறவுக் கொள்ளவும் இணக்கம் கொண்டுள்ள ஒரு குழு வாக சாதி இருக்கிறது. குறிப்பிட்ட வகையான வழக்கங்கள், சடங்குகள், தெய்வங்கள், உணவுப்பழக்கம் முதலியவற்றை பின்பற்றுவதன் மூலம் ஒவ்வொரு குழுவும் தனித்தன்மை கொண்டதொரு சாதியாக உருப் பெற்றிருக்கிறது. ஆகவே இத்தகைய குழுக்களின் தொகுப்பாகவே இந்தியச் சமூகம் உருப்பெற்றுள்ளது எனலாம். அல்லது இந்தியச்சமூகம் எனப்படுவதை பகுத்தோமானால் அது இத்தகைய 2800 பெருங் குழுக்களாக இருப்பதைக் காணமுடியும். சாதியடுக்கில் இப்பெருங் குழுக்கள் வகிக்கும் வரிசையைப் பொறுத்து அக்குழுவின் உறுப்பினர் கள், இந்தநாட்டின் இயற்கை வளங்களையும் பொதுச்சொத்துகளையும் நிதியாதாராத்தையும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பையும் பெறக்கூடிய வராகவோ பெறவியலாதவராகவோ ஆகின்றனர். அதாவது, இந்தியச் சமூகத்தில் ஒருவரது இடமானது சாதியால்- பிறப்பால் தீர்மானிக் கப்படுகிறது. ஆகவே நாம் சாதிக்கும் பிறப்புக்குமுள்ள தொடர்பினை விவாதிக்க வேண்டியுள்ளது.

விதிவிலக்கே இல்லாமல் இந்தியாவில் ஒருவரது பிறப்பானது அவரது பிறப்புக்கும் முன்பாகவே சாதியடிப்படையில் தீர்மானிக்கப் பட்டுவிடுகிறது. மதத்தையோ நாட்டையோ மாற்றிக்கொள்வதைப் போல சாதியை மாற்றிக்கொள்ள முடியாது. ஒரே சாதியைச் சேர்ந்த ஆண் பெண் உடல்கள் கூடி பெற்றெடுக்கும் புதிய உயிர்கள் அவ் விருவரது சாதியைச் சேர்ந்தவையாகவே இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இங்கு திருமணமுறை கெட்டிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒழுங்கை நிறைவேற்றுவதில்தான் இங்குள்ள குடும்பங்களின் மானம்/ கௌரவம் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது சாதிக் கலப்பில்லாத

www.padippakam.com



சுத்தரத்தத்தைப் பேணுவதே இங்கு வாழ்வின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே இங்கு ஒவ்வொரு இந்தியரும்/ தமிழரும்- இன்னும் விரித்துச் சொன்னால் இலங்கை உள்ளிட்ட தெற்காசிய சமூகத்தவர் அனைவரும் தமக்காக வாழ்வதாக நினைத்துக் கொள்வதெல்லாம் தமது சாதியைக் காப்பதற்காகத்தான் என்றாகிறது.

சாதியத்தின் தீவிர ஆதரவாளர்/ வெறியர் அல்லது சுயசாதிப் பெருமிதமுள்ளவர் / சாதிக்கலப்பின்றி மானஸ்தராக (?) வாழ்வதாக தன்னை நம்புகிறவர் உண்மையில் நடைமுறை சார்ந்து அப்படி வாழ்கிறாரா என்று பார்ப்போம். அவர் அணிந்திருக்கும் உடை அவரது சொந்த சாதியினரால் நெய்யப்பட்டதல்ல. அவரது வீட்டிலிருக்கும் தானியங்கள் வெவ்வேறு சாதிகளின் உழைப்பில் விளைந்தவை. இன்னொரு சாதி வனைந்து கொடுத்த சட்டிப்பானைகளில் தான் அவற்றை ஆக்கியவித்து தின்கிறார். ஏனையச் சாதிகளின் ரேகை பதிந்திருக்கும் பொருட்களாலேயே அவரது வீட்டின் ஒவ்வொரு அங்குலமும் உருவாகியிருக்கிறது. இப்படியே பட்டியலிட்டால் பிறசாதியினரால் உண்டாக்கப்பட்ட பொருட்களை உண்டும் உடுத்தியும் புழங்கியுமே அவர் அன்றாட வாழ்வை மேற்கொண்டிருப் பதை அறிய முடியும். எனில் சுத்தரத்தம் ஓடுவதாக அவர் நம்பிக் கொண்டிருக்கிற அவரது உடலும்கூட பிற சாதியினரின் ரத்தம்/ வியர்வை/ எச்சில்/ மலம் மூத்திரம் உள்ளிட்ட கழிவுகள் ஆகியவற்றால் ஆன பலபட்டறை உடல் என்பது தெரிய வரும். ஆகவே இந்த பலபட்டறைச் சாதிகளால் உருவாக்கப்பட்ட இரண்டு உடல்களின் வழியேயான மறு உற்பத்தி/ இனவிருத்தியிலும் பலபட்டறைச் சாதி உடல்களே பெற்றெடுக்கப்படுகின்றன.

இதுகாறும் சுத்தசாதி ரத்தம் என்று நம்பிக்கொண்டிருந்த இந்த உடல் இப்படி சாதிகெட்ட சதைப்பிண்டமா என்ற துக்கத்தில் ஒருவேளை வாழப்பிடிக்காமல் தூக்கு மாட்டி சாகப்போகிறார் எனில் அந்தக்கயிறும் வேறொரு சாதியால் திரிக்கப்பட்டிருக்கும். வண்டிவா கனங்களின்முன் விழுந்து செத்துத் தொலைக்கலாமென்றால் அதன் ஓட்டுனர் இவரது சாதிக்காரராகவே இருப்பாரென்பதற்கு எவ்வித உத்திரவாதமுமில்லை. எப்படியோ செத்தொழிந்தாரென்றால் புதைத்தோ எரித்தோ முடிக்கும் வரையிலும் இன்னும் பல்வேறு சாதிக ளின் கைகளுக்குள் அவரது பிணம் உருள வேண்டியிருக்கும். இப்படி பிறப்பு தொடங்கி இறப்புவரை நடைமுறையில் பலபட்டறைச் சாதியாகவே இருக்கும் ஒருவர், பின் எதன் பேரில் தன்னை சுத்தசாதிக் காரராக கருதிக் கொள்கிறார் என்றால் அவர் தன் சாதிக்குள்ளேயே திருமணம் செய்துகொண்டிருக்கிறார் என்கிற ஒரு காரணம் மட்டுமே மிஞ்சுகிறது.

ஆகவே அகமணமுறை ஒழிக்கப்படாமல் சாதி ஒழியாது என்கிற தீர்மானத்திற்கு தனது ஆய்வுகளின் வழியே வந்து சேர்ந்த அம்பேத்கர், அகமணமுறையை சட்டம் போட்டு ஒழிக்கமுடியாது என்பதை



உணர்ந்திருந்தார். அகமண முறையை நிராகரித்து புறமணமுறையை தேர்ந்துகொள்ள வேண்டுமானால் மக்களின் புழங்குவட்டத்தை சாதி எல்லைகளுக்கு வெளியே நகர்த்த வேண்டியதன் தேவையை வலியுறுத்தினார். அதற்குத்தடையாக வரும் தீண்டாமையை துரிதகதியில் எதிர்கொள்வதற்கு சட்டத்தின் துணையை நாடினார்.

தீண்டாமைக்கொடுமைகளுக்கு எதிராக தலித்துகளை ஒன்று திரட்டிய அம்பேத்கர் சாதியொழிப்புக்கான தனது புகழ்மிக்க உரையை தலித்தல்லதார்- இந்துக்களின் மாநாட்டில் நிகழ்த்தவே தயாரித்தார் என்பது தற்செயலானதல்ல. சாதியத்தால் ஆதாயம் அடைந்து வருகிற- ஆகவே சாதியத்தை தாங்கிப் பிடிக்கிற இந்துக்கள்தான் சாதியை கைவிட வேண்டியவர்கள் என்பதை அவர்களது முகத்துக்கு நேரே பேசி விடத் துணிந்தார் அவர். சாதியொழிப்பு, சமூகச் சீர்திருத்தம் என்று ஆரவாரமாக பேசுவதற்கும் செயல்படுத்துவதற்கும் இடையேயுள்ள இடர்ப்பாடுகளையும் இடைவெளிகளையும் அவர்கள் உணர வேண்டும் என்ற வகையில் அவர் தயாரித்த அவ்வுரை சாதியொழிப்பு பற்றிய விவாதத்திற்கான வழிகாட்டும் கையேடாக உள்ளது. அகமண முறையை ஒழித்து ரத்தக்கலப்பு நிகழாமல், சாதியத்திற்கு தத்துவ பலமளிக்கும் இந்துமதத்தை ஒழிக்காமல் சாதியை ஒழிக்கமுடியாது என்கிற அம்பேத்கரின் விளக்கத்தால் சனாதனிகளும் சமூக சீர்திருத்த வாதிகளும் ஒருசேர நிம்மதியிழக்க வேண்டியதாயிற்று. ( ஏழு செருப்பு தேய பெண்பார்க்க அலைகிற கேவலமெல்லாம் எதற்கென்றால் சொந்தசாதியில் பெண்ணெடுக்கத்தான். முற்போக்கு அரசியல் பேசுகிற பல நண்பர்கள் சொந்தம் விட்டுப் போயிடக்கூடாது என்பதற்காக அத்தை மாமா தூரத்துச் சொந்தங்களில் மணம் முடிக்க வேண்டிய தாயிற்று என்று மழுப்புவதும்கூட சாதியைவிட்டு வெளிவரத் துணியாத ஆழமான சாதிப்பிடிமானத்தின் வெளிப்பாடே)

சாதியமைப்பு தேவையா தேவையில்லையா என்று விவாதித்து அது தேவையில்லை என்ற ஒருமித்த முடிவுக்கு எல்லோரும் வந்துவிட் டதைப் போலவும் ஆகவே இப்போது சாதியை ஒழிக்க முடியுமா முடியாதா என்பதைப் பற்றி மட்டும்தான் பேசவேண்டியுள்ளது என்பதாகவும் காட்டப்பட்டுவந்த பொய்த்தோற்றத்தை அம்பேத்கரின் சாதி ஒழிப்பு பற்றிய இவ்வுரைக்குறிப்புகள் தோலுரித்துக் காட்டின. பார்ப்பனர்களைத் தவிர மற்றசாதியினர் அனைவருமே சாதி/ தீண்டாமையின் நஞ்சேறி துன்புறுகிறவர்கள்தான். பார்ப்பனர்களைப் பார்த்தொழுகி இவர்களுக்குள் கற்பித்துக்கொண்ட தீட்டு/புனிதக் கோட்பாடுகள் ஒருவரையொருவர் ஒதுக்கிவைக்கவும் ஒதுங்கிக் கொள்ளவும் தூண்டுவதால் ஒடுங்கும் சாதி, ஒடுக்கும் சாதி என்கிற இரட்டைப் பாத்திரத்தை ஒவ்வொரு சாதியும் வகிக்கிறது. சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டுத்தளங்களில் சாதியமைப்பு யாருக்கு எதற்காகத் தேவைப்படுகிறது என்பதை மிகவிரிவாக விளக்கிச் சென்ற அம்பேத்கர், இவ்வளவு ஆதாயங்களை உங்களுக்கு தந்து

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருக்கிற சாதியத்தை ஒழிப்பதில் உங்களுக்கு மெய்யான அக்கறை இருக்கிறதா என்று எழுப்பிய கேள்வி இந்துக்களின் கனத்த மௌனத்தால் உறைநிலைக்குள் ஆழ்த்தப்பட்டுவிட்டது.

(ஒடுக்கப்பட்ட சாதிகளின் போராட்டங்களில், ஒடுக்கும் சாதிகளிலிருந்து விதிவிலக்காக பங்கெடுக்கும் சிலர், சாதி வித்தியாசம் பாராமல் பழகும் தமது பெருந்தன்மையை அங்கீகரிக்குமாறு கோருவதன் மூலம் அவர்களும் சாதியத்திற்குள்ளேயே நிற்பவர்களாகி விடுகின்றனர். தீண்டத்தக்கவர் தீண்டத்தகாதவர் என்ற இருபெரும் பிரிவாக பிரிந்து நிற்கிற சமூகத்தில் தான் யார் பக்கம் என்று ஒவ்வொருவரும் அறிவித்துக் கொண்டாக வேண்டிய நெருக்கடி எதுவும் இல்லாத காலத்தில் தீண்டத் தகாதார் பக்கம் சார்புகொள்ளத் துணிந்த இவர்கள் பாராட்டத் தகுந்தவர்கள். ஆனால் அதீதமான பிரதிபலனையும் நன்றியுணர்வையும் கோருவதன் மூலம் நம்பத்தகாதவர்களாக மாறிவிடுகின்றனர்.)

# 4

சாதியமைப்பை மையப்படுத்திய எந்தவொரு உரையாடலும் இந்தியாவோடு மட்டுமே முற்றுப்பெற்றுவிடக்கூடியதல்ல. அது இந்துமதத்தின் செல்வாக்கு மண்டலத்திற்குள் மாட்டிக் கொண்டுள்ள நேபாளம், பர்மா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையோடும் தொடர்புடையதாக இருக்கிறது. இந்த நாடுகளில் நிலவும் சாதிகளின் பெயர்களில் வேறுபாடு தெரியலாமேயன்றி சாதியத்தின் அடிப்படைப் பண்புகளில் எதுவிதமான மாற்றங்களுமில்லை என்பதை உறுதிபடச் சொல்லிவிடமுடியும். ஆனாலும் இந்தியச் சாதியமைப்புக்கும் இலங்கைச் சாதியமைப்புக்கும் பாரிய வேறுபாடுகள் இருப்பதாக எப்போதுமே சொல்லப்பட்டு வருகிறது. இதுபோலவே கடந்த 30ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த போர்ச்சூழல் இலங்கைத் தமிழரிடையே சாதியை ஒழித்துவிட்டதாகவும் விதந்துரைக்கப்படுகிறது.

இலங்கையின் சாதிப்படிநிலையில் பார்ப்பனர்கள் மேலாதிக்கம் பெறவில்லை என்றும், ஆகவே இலங்கைச் சாதியமைப்பு இந்தியச் சாதியமைப்பிலிருந்து வேறுபட்டது என்ற முன்வைப்பும் உள்ளீடற்றது என்பதை அறிய பென்னம்பெரிய ஆய்வுகள் எதுவும் தேவைப்படுவதில்லை. நாங்கள் யாருக்கும் தாழ்ந்தவர்களல்ல அல்லது பார்ப்பனர்களும்கூட எங்களுக்கு கீழானவர்கள்தான் என்ற கற்பிதத்திலிருந்து இப்படியான புனைவுகள் உருவாவது இயல்பானது தான். ஒரேயொரு ஒற்றை பார்ப்பனரும் இல்லாதவையே இந்தியாவின் அனேக கிராமங்கள். ஆனால் அவை சாதியத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் பார்ப்பனீய அடிமை வளையத்திற்குள் பணிந்து கிடக்கின்றன. இந்த இந்திய கிராமங்களின் தன்மையிலிருந்து மாறுபட்டதாக யாழ்ப்பாணச் சமூகத்திடம் என்ன இருக்கிறது? சாதியம் தன்னைப் பாதுகாப்பதற்கான காவலர்களே தானே உருவாக்கிக் கொள்கிறது. அது பார்ப்பனர்களுக்காக காத்திருப்பதில்லை.



யாழ்ப்பாணத்துக்கு தமிழக மன்னர்கள்வழியாகவே பார்ப்பனர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். அபூர்வ மருத்துவ குணம் கொண்ட கீரிமலையின் சிற்றாற்றுத் தீர்த்தத்தில் நீராடி தனது பிணியைப் போக்கிக் கொள்ள மாருதப் பிரவாகவல்லி என்கிற சோழமகள் வந்திருக்கிறாள். அவள் அமைப்பித்த சுப்பிரமணியாலய பூசைக்கும் அருச்சகர்களுக்கும் கந்தரோடையென வழங்கும் இடத்தைச் சமர்ப்பித்துத் திருத்தி நெல்விளைநிலமாக்கி அவர்களுக்குப் பிரமதாயமாகக் கொடுத்தாள்.. என்கிறது ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச்சரித்திரம். கி.மு 101 ல் நல்லூரையடைந்த ராசகுமாரன் ஒருவன் தனது புரோகிதரான கங்காதர ஐயருக்கும் அவரது பன்னியார் அன்னபூரணியாருக்கும் ஏனைய அந்தணர்களுக்கும் அக்கிரஹாரங்களும் அமைத்தான் என்றும் சொல்கிறது இந்நூல். காலத்துல்லியம் போன்றவை முன்பின் மாறிப் போயினும், தமிழகத்தில் பிரமதாயம்/ ஆரியவர்த்தம்/ அக்ரஹாரம்/ சதுர்வேதிமங்கலம் போன்றவற்றுக்கு இருந்த சமூக அங்கீகாரமும், மத அதிகாரமும், உழைப்பைச் சுரண்டுவதற்கும் சமூகத்தைப் பிளவுபடுத்துவதற்கும் பார்ப்பனரால் பயன்படுத்தப்பட்டதை அறிவோமானால் அவர்கள் யாழ்ப்பாணத்திலும் உயர் நிலையிலேயே இருந்திருந்து, தமிழக மன்னர்களின் நேரடி ஆட்சிகள் முடிவுக்கு வந்த நிலையில் அதிகாரமிழந்திருக்கக்கூடும். இதன்பொருள், பார்ப்பனக் கருத்தியல் தன் செல்வாக்கை இழந்துவிட்டது என்பதல்ல. இன்மையின் வழியாகவும் இருப்பை உணர்த்துவதே பார்ப்பனீயத்தின் வெற்றி. அதற்கு பார்ப்பனர்களின் நேரடி மேற்பார்வை தேவைப் படுவதில்லை.

பார்ப்பனீயச் செல்வாக்கிலிருந்து விடுபட நடைபெற்ற எத்தனிப்புகள் எல்லாவற்றையும் இந்துமதத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்களாகக் காட்டுவதும், எதிர்ப்புகளை சமாளித்து தக்கவைத்துக்கொள்ளும் நெருக்கடியில் வேண்டாவெறுப்புடன் மேற்கொண்ட சில சீர்திருத்தங்களை பார்ப்பனீய செல்வாக்கிலிருந்து விடுபடும் எத்தனிப்பாகவும் மாற்றிப்போட்டு குழப்பிக் கொள்ளும் போக்கு நெடுங்காலமாக நிலவுகிறது. ஆனால் இந்துமதம் எவ்வளவுதான் சீர்திருத்தம் செய்து கொண்டதாக அறிவித்துக்கொண்ட போதும் அது சாதியமாகவே செயல்படும் என்பதற்கு சாட்சியங்கள் தேவையில்லை. இலங்கையின் இந்து மதத்தவரான வடக்கு கிழக்கு தமிழர்களிடமும் மலையகத் தமிழர்களிடமும் நிலவும் சாதிப்பிரிவினை அதை உறுதி செய்கிறது. இந்துமதம் ஒட்டுமொத்தச் சூழலையும் மாசுபடுத்திவிடுகிறது, இந்து மதத்தால் குறுக்கீடு செய்யப்பட்ட மனம் எங்குபோனாலும் இந்துமனமாகவே இயங்குகிறது என்பார் அம்பேத்கர். பௌத்தம் தழுவியோரென அலட்டிக்கொள்ளும் சிங்களவரிடையேயும் தமிழ் பேசும் இலங்கை கிறிஸ்தவர்களிடையேயும் புலம்பெயர்ந்த தமிழரிடையேயும் சாதியம் உயிர்ப்புடன் இயங்கி தீண்டாமையை வெளிப்படுத்துவதிலிருந்து இதை அறியலாம்.

www.padippakam.com



ஆனையிறவுக்கு அங்காலை எல்லாரும் ஒண்டுதான் என்ற தொடர் வழக்கத்திலிருப்பதை வைத்துக்கொண்டு சாதியப்பாகுபாட்டை யாழ்ப்பாணத்து எல்லையோடு சுருக்கிப் பார்க்கும் ஒரு போக்கு ஆய்வாளர்களிடமும்கூட காணப்படுகிறது. இந்தத் தொடர்கூட யாழ்ப்பாணத்தில் சாதி இருக்கிறதென அறிவிக்கிறது. அடுத்து ஆனையிறவைத் தாண்டிவிட்டால் தமிழர்கள் பாரபட்சமின்றி இணைந்து வாழ்வதாகக் கூறுவதிலும் உண்மையில்லை. கடலும் கண்டமும் கடந்து போயும் சாதியத்தை இந்துமதத்தை காப்பாற்றுகிறவர்களாகவே யாழ்ப்பாணத்தவர் இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணம்தான் புலம்பெயர் நாடுகளில் அவர்கள் நிறுவிக்கொண்ட கோயில்கள். இந்தியாவின் பிறசாதிகளைப் போலவே யாழ்ப்பாண வெள்ளாளர்களும் ஒதுக்குவது ஒதுங்குவது என்கிற சாதியத்தின் அடிப்படைப் பண்பை பார்ப்பனர்களைப் பார்த்தொழுகியே கைக்கொண்டுள்ளனர். உணவுறவும் மணவுறவும் கொள்வதிலும் கூடி வாழ்வதிலும் பார்ப்பனர் போலவே வெள்ளாளர்களும் வெள்ளாளர்களைப் பார்த்தொழுகி பிறசாதியினரும் விலக்குகளை கையாள்கின்றனர். இந்தியாவைப் போலவேதான் இலங்கையிலும் சாதி கிடைமட்டமாக இல்லாது செங்குத்துப் படிநிலையாக- உட்சாதிப்பகுப்புகளால் பன்மப் படிநிலையாக துண்டாடப்பட்டுள்ளது. இந்துமதத்தில் மேற்கொள்ளப்பட்டதாக வலிந்து கூறப்படும் சீர்திருத்தங்களாலும் சாதியெதிர்ப்புப் போராட்டங்களாலும் குறைந்தபட்சம் இந்த உட்சாதிப் பிளவைக்கூட ஒட்டவைக்க முடியவில்லை என்பதே உண்மை.

சூத்திரர்களில் ஒரு பிரிவினராகிய வெள்ளாளர்கள் பூவைசியர்/ சற்சூத்திரர் என்று தம்மைத்தாமே அழைத்துக்கொண்டு வர்ண அடுக்கில் தம்மையொரு உயர்வர்ணமாக நிறுவிக்கொள்ளும் பிழையான வரலாற்றை விவரிக்க இது இடமில்லை. ஆனால் மாற்றிக் கொள்ள முடியாத சாதியாய் இருக்கும் அது, மாறும் தன்மையுள்ள- நெகிழ்ச்சியுடைய வர்ண அடையாளத்தை சூடிக்கொண்டிருப்பதை அபத்தம் என்று சொல்லத்தான் வேண்டியுள்ளது. பிரம, சத்திரிய, வைசிய என்னும் முக்குலத்தோர்க்கேவல் புரிவோர் சூத்திரராம். வேளாளர் சூத்திரரெனப் பலருஞ் சாதிக்கின்றனர். இந்தியாவிலுமவ்வாறிவர்கள் வழங்கப்பட்டுப் பிள்ளையெனும் வர்ணிப்பையும் சிங்காரலங்காரமாயணிந்திருக்கின்றனர். அவ்விதக் கொள்கை நமக்குப் பேதமாய்த் தோன்றுகின்றது. வேளாளர் பூவைசியர் என்றே நம்மறிவிற் புலப்படுகின்றது ( வருண நிலை, இ.ம.தைரியர்) என்பதிலிருந்து வர்ண/ சாதிப்பிரிவினையை எதிர்க்காமல் அதில் உயரிடத்தைப் பெறுவதற்கான எத்தனிப்பு காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்டு வருவதையே அறியலாம். நம்மறிவிற் புலப்படுகின்றது என்று சொல்லிவிட்டால் ஆதாரங்கள் தரத்தேவையில்லை தானே? ( வர்ணத்தை இஷ்டம்போல மாற்றிக் கொள்ள முடியாது. சப்தரிஷிகளடங்கிய மன்வந்தரக்குழுவாலும் பிற்காலத்தில் குருவினாலும்தான் ஒருவரது வர்ணம் தீர்மானிக்கப்பட்டது என நிறுவுவார் அம்பேத்கர்).



இருபது பெரும் சாதிக்குழுக்களாக அடையாளம் காணப்படுகிற யாழ்ப்பாண தமிழரிடையே 65க்கும் மேற்பட்ட சாதிகள் உள்ளமையை சைமன் காசிச்செட்டி தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆதிக்கச்சாதியான வெள்ளாளர் பெருந்தொகையிலும் (50 சதவீதம்) வண்ணார், அம்பட்டர், பள்ளர், நளவர், பறையர் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட சாதிகளின் தொகுப்பான பஞ்சமர்கள் (18 சதவீதம்) குறைவாகவும் இருப்பதை வேண்டுமானால் இந்தியாவிலிருந்து வேறுபட்ட இலங்கைச் சாதியமைப்பின் தனித்துவமாகச் சொல்லலாம். ( இந்திய சாதியமைப்பை பிரமீடு வடிவமெனக் கொண்டால் இலங்கைச் சாதியமைப்பை தலைகீழ் பிரமீடாகக் கொள்ளலாம் என்று சிவத்தம்பி வர்ணித்ததாக தோழர் பிரளயன் கூறியதுண்டு).

உணவுவிடுதிகளில் பஞ்சமர்க்கு அனுமதியில்லை என்ற வாசகம் எழுதப்பட்டிருந்ததையும், வெள்ளை அதிகாரி ஆஷையும் தன்னைத்தானேயும் சுட்டுக்கொன்ற (வீர?) வாஞ்சிநாதனின் சட்டைப்பையிலிருந்த கடிதத்தில் பஞ்சமன் என்கிற பதப்பிரயோகம் விளக்கியப் பொருளிலிருந்தும் பஞ்சமர் என்ற சொல் இழிவான அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுவதாக ஆ.சிவசுப்பிரமணியம் கூறுவார். பஞ்சமர் என்ற சொல்லுக்கு நால்வருணத்துக்கு புறம்பான வருணத்தவர் என்று சென்னைப் பல்கலைக்கழக லெக்சிகன் தரும் விளக்கமும் தீண்டத்தகாதார் பற்றிய பூலே அம்பேத்கர் கருத்துகளுடன் பொருந்திவரக்கூடியதுதான். எனில் யாழ்ப்பாணத்து தீண்டத்தகாதவர்களை பஞ்சமர் என்று அழைப்பது எப்பொருளில்? அவர்கள்மீது தீண்டாமை கடைபிடிக்கப்படுவதிலிருந்து - சிலர் மழுப்புவதைப்போல- அச்சொல் ஐந்து சாதியினர் என்பதைச் சுட்டுவதற்காக புழங்கவில்லை என்பதும் அது குறிப்பிட்ட சாதியினரை இழிவுபடுத்தும் நோக்கிலேயே பயன்படுத்தப்படுகிறது என்பதையும் விளங்கிக் கொள்ள முடியும். நால்வருண ஏற்பாடே இல்லாத யாழ்ப்பாணத்தில் வர்ணத்திற்கு வெளியே நிற்பவர் அல்லது ஐந்தாம் வர்ணத்தவர் என்ற பொருளில் பயன்படுத்தும் தேவையே ஏற்பட்டிருக்கவில்லை. தலித்துகளுக்கு குடிமைச் சேவகம் செய்வதால் கண்டாலே தீட்டு என்று பகலிலே நடமாட தடைவிதிக்கப்பட்ட புதிரை வண்ணார் என்ற சாதி தமிழகத்தில் இருப்பதைப்போல யாழ்ப்பாணத்திலும் துரும்பர் என்று ஒரு சாதி இருந்ததை யாழ்ப்பாண சரித்திரம் தெரிவிக்கிறது. ஆனால் சாதியம் குறித்த விவாதங்களில் கூட அந்தச்சாதியை பேசிவிடாதபடிக்கு தீண்டாமை நிலவுகிறது. எத்தனையோ அரசர்களும் ஆட்சிகளும் மாறி வந்த போதும் அவை இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கத்தை வளர்க்க உதவியதைப்போல இலங்கையில் வெள்ளாளர்களுக்கு உதவியது. இந்தியாவின் காலனிய ஆட்சியாளர்களின் ஆங்கிலக்கல்வியைக் கற்று அதிகாரத்தின் பங்குதாரர்களாக இந்தியாவில் பார்ப்பனர்களால் மாற முடிந்ததென்றால் இலங்கையில் அத்தகைய பாத்திரத்தை வெள்ளாளர்கள் லகுவில் கைப்பற்றியிருந்தனர். நாடுமுழுவதும் பரவிப்போய் ஆட்சியின் பிரதிநிதிகளாய் அவர்களே மக்களை அடக்கி ஆண்டார்

படிப்பகம்

www.padippakam.com



கள். சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டுத் தளங்களில் இந்தியாவில் பார்ப்பன மேலாதிக்கம் என்றால் யாழ்ப்பணத்தில் வெள்ளாள மேலாதிக்கம் என்றானது. அரச நிர்வாகத்தில் (ஆரம்பத்தில் பறங்கிய, கிறிஸ்தவ சமூகங்கைள்ச் சேர்ந்தவர்களையும் பின்னர்) பெருமளவில் யாழ்ப்பாணப் பிரதேசத்து மக்களையும் புகுத்துவதன் மூலம் இரு பெரும் தேசிய இனங்களுக்குமிடையில் ஆழ்ந்த முரண்பாடுகளை வளர்த்தனர்... ( சிவசேகரம், இலஙகையின் இன்றைய அரசியல் நிலைமையும் தேசிய சிறுபான்மை இனப்பிரச்னையும்) என்று கூறப்படுவதை இதற்கு சான்றெனக் கொள்ளலாம்.

## 5

இந்தியாவில் தலித் அரசியல் பாய்ச்சலெடுத்த அதே காலக்கட்டத்தில் இலங்கையிலும் அதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கின. 1920களில் தொடங்கப்பட்ட ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கத்தை அப்படியானதொரு தொடக்கமாக கொள்வதில் முரணொன்றும் இல்லை. பாடசாலை மாணவர்களிடையே ஆசனம் மற்றும் உணவு உட்கொள்ளுதலில் சமத்துவம் கோரி இச்சங்கம் நடத்தியப் போராட்டத்தை அமைப்புரீதியான போராட்டத்தின் தொடக்கம் என்று சொல்லலாம். இங்கே கவனப்படுத்த வேண்டியது எதுவென்றால், போராட்டத்தின் பலனாக பிறப்பிக்கப்பட்ட சமத்துவ ஆணையை சகித்துக்கொள்ள முடியாத வெள்ளாளர்கள் 15 பாடசாலைகளை எரித்து முடித்தார்கள் என்பதுதான். (அறிவுச் சேகரமான யாழ் நூலகத்தை எரித்து இனவெறியை நிலைநிறுத்திய சிங்களவரும் எந்தவகையில் பண்புரீதியாக வேறுபடுகிறார்கள்?)

தானே கொண்டுவந்த கோணிப்பையை வகுப்பறையின் ஒரு மூலையில் விரித்துப்போட்டு அதன்மீது அமர்ந்து கொள்ளுமாறு அம்பேத்கர் பணிக்கப்பட்டதற்கும், ஜோதிராவ் பூலே- சாவித்திரி தம்பதியர் தொடங்கிய பாடசாலைகள் எரிக்கப்பட்டதற்கும் பின்புலமாக செயல்பட்ட ஆதிக்கசாதி வெறிதான் யாழ்ப்பாணத்திலும் வெளிப்பட்டுள்ளது. தீண்டத்தகாதாருக்கு வாக்குரிமை வழங்கக் கூடாது என்பதிலும் கூட இந்திய ஆதிக்கச் சாதியின் மனப்பான் மையோடு யாழ் ஆதிக்கச்சாதியினர் ஒருமைப்பாடு கொண்டிருந்தனர். இந்த மனப்பான்மைதான், இந்தியாவிலிருந்து புலம்பெயர்த்து கொண்டு போகப்பட்டு இலங்கையில் குடியமர்த்தப்பட்ட தமிழர் களை, தமிழர்கள் என்று ஒத்துக்கொள்வதற்கு தடையாக அமைந்தது. கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு வந்து தமக்கு ஆதரவு கோரிய ஈழவிடுதலைக் குழுக்கள், வெகு அருகாமையில் இருக்கும் இந்திய வம்சாவளியினராகிய மலையகத் தமிழர்களை அணி திரட்டிக்கொள்ள துணியாததற்கும் பின்புலமாய் இந்த சாதிய மனப்பான்மையே இயங்கியது என்று சொல்வதற்கு முன்முடிவுகள் எதுவும் காரணமல்ல. அனைத்துலக நீதிச்சபையிடம் இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பாக தமிழர் கூட்டணி சார்பில் 1973 மே 15ல் முன்வைக்கப்பட்ட



முறையீட்டு மனுவில் மலையகத்தமிழர்கள் மீது காட்டப்பட்ட கரிசனம் அதற்குப்பிறகு செயல் வடிவத்தில் வெளிப்படவேயில்லை.

சாதியொடுக்குமுறையின் வரலாற்றைப்போலவே சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களின் வரலாறும் உயிர்ப்புடன் இயங்கியிருக்கிறது. ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ், சிறுபான்மைத்தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்பவை வெறும் பெயர்களாய் இல்லாமல் அந்தந்த காலத்தின் இயங்குவிசையாய் இருந்திருப்பதை அறியமுடிகிறது. சமாசனம், சமூகக் குறைபாடுகள் நீக்கச்சட்டம், தேநீர்க்கடைப் பிரவேசம், ஆலயப்பிரவேசம் என்கிற சுழலேணிப் பயணத்தின் வரலாறைப் பேசுவதற்கு டானியலின் வாழ்வையும் எழுத்துகளையும் பின்புலமாகப் பயன்படுத்துகிறார் ந.இரவீந்திரன். நற்போக்கு இலக்கியம், முற்போக்கு இலக்கியம், இழிசனர் இலக்கியம், பஞ்சமர் இலக்கியம், தலித் இலக்கியம் என்கிற சொல்லாடல்களின் அரசியலையும் தனித்துவங்களையும் பேசுவதற்கு இந்தப் பின்புலம் போதுமானதாகவே இருக்கிறது இரவீந்திரனுக்கு.

கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னெடுப்பில் உருவான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தீண்டத்தகாதாரையும் பிறசாதிகளிலிருந்த சாதி மறுப்பாளர்களையும் இணைத்துக் கொண்டு வீறுடன் கிளம்பியதையும் அது பன்முகத்தளங்களில் ஏற்படுத்திய அதிர்வுகளையும் விளைவுகளையும் டானியலின் ஊடாகப் பேசிச்செல்லும் இரவீந்திரன் அந்த எழுச்சி எவ்வாறு உறைநிலைக்குள ஆழ்த்தப்பட்டது என்ற விவாதத்தின் வழியே ஈழப்போராட்டம் குறித்த மாறுபட்டதொரு பார்வையை முன்வைக்கிறார். (இப்படி தனித்துவமான பார்வையை முன்வைப்பதாலேயே அவர் கடுமையான அவதூறுகளுக்கும் ஆட்படுகிறார்.)

சாதியொடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை யாழ்ப்பாண வெள்ளாளர்கள் எதிர்கொண்டவிதம் எந்த மனித மாண்புகளுக் குள்ளும் அடங்கிவர மறுப்பவை. இந்தப் போராட்டங்களினூடே வளர்ந்த இடதுசாரி செல்வாக்கையும் கூட அவர்கள் பெரும் அச்சுறுத்தலாகவே கணித்தனர். தலித்துகளையும் இடதுசாரிகளையும் ஒருசேர செயலிழக்க வைக்கும் உத்தியாக அவர்கள் தேசியவாதத்தை கையிலெடுத்தார்கள். உண்மையில் அப்படியொரு நல்வாய்ப்பை சிங்கள இனவெறி ஆட்சியாளர்களே அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தனர். சாதிய ஒடுக்குமுறையை கைவிடத் தயாரில்லாத யாழ்ப்பாணத்து ஆதிக்கச் சாதியினர், சிங்கள இன ஒடுக்குமுறை குறித்து புகார் சொல்வதற்கு சற்றேனும் கூச்சப்படவில்லை.

இன்னொரு இனத்தாரது ஆட்சியின் கீழ் அடிமைகளாக வாழ்வது யாழ்ப்பாணத்தவர்க்கு புதிதொன்றுமில்லை. போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், பிரிட்டிசார் என்று வெவ்வேறு காலங்களில் தம்மை அடிமைப்படுத்திய பிறத்தியாருக்கு கீழ் வாழ்வதில் யாழ்ப்பாணத்தவர்

படிப்பகம்

www.padippakam.com



எவ்விதமான அசௌகரியத்தையும் உணரவில்லை. இன்னும் சொன்னால் அந்த ஆட்சியாளர்களோடு மிக நெருக்கமாக இருந்து சுரண்டலுக்கு பங்குதாரிகளாகவும் இருந்திருக்கின்றனர். வெளியிலிருந்து வந்த ஆட்சியாளர் எவரையும் ஒடுக்குமுறையாளர்களாக உணராத யாழ்ப்பாணத்தவர் வரலாற்றுரீதியாக ஒரே நிலப்பரப்பில் அருகருகாகவும் கலந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் சிங்களவர்களை மட்டும் ஒடுக்குமுறையாளர்களாக உணரவேண்டிய தேவை எதிலிருந்து தொடங்குகிறது?

இலங்கையை காலனியப்படுத்தி அதன் வளங்களைச் சுரண்டிக் கொள்ளையடித்து தம் நாட்டுக்கு கொண்டுபோவது/ ஆட்சியை நிலைநிறுத்திக்கொள்வது மட்டுமே வெளியிலிருந்து வந்த பிற இனத்து ஆட்சியாளர்களுக்கு நோக்கமாய் இருந்தது. உள்நாட்டில் நிலவிய சமூகக்கொடுமைகளிலோ சாதிய ஒடுக்குமுறைகளிலோ ஏற்றத்தாழ்வுகளிலோ தேசவழமைகளிலோ அவர்கள் தலையிடவில்லை. குறிப்பாக யாழ்ப்பாண வெள்ளாளர்கள் தமது எண்ணிக்கைக்கு மீறிய தொகையில் கல்வி வேலைவாய்ப்பு நிலவுடமை ஆகியவற்றில் செலுத்திவந்த ஆதிக்கத்தையோ நிகழ்த்தி வந்த சாதி வெறியாட்டங்களையோ கேள்விக்குட்படுத்தவில்லை. எனவே அவர்களுடன் உடன்பட்டு நிற்பதில் யாழ்ப்பாணத்து வெள்ளாளருக்கு எவ்வித மனத்தடையும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வேறு பிற நோக்கங்களும் இருந்தன. தமிழர்களின் ( வெள்ளாளர்களின்) நலன்கள் தங்கியுள்ள ஒவ்வொரு முனையிலும் தளத்திலும் சிங்களவர்களை போட்டியாளர்களாக நிறுத்தி வெற்றியாளர்களாக மாற்றும் பேரினவாதத்தை சிங்கள ஆட்சியாளர்கள் கைக்கொண்டனர். சிங்களப் பெரும்பான்மையின் நலனை முன்னிட்டு மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையையும் போலவே தரப்படுத்துதல் முறையும் வெள்ளாளர்களுக்கு எதிரானதா

*- ஆதவன் தீட்சண்யா*



# என்னுரை

இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து இன்று வரை நான் எழுதிய ஆறு கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது. இவை எழுதப்பட காரணமாக அமைந்த சூழலைக் கூறுவது அவசியம். ஆரம்பத்தில் காலையடி மறுமலர்ச்சி மன்றச் செயற்பாடுவாயிலான தேடலில் வெறும் சமூகசீர்திருத்தங்கள் போதுமானவையல்ல, சமூக அமைப்பின் அடிப்படையே மாற்றப்பட வேண்டும் எனும் புரிதல் ஏற்பட்டது. அதற்கு அவசியப்பட்ட மார்க்சியக் கற்றலில் ஈடுபட்ட காலத்தில், அக்கற்றல் எந்தக் கட்சியிலும் இணைவதாயில்லாமல் எமக்கான சுயத்தேடலாகவே இருந்தது.

தற்செயலாய் சங்கானையில் தோழர் சண்முகதாசனின் கருத்தரங்கு ஒன்றுக்குச் சென்றிருந்தோம். பேச்சு முடிவில் இரண்டு கேள்விகள் எழுதிக் கொடுத்தோம். பதில் திருப்தியாக அமைந்தது. சண்முகதாசனிடம் அருகிலுள்ள எங்களூருக்கும் இது போன்ற விளக்கவுரைக் கூட்டத்துக்கு வர வேண்டும் என வேண்டினோம்.

அதற்கு அவர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தைக் காட்டி, அவர் உங்களூரில் இருந்தாரே, இப்போதும் அடுத்த கிராமம் ஒன்றில்தான் உள்ளார், அவரோடு தொடர்பு கொள்ளுங்கள், எப்போது நான் வந்து பேசுவது என்பதைச் சேர்ந்து பேசி முடிவு செய்யுங்கள் என்றார்.

ஒருபோதும் அவர் எங்களூருக்கு வரவில்லை. அதற்கு மாற்றாக கம்யூனிஸ்ட் கட்சி வந்தது. (சுப்பிர)மணியம் தோழருடனான தொடர்பாடல் ஸ்தாபன வேலை முறையைக் கனகச்சிதமாகக் கற்றுத் தந்தது. நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது எங்களூரில் வாழ்ந்த மணியம் தோழரை அறியக்கூடிய சமூக அரசியல் அறிவு எங்களிடம் வாய்த்திருக்கவில்லை. எமதூரை நன்கு தெரிந்து கொண்டவகையில், சிறந்த முறையில் எம்மை நெறிப்படுத்த முடிந்தது. அவரது வழிகாட்டலுடன் சங்கானைக் கிளையில் நாம் சேர்ந்து இயங்கி, கிராமத்தின் அரசியல் வளர்ச்சியின் ஒவ்வொரு படி முன்னேற்றத்திலும் நிச்சாமம் கிராமத்தினதும், சங்கானையினதும் போராட்ட அனுபவங்களுடன், எமது படிப்பைப் பட்டை தீட்டிப் பார்த்து, நமக்கான நடைமுறை மார்க்கத்தை வகுத்தோம், வளர்த்தோம்.

இது எழுபதுகளின் நடுக்கூறு. தரப்படுத்தல் யாழ்பாண மாணவர்களது உயர் கல்விக் கனவைக் குழிதோண்டிப் புதைத்து, ஆயுதங்களுடன் தமிழீழத்தைத் தேடத் தொடங்கிய நாட்கள். நாங்களும் (குறிப்பாக நான்) உத்தியோகப் படிப்பை உதறி அரசியல்

படிப்பகம்

www.padippakam.com



விடிவைத் தீவிரமாகக் கற்றுக் கொண்டிருந்த வேளை. தமிழ்த் தேசியப் போலித்தனம் எமக்கு அப்பட்டமாகத் தெரிந்தது. மார்க்சிய வழி காட்டலிலான தேசியப் பிரச்சனைத் தீர்வு மார்க்கம் பற்றிய தேடல் ஆழமாக இருந்தது.

அத்தகைய வளர்ப்பில், 1977 தமிழீழ அங்கீகாரத்துக்கான தேர்தல்! எங்களூர் அமிர்தலிங்கத்தின் கோட்டை. முன்னர் தேர்தலுக்கு முன்னும் வெற்றியின் பின்னும் அமிர்தலிங்கத்தின் பிரமாண்டமான கூட்டங்கள் தவறாமல் எங்களூரில் இடம் பெறும். (ஊருக்குள்ளே இளைஞர்கள் திரண்டு ஊர்வலங்கள் வேறு; நானும் முழங்கியிருக்கிறேன் - சிறுவனாக, எங்கள் லிங்கம் அமிர்தலிங்கம்; போடு புள்ளடி வீட்டுக்கு நேரே!) முதற்தடவையாக எங்களூரில் மிகுந்த முக்கியத்துவமிக்க அந்தத் தேர்தலில் அவர்களது கூட்டமே நடக்கவில்லை.

ஊரில் காத்திரமாகச் செயற்படுகிற அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியில். அதற்காக நாங்கள் தனியே கூட்டம் நடத்திட வேண்டும் எனக் கட்சி கருதவில்லை. தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கட்சி கோரியிருந்தது. கிராமத்து வாலிபர் அமைப்பு பகிரங்கக் கூட்டம் நடாத்த முடிவு செய்தது; பகிஷ்கரிப்புக்கான கூட்டம் நடாத்துவது என்ற நமது வாலிபர் சங்கத்தின் முடிவை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தியது கட்சி. கூட்டத்துக்கு விருப்பங்கொண்டு தீவிரங்காட்டியவர்களால் நிதானமாகச் சிந்திக்க முடியவில்லை.

தனிவளவு திருத்தப்பட்டுக் கூட்ட ஒழுங்குகள் தொடர்ந்தன. கூட்டணியினர் தங்களால் ஒரு சிறு கூட்டத்தைக் கூட நடத்த முடியாத நிலையில், நாங்கள் கூட்டத்தை வெற்றிகரமாக நடாத்திடுவோமாயின், அது பாரிய இழிவு எனக் கருதினர். ஊர் முழுவதும் மிகப்பெரிய யுத்தக் களரியை எதிர்பார்த்தபடி; கூட்டத்துக்காக எவரும் வரப்போவதில்லை, வேடிக்கை பார்க்கிறவர்கள் வரலாம்.

நிலைமையைப் புரிந்து கொண்டு மணியம் தோழரிடமும், நிச்சாமம் தோழர்களிடமும் ஆலோசனை பெற எங்கள் தோழர்கள் சென்று திரும்பினர்; கூட்டம் அவசியமற்றது என முன்னர் கூறிவந்தவர் மணியம் தோழர். குழப்பத்துடன் சென்ற தோழரிடம், 'இவர்கள் வெருட்டுவதால் கூட்டம் நிறுத்தப்பட வேண்டுமா?' எனக் கேட்டார். இல்லை, நடத்திக் காட்ட வேண்டும், என்று கூறிவிட்டு வந்த தோழர் மற்றும் நிச்சாமத்திலிருந்து திரும்பிய அனைத்துத் தோழர்களது கருத்து, கூட்டத்தைத் தீரமுடன் நடாத்துவது என்பதாய் இருந்தது.

எதிர்பார்த்தவாறே யுத்தக்களரி. நிச்சாமம் தோழர்களும் மணியம் தோழரும் வந்திருந்தனர். அவர்களின் பாதுகாப்புக்காக மறைத்து வைத்திருந்த துப்பாக்கியைப் பார்த்து விட்டதால், அதைப் பிரச்சனையாக்க வெறிக்கூட்டம் முயன்றது. எமது உறுதியும், நிச்சாமத்தின் வலுவான ஆதரவும் இறுதியில் வெற்றிகரமாக அந்த நெருக்கடியிலிருந்து மீண்டு தொடர்ந்து நாங்கள் முன்னேற உதவியது.



தொடர்ந்து நாங்கள் உயிர்ப்புடன் இயங்கவும், அதற்கு ஏற்ப அர்த்தமிக்க பிரயோக அறிவியலாக மார்க்சியத்தைக் கற்கவும் முடிந்தது என்றால், அது நிச்சாமத்தினால் சுவீகாரம் எடுக்கப்பட்டு போஷிக்கப்பட்டதால் மட்டுமே சாத்தியமானது எனலாம். அவர்களது வீறு கொண்ட போர்க்குணத்துடனான அரசியல் அக்கறையும், ஆளுமையும், எங்களுடைய சொந்த விவகாரங்களில் நாங்கள் கரிசனை யின்றி அரசியல் வேலையென அலைந்தபோது, அதன் மீது கவனங்குவித்து, அவர்களே பல பிரச்சினைகளைத் தீர்த்து எங்களை இயங்கவிட்டது எனச் சொல்வதற்கு நிறைய உண்டு!

இத்தகைய பின்னணியில் இயல்பாகவே சாதியப் பிரச்சினைத் தீர்வு, தேசியப் பிரச்சினையும் சுயநிர்ணயமும் குறித்த கற்றல் என்பவை குறித்து நான் ஆழமாக ஈடுபடலானேன். "சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?" என்ற எனது கட்டுரை, செம்பதாகையில் தொடராக வெளியானது. "சாதியமும், அதற்கு எதிரான போராட்டங்களும்," நூலுக்கான ஆய்வுத் தேடல் குழுவில் இடம்பெற்று பலரைச் சந்தித்து களஆய்வு முயற்சிகளில் பல விடயங்களைக் கற்றதுடன் அதன் எழுத்து முயற்சியி லும் பங்கெடுக்க முடிந்தது.

கூடவே பல சந்தர்ப்பங்களில் கூறியவாறு, 1982இன் பாரதி நூற்றாண்டில் பாரதி பற்றிய கற்றலும் ஆழம் பெற்றது. நடைமுறைப் பிரயோக அறிவியலாக மார்க்சியத்தை வரித்துக் கொண்டிருந்த எனக்கு பாரதி பலவியப்புகளைத் தருகிறவரானார். "பாரதியின் மெய்ஞ்ஞானம்" அதன் வெளிப்பாடு. அந்நூலுக்கு கவிஞர் சி.சிவசேகரம் பெறுமதிமிக்க முன்னுரை ஒன்றை வழங்கியிருந்தார்; அது நூலுக்கு காத்திரமான ஏற்பினை ஏற்படுத்தியிருந்தது.

எனது கற்றல், செயற்பாடு, எழுத்து வேலை ஒவ்வொன்றையும் மிகுந்த கரிசனையுடன் கேட்டறிந்து அவ்வப்போது ஆலோசனைகளும், வேண்டியபோது கடும் விமர்சனங்களும், உற்சாகமூட்டலும் என முற்றிலும் தனது ஆன்மா என்னில் கலந்து விடுவது போன்ற ஈடுபாட்டுடன் என்னை நெறிப்படுத்தினார் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம். இது சற்று அதீதமாக சொல்வதாகப் படலாம்; பல தோழர்களுடனும் இது போன்ற தொடர்பாடல் வாயிலாக அவர் பலரையும் வளர்த்தெடுத்துள்ளார்; ஒவ்வொருவரது ஆற்றலையும் இனங்கண்டு இயக்கச் செயற்பாட்டுக்கு அவை வலுசேர்க்கும் வகையில் நடைமுறை வடிவம் பெறுவதற்கு ஏற்றதாக அவர்களது பங்களிப்பு உச்ச அளவில் வெளிப்படும் வண்ணம் தனக்குத் தெரிந்த அனைவருக்கும் வழிகாட்டியுள்ளார், தோழர் கே.ஏ.சுப்பிரமணியம். அந்த வகையில், என்னில் மட்டும் அதிக தாக்கம் வெளிப்படுவதாக உரிமை கோருவது சரியாகாது.

இருப்பினும் அவரைச் சந்தித்து, அவரது மறைவு வரையான பதினைந்து வருடங்களுக்கு மேலாக அவருடனேயே எனது தொடர்

படிப்பகம்

www.padippakam.com



பாடல் மிக அதிகமாய் இருந்த வகையில், அவரது கருத்தியல் வீச்சு என்னிடம் மடை மாற்றப்பட்டிருந்தது என்பது ஓர் ஆழமான உண்மை. என் எழுத்தில் நான் கற்ற - பெற்ற அனுபவ வசனங்கள் வெளிப்பட்ட போதிலும், எனது விடயப் பரப்பின் அடிப்படை அவரது கருத்தியல் சார்ந்தது. எனது ஆய்வுக் களமாகத் தொடர்ந்து, தேசியம், சாதியம், பாரதியியல் என்பவை அமைய வேண்டும் என தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் வலியுறுத்தியதின் பேறே எனது தொடர் தேடல்; அதன் ஒரு விளைச்சலாக “சாதி, தேசம், பண்பாடு” எனும் இந்நூல்.

சாதியச் சமூகம் - தேசியப் பிரச்சினை - ‘பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே, வெள்ளைப் பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே, என்ற பாரதியின் சுதந்திரப் பள்ளுவில் வெளிப்படுமாறான பண்பாட்டு, அரசியல் முன்னெடுப்பு என்பன இணைக்கப்பட்ட தேடல் புதிய களம் நோக்கிய சிந்தனைப் பெயர்வைச் சாத்தியமாக்கியது. இதனைச் சாதியச் சமூகத்தின் சுயநிர்ணயத் தீர்வுக்கு பிரயோகிக்கும் போது நமது சமூகத்தில் தேசியம் ஆளப்படும் சாதியினதும் ஒடுக்கப்படும் சாதியினதும் எனத் தெளிவாகப் பிளவுபட்டுள்ளமையை எடுத்துக் காட்டியது. இந்த இரட்டைத் தேசியக் கோட்பாட்டை நீண்டகாலமாக அதனுள் ஊடாடி நான் வந்தடைந்தேன்; அதை வெவ்வேறு களங்களில் ஆழமாக இயங்கும் தோழர்கள் எடுத்த எடுப்பில் ஏற்றுவிட முடியாது. அந்த வகையில் ஏற்க முடியாமலிருந்த தோழர்களின் கடும் விமர்சனங்களுடனேயே என் எழுத்து முயற்சியைத் தொடர வேண்டியிருந்தது.

அதனால் எல்லாம் துவண்டு போய்விடாமல் தொடர்ந்து எழுதுவதற்குப் பலர் தூண்டுதல் சக்தியாக இருந்தனர்; குறிப்பாக சவுத் விஷன் பாலாஜி! பல சிக்கல்களிடையே இப்போது இதையும் வெளியிடுகிறார். இது அவரது ஒரு வேலையும் என்பதால் நன்றிக்கு அப்பாலான சமூக மாற்றச் செயற்பாட்டின் கூட்டு வேலையாக இதனைக் கணித்து அது தொடர்பில் மேற்கொண்டு எழுதாது அமைகிறேன். இருந்த பல தயக்கங்களைத் தகர்த்து எனது இந்த நூலையும் துணிவுடன் அவர் வெளியிடுகிறார் எனச் சொல்வதே இங்கு போதும்!

முதலாவதாய் இடம் பெறும் கட்டுரையில் இரட்டைத் தேசியம் பற்றிப் பேச்சில்லை; அதை நோக்கிய வளர்ச்சிக்கான அருட்டுணர்வு வெளிப்படும். ஒரு வருடத்தின் பின்னர் 2001ல் எழுதிய இரண்டாவது கட்டுரையில் தனியே இரட்டைத் தேசியமே பேசுபொருள். அமைப்பு ஒன்றுக்கான கட்டுரை கேட்கப்பட்ட நிலையில் இதே சிந்தனையில் இருந்த வேகம் வெளிப்படுமாறான கட்டுரை அது. மேலே சொன்னவாறு, இந்தத் தேடல்களோடு அன்றி வேறு விவகாரங்களில் இருந்த தோழர்களுக்குக் கட்டுரை முழுமையாக ஏற்கமுடியாமல் பட்டது; பிரசுரிக்க முடியவில்லை என்று தெரிவித்தனர்.



மூன்றாவது கட்டுரை 2007 லண்டன் தலித் மாநாட்டுக்காக எழுதப்பட்டது. அது முழுமையாக தலித் பிரச்சினைகளை மையமாக வைத்த மாநாடு. அந்த வகையில் தலித் சிந்தனையாளர்களுடனான உரையாடலாகவே அந்தக் கட்டுரை அமைந்துள்ளது. கம்யூனிஸ்ட் அமைப்புக்கான எழுத்துரு எவ்வகையில் இருக்க முடியுமோ அவ்வாறே தலித் மாநாட்டுக்கான உரையாடல் அமையமுடியாது. இந்த அடிப்படையான வேறுபாட்டைக் கவனத்திற் கொள்ளாமையினால் அந்தக் கட்டுரையும் அமைப்பின் கடும் விமர்சனங்களை முகங் கொண்டது. இரு கட்டுரைகளும் அச்சு ஊடகங்களைக் காணவில்லை. (முந்திய கட்டுரை இணையத்தளங்களிலும் வெளிவரவில்லை.)

பின்னர் ‘இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்’ என்ற நூல் உட்பட, தொடர்ந்து பல்வேறு தளங்களில் இரட்டைத் தேசியம் பற்றி எழுதி வந்தேன். காத்திரமான விமரிசனங்கள் வெளிப்பட்டன. அதன் உத்வேகம் காரணமாக 5, 6 ஆகிய இரு இறுதிக் கட்டுரைகளும் ஆதவன் தீட்சண்யாவின் வேண்டுதலின் பேரில் ‘புதுவிசை’ சஞ்சிகைக்காக எழுதப்பட்டன. உற்சாகமூட்டத் தக்க வகையிலான ஆரோக்கியமான விமரிசனங்களை புதுவிசை தோழர்களிடமிருந்து பெறமுடிந்தது. இந்த விவகாரம் ஏனையவர்களால் இனிச் செழுமைப்படுத்தப்படும்; எனது முயற்சி வீணானது இல்லை என்பது காத்திரமாக வெளிப்பட்டி ருப்பதன் பேறே இந்நூல்.

புதிய வடிவில் சிந்திக்க வேண்டிய விடயம் என்கிற வகையில் இவை என் சிந்தனையில் வளர்ந்த பிரகாரம் இங்கே ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளன. இவற்றில் நான்காவதாயுள்ள அம்பேத்கரும், எம்.சி.சுப்பிரமணியமும் என்கிற கட்டுரை இரட்டைத் தேசியம் பற்றிப் பேசாத போதிலும், இத்தொகுப்புக்கு அவசியமானது. இலங்கையின் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்துக்கு முன்னோடியான சிறு பான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம்.சி.சுப்பிரமணியம் அவர்க ளது போராட்ட வாழ்வு இல்லையெனில் இந்தச் சிந்தனை முறைக்கு இப்போதும் வர முடிவது சாத்தியப்படாது காலங்கடத்தப் பட்டிருக்க லாம். அந்த அனுபவ வெளிப்பாடு என்கிற வகையில் “மல்லிகை” 45வது ஆண்டு மலரில் வெளியான கட்டுரை இங்கு இடம் பெற்றுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டம் வீறுகொள்ள வைத்த அரசியல் பண்பாட்டு தத்துவார்த்த வீச்சுகள் குறித்து இன்னும் ஆழமான ஆய்வுகள் வெளிப்பட வேண்டும். அந்த எழுச்சியின் முன்ன ணிச் சக்தியான நிச்சாமத்தில் என் ஆரம்ப அரசியல் கல்வி அமைய முடிந்தமையினாலேயே எந்தச் சலனங்களுக்கும் விட்டுக் கொடுக்காமல் என்னால் தொடர்ந்து இயங்கவும், எழுதவும் முடிகிறது. அந்த வகையில் மாபெரும் சக்தியான நிச்சாமத்துக்கு எனது இந்தச் சிறிய காணிக்கை!

ஆறு தலைப்புகளுடன் சாதி தேசம் பண்பாடு எனும் இந்நூல் அச்சாக்கப்பட்ட நிலையில் அதன் பிரதிகள் வழக்கம்போல பல தோழர்களிடம் வழங்கப்பட்டு விமரிசனங்கள் பெறப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



அத்தகைய சூழலில் ஒசூர் சென்றபோது நூல் தொடர்பான கருத்தாடல் விமர்சன அரங்காக ஒரு சந்திப்பை ஏற்படுத்தும் நோக்கம் இருந்தது; இறுதி நேரத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் - ஒசூர் கிளையுடனான பொதுவான கருத்தாடல் நிகழ்வாக அது ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயினும், நூலோடு தொடர்பான விடயங்களும் பேசுபொருளாக அமைந்ததுடன் நூலைப் படித்த தோழர்களது கருத்துகள் சார்ந்தும் கலந்துரையாடல் அமைந்தமையி னால் நூலினை மறுமதிப்பீடு செய்ய அச்சந்திப்பு உதவிகரமாய் அமைந்தது. பின்னர், பாலாஜி வீட்டில் ஒருநாள் அமர்வாகப் பிரதியை வாசித்த தோழர்களுடனான சந்திப்பு அமைந்தது. பாக்கியம், மருத்துவ மணி, அய்யாத்துரை, செந்தில்பாபு, நீதிராஜன், பிரதாப் ஆகியோர் ஆரோக்கியமான விவாதங்களை முன்வைத்தனர். மறு வரைவு செய்யவல்ல வகையிலான அடிப்படையான கேள்விகள் முன்வைக்கப் பட்டன. அதன் அடிப்படையில் கட்டுரைகளினுள் செய்யப்பட வேண் டிய திருத்தங்கள் இனங்காணப்பட்டன. அனேகமானவை கவனத்திற் கொள்ளப்பட்டு திருத்தப்பட்டுள்ளன அல்லது சேர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விடயங்களை ஒரு பின்னுரையாக எழுதுவது அவசியம் எனத் தோழர்கள் அபிப்பிராயம் வெளியிட்ட வகையில் பின்னுரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்தப் பின்னுரை இல்லையெனில் நூல் நிறைவு பெற்றிருக்காது என்பதை உணர்வோம். அந்த வகையில் ஒரு கூட்டு முடிவுக்கான வடிவில் இந்நூலை அமைப்பதற்கு உதவிய அனைத்துத் தோழர்களுக்கும் (பலரது பெயர்கள் இங்கு குறிப்பிடப் படவில்லை) நன்றி.

நூலின் ஏழாவது கட்டுரையாக அமைந்துள்ள "மார்க்சியப் பிரயோகத்தில் தேசம் சாதி பண்பாடு" எனும் கட்டுரை 'பின்னுரை' தன்னுள் அடக்கி வைத்திருந்த விடயப்பரப்பு. இவ்வாறு பிரிக்கப்படக் காரணமாக அமைந்தவர் ஜெ.லெனின் மதிவானம். மிக நீண்டதாக 'பின்னுரை' அமைவது பொருத்தமாயில்லை எனப்படித்துப் பார்த்துக் கூறிய விமர்சனத்தின் பேரில் பிரிக்கப்பட்டு, வேறாக, நூலின் முகப்பின் இடம்பெறும் "நுழைவாயிலாக ஒரு பின்னுரை" அல்ல மேலேயுள்ள பந்தியில் பிரஸ்தாபிக்கப்படுவது (இரண்டினதும் சேர்ப்பு அங்கு பேசப்பட்டது). "மார்க்சியப் பிரயோகத்தில் தேசம் சாதி பண்பாடு" கட்டுரையில் முதல் பகுதியாய் இடம் பெறும் "தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு" என்ற பகுதி "மல்லிகை" 46வது ஆண்டு மலருக்காக எழுதப்பட்டது; அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களுக்கும், லெனின் மதிவானத்துக்கும் - அவர்களுடனான உரையாடல்கள் இந்நூலாகத்தில் வகித்த பங்களிப்புக்காக எனது நன்றிகள். இந்நூல் முழுமையிலும் இடம்பெறும் 'இனக்குழு' எனும் சொல் (ஏழாவது கட்டுரையில் போல) 'இனமரபுக் குழு' என வாசிக்கப்பட வேண்டும். அதன் காரணம் ஏழாம் கட்டுரையில் உண்டு; முன்னர் அச்சாக்கப்பட்டவற்றை மாற்றவில்லை - நூலில் எங்கும் Race எனும் பொருளில் இனக்குழு என்ற சொல் கையாளப்படவில்லை என்பதனைக் கவனத்திற்கொள்ளவும்.



நூலாக்கத்தில் இயங்கியவாறுள்ள ஜெ.பாலாஜி, கணினி அச்சுப் பதிவாக்கும் நண்பர் மணிமாறன், அச்சக நண்பர்கள் மற்றும் விநியோகப் பங்காளிகளான தோழர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றிகள். வழக்கம் போலவே எனது குடும்பம், உறவினர்கள், தோழர்கள் அனைவரும் என் எழுத்து வேலைக்கு என்னை அனுமதித்து உதவிய வகையில், அனைவர்க்கும் நன்றி. எப்போதும் என் கருத்துகளைக் கடும் விமரிசனங்களோடும் உற்சாகப்படுத்தலோடும், விருத்தி செய்ய உதவுவது போல இந்நூல் தொடர்பிலும், தொடர்பாட உள்ள உங்களுக்கும் முன்கூட்டிய நன்றிகளுடன்,

*ந.இரவீந்திரன்*

*16.05.2010*

படிப்பகம்

www.padippakam.com



# நுழைவாயிலாக ஒரு பின்னுரை

ஒரு நூற்றாண்டின் முன்னர் அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசன் ஆகியோர் திராவிடன், ஆதித்திராவிடன் எனும் கருதுகோள்களை முன்வைத்து ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டும் செயற்களத்தினைத் தமிழகத்தில் ஆரம்பித்து வைத்தனர். அதேகாலகட்டத்தில் இந்திய விடுதலை எழுச்சி முளை கொள்ளத் தொடங்கி வீறுடன் வளர முற்பட்டிருந்தது. இந்தியத் தேசியத்துக்கு மாற்றாக திராவிட அடையாளமும், இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தம் முதலாக தென்னிந்திய உயர்சாதிய வர்க்கப் பிரிவினர் அமைப்பாக்கம் கொள்ளும் வடிவமாக ஆனபோது ஒடுக்கப்பட்ட மக்கள் ஆதித் திராவிடர் எனும் அடையாளத்தை நாடுவது நமது மண்ணுக்கான இயக்கப் போக்காக அமைந்திருந்தது. இதே சமகாலத்தில் இந்திய தேசியத்தை நிராகரித்தவாறு தலித் மக்களையும் பிற்படுத்தப்பட்டோரையும் எழுச்சியுறுத்தும் பணி மஹாராஷ்டிரத்தில் ஜோதிராவ் புலேயினால் முன்னெடுக்கப்பட்டது - தொடர்ந்து தலித் இயக்கத்தை வீறுமிக்க எழுச்சியுடன் அம்பேத்கர் அங்கே வளர்த்தெடுத்தார்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலை ஆர்வம் இந்திய மக்களில் மிகப் பெரும்பாலானோரை ஈர்ப்பது பிரதான வரலாற்றுச் செல்நெறியாக அமைந்திருந்தமையினால் அதற்கு தலைமை தாங்கிய பிராமண - உயர்சாதிகளின் கூட்டு ஒடுக்கப்பட்ட மக்களை எத்தகைய இடர்ப்பாடுகளுக்கு இட்டுச் செல்லும் என அயோத்திதாசர், ஜோதிராவ் புலே, இரட்டைமலை சீனிவாசன், அம்பேத்கர் போன்றோர் முன்வைத்த எச்சரிக்கை போதிய கவன ஈர்ப்பைப் பெறவில்லை. இன்று இந்தியத் தேசியம் மக்களது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறிய நிலையிலும், இந்தியாவினுள் தேசிய இனங்கள் எதிர்நோக்கும் முரண்பாடுகளாலும் இந்தியத் தேசியம் என்பதே இல்லாத ஒன்று என்ற விவாதங்கள் முன்னிலைக்கு வந்துள்ளது. அயோத்திதாசர், அம்பேத்கர் போன்றோரது ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரலும், பெரியாரின் திராவியடரியக்கத்தின் தூண்டுதலிலான தமிழ்த் தேசிய எழுச்சி குறித்த அக்கறையும் இன்று முதல்நிலைப் பேசுபொருள்களாயுள்ளன.

இந்தியத் தேசியம், இனத் தேசியம் / தலித் தேசியம் என்பன ஒன்றை மற்றது முழுதாக நிராகரிக்க முனைப்புற்றபோதிலும் இவை மூன்றும் நமக்கான நிதர்சனம்; ஒன்றைச் சார்ந்திருந்து மற்றது இல்லாத



வொன்றென மணலுக்குள் முகத்தைப் புதைத்துவிடுவதால் அது மறைந்தொழியப் போவதில்லை. இந்தியா ஒரு தேசமாக முடியாது, பல தேசங்களையுடைய அதனை ஒன்றாக ஒரு நாடு எனும் வடிவத்துக்குள் பிரித்தானிய சாம்ராச்சியம் ஆட்சிபடுத்தியிருந்தது; அந்தச் சாம்ராச்சியம் சிதறும்போது இந்தியா எனும் ஒரு தேசம் உருவாகுவதற்கு மாறாக, அங்கே பல தேசங்கள் தோன்றிவிடும் எனக் கருதியவர்கள் அன்று காணப்பட்டார்கள். ஆயினும், அரபுக்கடலாலும் இமயமலையாலும் சூழப்பட்ட அதன் புவியியல் அமைவும், பௌத்த சமண எழுச்சியும் இந்து மதமும் ஏற்படுத்தியிருந்த பண்பாட்டுப் பிணைப்பும், பிரித்தானிய சாம்ராச்சியம் சாத்தியப்படுத்திய முகாமைத்துவ ஒருங்கிணைப்பும், அனைத்துக்கும் மேலாக பொது எதிரியான ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒரு முகப்பட்டுப் போராடியிருந்தமையினாலும் இந்தியா ஒரு தேசமாக அமைப்பாக்கம் கொள்ள இயலுமாயிற்று; அதனைச் சாதித்ததில் பெரும்பங்காற்றிய மகாத்மா காந்தி தேசபிதா எனக் கொண்டாடப்படலாயினார் (நிஸார் அஹமட், பக்.66 - 67.)

இவ்வாறு இந்தியத் தேசியம் யதார்த்தமாகியபோது, மொழிபேதங்கள் அற்ற ஒற்றைத் தேசியமாக அது துலங்கமுடியும் எனக் கருதப்பட்டது. அதற்கு ஏற்றதாக இந்தியா முழுமைக்கும் இந்தி மொழி பொது மொழியாக்கப்படும் திட்டத்தை முன்வைத்த காந்தி, இந்தியாவைப் பொறுத்தவரை இந்தி உலகத் தொடர்பாடலுக்கான மொழியாக முடியும் எனும் நம்பிக்கையைக் கொண்டிருந்தார். இந்தியாவுக்குட்பட்ட ஏனைய மொழிகளை சமஉணர்வுடன் கருதிய நிலையில் காந்தி இந்தத் திட்டத்தை முன்வைத்தபோதிலும் இந்தித் திணிப்பை எல்லா இனத் தேசியங்களும் ஏற்கும் நிலை இருக்கவில்லை. பிரதானமாக தமிழ்த் தேசியம் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் வாயிலாகவே முதன்மைச் சக்தியாக வளர முடிந்தது. இந்தியை இந்தியாவின் பொதுமொழியாக ஏற்றிருந்த தேசிய இனங்களும் மொழிவாரி மாநிலங்களை வென்றெடுத்துத் தத்தம் மாநிலங்களில் தமது மொழியூடாகவே அரசாற்றும் சாத்தியம் பெற்றனர். அந்த வகையில் இனத்தேசியங்களின் இருப்பு நிராகரிக்கவியலாதது ஆகியது. இத்தகைய ஒரு யதார்த்தம் ஒருவர் தன்னை இந்தியத் தேசியத்துக்கு உரியவராகவும் தமிழ், மலையாள, கன்னட, தெலுங்கு, மராட்டி, குஜராத்தி, வங்காளி போன்ற ஏதாயினும் ஓர் இனத்தேசியத்துக் குரியவராயும் (ஒரே தரத்தில் இரு தேசங்களின் பிரதிநிதியாக) அடையாளங்கொள்ள இயலுமாயிற்று. தேசியப் பிரச்சினையில் நாடு இனம் சார்ந்த இரு தேசியங்கள் ஒரேவேளையில் சாத்தியப்படுதல் சர்வதேச மார்க்சியர் கவனத்துக்குரியதாகியுள்ளது

(A Dictionary of Marzist Thought. P.361)

இந்தியத் தேசியம் யதார்த்தமாகியபோது, இந்தியா முழுமையிலுமுள்ள தலித் தேசியம் குறித்த அக்கறையைக் கொண்டிருந்த அம்பேத்கர் இனத்தேசியங்கள் சார்ந்த பிரிவினை

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுவது அந்தந்த மண் சார்ந்த தலித் மக்களைத் தனிமைப்படுத்திப் பாதகத்துக்கு உள்ளாக்கும் எனக் கருதினார். இந்தியத் தேசியமோ இனத் தேசியமோ, அவை அடிப்படையில் தலித் மக்களை ஒடுக்குவதாகவே அமைகின்றன எனும் நிலையில் தலித் தேசிய உணர்வுடனேயே அம்பேத்கர் எந்தவொரு விடயத்தையும் அணுகினார். இந்தியத் தேசியம், இனத் தேசியம் ஆகிய இரண்டையும் அத்வைத நிலையில் ஒருமுகமாய்க் கொண்டிருந்தவர்களில் அனேகர் தலித் ஒடுக்குமுறையை முன்னெடுப்பவர்களாய் அல்லது ஒடுக்குமுறைக்கு எதிராகத் தலித் மக்கள் போராடுவதை நியாயமற்றது எனக் கருதுகிறவராக இருக்கக் காணலாம். அந்த வகையில் நாட்டு - இனம் சார் இரு தேசியங்களி லிருந்து ஒடுக்கும் - ஒடுக்கப்படும் மக்களுக்கான பிளவுபட்ட தேசியம் என்பது இரட்டைத் தேசியம் என வரையறுக்கத் தக்க குணாம்ச வேறுபாடு பெற்றிருக்கக் காணலாம்.

இந்திய - தமிழினத் தேசியங்களை முரணற்ற வகையில் வரித்துக் கொண்டவரான பாரதி தலித் தேசியத்தின் நலன்களும் நிறைவுறும் வண்ணமான பூரண சமத்துவம் நோக்கிய விடுதலையையே வேண்டி நின்றார். அதற்கமைவான சமூக பொருளாதார பண்பாட்டு விடுதலைக ளுக்கான முழக்கங்களை முன்வைத்து தனது எழுத்துப் பணியை முன்னெடுத்தவர் பாரதி. பிரபஞ்சம் அளாவிய அவரது சிந்தனை வீச்சு சர்வதேச உணர்வின் பாற்பட்டதாக அமைந்திருந்தமையினால் இரு தேசியங்களுடன், பிளவுபட்ட இரட்டைத் தேசியம் அற்ற பூரண தேசியராக அவரை வெளிப்படுத்துகிறது.

சர்வதேசப் பார்வை கைவரப்பெற்ற மார்க்சியர்களும் இரட்டைத் தேசியப் பிளவற்ற வகையில் அனைத்துப் பிரிவு மக்களது விடுதலையை வென்றெடுக்கும்வண்ணம் தத்தமது தேசிய எல்லைகளுக்குள் செயற்பட இயலுமானவர்களே. தமக்கான சந்தைவாய்ப்புக்குரிய தேசக்கட்ட மைப்பை வேண்டிநிற்கும் சுரண்டும் வர்க்க நாட்டம் போலன்றி சுரண்டலை அனைத்து வடிவங்களிலும் தகர்க்கப் போராடும் மார்க்சியர்கள், தேசிய விடுதலைக்காகப் போராடுகையில் தலித் மக்களது அபிலாஷைகளை முதன்மைப்படுத்துவது தவிர்க்கவியலாதது. சுரண்டும் வர்க்க நலனுடனான தேசியத்தில் இந்தப் பண்பினை எதிர்பார்க்க முடியாது; நமது தேசிய எழுச்சிக்கு தலித் மக்களை ஈர்க்கும் பொருட்டு கவர்ச்சியான முழக்கங்களை வெளிப்படுத்திய போதிலும் அவர்களையறியாத தலித் ஒடுக்குமுறைக்கான அம்சங்களை அவர்கள் வெளிப்படுத்தவே செய்வர். தீண்டாமை முழுதாக ஒழிக்கப்பட வேண்டும் என மனதார விரும்பிச் செயற்பட்ட காந்தியும், தலித் மக்களது விடுதலையில் மிகக் குறைந்த பங்களிப்பு நல்க வாய்ப்பிருந்த இரட்டை வாக்குரிமைக் கோரிக்கையை அம்பேத்கர் முன்வைத்த போது தனது உயிரைப் பணயம் வைத்து எதிர்த்தார் என்பது கவனிப் புக்குரியது. அத்தகைய சூழலில் தலித் தேசியத்துக்காக தனித்துப் போராடுவது தவிர்க்கவியலாதது எனப் புரிந்து கொள்வோம்.



அவ்வாறன்றி, மார்க்சியர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கையில் தலித் தேசியப் பிளவுக்கு அவசியமற்ற வகையில் முழுமைத் தேசிய நாட்டத்தை பெற்றிருப்பர். இலங்கை தேசியத்தை ஏற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை முன்னெடுத்த கம்யூனிஸ்டுகளிடம் இந்தப் பண்பைக் காண முடிந்தது. தமிழினத் தேசியம் அதற்கு எதிராக செயற்பட்டபோது, அது பிளவுபட்ட தேசியப் பண்பை வெளிப்படுத்தியதாயினும் கம்யூனிஸ்டுகள் ஒருபோதும் தமிழினத் தேசியத்துக்கு எதிராகச் செயற்பட்டதில்லை. சாதியத் தகர்ப்பு போராட்டங்களை நாற்பதாம் ஆண்டுகளில் இருந்தே கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்து வந்தது. ஐம்பதாம் ஆண்டுகளில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைமையில் அமைதிவழிப் போராட்டங்கள் தீர்க்கமாக வளர்க்கப்படுகையில் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டல் இருந்தது. அப்போது முனைப்புறத் தொடங்கிய ஈழத் தமிழ்த் தேசியம் இரண்டாம் நிலையில் செயற்பட்டபோது சாதியத் தகர்ப்பு போராட்டமே யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரதான செல்நெறியாக எழுபதுகளின் ஆரம்பம் வரை இருந்தது. அக்காலத்து கலை இலக்கியப் படைப்புகளையும் அரசியலரங்கையும் ஆய்வுக்கு உள்ளாக்குகின்ற எவராலும் இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

எழுபதாம் ஆண்டுகளின் பிற்கூறில் ஈழத்தமிழ்த் தேசியம் முதன்மைப்போக்காக வளர்ந்துவிட்ட சூழலில் அதன் பிரிவினைவாதக் கோரிக்கையின் தவறு குறித்து விவாதிக்கப்பட்டதாயினும் அதற்கு எதிரான எந்தச் செயற்பாடுகளையும் கம்யூனிஸ்டுகள் முன்னெடுத்தது இல்லை. தேசிய இனப்பிரச்சனை கொதிநிலையில் இருந்த காலத்திலும் சுயநிர்ணய உரிமை குறித்த ஆழமான கற்றலும் ஈடுபாடும் இன்றி லெனின் ஸ்டாலின் வசனங்களைக் கூறுபோட்டு ஆராயும் புத்தகவாதத் தவறினைக் கம்யூனிஸ்டுகள் இழைத்தார்கள் எனும் விமரிசனம், சுய விமரிசனம் இன்று எழுந்துள்ளது. லெனின் சுயநிர்ணய உரிமை குறித்து முன்வைத்த வியாக்கியானமே போதுமானது; தேசிய இனத்தை இனங்காண ஸ்டாலினால் முன்வைக்கப்பட்ட நான்கு வரையறைகள் லெனினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற வகையில் இன்றும் அதையே பின்பற்றியாகவேண்டும் எனச்சொல்கிற முதிர்ந்த பக்தர்கள் நம் மத்தியில் உள்ளனர். மார்க்சிய லெனினிசம் பக்திவிசுவாசத்தின் பாற்பட்ட மதவிவகாரமல்ல; அது மாறும் சூழலைப் புரிந்து கொண்டு ஏற்ற தீர்வுகளையும் செயற்பாட்டு வடிவங்களையும் கண்டறிய உதவும் சிந்தனை முறை. தேசிய இனப்பிரச்சனை பற்றிய மார்க்சிய லெனினிச நிலைப்பாடு யாது? இன்றைய சூழலில் தேசியம் என்பதை எவ்வாறு புரிந்துகொள்வது?

“உலகத்தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்” எனும் பிரகடனத் துடன் தோற்றம் பெற்ற மார்க்சியம், “உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்று சேருங்கள்” எனும் லெனினிஸமாக விருத்தி பெற்ற நிலையிலேயே உலகின் பெரும் பகுதியில் சோஷலிச

படிப்பகம்

www.padippakam.com



மாற்றியமைத்தலை முன்னெடுக்க முடிந்தது. தனி மனிதர்களாக பிரிந்திருக்கும் வர்க்கச் சுரண்டல் மட்டுமல்ல, 'சமூக வர்க்கமாக' ஒடுக்கப்பட்டு தேசியச் சுரண்டலுக்கு உள்ளாகும் நிதர்சனத்தையும் உள்வாங்கி ஏற்றத்தாழ்வுகளைத் தகர்த்து பொதுவு டைமை அமைப்பைக் கட்டியெழுப்பும் இலட்சியத்தை முன்னெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

உபரியை அபகரிக்கும் வாய்ப்போடு முன்னேறிய இனக்குழுக்கள் ஆளும் சாதிகளாகி, ஏனைய இனக்குழுக்களை பிற்படுத்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட சாதிகளாக்கி 'சமூக வர்க்கமாக' சுரண்டலுக்குள்ளாக்கிய நமது சாதியச் சமூக முறையில் சமூக மாற்றத்துக்காகப் போராடுகிற நாம் மேற்படி விடயத்தை ஆழ்ந்த பொருளில் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். தனியே வர்க்கப் பிரிவுக்கு எதிராகப் போராடுவதாயின் கூர்மையான அரசியல் புரட்சி போதுமானதாக இருக்கும். கிரேக்க, ரோம், பிரான்சிய, ருஷ்யப் புரட்சிகள் என உலகவரலாற்று செல்நெறி அத்தகைய அரசியல் புரட்சிகளில் வெளிப்பாடுதான்.

'சமூக வர்க்கமாக' சுரண்டலுக்கு உள்ளாகும் சாதிகளுடன் தேசங்களும் ஒடுக்குவோரின் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் முதன்மையாய்ப் போராட வேண்டியுள்ளது. அந்தவகையில் அரசியல் புரட்சிகளை விடவும் பண்பாட்டுப் புரட்சிகள் இங்கே தீர்க்கமானவையாயுள்ளன. நமது சாதியச் சமூகத்தில் பண்பாட்டுப் புரட்சிகளே அமைப்பு மாற்றங்களை விளைவித்துள்ளன.

அந்த வகையில் சாதி, தேசம், பண்பாடு என்பன குறித்த ஆழமான ஆய்வுக்கு அவசியமுள்ளது. இவை குறித்த பல்வேறு ஆய்வுகள் பல புரிதல்களை நல்கியுள்ளன. இங்கு அவை ஒருமுகப்படுத்தி நோக்கப் படுகையில் அடிப்படையான சில கோட்பாட்டு உருவாக்கங்களை எட்டவாய்ப்பாகியுள்ளது. சாதி - தேசம், அவற்றின் சுயநிர்ணயம் என்பன குறித்து புதிய வரையறைகளை வந்தடைய வேண்டியவர்களாயுள்ளோம். அயோத்திதாசர், ஜோதிராவ் புலே, பெரியார், அம்பேத்கர், எம்.சி.சுப்பிரமணியன், எஸ்.ரி.என். நாகரத்தினம் எனச் சாதியத் தகர்ப்புக்காப் போராடியவர்களது அனுபவ வெளிப்பாடுகளைத் தேசியம் குறித்த மார்க்சியத்தின் இன்றைய புரிதல்களுடன் இணைத்து விளங்கிக் கொள்வதன் வாயிலாக பொதுவுடைமைப் புத்துலகம் படைக்கும் புதிய மார்க்கத்தை கண்டடைய வல்லவர்களாகின்றோம். இது நமக்கான புத்தாக்கம், புதிய உத்வேகம்! புதிய இரத்தப் பாய்ச்சலை இவ்வகையில் உள்வாங்கி செழிப்புறும் மார்க்சிய - லெனினியம் ஒரு போதும் தேங்கிப் போய்விடுவதில்லை; தொடர்ந்த வரலாற்றுப் பாய்ச்சலை எவராலும் தடுத்துநிறுத்திவிட முடியாது.

மார்க்சிய - லெனினியத்தை கையேற்று வளர்த்தெடுத்து உரிய மார்க்கத்தில் பிரயோகிப்பதன் வாயிலாக மட்டுமே இப்பூவுலகைப் பாதுகாக்கவும் முடியும். இன்றைய சுரண்டல் அமைப்பின் மிருக



முனைப்பு வேகம் இறுதியில் புல் பூண்டு கூட முளைக்கவியலாக் கட்டாந்தரையாகப் பூமிப்பந்தை மாற்றிவிடும். சுரண்டலைத் தகர்த்து பொதுவுடைமையை வெற்றிகொள்ள ஏற்றதாக அனைத்து சக்திகளையும் ஐக்கியப்படுத்த முடிந்தால் மட்டுமே மனிதர் எனும் மிருகங்களிடமிருந்து பூமிப்பந்தைக் காக்க முடியும். மிருக இயற்கையை மீறிய - புதிய பண்பாட்டு விருத்திமேவிய மனிதராவோம், அதற்காக மார்க்சிய - லெனினியம் கற்போம்! செயற்படுவோம்.!!

படிப்பகம்

www.padippakam.com



# 1. பஞ்சமர் இலக்கியம்

## (ஈழத் தமிழ் தலித் இலக்கியம்)

இலங்கைத் தமிழர் மத்தியில் தலித் இலக்கியத்துக்கான சாத்தியப் பாடுகள் உண்டா என்ற கேள்வி எம் மத்தியில் உண்டு. சாத்தியமில்லை என்ற கருத்துக்களையும் கேட்டிருக்கிறோம். இலங்கையில் பிராமணர் ஆதிக்கம் இல்லையென்பதால் மோசமான சாதிய ஒடுக்குமுறை நிதர்சனத்தில் இருக்கவில்லை என்றும், அந்த வகையில் ஈழத்தில் தலித் இலக்கியம் தோன்ற முடியாது என்றும் விளக்கமளிக்கப்படுகின்றது. ஆயினும் தலித் இலக்கியப் பிரக்ஞை தமிழகத்தில் தோற்றம் பெற்ற போது முதல் தமிழ் தலித் இலக்கிய கர்த்தாவாகக் கொண்டாடப்பட்டவர் இலங்கைத் தமிழரான கே.டானியல் என்பது சுவையான ஒரு முரண்.

இந்த ஆய்வுக் கட்டுரை இந்த முரணுக்கான விளக்கத்தை முன் வைக்க முயலும். 'ஈழத் தமிழ் தலித் இலக்கியம்' என்பதற்கு அதற்கேயுரித்தான சொந்தப் பெயருண்டு. அது 'பஞ்சமர் இலக்கியம்'. இந்தியாவில் மராட்டியத்தில் முதல் தலித் இலக்கியம் தோற்றம் பெற்ற சம காலத்தில் இலங்கையில் பஞ்சமர் இலக்கியம் உருவாகத் தொடங் கியது. அம்பேத்கர் தலைமையில் மராட்டியத்தில் ஒடுக்கப்பட்டோர் (தலித் மக்கள்) எழுச்சி தொடக்கம் பெற்ற சமகாலத்தில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் சாதியத்துக்கு எதிரான கருத்தியலை செயலுருப்படுத்தத் தொடங்கியது. தொடர்ந்து வில்லூன்றி மயானப் போராட்டம். சங்கானையில் சுடலையில் சமத்துவப் போராட்டம் என ஒடுக்கப்பட்டோர் எழுச்சி வரலாறே யாழ்ப்பாணத்தின் முனைப்பான போக்காக ஆகியது.

ஐம்பதாம் ஆண்டுகளில் மார்க்ஸிய வழிநடத்தலில் 'இழிசனர் இலக்கிய இயக்கம், தோற்றம் பெற்று வளர்ந்து பழம் பண்டிதர்களின் வாயையடைத்தது. இழிசனர் இலக்கியத்தின் தவிர்க்கவியலாத பகுதியாகப் பஞ்சமர் இலக்கியம் பிறந்தது. பஞ்சமர் இலக்கியத்திற்கும் மார்க்ஸியர்களுக்குமிடையே விரோதமற்ற நிலையும், ஆரோக்கியமான பரஸ்பர நல்லுறவும் மிளிர்ந்தது.

பஞ்சமர் இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன், பிரச்சனைகள் குறித்து இவ்வாய்வுக் கட்டுரை அலசும். அதற்கு அமைவாக கீழ்வரும் ஐந்து உபதலைப்புகளில் இது கட்டப்படுகிறது.

I ஈழத்தில் பஞ்சமர் இலக்கியம்.

II ஒக்ரோபர் 21 எழுச்சியும் பஞ்சமர் இலக்கியமும்.



III வர்க்கப் பார்வையில் பஞ்சமர் இலக்கியம்.

IV பஞ்சமர் இலக்கியத்தில் பெண்.

V தேசிய இன நெருக்கடியும் பஞ்சமர் இலக்கியமும்.

முதல் அத்தியாயம் பஞ்சமர் இலக்கியத்தின் வரலாற்றை முன் வைத்து, அதன் தலித் இலக்கியப் பண்பை அடையாளங்காட்டும். பிராமணர்கள் ஒரு சாதி என்கிற அளவில் இலங்கையில் இல்லை. வெறும் கோயில் சடங்குகளிலும் மற்றும் மதச்சடங்காசாரங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட கடமைகளுக்கு ஏற்ற அளவிலேயே பிராமணர்கள் உள்ளனர். ஆயினும் வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்தில் சாதியப்படிநிலையில் உச்சத்தில் வீற்றிருந்து செலுத்திய ஆதிக்கமும் ஒடுக்குமுறையும் இந்தியச் சமூகங்களில் பிராமணர்கள் வகித்த பாத்திரத்திலிருந்து சற்றும் குறைந்ததல்ல. தீண்டாமைக் கொடுமையில் 'தாழ்த்தப்பட்டவர்கள்' அனுபவித்த கொடுமைகளும் அளவற்றன. சாதிகளுக்கிடையேயான சமத்துவத்துக்காக போராடுவது என்ற கட்டத்திலிருந்து, சாதியத்தை தகர்ப்பதான தீண்டாமை ஒழிப்புப் போராட்டப் பரிணமிப்பு அறுபதாம் ஆண்டுகளில் தோன்றியது. இது எந்தவொரு தனிச்சாதிக்கு எதிராகவும் தொடுக்கப்படவில்லை. அனைத்துச் சாதியினர் தரப்பிலிருந்தும் கிளர்ந்தெழுந்து சாதியத்தை வேரறுக்கும் இலட்சியத்துடன் ஐக்கியப்பட்ட முற்போக்கு சக்திகளின் தலைமையிலான வெகுஜனப் போராட்டமாக அது அமையமுடிந்தது.

இவ்வாறு தெளிவான பார்வையுடன் ஒருமுகப்படுத்தப்பட்ட போராட்டமாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டம் அமையமுடிந்தமைக்கான காரணம் மார்க்ஸிய இயக்கத்தின் தலைமைப் பாத்திரமாகும். 'சாதி முறை தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற பதாகையில் கீழ் மார்க்ஸிய இயக்கம் 1966 ஒக்ரோபர் 21ல் தொடங்கி வைத்த எழுச்சி அலை தொடர்ந்து வழிகாட்டும் நெறியாக அமைந்திருந்தது. பஞ்சமர் இலக்கியமும் ஒக்ரோபர் 21 எழுச் சியின் வழி நடத்துதலுக்கு உட்பட்டே அமைந்திருந்தது. இரண்டாவது அத்தியாயம் அத்தகைய செல்நெறியை வெளிக்கொணரும்.

'வர்க்கப்பார்வையில் பஞ்சமர் இலக்கியம்' எனும் மூன்றாவது அத்தியாயம் பஞ்சமர் இலக்கியத்தை வர்க்கப்பார்வையில் திறனாய் வுக்கு உட்படுத்தும். 'சாதிய எதிர்ப்புப் போராட்டம் வர்க்கப் போராட்டமாக கொள்ளப்பட முடியுமா? சாதியா, வர்க்க அமைப்பா முதலில் ஒழிக்கப்பட வேண்டும்?' போன்ற கேள்விகள் மிக அடிப்படையானவை. சாதிய நோக்கிலன்றி வர்க்க நோக்கிலான தெளிவு சாதியத் தகர்ப்புக்கு அவசியம் எனச் சொல்லப்படுவது ஏன்? எங்கள் சமூகங்களில் வர்க்கங்களல்ல, சாதிகளே உள்ளன. எமது வரலாறு வர்க்கங்களினதும் வர்க்கப் போராட்டங்களினதும் வரலாறல்ல. மாறாக, சாதிகளினதும் சாதிகளுக்கிடையேயான போராட்டங்களினதும் வரலாறே எனல் சரியானதா? மூன்றாவது அத்தியாயம், வர்க்கச் சமூகத்தின் உருவாக்கத்துக்கு ஏற்பத்

www.padippakam.com



தகவமைக்கப்பட்டுத் தொடரும் இனக்குழுக்குல வாழ்முறையின் தொடர்ச்சியே சாதி என்ற வகையில் இப்பிரச்சனைகளுக்கான விளக்கத்தை முன்வைக்கும்.

நான்காவது அத்தியாயம், பஞ்சமர் இலக்கியத்தில் பெண். மேற்குலக வரலாற்று செல்நெறிலிருந்து எமது சமூக வரலாறு வேறுபட்டுள்ள வகையில் பெண்விடுதலை தொடர்பான பிரச்சனையிலும் பிரத்தியேகமான போக்குகள் உள்ளன. சாதியம் பெண்களைக் கட்டமைத்துள்ள தன்மைகாரணமாக சாதி ஒடுக்குமுறையா பெண் ஒடுக்குமுறையா கொடியது என்பதற்கு ஒற்றைப் பதில் சாத்தியமற்றுப் போகிறது. பஞ்சமர் இலக்கியத்தில் பெண் வகிக்கும் பாத்திரத்தையும் வெறும் பெண்ணிய நோக்கில் விமர்ச்சித்துவிட முடியாது. சமூக ஒடுக்குமுறைகளில் பன்மைத்தன்மையும், பல்வகைத்தான போராட்ட முனைப்புகளும், மனுக்குல விடுதலையின் திசைமார்க்கத்தில் பிரதானப்படுத்தப்படும் அடிப்படை முரண்பாடும் பற்றி இங்கே கவனம் செலுத்துவது அவசியம்.

'தேசிய இன நெருக்கடியும் பஞ்சமர் இலக்கியமும்' எனும் இறுதி அத்தியாயம் எண்பதுகளின் பின் தமிழகத்தில் தலித் இலக்கியம் முனைப்படையும் போது ஈழத்தில் பஞ்சமர் இலக்கியம் இடைநிறுத்தப்படக் காரணமாயமைந்த மாற்றப் போக்கை இனங்காட்டும். இலங்கையில் பிரதான முரண்பாட்டின் இடத்தை வந்தடைந்துள்ள இனத்தேசிய முரண்பாடு சாதிய முரண்பாட்டை இரண்டாம் நிலைக்கு தள்ளியவாறினை அவதானிக்க முடியும். மேலாதிக்கவாதத்துக்கும் மக்களுக்குமான அடிப்படை முரண்பாடு ஏனைய முரண்பாடுகளில் வாய்ப்பானவற்றைக் கூர்மைப்படுத்தி பிரதான முரண்பாட்டின் இடத்தை வகிக்க வைத்துத் தன் இருப்பை நிலைநிறுத்த முயல்வதைக் காணமுடியும். இலங்கையில் இனத்தேசியம் அவ்வாறு கூர்மைப்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் சாதி முரண்பாடு அதே போன்று கூர்மைப்படுத்தப்பட்டு, ஈழத்தின் அனுபவத்தைப் போல் சாதியத்தைத் தகர்க்கும் போராட்டத்தை முன்னெடுக்கவிடாமல் தடுத்து, திசைதிருப்பிச் சாதிகளிடையே மோதல்களாக்கப்படுகிறது. அந்த வகையில் தலித் இலக்கியத்தின் எதிர்காலம் குறித்த விசாரணைகளை முன்வைத்து இந்த ஆய்வு நிறைவெய்தும்.

## I

## ஈழத்தில் பஞ்சமர் இலக்கியம்

சாதியம் ஆரியப் பிராமணர்களின் சதி எனக்கருதும் ஒருவர் பிராமண ஆதிக்கமற்ற ஒரு சமூகத்தில் சாதியொடுக்குமுறை நிலவமாட்டாது எனக்கருத இடமுண்டு. சப்பாத்துக்கு அளவாகக் காலை வெட்ட முடியாது; மேற்படி கோட்பாட்டுக்கு அளவாக சமூக யதார்த்தத்தை மூடி மறைத்துவிட முடியாது. யாழ்ப்பாணச்



சாதியொடுக்குமுறையையும், அதற்கெதிரான தீரம்மிக்க தீண்டாமை ஒழிப்புப் போராட்ட வரலாற்றையும் ஆராயும் ஒருவர், மேற்படி கோட்பாட்டைக் கேள்விக்குள்ளாக்காமல் இருக்கமாட்டார். முன் தீர்மானங்களால் விலங்கிடப்படாமல் புறநிலை நோக்கில் யாழ்ப்பாணச் சமூகத்தை அணுகுவது அவசியம்.

யாழ்ப்பாணத்தின் சாதியப்படிநிலையில் உயர்பீடத்தில் பிராமணர்கள் அல்ல, வெள்ளாளர்களே உள்ளனர். வெள்ளாளர்களின் கோயில் தொண்டூழியப் பூசகர்களாயே பிராமணர்கள் இருக்கிறார்கள். பிராமணியக் கருத்தியலின் அடிப்படையில் தமது புனிதம் பற்றிய மயக்கம் பிராமணர்களுக்கு உண்டு. இது தமக்குத் தாமே வரித்துக் கொண்ட பொற்சிறை என்பதை வெளிப்படுத்தும் படைப்புகளும் உண்டு. தெணியானின் "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" அத்தகைய ஒரு நாவல். இது பிராமணரல்லாத ஒருவர் பார்வையில் அவர்களது வாழ்வியல் அவலங்களை வெளிப்படுத்துவது. ஒரு பிராமணரான ஈழத்து சோமுவின் "விடிவெள்ளி" நாவல், "சமூகத்தின் உயர்சாதி என ஒடுக்கப்பட்ட" பிராமணர்கள் "கோயிலுடன் பிணைக்கப்பட்டு 'ஒதுக்கப்பட்டவராக' வெள்ளாளரால் நடாத்தப்பட்டனர்" என்பதைக் காட்டும் (மேற்கோள் அடையாளமிடப்பட்ட வாசகங்கள் "விடிவெள்ளி" நாவலின் முன்னுரையில் செ.கணேசலிங்கம் குறிப்பிடுவன).

இவ்வாறு வெள்ளாளர் சாதிப்படி நிலையில் பிராமணரைவிடவும் மேலானவராய் விளங்க முடிவது எப்படி? தமிழகத்தில் பொருளாதாரம், கல்வி, ஆன்மீகத்தளம் ஆகியவற்றில் ஏனைய அனைத்துச் சாதிகளையும் விட மிக உயர் ஸ்தானத்தில் பிராமணர்களே உள்ளனர். இலங்கையில் பொருளாதாரம், கல்வி, ஆன்மீகத்தளம் ஆகியவற்றுடன் அரசியல் அதிகாரம் உள்ளிட்ட அனைத்திலும் வெள்ளாளரே மிக உயரிடத்தைத் தக்கவைத்து வருகின்றனர். இங்கே, பிராமணரை தொண்டூழியக் காரராக்கிய சாதியம் எப்படிச் சாத்தியப்பட்டது என்பதே கேள்வி.

இதனை விளங்கிக் கொள்வதற்கு மிகச் சுருக்கமாக தமிழர் சாதிய வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். ஏடறிந்த தமிழர் வரலாற்றுத் தொடக்ககால வீரயுகப் போர்ச் சூழலில் இனக் குழுக்களின் ஆள்புல எல்லைகள் தகர்க்கப்பட்டு சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தர் தலைமையிலான மூன்று அரசுருவாக்க எல்லைக்குள் தமிழ்நாட்டின் பெரும் பகுதி மாற்றிப் புனையப்பட்டது. இத்தகைய அரசுருவாக்க மாற்றியமைத்தலுக்கு எதிராகக் கடும் எதிர்ப்பு யுத்தத்தை இனக்குழுக்கள் தொடுத்தன. தமது சுயாதிபத்தியத்தைப் பேண முயன்ற இனக்குழுக்களின் தலைவர்களான மன்னர்கள் தமது மக்களுடன் இரண்டறக் கலந்து பூரண ஊடாட்டம் கொண்டிருந்தனர். (இந்தச் சமத்துவ சமூகத்தின் தலைவர்களை அரசுருவாக்கத்தின் பேறாக மக்களைப் பிரிந்து அதிகார சக்தியாக மாறிய முடிவேந்தர்கள் போலக்கருதும் மயக்கம் பிற்காலத்தில் நேர்ந்தது).

படிப்பகம்

www.padippakam.com



நதிக்கரையில் வாய்ப்புடையதாயான விவசாய வாழ்முறையில் உபரி உற்பத்தியைப் பெற்ற மருத நிலத்தவர் ஏனைய இனக்குழுக்களை வென்றடக்கி ஏற்றத்தாழ்வான சமூக யதார்த்தத்தை அரசு ஆள்புலத் தினுள் சாத்தியப்படுத்தினர். தீரத்துடன் எதிர்த்துப் போராடிய இனக்குழுக்களும் முடிவேந்தர்களின் படைபலத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் வீழ்ந்து பட்டன. யாதும் ஊர் ஆயிற்று ஏதாவது ஓர் அரசின் எல்லைக்குள்.

இந்த மாற்றம் மருத நில மேலாண்மையைச் சுட்டுவது, முன்னதாகத் தமக்குள் ஏற்றத்தாழ்வற்றிருந்த ஐவகை நிலங்களில் குறிஞ்சித் திணை 'நாடு' எனப்பட்டது. குறிஞ்சி நிலத்தவன் நாடன் எனப்பட்டான். நெய்தல் 'புலம்'; நெய்தலுக்குரியவன் புலம்பன். முல்லை காடு. பாலை குறித்த நிலையான வாழ்முறை கொள்ள முடியாத ஆறலை கள்வரை உடையது. அவ்வாறே வயலும் வயல்சார்ந்த இடமுமாகிய மருதம் 'ஊர்'; மருதநிலத்தவன் ஊரன். விவசாய உற்பத்திப் பெருக்கத்தால் உபரி உற்பத்தியைப் பெறமுடிந்த மருத நிலத்தவரே சமத்துவத்தைத் தகர்த்து ஏனைய இனக்குழுக்களது வாழிடங்களையும் தமது 'ஊர் எல்லைக்குள்' ஆட்படுத்திக் கொள்ளும் வாய்ப்பைக் கொண்டிருந்தனர். இந்த மருத நிலங்களின் ஊரவர்கள் வெவ்வேறு பிரிவினரான வெள்ளாளர்கள் ஆவர். தமிழகம் முழுமையும் சோழப்பேரரசின் ஆளுகைக்குள் கொணரப்பட்டது. கிறிஸ்த்து சகாப்தத்தின் ஆயிரமாம் ஆண்டில், சோழப் பேரரசர்கள் பிராமணர்களை அதிகமாகக் கொண்ட சபாக்களையும், வெள்ளாளர்களை அதிகமாகக் கொண்ட ஊரவைகளையும் நிர்வாக அலகுகளாகப் பயன்படுத்திக் கொண்டனர். பிராமணரது பிரமதேயம், வெள்ளாளரின் ஊர் ஆதியன ஏனைய சாதிகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் தலைமைக் கேந்திரங்களாயின.

முன்னதாகப் பல்லவர் காலத்தில் எழுச்சியடைந்த பக்திப்பேரியக்கம் பிராமணரை மென்மேலும் தருவித்துக் கருத்தியல் ஆளுமை செலுத் துவதற்கு ஏற்றதாகப் பிராமணர்க்கு நிலதானம் கொடுத்து நிலையாக இருக்க வைப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டது. அப்போதே வெள்ளாளர் தமது தலைமையைத் தக்க வைக்கவும் பக்திப் பேரியக்கக் கருத்தியல் ஆவன செய்தது. ஆரியமும் தமிழும் ஆனவராகச் சிவனைச் சித்திரித் தனர் சைவ சமயக் குரவர்கள். தெய்வீக மொழியென ஆக்கப்பட்ட சமஸ்கிருதம் மட்டுமன்றித் தமிழும் சிவனால் நேரடியாகப் படைக்கப் பட்டதென நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் பாடிப்பரவசப் பட்டனர். வெள்ளாளரான நாவுக்கரசரும், தமிழ்ப்பிராமணரான ஞானசம்பந் தரும் (தமிழகத்திலேயே உருவாகிய புதிய கோத்திரம் இவருடையது; இத்தகைய தமிழகப்பிராமண கோத்திரங்கள் 'தென்மா' பிரிவினர்) சமஸ்கிருதத்துக்கு இணையாகத் தமிழை அரியணையேற் றியமை பிராமணருக்கு சமமாக வெள்ளாளரை நிலைநிறுத்த உதவியது. வேதாந்தம் வடஇந்தியாவிலிருந்து வந்து குடியேறிய பிராமணரின் (இவர்கள் தம்மை 'வடமா' பிரிவினர் என அழைக்கின்றனர். வைணவத்திலும் வடகலை - தென்கலை பிரிவு சற்று வேறுபட்ட



வரலாற்றுத் தொடர்புடன் உண்டு) தத்துவத்தளம் எனின், சைவசித்தாந் தம் தமிழகப் பிராமணரதும் (உமாபதி சிவாசாரியார் விதிவிலக்காக தில்லைவாழ் அந்தணர் மத்தியிலிருந்து வந்து, அவர்களால் சாதிப் பிரஷ்ட்டம் செய்யப்பட்ட சைவசித்தாந்தி), வெள்ளாளரதும் தத்துவப் பங்களிப்பு எனலாம். பதியாகிய இறைவனை ஒரு குரு காட்டினால் மட்டுமே பசுவாகிய ஆன்மாவால் காணமுடியும் எனும் போது பிரா மணரது முதன்மையிடம் கேள்விக்குட்பட் டுவிடுகிறது; குரு பிராமண ராக இருக்க வேண்டும் என்ற எந்த நிபந்தனையையும் சைவ சிந்தாந்தம் வைத்துக் கொள்ளவில்லை என்பதை அவதானிக்கலாம். பிராமணருக் கும் மேலாக வெள்ளாளர் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள வாய்ப்பான இடைவெளிகளை சைவசித்தாந்தம் ஏற்படுத்தியுள்ளவாறினை மனங் கொள்ளல் அவசியம்.

ஆக, வீரயுகப்பண்பாட்டுக் காலத்தில் இனக்குழு வழிபாட்டு முறையைப் பின்பற்றிய தமிழர்களிடையே வட இந்தியாவிலிருந்து வந்த பிராமணரும் சமணரும் பௌத்தரும் குறுக்கீடு செய்தனர். வர்க்க சமூக மாய்ப் பிளவுபட்டு, அறப்போதனைகளால் புதிய சமூக ஒழுங்கமைப் பைக் கட்டமைக்க வேண்டியிருந்தபோது பௌத்தமும் சமணமும் தமி ழகத்தை வெற்றிகொண்டன. சமூக ஏற்றத்தாழ்வின் கொடுமைகளா லும், விவசாயம் நலிவுற்றுப் பஞ்சம் தலைவிரித்தாடிய நிலையிலும் வணிகர்க்கான அரசியலை நிலவுடைமை முறைக்கேற்ற வகையில் மடை மாற்ற வேண்டிய தேவை எழுந்தது. விவசாயப் பண்பாட்டுக்கு மாற்றிய மைக்கத்தக்க தத்துவச்சாரத்தையுடைய வைதிக நெறி பக்திப் பேரியக்கத்தின் வாயிலாகப் பல்லவர் காலத்தில் முதற்தடவையாக சைவ - வைணவ வரலாற்றைத் தமிழகத்தில் தொடக்கி வைத்தது. பக்திப் பேரியக்க மூலவர்கள் கட்டமைத்தபுனைவுகளின் உதவியுடன் வீரயுகத்துக்கும் முந்திய பல்லாயிரம் வருட 'வரலாற்றை' வைதிக நெறிக்குக் கொடுத்திருந்தனர். இதனூடாக விவசாயப் பண்பாட்டுக்கான அரசியல் மாற்றம் சாத்தியப்பட்டது. இந்த மாற்றப் போக்கில் தலை மைப்பங்கு வகித்த வெள்ளாளர்கள் தமது அதிகாரத் தைநிலைநிறுத் தும் பொருட்டு பிராமணர்களுடன் ஐக்கியப்பட்டு சாதியக் கட்ட மைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். நிலவுடைமை அரசியல் முறை பஞ் சத்தைப் போக்கியபோது சிவனும் விஷ்ணுவும் படியளந்ததால் கிடைத்த பேறு என்ற கருத்தியல் புனையப்பட்டது. சாதிய முறை ஏற்புடையதாக கொள்ளப்படும் மனநிலைக்கு மக்கள் மாற்றப்பட் டனர். சோழப்பேரரசர் காலத்தில் நிலமான்ய முறையிலிருந்து பூரண மாக நிலவுடைமைச் சமூகமாய் மாற்றப்பட்ட பின்னர் இந்தச் சாதிப்படி நிலை அமைப்பு நிலவுடைமை அரசியல் கட்டமைப்புக்குப் பெரிதும் உதவி கரமானதாயிற்று. பிராமண, வெள்ளாள நிலப்பிரபுக்கள் சமூகத்தின் உச்சத்தில் கோபுரக் கலசங்களாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர். இந்த இரு சாதியினர்க்குமே நூற் கல்வித்தகைமை அனுமதிக் கப்பட்டது. ஆயினும் பிராமணர் மேலதிகமாக வேதத்தில் செலுத்திய அதிகாரம் அவர்களை முதல்நிலைக்கு உரியவர்களாக ஆக்கிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு சாதியம் தமிழகத்தில் இறுக்கமடைந்தபின்னர், பதின்மூன்றாம் நூற்றாண்டில், பெரும்படையெடுப்புடன் ஈழம் புகுந்து புதிய யாழ்ப்பாண இராச்சியத்தைத் தோற்றுவித்தார்கள் தென்தமிழக வெள்ளாளர்கள். அந்த யாழ்ப்பாண அரசின் தலைமைச் சக்தி தம்மை ஆரியச் சக்கரவர்த்தி வம்சாவழியென அடைளாளப்படுத்தியது ஒரு வரலாற்று முரண் (இன்று தம்மை ஆரியர் எனப்புனையும் சிங்களப் பேரினவாதிகளது வரலாற்றில் எந்த ஒரு அரச வம்சாவழியும் இவ்வாறு ஆரியச் சக்கரவர்த்திப் பட்டஞ் சூட்டிக்கொண்டதில்லை). ஆரியச்சக் கரவர்த்திகள் தலைமையில் வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்தின் பூர்வகுடிகளை அடக்கி ஆட்படுத்தியதுடன், தமிழகத்திலிருந்து தேவைப்பட்ட சகல சாதி சனங்களையும் கொணர்ந்து குடியேற்றினர். தமக்குச் சமநிலையில் பிராமணரைக் கொண்டுவரவேண்டிய அவசியமில்லாதபடிக்குத் தமிழ்வேதமாம் தேவாரம் மேனிலையெய் தியிருந்தது; அதன் பிழிசாறாக சைவசித்தாந்தம் தொகுத்து வெளியாகும் நிலைதோன்றிவிட்டது. வேதாந்தத்தை நிராகரித்து சைவசித்தார்ந்தத்தை வலிய ஆயுதமாகக் கையேந்திய யாழ்ப்பாண வெள்ளாளர் நிலவுடைமையையும் கல்வித் தகைமையையும் பிராமணர்க்கு மறுத்துக் கோயில் தொண்டூழியக் குடிகளாக பிராமணர்களை அமர்த்தினர். யாழ்ப்பாணத்தினதும், முழு இலங்கையினதும் ஆன்மீகத் தலைவர் களாய்ப் பிராமணர்கள் ஆனதில்லை. (யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் அறுபதுகளின் பிற்கூறில் பிரசங்கியாய்த் திகழ்ந்த மணி ஐயர் தமிழகத்தில் சென்று தம்பிரான் பட்டம் பெற்றுத் திரும்பியவர். தனது பூணூலை அறுத்தெறிந்து யாழ்ப்பாணத்தின் ஆன்மீகத் தலைமை அந்தஸ்த்தைப் பெற்றவர்). பொதுவாக இலங்கை யின் இந்துமத ஆன்மீகத் தலைவர்களனைவரும் வெள்ளாளர்களே. சைவசித்தாந்த வித்தகரான யாழ்ப்பாண நாவலரும், இராமகிருஷ்ண இயக்கத்தில் சேர்ந்து கொண்டாலும் சைவசித்தாந்தத்துடன் சமரசங் கண்டு அதன் மேலாண்மையைத் தக்கவைத்த மட்டக்களப்பு விபுலாநந்தரும், யோகர் சுவாமிகளிலிருந்து ஆனைக்குட்டிச் சுவாமிகள் (மட்டக்களப்பு) வரையான சித்தர்களும் வெள்ளாளர்களே.

யாழ்ப்பாணத்தில் நாவலர் பரம்பரையினரும் இன்றைய பழமைபோற்றுவோரும் வர்ணாசிரம தர்மத்தைப் பேணிப்போற்றி வருவது பிராமணரை உயரந்தஸ்த்தில் வைத்துக் கொண்டாடுவதற் கல்ல; வெள்ளாளர் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவே. நிலச்சொந் தக்காரர்களாயும், வர்த்தகர்களாயும், ஆங்கிலக் கல்வி பெற்ற உயரதி காரிகளாயும், அரசியல் தலைவர்களாயும், வெள்ளாளர்களே விளங்கித் தமது அதிகாரத்தைத் தொடர்ந்தனர். யாழ்ப்பாணத்தில் 99 வீதமான பாராளுமன்ற உறுப்பினர்களாக வெள்ளாளர்களே இருந்தனர் என்பது தற்செயல் நிகழ்வல்ல. சாதியத்துக்கு எதிரான விட்டுக் கொடுக்காத போராட்டத்தின் பேறாக 1977 தேர்தலில் ஒரு தொகுதியில் (உடுப்பிட்டி) மட்டும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த உயர் வர்க்கப் பிரதிநிதி ஒருவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டு பாராளுமன்ற உறுப்பினராகத்



தெரிவு செய்யப்பட்டார். ஆறுமுகநாவலர், சேர் பொன். இராமநாதன், ஜி.ஜி. பென்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற இலங்கைத் தமிழ்த் தேசியத்தை வெவ்வேறளவில் பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்களனைவரும் தமிழ்த் தேசியத் தலைவர்களாய் விளங்கியதைவிட வெறும் 'வெள்ளாளத் தேசியத் தலைவர்களாயே' விளங்கினர்; சாதியத்தைப் பேணி இறுக்கமுடைய தாக்க முழு முயற்சிகள் எடுத்தனர். அந்தவகையில் சாதியத்தைக் கடந்த, அனைத்துமக்களையும் அணிதிரட்டிய தமிழ்த்தேசிய எழுச்சிக்கு முட்டுக்கட்டையிட்டனர். பொதுவாக இந்துச் சமூகத்தில் ஒடுக்கப் பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளில் எந்தவொன்றும் யாழ்ப்பாணத்தில் தாழ்தப்பட்டோருக்கு அனுமதிக்கப்படவில்லை. இந்துச் சமூகத்தில் ஒவ்வொரு சாதியினர்க்கும் வரையறுக்கப்பட்டிருந்த கடமைகளும் உரிமைகளும் சற்றும் தளராத வகையில் யாழ்ப்பாணத் திலும் பின்பற்றப்பட்டன.

இத்தகைய சமூகப் பின்னணியை மனதிலிருத்தியபடி யாழ்ப்பாணத் தில் தோன்றி வளர்ந்த பஞ்சமர் இலக்கியத்தை மதிப்பிட வேண்டும். ஈழத்தமிழ் சிறுகதை தொடக்கம் பெற்ற முப்பதாம் ஆண்டுகளில் இருத்தலியல் பண்பு மேலோங்கியிருந்தது. அதனுடன் மேல் மத்தியதர வர்க்க இரசனைவாதக் கூறுகள் இணங்கியிருந்தன. ஐம்பதுகளின் பிற்கூறில் மண்வாசனை இலக்கிய இயக்கம் அடிநிலை மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை யதார்த்தவாதப்பாங்கில் படைப்பிலக்கி யமாக்க வகை செய்தது. அறுபதுகளின் பிற்கூறில் ஒடுக்கப்பட்ட மக்களின் போர்க்குரல் இலக்கியமாயின. எழுபதுகளில் பஞ்சமர் நூல் வரிசையின் தொடக்க நாவலான 'பஞ்சமர்' ஜனித்தது. ஆக, மண்வா சனை இலக்கியத்தின் தவிர்க்கவியலாத பகுதியாகவும் பரிணமிப்பாகவும் பஞ்சமர் இலக்கியம் உதயமாயிற்று. அது தமிழகத்தின் தலித் இலக்கியம் போல இல்லையென்றால், அதற்கேயுரித் தான விசேட வரலாற்றுச் செல்நெறியே அந்த வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது என்பதை கவனிக்க வேண்டும். நால்வர்ணத்துக்கு அப்பால் ஐந்தாம் படிநிலையில் வைத்து எண்ணப்பட்ட பஞ்சமர் களின் வாழ்க்கைக் கோலங்களையும், அபிலாஷைகளையும், போராட் டங்களையும் மிகச்சிறப்பான வகையில் யாழ்ப்பாணத்தின் பஞ்சமர் இலக்கியம் வெளிப்படுத்தி நிற்கிறது.

மண்வாசனை இலக்கியத்தினுள் பஞ்சமர் இலக்கியமென வேறு படுத்தி அடையாளங்காணத்தக்க வகையில் ஒடுக்கப்பட்ட மக்களைப் படைப்பாக்கம் செய்த ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பலதளங்களைச் சேர்ந்தவர்கள். தலித் படைப்பாளிகள் மட்டுமல்லாமல் தலித் அல்லாத வீறுகொண்ட போராளிகளும் இவர்களுள் அடங்குவர். கே.டானியல், என்.கே.ரகுநாதன், பசுபதி, அ.ந.கந்தசாமி, சுபைர்இளங் கீரன், சில்லையூர் செல்வராஜன், செ.கதிர்காமநாதன், டொமினிக் ஜீவா, நீர்வைப்பொன் னையன், வதிரி செல்லையா, தெணியான், செ.கணேசலிங்கம், முருகை யன், பெனடிற்பாலன், செ.யோகநாதன், புதுவை இரத்தினதுரை, முருகு

படிப்பகம்

www.padippakam.com



கந்தராசா, இ.சிவானந்தன், சி.பற்குணம், நந்தினி சேவியர், க.தணிகாசலம், டானியல் அன்ரனி, சுபத்திரன், சாருமதி, வி.எம்.குகராஜா, ஜெயக்குமார், குழந்தை ம.சண்முகலிங்கம், மௌனகுரு ஆகிய பலர் பஞ்சமர் இலக்கியத்துக்கான பங்களிப்பை நல்கியுள்ளனர். இவர்களில் டானியல் மட்டுமே 'பஞ்சமர் நூல்வரிசை' என்ற பகுப்பை அடையாளப்படுத்திக் கொண்டார்; ஏனையவர்களின் பரந்த படைப்பாக்கங்களில் சிறிய அளவில் பஞ்சமர் இலக்கிய அடையாளம் வெளிப்படும் இடங்கள் கருதி இங்கே பட்டியல்படுத்தப் பட்டனர். இவர்கள் எல்லோரும் பஞ்சமர் இலக்கியம் என்கிற பகுப்பை அங்கீகரிப்பார்கள் எனக் கொள்வதற்கில்லை. பலர் மார்க்ஸிய இலக்கியத்தின் அல்லது மக்கள் இலக்கியத்தின் வகை மாதிரிக்குள் தம்மை இனங்காண இடமுண்டு. ஆயினும் பஞ்சமர் வகைக்குள் இவர்களது சில படைப்புகள் இனங்காணத் தக்கன என்பதை மனங்கொள்வோம்.

அத்தகைய படைப்புகள் அனைத்தையும் வெளிப்படுத்த இங்கு அவகாசமில்லை. வகைமாதிரிக்கான சிலவற்றை மட்டுமே குறித்துக் காட்ட முடியும். (உண்மையில் அவையனைத்தையும் குறித்த முழுமையான தனி ஒரு ஆய்வு அவசியம்).

இயல்பாகவே புதிதாகப் பழகும் ஒருவரது சாதியை அறியத்துடிக்கும் யாழ்ப்பாணத்தவரது மனோபாவத்தை சிறுகதையில் காட்டியவர் என்.கேராகுநாதன். அவரது வேறொருசிறுகதை 'நிலவிலே பேசுவோம்'. சுதந்திரம், ஜனநாயகம், மதுஒழிப்பு என மேடையில் முழங்கும் யாழ்ப்பாணத்துக் கனவான் 'கண்ட நிண்டசனம்' வீட்டுக்குள் வந்துவிடாமல், நாசூக்காக வெளியில் நிறுத்தி, காற்று வாங்கியபடி முற்றத்து மணற்கும்பியில் இருந்து நிலாவெளிச்சத்தில் பேசுவதற்கு ஒடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை அழைப்பதை எடுத்துக்காட்டுவது 'நிலவிலே பேசுவோம்' சிறுகதை; கூடவே அக்கதை மது ஒழிப்பு என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதார உயர்ச்சியைக் குறிவைத்துத் தாக்கும் உள்நோக்கமுடையது என்பதையும் அம்பலப் படுத்தியது. மரவரி மூலமாக மதுவிற்பனைக்குச் சட்ட அங்கீகாரம் பெற்று பொருளாதார வளர்ச்சிகண்ட ஒடுக்கப்பட்ட மக்கள், அதன் பின்னர் அடங்கியிருப்பதை ஏற்கமாட்டார்கள் என்பதை அறத்தின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட சதி நடவடிக்கையே மது ஒழிப்புப் பிரசாரம். கண்களை மூடிவிட்டால் சூரியன் அஸ்த்தமித்துவிடாது; உயர்சாதிக் கனவான்களின் தடைகளையும் மீறி ஒடுக்கப்பட்ட மக்கள் பொருளாதார முன்னேற்றங்களை எட்டினர். தமிழகத்தில் நாடார் சமூகம் பொருளாதார ஏற்றமடைந்த பின்னர் சாதி மேல்நிலையாக்கத்துக்காகப் போராடினர். கோயில் நுழைவுத் தகுதியை வென்றெடுத்தநாடார், பின்னர் தமது கோயில்களில் ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களை அனுமதிக்க மறுத்தனர்.[2]

யாழ்ப்பாணத்தில் பொருளாதார விருத்திகண்ட ஒடுக்கப்பட்ட மக்கள் தனியொரு சாதியாக மேல்நிலையாக்கம் பெற முயலும்



போக்குக்கு மாறாக, சாதிகளிடையே சமத்துவத்துக்கான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடினர். (ஒடுக்கப்பட்டவர்களல்லாத வல்வெட்டித் துறை கரையார், வட்டுக் கோட்டை பிளவத்தையைச் சேர்ந்த திமிலர் ஆகியோர் மேல்நிலையாக்கத்துக்காகப் போரடி வெற்றிபெற்றிருந்தனர்.) ஒடுக்கப்பட்ட மக்கள் தமக்குள் பஞ்சமர் என ஐக்கியப்பட்டு சாதிகளிடையே சமத்துவத்துக்கான தமது போர்க்குரலின் முதல் வெற்றிகளை முப்பதாம் ஆண்டுகளில் ஈட்டத்தொடங்கினர். ஒவ்வொரு சாதிக்குமான சாதிச் சங்கங்கள் காணப்பட்ட போதிலும், அடிப்படையில் அனைத்தையும் ஒன்றுபடுத்தக்கூடிய வாய்ப்பான சூழல் இருந்தது. இத்தகைய ஐக்கியப்பட்ட அமைப்பாக 'சிறுபான்மைத் தமிழர் மகா சபை' தோற்றம் பெற்றது. உயர் சாதியினருடன் சமத்துவம் கோரும் போராட்டத்தின் வடிவமாக சமபந்திப்போசனம் அமைந்தது.

இதன் அடுத்தக்கட்டமாக சாதியத்தைத் தகர்ப்பதற்கான முதற்படியாக அமையக்கூடியது தீண்டாமையை ஒழித்தல். இந்தியாவில் ஐம்பதாம் ஆண்டுகளில் சாத்தியமான சர்வஜன வாக்குரிமை இலங்கையில் முப்பதாம் ஆண்டுகளில் சாத்தியமானது; அது நூற்கல்வியை ஜனநாயகமயப்படுத்தி அடிநிலை மக்களுக்கும் கொண்டு செல்ல வழியேற்படுத்திக் கொடுத்தது. கூடவே அரசியல் விழிப்புணர்வும் ஏற்படலாயிற்று. பூரண சமத்துவ உணர்வு வலுத்தது. சாதியொடுக்குமுறையைத் தகர்க்கும் போர்க்குரல் அடக்கப்பட்ட மக்களிடமிருந்து வலுப்பெற்றுவந்தது. தீண்டாமையை ஒழிக்கும் குறிக்கோளுடன் தேனீர்க்கடைப்பிரவேசப் போராட்டம், கோயில் நுழைவுப் போராட்டம் ஆகியன முனைப்படைந்தன. அறுபதாம் ஆண்டுகள் இந்த எழுச்சியின் வரலாறேதான். சங்கானை, நெல்லியடி, கரவெட்டி, பொலிகண்டி, அச்சுவேலி, சாவகச்சேரி, மட்டுவில், கொடிகாமம் போன்ற பல நகரங்களில் அவ்வப்பகுதி ஒடுக்கப்பட்ட மக்கள் தமது பிரதேச நல்லெண்ணங்கொண்ட அனைவரது ஆதரவுடன் தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்களில் ஒன்றன் பின் ஒன்றாக வெற்றிகளைப் பெற்றுவந்தனர். தொடர்ந்து மாவிட்டபுர கந்தசுவாமி கோயில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் ஆகியவற்றில் கோயில் நுழைவுப் போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. இலங்கை முழுமையிலும் மாவிட்டபுரம் மட்டுமே பிராமணர்களது பொதுக் கோயிலாகும். அதன் உரிமையாளர் துரைசாமிக் குருக்கள். இருமரபும் துய்யவந்த சாதிவெள்ளாளர் சுந்தரலிங்கம் தலைமையில் கோயில் நுழைவுப் போராட்டத்தை முறியடிக்க முழுமுயற்சியெடுத்தார். சரியான தந்திரோபாயங்களுடன் "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்" எனும் அமைப்பின் தலைமையில் அனைத்துச் சமூக மக்களையும் அணிதிரட்டி விட்டுக்கொடுக்காத தீரம்மிக்க போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சண் பிரிவு), தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க (தீ.ஒ.வெ.இ) தலைவராக எஸ்.ரி.என்.நாகரத்

படிப்பகம்

www.padippakam.com



தினம் விளங்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விறல்மிகு தலைவர் என்ற புகழ்பூண்டார்.

இந்தப் போராட்டங்களின் மையச் சக்தியாகவும் அடித்தள அத்திவாரமாகவும் விளங்கியவர்கள் தீண்டாமைக் கொடுமையை அனுபவித்த பஞ்சமர்களே. அவர்களனைவரும் ஓரணிதிரண்டு சாதி யொடுக்கு முறைக்கு எதிராகப் போராடினார்கள். அந்த வகையில் ஒரு தனிச்சாதியின் பங்களிப்பைப் பிரித்துப்பார்க்க முடியாது. அவ்வாறே வெள்ளாளர், பிராமணர் உள்ளிட்ட அனைத்துச்சாதி யினரும் தீ.ஒ.வெ. இ.இல் அங்கத்தவராயிருந்து போராட்டப்பங் களிப்பை நல்கினர். எழுச்சிக்காலத்தில் வெகுஜன ஆதரவு அனைத்துச் சாதியினரிடமிருந்து கிடைக்கலாயிற்று. தீ.ஒ.வெ.இ. போராளிகளைக் கைது செய்யும் பொலி சாரின் எத்தனங்களின் போது ஒடுக்கப்பட்ட சமூகப் போராளிகளை உயர்சாதியினர் தமது வீடுகளினுள் மறைத்துவைத்திருந்த சந்தர்ப்பங்கள் உண்டு. குறிப்பாக உழைக்கும் மக்கள் மத்தியில் சாதி கடந்த இறுக்கமான ஐக்கியம் விதந்துரைக்கத் தக்க வகையில் வளர்ந்திருந்தது.

இத்தகைய செழுமைமிகு மக்கள் போராட்ட அனுபவங்களை கே.டானியல் 'பஞ்சமர்' நாவலாக 1972இல் எழுதி வெளியிட்டார். ஐயாண்ணன் என்கிற வெள்ளாளர் பாத்திரம் கதாநாயகனாகத் திகழ்ந்து சாதிய ஒழிப்பில் உறுதியான ஆதரவை நல்குவதையும், பல கிராமங்க ளிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் உருக்குப்போல் ஐக்கியப்பட்டு விறல்மிகு போராட்டங்களை முன்னெடுத்தமையையும் 'பஞ்சமர்' நாவலில் சித்திரிக்கிறார் டானியல்[5]. பஞ்சமர் நூல் வரிசையில் கோவிந்தன், அடிமைகள், கானல், தண்ணீர், பஞ்சகோணங்கள் ஆகியன தொடர்ந்து வெளிவந்தன. பஞ்சகோணங்கள் முன்னுரையில் (1984ல் எழுதப்பட்டது) இன ஒடுக்குமுறைக்கொலைவெறித் தாண்டவத்தை எழுதாமல் சாதிய ஒடுக்குமுறையை இன்னமும் எழுதவேண்டுமா என்ற கேள்வி தொடர்பான விவாதத்துக்கு முன்னுரிமை வழங்கியுள்ளமையை அவதானிக்கலாம்.[6] யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய பெருநகர்களின் பொதுச்சந்தைகள் சிங்களப் பேரினவாத அரசபயங்கரவாதிகளினால் தீயிடப்பட்ட அதே சமகாலத்தில் (1981இல்) சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த எழுதுமட்டுவாள் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகள் சாதிவெறியர்களால் தீயிடப்பட்டன; பலர் மோசமாகத்தாக்கப்பட்டுக் காயப்படுத்தப்பட்டனர். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் வெட்டிக் கொல்லப்பட்டன; அக்கிராமத்து ஒடுக்கப்பட்ட மக்களனை வரும் புலம்பெயர்ந்து தூரக்கிராமங்களுக்கு அகதிகளாய்ச் சென்றனர். இதே சமகாலத்தில் புத்தூர்ப்பகுதி வேம்பிராய்க் கிராமத்தின் ஒடுக்கப் பட்ட மக்கள் விழிப்புணர்வுறுவது கண்டு பொறுக்க முடியாத சாதி வெறி யர்கள் வேம்பிராய்க் கிராமத்தின் மீது கொடுந்தாக்குதலைத் தொடுத்தனர்.[7]

ஆக, எண்பதுகளின் தொடக்கத்திலும் ஒடுக்கப்பட்டவர்கள் மீது வன்முறைத்தாக்குதலைத் தொடுத்தபடி தான் தமிழ்த் தேசியம் சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக தனித்தமிழீழ எழுச்சிக்குரல் கொடுத்தது.



அதன் தீய அம்சத்தவறான பக்கங்கள் இன்றும் திருத்தப்பட முடியாததாகத் தொடரும் எரியும் பிரச்சனைக்குக் கால்கோளாகும். சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக அனைத்துத் தமிழ் மக்களைப் பிரநிதித்துவப்படுத்திய தமிழ்த் தேசிய எழுச்சி அல்லாமல் ஆண்ட பரம்பரையின் திமிர்த்தனமான கோரிக்கைகளும் போராட்டங்களுமே 'வெள்ளாளத் தேசியவாதத் தலைவர்களால்' முன்னெடுக்கப்பட்டன. தொடர் இனக்கலவரங்களும், ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்த வீடெரிப்பும், உயிரிழப்பும், புலப்பெயர்வும் 1983இன் பின்னர் தமிழ்ப்பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் பொதுவான அனுபவ உண்மையான நிலையில் தமிழ்த் தேசியம் சகல தரப்புகள் சார்பினதாகப் பரிணமித்தது. பின்னர் தமிழ்த் தேசியத்தின் உள்ளடக்கச் சாராம்சம் மாறாத போதிலும் போராட்ட சக்திகளாக ஒடுக்கப்பட்ட சமூக இளைஞர்களும் ஈர்க்கப்படலாயினர். இந்த மாற்றக் கட்டத்தில் (1984-85இல்) புத்தூர்ப் பிரதேசத்து வேம்பிராய்க் கிராமத்தின் ஒடுக்கப்பட்ட மக்களுடைய புரட்சிகர எழுச்சி 'ஒரு புதியபாதை திறக்கப்படுகிறது' சிறுகதையாகப் படைப்பாக்கப்பட்டு 'தாயகம்' சஞ்சிகையில் பிரசுரமானது. ஒடுக்கப்பட்ட மக்களின் இந்த எழுச்சிக்கு எதிராக ஆரம்பத்தில் தமிழ்த்தேசிய இயக்கங்கள் சில தடைபோட முனைந்தபோதிலும் வேம்பிராய்க் கிராம மக்கள் அனைவரும் ஒருவர்போல ஐக்கியப்பட்டுப் போராடிய நிலையில் சாதிவெறியர்கள் சார்பாகக் குறுக்கிட்ட தமிழ்த் தேசிய இயக்கங்கள் பின்வாங்கின. சாதிவெறியர்கள் மக்களின் பேர்க்குரலுக்குப் பணிந்தனர்.

அதன்பின்னரான வரலாற்றில் இனவெறி அரசு ஒடுக்குமுறை கோரத்தனமாக அனைத்துத் தமிழ்மக்களையும் கொன்றொழித்து, வாழிடங்களை நிர்மூலமாக்கிய சூழலில் சாதியடக்கு முறைக்கு எதிரான போராட்டங்கள் பின்போடப்பட்டுள்ளதெனலாம். இன்றைய போராளிகளில் பெரும்பான்மையானவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்து இளைஞர்கள் என்பதை அவதானிக்கலாம். இந்தப் புதிய படைப்பிரிவு தமது மூதாதையரது தீண்டாமை ஒழிப்புப் போராட்டவரலாற்ற னுபவங்களை உள்வாங்கி, இன்றைய சிங்கள - பௌத்தப் பேரினவாத அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டங்களுடன் இணைக்கப் பாத்தியதையுடையது; கடப்பாடுடையது. அதன் வாயிலாக மட்டுமே தமிழ்த் தேசிய இயக்க உள்ளடக்கச் சாராம்சத்தை மாற்றி ஆண்ட பரம்பரையினர்க்கன்றி உண்மையில் ஈழத்தமிழ் மக்கள் சார்புடையதாக இனவிடுதலைப் போராட்டத்தை மடைமாற்ற முடியும். ஒடுக்கப்பட்ட சமூகஇளைஞர்கள் போராளிகளாக அங்கம் பெறும் வடிவமாற்றம் பேரினவெறிபிடித்த அரச பயங்கரவாத இராணுவ அட்டூழியங்களால் நொருக்கியுடைத்து வடிவமைக்கப்பட்டது. உள்ளடக்கம் இன்னமும் இறுகிக் கட்டிபட்ட அதே ஆண்ட பரம்பரையின் பழைய கோரிக்கையேதாம். புதிய வடிவமாற்றம் இன்னமும் மக்களால் செப்பனிடப்பட்டு, உள்ளடக்கமும் மக்கள் மயப்பட்டதாக மாறும் போது இனவிடுதலைப் போராட்டம் பரந்துபட்ட மக்கள்

படிப்பகம்

www.padippakam.com



போராட்டமாகப் பரிணமிக்க முடியும். அப்போது வெறும் ஆயுதங்கள் மீதான மோகம் மறைந்து 'மக்கள்', மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி' என்பது உணரப்படும்.

அறுபதுகளின் யாழ்ப்பாண வரலாற்றில் அத்தகைய மக்கள் போராட்டம் மகத்தான சாதனையை ஈட்டும் என்ற நிதர்சனம் மெய்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒக்ரோபர் 21 எழுச்சியின் திசைவழியே முன்னேறிய ஒடுக்கப்பட்ட மக்களின் தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான போராட்டம் தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்துக்கும் செழுமைமிகு அனுபவங்களை வழங்கத்தக்கது. கிளர்ந்தெழுந்து போராட்டத்தின் பங்காளிகளாக வரலாற்றுப் பொறுப்பைக் கையேற்கும் மக்கள் தமது நண்பர்கள் யார், எதிரி யார் எனத் தெளிவாக வரையறுத்து பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பி சரியான திசைவழியே போராட்டத்தை முன்னெடுப்பர்.

## II

# ஒக்ரோபர் 21 எழுச்சியும் பஞ்சமர் இலக்கியமும்

"பாழ்பட்ட சாதிவெறி" என்ற கவிதையில் கவிஞர் சுபத்திரன் அறுபதுகளின் தொடக்ககால யாழ்ப்பாண யதார்த்தத்தைப் படம் பிடித்துக் காட்டுவார் இப்படி:

"பனையோலைக் குடிசையிலும்
வாழ வேண்டாம்
பாழ்பட்டுப் போ என்று
பகர்ந்து கொண்டு
வினைவாழும் நெஞ்சத்தீர்
நெருப்பு இட்டீர்
விடிவதற்குள் கருகியது
குஞ்சும் தாயும்!"[9]

இலங்கைச் சமூக உருவாக்கம் தனித்துவம் மிக்கது; அடக்குமுறை வடிவங்கள் பல. சாதியப்படி நிலைப் பிரமிட்டுக்குள் ஊடறுத்துச் செல்லும் வலைப்பின்னலாக வேறுபட்ட ஒடுக்கு முறை வடிவங்கள். ஒடுக்குபவராக இனங்காணப்படுபவர் வேறோர் வடிவத்தில் ஒடுக்கப்பட்டவராகக் காட்சி தருவார். தேசிய, இன, வர்க்க, சாதி, பால் ஒடுக்குமுறை ரூபங்களாய் வெளிப்படும் வலைப்பின்னல் ஒடுக்குமுறை ரூபங்கள் வேறெந்த நாட்டினதையும் விட இலங்கைச் சமூகத்தில் அதிகம். பொதுவாக வர்க்க சமூகத்திலும், குறிப்பாக இன்றைய உலகமயமாதலின் மேலாதிக்க ஒடுக்குமுறைச் சூழலிலும் இந்த வலைப்பின்னல் தன்மை சர்வவியாபகமாய் எங்கும் நிறைந்தவொன்று. ஆயினும் இத்தன்மை நீண்டகாலமாக இலங்கைச் சமூகத்தில் தெளிவாகத் தெரிகிற ஒன்று. பொதுவாகவே "இலங்கை" என்பது,



"அடிமைகள் அடிமைகளை
அடிமைப்படுத்தும்
அடிமைச் சமூகம்"

கங்கை முதல் கடாரம் வரை வெற்றிகண்டு தமிழ்மன்னர் உலகைக் கட்டியாண்ட 'பொற்காலத்தில்' தமிழால் ஆளப்பட்டது சின்னஞ்சிறிய சிங்கள நாடு; இன்று அந்த ஆண்டபரம்பரைத் தமிழர் சிங்களவர்க்கு அடங்க நேர்ந்துவிட்டது; இவ்வாறு விசனித்துப் போர்க்குரல் எழுப்பியது 'வெள்ளாளத் தேசியவாதத் தலைமை'. அவ்வாறு தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போர்க்குரல் தொடுக்கும் ஆண்டபரம்பரையினர்தான் பனையோலைக் குடிசையையும் விட்டுவைக்க மாட்டோம் என ஒடுக்கப்பட்ட மக்களின் குடிசைகளைத் தீயிட்டுப் பொசுக்கினர். காலங்காலமாக உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் ஒருசில அடிப்படை உரிமைகளை அனுபவிக்க முனைந்தபோதெல்லாம் இவ்வாறு கிராமமே சாம்பல் மேடாக்கப் படுவது வழக்கம்; மீண்டும் அதுபோல உரிமையை நினைக்கவொட் டாத தழும்பாக உறுத்த வேண்டும் என்ற வெஞ்சினம் அது. கொளுத்தியெரிப்பதற்கு வசதியாக ஓலைக்குடில்கள் தான் அனுமதிக் கப்பட்டிருந்தன. பொருள்வளம் பெற்று வசதிவாய்க்கப்பெறினும் கல்வீடுகட்ட சாதியச் சட்டம் இடந்தராது.

ஒடுக்கப்பட்டோரின் கிராமம் முழுமையையும் எரிக்கும் தண்டனையொன்று 1963 நடுப்பகுதியில் நீர்வேலிக்கிராமத்தில் சாதிவெறியர்களால் மேற்கொள்ளப்பட்டது. அப்போது ஒடுக்கப்பட் டவர்களின் பொது அமைப்பாகவிருந்த 'சிறுபான்மைத் தமிழர் மகாசபை' வெறும் அறிக்கை - மகஜர் சம்பிரதாயங்களுடன் அடங்கிவிட்டது. புரட்சிகர மார்க்ஸியர்கள் இந்த இழிசெயலைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தினர். தொடர்ந்தும் அஞ்சிநடுங்கிச் சாவதை வெறுத்த மக்கள் அலை அலையாக திரண்டனர். அரசியல் வகுப்புகள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங் கள், ஆர்ப்பாட்டப் பேரணிகள், பல்வேறு போராட்ட வடிவங்கள் எனச் சாத்தியப்பட்ட அனைத்து மார்க்கங்களூடாகவும் மக்கள் கிளர்ச்சியூட்டப்பட்டு அணிதிரட்டப்பட்டார்கள். அவர்கள் விவசாய, மாணவர், வாலிபர் அமைப்புகளில் ஸ்தாபனப்படுத்தப்பட்டனர். முன்னேறிய பிரிவினர் அரசியல் போதங்களூடாகவும் நடைமுறைச் செயற்பாடுகள் வாயிலாகவும் இனங்காணப்பட்டுத் தேர்ந்து எடுக்கப்பட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனத்தில் அங்கத்தினராயினர். மார்க்ஸிய அரசியல், தத்துவார்த்தப் போத மூட்டலூடாக அரசியல் மயப்படுத்தப்பட்டுப் பாட்டாளிவர்க்க உலகக் கண்ணோட்டத்தில் புதிய வார்ப்பாகப் புடமிடப்பட்ட புரட்சிகரசக்திகளின் வழிகாட்டலுடன் ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் எழுச்சிப் படையணி பேரலையாகத்திரண்டது. 1966 ஒக்ரோபர் 21 எழுச்சிப் பேரணி ஒடுக்கப்பட்ட மக்களின் போர்க்குரலை முன்வைத்து "சாதிமுறை தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற பதாகையின் கீழ் வெகுஜனத்

படிப்பகம்

www.padippakam.com



திரளை அணிதிரட்டியது. சாதியத்தைத் தகர்க்கும் தேனீர்க்கடைப் பிரவேசம், ஆலயப்பிரவேசம் போன்ற போராட்டங்களுக்கான காலம் கனிந்தது. சங்கானையில் 1967 - 68 இல் தேனீர்க்கடைப்பிரவேசப் போராட்டம் வெற்றிகரமாக நடந்தேறியது. அதன் போது நிச்சாமம் உள்ளிட்ட சங்கானைச் சுற்றுவட்டக் கிராமங்கள் வெளிப்படுத்திய வீரஞ்செறிந்த போராட்ட உணர்வு விதந்துரைக்கத்தக்கது.

"சங்கானைக்கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம்
மங்காது யாழகத்து
மண்ணிற் பல காலம்
செங்குருதிக் கடல் குடித்து
செழித்த மதத்துக்குள்
வெங்கொடுமைச் சாக்காடாய்
வீற்றிருந்த சாதியினைச்
சங்காரஞ்செய்யத்
தளைத் தெழுந்து நிற்கின்ற
சங்கானைக் கென் வணக்கம்

எனப் புதிய பரணிபாடும் கவி, தொடர்ந்து -
எச் சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப்பெறிந்து நீறாக்கும்

.........
.... சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்னாமே உன்
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன்! மெச்சுகிறேன்!!"[12]

எனப்பாடுவார். தொடர்ந்து பல நகர்களில் தேனீர்க்கடைப் போராட்டமும் அடுத்த கட்டமாகக் கோயில் நுழைவுப் போராட்டமும் யாழ்ப்பாண மண்ணைப் புதிய வார்ப்பில் புடமிட்டன. இதனை ஒழுங்கமைக்கும் வகையில் சங்கானைப் போராட்டத்தின் உச்சத்தில், 1967 பிற்கூறில் "தீண்டாமை, ஒழிப்பு வெகுஜன இயக்கம்" (தீ.ஒ.வெ.இ) ஸ்தாபிக்கப்பட்டு எழுச்சி மாநாடுங் கூட்டப்பட்டது. மாநாட்டு மலர் புரட்சிகர இலக்கியப் பெட்டகமாய்த் திகழ்வது. அதுவரையில் தனிச்சாதிச் சங்கங்கள் இருந்தன. "சிறுபான்மைத் தமிழர் மகாசபை" என ஒடுக்கப்பட்ட மக்களை மட்டும் உறுப்பினர்களாயுடைய அமைப்புமிருந்தது. மாறாக, தீ.ஒ.வெ.இ. அனைத்து மக்களையும் சாதியத்தைத் தகர்க்கும் இலட்சியத்தில் ஸ்தாபனப்படுத்திக் கொண்டது.



இயல்பாகவே ஒடுக்கப்பட்ட மக்களை தலைமைச் சக்தியாகக் கொண்டும், அவர்களே பெரும்பான்மையினராகவும் தீ.ஒ.வெ.இ.இல் திரண்டிருந்தனர். ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட அணியிலிருந்து வெளிப்பட்டுத் தலைமையேற்ற எஸ்.ரி.என். நாகரத்தினம் எத்தகைய அடக்குமுறைகளுக்கும் அஞ்சாது இறுதிவரை விட்டுக் கொடுக்காது தீரத்துடன் போராடி வரலாறு படைத்தார். மார்க்ஸிஸ - லெனினிஸ - மாஓ சேதுங் சிந்தனைச் சித்தாந்தத்தால் ஆயுதபாணியாக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலில், கூட்டாக முடிவெடுத்து, ஒவ்வொருவரும் தத்தமக்கான பொறுப்புகளை எடுத்தது. ஒருவர்போல் ஐக்கியப்பட்டு தீர்மானிக்கப்பட்ட இலக்கு நோக்கி முன்னேறியது தீ.ஒ.வெ.இ. ஒடுக்கப்பட்ட மக்களை மையத் தலைமைச் சக்தியாகக் கொண்டிருந்த அதே வேளை அனைத்துச் சமூகப் பிரிவினரும் ஐக்கியப்படுத்தப்பட்டு மிகக் கடைந்தெடுத்த சாதி வெறியர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இன்றைய பின் நவீனத்துவக் குழப்பவாதச் சிந்தனையில் தலைகீழாகப் புரட்டி, ஒடுக்கப்பட்ட மக்களை விளிம்பு நிலை மக்களாகக் கருதிப் பிரிவுபட்ட மக்கள் சக்தி, சாதிகளின் பேரால் தமக்குள் மோதி அழிவுப்பாதையைத் தமிழகம் இன்று நாடுவதிலிருந்து யாழ்ப்பாண அனுபவம் வேறுபட்டது - நேர்த்தியானது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு சாதியினருக்குள் மட்டுமல்ல, எல்லைகடந்து இலங்கைத் தீவு பூராவும் போராட்டத்துக்குப்பலம் சேர்க்கும் வகையில் தீண்டாமை ஒழிப்புக் கருத்தியல் மையப்படுத் தப்பட்டது. மட்டக்களப்பின் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதல் சுபத்திரன் வரை, பலர் இலக்கியப் போராயுதம் வழங்கினர். சிங்கள - பௌத்த பிக்குகள் தடை செய்யப்பட்ட துண்டுப்பிரசுரங்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொணர்ந்து சேர்த்தனர். (காவி உடையினுள் மறைத்துக் கொண்டுவர வேண்டிய அளவுக்குத் தேடுதல் வேட்டை; ஏற்கனவே கொண்டுவரப்பட்டவை பறிமுதல்). தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகச் செயற்பட்டார்கள். அவ்வேளையில் பாராளுமன்றத்தில் சாதிவெறியை அம்பலப்படுத்தி ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை உலகறியச் செய்தவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த சிங்கள முற்போக்குச் சிந்தனையுடைய உறுப்பினர்களே. குறிப்பாகக் கம்பஹா பா.உ. ஆக இருந்த எஸ்.ரி. பண்டாரநாயக்கவின் பங்களிப்பு விதந்துரைக்கத்தக்கது (இவர்தான், தமிழர் பிரச்சனைத் தீர்வுக்காகக் கொண்டுவரப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மேற்கொண்ட கண்டியாத்திரையைக் கம்பஹாவில் முறியடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது). அவருட்படப் பல சிங்களத் தலைவர்கள் போர்க்களத்துக்கு நேரில்வந்து பார்வையிட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலைக்கூறி நெருக்கமான ஆதரவையும் வெளிப்படுத் தினர். இது போராடிய மக்களுக்கு மகத்தான ஆத்மபலத்தை நல்கியது.

தமிழினத் தேசியம் பேசிய 'வெள்ளாளத் தேசிய வாதத் தலைவர்கள்' பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஒடுக்கப்பட்ட மக்களின்

படிப்பகம்

www.padippakam.com



போராட்டத்தை எதிர்த்த அதே வேளையில் மக்கள் விரோத யு.என்.பி.அரசில் அங்கம் வகித்து மந்திரிப்பதவியையும் ஏற்றுக் கொண்டு சொந்தமக்களுக்குத் துரோகமிழைத்தனர். இதைவைத்து முற்போக்கான தமிழ்த்தேசிய உணர்வுடைய மக்கள் அனைவரும் (பெரும்பாலான உழைக்கும் வெள்ளாளர்) இந்தப் போராட்டத்துக்கு எதிராக இருந்தனர் என்று பொருள் கொள்ள முடியாது. தமிழ் இனத் தேசிய உணர்வுடன் இப்போராட்டத்தையும் ஆதரித்த நல்லெண்ணங் கொண்ட பெரியோர், மக்கள், பலர் இருந்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்க ளுக்கு எதிராகத் தமிழினத் தேசியத் தலைமை செயற்பட்டதால் அதனை நிராகரித்து ஒடுக்கப்பட்ட மக்கள் பக்கம் சார்ந்தவர்களும் உள்ளனர். சாதி பார்ப்பது கேவலமானது என்ற புரட்சிகரப் பிரக்ஞை வளர்ந்து வந்தது. உழைக்கும் மக்கள் பல்வேறு தளங்களில் இறுக்கமான ஐக்கியப் பட்ட போராட்டத்தின் பலாபலனை உணர்ந்து செயலாற்றினர்.

இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை நேரடி உரையாடலின் போது தோழர் சி.கா.செந்தில்வேல் குறிப்பிட்டார்கள். அவர் நினைவுகூர்ந்த சம்பவம் இது: கோண்டாவில் பஸ்டிப்போவில் வேலைநிறுத்தப் போராட்டம் பலமான ஐக்கியப்படலுக்கு முன்னுதாரணத் தன்மையுடன் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத் தின் அனைத்துத் தொழிற்சங்கங்களும் பங்கேற்றுள்ளன. சாதி கடந்த புரட்சிகர ஐக்கியம், போராட்டவுணர்வை வலுப்படுத்தும் நோக்குடன் அனைத்துத் தொழிற்சங்கங்களும் பங்கேற்ற ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு. அவ்வேளை டிப்போ மனேஜராக இருந்தவர் மட்டக்கி ளப்பைச் சேர்ந்த வண்ணார் சமூகத்தவர். (அந்தக் காலத்தில் அத்தொழி லைச் செய்பவர் சலவைத் தொழிலாளி என்று அழைக்கப்படும் நிலை உருவாகிவிட்டது). மனேஜரின் சாதியை மோப்பம் பிடித்து அறிந்து விட்ட (இதிலே யாழ்ப்பாணத்தவர்கள் பொதுவாகச் சூரர்கள்) ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதி "வேலையிழந்தால் எங்களுக்கு நட்டமொன்று மில்லை. உழுது பயிரிடப்போவோம், மனேஜர் பாவம், துணி வெளுக்கப் போக வேண்டியிருக்கும்" என்பதாகப் பேசினார். உடனே ஒருவர் மிச்ச மின்றி அனைத்துத்தொழிலாளர்களும் 'நிறுத்தடா பேச்சை! தொழி லாளர் ஐக்கியத்தைப் பேசவேண்டியவன், சாதிவாதத் தால் எங்களைக் கூறுபோடப்பார்கிறாயா?' என வெகுண்டெழுந்து, கூட்டத்தைப் பகிஷ்கரித்து வெளியேறத்தொடங்கினர். பேச்சாளர் தனது உணர்ச்சி வேகத்தவறுக்காக மன்னிப்புக் கோரினார். அனைத்துப் பேச்சாளர்க ளும் கோரியதன் பேரில் தொடர்ந்து கூட்டம் நடைபெறத் தொழிலாளர் ஒத்துழைத்தனர்.

இது ஒரு பருக்கைச் சோறு, இது போன்றே பலதளங்களிலும் பொதுப்பிரச்சனைகளுக்கான போராட்டங்களில் அனைத்துச் சமூகத்தினரும் ஒருவர்போல் ஐக்கியப்பட்டுப் போராடினார்கள். அத்தகைய பொதுவான உழைக்கும் மக்கள் போராட்டங்களில் சாதியத்தகர்ப்புக்கான குரலும் ஒரு பகுதியாய் இருந்தது. தீண்டாமை ஒழிப்புக்காகப் போராடியவர்கள் ஏனைய பொதுப்பிரச்சனைகளுக்



கான போராட்டங்களை உறுதியாக ஆதரித்தனர். இப்பரஸ்பர ஆதரவு தேசிய மட்டத்திலும் சர்வதேசத் தளத்திலும் காணப்பட்டது. ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்கள் நடாத்திய விறல்மிகு போராட்டங்களை தீ.ஒ.வெ.இ. பலமாக ஆதரித்துச் சாத்தியமான ஆர்ப்பாட்டப்பேரியக்கங்களை நடாத்தியது. தீ.ஒ.வெ.இ. போராட்டங்களை மக்கள் சீனம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வானொலி மற்றும் தொடர்பு சாதனங்கள் முதன்மை கொடுத்துப்பிரசாரம் செய்தன. இத்தார்மீக ஆதரவு ஏற்படுத்திய உத்வேகத்தின் பேறாக, வெகுஜன இயக்கப் பொதுக் கூட்டங்களில் தலைவர் எஸ்.ரி.என். நாகரத்தினம், அவற்றை நினைவுகூர்ந்து உணர்ச்சிபொங்க நன்றி பாராட்டியதுண்டு.

இத்தகைய ஐக்கிய முன்னணித்தந்திரோபாயப் பலாபலன் பஞ்சமர் இலக்கியங்களில் வெளிப்படலாயின. போராட்ட முன்தொடக்க வேளையில் பசுபதி வெளிப்படுத்தும் கருத்துநிலை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பசுபதி பற்றிச் சில்லையூர்ச் செல்வராஜன் கவிவரிகள் இவை:

"உலகினைப் புதுக்கி, மூசி
  உழைப்பவர்க்குடைமையாக்கி,
அலகிலாப்பொதுமை வையம்
  அமைத் தின பேதச் சாதி
அலகைகள் அனைத்தும் மாய்த் திங்
  கறத்தினை, அழகை ஓம்பப்
பல சுவைப் பாக்கள் யாத்துப்
  படைத்துளான்; படித்துப் பாராய்!"

கவிஞர் பசுபதி 1965 இல் மறைந்தார். மறைவின் பின்னர் வெளிவந்த அவரது முதல் கவிதைத் தொகுதியில் "தமிழுக்கு வாய்த்த தனம்!" என மகுடமிட்டு சில்லையூர்ச் செல்வராஜன் எழுதிய கவிதையின் ஒரு கண்ணி இது. தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்துக்கான படிமுறைச் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் இப்படிக் கணிக்கப்பட்டுள்ளது. சகல வகைப் பேதங்களும் களைந்தெறியப் பட்டுப் பொதுமை உலகைப் படைக்கும் பொதுக்குறிக்கோளின் பலமிக்க பகுதியாக சாதியத் தகர்ப்பு புரியப்படுவதன் பேறு இது. அறுபதுகளின் தொடக்கத்தில் ஒடுக்கப்பட்ட மக்களனைவரையும் பஞ்சமர் என ஒரே அணியாக பார்த்து பசுபதி படைப்பாக்கம் செய்துள்ளார். உழைக்கும் தமிழர் அனைவரையும் 'ஒரே சாதியாக' ஐக்கியமுறுத்தி, தேச எல்லைகள் கடந்து மனுக்குலம் ஒன்று எனக்கொள்வதையும் அவர் பாடல்களில் காணமுடியும். பசுபதியையும் அன்றைய காலத்தையும் தரிசிக்க ஏதுவாக ஒரு கண்ணி இது:

"தோழமை அற்றார்க்குத் தேசியம்தான் தேறிடுமோ?
சேரும் பொருள்வளத்தால் செல்வம் சமனாக்க

படிப்பகம்

www.padippakam.com



சாரும்பொதுவுடைமை! சாதிமுறை ஒழியும்!
பேசும் மொழிச்சண்டை பேரற்றுப் போய்விடுமே!
கூசும் கறைசேரா கொள்கை நிலைத்திடும்!"

சொந்த இனத்து ஒடுக்கப்பட்ட மக்களைப் புறந்தள்ளி மொழியுரிமைத் தேசியம் பேசிய கபடத்தனத்தைச் சாடிப் பரந்த ஐக்கியத்தையும் சமத்துவத்துக்கான போராட்டத்தையும் வலியுறுத்துகிறார் கவி. ஐக்கியமும் போராட்டமும் என்ற பாட்டாளி வர்க்கக் கோட்பாடு பிரயோகிக்கப்பட்ட வேளையின் கருத்து வெளிப்பாடு இது. மனித குல விடுதலையின் இலட்சியத்தின் குறிக்கோளுக்காகச் சாத்தியப்படவல்ல சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்துவது, அவற்றுள் வெளிப்படும் அடக்குமுறை வடிவங்களுக்கு எதிராகப் போராடுவது, ஐக்கியத்தை முன்னிறுத்திய போராட்டம் மக்கள் அணிக்குள் நடாத்தப்படத்தக்கது. போராட்டத்தின் விளைவாய் எஞ்சியிருக்கும் அடக்குமுறை வடிவங்கள் துடைத்தழிக்கப்பட்டு மேலும் இறுக்கமான ஐக்கியம் சித்திக்கும். இன, மத, பால், சாதி பேதங்களை நிரந்தரப்பிரிவாய் ஆழப்படுத்தும் பகைமை சார் போராட்டம் ஐக்கியத்தைத் தகர்த்து மனிதகுல விடுதலையைப் பின்தள்ளும் என்ற புரிதலின் வெளிப்பாடு இக்கவிதை அடிகள்.

இந்த இலட்சிய வீச்சின் தாக்கம் 'பஞ்சமர்' நாவல் தொடங்கி, பஞ்சமர் நூல் வரிசை நாவல்களை ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து படைத்து வெளியிட்ட போது டானியலிடம் இருந்தது. இதனை ஒக்ரோபர் 21 எழுச்சி நெறிப்படுத்தி வழங்கியிருந்தது. இதனைப் புரிந்துகொள்ளாமல் இன்றைய விமர்சகர்கள் சிலர் டானியல் தனது சொந்தச் சாதியான துரும்பர் பற்றி எழுதவில்லையென விசனந்தெரிவிக்கின்றனர். அவர் படைத்தளித்த பஞ்சமர் போராட்ட நாவல்களில் பல சாதியினர் ஐக்கியப்படுவது சித்திரிக்கப்படுகையில் அதனுள் துரும்பர்கள் அடங்கியிருப்பதையும் காட்டியிருக்கிறார். தவிர, 'கானல்' நாவல் முழுமையும் தான் பிறந்து வாழ்ந்த கிராமமும் அதன் அயலும் என்பதை டானியல் அதன் முன்னுரையிலேயே குறிப்பிட்டுள்ளார்.[4]

தமிழகத்தின் தலித் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்ட சாதிகளிடையே முரண்பாடுகளும், அவர்களுக்குள் நிலவும் படிநிலை வேறுபாடும், ஒடுக்குமுறைகளும் காட்டப்படுவதைப் போல டானியலின் பஞ்சமர் நூல்வரிசையில் உள் முரண்பாடுகள் காட்டப்படவில்லை. அக்காரணத்தாலேயே தனது சொந்த மக்களை டானியல் படைப்பாக்கம் செய்ததை விமர்சகர் சிலரால் காண முடியாமற்போய்விட்டது. காட்டியிருந்தால் ஒடுக்கப்பட்டவரில் ஒடுக்கப்படும் அந்த மக்களின் உள்போராட்டம் வெளிப்பட்டிருக்கும் எனக்கருதிவிட்டனர். மாறாக உயர் சாதியினருடன் சாதிய இழிவுகளுக்கு எதிராகப் போராடும் அதே வேளை ஒடுக்கப்பட்டவரிடையே ஐக்கியம் வலுப்படுவதையே டானியலின் படைப்புகளில் காணமுடியும். "கோவிந்தன்" நாவலில் ஒடுக்கப்பட்ட இரு சாதிகளிடையே பகைமூட்ட முயற்சிக்கப்பட்ட போதிலும், அதற்குப் பலியாகாமல், தமக்குள் ஐக்கியப்பட்டு, ஏனைய



உயர்சாதியினருடனும் ஐக்கியப்பட்டு நிலவுடைமையாளருக்கு எதிராகப் போராடுவதைக் காணமுடியும். உள் முரண்பாடுகள் இல்லாமலில்லை; அவை தீர்க்கப்பட்டு பிரதான முரண்பாட்டுக்கு எதிராக அனைவரையும் ஐக்கியப்படுத்தும் குறிக்கோளைத் தரிசிக்கிறோம். இது தீ.ஒ.வெ.இ. வகுத்துக் கொண்ட அரசியல் மார்க்கம் காரணமாக சாத்தியப்பட்ட நிதர்ன உண்மையின் படைப்பாக்கமே. மக்களிடையே சிறு சிறு முரண்பாடுகள் இருந்தனவாயினும், சரியான அரசியல் தலைமை அவற்றைக் களைந்து புதிய சமூக மாற்றத்துக்கு ஏற்புடையதாய் அனைத்து சக்திகளையும் ஐக்கியப்படுத்திய சாதனையின் படைப்பாக்கமே பஞ்சமர் இலக்கியம் - வேறு வார்த்தைகளில் கூறின், சாதிப்பகைமைகளை வளர்ப்பதல்ல - சாதியத்தைத் தகர்ப்பதற்கானது ஈழத்தமிழ் தலித் இலக்கியம்.

'பஞ்சமர்' நாவல் குறித்து டானியல் இவ்வாறு கூறுகிறார்: "இந்தப் 'பஞ்சமரில்' நானும் ஒருவனாக நிற்கிறேன். அறிவறிந்த பருவம் முதல் இன்றுவரை இந்த மக்கள் கூட்டத்தினரின் பிரச்சனைகளில் பங்கு கொண்டு, இவர்கள் துன்பப்பட்டுக் கண்ணீர் விட்ட போதெல்லாம் சேர்ந்து கண்ணீர்விட்டு, சிறுசிறு வெற்றிகள் கண்டு மகிழ்ந்தபோதெல்லாம் சேர்ந்து மகிழ்ந்து, பல்வேறு காலகட்டங்களில் கூட்டாகவும், தனியாகவும் சாதிக்கொடுமைகளை எதிர்த்து நின்று, நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பெற்றுக் கொண்ட அனுபவங்களோ எண்ணிக்கையற்றவை."[15]

இவ்வாறு மக்களுடன் ஊடாடி ஒன்று கலந்து வாழ்ந்து பெற்ற அனுபவங்கள் எல்லாவற்றையும் எழுத வேண்டியதில்லை என்ற தெளிவு அவருக்கு இருந்தது. எதனைப் படைப்பாக்கம் செய்வது என்பதைக் குறித்துக்கூறுகையில், "தனி மனிதனதும், அல்லது அதற்கும் மேலாக முழு உலகத்தினதும் பொதுவான மானசீக உணர்வினை இலேசாகவேனும் தட்டிவிடக்கூடிய நாதக்கூர்களைக் கொண்டவைகளாக எவை எனக்குப் படுகின்றனவோ அவற்றை மட்டுமே எழுத்துருவில் வடிப்பது"[16] என்ற வரையறை தம்மிடம் இருந்ததை டானியல் சுட்டிக்காட்டுவார்.

ஒரு படைப்பு நேர்கோட்டுப்பாதையில் கட்டமைக்கப்பட்டால் மட்டுமே மக்கள் இலக்கியமாக முடியும் என்பது இதன் பொருளல்ல. இறுதிக் குறிக்கோள் மக்கள் விடுதலைக்குப் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்பதே. ஒடுக்கப்பட்டோருக்கு இடையேயான உள் முரண்பாடுகள் தமிழகத் தலித் இலக்கியத்தில் படைப்பாக்கம் செய்யப்படும் போது மக்களிடையே மோதல்களைத் தூண்டும் சந்தர்ப்பங்கள் பலதடவை வெளிப்படுவதைக் காணமுடியும். ஐக்கியப்படுத்துவதற்குப் பங்கம் விளைவிப்பதை மறுக்க முடியாதுள்ளது. இன்றைய பின் நவீனத்துவச் சிந்தனைச்சூழலில் மக்களிடையே குரோதங்கள் தூவப்பட்டு மோதவிடப்படும் மக்கள்விரோதப் போக்கை அத்தகைய படைப்புகள் பிரதிபலிக்கின்றன எனலாம். அந்தவகையில் இத்தகைய

படிப்பகம்

www.padippakam.com



படைப்புகள் தலித் மக்களின் விடுதலைக்கு எதிரானவையாகி, தலித் இலக்கியம் எனப்பெருமை கொள்ள முடியாதனவாகும்.

இதுவரையான பஞ்சமர் இலக்கியம் பற்றிய பிரஸ்தாபத்தில் ஒரு ஐயம் எழுந்திருக்க வேண்டும்; யாழ்ப்பாணத்தில் மட்டுந்தான் பஞ்சமர் இலக்கியம் இருந்ததா, ஏனைய இடங்களில் தோன்றி வளரவில்லையா, அவ்வாறாயின் ஏன் என்ற கேள்விகள் எழுவது இயல்பானது. எண்பதுக ளில் யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்டோர் கிராமம் நிர்மூலமாக்கப் பட்டுப் புலப்பெயர்வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட அதே சமகாலத்தில் மட்டக்களப்பிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் கிராமத்திலிருந்து விரட்டப் பட்டு புலப்பெயர்வு ஒன்று நடந்திருக்கிறது. இன்று களுவாஞ்சிக் குடியில் முக்குவர்கள் சவரத் தொழிலாளர்களை சாதியத் தொண்டூழி யம் புரியும்படி நிர்ப்பந்திக்கும் முரண்பாடு ஒன்று வெடித்துள்ளது. அதற்கெதிரான சவரத்தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார் கள்; இதுபோன்ற கோயில் உரிமைப் போராட்டங்கள் சில, வேறு கிராமங்களிலும் உண்டு. ஆயினும் யாழ்ப்பாணத்தில் போல கூர்மை யான ஆயுதப்போராட்டமாக வலுத்து பிரதான முரண்பாட்டின் இடத்தை இவைஎடுக்கவுமில்லை, அவை படைப்பாக்கப்படவுமில்லை.

கடந்த காலங்களில் மட்டக்களப்பில் இவ்வாறு பிரதான முரண் பாடாகச் சாதியம் முனைப்படையாதது ஏன்? கூம்பகவடிவ (பிரமிடு போன்ற) சாதியப்படி நிலை அங்கு காணப்படாமையே இதற்கான பிரதான காரணமாகும். மட்டக்களப்பில் பெரும்பான்மையினராயும் பெருநிலச் சொந்தக்காரர்களாயும் விளங்குவோர் முக்குவர். இக்கார ணத்தால் ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்துக்கு ‘தேசவழமைச் சட் டத்தை, அறிமுகப்படுத்திய போது, கிழக்கு மாகாணத்துக்கு ‘முக்குவர் சட்டத்தை’ பிரயோகித்தனர். ஆங்கிலேயர் காலத்திலும் தேசவழமைச் சட்டம் செல்லுபடியானது. ஆயினும் மட்டக்களப்பின் முக்குவர் சட் டத்தை ஆங்கில அரசு ரத்துச் செய்தது. இது யாழ்ப்பாண வெள்ளாளர் சதியென உணரமுடிகிறது; ஆங்கில அரசின் பிரதிநிதியாக மட்டக்களப் பில் பணிபுரிந்த யாழ்ப்பாணத்து மேட்டிமைக் கனவானின் சிபார்சின் பேரிலேயே இவ்வாறு நேர்ந்ததெனக் காட்டுவார் ஞா. சிவசண்முகம். ஆயினும் அண்மைக்காலத்திலும் மட்டக்களப்பின் பிரத்தியேகச் சமூகக் கட்டமைப்பின் காரணமாக முக்குவர் சட்ட அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.[17]

இந்த அம்சம் காரணமாக வெள்ளாளர் போல முக்குவர் சாதிக்கூம் பகப் படிநிலை உச்சத்தில் இருந்து கொடிய ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடாது போயினர். அங்கே தனியொரு உச்சம் இல்லை. சிறுபான்மையினரான வெள்ளாளர்கள் காரை தீவில் மிகச் செறிவா கவும், ஏனைய பிரதேசங்களில் சிறிய அளவிலும் காணப்படுகின்றனர். முக்குவரை அடுத்துள்ள பெரும்பான்மையி னரான கரையார் கடலோ டிகளாக விளங்கி வாணிபத்தில் முன்னேறி, நாற்பதாம் ஆண்டுகளி லிருந்து கல்வியிலும் மேலோங்கியுள்ளனர். இரு தசாப்தங்களுக்கு



முன்வரை கல்வியில் காரைதீவு வெள்ளாளரும், ஆரைப்பத்தை (இன்று ஆரையம்பதி எனப்படுகிறது; ஆரையம்பதி என்ற பெயர்மாற்றம் சமூக அசைவியக்க மேல்நிலையாக்கத்தின் பேறு எனலாம்) கரையாரும் கல்வியிலும் அரசு பதவிகளிலும் நிறைந்திருந்தனர். இம்மூன்று சாதியி னர் தவிர சீர்பாதம் எனும் சிறுபான்மையினரும் உயர்சாதிப்படி நிலை யில் காணப்படுகின்றனர். ஒரு தனிச்சாதியின் உச்சம் இல்லாமல் நான்கு சாதிகள் ஒரு வரிசையில் அமைந்திருப்பதால், ஏனைய இந்துச் சமூகங்க ளின் கூம்பக வடிவப் படிநிலை எற்படுத்திய சாதிய ஒடுக்குமுறை கிழக்கு மாகாணச் சமூகத்தில் இல்லாமற் போயிற்று எனலாம்.

இன்றைய சாதி முரண்பாடு எப்படிப்புரியப்படலாம்? அண்மித்த இரண்டு தசாப்தங்களில் சற்று முன்பின்னாக பல முக்குவர் சமூகக் கிராமங்கள் கல்விக்கு முதன்மை கொடுக்கத் தொடங்கின. அதுவரை செழிப்பான விவசாயத்துடன் திருப்திப்பட்டிருந்தவர்கள் அரசு உத்தியோகத்தில் பின்தங்கியதை உணர்ந்து இவ்வாறு கல்விக்கு முன்னுரிமை கொடுத்தனர். அதன்பேறாக இன்று தலைமைப் பதவிகளை முக்குவர் நிறைத்து வருகின்றனர். இந்த சமூக அசைவியக்கம் அவர்களைச் சொந்தச் சாதிவரலாறு படைக்கவும் தூண்டுகிறது. இது குறித்த ஆய்வை சி.மௌனகுரு மேற்கொண்டுள்ளார்கள்.[18] அதே வேளை தமது மேலாண்மை குறித்த இருப்பை சோதித்துப்பார்க்கவும் முனைகின்றனர். ஏனைய சமூகங்களும் முன்னேறிவருவதை உணராத காரணத்தால் சிறிய அளவான சாதிமோதல்களுக்குக் கால்கோலாகிறது. இன்றைய பின் நவீனத்துவச் சூழலும், இந்துத்துவா எழுச்சியும் இத்தகைய தவறான போக்குக்கு இட்டுச் சென்றாலும் கிழக்கின் பிரத்தியேகச் சூழல் காரணமாக இந்த முரண்பாடு சமாதானமாகத் தீர்ந்துவிடும் என எதிர்பாக்கலாம்.

கிழக்குச் சமூகத்தில் இரண்டாம் படிநிலையில் உள்ள கைவினைச் சாதியினர் அதிக இறக்கமில்லாமல் அண்மித்த படி வரிசையில் உள்ளார்கள். மேற்கூறிய நான்கு சாதியினரும், இக்கைவினைச் சாதியினரும் வாழ்நிலைகளிலும் கல்வியிலும் அதிக வேறுபாடுகள் இல்லாதவர்கள். அந்தக் காரணத்தால் இந்தச் சாதிகளிடையே இன்று பரவலாகக் கலப்புத்திருமணம் நடப்பது சர்வசாதாரணமாகியுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுடனான முரண்பாடும் அதிக கடும் போராட்டங்கள் இல்லாமல் தீரமுடியும்.

இன்றைய உலக மயமாதலின் பண்பாகிய மக்களிடையே உள்ள முரண்பாட்டைத் தூண்டிக் குரோதத்தை வளர்க்கும் போக்கு மட்டக் களப்பிலும் தலையெடுப்பதைச் சொல்லியகையுடன் இத்தகைய நம்பிக்கையைத் தெரிவிப்பது முரண்பாடாக இல்லையா? இல்லை! ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது சாதியக் குரோதம் மட்டக்களப்பில் குறைவாக உள்ளது என்பதே உண்மை. நச்சுத்தனமாக சாதியக் கருத்தியல் அண்டாத சமூகமாக கிழக்குச் சமூகம் உள்ளது. மிக நீண்ட காலமாக அப்பொதுப்போக்கிலிருந்து அவர்கள் பிரிந்திருந்த

படிப்பகம்

www.padippakam.com



அடையாளங்கள் பல உண்டு. அவர்களது இனக்குழு வாழ்முறைத் தொடர்ச்சி இறுக்கமான சாதிய மாற்றியமைத்தலுக்கு உள்ளாகாமலே இருந்துள்ளது. இதற்கு சாதியக் கருத்தியலின் காவலர்களான பிராமணரோ, வெள்ளாளரோ ஆதிக்க சக்தியாக அங்கு வரமுடியாமற் போனது பிரதான காரணமாகும்.

இத்தகைய சாதியமாற்றியமைத்தல் நடைமுறை நிகழாத காரணத்தால் இனக்குழு முறைமையின் கணங்களிடையேயான புறமணமுறை (அகமணத்தடை) மட்டக்களப்புச் சமூகத்தில் தொடர்வதைக் காணலாம். (இனக்குழுக்கள் சாதிகளாக மாற்றப்பட்ட போது, புறமண முறை நீக்கப்பட்டு அகமண முறை ஏற்படுத்தப்பட்டது என்பதை மனங்கொள்க). மட்டக்களப்பின் ஒவ்வொரு சாதியையும் குலங்கள் எனக்கண்டால் அவற்றிடையே உள்ள குடிகள் கணங்களாகும். (ஒவ்வொரு சாதியினரிடையேயும் குடிகள் உண்டு. இது யாழ்ப்பாணத்தின் குடிமைமுறைமையல்ல; தெளிவான கண அமைப்பு) ஒவ்வொரு குடியினரும் ஒரு தாய்வயிற்றிலிருந்து பிரிந்து பெருகிய சந்ததியாதலால் தமக்குள் சகோதர உறவுடையவர்கள். இக்காரணத்தால் ஒரே குடியினருக்குள் திருமண உறவு நடப்பதில்லை.[19] “இலங்கையில் வாழும் தமிழர்களிடையே குடிப்பிரிவு எனும் சமூக அமைப்பு மட்டக்களப்பில் மட்டுமே இன்றும் பேணிக்காக்கப்பட்டு வருகிறது. சாதிப்பிரிவுகளின் உட்பிரிவுகளான குடிப்பிரிவுகள், ஆலய நடைமுறைகள், திருமண மற்றும் சடங்கு சம்பிரதாயங்களைச் சிறப்புடன் பேண வகுக்கப்பட்டதெனக் கூறலாம்” என்பார் ஞா.சிவசண்முகம்.[20] முக்குவர் சமூகத்தில் காணப்படும் குடிமுறையை ஆய்வு செய்து பொதுமைப்படுத்தி சிவசண்முகம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது ஏனைய சாதிகளுக்கும் பொருந்துவது என்பதை காரைதீவு வெள்ளாளர் சமூகத்தினரதும், ஆரைப்பத்தை (ஆரையம்பதி) கரையார் சமூகத்தினரதும் வாழ்முறையையும் சடங்காசாரங்களையும் கள ஆய்வுக்கு உட்டுத்தியபோது உணரமுடிந்தது. சாதியம் பற்றிய கற்றலில் பல அதிர்ச்சி தரும் தகவல்களை அங்கு பெற முடிந்தது. சாதியம்பற்றிய ஆய்வுக்கு மேலும் ஆழமான தேடல் மடக்களப்பு சமூகம் சார்ந்து அவசியமானது.

மலையகத்தில் அறுபதாம் ஆண்டுகள் பெரும் வீச்சுடன் தேசிய இலக்கிய எழுச்சி கிளர்ந்தெழுந்தது; அதற்கு சமாந்தரமான அரசியல் செயற்பாட்டில் ‘இந்தியவம்சாவழியினர்’ என்ற அடையாளம் நிராகரிக்கப்பட்டு ‘மலையகத்தவர்’ என்கிற தேசிய இன அடையாளத்துக்கான முன் முயற்சிகள் தொடங்கப்பட்டது. அங்கும் பஞ்சமர் இலக்கியம் தோன்றமுடியவில்லை. மிகப் பெரும்பான்மையாக (ஏறத்தாழ 90 சதவீதம்) தொழிலாளர்களாயுள்ள மலையகச் சமூகத்தில் ஒடுக்கப்பட்டோரே பெரும்பான்மையினர். கடை முதலாளிகளாயும் தொழிலாளர்களில் சிறுபான்மையினராயுமுள்ள உயர்சாதியினர் தம்மை ‘மலையகத்தவர்’ எனும் தேசிய விழிப்புணர்வின் பகுதியாகக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். மலையகத்தில் ஒப்பீட்டு ரீதியில் அதிகமான ஒடுக்கப்பட்டோர் படித்துப் பட்டம் பெற்று உயர்பதவிகளை வகிக்கிறார்கள். அக்காரணத்தால் சிறிய அளவு முரண்பாடுகளும் புறக்கணிப்புகளும் காணப்பட்ட போதிலும் சாதியப்பிரச்சனை கூர்மைப்படவில்லை. தொழிலாளர் வாழ்நிலையும், போராட்டங்களும், மலையகத் தேசிய விழிப்புணர்வுமே மலையக இலக்கியத்தில் பெரும்பங்கை நிறைத்துக் கொண்டன.[21]



வடமாகாணத்திலும் யாழ்ப்பாணக்குடாநாடு தவிர்ந்த வன்னி நிலப்பரப்பிலிருந்து பஞ்சமர் இலக்கியம் தோன்றவில்லை. வன்னியூர்க் கவிராயரின் சிறுகதையொன்று சாதிபார்க்கும் மனோபாவத்தைக் கிண்டல் செய்கிறது. ஆயினும் அது பஞ்சமர் இலக்கிய வகைப்பாட்டுக்கு உரியதல்ல; தவிர, அவரது ஏனைய படைப்புகள் வன்னியச் சமூகத்தின் சாதிய முரணற்ற இருப்பையே வெளிப்படுத்துகின்றன. வன்னி, குளப்பண்பாடு சார்ந்தது. குளங்களை அண்டி ஒவ்வொரு பகுதியிலும் குறித்த தனித்தனிச் சாதிகள் காணப்படும். ஒவ்வொன்றும் தமக்குள் அதிக ஊடாட்டத்தையும் சமத்துவ உறவையும் பேணுவன. கூட்டான உழைப்பு பிரதான அம்சமாகும்.ஒருவர் ஏனையவர்க்கு அறிவித்து தனது காணியில் அவர்களுடன் கூட்டாக இணைந்து அறுவடை வெட்டுவர். இது ‘பரத்தை’ முறை (இச்சொற்பொருள் நுட்பமான ஆய்வுக்குரியது). ஏனையவர்களது பரத்தை வெட்டில் இவர் கலந்து கொள்வார். சாதியப்படி நிலை சார்ந்த அடக்குமுறை இல்லாமலே மற்றைய சாதிகளுடனான பரஸ்பர உறவு பகிரப்படுவதைக் காணமுடியும்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் சாதிய முரண்பாடு கூர்மையாக்கப்பட்டது செயற்கையானதா? பிரதேச மணம் என்ற பெயரில் அறுபதாமாண்டுகளில் சாதியச் சச்சரவுகள் யாழ்ப்பாண இலக்கியத்தில் இடம் பெறத் தொடங்கிய போது அதனைத் தவறெனக் கண்டித்த மு.தளையசிங்கம், மொழிப்பிரச்சனையும், தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையுமே முதன்மை இடம் பெற்றிருக்க வேண்டும் என்பார்.[22] இது கவனத்தை ஈர்க்கும் ஒரு பிரச்சனையாகும். இலங்கையில் ஐம்பதுகளில் தேசிய எழுச்சி முனைப்புற்றுப் பிரதேச மணங்கமழும் இலக்கியங்கள் தோன்றலாயின. இதில் யாழ்ப்பாணத்தின் பிரதான முரண்பாடாக சாதியப்பிரச்சனை வெளிப்பட்டு, இலக்கியத்தில் பிரதிபலித்துப் பஞ்சமர் இலக்கியப் பரிணமிப்பைப் பெறும் தொடக்கவடிவம் தோன்றியது. இதனை ஏற்க மறுத்த மு.த. வெறும் சத்தியாக்கிரகத்தால் சாதியப்பிரச்சனையைத் தீர்த்துவிடலாம் எனக் கருதினார். அவ்வாறான ஒரு சத்தியாக்கிரகப் போராட்ட வேளையில் சாதிவெறியர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டு அகால மரணத்தை அவர் தழுவ நேர்ந்தது. வெறும் சத்தியாக்கிரகத்தையே சகிக்க முடியாத சாதிவெறியர்கள் அவரது மரணத்தையே ‘சாதி முரண்பாடு பிரதானமானதா இல்லையா’ என்ற கேள்விக்கான பதிலாக்கிக் கொண்டார்கள். சாதியப் பிரச்சனை

படிப்பகம்

www.padippakam.com



செயற்கையாகத் தூண்டப்பட்டதில்லை. தமது நியாயமான உரிமையை சாத்வீகமாகப் பலதடைவைகள் கோரி, பலாத்காரமாய் ஒவ்வொருதடவையும் ஒடுக்கப்பட்ட பின், ஒன்றுபட்டு எதிர்த்து அமைதிவழியில் போராடி, எதிரிகளால் தாக்கப்படும் போது நின்று நிதானித்து பதிலடியைத் தீர்க்கமான முறையில் ஒடுக்கப்பட்ட மக்கள் திருப்பிக் கொடுத்தனர். ஒருபோதும் வலிந்ததாக்குதலில் இறங்கிய தில்லை என்ற வரலாற்றுண்மை மிகுந்த அவதானிப்புக்குரியது. அந்த அனுபவங்களைப் படைப்பாக்கம் செய்த பஞ்சமர் இலக்கியம் வரலாற்றில் அழியாத்தடம் பதித்துவிட்டது.

இங்கு இன்னுமொரு அம்சம் கவனிப்புக்குரியது. யாழ்ப்பாண 'வெள்ளாளத் தேசியத் தலைவர்கள்' எவரும் சாதியத்தைத் தகர்க்கும் போராட்டத்தில் பங்கு கொண்டதில்லை. மாறாக, மட்டக்களப்பில் ஐம்பதுகளின் தமிழ்த் தேசிய எழுச்சிக்குத் தலைமைதாங்கிய செல்லையா இராசதுரை மாமாங்கப்பிள்ளையார் கோவிலில் ஆலயப் பிரவேசப் போராட்டத்தைப் பலமான எதிர்ப்பு ஏதுமின்றி நிறைவு செய்திருந்தார். அவர் தனியே தனது சமூகம் சார்ந்த முக்குவர் தலைவராக அன்றி முழுக்கிழக்குமாகாணத்தமிழர் தலைவராக அன்று கொண்டாடப்பட்டதற்கு இது பிரதான காரணமாகும். முக்குவர் சமூகம் சாதிய உச்சப்படி நிலை அடக்குமுறை சார்ந்ததில்லை என்பதை சமாதானமான ஆலயப்பிரவேச அனுமதி எடுத்துக் காட்டியது என்பது பிரதான அம்சமாகும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, தமது சாதிவெறியை மறைப்பதற்கு 'வெள்ளாளத் தேசியத் தலைவர்கள்' மொழிப்பிரச் சனையைப் பூதாகரமாக்கினர். உண்மையில் தமிழினத்துக்கான சுயநிர்ணயப் பிரச்சனை இருந்தனவாயினும் அவை அரசியல் போராட்டங்களாக முன்னெடுக்கப்படவில்லை; எடுக்கப்பட்டிருப்பின் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுடன் அவை இணைக்கப் பட்டிருக்க முடியும். வெறும் மொழிவெறியைத் தூண்ட முற்பட்டது யு.என்.பி. பிற்போக்குக் கும்பலுடன் கூடிக் குலாவித் தமிழ் மக்களை ஏமாற்றவேயன்றி வேறல்ல. குடியேற்றப்பிரச்சனை, நீர்ப்பங்கீடு, அனைத்துப் பிராந்தியத்துக்குமான உயர்கல்வி, பாதுகாப்பு, தொழில் விருத்தி போன்ற உண்மையான தமிழ்த் தேசியப் பிரச்சனைகளில் கவனஞ்செலுத்தப்படவில்லை. எழுபதுகளில் தரப்படுத்தலின் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தைப் பாதித்ததான உயர்கல்விப் பிரச்சனை முனைப்படைந்த பின், தேசிய இனப்பிரச்சனை இந்த வெள்ளாளத் தேசியத் தலைமைக் கனவான்களிடமிருந்து இளைஞர் இயக்கங்களிடம் கைமாறத் தொடங்கியது. (தரப்படுத்தல் ஏனைய தமிழ்ப்பிரதேசங்களுக்கு சாதகமாகத் தெரிந்தது. ஆயினும் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் தொடுத்த ஆயுதப்போராட்ட அதிர்வுக்கு சிங்களப் பேரினவாதத்தின் எதிர்வினை, ஏனைய பகுதிகளையும் யுத்தசாகரத்தில் ஈர்த்துவிட்டது).



# III

# வர்க்கப் பார்வையில் பஞ்சமர் இலக்கியம்

பஞ்சமர் இலக்கியத்தின் சிறப்பம்சம் வர்க்கப்பார்வையில் படைக்கப்பட வேண்டும் என்ற பிரக்ஞையாகும். மண்வாசனை இலக்கியம் என்ற மகுடத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்வுப் போராட்டங்களைச் சித்திரித்த ஏனைய படைப்பாளிகளும் சரி, பஞ்சமர் நூல்வரிசையை வழங்கிய டானியலும் சரி வர்க்கப் பார்வையில் படைப்பாக்குவதில் மிகுந்த சிரத்தை செலுத்தினர். "அரசியலிலோ, இலக்கியத்திலோ, வேறெந்த விவகாரங்களிலோ நடுநிலைமை என்பது ஒன்றில்லை. நீதி, அநீதி என்ற இரண்டு புள்ளிகள் ஒன்றோடொன்று முட்டி நெருங்கிக் கொண்டு நிற்கின்றன. இடையே மூன்றாவது ஒரு புள்ளிக்கு இடமேயில்லை" என்பார் டானியல்.[23]

தமிழ்த் தேசிய எழுச்சி இளைஞர் குழுக்களின் அதிதீவிரவாதத் தலைமைக்குக் கைமாறிக் கொணடிருந்த போது டானியல் 'பஞ்ச கோணங்கள்' நாவலை எழுதினார். தேசியவாதம், சாதியப்பிரச்சனை என்பவற்றை வர்க்க நோக்கில் அணுகித் தனது முன்னுரையை அவர் எழுதியிருந்தார். இவை தொடர்பான பிரச்சனைகள் குறித்து அ.மார்க்ஸ் தனது மதிப்புரையில் அலசியுள்ளார். டானியல் முன்னுரையில் குறிப்பிடும் இக்கருத்து கவனிப்புக்குரியது: "கேடுகெட்ட, சீரழிந்த முதலாளித்துவ சமூக அமைப்புக்கு மாறாக, தொழிலாளிய - விவசாயிய வர்க்கங்கள் ஒன்றிணைந்து, தனக்குப் பின்னால் ஏனைய பின் தள்ளப்பட்ட வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு செய்யும் போரினைத்தான் புரட்சி எனக்கொள்ளலாம். இந்தப் புரட்சியை வருவிப்பதற்கு ஒவ்வொரு இலக்கிய காரனும் தனது பங்கினைச் செய்ய எழுதுவது தான் புரட்சிக்கான இலக்கியமாகும். இதைவிடுத்து, வெறும் அதிதீவிரவாதத்திற்கும், தனிநபர் குழு வீர தீர வாதத்திற்கும் பரிந்து எழுதுவது என்பது புரட்சிக்கே துரோகம் செய்யும் எழுத்து வரிசைக்கே அவனைத் தள்ளிவிடும். இதில் நான் மிகவும் அவதானமாகவே இருந்தேன், இருக்கிறேன், இருப்பேன்."

வர்க்க உணர்வை வலியுறுத்தியபடி சாதி தொடர்பான படைப் புகளையே தான் சிருஷ்டிப்பது ஏன் என்பதையும் தெளிவுபடுத்தினார் டானியல். நிலமில்லாத, சொத்தில்லாத, உரிமைகள் இல்லாத பெரும் படிப்பறிவில்லாத, இழப்பதற்கெதுவுமில்லாத மக்கள் கூட்டத்தில் பெரும் பான்மையினர் ஒடுக்கப்பட்ட மக்களாயிருப்பதே அக்காரணம் என்பார். முதலாளித்துவத்துக்கு எதிரான புரட்சியை 'சாதிமுறையை அகற்றிவிட்டுச் செய்யலாம்' எனக்கூறப்படுவதை அவர் நிராகரிப்பார். ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டிப் பயிற்சியளிப்பதே சோஷலிஸப் புரட்சிக்கான வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் நோக்கத்தில்

படிப்பகம்

www.padippakam.com



தான் என்பார். இத்தகைய புரிதலுடன் எழுதும் தன்னை வர்க்க சார்பற்ற இலக்கியகாரன் எனச் சொல்லப்படுவதை மறுப்பதாகக் கூறுவார் டானியல்.[25] இவ்வாறு வர்க்கப் பார்வையில் பஞ்சமர் இலக்கியம் படைக்கப்பட வேண்டும் என்ற பிரக்ஞை அனைத்துப் படைப்பாளி களிடமும் காணப்பட்டது போன்றே டானியலிடமும் காணப்பட்டதா யினும் அவரது படைப்புகளில் அவரறியாமல் சாதியப் பார்வை தலை காட்டியதுண்டு. 'பஞ்சமர் நூல் வரிசை' என்ற வகைக்குள் உள்ளடக்கி அவர் படைத்தளித்த நாவல்களில் பெரும்பாலும் இந்த விலகலை இனங்காணலாம். இவையொவ்வொன்றும் வெளிவந்தபோது, அதில் வெளிப்படும் சாதியவாதம் சுட்டிக்காட்டப்பட்டு விமர்சிக்கப்பட்ட காரணத்தாலேயே இறுதியாக எழுதிய 'பஞ்சகோணம்' முன்னுரை உட்பட ஒவ்வொரு படைப்புகளின் போது தனது வர்க்கப்பார்வையைப் பிரகடனப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது.

'பஞ்சமர்' நாவல் முதற்பதிப்பு வெளிவந்த பின், 1974 ஆம் ஆண்டளவில் பேராதனையில் அந்த நாவல்மீது நடைபெற்ற விமர்சனக் கூட்டமொன்றில் சி.சிவசேகரம் விமர்சனமொன்றை முன்வைத்தார். "மார்க்ஸிய - லெனினிஸக் கண்ணோட்டத்தில் அமைந்ததாக அந்த நாவல் கூறிக்கொண்ட போதிலும், டானியலின் அணுகுமுறையில் சாதி முரண்பாட்டை அவர் வலியுறுத்தியுள்ள விதம் மார்க்ஸியத்திற்கு உடன்பாடற்றது" என்பதே அந்த விமர்சனம். அக்கூட்டத்தில் டானியல் கலந்து கொண்டபோதிலும், அதற்கான பதில் எதனையும் அவர் முன்வைக்கவில்லை. பின்னர் 'கோவிந்தன்' நாவலுக்கு 'செம்பதாகை' பத்திரிகையில் விமர்சனமொன்றைப் புனைபெயரில் சிவசேகரம் எழுதியிருந்தார். எழுதியவரை மோப்பம் பிடித்துக் கண்டறிந்த டானியல், அதற்கான பதிலை முன்வைப்பதை விடுத்துத் தனிப்பட்ட தாக்குதல் ஒன்றையே எழுதினார் எனக்குறிப்பிடுகிறார் சிவசேகரம்.[26]

சாதியத்துக்கெதிரான போராட்டம் தொடக்கம் பெற்றபோது அதற்குத் தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக டானியல் இருந்தார். ஆயினும் போராட்டம் உச்சக்கட்டத்தை எட்டியபோது அவர் கட்சியிலிருந்து விலக நேர்ந்தது; கிராமங்கள் தோறும் சென்று ஒடுக்கப்பட்ட மக்களை விழிப்புறச் செய்து கிளர்ச்சியூட்டிய ஆற்றல்மிக்க போராளி அவர்; அவரால் கட்சிக்கட்டுக் கோப்பையும், போராட்டத்துக்கு ஊறுவிளைவிக்கும் இரகசியத்தை வெளியிடாமற் பாதுகாப்பதையும் நடைமுறைப்படுத்த முடியாமற் போனதால் இவ்வாறு விலக நேர்ந்தது. விலகிய போதிலும், கட்சியின் நண்பராயும், சாதியத்துக்கு எதிரான உறுதியான போராளியாகவும் அவர் விளங்கினார். 'பஞ்சமர்' நாவல் முதற்பதிப்பு வெளிவந்தவுடன் கட்சி மட்டத்திலான உள்விமர்சனக்கூட்டமொன்றில் நாவல் வர்க்கப்பார்வையிலிருந்து எந்தெந்த இடங்களில் விலகிச் செல்கிறது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. ஆயினும் அத்தவறுகளை அவரால் திருத்த முடியவில்லை. தொடர்ந்த நாவல்களிலும் பட்டாளிவர்க்கப்



பார்வைக்கு விரோதமான அம்சங்கள் வெளிப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் சாதியத்துக்கு எதிரான போராட்ட வரலாறு திரிபுபடுத்தப்பட்டதுண்டு; கட்சி அமைப்பும், வாலிபர் சங்கக் கூட்ட முறைமைகளும் தவறாக சித்திரிக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த தோழர்கள் இத்திரிபுகளைக் கண்டித்துக் கட்சிப்பத்திரிகையில் மறுப்புக் கடிதங்களாக எழுதியிருந்தனர்.

டானியலின் படைப்புகளில் வர்க்கப்பார்வையை மீறிய சாதியப் பார்வையின் உச்சக்கட்டமாய் அமைவது, அவரது நாவல்களில் காட்டப்படும் 99 வீதமான வெள்ளாளப் பெண்களை தாழ்த்தப்பட் டவர்களுடன் சோரம் போய்விடுவதாய்க் கட்டமைத்திருப்பதில் அடங்கியுள்ளது. சோர உறவில் பிறந்த பிள்ளைகளே பிற்காலத்தில் வெள்ளாளச் சாதித் திமிர்பிடித்த வில்லன்களாகவும் புனையப்பட் டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் புரட்சிகர இளைஞனின் பாத்திரத் தையும் சோர உறவில் பிறந்து தாழ்த்தப்பட்டவர்களிடம் வளர்ந்ததாகக் காட்டுவதுண்டு ('பஞ்சமர்', 'போராளிகள் காத்திருக்கின்றனர்'). கூர்மையான வர்க்கப் போரைக் காட்டுவதாக அல்லாமல், கதைச் சுவாரசியத்துக்கு ஏற்பச் சம்பவங்களை அமைத்துக் கதையை நிறைவு செய்வதும் உண்டு. சிவசேகரம் மேற்குறித்த 'செம்பதாகை' விமர்சனத் தில் இந்த அம்சங்களையும் சுட்டிக் காட்டியிருந்தார். டானியல் தனது 'கோவிந்தன்' நாவலின் மூலமாக எல்லா வெள்ளாளர்களது இரத்தத்தி லும் தாழ்த்தப்பட்ட மக்களின் இரத்தம் ஓடுவதாக நிரூபித்துள்ளார் என்ற கிண்டலுடன் விமர்சனக் கட்டுரை தொடங்கியது. வெள்ளாள எசமானின் எந்த உறுப்பைக் கடித்துக் கொலை செய்தால் டானியலின் நாவலில் இடம் பெறலாம் என்பதைத் தெரிந்துவைத்துக் கோவிந்தன் நாய் கடித்திருக்கிறது என்பதைச் சுட்டிக் கட்டுரை நிறைகிறது (தமிழகத்தில் வெளிவந்த போது இந்த விமர்சனத்தின் காரணமாய் உறுப்பு மாறிக் குரல் வளைக்குத் தாவிவிட்டது கோவிந்தன்; ஏற்கனவே உறுதியாய் இடம் கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கையில்). 'கோவிந்தன்' நாவல் நிலவுடைமை எசமானுக்கு எதிராகச் சகல சாதியினரும் ஐக்கிய முறுவதை சித்திரித்து வளர்க்கப்பட்டது. அந்த எழுச்சி ஏற்படுத்திய தாக்கம் காட்டப்படாமல் வெறும் கதைப் புனைவாய் நாவல் முடிக்கப்பட்டது. அந்தநிலவுடைமையாளரின் ரிஷி மூலமும், அவருக்கு உருவாகும் வாரிசு இரு மரபும் துய்யவரும் வெள்ளாள மரபன்றி, தாழ்த்தப்பட்ட கலப்பு மறைந்துறைவது என்ற சித்திரிப்பும் வெறும் கதைச் சுவாரசியமேயன்றி, ஒடுக்கப்பட்டோர் போர்க்குண நாவலுக்கு அது அவசியமற்றது. இத்தகைய யதார்த்தத்துக்கு ஒவ்வாத புனைவுகள் அவரது நாவல்களில் நீக்கமற நிறைந்துள்ளன ('கானல்' இக்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக முடியாமல் படைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அவரது சொந்தச் சமூக அசைவியக்கம் என்பதால் அந்நாவலில் 'ஆழ்ந்த கவியுள்ளம்' வெளிப்படுகிறது).

படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய சில குறைபாடுகள் காணப்படினும் ஒடுக்கப்பட்ட மக்களின் கிராமிய வாழ்வையும் போராட்ட அனுபவங்களையும் டானியல் அளவுக்கு வேறெவரும் வெளிப்படுத்தியதில்லை என்பது தெளிவு. அவரை மீறிச் சாதியப்பார்வை வெளிப்பட்ட போதிலும், சாதியமைப்பைச் சாதிய நோக்கில் தகர்க்க முடியாது என்ற கருத்து டானியலுக்கு இருந்தது. எழுபதுகளில் நாவல் எழுதத் தொடங்கு வதற்கு முன்னர், அறுபதுகளில் ஒரு போராளியாகத் திகழ்ந்தபடி அவர் எழுதிய சிறுகதைகளில் சாதிய வக்கிரம் தோன்றாமல் ஒடுக்கப்பட்ட மக்களின் போர்க்குணத்தை வெளிப்படுத்த டானியலால் முடிந்திருக் கிறது. அவருடையதும், அவர் சார்ந்த கட்சியினதும், மக்களினதும் போராட்ட அனுபவங்களும் மார்க்ஸிய சித்தாந்தப் போதமும் அத்தெளிவை அவருக்கு ஊட்டின. இந்தநிலைப்பாட்டிலிருந்து விலகி சாதிய நோக்கில் புனைவுகளை அவர் சிருஷ்ட்டித்தது வேறொரு வாழ்முறையின் விளைவு. எழுபதுகளில் சாதியத்துக்கு எதிரான போராட்டமும் முடிவுக்கு வந்து, அவர் ஏற்கனவே கட்சி அங்கத்து வத்தை இழந்து, யாழ்நகரில் கேந்திர முக்கியத்துவம் மிக்க மையத்தில் அவர் நிறுவிய பட்டறைக்கு சிறிய முதலாளியாக மாறிவிட்ட நிலையில் தனக்கான ஒரு தனி அணியை அவர் சிருஷ்ட்டிக்க நிர்ப்பந்திக்கப் பட்டார். அது போராட்டத்தின் முன்னேறிய வீரியமிக்க உறுப்பினர்க ளாய் இருந்திருக்க முடியாது - அத்தகையவர்கள் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியில் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். உதிரிகளா கிச் சாதிவாதத்துக்கு வசப்படக் கூடியவர்களாயிருந்தவர்களே அவரு டனான சகபயணிகளாயிருந்தனர். அந்த நிலையில் அவரது சாதிவாதம் தன் சொந்தச் சாதிக்குள் குறுகுவதாயில்லாமல் பஞ்சமர் எனும் ஒரு முகப்பட்ட பரந்த தளம் சார்ந்திருந்தது என்பதைக் கவனித்தலவசியம்.

இங்கே எழக்கூடிய ஒரு கேள்வி, சாதியப் பிரச்சனையை ஏன் சாதிய நோக்கில் அணுகக்கூடாது என்பதாகும். வர்க்கப் பிரச்சனையை வர்க்க நோக்கில் தீர்வுகாண்பது போல சாதியப் பிரச்சனையை சாதிய நோக்கில் தீர்க்க முடியாதா? அதனையும் வர்க்கப் பார்வையில் அணுக வேண்டும் என்பதற்கான காரணம் என்ன?

இந்தியாவின் விசேட சூழலே சாதியக் கட்டமைப்பை இங்கு தோற்றுவித்தது. கிரேக்க - ரோம் சமூகங்களில் புராதன பொதுவுடைமைச் சமூக அமைப்புத் தகர்ந்து ஆண்டான் - அடிமைச் சமூகம் உருவானது. அடிமைப்புரட்சி வாயிலாக அந்த அமைப்பைத் தகர்த்து நிலவுடைமைச் சமூகம் தோற்றுவிக்கப்பட்டது. பிரான்சில் 1789இல் வெடித்தெழுந்த கூர்மையான வர்க்கப் போராட்டத்தின் பேறாக முதலாளித்துவம் எழுச்சி பெற்றது. ருஷ்யாவில் 1917 ஒக்ரோபர் புரட்சி சோஷலிஸ அமைப்பை உலகுக்கு அறிமுகப்படுத்தியது. சோவியத் ருஷ்யாவின் செழுமையான படிப்பினைகளும் பலமான ஆதரவும் காரணமாய் மக்கள் சீனம், கியூபா, வடகொரியா, முன்னாள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகிய பின் தங்கிய சமூகங்களில் சோஷலிஸத்தைப் பரீட்சார்த்தமாய்ப் பிரயோகிக்க முடிந்தது. இத்தகைய உன்னத



அனுபவங்கள் எதிர்கால உலகின் வர்க்கப் போராட்டத்தினூடாக முழு உலகும் சோஷலிஸத்தையும், இறுதியில் பூரண பொதுவுடைமை அமைப்பை கண்டடையவும் உதவும். இத்தகைய வர்க்கப் போராட்டத் திசைமார்க்கம் ஒன்றை வெளிப்படையாக எமது சாதியச் சமூகத்தில் காணமுடியாது. இங்கு நீண்ட நெடுங்காலமாக குழப்பமான சாதி அடையாளம் காணப்படுகிறதேன்றி வர்க்கப் போராட்ட வரலாற்றைக் காண முடியவில்லை.

உண்மையில் குழப்பமான நிலை எல்லாச் சமூகங்களுக்குமுரியது தான். தெளிந்த நேர்கோட்டுத் திசை மார்க்கத்தில் எந்த ஒரு சமூக இயக்கப் போக்கும் அமைந்திருக்கவில்லை. முன்னேறிய பாய்ச்சலும், தேக்கமும், பின்னடைவும், பின்னடைந்த சமூகமொன்று புரட்சிப் பேரெழுச்சிகாணும் நாடுகளால் தாக்குறவுக்குட்படலும், முன்னேற்றமும் என மாறி மாறிச் சமூகங்கள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. முதல் அடிமைப்புரட்சி வாயிலாக புதிய சமூக அமைப்பைத் தெளிவாக வெளிக்கொண்டுவந்த கிரேக்க - ரோம் சமூகங்கள் தொடர்ந்து வர்க்கப் போராட்டத்தின் புதிய அமைப்புகளைச் சிருஷ்ட்டிப்பதில் முன்னணி வகிக்கவில்லை. இத்தாலியில் முதலாளித் துவத்தின் முதற்கூறுகள் அடையாளங் காணப்பட்ட போதிலும் முதலாளித்துவப் புரட்சியோ வீறுகொண்ட எழுச்சியோ அங்கு நடக்கவில்லை. முதலாளித்துவ வளர்ச்சியை வேகமாய் எட்டிய பிரித்தானியா உலகை ஆட்படுத்தி சூரியன் அஸ்த்தமிக்காத சாம்ராச்சியத்தை உருவாக்கிய போதிலும் முழுமைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி அங்கு வெடிக்கவில்லை. பதினேழம் நூற்றாண்டில் அங்கு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி தோற்றம் பெற்ற போதும் முழுமைப்படாமல், முடியாட்சியுடன் சமரசம் செய்து பழமைவாதத்துள் முடங்கிப் போனது. கூர்மையான வர்க்கப் போராட்டத்தினூடாக முழுமையான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியும், தொடர்ந்து சோஷலிஸப் புரட்சிக்கான கூர்மையான வர்க்கப் போராட்டங்களும் பிரான்சில் தொடர்சியாக வெடித்தன; முதல் பட்டாளி வர்க்க அரசும் சோஷலிஸப் பரீட்சார்த்தமும் 1871 புரட்சியில் மலர்ந்த பாரிஷ் கம்யூனின் சாதனையாகும். விண்ணைச்சாடிய அப்புரட்சி மூன்று மாதங்கள் பாட்டாளிவர்க்க அரசை நிலைநிறுத்திப் பின்னர் வீழ்ந்து விட்டாலும், மார்க்ஸிய முதல்வர்கள் அப்புரட் சியினதும் வீழ்ச்சியினதும் படிப்பினைகளால் கட்டியெழுப்பிய 'பட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' எனும் கோட்பாடு சோவியத் யூனியனில் முக்கால் நூற்றாண்டு சோஷலிஸத்தைப் பாதுகாக்க வழிகோலியது, சோவியத் படிப்பினைகளுடன் சீனாவின் பிரத்தியேக நிலையையும் கவனத்திலெடுத்த மாஓசேதுங் சிந்தனை 'மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்' என்ற புதிய பரிணமிப்பை அக்கோட்பாட்டுக்கு வழங்கியது. பிரான்சில் சோஷலிஸம் நீடிக்காத போதிலும், சோவியத் யூனியனில் நீண்டகால நிலைபேற்றுக்குப்பின் பின்னடைவு ஏற்பட்ட போதிலும் அப்புரட்சிகளும் அவற்றைப்

படிப்பகம்

www.padippakam.com



பாதுகாக்க அந்த மக்கள் சிந்திய ரத்தமும் படிப்பினைகளுமே ஏனைய நாடுகள் சோஷலிஸத்தைக் கட்டியெழுப்ப முன்னுதாரணமாயின; இனியும் முழு உலகும் சோஷலிஸத்தைக் கண்டடைய உதவப்போவன.

ஐரோப்பிய சமூகப் புரட்சி வரலாறுகளில் இத்தகைய குழப்பங்கள் இருப்பினும், அந்த நாடுகளில் வர்க்கங்கள் தெளிவாக வெளிப் படுகின்றன. வர்க்கப் போராட்டத்தைத் தெளிவுபடுத்த முடிகிறது. சமூக மாற்றங்களுடன் புதிய மதம், புதிய போக்குகள், புதிய கருத்தியல்கள் ஆகியவற்றை வரையறுக்கவும் இனங்காணவும் முடிகிறது. எமது சாதியச் சமூகத்தில் இவ்வாறு மாற்றங்கள் தெளிவுபடுத்தக் கூடியதாக வெளிப்படையாக இல்லாமற் பாலில் நெய்போல மறைந்து ஊடாடிவருகிறது. ஏடறியாக்காலம் முதலிருந்து வைதிக சமயங்கள் (பொதுப்படுத்திய இந்து மதம்) நிலைபெற்று நீடித்து வருகிறது; வர்ணக் கோட்பாட்டு அடிப்படையில் சாதி முறை நிலைத்து வருகிறது. புராதன பொதுவுடைமைச் சமூகத்துக்கேயுரிய இனக்குழு வழிபாட்டு முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள், பலிகள், குலக்கடவுளர்கள் ஆகியனவெல்லாம் இன்றளவும் தொடர்கின்றனவே? வர்க்க சமூகத்துக்கேயுரிய ஒரு கடவுட் கோட்பாடும் இத்தகைய புராதன பொதுவுடைமைச் சமூகத்து வழிபாட்டு முறைகளும் இணங்கியும் பிணங்கியும் நீடிக்க முடிவது எப்படி? (உண்மையில் இந்து சமயம் என்பதன் பொதுமைப்பாடும், பிரதான அம்சமும், பொதுப்பண்பும் இதுதான்; வர்க்க சமூகக் கருத்தியல் மாற்றங்களுடனான கடவுட் கோட்பாட்டையும், கோட்பாட்டு மாற்றங்களையும், புராதன பொதுவுடைமைச் சமூக வழிபாட்டு முறைகளுடன் இணக்கம் ஏற்படுத்தி வளர்ச்சியடையச் செய்தல்; புதியன புகுதலும், பழையன நிலைத்தலும், 'இந்து சமயத்தின்' ஐயாயிரம் வருட நீடிப்பின் இரகசியத்தை இந்த அம்சத்திலேயே காண முடியும்).

தமிழகத்தில் வீரயுகப் பண்பாடு வீறுடனிருந்த கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையான எல்லையில் வட இந்தியாவில் குப்தப் பேரரசு 'இந்து சமயத்தை' ஆறு தத்துவங்களாயும், ஆறு சமயங்களாயும் ஒழுங்குபடுத்திக் கொள்கிறது. அங்கே இந்த வைதிக சமயங்கள் எழுச்சியடையும் போது பௌத்த, சமணர் பின்னடைவைச் சந்தித்து தெற்கு நோக்கி வரத்தொடங்கிவிடுகிறார்கள். அங்கே வெற்றிபெற்ற வைதிக சமயப் பிராமணர்களும் தமது பௌராணிக மரபுகளுடன் தெற்கு நோக்கி வருகிறார்கள். குப்தப் பேரரசர் காலத்தில் நிலவுடைமைச் சமூக உருவாக்கம் ஏற்பட்டு, அதற்கு அமைவாக ஆறு சமயங்களிலும் அவைவயற்றுக்கேயான முழுமுதற்கடவுள்களும் இருந்தனர். ஆயினும் தமிழகத்தின் இனக்குழு வழிபாட்டு முறையுடன் இணக்கம் காணக்கூடியவாறு அந்த வளர்ச்சியடைந்த வைதிக சமயங்களுக்குள் இனக்குழுப்பண்புகளும் எஞ்சி இணைந்திருந்தன. ஏறத்தாழ முந்நூறு வருடங்கள் பௌத்த - சமணத்தால் வெற்றி கொள்ளப்பட்ட தமிழகத்தை, இந்த எஞ்சியிருக்கும் இனக்குழுப்பண்



புகளே மாற்றிப்புனைந்து வைதிக சமயங்களால் வெற்றிபெறச் செய்ய வகைசெய்து தந்தது என்பதைக் காணமுடியும்.

வர்க்க மாற்றத்துடன் இனக்குழுப்பண்பு தகர்க்கப்படாமல் வைதிக சமயங்களில் ஒட்டிப்பிறந்த குழந்தையாகத் தொடரமுடிவது எப்படி? அந்த இனக்குழுப்பண்பின் தொன்மங்களை பௌராணிக மரபுகளாய்த் திரட்டி, ஏனைய இனக்குழுக்களின் தொன்மங்களுடன் இணைத்துப் புதிய புராணங்களைப் படைத்து, தொடர்ந்து வர்க்க சமூக மாற்றங்களில் அந்த நம்பிக்கைகள் தளராமல் தொடர வகை செய்யும் சக்தி எது? இவற்றுக்கான பதிலை இந்து சமய ஊற்றுக்கண்ணைக் கண்டடைவதனூடாகவே பெறமுடியும்.

பொதுவாக வைதிக சமயத்தின் ஊற்றுக்களாக ஆரியர்களின் வேதக்கோட்பாடும், வடஇந்தியத் திராவிடர்களின் சிந்துவெளிக் கோட்பாடுமென இரண்டு மட்டுமே சொல்லப்படுவன. மூன்றாவது ஒன்றுண்டு, மேற்குறித்த இரண்டினதும் சங்கமத்தையடுத்து புதிதாக வெற்றி கொள்ளப்படும், அல்லது அறிமுகமாகும் புதிய இனக்குழுக் களின் வழிபாட்டம்சங்களும் தொன்மங்களும் உள்வாங்கப்பட்டு மூன்றாவது தனிக்கூறாக அடையாளப்படுத்தத்தக்க பங்களிப்பு நிராகரிக்கப்பட முடியாததாகும். இந்த மூன்றாவது கூறு புதிய தத்துவ வளர்ச்சியை வழங்கியதுடன், ஒரு வகையில் குப்தப் பேரரசர் காலத்தில் வைதிகநெறி மறுமலர்ச்சி கண்டு வெற்றிகொள்ளக் காரணமாயிருந் ததையும் மறுதலிக்க முடியாது. பகவத்கீதையும், பக்திக்கோட்பாடும் இந்த மூன்றாவது கூறின் பங்களிப்பே. உண்மையில் இந்த மூன்று ஊற்று மூலங்களால் புதுவகையாக கட்டமைக்கப்பட்ட குப்தர்கால உருவாக்கமே இந்து சமயம். முந்திய வைதிக நெறி அதை நோக்கிய முன்னோட்டம் மட்டுமே. (இது தொடர்பான ஆழமான ஆய்வு இங்கு அவசியமில்லை; 'பக்தி' பற்றிய அம்சத்தை மட்டும் தொடரலாம்)

வைதிக சமயம் தமிழகத்தை ஆட்படுத்தி வெற்றி கொள்ளவில்லை; நிலவுடைமை எழுச்சிக்கு உதவும் கருத்தியலாக இருந்து, வெற்றிபெற்ற நிலவுடைமை வர்க்க ஆட்சியாளர்களால் அங்கீகரிக்கப்பட்டுத் தருவிக்கப்பட்டது வைதிக சமயம். வட இந்தியாவில் வளர்ச்சியடைந்த வைதிக சமயத்துக்கு புதிய இனக்குழுவினால் வழங்கப்பட்ட 'பக்தி' எனும் கோட்பாட்டை[28] தமிழகம் கையேற்றுப் பக்திப்பேரியக்கமாக விருத்தியுறச் செய்தது. இந்த மாற்றத்தைத் தொடர்ந்து அடுத்த ஆயிரம் வருடங்களுக்கு மேலான, வேகமிக்க வளர்ச்சியை வைதிக சமயத்துக்கு தென்னிந்தியாவே வழங்கிவந்தது. அதன் ஒரு உயர் வடிவம் சைவசித்தாந்தம்.

இப்போது எழும் ஒரு கேள்வி: இனக்குழு வாழ்முறையைத் தகர்த்துவிடாமல் இணைப்புக்கு ஏற்ற அளவுடன் மாற்றிக் கொண்டு, இணங்கி அரவணைத்துச் செல்லக்கூடிய பண்பு வைதிக சமயத்துக்கு எவ்வாறு வாய்த்தது?

படிப்பகம்

www.padippakam.com



ஆரியர்கள் இந்தியாவினுள் பிரவேசித்த போது இனக்குழு வாழ் முறையையே கொண்டிருந்தனர்.[29] தமக்குள் பிராமணர், சத்திரியர், வைசியர் எனத் தொழில் அடிப்படையில் வர்ணப்பிரிவை ஏற்படுத்திய போதிலும் புராதன பொதுவுடைமைத்தன்மைக்கேற்ப இது நெகிழ்வுத் தன்மையுடையது. ஒருவர் தாம் விரும்பிய வர்ணப்பிரிவைப் பின்பற்றவும், சலித்துவிட்டால் மாற்றி இன்னொரு வர்ணக்கடமையை மேற்கொள்ளவும் தடையிருக்கவில்லை. ஒரே குடும்பத்தில் மாறுபட்ட வர்ணப்பிரிவுகளில் ஒவ்வொருவர் செல்லவும் அனுமதியிருந்தது. ஆரியர்கள் சிந்துவெளியினரை வென்றடக்கிய போதிலும் அந்த விவசாயப் பெருநிலப்பரப்பில் தமது கால்நடைகளுக்கான புல்வெளி இல்லாமையால் கங்கைச் சமவெளியை நாடிச் சென்றனர்.

சிந்துவெளியினருடன் உடன்பாடுகொள்ள முடியாத கடும் வேறுபாடுகள் ஆரியர்களுக்கு இருந்தன. சிந்துவெளிப்பண்பாட்டினர் விவசாய வாழ்முறைக்கு மாறி வர்க்க பேதம் அடைந்துவிட்டனர் (இந்த வர்க்க பேதத்தை சாதி என மயங்குதலுண்டு; இது சாதியல்ல) இந்த இரு வாழ்முறைகளின் பாரிய வேறுபாடு இனக்குழு மரபு வேறுபாட்டை விட ஆழமானது. புராதன பொதுவுடைமை அமைப்புக்கேயுரிய ஆரியர்களின் இனக்குழுக் குல வாழ்முறை சார்ந்த பொதுமைச் சிந்தனையும், வர்க்கபேதத்தை நியாயப்படுத்தும் சிந்துவெளிப் பண்பாட்டின் சிந்தனை முறையும் இணக்கம் காண முடியாதன வாயிருந்தன. இரு தரப்பினர்க்குமிடையேயான பண்பாட்டு மோதல் தவிர்க்கவியலாததாயிருந்தது. ஆயினும்,நிலையான வாழிடத்தை ஏற்படுத்தித் தாமே விவசாய வாழ்முறைக்கு மாறி, வர்க்கப்பிளவைக் கண்ட நிலையில், சிந்துவெளிப்பண்பாட்டை உள்வாங்கும் படி ஆரியர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதே வேளை தமது அடையாளங் களை முற்றாக இழந்துவிட விரும்பாமல், வேதச் சுலோகங்களை சிந்துச்சமவெளியினர் கோயிலின் விக்கிரகத்தின் முன் ஓத அதிகாரம் பெற்றது போன்றே தமது இனக்குழுக்குலப்பண்பாட்டு அடையாளங் களைத் தொடரும் வழிமுறையையும் ஏற்படுத்திக் கொண்டனர். புஜபலத்தால் வெற்றியைப் பெற்றுவிட்டவர்கள் பின்தங்கிய தமது பண்பாட்டு அடையாளத்தை நீடிக்கப் பெற்றுக் கொண்ட அந்த அதிகாரம் இன்றுவரை எமது பண்பாட்டில் தொடர வலுவான காரணமாயிற்று. இந்தக்கலப்பின் போது, சிந்துசமவெளிப்பண் பாட்டின் வர்க்கக் கருத்தியலும் ஆரியப் பிராமணரது வர்ணக் கோட்பாடும் கலப்படைந்து நெகிழ்வுத் தன்மையற்ற இறுகிய சாதியக் கருத்தியல் தோற்றம்பெற்றது. இது இனக்குழுக்களை சாதிகளாக அடையாளப் படுத்திக் கொண்டது; இனக்குழு உறுப்பினர் என்பது மாற்றப்பட முடியாதது என்ற வகையில், முன்னர் வர்ணம் மாறக்கூடியதாக இருந்ததைப் போல இனி சாதி மாறக்கூடியதல்ல. இந்த இனக்குழு அடையாளம் தொடரும் சமூக மாற்றங்களால் எல்லாம் அதிர்வுக்குள்ளாகாமல் பல நூறு வருடங்களாய் 'சாதி' என்று



தொடர்வதாயிற்று. வரலாற்று வளர்ச்சியில் ஆழ்ந்து ஆராயும் போது நிலவுடைமைச் சமூக அமைப்பு மாற்றமும், தேசிய இயக்கத்தில் முதலாளித்துவ எழுச்சியும் ஏற்படுவதைக் காண்கிறோம். முதலாளித்துவ மாற்றியமைத்தலால் சாதி கடந்த ஜனநாயகக் கலப்பு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. ஆயினும் முதலாளித்துவ மாற்றம் ஏற்பட ஏற்பட சாதிய இறுக்கம் தளர்வடைவதற்குப் பதில் வலுவடைவதையே காணமுடிகிறது. புதியன புகுந்த போதும் பழையன நிலைப்பது எனும் நிலை தொடர்வதன் காரணம் என்ன?

இனக்குழு முறைமை தகர்க்கப்பட்டு வர்க்கங்களாக்கப் படாமையினால் 'யாவரும் கேளிர்' ஆக முடியாமல் வெவ்வேறு படிநிலைகளில் அடுக்கப்பட்ட சாதிகளாய்விட்டன. இனக்குழுப் பண்பின் பொதுஇயல்பான இரத்தக் கலப்புக்கு வகைசெய்யும் கணம் மாறி மணம் புரிதல் (புறமணம்) தடுக்கப்பட்டு அகமணமுறை மூலமாக இரத்த உறவுப் புனிதம் போற்றப்பட்டு சாதியாக வடிவமைக்கப்பட்டது. இனக்குழு சடங்குமுறைகள் நீடிப்பதற்கு இது உதவியாய் உள்ளது. கீழ்மட்ட சாதிகளிடையே இந்த இனக்குழு அடையாளம் முழு அளவில் காணப்படும். மேலே உயர்கையில் வர்க்க சமூக மாற்றத்தின் காரணமான கருத்தியல் மாற்றங்கள் இனக்குழுத் தன்மையில் சில அடையாளங்களை மறைத்து ஒரு கடவுட் கோட்பாடு நோக்கி வளர்த்துச் செல்லும். உயர்நிலைக் கடவுளின் 'புனிதம்' குலத் தெய்வங்களிடமோ, கீழ்மட்டமக்களுடைய கிராமியத் தெய்வங் களிடமோ காணப்படமாட்டாது. குலக்கடவுள்,கிராமியத் தெய்வங்கள் ஆகியோர் வழிபடும் மக்கள் உண்ணும் இறைச்சி, மீன், முட்டை வகையறாக்களையும், குடிக்கும் கள், சாராயத்தையும் படையலாகப் பெறுவதில் மகிழ்பவர்.

ஆக இனக்குழு முறை நீடிப்பு மறுக்கப்பட முடியாதவொன்று. இந்தியச் சமூகத்தில் இனக்குழு முறைமையின் கேடான அம்சங்களின் நீடிப்பே சாதி என கார்ல் மார்க்ஸ் குறிப்பிடுவார்.[30] வைதிக சமயச் சடங்காசாரங்களிலும் பண்பாட்டிலும் இனக்குழு முறைமையின் நீடிப்பையும், சாதியமைப்பில் அதன் அடையாளத்தையும் சட்டோபாத்யாய இனங்காட்டியுள்ளார்.[31] இனக்குழு முறைமையின் நீடிப்பே சாதி என்பதைப் புதிய ஆய்வுகள் வலுவாக எடுத்தியம் புகின்றன.[32] இனக்குழு முறைமையிலிருந்து சாதிக்கான மாற்றத்தின் பொருளியல் அடிப்படையை கெய்ல் ஓம்வெட் காட்டியுள்ளார்.[33]

அந்த வகையில், ஏற்கனவே தகர்க்கப்பட்டிருக்க வேண்டிய இனக்குழு முறைமையை அடிப்படையாக உடைய சாதியம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் (அது சாத்தியமாக்கப்படாததன் ஒரு வெளிப்பாடே 'புதியன புகுதலும் பழையன நிலைத்தலும்' எனும் முரண் இயற்கை காணப்படுதலாகும்). இது சாதிய நோக்கில் சாத்தியமற்றது. சாதிய (தலித்திய) அடிப்படையில் போராடுதல் சாதிகளிடையே குரோதத்தை வளர்த்து சாதியம் இன்னமும்

படிப்பகம்

www.padippakam.com



இறுக்கமடையவே உதவும். நிலவுடைமைச் சமூக அமைப்பு சாதிகளையே வர்க்கங்களாகவும் கட்டமைத்துக் கொண்டு உச்சப் பயனைப் பெற்றது. இதனால் பல ஆய்வாளர்கள் நிலவுடைமைச் சமூகத்தின் உற்பத்தி உறவுசார்ந்த அமைப்புத்தான் சாதி எனவும், நிலவுடைமை முறை பூரணமாய்த் தகர்ந்தால் சாதி ஒழியும் எனவும் நம்பியிருந்தார்கள். உண்மையில் ஆரியர் வருகையின் பின் கலப்புற்ற புதிய சமூகத்தில் வர்க்க மாற்றம் சாதியை எற்படுத்தியது. இங்கே கருத்தியல், பொருளுற்பத்தி உறவு ஆகிய இரு அம்சங்களும் முன் நிபந்தனைகளாக உள்ளன. அந்தவகையில் அடித்தளம், மேற்கட்டு மானம் ஆகிய இரு தளங்களிலும் சாதி இருப்பு தங்கியுள்ளது. வர்க்கத் தோற்றத்துடன் தொடங்கிய சாதிமுறை இறுதியில் வர்க்கங்கள் ஒழிந்து போவதுடனேயே அழியும். சாதியக் கருத்தியல் வர்க்கத் தோற்றத்துடன் இருந்த அதே வடிவில் தொடரவில்லை.

நிலவுடைமைச் சமூகத்தில் சாதியக் கருத்தியல் புதிய வடிவத்தைப் பெற்றது (அதுமட்டுமே சாதியக்கருத்தியல் என்ற மயக்கம் உண்டு). அப்போது தீண்டாமைக் கோட்பாடு அந்த நிலவுடைமைச் சாதியக் கருத்தியலின் மையமாக விளங்கியது. முதலாளித்துவ மாற்றியமைத் தலின் போது தீண்டாமையை ஓரளவில் தகர்க்க முடிந்துள்ளது. ஆயினும் சாதியம் இரத்தப் புனிதம் பேணும் கருத்தியலைப் புதிய சமூக நியதிக்கு அமைவாகத் தொடர்வதை அவதானிக்கலாம்.

இன்று, நிலவுடைமைச் சமூக அமைப்பை போல் சாதிகளே முழுமையாய் வர்க்கங்களாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கில்லை. பஞ்சமர்கள் முழுமையும் உடைமை மறுக்கப்பட்ட பண்ணையடிமைகள் என்பது போல இன்றில்லை. கூலித்தொழிலாளர் களாயும், அடிநிலை உடலுழைப்பாளர்களாயும், மோசமான கூலிவிவசாயிகளாயும் மிகப் பெரும்பான்மையாய் பஞ்சமர்களே (தலித்களே) உள்ளனர். அதே வேளை படித்து முன்னேறி மத்திய தரவர்க்கத்தினராயும், சிறிய அளவில் முதலாளிகளாகவும் பஞ்சமர் மத்தியலிருந்து சிறிய அளவிலான அசைவியக்கம் ஏற்பட்டுள்ளது. இன்று பெருகிவரும் சாதிச்சங்கங்கள் இத்தகைய முன்னேறிய பிரிவினரின் நலன்களை வென்றெடுக்கப்பயன்படுவனவே. அடிநிலை உழைக்கும் மக்கள் ஒன்று படுவதை மிகமோசமாய்ச் சாதிச்சங்கங்கள் பாதிப்பதனால் மிகப் பெரும்பாலான மக்களுக்கு சாதிச்சங்கங்கள் தீங்கிழைப்பனவாகின்றன.

அடிநிலை மக்களின் நலன்களை வென்றெடுக்கவும், சாதியத்தைத் தகர்க்கவும் அனைத்துச் சாதியினர் மத்தியிலுமிருந்து அடிநிலை உழைக்கும் மக்களும் ஜனநாயக சக்திகளும் ஐக்கியப்படுத்தப்பட வேண்டும்; பல முனைப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மைய சக்தியாக பஞ்சமர்களே (தலித்களே) விளங்குவர். அது சாதிய அடிப்படையிலன்றி, பாட்டாளிவர்க்கத் தலைமை என்கிற ரீதியில் வர்க்கப்பார்வையில் உருவாக்கப்படுகின்ற



வெகுஜன அமைப்பாக இருக்கும். அதற்கு பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பிரிவினரின் அமைப்பான பாட்டாளிவர்க்கக் கட்சி தலைமைதாங்கும்; மார்க்ஸிய - லெனினிஸம் தத்துவார்த்த நெறியாய் விளங்கும். வெகுஜனப்புரட்சியூடாக புதிய சமூக அமைப்பு (சோஷலிஸம்) கட்டியெழுப்பப்பட்டுத் தொடர்ந்தும் பாட்டாளி வர்க்கத் தலைமையில் வர்க்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுப் பூரண பொதுவுடைமைச் சமூகம் கண்டடையப்படும். இதன் போதெல்லாம் இனக்குழு முறையின் எச்சங்களைத் துடைத்தழிக்கும் பண்பாட்டுப் பேரியக்கங்கள் முன்னெடுக்கப்பட்டு சாதிய முறைக்கு எதிரான மரண அடி கொடுக்கப்படும். எல்லோரும் ஓரினம் என உணரப்படும் பொதுவுடைமைச் சமூகத்திலேயே சாதியம் முழுமை யாகப் புறங்காணும். அதுவரை புரட்சிகர சக்திகள் சாதியத்துக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்பர்.

# IV

## பஞ்சமர் இலக்கியத்தில் பெண்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏகாதிபத்திய நுகத்தடியைத் தூக்கியெறியும் போது "பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே, வெள்ளைப் பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே" எனக்கூறமுடியுமெனப் பள்ளுப்பாடிய பாரதியின் கனவு இன்னமும் பலிக்கவில்லை. பிரித்தானியரிடமிருந்து ஆட்சி சுதேசிகளிடம் மாறிய போது வெள்ளைத் துரைகளுக்குப் பதிலாகக் கறுத்தத்துரைமார் ஆட்சிபீடமேறினர். அதன் விளைவாக இன்று, உலகமயம் எனும் பேரில் அமெரிக்க எசமானர்களைத் துரையென மண்டியிடுவதும் பார்ப்பானை ஐயரென்பதும் நீடிக்கிறது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம் முழுநிறைவடைய வேண்டுமெனின் சாதியத்தைத் தகர்க்கும் இலட்சியமும் இணைக்கப்பட வேண்டும் என்கிற புரிதலில் பாரதி அவ்வாறு பள்ளுப் பாடினார். "விடுதலை" கவிதையில் உண்மையான விடுதலையில் அடங்கியிருக்க வேண்டிய மூன்று அம்சங்களை பாரதி சுட்டிக்காட்டியுள்ளார். அவை : 1. பொருளாதார விடுதலை. 2. சாதிவிடுதலை. 3. பெண்விடுதலை.

பாரதி காலத்தில் பாட்டாளிவர்க்க இயக்கம் சாத்தியப்படவில்லை. பாரதிக்குப்பின் எழுச்சிபெற்ற பாட்டாளிவர்க்கத் தலைமையொன்றே இந்த மூன்று அம்ச விடுதலையையும் முதன்மைப்படுத்தி இயங்கியது. பாரதியை முன்னிறுத்தி ஐம்பதுகளில் இலங்கையில் வீறுகொண்டெழுந்த தேசிய இலக்கிய இயக்கம் மார்க்ஸிய சித்தாந்தத்தால் ஆயுதபாணியாக்கப்பட்டிருந்தது. வர்க்கங்களை ஒழிக்கும் இலட்சியத்துடன் விடுதலைப் போருக்கான இலக்கியமாக தேசிய இலக்கியம் இருந்தது. இதன் செயல் திறன் தீண்டாமை ஒழிப்புப்

படிப்பகம்

www.padippakam.com



போராட்டமாக வளர்ந்து பஞ்சமர் இலக்கியத்துக்கான கதவுகளைத் திறந்துவிட்டது. வர்க்கங்கள் வரலாற்றரங்கில் இல்லாதொழியும் போது சாதியும் இல்லாமற்போகும் என்ற புரிதலுடன் படைக்கப்பட்ட பஞ்சமர் இலக்கியத்தில் பெண் விடுதலைக்கு அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளதா?

“பஞ்சகோணங்கள்” நாவலின் மதிப்புரையில் அ.மார்க்ஸ் கூறுகிறார், “சாதியை மட்டும் உள்ளடக்கிவிட்டால் போதுமா? தந்தைவழிச் சமூக ஆணாதிக்க மதிப்பீடுகளைத் துடைத்தெறிய வேண்டாமா? நிச்சயமாக, அந்தப்புரிதல் டானியலுக்கு இருந்ததா? நிச்சயமாக இல்லை. பெண்ணிய நோக்கில் மட்டுமல்ல, கதையின் முடிவு, மொழிநடை என விவாதிக்க எத்தனையோ அம்சங்கள் இந்நாவலுக்குள் உண்டு”[34]

கதை முடிவு, கதைச் சுவாரசியப் புனைவுகள் ஆகியன தொடர்பான விவாதம் கட்சியமைப்பு முதல் சிவசேகரம் வரை பலரால் முன்வைக்கப்பட்டமை குறித்து மேலே காட்டப்பட்டது. அவை டானியலில் நேரடி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆயினும் அத்தகைய கடும் விமர்சனங்கள் தொடர்ந்து அவர் எழுதிய முறையை மாற்ற உதவின; அவரது இறுதி நாவல்களான கானல், பஞ்சகோணங்கள் ஆகிய இரு நாவல்களில் அத்தகைய தவறுகள் இல்லையெனக் கூறும் படியாகக் குறைந்துள்ளன. அவருடைய அனைத்துப் படைப்புகளும் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியன. இங்கு அதற்கான சாத்தியமில்லை. இங்கே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை, பெண்ணிய நோக்கில் கூறப்படுகின்ற, பெண்தொடர்பாய் தந்தைவழிச் சமூக ஆணாதிக்க மதிப்பீடுகள் டானியலின் படைப்புகளில் தலைதூக்கு கின்றது என்றவிடயமாகும். தந்தை வழிச் சமூகம் பேணி வளர்த்த சாதியத்தைத் தகர்க்க முனைந்த ஒரு போராளி அதன் உடன்விளைவான பெண் விடுதலையை இணைத்துப் பார்க்கவில்லையா?

டானியலின் படைப்புகள் சார்ந்து மட்டுமன்றி, என்.கே.ரகுநாதன் போன்ற சாதி விடுதலைப் படைப்புகளை நல்கிய படைப்பாளி களிடமும் இந்தக் கேள்வி எழுப்பப்பட வேண்டிய நிலை உள்ளது. “வெறி” எனும் சிறுகதையில் காமவெறியில் வந்தவனிடம் பாலியல் தொழில் புரியும் பெண், அவனுடைய சாதியை அறிய முனைந்த போது எழும் மனக்கொந்தளிப்பை என்.கே.ரகுநாதன் சித்திரிக்கிறார். முன்னதாகக் காமவெறி உந்த ‘விபச்சாரியை’ நாடி ஓடுவதைக் கூறுகையில் “உன் போன்றவர்களுக்காகத்தானே தன் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறாள். அதற்காகத்தானே அவள் வாழ்கிறாள்” என ஆசிரியர் கூற்றாய் வரிகளுண்டு. அவள் சாதி அறிய முனைந்ததை (இது அவளது பாலியல் தொழிலின் ஏனைய வாடிக்கையாளர்கள் சார்பாகவும் இருக்கலாம்), அவள் சாதிவெறிபிடித்தவள் என்பதாகக் கற்பிதம் செய்து கொதித்தெழுந்து இவ்வாறு பேசுவான்: “நீ வேசை! காசுக்கு மானத்தை விற்பவள், உனக்குப் பணம் வேண்டும். சாதியல்லடி,



யார் யார் உன் காலடியில் காசைக் கொட்டுகிறானோ, அவனை நீ மகிழ்விக்க வேண்டும். அவன் உன்னை என்னவும் செய்யலாம். உனக்குக் காசு அவனுக்கு உன் உடல். ஏனடி? சாதியா கேட்டாய்? நான் மனித சாதி! மனிதனடி மனிதன். வெறி பிடித்த மனிதன்.” இது பாத்திரத்தின் கூற்று. அதே பத்திரம் “யாரடி, நானா எளிய சாதி? வேசையாடிற நீதான்டி எளியவள். மானங்கெட்டவள்” என்றும் பேசும்.

சாதி கேட்டுக் குரூரப்படுத்தப்பட்ட மனதின் கொதிப்பு இது. தன்னைப் போலவே அவளும் பாதிக்கப்பட்டவள் என்று நிதானிக்க முடியவில்லை. தன் உடல் பேண அவளுக்குரிய உரிமையை மறுத்து காசு தருபவன் அவள் உடலை என்னவும் பண்ணலாம் எனக்கூறவைக்கும் குரூரம். முன்னதாக எல்லோர்க்கும் சுகந்தரத் தன்னை அர்ப்பணித்திருக்கிறாள் எனக்கூறப்படுவதும் இரக்கம் சார்ந்ததல்ல. அவள் உடலில் அவளுக்கிருக்கும் உரிமையை மறுதலிக்கும் பிந்திய விவாதத்துக்காகத்தான்.

இந்த மோதலின் உச்சத்தில் அவள் குரூரமாகக் கொல்லப்படுவதை ஆசிரியர் கூற்றாகச் சித்திரிப்பது இப்படி: “படீரென்று அவள் தலை சுவரில் பட்டு மோதியது. மண்டை பிளந்து குபு குபுவென இரத்தம் சீறிப்பாய்ந்தது. மீண்டும் மீண்டும் அவள் தலையைச் சுவரில் அறைந்தான். இரத்த வெள்ளம் அவள் உடலைக் குளிப்பாட்டியது. அவன் வெறி அடங்கவில்லை. மேலும் அந்த உடலைச் சுவரிலே மோதுமோதென்று மோதினான். அவனுக்குக் காமவெறி, அவளுக்குச் சாதிவெறி, இரண்டும் போராடின. அவன் காமவெறி மனிதவெறியாக உருவெடுத்தது. சாதிவெறியைத் தோற்கடித்தது. சாதிவெறி பிடித்த அந்த வேசியைச் சித்திரவதை செய்து உயிரைப் பலி கொண்டு தணிந்தது.”[35]

உண்மையில் இங்கு ஆசிரியரிடம் வெறி ஏறிவருவதை அவதானிக்கலாம். அவளிடம் சாதி வெறி இருப்பதாகக் கண்டு அதற்கு எதிராக ஒடுக்கப்பட்டவரிடம் எழத்தக்க போர்க்குணத்தை மீறி சாதி வக்கிரமே வெளிப்படுகிறது. சாதிய ஒடுக்குமுறைக்குக் காரணமான அதே சுரண்டற் சமூகக் கொடூரம் அவளையும் ஒடுக்குகிறது. சாதி சொல்வதில் எழும் அவலத்துக்குச் சற்றும் குறைந்ததல்ல ‘வேசி’ என்ற ஏச்சு. இவ்வாறு வேசி எனப் பேசுவது கதாபாத்திரமல்ல, ஆசிரியரே சொல்வது என்பது பிரச்சனையை வர்க்கப் பார்வையில் அணுகாமல் சாதியவக்கிரத்துக்கு மனம் இடங்கொடுப்பதையே காட்டுகிறது. ஆணாதிக்கச் சதிக்குப் பலியான ஒரு பாலியல் தொழிற்பெண்ணை ‘ஆசிரியர்’ இவ்வளவு கொடூரமாகக் கொலை செய்திருக்க வேண்டியதில்லை.

இதே போன்றுதான் வெள்ளாளரின் சாதித் திமிரைக் கண்டு குமுறும் டானியல், சாதித் திமிர்பிடித்த வெள்ளாளப் பாத்திரங்கள் தாழ்த்தப்பட்டவர்களுடன் சோரம் போனதால் பிறந்தவர்கள் எனக்காட்டிச் சாந்தமடைவதும் உள்ளது. கதைப்போக்கில் சாதியத்துக்கு எதிரான போர்க்குணத்தை வெளிப்படுத்துவதை விடுத்து

படிப்பகம்

www.padippakam.com



கதைசொல்லிகள் தமது மனக்கிலேசங்களுக்கு வடிகால் தேடிக்கொள்கிறார்கள். அதற்குப் பெண்கள் பலியாக்கப்படுகிறார்கள். சாதி வக்கிரத்துக்கு இடங்கொடாமல் வர்க்கப்பார்வையில் டானியல் அணுகியிருப்பாராயின் இருமரபும் துய்யவந்த வெள்ளாளக் கனவான்களிடம் சாதித் திமிர் வெளிப்படுமாறினைக் காட்டி, அதற்கெதிரான மக்கள் எழுச்சிகளையும் காட்டியிருக்க முடியும். அவசியமில்லாமல் இலக்கியத்தில் மாதர்தம்மை இழிவு செய்யும் தவறைத் தவிர்த்திருக்க முடியும்.

யதார்த்தத்தில் இவ்வாறு ஒன்றுமே நடக்கவில்லையென்பதில்லை. பாட்டாளி வர்க்க நோக்கில் கதைத் தேர்வை மேற்கொள்ளும் போது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சோரம் போதல் வருகிற அவலத்தைத் தவிர்த்திருக்க முடியும். நாடகப்பாணியில் கதைப்பின்னலை சுவாரசியப்படுத்த இதனை வலிந்து கொண்டு வராதிருந்திருக்கலாம். இவை நாவல் வடிவத்தை மிகவும் பலவீனப்படுத்தி சினிமாப்பாணிக் கதையாக ஆக்கிய சந்தர்ப்பங்களை மறுதலிக்க முடியாது (இந்த ஒரு அம்சத்தை வைத்து பஞ்சமர் இலக்கியத்தின் வீறினை நிராகரிப்பதில் உடன்பட முடியாது. அவை முற்றாக நாவல் வடிவத்துக்கு உரியன அல்ல என்ற புலமைப்பித்தும் ஏற்புடையதல்ல).

இங்கு இன்னுமொரு விடயம் கவனிப்புக்குரியது. உயர்சாதிப் பெண்கள் மீதான இத்தனை கடுமையான ஆத்திரத்தை சாதி வக்கிரம் எனக்கூறி முற்றாகப் புறந்தள்ளிவிட முடியாது. பொதுவாக யாழ்ப் பாணக் கிராமிய வழக்காறில், கோயிலுக்கு வெளியே நிறுத்தப்பட் டிருக்கும் மக்களிடம் அக்காலத்தில் ஒரு வசனம்பிரசித்தம். "நளம், பள்ளுக்குப் பிறந்ததுகள் எல்லாம் கோயிலுள்ளை போவிட்டினம். வெள்ளாளருக்குப் பிறந்தனாங்கள் வெளியிலை நிக்கிறோம்" என்பதே அக்கூற்று. இது முற்றிலும் பொய் என்பதற்குமில்லை; நூற்றுக்கு நூறு அப்படித்தான் என்றுமில்லை. இதை அப்படியே படைப்பாக்கத் துக்குரிய அடிப்படை எடுகோளாகக் கொள்ளும்போது மார்க்ஸிய உலக நோக்கிலிருந்து விலகிவிட நேர்கிறது.

உயர்சாதிப் பெண்கள் மீது ஆத்திரம் பொங்கக் காரணம் என்ன? ஒடுக்கப்பட்ட சமூகத்தின் ஆண்கள் உயர்சாதியைச் சேர்ந்த பெண்களால் ஒடுக்கப்படுவதும் அவமானத்துக்குள்ளாக்கப்படுவதும் சர்வசாதாரணமானதாகும். இது ஆணாதிக்க சமூகம் என்பது சரி. அத்தகைய ஒரு சமூகத்தில் பெண்ணால் ஒரு ஆண் (எளிய சாதியினன் என்பதாக) அவமதிக்கப்படுவது எத்தனை குரூரமாக உணரப்படும்? அந்த ஆத்திர உணர்வை பஞ்சமர் இலக்கிய கர்த்தாக்கள் வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களையே இங்கு பார்ப்போம்; இவ்வாறு ஆத்திரத்தை வெளிப்படுத்துவது மார்க்ஸிய இலக்கிய நோக்குக்கு அடங்காதது என்பதை நிதானித்துச் சிந்திக்கும் போது அவர்களும் ஏற்கவே செய்வார்கள். "ஆணாதிக்கம், பெண்மீதான ஒடுக்குதல் ஆகியனவற்றில் ஒரு சாதிய வரிசை நிலவியது. ஒட்டுமொத்தமான



ஆணாதிக்கம், ஒட்டுமொத்தமான சாதியம் என்று நிலவுகிற தளங்களில் உயர் சாதிப் பெண் தம்மைவிட சாதியப்படி நிலையில் தாழ்ந்த சாதி ஆணைவிட உயர்வாகவே கருதிக் கொள்ளும் விதத்தில் அவளிடத்தில் சாதியப் பெருமித உணர்ச்சி உள்ளது"[36] என "சாதியம்" குறித்த தனது ஆய்வில் கோ.கேசவன் வலியுறுத்துவார்.

பெண் மீதான ஒடுக்குமுறை ஒரே சாதி மட்டத்தில் அவதானிக்கும் போது சாதியப் படிநிலைக்கு ஏற்ப மாறுபடுவதைக் காணலாம். உயர் சமூகத்தில் அதிகமாயும், இடைப்பட்ட கைவினைச் சாதிகளில் ஒப்பீட்டளவில் குறைவாகவும் காணப்படுகிறது. கீழ்நோக்கி வருகையில் பெண்களுக்கு உற்பத்தியில் பங்கெடுக்கும் அளவு அதிகரித்து வருவதால் ஒடுக்குமுறையின் அளவு குறைவடைந்துவருகிறது எனலாம்.[37] இந்த அம்சம் பஞ்சமர் இலக்கியங்களில் முழுமையாக வெளிப்படாத போதிலும், ஒடுக்கப்பட்ட மக்களிடையே பெண்களும் ஆண்களுடன் சமதையாகப் பொதுவிடயங்களில் அக்கறை காட்டுவதாகச் சித்திரிக்கப்படுவதை அவதானிக்க முடியும். சாதியத்துக்கு எதிரான போராட்டங்களில் ஒடுக்கப்பட்ட பெண்கள் முன்னிலை வகித்துப்போராடுவதைப் படைப்புகள் காட்டியுள்ளன.

டானியலின் 'கானல்' மீதான விமர்சனங்களில் தமிழவனிடமும் ராஜ் கௌதமனிடமும் ஒரு பொதுவான விஷயத்தில் ஒத்த தன்மை இருந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதாரக் கோரிக்கைகள் சார்ந்த போராட்டங்களை டானியல் காட்டாமல், பெண்கள் மேற்சட்டை போடுவது, ஆண்கள் சால்வை போடுவது, காலணி அணிவது, வாகனங்களைச் சொந்தமாக்கிக் கொள்வது போன்ற உரிமைப் போராட்டங்களையே காட்டுகிறார் என்பதுதான் அந்த விமரிசனம். யாழ்ப்பாணத்தின் சாதியப் போராட்டத்தில் இது பிரதான அம்சமாக இருந்தது என்பதாலேயே 'கானல்' அதனை முதன்மைப்படுத் துகிறதெனலாம். சுடலையில் சமத்துவம் கோரியபோதும் நடையுடை பாவனைகளில் சமத்துவம் பேண முற்பட்டபோதும் தடுத்து அழிக்க முனைந்த தாக்குதல்களை சாதிவெறியர்கள் முடுக்கிவிட்ட போது அதற்கு எதிராகப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இருந்தது. வெவ்வேறு வாய்ப்புகளினூடாகப் பொருளாதார முன்னேற்றங்கண்டவர்கள் கலாசார சமத்துவம் கோரிப் போராடியதை சாதிமான்களால் சகிக்க முடியவில்லை. அந்தச் சகிப்பின்மை வெறும் கலாசாரப் பிரச்சனையல்ல. இந்த உரிமை அனுமதிக்கப்பட்டால் பின்னர் நிலத்துடன் பிணைக்கப்பட்ட மக்களும் பொருளாதார உயர்ச்சிக்காகவும் ஏனைய உரிமைகளுக்காகவும் போராடத் தொடங்கிவிடுவார்கள் என்பதையும் உத்தேசித்தே கலாசார உரிமை மறுப்பில் கொடிய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். ஆரம்பகாலப் போராட்டங்களில் இத்தகைய கலாசார சமத்துவமே முனைப்பாக இருந்தமையால் படைப்புகளிலும் அவை முதன்மை பெற்றன. இறுதிப்படைப்பாகிய 'பஞ்சகோணங்கள்' நாவலில் பெருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டங்கள் காட்டப்பட் டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



ஒடுக்கப்பட்ட பெண்கள் மீது பாலியல் வல்லுறவைத் தமது உரிமைபோலவே கொண்டாடிய சாதி வெறியர்கள் அந்தப் பெண்கள் நாகரிகமாய் உடுத்திக் கொள்வதை மட்டும் பொறுக்க முடியாதவர்களாய் இருந்தனர். மார்புக்குமேலே குறுக்குக் கட்டுடன் இருக்க நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்கள் மேற்சட்டை அணிய முயன்ற போது கொக்கத்தடி சத்தகம் கொண்டு சட்டை கிழிக்கப்பட்ட கொடூரம் என்றென்றும் மறக்கப்பட முடியாதது. அதே சமகாலத்தில் பாலியல் வல்லுறவு. "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டு மலர்" *(1969)* இத்தகைய முரண் கூத்துகளைச் சாடி பல பெறுமதிமிக்க படைப்புகள் தாங்கி வந்த மலராகும்.

பஞ்சமர் இலக்கியம் ஒடுக்கப்பட்ட பெண்களின் பிரச்சனைகளையும் போர்க்குணத்தையும் வெளிப்படுத்திய அளவுக்கு உயர்சாதிப் பெண்களின் உண்மை நிலையைப் படைப்பாக்கம் செய்யவில்லை. யாழ்ப்பாணத்தின் விசேட நிலை பெண்ணின் ஆளுமையைப் பேண உதவியுள்ளது. தமிழகத்தில் போல் யாழ்ப்பாணத்தில் பெண்ணுக்குப் புகுந்த வீட்டுப்பிரச்சனையில்லை. மணமகன் திருமணத்தின் பின்னர் மணமகள் வீட்டுக்கு செல்வான்; அல்லது அவளுடைய ஊரிலுள்ள அவளுக்கான சீதன வீட்டுக்கு செல்ல வேண்டும். தன் சொந்த ஊரிலிருந்து பெயர்ந்து செல்லும் ஆண் தமிழகத்தின் புகுந்தவீடு செல்லும் பெண் அளவுக்கு ஆளுமையை இழக்காத போதிலும் சிறிய இழப்பு தவிக்கவியலாதது. பெண் தன் சொந்த வீட்டிலோ அல்லது ஊரிலோ, தன் சொந்த பந்தங்களுடன் ஆளுமை சிதையாமல் இருக்க முடிவது யாழ்ப்பாணத்தின் சிறப்பம்சம். இந்த ஆளுமையுடன் ஒடுக்கப்பட்ட ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவது மேலே பார்த்த பிரச்சனைகளுக்கான அடிப்படையாகும்.

இவ்வாறு ஆளுமைச் சிதைவின்மை காணப்பட்டபோதிலும் பொதுவான தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தியல் சார்ந்த பெண்ணை வீட்டுக்குத்தூரமாக வைக்கிற சந்தர்ப்பங்கள் கடுமையாகப் பின்பற்றப்படும் சடங்குகளாய் நீடித்திருந்தன. பஞ்சமர் இலக்கியம் உயர்சாதிப் பெண்ணின் தீட்டுப் பிரச்சனையை முழுமையாகக் கொண்டுவரத் தவறிவிட்டது. யாழ்ப்பாணச் சமூகத்தில் தீட்டு என்பதற்கு 'அழுக்கு' என்ற பொருள் இருப்பதை வெளிப்படுத்தும் மனோன்மணி சண்முகதாஸ், ஏனைய சமூகங்களில் இந்தப் பொருளில் கையாளப்படவில்லை எனக் காட்டுவார். அழுக்கு எனும் பொருளில் பின்வரும் சொற்றொடர்கள் வழக்கிலுண்டு. தீட்டுக்காரி, தீட்டுத்தொடக்கு, தீட்டுக் கழிக்க, தீட்டுச் சீலை, தீட்டு வீடு, தீட்டுப் படல், தீட்டிறைப்பு, தீட்டுக் கட்டுப்படல், மாதத்தீட்டு, தீட்டு நிண்டவள், தீட்டு நாள், தீட்டு நிற்றல், தீட்டுக் கழிவு.[38]

இவ்வாறு பெண் சார்ந்த பல தீட்டுக்கள் குறிப்பிடத்தக்க ஏதாயினும் புனிதப்படுத்தல் நிகழ்வுடன் நிறைவுபடும்; குறிப்பாக இத்தீட்டு நிலை நீரினால் புனிதப்படுத்தத்தக்கது. தாழ்த்தப்பட்ட மக்கள் தொட்டால்



அல்லது அவர்கள் வீட்டினுள்ளேயோ கோயிலினுள்ளேயோ நுழைந்தால் ஏற்படும் தீட்டையும் நீரால் கழுவிப் புனிதப்படுத்த முடியும். தாழ்த்தப்பட்ட மக்களின் சாதித்தீட்டோ என்றென்றும் நிரந்தரமானது; உடலுடன் நிரந்தரமாய் ஒட்டியிருப்பது (நந்தனார் தீயில் தனது புலை உடலைச் சாம்பலாக்கிப் புனிதப்படுத்த வேண்டியிருந்தது; பெண் கற்பில் புனிதம் ருசுப்பிக்கவும் நெருப்பு சாட்சிப் பொருள்; கற்புள்ள புனிதவதியை நெருப்பு பொசுக்காது என்ற புனைவை ஒப்பு நோக்கலாம்). இத்தகைய சாதிக்கொடுமையை டானியல் காட்டத் தவறவில்லை.[39]

ஆக, பெண் ஒடுக்குமுறையைவிடவும் சாதி ஒடுக்குமுறை பன்மடங்கு வன்முறையுடைய கொடூரம். அதனைக் காத்திரமுடையதாகக் காட்ட முனைகையில் உயர்சாதிப் பெண்களின் நுட்பமான சிதைவு மனநிலைகளை பாலியல்சார் பிரச்சனைகளுக்கு அப்பால் (அதனையும் தவறான புரிதலில் வக்கிர உணர்வுடன் வெளிப்படுத்துவதன்றி) காட்ட முன்வரவில்லை.

தீட்டுக் கருத்தியல் பெண்ணுடனும் சாதியத்துடனும் இணைந்துள்ளது. தீட்டுள்ள நிலையில் இருக்கும் பெண் தீண்டத்தகாதவராகிறார். தீண்டத்தகாத ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்த அத்தனை விலங்குகளும் தீட்டுநிலைக்கான பெண்அனுபவிக்க வேண்டியவள். மாதவிடாய் சார்ந்த தீட்டு நாட்கள் மாதம் தவறாமல் அனுபவிக்கப்பட்டது. மகப்பேறுத் தீட்டும் சந்தித்துத் தீர வேண்டியது - ஒருமாதம் முழுமையும் மகப்பேறுத்தீட்டு இருக்கும். இத்தகைய தீட்டுப்பட்ட பெண் வீட்டுக்கு விலக்காக தனி அறையில் முடக்கப்படுவாள். வீட்டின் ஏனைய பகுதிகளுக்கு செல்ல முடியாது. கோயிலை நினைத்தும் பார்க்க முடியாது. சடங்குகள் எதிலும் பங்கு பெற முடியாது. தீட்டு நிலையில் ஒடுக்கப்பட்டவர் நிலையை அவள் அனுபவிக்க நேர்கிறது. ஆயினும் மனோநிலையைப் பொறுத்தவரை அவள் உயர்சாதியினள். தீண்டத்தகாதவர்கள் வாழ்நாள் முழுவதும் அனுபவித்த கொடுமைக்கு இது சமனானது எனக்கொள்ள முடியாது. சிலர் இத்தீட்டுக் கருத்தியல் அடிப்படையில் பெண் ஒடுக்கப்பட்ட இன்னொரு சாதி எனக்குறிப்பிட முனைவர். இது சாதிய ஒடுக்குமுறைக் கொடுமையை உணராத மனோநிலைப்பட்டது. பெண் தீட்டு கண்டிக்கப்பட வேண்டிய ஒரு புறக்கணிப்பே ஆயினும், சாதி ஒடுக்குமுறை வாழ்நாள் பரியந்தம் தீரா வடு என்பதை மறக்கக்கூடாது.

தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் சாதியத்தின் நிலவுடைமைக் கருத்தியலைத் தகர்த்த போது பெண் தீட்டும் தானே காலங்கடந்ததாகப் போனது. இன்று தீட்டு நாட்கள் என மாதத்தில் மூன்று நாட்கள் யாரும் ஒதுங்கிக் கிடப்பதில்லை. வெறும் விஞ்ஞானத் தொழில் நுட்ப விருத்தியும் புதிய சுகாதார முறைகளும் வாழ்முறை மாற்றங்களும் மட்டும் இந்த முன்னேறிய பண்பாட்டுக்கு வழிகோலவில்லை. இத்தகைய வாழ்முறைச் சூழல்கள் அபிவிருத்தி கண்ட போதும்

படிப்பகம்

www.padippakam.com



கருத்தியல் ரீதியில் பின்னடைந்திருப்பின் தம்மை அறியாத ஒதுக்கம் இருந்திருக்கும். நீட்டுக் கருத்தியலை சாதியத்துக்கு எதிரான போராட்டங்கள் தகர்த்த புறநிலை யதார்த்தம் முதன்மையுடையது.

அந்த வகையில் சாதியத் தகர்வு ஆணாதிக்க சமூகத்தைத் தகர்க்கும் போதே உயர்சாதிகளிடையே காணப்படும் பெண் ஒடுக்குமுறைகளும் தளர்வடையும். சாதியொழிப்பு பெண் விடுதலையுடன் இரண்டறக் கலந்த ஒன்று; அவை பூரண சமத்துவ சமூக இலட்சியத்துடன் இணைவுடையன. இவை மூன்றும் ஒன்றையொன்று நிராகரிக்க முடியாதன. வர்க்கங்களை ஒழித்து சாதியத்தைத் தகர்க்காமல் பெண் விடுதலை சாத்தியப்படப்போவதில்லை. பெண்ணியநோக்கில் பஞ்சமர் இலக்கியத்தில் குறைபாடு காணப்படினும், பஞ்சமர் இலக்கியம் வெளிப்படுத்தும் ஆணாதிக்க எதிர்ப்பை பெண்ணிய வாதிகள் மதித்தாக வேண்டும். சாதியமா பெண்ணொடுக்கு முறையா என வரும் போது சாதியத்துக்கெதிரான போர்க்குரல் முதன்மை பெற வேண்டும்; அதுபெண் விடுதலையுடனும் இணையும் போது மட்டுமே முழுமையான அர்த்தபுஷ்டியுடையதாகும். அதே வேளை ஒன்றுக்கு எதிராக மற்றதனை முன்னிறுத்துவது பாரதூரமானதாக அமையும்; பின்நவீனத்துவம் அத்தகைய தவறினைத் தூண்டுவதாக அமையும் போது மார்க்சியம் இருமுனைகளிலுமான போராட்டத்தை முன்னெடுக்க வழிப்படுத்தும்.

# V

# தேசிய இன நெருக்கடியும் பஞ்சமர் இலக்கியமும்

தேசிய இனம் என்பது குறித்த சமூக பொருளாதார பண்பாட்டுக் கட்டமைப்பில் உருவாகும் வரலாற்று வகையினம். இனக்குழு வாழ்முறையிலிருந்து விடுபட்டு அரசு எல்லைகளுக்குள் பல்வேறு நாடுகள் உருவாயின; பின்னர் குறித்த சமூக நியதிகள் தேசிய இனம் என்ற கருத்தியலைத் தோற்றுவித்தது. முந்திய நாடுகள் ஆள்வோரின் மதிநுட்பத்திலும் வீரதீர பராக்கிரமங்களிலும் ஓரளவுக்குத் தங்கியிருந்தன. அது நிலவுடைமைச் சமூக அமைப்பின் ஒரு வடிவம். தேசிய இனம் என்பது முதலாளித்துவ ஜனநாயகம் ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்புடன் தோற்றம் பெறுவது; முதலாளித்துவ ஆட்சி முறைக்கும் பொருளியல் வாழ்வுக்கும் அவசியப்பட்டது. ஒரு தேசிய இனத்தைக் கட்டமைக்கும் அடிப்படையான அம்சங்களாகப் பின்வருவன ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. 1. பொதுமொழி, 2. பொதுவான ஒரு புவியியல் தொடர்ச்சி, 3. பொதுப்பொருளாதார ஒருங்கிணைப்பு, 4. ஒரு பொதுப்பண்பாடாக வெளிப்படுகிற மன இயல்பு.



இந்த வரையறை ஐரோப்பாவில் தேசிய இனப் பிரச்சனை முனைப்படைந்திருந்த சூழலில் முன்வைக்கப்பட்டது ஆயினும் இன்றும் தேசிய இனத்தை அடையாளப்படுத்த உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது; விசேட சூழ்நிலைகள் வலியுறுத்தும் மாற்றங்களுடன்.

அதேவேளை காலனித்துவ நாடுகளாய் இருந்து விடுதலையடைந்த ஆசிய நாடுகள் என்ற வகையில் இந்தியாவிலும் இலங்கையிலும் தேசம் என்பது வரலாற்றுடன் மாறுபட்ட வடிவங்களை ஈட்டி வந்துள்ளது. ஆரம்பத்தில் ஆங்கில அரசு இலங்கை நிர்வாகத்தை இந்தியாவுடன் இணைத்து முன்னெடுத்தது. இன்றும் இலங்கையின் திருச்சபை ஒன்று 'தென்னிந்திய திருச்சபை' என்பதை அவதானிக்கலாம். ஆங்கில அரசின் பிரித்தாளும் தந்திரமே பின்னர் இலங்கையை மிகவும் சுயாதிபத்திய முள்ள தனி நாடாக இயங்க வகை செய்தது. சுதந்திரப் போராட்ட எழுச்சி இந்தியாவில் வலுப்பட்ட போது, இந்தியாவுக்கு எதிரான இனத்துவேசத்தை சிங்களவரிடம் தூண்டி எதிரி நாட்டு நிலையில் இலங்கையை வளர்த்தெடுத்தது. பிரித்தானிய சார்பு மிதவாதப் போக்கே சிங்களத்தலைவர்களிடம் இருந்தது. இந்த வாய்ப்பான நிலையில் 'அரசியல் சீர்திருத்த ஆய்வுகூடமாக' இலங்கையைப் பிரித்தானியா பயன்படுத்திக் கொண்டது.

கிளர்ந்தெழுந்து சுதந்திரத்துக்குப் போராடும் நாடுகளில் சீர்திருத்தத்தை வழங்கு முன்னர் அவற்றைப் பெரிதாய்க் கோரிப் போராடாத இலங்கையில் அறிமுகப்படுத்திப் பரீட்சித்த பின்னரே அறிமுகப்படுத்திய பல சந்தர்ப்பங்களுண்டு. இலங்கையில் சேர்பொன் இராமநாதன் உட்படப் பலர் சர்வ ஜனவாக்குரிமை வேண்டாம் என வலியுறுத்திய போதிலும் முப்பதுகளின் தொடக்கத்திலேயே சர்வ ஜனவாக்கெடுப்பு நடைமுறைக்கு வந்துவிட்டது. இந்தியாவில் சுதந்திரத்துக்குப் பின்னரே இது சாத்தியப்பட்டது.

சிங்களவரிடம் விதைக்கப்பட்ட இந்திய எதிர்ப்பு தமிழ் எதிர்ப்பை மையமாகவுடையது. ஆயினும் அதுதமிழகத்தையே அன்றைய நிலையில் மையப்படுத்தியது. இலங்கைத் தமிழர் அவ்வளவு எதிர்ப்பை அப்போது அனுபவிக்க விடப்படவில்லை. இலங்கையின் இரண்டாவது இனக்கலவரம் (முப்பதுகளில்) கொழும்புவாழ் மலையாளிகளுக்கு எதிரானது என்பதிலும், சுதந்திரம் கிடைத்தவுடன் இந்திய வம்சாவழியினர் அனைவரதும் பிரசாவுரிமை பறிக்கப்பட்டது என்பதிலும் இந்த இந்திய எதிர்ப்பு அம்சத்தை இனங்காண முடியும் (முதலாவது இனக்கலவரம் 1915ல் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்தது).

இலங்கைத் தமிழரை, குறிப்பாக யாழ்ப்பாணத்தை, இலங்கைக்குள் பிரித்தாளும் தந்திரத்துக்கு ஆங்கில அரசு பயன்படுத்திக் கொண்டது. யாழ்ப்பாணக் குடா நாடு கல்விக் கூடங்களால் நிறைக்கப்பட்டு, அங்கிருந்து ஆங்கிலம் கற்ற கனவான்கள் உற்பத்தியாக்கப்பட்டு இலங்கை பூராவும், இலங்கைக்கு வெளியேயும், ஆங்கில அரசப்

www.padippakam.com



பிரதிநிதிகளாக நிறுத்தப்பட்டனர். மிகப் பிந்தி, ஐம்பதுகளில் தேசிய விழிப்புணர்வை அடைந்த சிங்களவர்கள், தொலைந்துபோன ஆங்கில அரசின் கைக்கூலிகளாகக் கூறி 1958 இனக்கலவரத்தில் தமிழர்களைத் தாக்கினார்கள். தமிழ்த் தலைமையின் ஆங்கில மோகம் வெளிப்படையானது.[40] இந்த அடிப்படையான அம்சத்தில் 1977 ஆம் ஆண்டைத் தொடர்ந்த இனக்கலவரங்களிலிருந்து 1958 இனக்கலவரம் பாரிய வேறுபாடு உடையது. அதே வேளை சிங்களவர்களிடம் வளர்க்கப்பட்ட தமிழ் எதிர்ப்புணர்வு அப்போது வெளிப்படத் தொடங்கிவிட்டது என்பதையும் மறுக்க முடியாது.

மிதவாத அளவில் சுதந்திர உணர்வுகொண்ட இலங்கைத் தமிழ்ச் சிந்தனையாளர்கள் இந்தியச் சுதந்திரத்தின் பகுதியாகவே இலங்கை யைக் கண்டனர். ஒருவகையில் அகண்ட பாரதத்தில் ஒரு கூறு. அதே வேளை 'இலங்கை மணித்திருநாடு' என்ற பிரக்ஞையும் இருந்தது. (பாரதியிடம் 'இந்தியத்திருநாடு' என்பதுடன் சமநிலையில் காணப் பட்ட 'செந்தமிழ்நாடு' என்பதில் காணப்பட்ட தேசிய உணர்வு போன்றதே இதுவும்). சுதந்திரத்துக்குப்பின் இலங்கை தனி நாடாக உறுதிப்பட்ட நிலையில் இந்த வகையான இந்திய - இலங்கை சார்ந்த ஒருமுகப்படுத்திய நாணயத்தின் இருபக்கங்கள் போன்ற தேசிய உணர்வு குறைந்து இலங்கைத் தேசியம் அல்லது தனித் தமிழ்த் தேசியம் எனும் இரு வேறுபட்ட போக்குகள் தோன்றின.

ஐம்பதுகளின் தேசிய விழிப்புணர்வு தமிழகர்களிடம் தோற்றுவித்த இரட்டைத் தன்மை இது. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமையில் தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிராகத் தூண்டப்பட்ட தமிழ்த் தேசியம் ஒரு போக்கு; ஏகாதிபத்தியம், அரைக்காலனித்துவம், அரைநிலைப் பிரபுத்துவம் ஆகியவற்றுக்கு எதிராக இடதுசாரிகள் தலைமையில் கிளர்ந்தெழுந்த இலங்கைத் தேசியம் மற்றொரு போக்கு. தமிழ்த் தேசியத் தலைமை தேசியப் பிரச்சனையின் எந்த ஒரு விடயத்துக்காகவும் போராடாமல் வெறும் மொழிப்பிரச்சனையை மட்டும் மேடை முழக்கமாக முன்வைத்தது. இடதுசாரிகள் தேசியப் பிரச்சனையின் அடிப்படை அம்சமான நிலப்பிரச்சனையையும் சமூக விடுதலைக் குறிகோள்களையும் முன்னெடுக்கத் தொடங்கினர். தமிழர் தலைவராக ஐம்பதுகள் வரை விளங்கிய ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் கொங்கிரஸ் கட்சி ஏகாதிபத்திய அடிவருடியாக இருந்தது. சிங்கள இனவாத - பெருமுதலாளிவர்க்க யு.என்.பி.யுடன் கூட்டுச் சேர்ந்திருந்ததுடன் மலையக மக்களை நாடற்றவர்களாக்கி வாக்குரிமையையும் பறிக்கத் துணை போனது. இது உண்மையில் வர்க்கப்பாதுகாப்பு நடவடிக்கையே. மலையகத் தொழிலாளர் மத்தியிலிருந்து பெரும்பான்மையான இடதுசாரி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதால், அதனைத் தடுத்து, ஆளும் வர்க்கத்துக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை நீக்கும் பொருட்டுத் 'தீர்க்கதரிசனத்துடன்' உயர்வர்க்கத்தலைவரான ஜீ.ஜீ. அவரளவில் சரியாகவே செயற்பட்டார். ஆயினும் மலையக மக்கள் இந்திய



வம்சாவழித் தமிழர்கள் என்பதால் தமிழ் உணர்வை முன்னிறுத்தி, தமிழ்க்கொங்கிரஸிலிருந்து செல்வநாயகம் வெளியேறித் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தார். தேர்தல் வெற்றிக்கு அளவாகத் தமிழ்த் தேசிய முற்போக்குக் குரல்களை முழங்கியபோதிலும், வெற்றிக்குப்பின் ஜி.ஜி.இன் அடிச்சுவட்டையே தமிழரசுக் கட்சி பின்தொடர்ந்தது. எதனைக் கண்டிக்கத் தனிக்கட்சி தொடங்கினரோ அந்த மலையக மக்களைக் கைவிட்டனர்; இலங்கைத் தமிழ் மக்களின் அடிப்படை ஜீவாதாரப் பிரச்சனைகளைக் கைவிட்டு, வெற்றாரவார மொழிப்பிரச் சனையை மட்டும் முன்வைத்தனர். மக்கள் விரோத யு.என்.பி. அரசில் பங்கெடுத்துக்கொண்டனர்.

இதே சமகால தேசிய விழிப்புணர்வின் இடதுசாரி அணி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து அதற்கான தலைமைப் பொறுப்பை ஏற்றது. வெறும் சமபந்தி போசனம், படித்து விரல் விட்டெண்ணக்கூடிய காட்டிக் கொடுப்பாள ராகும் தாழ்த்தப்பட்டோருக்கு வேலைவாய்ப்பு, ஒரு செனட்டர் பதவி என்பன தமிழரசுக் கட்சி ஒடுக்கப்பட்டோருக்கு வீசிய எலும்புத்துண்டு கள். இவற்றைக் காட்டி ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமை களைக் குழிதோண்டிப் புதைக்கத் தமிழரசுக் கட்சி முயன்றது. தீண் டாமை ஒழிப்புப் போராட்டம் வெடித்தெழுந்தபோது எதிரணியில் தங்களை இனங்காட்டினார்கள். அப்போராட்டம் முனைப்புற்றிருந்த 1966-70 வரையான காலத்தில் யு.என்.பி.அரசாங்கத்தின் மந்திரிசபையில் தமிழரசுக்கட்சி அங்கம் வகித்ததென்பதும் நினைவுகூரத்தக்கது.

மாறாக, சிங்கள முற்போக்குத் தலைவர்களும் சிங்கள மக்களும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டத்தை இதய சுத்தியுடன் உறுதியாய் ஆதரித்தனர். இந்தநிலையில் சாதிவெறியர்களுக்கு எதிராக சிங்கள முற்போக்கு சக்திகளுடன் கைகோர்த்து, முழு இலங்கையில் சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களின் சோஷலிஸ அரசைப் பாட்டாளி வர்க்கத் தலைமையில் சிருஷ்ட்டிக்க வேண்டும் என்ற உணர்வே தமிழ் முற்போக்கு சக்திகளிடம் மேலோங்கியிருந்தது. இனப்பிரச்சனைத் தீர்வுக்காக பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது (அதற்கான போராட்ட வடிவங்களைச் சிந்திக்கவில்லை என்ற தவறைப் பின்னர் சுயவிமர்சன ரீதியில் முற்போக்கு சக்திகள் ஏற்றுக் கொண்டனர்). அன்றைய புறச்சூழல் இது. யாழ்ப்பாணத்தில் வெறும் வெள்ளாளத் தேசியமாயிருந்த தமிழ்த்தேசியத்தை ஒடுக்கப்பட்ட மக்களால் ஏற்க முடியவில்லை. ஏற்றிருக்கவும் முடியாது. அன்றைய தமிழ்த் தேசியத்தின் பிற்போக்குத் தனம் குன்றின் மேல் விளக்குப்போலத் தெளிவாகத் தெரிகிற ஒன்று. அதற்கு அதிக ஆதாரங்களை அடுக்கி விளக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த இனத்தேசியவாதிகளை நிராகரித்ததும் சரியானதே, ஆயினும் ஒரு மார்க்ஸியக் கட்சி தேசிய இனப் பிரச்சனை

படிப்பகம்

www.padippakam.com



குறித்து ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வு நிலை கடந்து விஞ்ஞானபூர்வமான புறநிலை ரீதியான ஆய்வொன்றை மேற்கொண்டிருக்க வேண்டும். அதன் அடிப்படையில் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தையும் அதன் இலக்கையும் கோரிக்கைகளையும் பிரதேச சுயாட்சியின் வடிவங்களையும் நிர்ணயித்து செயற்படுத்தியிருக்க வேண்டும். சாதியத்துக்கு எதிராகப் போராடிய கம்யூனிஸ்ட் கட்சி அதற்குத் தலைமையேற்றுப் போராடியிருப்பின் இன ஒடுக்குமுறைக்கு எதிரான அந்தப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் தலைமை சக்தியாக இருந்திருப்பர். தமிழ் மக்களுடைய இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தையும் இணைத்திருக்க முடியும். அவ்வாறு ஒரு போராட்டத்தை முன்னெடுப்பது தமிழ்ப் பிற்போக்கு இனவாதிகளுக்கு சாதகமாகிவிடும் என்ற அச்சம் அன்று இருந்தது. அதைவிடவும், சிங்கள மக்களின் மனதைப் புண்படுத்திவிடுமோ என்ற ஆதங்கம் அளவை மீறி இருந்தது.

தமிழரசுக்கட்சி ஆங்கிலத்தில் தனது பெயரை 'சமஷ்ட்டிக் கட்சி' என்றே வெளியிட்டிருந்தது. உலகறியச் சமஷ்ட்டிக் கோரிக்கையும் உண்மையில் தனித்தமிழ் அரசொன்றை அவாவி நிற்பதுமே இவர்களது உள்நோக்கம் என சிங்களப் பேரினவாதிகள் பிரசாரப்படுத்துவதற்கு உதவிகரமாக இது ஆனது.[41] இதனால் சிங்கள மக்கள் மத்தியில் 'மகாவம்சப் பீதியை' ஊட்டிவளர்க்க சிங்களப் பேரினவாதிகளுக்கு

துருப்புச்சீட்டுக் கிடைத்தது. "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்" என்ற கோஷத்துடன் சைவத் தமிழ் மேலாண்மை ஆக்கிரமிப்புத் திசையில் காலடியெடுத்து வைக்கும் போது, ஒடுங்கிய குறுகிய மனப்பான்மையை உடைய 'மகாவம்சப்பீதி' சிங்கள மக்களிடம் கட்டமைக்கப்பட்டது. மகாவம்சத்தில் கைமுனு சொல்வான் "வடக்கே தமிழரும், தெற்கே கடலும் முடக்கும் போது நீட்டி நிமிர்ந்து படுக்க முடியுமா?" என்று. தெற்கின் றுகுணவில் ஒடுங்கியிருந்த சிற்றரசனான கைமுனு படிப்படியாகப் பல சிற்றரசுகளை வெற்றிகொண்டு, பெரும் படையொன்றைக் கட்டியெழுப்பியபடி முன்னேறிவந்து, வடக்கின் பேரரசனான அநுராதபுர அரசை ஆண்ட எல்லாளன் எனும் தமிழ் மன்னனை, ஏராளமான படைவீரர்களின் சாவைத் தவிர்க்கும் பொருட்டுத் தனித்துப் போரிட அழைப்பு விடுத்தவன். தனிப்போரில் வீழ்ந்த எல்லாளனுக்கு சமாதிஎழுப்பியவன். தனது படையில் பல தமிழ் வீரர்களையும் தமிழ்த் தளபதிகளையும் கொண்டிருந்தவன். எல்லாளன் சமாதி முன் வாத்தியங்கள் இசைக்காமல் வாகனங்களை விட்டிறங்கி நடந்தே செல்ல வேண்டும் எனக்கட்டளை பிறப்பித்தவன் (கைமுனு நல்லவன்என்பதாலல்ல, அநுராதபுரத்துச் சிங்கள மக்களின் 40 வருட சீரிய ஆட்சியாளன் எல்லாளனைக் கொன்ற குற்றத்தை மறந்து மன்னித்துத் தன்னை ஏற்கும் படி சிங்கள மக்களை வசப்படுத்தும் நோக்கிலேயே அவ்வாறு செய்தான் என சிங்களப் பேராசிரியர் ஒருவரது ஆய்வு குறிப்பிடும் ("இனத்துவமும் சமூக



மாற்றமும்" எனும் நூலில்) இனவாதமற்ற, சுத்தவீரனான அந்தக்கைமுனுவையே ஒடுங்கிய மனப்பாங்கும் இனவாதமுமான கருத்தியலுக்குப் பயன்படுத்திக் கொண்டது மகாவம்சம். இன்னொரு புனைவையும் மகாவம்சம் கொண்டிருந்தது. புத்தர் பரிநிர்வாணம் அடைந்த அதேதினத்தில் விஜயன் இலங்கையில் காலடிபதித்தானாம்; இச்சிறிய தீவில்தான் பௌத்தம் காப்பாற்றப்படும் என புத்தர் நினைத்து இப்படியொரு ஏற்பாடாம் (புத்தரையே விட்டுவைக்காதவர்களிடம் கைமுனு எம்மாத்திரம்).

ஒடுங்கிய மனப்பாங்குடைய இந்த மகாவம்சப் பீதிக்குக் காரணமுண்டு. சைவ சமய எழுச்சி தமிழகத்திலிருந்து பௌத்தத்தை விரட்டியபோது பௌத்த பிக்குகள் இலங்கையைத் தஞ்சமடைந்தனர். வட இலங்கையிலிருந்தும் பௌத்தம் விரட்டப்பட்டு அநுராதபுரியிலும் அப்பாலும் முடங்க நேர்ந்த போது இந்த ஒடுங்கிய சிந்தனை அவர்களைப் பற்றிக் கொண்டது. இதனை சாதாரண சிங்கள மக்களிடம் விதைத்து தொடர்ந்து வளர்த்த சிங்களப் பேரினவாதிகளுக்கு தூபம்போடுவதாகத் தமிழ்இன வெறி அமைந்திருந்தது. அன்றைய தமிழரசுக் கட்சி மேடைகளில் தவறாது ஒலிக்கும் ஒரு முழக்கம் "உலகின் ஆறுகோடி தமிழருக்கு தனிநாடொன்று சொந்தமாய் இல்லையே" என்பது தான். இலங்கையில் ஒரு சிறுபான்மை இனம் என்பதைவிடவும் ஆண்ட இனம் என்பதாகவும் ஆறுகோடி தமிழர் என்பதாகவும் ஒருவகைப் பேரினவாத அகங்காரம் 'வெள்ளாளத் தமிழ்த் தேசியவாதிகளிடம்' இருந்தது. "தமிழர்களால் அழிக்கப்பட்டு உலக வரைபடத்திலிருந்து சிங்கள இனமே பூண்டோடு அற்றுப்போய்விடப் போகிறது" என்பதாக ஒடுங்கிய மனப்பாங்கையும் அச்சத்தையும் சிங்களப் பேரினவாத சக்திகள் சிங்கள மக்களிடம் வேரூன்றி வலுப்பட வைத்திருப்பதற்கு இந்த முழக்கம் உதவியது. சிங்களப் பேரினவாதிகள் ஒருபுறம் தமிழ் மக்களை ஒடுக்கியபடி, மறுபக்கத்தில் இந்தப் பீதியை ஊட்டியே சிங்கள மக்களை அடக்கி ஆள்கின்றனர்.

இந்தக் காரணத்தால் தீண்டாமைக்கு எதிராகப் போராடிய, புரட்சிகர சித்தாந்தத்தால் ஆயுதபாணியாக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியும் சிங்களமக்களின் மனதைப் புண்படுத்தாத நிலைப்பாட்டை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. இதன் தலைவராக ஒரு தமிழரான என்.சண்முகதாசன் இருந்தார். அன்று மிகப்பலமான தொழிற்சங்க சம்மேளன அணியுடன் ஏராளமான சிங்கள மக்களையும் அணிதிரட்டிய பெரிய கம்யூனிஸ்ட் கட்சியாக சண் தலைமையிலான கட்சியே விளங்கியது. பீற்றர்கெனமன் - விக்கிரம சிங்க தலைமையிலான பாராளுமன்ற சந்தர்ப்பவாத, 'மசாலா தோசை, வடை வேண்டாம்' என்ற தமிழரெதிர்ப்புச் சுலோகம் போட்டு இனவாதச் சகதியில் விழுந்த கம்யூனிஸ்ட் கட்சி மக்களால் நிராகரிக்கப்பட்டிருந்தது. ஏராளமான சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைக் கோரிக்கையை பிரசாரப்படுத்தும் வாய்ப்பிருந்தும் சண் தவறவிட்டிருந்தார் என்ற விமர்சனம் நிராகரிக்க முடியாதது. இன்னும்

படிப்பகம்

www.padippakam.com



மேலேபோய்த் தமிழினம் ஒரு தேசிய இனமல்ல என்ற வாதத்தை முன்வைத்து சுயநிர்ணய உரிமையை நிராகரித்தார் சண். சுயநிர்ணய உரிமையை ஏற்றால் பிரிவினையை ஏற்க நேரும் எனக் கருதி சுயநிர்ணயத்தை மறுப்பதற்காக இவ்வகையில் ஈழத்தமிழர் ஒரு தேசிய இனமே இல்லை என்று வாதிட்டார். இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட தேசிய இனத்துக்கான நான்கு வரையறைகளில், சுய பொருளாதாரம் தமிழருக்கு இல்லை எனக்கூறி இந்த நிராகரிப்பை அவர் செய்தார். தமிழ்ப் பகுதி 'மணிஓடர் பொருளாதாரத்தில்' தங்கியுள்ளது என்றார் (உண்மையில் யாழ்ப்பாணம் மட்டுமே ஏனைய பகுதிகளில் உத்தியோகம் பார்த்து அனுப்பப்படும் மணியோடரில் தங்கியிருந்தது). உள்கட்சி விவாதங்களில் இது வெறும் புத்தகவாதம் எனச்சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் தனது நிலையை சண் மாற்ற முன்வரவில்லை.

அவருடைய வறட்டுத்தனம் வேறும் பல விஷயங்களில் கட்சி முன்கையெடுக்கத் தடையாக இருந்த நிலையில், தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் பங்கேற்ற மிகப் பெரும்பான்மையினரான கட்சி உறுப்பினர்கள் வெளியேறி 'இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)' எனும் புதிய கட்சியை 1978இல் உருவாக்கினர் (பின்னர் 'புதிய - ஜனநாயகக் கட்சி' எனப் பெயர் மாற்றம்). ஏற்கனவே கட்சி உறுப்புரிமையை இழந்திருந்த டானியல் இந்தப் பிளவில் தமிழர் ஒரு தேசிய இனமல்ல என விவாதித்த சண் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தார். டானியல் இறுதி நாவலை எழுதியவரை தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை சண் அங்கீகரிக்கவில்லை. டானியலும் அவ்வாறே. டானியலின் மறைவுக்குப்பின், தோழர் சண்முகதாசன், கட்சி என்ற ஆயுதத்தைஇழந்து, தனிமனிதராக ஆகிவிட்டாலும் 'தூய மாக்ஸிய வாதியாக' (மாக்ஸியப் பிராமணராக) வாழ்ந்ததில் திருப்திப்படுவதாக பேட்டியளிக்கிற நிலையில், சுயநிர்ணய உரிமையையும் பிரிவினையையும் அங்கீகரித்தார்.

இந்த வரலாற்றுப் பின்னணியுடன் பஞ்சமர் இலக்கியத்தில் இனநெருக்கடி காட்டப்பட்டவாறினை ஆராய்தல் அவசியம். டானியல் எழுபதுகளின் பிற்கூறில் "போராளிகள் காத்திருக்கின்றனர்" எனும் ஒரு நாவல் எழுதினார். ஒடுக்கப்பட்ட சமூகப் போராளிகள் தம்முடனுள்ள சிங்கள வாலிபனைத் தமிழின வெறியர் தாக்க வருகிற நிலையில் அவர்களிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டுப் பாதுகாப்பு வியூகத்துடனிருப்பதை நாவல் சித்திரித்தது. தனித்தமிழீழத்துக்கு எதிராக தமிழ் - சிங்கள உழைப்பாளர் ஐக்கியத்தை வலியுறுத்துவது நாவலின் நோக்கமாகும். வேறு படைப்புகளில் சாதிவெறியர்கள் வேலைக்காரச் சிங்களப் பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொலை செய்தது காட்டப்பட்டுள்ளது; தாழ்த்தப்பட்ட பெண்ணை மணமுடிப்பதைவிடச் சிங்களப் பெண்ணை மணமுடிப்பது மன்னிக்கத் தக்கது எனக்காட்டப்பட்டுள்ளது ('முருங்கை இலைக் கஞ்சி' குறுநாவல்).



எழுபதுகளில் தமிழ் - சிங்கள ஐக்கியம் கருப்பொருளாக இருந்தது போல எண்பதுகளில் இல்லை. தொடரான இனக்கலவரங்களைத் தொடர்ந்து, 1984 இல் தேசிய பந்தோபஸ்த்து அமைச்சு உருவாக்கப்பட்ட பின்னர் தமிழர் பிரதேசங்களில் சிங்களப் பேரினவாத இராணுவம் கொடிய யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டு அனைத்து மக்களையும் 'தமிழர்' என்ற நிலையில் ஒடுக்கத் தொடங்கிவிட்டது. எண்பதுகளில் சிங்களப் பேரினவெறி தமிழ் மக்களின் வாழ்வுரிமையை மறுத்தது; ஏற்கனவே இருந்த அடிப்படைப் பிரச்சனைகளுடன் சொந்த மண்ணில் வாழ முடியாமல் விரட்டி, இனப்படுகொலை செய்தல் யதார்த்தமாகிவிட்டது. இந்தச் சூழலில் தமிழினத் தேசியத் தலைமையை முழுதாகக் கையேற்ற இளைஞர் இயக்கங்கள் மார்க்ஸிய அமைப்புகளல்ல என்றாலும் மார்க்ஸியத்தைக் கற்க ஆரம்பித்தன; முந்திய வெள்ளாளத் தேசிய வாதக் கனவான்கள் போலன்றி பல முற்போக்கான நிலைப்பாடும், அடிநிலை மக்களின் பிரச்சனைகளில் ஓரளவு அக்கறையும் இளைஞர் இயக்கங்களிடம் காணப்பட்டன. ஒரு தனி இயக்கம் 1985இன் பிற்கூறிலிருந்து தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டத்தைக் கையேற்றத்திலிருந்து ஏனைய இயக்கங்கள் தனித்தமிழீழத்தைக் கைவிட்டு ஜனநாயக வழியில் செயற்படத் தொடங்கிவிட்டன.

"பஞ்சகோணங்கள்" டானியலால் எழுதப்பட்ட வேளையில் அனைத்து இயக்கங்களும் களத்தில் போராடிக் கொண்டிருந்தன. இயக்கங்களின் எழுச்சிக் கட்டத்தின் போது அந்த இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகள், போராட்டங்கள் குறித்து என்ன பிரதிபலிப்பைக் காட்டுகின்றன என்பதைச் சித்திரிப்பதே "பஞ்சகோணங்கள்" நாவலின் நோக்கமாக அமைந்திருந்தது. இன ஒடுக்குமுறை தாழ்த்தப்பட்ட மக்களையும் உள்ளிழுத்து அழிக்கும் யதார்த்தத்தை முதன்மைப்படுத்த நாவல் முனையவில்லை. எண்பதுகளில் கட்டவிழ்த்துவிடப்பட்ட கொலைவெறிக் கோரத் தாண்டவம் இளைஞர் இயக்கங்களின் மீது ஒடுக்கப்பட்ட மக்களைக் கரிசனங்கொள்ளவைத்தது. ஒடுக்கப்பட்ட சமூக இளைஞர்கள் பலர் அந்த இயக்கங்களில் சேரத்தொடங்கிவிட்டார்கள். இந்த நிதர்சனத்தைக் காணத்தவறும் டானியல் "இன்றைய தமிழர் இயக்கங்களுக்கு கணிசமான அளவு ஒரு பிரிவு மக்கள் அந்நியப்பட்டு நிற்பதற்கான காரணகாரியங்களை உண்மை நிகழ்வுகளுடன் சித்திரிப்பது எனது கடமையாகப்பட்டதால் அதையும் பிசகின்றி" பஞ்சகோணங்கள் நாவலூடாகச் செய்திருப்பதாகப் பிரகடனப் படுத்துகிறார்.[42]

டானியல் தனதுநிலைப்பாட்டை இவ்வாறு வரையறுக்கிறார்: "சமகாலப் பிரச்சனையிலிருந்து விலகி நான் மிகவும் முற்பட்ட காலக் காரியங்களில் எனது பேனாவைப் பிரயோகிக்கிறேன் என்று சொல்பவர்கள் ஒன்றை மறந்துவிடுகின்றனர். சமகாலப்பிரச்சனை

படிப்பகம்

www.padippakam.com



என்று தமிழகர்களுக்குள்ளேயே இன்றுவரை நடைமுறையில் இருப்பவைகளைச் சமகாலப்பிரச்சனைதான் என்பதை வெளிக் கொண்டுவர இந்தப் பஞ்சகோணங்களுடன் பஞ்சமர் வரிசையில் ஐந்து நாவல்கள் பிறந்துவிட்டன. ஒரு அடிக்கருத்தை வைத்து இதுவரை இப்படிப் பிறப்பிக்கும் என்னிடம் இன்றையத் தமிழர் பிரச்சனையை வைத்து எழுதும்படி, இங்கு வற்புறுத்துபவர்கள் இலங்கையிலுள்ள மற்றைய படைப்பாளிகளைப் பார்த்து இப்படிக் கேட்காதது விந்தை யானதல்ல. ஏனெனில் இவர்கள் விரும்புவதெல் லாம், தாழ்ந்தவர்களின் - வஞ்சிக்கப்பட்டவர்களின் - அன்றாடங்காய்ச் சிகளின் - அடிமைப் பட்டவர்களின் - வயிற்றுச் சோற்றுக்காக ஆலாய்ப் பறப்பவர்களின் பக்கம் நின்று எழுதுவதிலிருந்து என்னைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பதுதான்."[43]

"பஞ்சமர் இலக்கியத்தின்" விரோதிகளது உள்நோக்கத்தை முறியடிக்க நினைப்பது சரியானதுதான். ஆயினும் அன்று மிகப் பெரிய மூன்று இயக்கங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் ஏராளமாக இணைந்து விட்ட சூழலில்தான், "பஞ்சகோணங்கள்" நாவலில் ஓரிரு தாழ்த்தப் பட்ட இளைஞர்கள் சேர்வதாகக் காட்டப்படுகிறது; நாவல் வலியுறுத்துவது போல சிலர் இயக்கத்தாலே கொல்லப்பட்டதும் உண்மைதான். அதையும் மீறிப் பல இளைஞர்கள் ஒடுக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து சென்று சேர்ந்தார்கள்; ஒடுக்கப்பட்ட மக்கள் அதனை ஆதரித்தார்கள். அன்றைய ஒடுக்கப்பட்ட மக்களின் இந்த யதார்த்த வாழ்முறை "பஞ்சகோணங்களில்" காட்டப்படவில்லை என்பதும் உண்மையே. வெள்ளாளத் தமிழினத் தேசியவாதிகளுக்கு எதிராக இருந்தநியாயமான கோபம் இந்த மாற்றமடைந்த யதார்த்தப்புறநிலையைக் காணவிடாமல் தடுத்துவிட்டது.

வெள்ளாளத் தேசியவாதக் கனவான்கள் ஒடுக்கப்பட்ட இளைஞர்கள் ஏராளமாக அங்கம் வகித்த இயக்கங்களை 'நளவர், பள்ளர் இயக்கங்கள்' என முத்திரை குத்தினர். அவை தடைசெய்யப்படுவதைப் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். ஆயினும் அத்தகைய இயக்கங்களிலும் சரி, இன்றும் சரி ஏராளமான தியாகங்களுடன் பலர் அங்கம் வகித்தபோதிலும் அவர்களது ஆற்றலுக்கு ஏற்ற நியாயமான தகுதிக்குரிய பதவிகளில் அவர்கள் அமர்த்தப்பட்டதில்லை என்பதை மறுக்க முடியாது. சாதிவாதிகளது குரலுக்கு இயக்கங்கள் பணிந்ததை இது உணர்த்துகிறது. ஒடுக்கப்பட்ட தனது சமூக மக்களின் பக்கம் நின்று நியாயத்துக்காகப் போராடியவர்கள் 'பஞ்சகோணங்கள்' நாவல் காட்டியதுபோல கொல்லப்பட்டதை எவரும் மறுக்கமுடியாது. அந்தவகையில் பஞ்சகோணங்கள் இயக்கங்கள் மீது முன்வைத்த விமர்சனம் நிராகரிக்கப்பட முடியாதது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விரோதமான தேசியவாதத்தை சந்தேகிப்பதைத் தவறென்று கூறமுடியாது. அந்த வகையில் 'பஞ்சகோணங்கள்' கவனஞ்செலுத்த வேண்டிய ஒரு



அடிப்படைப் பிரச்சனையை முன்வைத்துள்ளது. அதே வேளை இன்றைய தமிழினத் தேசிய நெருக்கடி காரணமாக பஞ்சமர் இலக்கியம் தொடர் வளர்ச்சியைக் காட்டவில்லையெனினும் அதற்கான தேவை இன்னமும் இருந்து கொண்டிருப்பதை மறந்துவிடவோ, மறுத்துவிடவோ முடியாது.

இன்றைய நிலையில் தமிழர் பிரதேசங்களில் புலப்பெயர்வுக்கு அதிகம் இடங்கொடுத்தது யாழ்ப்பாணமே. யாழ்ப்பாணத்தில் இப்போதும் நிலைத்திருப்பதில் பெரும்பாலோர் மேலைநாடுகளுக்குப் புலம்பெயர வாய்ப்பற்ற ஒடுக்கப்பட்ட மக்களே. இன்று களத்தில் போராடும் பலமான சக்தியாக ஒடுக்கப்பட்ட மக்கள் விளங்குகிறார்கள். இது, முன்னர் குறிப்பிட்டதைப் போல் உருவமாற்றம் மட்டுமே; உள்ளடக்கம் இன்னமும் பழைய தேசியவாதத்தின் இறுகிய வறட்டுக் கோசமே. பழைய தமிழரசுக் கட்சியின் மார்க்கத்திலிருந்து இன்றைய படிப்பினைகள் ஏற்படுத்தியிருக்கும் அனுபவத்தெளிவுக்கு ஏற்ற மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை. பழைமைக்கும் இன்றைக்குமுள்ள ஒரே மாற்றம், தமிழரசுக் கட்சி ஆயுதமேந்தியிருக்கவில்லை. இன்றைய தலைமை நேரடி அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. இரத்தம் சிந்தாத யுத்தமான அன்றைய அரசியலின் தொடர்ச்சியே இன்றைய இரத்தம் சிந்தும் அரசியலாகிய யுத்தம்.

தமிழினத் தேசியப் பிரச்சனை மிக நெருக்கடியான கட்டத்தை இன்று அடைந்துள்ளது. போராட்ட அமைப்பின் வடிவம் பற்றி, உள்ளடக்கம் பற்றி, மார்க்கம் பற்றி, தந்திரோபாயங்கள் பற்றி, இலக்குப் பற்றி, தீர்வு பற்றி மீள் பரிசீலனை அவசியப்பட்டுள்ளது. அதனை விடுத்து ஓடும் வேகமே முக்கியமென்று இன்னமும் முனையும் பட்சத்தில் எம்முன்னால் தோன்றியுள்ள அதளபாதாள விளிம்பின் எச்சரிக்கையைக் கவனத்திலெடுக்கத் தவறிய குற்றத்துக்குள்ளாக நேரிடும்; மேலாதிக்கவாதப் பிடியின் நெருக்குவாரத்தினால் தமிழ் மக்களை அதளபாதாளத்தில் வீழ்த்தவேண்டியதாகிவிடும்.

இன்றைய உலகமயமாதல் குழறுபடித் தத்துவங்கள் வெறித்தனங்களை நியாயப்படுத்திக் குழிபறிப்பன. பின்நவீனத்துவச் சிந்தனை முறைமை மக்கள் சக்தியைப் பிளவுபடுத்தி, மக்கள் சக்தியிடமிருந்து போர்க்குணமிக்க இலட்சியவாதிகளைப் பிரித்து, வீணடிப்பது. மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி என்ற உண்மையைப் பொய்ப்பிக்கக் கூடியதாக வேறெந்த மார்க்கத்தாலும் இதுவரை முடியவில்லை. மக்கள் சக்தியை அணிதிரட்டிய தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் பலமான அடித்தளமாக பஞ்சமர்களை அணிதிரட்டி அரசியல் போதமூட்டி, பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பி, தீர்க்கமான இலக்கைத் தீர்மானித்து, சரியான தந்திரோபாயங்களுடன், தெளிந்த தத்துவப்பார்வையில், எல்லாவிடயங்களிலும் அரசியலுக்கு முதலிடங்கொடுத்துப் போராடிய அன்றைய அனுபவத்தில் இருந்து கற்றுக்கொள்ள நிறைய உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



மக்களைப் பிளவுபடுத்தும் கேடான உலகமயமாதல் தமிழகத்தின் தலித் போராட்டங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சாதிகளிடையே மோதலாக்கப்பட்டுள்ள இந்த இருள் தலித் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தரப் போவதில்லை. போர்க்குணமிக்க முற்போக்கு சக்திகளை வீணான சாதிச்சண்டையில் விரயப்படுத்தவே தலித்தியக் குழறுபடித் தத்துவங்கள் உதவும். சாதியத்தை தகர்க்கும் போராட்டம் எந்தவொரு சாதிக்கும் எதிரானதாக இருக்க முடியாது. அனைத்து சாதிகளின் உழைக்கும் மக்களும், ஜனநாயக சக்திகளும் ஐக்கியப்பட்டு இனக்குழுமுறைமையின் எச்சசொச்சங்களைத் துடைத்தழித்து அனைவரும் சமத்துவம் அடையச்செய்யும் பொதுவு டைமை அமைப்புக்காகப் போராடுவது மட்டுமே தலித் விடுதலையை ஈட்ட ஏற்ற ஒரே மார்க்கம்.

## முடிவுரை

தமிழில் தலித் இலக்கியப் பிரக்ஞை தோற்றம் பெற்று பதினைந்து வருடங்களாகின்றன. அதற்கான தொடக்க அறிகுறி தென்பட்ட போது டானியல் பஞ்சமர் நூல்வரிசைப் படைப்புகள் பற்றிப் பிரஸ்தாபித்தார். தமிழகத்தில் தலித் இலக்கியம் தொடக்கம் பெற்றபோது பஞ்சமர் இலக்கியம் முடிவுக்கு வந்தது. பின்னர் வளர்ச்சியுறும் தமிழ் தலித் இலக்கியத்திற்கும் பஞ்சமர் இலக்கியத்துக்குமிடையே பாரிய வேறுபாடு உண்டு.

இந்த வேறுபாட்டுக்கான ஒரு பிரதான காரணியாக அரசியல் சமநிலை மாற்றம் அமைந்துள்ளது. இன்றைய தமிழ் தலித் இலக்கியம் சோவியத் - அமெரிக்க பனிப்போர் முடிவு சோவியத்தின் வீழ்ச்சியாக ஆகிவிட்டதன் பின்னரான உலகச் சூழலில் வெளிவருகிறது. உலக மயமாதல் எனும் பேரில் நாடுகள் அனைத்தையும் வேட்டைக்காடாக ஆக்கிச் சுரண்டும் அமெரிக்க மேலாதிக்கத் தலைமையிலான பல்தேசியக் கம்பெனிகளின் அடாவடித்தனம் இன்று, தட்டிக்கேட்கும் போட்டியாளர் இல்லையெனினும் விழிப்புறும் உழைப்பாளர்களது எழுச்சிகள் தோன்றும் எனும் யதார்த்தத்தைக் கவனத்திலிருத்தி, அவ்வாறு விழிப்புற்றுவிடாத வகையில் சாத்தியப் பட்ட சகல பிளவு மனப்பாங்குகளையும் விதைக்கும் கருத்தியல் பிரச்சாரப்படுத்தப் படுகிறது. இதனை இங்கு பின் நவீனத்துவச் சிந்தனையைக் கடைவிரித்த ‘சந்தேகவாதிகள்’ தாராளமாகச் சாத்தியமாக்கியுள்ளனர்.

சோவியத்யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அனைத்தையும் சந்தேகிக்கும் படி கூறி, மார்க்ஸியத்தையும் சந்தேகிக்கும் கைங்கரியத்தை இப் பின் நவீனத்துவவாதிகள் நிதர்சனமாக்கினர். இது சந்தேகமற்ற வகையில் அமெரிக்க மேலாதிக்கவாதத்தை நிலையூன்றச் செய்யும் கபடத்தனமே (பலர் தம்மையறியாமல் இத்தவறுக்கு ஆட் படுகின்றனர்; சிலர் அறிந்தே இப்பிழையைச் செய்து அமெரிக்கப் பரமமண்டலத்தில் விமோசனம் தேடுகின்றனர்). இதன் வாயிலாக மார்க்ஸியம் வழிகாட்டுவதுபோன்ற அனைத்து மக்களையும்



சுரண்டற்கொடுமைக்கு எதிராக ஐக்கியப்படுத்துவது சாத்தியமற்றது என சொல்லாடல்புரிந்து செயலாற்றினர். இந்த முயற்சியைப் பெருங்கதையாடல் எனக்கூறி சிறுசிறு குழுநிலைப்பட்ட சிறுகதையாடலே செய்வதற்குரியது எனத் தத்துவம் புனைந்து ஐக்கியப் படுவதை நிராகரிக்கின்றனர். பொதுவுடைமைச் சமூகம் வெறும் கனவே என அடித்துரைத்தனர். இதன் பேறாக தமிழ் தலித் இலக்கியம் குறைந்தபட்சம் தலித் மக்களையேனும் ஐக்கியப்படுத்த முடியாத அவலம் இன்று. உள்குரோதங்கள் ஊதிப்பெருப்பிக்கப்பட்டுக் கொழுந்துவிட்டெரியும் சாதிக் கலவரங்களுக்குள் குளிர்காய்கிறார்கள். இலக்கற்ற வெறும் மோதல்.

சமூக மாற்றத்துக்கு ஏற்புடைய வகையில் அதிகாரத்துவத்துக்கு எதிராகப் போராடுவதை அவசியமற்றதெனச் சொல்வது, அதற்கான உலக நோக்காகிய மார்க்ஸியத்தை சந்தேகிக்கத் தொடங்கி எதிர்க்கும் நிலைக்குச் சென்று நிதர்சனத்தில் ஆதிக்கம் செலுத்தும் சுரண்டல் வர்க்கத்தைத் தொடர்ந்தும் ஆளும் நிலைக்கு நீடிக்கச் செய்வதற்கே உதவும். அதற்கு ஏற்றதாக அதிகாரத்துவ அமைப்பைத் தூக்கியெறிய ஐக்கியப்பட வேண்டிய உழைக்கும் மக்களை சகல அதிகாரங்களையும் எதிர்த்துப் போரிடு எனும் பெயரில் தமக்குள் முட்டிமோதவிடும் வகையில் தலித்தியம் பிரசாரப்படுதப்படுகிறது. தாமும் அதிகாரத்துக்கு எதிராகப் போராடச் சொல்கிறோம் என்ற பெயரிலான இவர்களது இலக்கற்ற மோதல் இவ்வாறு ஐக்கியப்பட வேண்டிய சக்திகளையே தமக்குள் சண்டையிடத்தூண்டுகிறது. இவர்களுக்கு சோஷலிஸக் குறிக்கோளோ, மனிதகுல விடுதலையோ, எந்த ஒரு இலக்கோ கிடையாது. இவர்கள் மோதவிடும் குட்டி அதிகாரங்கள் அனைத்துக் கும் மேலே உள்ள மூல ஊற்று பாதுகாப்பாக இருக்க விடப்படுவதைக் கவனிக்காமல் அல்லது கண்டும் காணாதது போல நடித்து, இந்த மக்கள் விரோத நிலைப்பாட்டில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சமாதானமாகத் தீர்க்கக்கூடிய மக்கள் மத்தியிலான சிறிய முரண்பாடுகள் இரத்தம் சிந்தும் யுத்தமாக மாற்றப்படுகிறது.

இதன் தவறை உணர்த்தி, சோஷலிஸ எதிர்காலம் நிச்சயம் என வலியுறுத்தும் இயங்கியல் - பொருள் முதல்வாத உலக நோக்கும் வரலாற்றுப் பொருள் முதல் வாதமும் பற்றி விளக்குவோமாயின் இது சரியாக இருக்கமுடியாது என்பது இவர்களது சந்தேகவாதம். இதை ஏதோ ஒரு ஆத்மார்த்த உண்மைபோலக் காட்டி உண்மை எதுவும் இருக்கமுடியாது எனத் தர்க்கித்து சுலபமாக நிராகரித்து விடுகிறார்கள். அவர்களுக்கு முன்னால் எல்லாம் குழம்பிப் போய்க்கிடக்கிறது. அவர்களும் குழம்பி விட்டனர். அவர்கள் பங்குக்கு மேலும் குழப்பியடித்து வருகிறார்கள்.

மாறாக, மார்க்ஸியர்கள் தெளிவாக இருப்பதற்குக் காரணம் ஏதோ ஒரு ஆத்மார்த்த - மாறா உண்மையைப் பிடித்துவைத்துக் கொண்டிருப்பதால் அல்ல. புறநிலை இயக்கப் போக்கை ஆராய்ந்து,

படிப்பகம்

www.padippakam.com



குழப்பத்தினூடே வெளிப்படும் திசைமார்க்கத்தைக் கண்டறிந்து, அதன் வழியே செயற்பட்டு, மனிதகுல விடுதலை நோக்கி சமூக மாற்றத்துக்காக உழைக்க முடிவதில்தான் மார்க்ஸியரின் வெற்றி தங்கியுள்ளது. இத்தகைய மார்க்ஸிய உலகநோக்கில் பஞ்சமர் இலக்கியம் படைக்கப்பட்டது. அது பலமான ஐக்கிய முன்னணியில் உறுதியான சாதகத்தன்மையை வெளிப்படுத்தியது. வெற்றியின் நம்பிக்கையுடன் பிறந்து, மேலும் விடுதலை சாத்தியம் என்பதைக் காட்டியது. அன்றைய காலம் சர்வதேசத்தளத்தில் பாட்டாளிவர்க்க எழுச்சியும், சோஷலிஸ நம்பிக்கைகளும் நிதர்சனமாய் இருந்த புறச்சூழல் உடையது. இன்று போலக் குழப்பங்களும் அவநம்பிக்கையும் நிறைந்ததல்ல. இன்றைய குழப்பநிலை முடிவுற்று மீண்டும் மக்கள் எழுச்சி சாத்தியம் என்பதையும் பஞ்சமர் இலக்கியம் வெளிப்படுத்தி நிற்கும் (அதற்கு முந்திய குழப்பநிலை பேரெழுச்சியூடாக மாற்றப்பட்டதைக் காட்டிய வகையில்).

பஞ்சமர் இலக்கியம் டானியலின் மறைவின்பின் ஈழத்தில் தொடரப்படவில்லை. இதற்கு டானியல் தொடர்ந்து வாழவில்லையென்பது மட்டும் காரணமல்ல. அவருடைய இறுதி நாவலான 'பஞ்சகோணங்கள்' தேசிய இன நெருக்கடியின் முனைப்புக்குப் பஞ்சமர் இலக்கியம் முகங்கொடுக்க வேண்டியிருந்ததை வெளிப்படுத்தியிருந்தது. அவர் தொடர்ந்து வாழ்ந்திருப்பின் அதைவிடவும் அதிகமாக தேசிய இன நெருக்கடிக்குரிய சூழலை சித்திரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பார். தலித் மக்களுக்கு இருக்கும் நியாயமான அடிப்படைப் பிரச்சனைகள் பின் நவீனத்துவச் சிந்தனை முறைமையால் தவறான போராட்டங்களுக்கு இட்டுச் செல்லப்படுவது போலவே, சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்கான போராட்டமும் மார்க்ஸிய வழிகாட்டலற்ற (பிரதானமாக ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்துக்கு எதிரான) போராட்ட முறைகளால் சிக்கலான கட்டத்தை இன்று அடைந்துள்ளது. இந்தச் சிக்கலுக்கு ஊடாகவும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தமிழ் மக்களின் சார்பாக நின்றே இன்றைய எதிர்ப்பு இலக்கியம் படைக்கப்பட்டாக வேண்டும். அந்த வகையில் பஞ்சமர் இலக்கியம் பின்போடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பின் நவீனத்துவச் சிந்தனை முறை வரித்துக்கொண்டு, மக்களிடையே குரோதங்களைத் தூண்டும் அதன் பண்புடன் தலித் இலக்கியத்தில் நாட்டம் செலுத்தப்பட்டதால், அதனைப் பிரசாரப்படுத்திய அ.மார்க்ஸ் "தலித்துக்கள் தங்கள் அடையாளத்துடன் தலித் இயக்கங்களாக ஒன்றிணைதல்" வேண்டும் என்கிறார்.[44] பஞ்சமர் இலக்கியத்தின் அனுபவம் இதற்கு விரோதமானது. அங்கே "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க" அணியில் சகல சாதி அடையாளங்களையும் இழந்து, தலித்களும் தலித் அல்லாதோரும் ஓரணியில் திரண்டு, சாதியத்தைத் தகர்க்கும் ஒரே குறிக்கோளுடன் போராட்டம் நடந்தது.



இது சாத்தியமற்ற பெருங்கதையாடல் என வெறும் புனைவுகளில் மயங்குகிறவர்கள் இந்த அண்மைக்கால வரலாற்றுப் படிப்பினையைக் கவனத்திலெடுத்தல் அவசியம். அப்போராட்ட அனுபவங்களே பஞ்சமர் நூல் வரிசைப் படைப்புகள்.

அடையாளங்களை தலித்துகள் இழந்து பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்ட வேண்டியது வரலாற்றுக் கடமையுமாகும். இனக்குழு முறைமையின் இரத்தக் கலப்பை அனுமதிக்கும் புறமண முறையின் மீது இரத்தப்புனிதம் பேணும் அகமணம் மேல்நிலை எய்தியதே சாதியைத் தோற்றுவித்தது. அந்தவகையில் வரலாற்றுப் பாய்ச்சலுக்கு அவசியப்பட்டதான இனக்குழு முறைத்தகர்ப்பு நிகழாமலே சமூகமாற்றங்களுக்கு முகங்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். இனக்குழு அடையாளங்களைத் தகர்க்க வேண்டிய அவசியத்தை இன்று முகங்கொள்கிறோம். "புறமணத்தின் மீது அகமணம் மேல்நிலை கொண்டதே சாதியின் உருவாக்கமாகும்" என்ற அம்பேத்கர் கருத்தைக் குறிப்பிடும ரவிக்குமார் சுத்தம் X அசுத்தம், புனிதம் X தீட்டு எனும் கருத்தியல் அடிப்படையில் சாதியம் கட்டமைக்கப்பட்டதைக் காட்டுவார்.[45] வெற்றி பெற்ற இனக்குழுக்கள் பிராமணர், சத்திரியர், வைசியர் என்ற சுத்தமுள்ள, படிமுறைப்படி இறங்கிவரும் புனிதமுடைய வர்ணத்தவர்களாய்த் தம்மை உருவாக்கிக் கொண்டு, வென்றடக்கப்பட்ட இனக்குழுக்களை சுத்தங்குறைந்த சூத்திரர் எனும் நாலாம் வர்ணமாயும் சுத்தமற்ற தீட்டுள்ள வர்ணாசிரமத்துள் அடங்காத பஞ்சமர்களாயும் ஆக்கினர். இவ்வாறு என்றென்றைக்கும் மக்கள் மாறா அடையாளங்களுடன் பிரிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தைப் பொறுத்தவரை முதல் மூன்று வர்ணங்களினுள்ளும் வெள்ளாளரை அடக்கமுடியும் (பிராமணருக்கு சமமாக சைவ வேளாளர் ஆன்மீகத்தலைமை நாட்டமுள்ளவர்; அரசர்களாய் இருந்ததுடன் அரசியலதிகாரங்களைப் பேணுகின்றனர்; பெரும் வணிகர்களாயுள்ளனர்). உடலுழைப்பில் ஈடுபட்ட சொத்துடைமையற்ற நாலாம் வர்ணமான சூத்திரர்களாயும் மிகப்பெரும்பான்மையான வேளாளர்கள் காணப்படுகின்றனர். இவ்வாறு வர்ணக்குழப்பங்கள் காணப்பட்ட போதிலும் வெள்ளாளர் என்ற சாதி அடையாளம் எங்கு போனாலும் மாறாமல் நிரந்தரப்பட்டது. வர்ணக் கோட்பாடு தமிழ்ச்சூழலில் ஏற்ற மாற்றங்களுடன் பிரயோகிக்கப்படுகையில் பிராமணர்கள் தமக்கான முதலிடத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர். யாழ்ப்பாணத்தில் முதலிடத்தைத் தமதாக்கிக் கொண்ட வெள்ளாளர்கள் வர்ணாசிரமத்தின் அசைக்கவியலாத பிரதிநிதிகளாய் உள்ளனர். ஆக, இது ஒரு அதிகாரக் கருத்தியல்.

இத்தகைய வர்ணப் பிளவும், இனக்குழுவாழ் முறை சார்ந்த இரத்தப் புனிதம் பேணலும் இன்றைய வாழ்நிலைக்கு முற்றிலும் பொருத்தமற்றதாகிவருகிறது. முதலாளித்துவ ஜனநாயகச்சூழல் குறைந்தபட்சம் சட்டத்தின் முன் சமத்துவத்தை வழங்குகிறது. உற்பத்தி சக்தியின் கட்டற்ற விருத்தி எவரும் சுதந்திரமாய் எத்தொழிலையும்

படிப்பகம்

www.padippakam.com



தெரிவுசெய்யவும் அதனைக் கற்பதற்கான வாய்ப்புகளையும் பெருக்கியுள்ளது. இனியும் மூளை உழைப்பும் உடலுழைப்பும் பிரிந் திருப்பதற்கான காரணங்கள் இல்லை. அனைவரும் உடலுழைப்பில் ஈடுபட வேண்டுமென்பதும், உழைப்பதே போற்றுதற்குரிய பண்பு என்பதும் இன்றைய புறநிலை யதார்த்த நிர்ப்பந்தம். சுரண்டுகின்ற வேலையற்ற வீணர்களில்லாத புதிய சமூகத்துக்காக முன்னேறிய உழைக்கும் மக்கள் போராடி வருகின்றனர். அப்படிப்பார்க்கையில் உழைப்பவர்கள் புனிதர்கள், தண்டச்சோறுண்ணும் சுரண்டற் கும்பல் அசுத்தக்கூட்டம். தத்தமது சாதி அடையாளங்களைக் கடந்த அத்தகைய புதிய கருத்தியலை மேன்மையடையச் செய்யப் பல தரப்பினரும் முன்வரும் நிலைமைக்கு இன்றைய பின் நவீனத்துவப் பிளவுவாதம் குந்தகம் புரிகிறது.

தலித் மக்கள் அனைவரும் தத்தமது சாதி அடையாளங்கள் களைந்து ஓரணி திரள்வது சாத்தியம்; அடையாளம் இழக்கப்படாத பட்சத்தில் சாதியப்படி நிலை ஏற்படுத்திய புனைவுகளின் பாதிப்பு அங்கேயும் வெளிப்படும். அந்த அணி ஏனைய ‘உயர்’ சாதிகளைச் சேர்ந்தவர்களையும் உறுப்பினராக்க வலிமையுடையது. தலித் மக்களை மைய சக்தியாகக் கொண்டு அனைவரையும் ஐக்கியப்படுத்தியுள்ள அந்த அமைப்பு மார்க்ஸிய சித்தாந்த அடிப்படையில் சாதியத்தைத் தகர்க்கும் போராட்டத்திற்குத் தலைமை தாங்கவல்லது. இதனுடைய வெற்றிக்காக ஒவ்வொரு சிறிய, பலவகைப் போராட்ட வடிவங்களும் கையாளப்படும். மாறாக, இவற்றினுள்ளே முரண்படுத்திப் போராடத்தூண்டும் சிறு கதையாடல்கள் அனுமதிக்கப்பட மட்டாது. ஒட்டுமொத்தமான சமூக மாற்றப் பெருங்கதையாடல் என்பதான சாதியத்துக்கு எதிரான ஐக்கியப்பட்ட போராட்டம் பெருங்கதையாடல் என்பதான சாதியத்துக்கு எதிரான ஐக்கியப்பட்ட போராட்டம் காரிய சாத்தியமானது. இதனை “தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்” பட்டவர்த்தனமாக உலகுக்கு ஏலவே உணர்த்தியுள்ளது.

இத்தகைய முன்னுதாரணமிக்க வரலாற்றுப் படிப்பினையாக உள்ள அதன் புரட்சிகரப் பண்பை இருட்டடிப்புச் செய்யவும், தவிர்க்கமுடியாமல் கூற வேண்டி வந்ததால் திரித்துப்புரட்டவுமான முயற்சிகள் தொடர்ந்தபடியுள்ளன. “அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டு வரும் சமூக ஏற்புடைய உணர்வுக்கு அத்திவாரமாக அமைந்தது 1930, 1940களில் இடதுசாரி இயக்கம் தொடக்கிவைத்த சமூக சமத்துவப் போராட்டங்களே. சமாசன. சமபோசனப் போராட்டம் (பஸ் முதல் பள்ளிக்கூடம் வரை சமாசனப் போராட்டம் பரவிற்று) தீண்டாமை எதிர்ப்பியக்கம் ஆகியன இப்போராட்டத்தின் முக்கிய மைல்கற்களாகும். இந்த வரலாற்றில் பவுல், செல்லத்துரை, சுப்பிரமணியம், தர்மகுலசிங்கம், நாகரத்தினம், டானியல் முதலியோர் முக்கிய இடம் பெறுவர்” எனக்குறிப்பிட்ட கையோடு “இந்த வரலாறு பற்றி இன்னும் எந்தத்தொழில்முறை



ஆராய்ச்சியாளரும் கவனம் செலுத்தவில்லை” என்றும் விசனம் தெரிவித்துள்ளார் கா.சிவத்தம்பி.[48]

தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான தீரமிக்க ஆயுதம் ஏந்திய மக்கள் போராட்டத்தை நீர்த்துப் போகும் வண்ணம் வெறும் “தீண்டாமை எதிர்ப்பியக்கம்” எனக்குறிப்பிடும் கா.சிவத்தம்பி அதனையும் முடிந்தவரை ஏனைய சந்தர்ப்பங்களில் கூறாமல் இருட்டடிப்புச் செய்துள்ளமையை, அவரது “யாழ்ப்பாணம்; சமூகம், பண்பாடு, கருத்துநிலை” எனும் நூலில் காணலாம். அப்போராட்டம் பற்றிய ஒரேயொரு வரலாற்று ஆவணப்பதிவாகவுள்ள “சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்” எனும் நூலைப்புறங்கையால் தட்டிவிட்டு, அங்கேயும் புலமையாளர் ஆய்வு இல்லை என வருத்தம் தெரிவிக்கிறார்; அந்த நூல் வெகுஜனன், இராவணா என்கிற இருவரது பக்கச் சார்பான படைப்பு என்பது போல எழுகிறார். உண்மையில் அந்த நூல் இருவர் வரிவடிங்ககொடுத்த போதிலும், ஆய்வுக்குழுவொன் றினால் பூரணமான சமூக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, முடிந்தவரை முழுமையான வரலாற்றுத் தகவல்களைத் தொகுத்து வெளிப்படுத்திய ஒன்று. அந்தப்பண்பு குறித்து பலவிமர்சகர்கள் விதந்துரைத்துள்ளனர். குறிப்பாக, சி.தில்லைநாதன் அவர்கள் விரிவாக அந்நூலுக்கு எழுதிய ஆங்கில விமர்சனம் பரந்த வரவேற்பைப் பெற்றது. ஆங்கிலத் தினசரியில் அதனைப் படித்த பல சிங்கள அறிஞர்கள் அந்த நூலின் ஆங்கிலப் பதிப்புக்கோரிக் கடிதங்கள் எழுதியிருந்தார்கள்.

தமிழ்மக்கள் மத்தியில் புலமையாளர்கள் மட்டத்திலும் வெகுஜனத் தளத்திலும் தீண்டாமை ஒழிப்புப் போராட்ட வரலாறும் அந்த நூலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவது ஆச்சரியப்படத் தக்கவொன்றல்ல. அவ்வாறு செய்யும் பிரதான நோக்கத்துடனுந்தான் தமிழின வெறியை யாழ்ப்பாணத்தின் வெள்ளாளத் தேசிய வாதத் தலைவர்கள் பூதாகாரமாக்கினர். அவ்வாறாகி, இளைஞர்கள் கிளர்ச்சியூட்டப்பட்டு இனவெறி யுத்தத்தில் ஆகுதியாக்கப்பட்டு, அவர்கள் தலைமையை எண்பதாம் ஆண்டுகளில் கையகப்படுத்தினர். தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை வெறும் ‘எதிர்ப்பியக்கமாகக்’கண்ட கா.சிவத்தம்பி இந்தத் தமிழ் இளைஞர் பங்கேற்பை ‘இளைஞர் எழுச்சி’ எனக்கொண்டாடி அதன் பின்தான் யாழ்ப்பாணமே புரட்டி எடுக்கப்பட்டதான ஒரு தோற்றத்தை மேற்படி தனது நூலில் ஏற்படுத்தத் தவறவில்லை. வெள்ளாளத் தேசியவாதமாக இருந்ததைத் தமிழினத் தேசிய உணர்வாக சிங்களப் பேரினவாத இராணுவத்தின் உதவியுடன் மாற்றியதைத்தவிர இளைஞர் இயக்கங்கள் வேறெந்த அசைவியக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தின் சாதகமான வெற்றியின் சாராம்சத்தைப் புரிந்துகொள்ளாத கா.சிவத்தம்பி பின்தங்கிய சில பகுதிகளில் இன்னமும் சில ஆலயங்கள் திறக்கப்படவில்லையென்பார் - அத்தகைய ஆலயங்கள் இந்த இரண்டு தசாப்தங்களின் பின்னும், மிகப்பாரிய விலை கொடுக்கப்பட்ட பிறகும், அவர் போற்றும் எந்தவொரு இளைஞர்

படிப்பகம்

www.padippakam.com



இயக்கங்களாலும் திறப்பதற்கு முன்முயற்சி எடுக்கப்படவுமில்லை, இன்னும் திறக்கப்படவுமில்லை. தவிர, தீ.ஒ.வெ.இ. போராட்டம் வெறும் மாவட்டபுர ஆலயப்பிரவேசப் போராட்டமல்ல. அதன், சாரத்தை தமிழ்த் தேசிய சக்திகள் படித்து, உள்வாங்கி, அதன்பேரில் தம்மை மாற்றிப் புனைய முன்வராதவரையில் எமக்கு மீட்சியில்லை என்பதையே இந்த வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது. தொடர்ந்து இருட்டடிப்புச் செய்வதானது தற்கொலைக்குச் சமானம்.

கா.சிவத்தம்பி அந்தப் போராட்டம் பற்றி எழுதுவதைவிட இருட்டடிப்புச் செய்வது மேல் என்ற உணர்வை நாம் வந்தடைவோம். அவருடைய "திராவிட இயக்கக் கருத்து நிலையில் இன்றைய பொருத்தப்பாடு - ஒரு வரலாற்று நோக்கு" என்ற கட்டுரையைப் படித்தவுடன், "திராவிட இயக்க வரலாற்றின் சமூகப் பின்புலத்தை நோக்கும்பொழுது, திராவிட இயக்கம் என்பது பிராமணரல்லாத சமூகங்களினது அவற்றின் அதிகாரப் படிநிலை வைப்பு முறையை (hierarchical order) மீறாது அமைந்த படிப்படியான அரசியல் சமூகச் செயற்பாடு வீச்சுகளுக்கு உதவி, அவற்றை அவற்றின் மேல்நிலை அசைவியக்கத்துக்கு (upward social mobility) உதவியுள்ளது என்பது நன்கு புலனாகிறது. இந்த மேல்நிலை அசைவியக்கத்துக்கான செயற்பாடு வீச்சு அதிகரித்தபொழுது, மேற்கிளம்பும் சாதியினருக்கு நேரடியாக மேலேயுள்ள சாதியினர் அதனை எதிர்ப்பது ஒரு வரலாற்றுண்மை யாகும். எடுத்துக்காட்டாக நாடார்கள் மேனிலையாக்கம் இலங்கையில் மாவிட்டபுரத்தில் நடந்த போராட்டம் (1968)" என்பது கா.சிவத்தம்பி மேற்படி கட்டுரையில் குறிப்பிடும் ஒரு அம்சம்.[49]

நாடார் சமூக மேனிலையாக்கம் திராவிடரியக்க எழுச்சியின் விளைவு என்பது போன்ற மயக்கம் இங்கே உண்டு; பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி திராவிடரியக்க எழுச்சிக்கு முன்னரே நாடார் சமூக மேனிலையாக்கம் வரலாறாகிவிட்டது. இந்தக் குழறுபடியல்ல இங்கே எமக்குப் பிரதானம். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டத்தை வெறும் மாவிட்டபுர ஆலயப்பிரவேசப் போராட்டமாகக் குறுகத்தறித்து, அதனை 'அதிகாரப்படிநிலை வைப்பு முறையை மீறாது' ஏதோ ஓரிரு சாதிகள் சாதிப்படிநிலையில் மேனிலையாக்கம் அடைய நடாத்திய இயக்கமாய் கா.சிவத்தம்பி கொச்சைப்படுத்துவதுதான் எமது கவனிப்பை உடன் ஈர்ப்பது. நாடார் சமூகப் போராட்டம் போல் ஒரு தனிச் சாதியினதோ அல்லது ஓரிரு ஐக்கியப்பட்ட சாதிகளினதோ போராட்டமல்ல அது. தீண்டாமையை ஒழிக்க அனைத்து சாதியினர் மத்தியிலுமிருந்து திரண்ட மக்கள், சாதிய உணர்வுகளைக் களைந்து வெகுஜன இயக்கமாய் ஸ்தாபனமயப்பட்டு ஒருவர் போல் ஐக்கியப்பட்டுப் போராடிய போராட்டம் அது. 'அதிகாரப்படிநிலை வைப்பு முறையை மீறாது' அந்தப்போராட்டம் நடந்ததென்ற கா.சிவத்தம்பியின் விசமத்தனமான திரிப்பு எளிதில் மன்னிக்கப்படத்தக்கதல்ல.



மேற்படி கட்டுரையில் கா.சிவத்தம்பி இவ்வாறு கூறுகிறார்: "1920 - 30 களில் நடந்த நாடார் - வேளாளர் சண்டைகள், இப்பொழுது நடக்கின்ற தேவேந்திர குல வேளாளர் - தேவர் சண்டைகள் ஆகியனவற்றை இக்கண்ணோட்டத்திற் பார்ப்பது அவசியம் ஆகும். இலங்கையிலும், யாழ்ப்பாணத்திற் சாதிச்சண்டை உச்சநிலைப்பட்டு நின்ற 1968 இல் (மாவிட்டபுரம் கோயிலினுள் புகுதல் விவகாரத்தில்) உண்மையான சண்டை நளவர் - பள்ளருக்கும் கோவியருக்குமே நடைபெற்றது."[50]

நேரடியாக மேலேயுள்ள சாதியினருடன் ஒவ்வொரு சாதியினரும் மோதும் சாதிச்சண்டைகளில் குளிர்காயும் கெட்ட நோக்கத்துடனேயே யாழ்ப்பாணத்திலும் சாதிச்சண்டை நடந்ததான வரலாற்றுத்திரிபை அவர் புனைகிறார். சாதியத்துக்கு எதிரான வீறுமிக்க அப்போராட்டத்தை, அது உச்சநிலையிலிருந்தபோது இதேபோல நளவருக்கும் கோவியருக்குமிடையேயான யுத்தமெனத் திரித்த இன்னொரு கனவான் தளபதி அ.அமிர்தலிங்கம். அதற்கான தண்டனையை அவர் உடனடியாகவே அனுபவிக்க நேர்ந்தது - 1970 தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டதற்கு இத்திரிபுபடுத்தலே பிரதான காரணமாகும்.

சாதியத்துக்கு எதிரான போராட்டத்தில் கையாளப்பட்ட பல வடிவங்களில் ஆலயப்பிரவேசப் போராட்டம் ஒன்று. மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் தெரிவுசெய்யப்பட்டதற்கு விசேட காரணம் உண்டு. யாழ்ப்பாணத்துக்கு குறியீடாக அமைவது நல்லூர் முருகன் ஆலயம்; இது ஜனநாயக உணர்வுடைய மத்தியதர வர்க்கத்தினரின் ஆலயம் என்பதால் இங்கு சமாதானமாகவே சகலருக்குமாய் கோயிற் கதவுகள் திறக்கப்பட்டுவிட்டது. மாவிட்டபுரம் பழைமைபேண் நிலப்பிரபுத்துவ சக்திகளது கோயில் என்பதுடன் யாழ்ப்பாணம் முழுமையிலும் பிராமணர்க்கு சொந்தமாயுள்ள ஒரேயொரு பொதுக்கோயில். இங்கே ஆலயப்பிரவேசப் போராட்டம் தொடங்கியவுடன் தடுத்துநின்ற தலைமைச் சக்தி, யாழ்ப்பாணத்தின் கனக்கப்படித்த (இலண்டன் மகாராணிக்கே கணிதம் படிப்பித்த) கனவான் சுந்தரலிங்கம் என்ற வெள்ளாளத் தலைவர். இந்தப் பிராமண வெள்ளாளக் கூட்டை மறந்து களத்தில் மோதிய மிகச்சில கோவியர்களை வைத்து கோவியர் சமூகம் முழுமையையும் கா.சிவத்தம்பி 'சாதிச்சண்டையில்' இழுத்து விடுவது ஏன்?

தமிழ்நாட்டில் சாதிச் சண்டைகளை மூட்டி உலகமயமாதல் டாலர்த் தெய்வங்களைக் குஷிப்படுத்த. இப்போது அவருக்குள்ள ஒரேயொரு வருத்தம் உலகமயமாதல் கொள்ளைக்காகத் தூண்டப்பட்ட சாதிச்சண்டைகளை அது சாத்தியப்பட்ட பின் என்ன செய்வது என்பதுதான். அவர் சொல்வதைக் கேட்போம்: "இதற்குப் பதில் காண முனையும் பொழுது, இன்றைய உலகின் செல்நெறி ஒரு சுவாரசியமான, இரு துருவப்பாட்டைக் கொண்டது எனும் உண்மையைப் பதிவு

படிப்பகம்

www.padippakam.com



செய்தல் அவசியம். அதாவது, இந்த உலகம் ஒரே நேரத்தில், ஒரு பூகோளக் கிராமமாகவும் (Global village) அதே நேரத்தில், இனத்துவ, பண்பாட்டுத் தனித்துவங்களைப் பேணத்துடிப்பதாகவும் இயங்குகிறது. தொழில் நுட்ப வளர்ச்சியும் தொடர்பியற் பரம்பல்களும் முதலாவதனை எடுத்துரைக்க, இலங்கை முதல் பொஸ்னியா, பர்மா, பிலிப்பைன்ஸ் வரையுள்ள நாடுகளில் இரண்டாவதற்கான உதாரணத்தைக் காண்கின்றோம்.

இந்த இரண்டு நிலைகளையும் இணைப்பது என்பதுதான் இருபத்தோராம் நூற்றாண்டின் சவாலாக இருக்கப் போகிறது"[51]

பல்தேசியக் கம்பனிகளின் வேட்டைக்காடாக்குவதற்காக பூகோளக் கிராமமாய் இலங்கையை ஆக்கி, அதை வெற்றிகரமாகச் சாதிப்பதற்காக இனயுத்தத்தை (தமிழகத்துக்கு சாதிச்சண்டைகளைத் தூண்டுவது போல) தூண்டியவர் முன்னாள் (முதலாவது) அனைத்து அதிகாரங்களையும் கையகப்படுத்திய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன. தமிழர் மத்தியிலிருந்த பலாத்கார வடிவங்கள் சிங்கள இளைஞர்களாலும் கையேற்கப்பட்டு ஜே.வி.பி. யின் ஆயுதப்போராட்டம் வெடித்துக் கிளம்பியபோது ஜே.ஆர். திருவாய்மலர்ந்தருளிய ஒரு பொன்மொழி, "வன்முறையை இல்லாதொழிக்க முடியாது. வேண்டியிருப்பது யாதெனில், இந்த வன்முறையுடன் கூடிவாழ்வது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வது தான்." கா.சிவத்தம்பி வேண்டி நிற்கும் 'இணைப்பு' இது போன்றதுதானோ?

கா.சிவத்தம்பி இந்த சாதியச் சச்சரவைச் சகஜமானதாக ஆக்குவதற்காக தானே பின்நவீனத்துவச் சிந்தனை முறைமையைத் துணைக்கு அழைப்பதுடன் அதன் தமிழ்ப்பிதாமகரான அ.மார்க்ஸ் அவர்களையும் அதிகமாயே துணைக்கழைக்கிறார். ஒருவகையில் அ.மார்க்ஸ் ஆபத்தற்றவர். அவர் தெளிவாகவே தன்னை மார்க்ஸியத்தின் விரோதியெனக் காட்டி, பின் நவீனத்துவம் ஒன்றே சர்வரோக நிவாரணி என்று கூறிவருகிறார். பின் நவீத்துவத்தின் இயலாமை வெளிப்படும் போது அவரும் காணாமற் போய்விடுவார். கா.சிவத்தம்பியோ மார்க்ஸியமும்தான். பின்நவீனத்துவமும்தான், அதுவுந்தான், இதுவுந்தான் எனத் தானும் குழம்பி ஏனையவரை மிகமோசமாய்க் குழப்புகிறார். அவரை ஒரு மார்க்ஸிய சிந்தனையாளராகக் காணும் சிலர் அவரது குழறுபடிகளால் மயங்கி பிளவுவாதச் சிந்தனைகளால் சிதைய இடமுண்டு. அவரது மார்க்ஸிய விரோத - மக்கள் விரோதக் கருத்துக்களை அம்பலப்படுத்தும் நூல் ஒன்று அவசிய அவசரப் பணியாக ஆகியிருப்பதை மறந்துவிடக்கூடாது. இங்கு, இந்தக்கட்டுரைக்கு அவசியப்பட்ட அளவில் மட்டும் அவரது கேடான நோக்கத்தின் ஒரு பகுதியைக் கண்டோம். மீண்டும், சாதியத்துக்கெதிரான போராட்டத்தின் போக்குடன் இணைந்து முன்செல்வோம்.



இலங்கையில் சாதியக் கட்டமைப்பும் அதற்கெதிரான போராட்டமும் சார்பான அனுபவங்களைச் சுருக்கமாகப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1. சாதியம் வர்க்க சமூகத் தோற்றத்துடன் தோன்றிய அதிகாரத்துவக்கருத்தியல். பிராணமரல்லாத சமூகத்திலும் சாதியம் வலுமையுடன் செயற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் சாதியக்காவலராய் உயர்வர்க்க வெள்ளாளர்கள் விளங்கினர்.

2. மட்டக்களப்பு (கிழக்கு மகாணம்) பிராமண வழிபாட்டு முறையற்ற, இனக்குழுச் சடங்கு முறைகள் நிறைந்த சமூகம். சாதிய முறைக்கான பூரணமாற்றம் நிகழாது (புறமண முறை நீடிப்பது) ஆயினும் சாதிப்பெயர்களுடன் பார்க்கப்படுவன. சாதியப்படிநிலை இறக்கம் அதிகமற்றது. அங்கு சாதிமோதல்கள் ஒப்பீட்டளவில் குறைவு.

3. ஒடுக்கப்படும் சாதிகளிடையே, மற்றும் சாதிகளிடையேயுள்ள உழைப்பாளர்களிடையே மோதல்களை முடிந்தவரை தவிர்க்க முடியும். பரஸ்பரப் புரிந்துணர்வுகளை வளர்த்து, முகங்கொடுக்கும் பொதுப் பிரச்சனைகளில் அடிப்படையில் ஒரே ஸ்தாபனங்களில் ஐக்கியப் படுத்தி, பொதுவான போராட்டங்களுக்கூடாக மேலும் உருக்கு உறுதிமிக்க ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும்.

4. தனி ஒரு சாதிக்கு எதிரானதாகப் போராட்டம் சித்திரிக்கப் படலாகாது. சமூகமாற்றத்தை வேண்டி நிற்பதும், சாதியத்தைத் தகர்ப்பதுமான இலட்சிய உணர்வு அவசியம்.

இந்த அனுபவங்களினூடாக இன்னொரு அடிப்படையான அம்சம் தீர்க்கப்பட முடியும். சாதியம் அடித்தளம் சார்ந்ததா, மேற்கட்டுமானம் சார்ந்ததா? இது சார்பாகப் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்:

1. சாதியக் கருத்தியல் பலமுடையதாக இருந்த யாழ்ப்பாணத்தில் சாதியத்துக்கு எதிரான போராட்டம் வெடித்தது. முதலில் பண்பாட்டு அம்சங்கள் சார்ந்தது. மேற்கட்டுமானத்தளத்தில் போராட்டம் வடிவம் பெற்றது. ஆயினும் உற்பத்தி உறவு சார்ந்த அடித்தள மாற்றத்துடன் அது தொடர்புடையதாயிருந்தது.

2. சாதியக்கருத்தியல் வலுமையுடன் செயற்படாத, அதற்குரிய அதிகாரம் பெற்ற சாதியின் ஆளுகை இல்லாதநிலையில் சாதிய அடிப்படையிலான உற்பத்தி உறவு வலுமை பெறவில்லை. அங்கு சாதியப் போரட்டங்கள் வெடிக்காதமைக்கான காரணமாயும் அது காணப்படுகிறது.

3. சாதியத்துக்கு எதிராக அடித்தட்டு, மேற்கட்டுமானம் ஆகிய இரு தளங்களிலும் போராட்டம் அவசியம். சாதியக்கருத்தியலுக்கு எதிராகப் பண்பாட்டுப் பேரியக்கங்கள் முன்னெடுக்கப்படுவது எப்போதும் அவசியம். சாதிகடந்த அனைத்து மக்களும் ஐக்கியப்பட்டுப்

படிப்பகம்

www.padippakam.com



போராடுவதனூடாகவே வர்க்கங்களை ஒழிப்பதற்காக சமூக பொருளாதார மாற்றத்தைச் சாத்தியமாக்க முடியும் என்ற வகையில் பண்பாட்டுப் பேரியக்கங்கள் அவசியமானவை.

4. சோஷலிஸப் பொருளுற்பத்தி முறைக்கான அடித்தளமாற்றம் சாத்தியமாகி, வர்க்கங்கள் ஒழிந்தால் மட்டுமே வர்க்க அமைப்புத் தோற்றத்துடன் உருவாகிய சாதிமுறையை முழுமையாகத் தகர்க்க முடியும். அந்த வகையில் பாட்டாளி வர்க்கத் தலைமையில் அரசியல் அதிகாரம் வெல்லப்பட்டு, சோஷலிஸப் பொருளுற்பத்தி முறை அமுலாக்கப்பட வேண்டும். அங்கு சாதியப் பொருளுற்பத்தி உறவுப் பேதங்களுக்கு காரணியான உபரி உற்பத்தி அபகரிப்பும் இல்லாமற் போவதால் சாதியின் இருப்புக்கான அடித்தளம் தகர்ந்துபோகும். தவிர, பாட்டாளி வர்க்க அரசில் சாதியவாதிகளுக்கு எதிரான சர்வாதிகாரமும் மக்களுக்கான ஜனநாயகமும் அனுமதிக் கப்படும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் காணப்படுமாதலால் சாதியத்துக்கு எதிரான பரந்துபட்ட பண்பாட்டுப் பேரியக்கத்துக்கான வாய்ப்புகளின் கதவு அகலத்திறக்கப்பட்டிருக்கும்.

5 சமூக மாற்றத்துக்கான வர்க்கப் போராட்ட அரசியல் இயக்கமும் சாதியத்துக்கு எதிரான பண்பாட்டுப் பேரியக்கங்களும் பரஸ்பரம் ஒத்துழைப்புடன் ஒன்றையொன்று சார்ந்தும் உதவி புரிந்தபடியும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

இக்குறிக்கோளுடன், பாட்டாளி வர்க்க அரசியல் ஸ்தாபன வழிகாட்டலில், சாதியத்துக்கு எதிரான வெகுஜன இயக்கம் வரலாற்றுத் தேவையை உத்தேசித்து ஏற்ற வடிவங்களில் அமைக்கப்படுதல் அவசியம். அது கவனம் செலுத்த வேண்டிய அம்சங்களாக பஞ்சமர் இலக்கியம் வகைப்படுத்தித் தருவன -

1. அரசியல் கிளர்ச்சிகளினூடாக மக்களை எழுச்சியடையச் செய்வது. வெகுஜன ஸ்தாபனங்களில் வென்றெடுக்கப்பட்டு ஸ்தாபனக்கட் டுக்கோப்புக்குப் பயிற்றுவிப்பது. பல்வேறு வடிவங்களூடாக அரசியல் போதமூட்டுவது.

2. பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்தை சாத்தியமாக்குவது. மார்க்ஸிய சித்தாந்தத் தெளிவு கைவர ஏற்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது.

3. போராட்டத்தின் திசைமார்க்கத்தையும் இலக்கையும் தெளிவாக வரையறுப்பது. அதற்கமைவான நடைமுறைகளுக்கு முன்னுரிமை வழங்குவது. மூல -உபாயம் சார்ந்து இது இருக்கும்.

4. சரியான தந்திரோபாயங்களைத் தெரிவு செய்து அதன் பிரகாரம் இயங்குவது.

5. பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவது. ஐக்கிய முன்னணியில் ஐக்கியமும் போராட்டமும் என்ற கோட்பாட்டின்



அடிப்படையில் செயற்படுவது. சகலமும் ஐக்கிய முன்னணிக்காக என்ற பெயரில் பாட்டாளி வர்க்க நலனைத் தாரைவார்க்காமல், அதனை வென்றெடுக்கப்போராடுவது; அதேவேளை முன்னரைவிடவும் ஆழமான புரிந்துணர்வுடன் உயர்ந்த ஐக்கிய உணர்வை எட்டக்கூடிய வகையில் இதய சுத்தியுடன் போராடுவது. ஐக்கியத்திலிருந்து போராட்டத்தை நடாத்தி உயர்வடிவில் ஐக்கியத்தை எட்டுவது ஐக்கியமும் போராட்டமுமாகியகோட்பாடு. “ஐக்கியம் - போராட்டம் - ஐக்கியம்” என்பதாக இதை வடிவப்படுத்தலாம்.

6. “மக்களிடமிருந்து மக்களுக்கு” என்ற தெளிவுடன் இயங்குவது. மக்கள் நலனை முதன்மைப்படுத்த வேண்டும். மக்களிடமிருந்து கோரிக்கைகள், வழிமுறைகள் ஆகியவற்றைத் திரட்ட வேண்டும். ஸ்தாபனத்தில் கூடி ஆராய்ந்து மார்க்ஸிய ஒளியில் புடமிட்டு ஒருமுகப்படுத்தியவற்றை மக்களிடம் எடுத்துச் சென்று, மக்களுக்கு தலைமைப் பண்புடைய ஸ்தாபனமாகச் செயற்படுத்துவது.

7. கீழிருந்து மேல், மேலிருந்து கீழ் என்னும் ஒழுங்கமைப்பைச் செயற்படுத்துவது. ஜனநாயக மத்தியத்துவமுடைய அமைப்பாக இயங்குவது. மக்களின் வாலைப்பிடித்துச் சென்று வெறும் தன்னார்வச் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தவதாயுமில்லாமல், அனைத்தும் தலைமையிடம் இருந்து வர வேண்டும் என்ற மத்தியப்படுத்தப்பட்ட நடைமுறையாயுமில்லாமல் இருவழிப்பாதையில் செயற்பாடு அமைய வேண்டும். மத்தியத்துவப்படுத்தலுக்கு மார்க்சியர்கள் அதிக அழுத்தம் கொடுத்த வரலாற்று நிர்ப்பந்தங்கள், உலக கம்யூனிஸ இயக்கத்துக்கு பெருங்கேடாக அமைந்தமை குறித்தவிவாதங்கள் இன்று முன்னெடுக்கப்படுகின்றன. தலைமை வழிபாட்டை தகர்த்து வெகுஜன மார்க்கத்தை முன்னெடுப்பதற்கு ஏற்றதாக உயிர்ப்பான ஜனநாயக செயற்பாடு மிக்க மக்கள் இயக்கத்துக்கான ஸ்தாபன வடிவத்தை இதன் வழியே கண்டடைய வேண்டும்.

8. கூட்டு முடிவும் தனி நபர் பொறுப்பும்இருக்க வேண்டும். தன்னிச்சையான செயற்பாடுகளாயில்லாமல் ஸ்தாபனத்தில் கூட்டாக ஆராய்ந்த முடிவுகளை முன்னெடுப்பதாய் இருக்க வேண்டும். ஸ்தாபனத்தில் கதைக்கப்பட்டாயிற்று மற்றவர்கள் செயற்படுத்துவார் கள் என்றில்லாமல் ஒவ்வொருவரும் தமக்குரிய பொறுப்புகளைச் செயற்படுத்த வேண்டும். கூட்டு முடிவில் ஒவ்வொரு தனி உறுப்பினர்க் கும் பொறுப்புண்டு. தனியே ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளில் மட்டுமல்லத் தீர்மானம் தொடர்பான ஒவ்வொரு விடயத்திலும் ஒவ்வொருவர்க்கும் பொறுப்புண்டு. அந்த வகையில் அனைத்துச் செயற்பாடுகளிலும் பூரண அக்கறை வேண்டும், தனக்குரிய பொறுப்பில் முன்னுரிமையுடன்.

9. அனைத்து அம்சங்களிலும் அரசியலுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். விடுதலை இராணுவம் உள்ளிட்ட அனைத்தும் அரசிய லுக்கு உட்பட்டவையாயிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய செயற்பாடுகளின் போது கவனத்தையீர்க்கும் இன்னொரு அம்சம் பல்வேறு முரண்பாடுகளில் எதற்கு முதலிடம் கொடுப்பது என்பதாகும். உலக முதலாளித்துவத்துக்கும், அதன் தலைமைக் கேந்திரமான அமெரிக்க மேலாதிக்கவாதத்துக்கும் மக்களுக்குமிடையேயான முரண்பாடு அடிப்படை முரண்பாடாகும். இந்த அடிப்படை முரண்பாட்டால் தூண்டப்படும் தேசிய, சாதிய, இன, நிற, பாலின, முரண்பாடுகள் இன்றைய மனித சமூகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உலக முதலாளியத்தை முறியடித்து பாட்டாளி வர்க்கத் தலைமையில் சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவது இறுதித் தீர்வை நல்குவதாக இருக்கும். ஆயினும் அதனைத் தடுத்துவிடும் நோக்குடன் மேலாதிக்க சக்தி சாத்தியப்படும் ஒவ்வொரு இடத்துக்குமேற்ப இந்த இரண்டாம்பட்ச முரண்பாடுகளை பிரதான முரண்பாடாக வளர்த்துவிடுகிறது. அப்பிரதான முரண்பாட்டைத் தீர்ப்பதற்காகப் போராடுவதனூடாகவே பாட்டாளிவர்க்கம் அரசதிகாரத்தை வென்று ஏனைய முரண்பாடுகள் அனைத்தையும் தீர்ப்பதற்கான பரந்த ஜன நாயகச் சூழலை வழங்க முடியும். மேலாதிக்கவாதிகள் இந்த முரண் பாடுகளில் ஒன்றை மற்றதற்கெதிராகப் பாவிப்பது போல பாட்டா ளிவர்க்க இயக்கம் செய்வதில்லை. ஆயினும் எதற்கு முன்னுரிமை வழங்குவது என்பதில் வேறுபடக்கூடும். அங்கு பாட்டாளிவர்க்க இயக்க நலனுக்கும், மக்கள் நலனுக்கும் முதன்மை கொடுக்கப்படும்.

இறுதியாக, பஞ்சமர் இலக்கியத்தின் அழகியல் பற்றி. இது குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும். இன்று தமிழ்தலித்திலக்கியம் தலித் அழகியல் தொடர்பாகப் பல பரிமாணங்களில் சாதனை படைத்துள் ளது. பஞ்சமர் இலக்கியமும் மரபு அழகியலுக்கு மாறாகப் பல மீறல்களுடன் புதிய அழகியல் வரையறைகளை வெளிப்படுத்தியிருந் தது. சமகாலத்தில் மராட்டிய இலக்கிய வரலாற்றில் தலித் இலக்கியம் ஏற்படுத்திய அதிர்வை யாழ்ப்பாணத்தில் ‘இழிசனர் இலக்கியம்’, அதன் ஒரு பரிணமிப்பாகிய பஞ்சமர் இலக்கியம் ஆகியன ஏற்படுத்தின. “நடுத்தர வகுப்பு ரசனை பொழுதுபோக்கு சுவையுணர்வோடு மட்டுமே இருந்த வாசகர்களோ அல்லது மேல்தட்டு மதிப்பாய்வாளர்களோ ஒரு புதிய உள்ளடக்கத்தோடு கூடிய இக்கதைகளைப் பாராட்ட முன்வரவில்லை. அவர்களுடைய பாராட்டுதல்கள் எல்லாமே உணர்வுகளை வெளிப்படுத்தும் உத்திகளுக்கு மேலாகச் சென்றதில்லை. ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்தை புரிந்துகொண்டு போற்றுவதற்கு புதிய மதிப்பீடுகளை நாம் நிறுவவேண்டியிருப்பதைப் போலவே, அதன் மொழியைப் புரிந்துகொள்வதற்கு நமக்கு ஒரு புதிய அகர முதலிதேவைப்படுகிறது”[50] என மராட்டிய தலித் இலக்கியத்திற்கு அர்ஜூன் டாங்ளே குறிப்பிடும் விடயம் பஞ்சமர் இலக்கியத்திற்கும் பொருந்தும். மேலும் ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்திற்கான தனியானதொரு திறனாய்வு அளவுகோலுக்கான அடிப்படைக் கோட்பாட்டைக் காணவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.[51]



மக்களைக் கூறுபோட்டுச்சூறையாடும் உலகமயமாதல் மோசடிக ளுக்கு எதிராக உலக மக்கள் விழிப்புறுவது நிச்சயம். சோஷலிஸத்தை அவாவும் எழுச்சியாக அது விளங்கும். பாட்டாளி வர்க்கத் தலைமையில் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியூடாக சுரண்டல் அமைப்பைத் தகர்க்கும் கருத்தியல் மீண்டும் முன்னணிக்கு வரும். அப்போது பஞ்சமர் இலக்கியப் பங்களிப்பு முழு அளவில் மதிப்பிடப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டு, பிரயோகிக்கப்படும். அதனை விரைவுபடுத்தும் வகையில் இன்றைய தலித் சிந்தனையாளர்கள் இந்த வரலாற்று அனுபவத்தை உள்வாங்கி, வளர்த்தெடுத்து, நடைமுறைப்படுத்த முயல்வது பயனுள்ளதாகும். ஒரு உண்மையான தலித் போராளி முதலில் மக்களிடம் செல்ல வேண்டும். மக்களிடமிருந்து கற்க வேண்டும். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். மக்கள் சக்தியே மகத்தானது என்பதை மனப்பூர்வமாய் மதித்தாக வேண்டும். மக்களிடமிருந்து மக்களுக்கு என்பதை நடைமுறைப்படுத்தும் வகையில் மார்க்ஸியத்தைக் கற்று நடைமுறைப்படுத்த முனைய வேண்டும். ஒவ்வொரு விடயத்திலும் மக்கள் நலனை முன்னிறுத்த வேண்டும். மனிதகுல விடுதலையே இறுதி இலட்சியமாய் அமைதல் வேண்டும்.

“சுடர்விடும் விண்மீன் வருவது உறுதி!
சூழ்ந்திடும் இருளும் அகல்வது உறுதி!”

“இழப்பதற்குக் கைவிலங்குகளைத் தவிர எம்மிடம் வேறொன்றுமில்லை. வெல்வதற்கோ புதியதோர் உலகமுண்டு!”

“உலகத் தொழிலாளர்களே,
ஒடுக்கப்பட்ட தேசங்களே,
தலித் மக்களே,
ஒன்று சேருங்கள்!”

### குறிப்புகள்


1. கணேசலிங்கம். செ, அறிமுகம். சோமகாந்தன், (1993). **விடிவெள்ளி**, சென்னை. ப.01.
2. கேசவன். கோ. (1997) **கோயில் நுழைவுப் போராட்டங்கள்**, விழுப்புரம்
3. வெகுஜனன், இராவணா. (1988) **சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்**, யாழ்ப்பாணம். (சென்னைப் பதிப்பு 2009).
4. **மேலது**
5. டானியல். கே. (1994). **பஞ்சமர்**. சென்னை.
   யாழ்ப்பாணத்திலிருந்து 1972ல் வெளிவந்த பஞ்சமர் நாவலின் முதற்பதிப்பு முதலாம் பாகத்தை மட்டும் உடையது. 1994இல் வெளிவந்த இரண்டாம் பதிப்பில் இரண்டாம் பகுதி சேர்க்கப்பட்டு முழுமையாக்கப்பட்டது.
6. டானியல். கே.(1993) **பஞ்சகோணங்கள்**. கோவை. பக்.01-02
7. வெகுஜனன், இராவணா. **முற்குறித்த நூல்**. ப.142
8. தணிகாசலம், க. (1989), **பிரம்படி**. சென்னை.
9. சுபத்திரன், (1970), **சுபத்திரன் கவிதைகள்**, மட்டக்களப்பு. ப.131
10. **மேலது**. ப.147


படிப்பகம்

www.padippakam.com



11. வெகுஜனன், இராவணா **மு.கு.நூல்** பக்.86-87
12. சுபத்திரன். **மு.கு.நூல்** பக்.17-18
13. பசுபதி, (2000), **புதுஉலகம்**,சென்னை, பக். 64 - 65
14. டானியல். கே. (1986) **கானல்**, கும்பகோணம். ப.xxxvi
15. டானியல், கே. (1994) **மு.கு. நூல்.** பக்.04-05.
16. டானியல் கே. "என்கதை", **இலக்கு** ஆகஸ்ட் 1995 ப. IV
17. சிவசண்முகம், ஞா (2000), **மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும்**, மட்டக்களப்பு. பக். 69
18. மௌன குரு. சி. (2000), **ஈழத்தின் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுருவாக்கத்திற்கு கிழக்கிலங்கையிலிருந்து எழும் பதிற்குறிப்புகள்**. மட்டக்களப்பு. (அச்சில்)
19. சிவசண்முகம். ஞா **மு.கு.நூல்.** ப55.
20. **மேலது.** ப.139
21. முத்துவேல் எம். "அறுபதுகளிலான மலையகத் தமிழிலக்கிய ஸ்தாபிதப் பிரயத்தனங்கள்". **புதுவசந்தம்** - தேசிய கலை இலக்கியப் பேரவை, வெள்ளி விழா மலர். (2000). கொழும்பு. பக். 28 - 37
22. தளையசிங்கம். மு.(1984) **முற்போக்கு இலக்கியம்**. சென்னை. பக். 36 - 37
23. டானியல். கே. (ஜூலை 1995) **கோவிந்தன்,** சென்னை. ப.08
24. டானியல். கே. (1993) **மு.கு.நூல்.** ப.81.
25. **மேலது.** பக். 09 -10
26. சிவசேகரம். சி. (1995) **விமர்சனங்கள்**. சென்னை. ப. 12
27. இரவீந்திரன். ந (1993). **இந்துசமய மரபும் சுப்பிரமணிய பாரதியும்**, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் முதுகலைமாணிப் பட்டத்திற்காகச் (பழையபாடத்திட்டம்) சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு. பக்.25 - 59.
28. சுவீரா ஜெயஸ்வால், (1991) **வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**. தமிழாக்கம்: அனுமந்தன். கி, பார்த்தசாரதி. ஆர்.சென்னை. பக்.56-7/347
29. ஆரியர்கள் இந்தியாவினுள் நுழையும் போதே இனக்குழு வாழ்முறை தகர்ந்து வர்க்கப்பிரிவு தொடங்கிவிட்டதாகக் கருதுவோர் உளர். அவ்வாறாயினும் சிந்துவெளியினர் வந்தடைந்த வளர்ச்சி நிலையில் இல்லை. இன்னமும் புராதன பொதுவுடைமை அமைப்பின் எச்சங்களைக் கொண்டிருந்தனர். வெளியே இருந்து குறித்த வரலாற்றுக் கட்டத்தில் வந்தவர்களான ஆரியர்கள் ஒரே தடவையில் வந்தவர்களுமல்ல; வேறுபட்டவளர்ச்சி மட்டங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வந்தனர் என்பது கவனிப்புக்குரியது.
30. அன்தோனவா. கொ. அ, போன்காரத் - லேவின் கி.ம. (1987) **இந்தியாவின் வரலாறு**.பகுதி-1. தமிழகாக்கம் : சோமசுந்தரம். பூ.பாஸ்க்கரன். இரா.மாஸ்க்கோ. பக். 54
31. சட்டோபாத்யாய, 1999, **உலோகாயதம், பண்டைய இந்தியப் பொருள் முதல்வாதம் - ஓர் ஆய்வு.** தமிழாக்கம்: சிங்கராயர். சென்னை.
32. Lancy Farnandes, Satyajit Bhat Kal, (1999). **The Fractured Civillisation. (Caste Society in the throes of change)**. Mumbai.
33. கெய்ல் ஓம்வெட். (1998) **வர்க்கம், சாதி, நிலம்.** தமிழாக்கம்: இராஜாராம். எம்.கே.எஸ். சென்னை. பக்.58-59.
34. மார்க்ஸ். அ.மதிப்புரை, டானியல். கே. (1993) **மு.கு.நூல்** ப.XIV
35. ரகுநாதன் என்.கே. (1996) **தசமங்கலம்**. கொழும்பு பக்.21 - 28.
36. கேசவன். கோ. (1995) **சாதியம்.** விழுப்புரம் பக். 21 - 28.



37. **மேலது**. ப.178.
38. மனோன்மணி சண்முகதாஸ் (1991). **சாதியும் துடக்கும்**. சென்னை ப.13.
39. **மேலது.**
40. செந்திவேல். சி.கா. (1995). **இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள்**. சென்னை. ப. 129.
41. இமயவரம்பன். (1998) **இன ஒடுக்கலும் விடுதலைப்போராட்டமும்**. சென்னை. பக். 55-56
42. டானியல்.கே.1993 **மு.கு. நூல்** பக். 05-06
43. **மேலது** ப.05.
44. மார்க்ஸ் அ. "இன்றைய சமூப் பொருளாதாரச் சூழலில் தலித் விடுதலை". **தலித் கலை - இலக்கியம் - அரசியல்.**
தொகுப்பாசிரியர்: ரவிக்குமார். நெய்வேலி (1996) ப.176.
45. ரவிக்குமார். ப. **மேலது**
46. சிவத்தம்பி கா. (2000) **யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை**. சென்னை. பக்50-51
47. சிவத்தம்பி கா."திராவிட இயக்கக் கருத்துநிலையின் இன்றைய பொருத்தப்பாடு - ஒரு வரலாற்று நோக்கு" **நா.வா.வின் ஆராய்ச்சி** இதழ் 48, ஏப்ரல் 1999. ப.33.
48. **மேலது.** ப.23
49. **மேலது.** ப.43
50. அர்ஜூன் டாங்ளே, (1992) **தலித் இலக்கியம்**. தமிழாக்கம்: தி.க.சதாசிவம், சென்னை. பக்.39 - 48.
51. **மேலது** ப.40

2000

"தமிழ் இனி 2000" மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட இக்கட்டுரை "பின் நவீனத்துவமும் அழகியலும்" நூலில் இடம் பெற்றதுடன் "தமிழ் இனி 2000: இருபதாம் நூற்றாண்டு உலகத்தமிழ் இலக்கிய வரலாறு" தொகுப்பிலும் இடம் பெற்றிருந்தது.

www.padippakam.com



# 2

# சுயநிர்ணய உரிமைத் தீர்வில் இரட்டைத் தேசியம்

பனிப்போர் முடிவுக்கு வந்து பல பத்தாண்டுகள் ஓடிவிட்டன. தற்போது தனிக்காட்டு ராஜாவாக அமெரிக்கா தனது அடாவடித் தனங்களைச் செய்து கொண்டிருக்கிறது. இச்சூழலில் சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதம் மீண்டும் தேவைப்படுகிறது. பனிப்போர் நடாத்திய சோவியத் யூனியன் தகர்ந்து விட்டது உண்மைதான். ஆனாலும் அந்தச் சோவியத் யூனியன் உருவாகும் போது, அதன் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாய் இச்சுயநிர்ணயம் இருந்தது நினைவுகூரத்தக்கது. சுயநிர்ணயக் கோட்பாட்டை உருவாக்கித் தந்த அந்நாடு, இன்று பூகோள வரைபடத்திலிருந்து மறைந்து, பல நாடுகளாய்ப் பிரிந்து கிடக்கிறது. இப்படிப் பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமையைச் சோவியத் யூனியனே முன்வந்து மனமுவந்து வழங்கவில்லை; என்றாலும், சுலபமாகப் பிரிந்து போகும் வகையில் அவைகளைக் கட்டமைத்து வைத்திருந்தது இச்சுயநிர்ணயம்தான்.

சோவியத் பிரிந்து போவதற்கு ருஷ்யப் பெருந்தேசிய இன அகங்காரம் எந்தளவுக்குக் காரணமாயிருந்ததோ, அதைவிடவும் அதிகமாக அமெரிக்கச் சதிகளும் தூண்டுதலாய் இருந்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அந்தச் சதிகளின் தூண்டுதல் இல்லையெனில் சோவியத் மக்கள் தமது சொந்தத் தவறுகளைத் தாமே சுயவிமர்சன ரீதியாகக் கண்டறிந்து திருத்திக் கொண்டு இருந்திருப்பர். அந்நாடு இந்தளவுக்குச் சின்னாபின்னப்பட்டிருப்பது தவிர்க்கப் பட்டிருக்கும். இப்படிச் சிதைப்பதற்கு எவ்வளவு டாலரைக் கொட்டிக் கொடுத்து, என்னவென்ன சதிகளையெல்லாம் அரங்கேற்றியது என்பதை இன்று வெளிப்படையாகவே அமெரிக்கா தம்பட்டம் அடித்துப் பேசுகிறது.

அமெரிக்கா முன்முயற்சியெடுத்துப் பணத்தைக் கொட்டி, சோவியத் யூனியனைத் துண்டாட, இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் பயன் படுத்தியது. அந்தப் போக்கின் நேரடி விளைவுதான் தலிபானின் இன்றைய வளர்ச்சி. ஆப்கானிஸ்தானுக்குள் அவசியமற்ற முறையில் தனது படையை சோவியத் யூனியன் குவிக்க, சோவியத் யூனியனுக்கு எதிராக குழிதோண்டும் வாய்ப்பாக, அதை அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டது மட்டுமல்ல, அதில் வெற்றியும் கண்டது. அதே வேளை அமெரிக்கா, சோவியத்தில் பயன்படுத்திய தலிபான் பூதம் திடீரென



அமெரிக்காவிற்கு எதிராகவே திரும்பியது. தற்போது அமெரிக்கா அதனை அதன் மண்ணிலேயே அடித்துத் தகர்த்து விட்டதாகப் பெருமிதம் கொள்கிறது.

ஆயினும், அது தூண்டிவிட்ட அடிப்படைவாதம் என்ற நோய்க்கிருமி இன்னும் சாகவில்லை. அது எங்கும் எட்டுக்கால் பூதமாய் விசுவரூபமெடுத்துத் தாண்டவமாடுகிறது. தற்போது அமெரிக்கா அந்தப் பயங்கரவாதத்தை ஒழிக்கும் புனிதப்பணியில் இறங்க நேர்ந்துள்ளது. அந்த அடிப்படைவாதம் இஸ்லாமிய வடிவெடுத்து, அத்துடன் மட்டும் ஆங்காங்கு சுருங்கிப் போய்விட வில்லை. மாறாக அதற்கு எதிர்வினையாக, இந்தியாவில் இந்துத்துவம், இலங்கையில் பௌத்த அடிப்படைவாதம் என பலவகைகள் தோன்றி பல கொடூரங்களை அரங்கேற்றி, பல படித்தான அடிப்படை வாதங்கள் எங்கும் கிளம்பியதுதான் மிச்சம்.

அவை அனைத்தையும் ஒழிக்க வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இல்லைத்தான். அமெரிக்காவிற்கு உடனடி இடைஞ்சல் தருவதை மட்டும் ஒரு கைபார்த்தால் போதும் என்ற பாணியில்தான் அது இயங்குகிறது. கோடி அடிப்படைவாதிகள் தங்களுக்குள் முட்டி மோதுவது குறித்து அமெரிக்காவுக்கு கிஞ்சிற்றும் கவலையில்லை; சொல்லப்போனால், அது ஒருவகையில் அமெரிக்காவுக்கு உதவிகரமான செயலே. ஆகவேதான் அடிப்படைவாதத்தை வளர்த்தது போல், அதை ஒழிப்பதில் அமெரிக்காவிற்குப் போதுமான உத்வேகம் இல்லை. அடிப்படைவாதிகளின் அடிப்படைகளைத் தகர்க்காமல், அதன் புறவெளிப்பாடான தலிபான் - பின்லேடன் போன்ற சிறிய முட்களை பிடுங்கி எடுக்க மட்டுமே அமெரிக்கா விரும்புகிறது.

அடிப்படைவாதம் முதலில் தனது மத-இன அடையாளங்களைக் கட்டமைக்கிறது. பின்னர் தமக்கான புனிதமான அடையாளங்கள் எவைகள், தாம் அழிக்க வேண்டிய அடையாளங்கள் எவைகள் எனத் தரம் பிரித்து, வெறியைத் தூண்டிவிடுகிறது. அடையாள அரசியல் இப்படி அனைத்தையும் படிப்படியாகச் சுருக்கி, ஒவ்வொன்றையும் தனிமனித அடையாளம் வரை வரையறுத்து விடுகிறது. அதன் நேரடி விளைவாக, ஒவ்வொருவரும் தனித்தனித் தீவுகளாக்கப்பட்டு, அவர்களுக்குள் குரோதங்கள் வளர்த்து எடுக்கப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு கிராமங்களும் ஒன்றுடன் ஒன்று மோதியபடி உள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சாதிகள் தங்களுக்குள் தீராப்பகையுடன் உள்ளன. ஒரே சாதிக்குள்ளும் கை நனைக்காத-சொம்பு தண்ணி எடுக்காத பரம்பரைகளுக்கு இடையே தீராத விரோதம் மூள்கிறது. சொல்லப் போனால், ஒவ்வொரு குடும்பத்துக்குள்ளும் ஏராளமான குத்து வெட்டுகள் நடக்கின்றன.

இன்று சாதிகளுக்குள் முன்னெப்போதையும் விட அதிக இறுக்கம் ஏற்பட்டுள்ளது. தேசியஇன அடையாளத்தைக் காட்டிலும் சாதிய

www.padippakam.com



அடையாளம் வலுவாக உள்ளது. ஒவ்வொரு சாதியும் தமது சுயநிர்ணயம் பற்றிக் கொள்கிற அக்கறை, அவை தனது தேசியஇன சுயநிர்ணய உரிமைக்குக் காட்டும் அக்கறையைக் காட்டிலும் பன்மடங்காக உள்ளது. முதலாளித்துவம், உண்மையில் சாதிகளுக் குள்ளும் பலமான ஸ்தாபனக் கட்டமைப்பு வேண்டும் என்பதையே விரும்புவதுடன், அதற்கான சூழலையும் உருவாக்க முயல்கிறது. முதலாளித்துவத்தில், தமக்கான பாதுகாப்பை வலுமையான ஸ்தாபனப் படுத்தலின் ஊடாகவே காணமுடியும் என உணர்வுபூர்வமாகக் கண்டறிந்த சாதியம், தனக்கான கருத்தியலில் இந்த வலுவான ஸ்தாபனமயப்படுத்தலைக் கட்டமைத்துள்ளது. இதன் நேரடி அரசியல் வெளிப்பாடே இன்றைய சாதியக் கட்சிகள். தனித்தனி சாதிக்கட்சிகள் தமது அடையாளத்தைப் பேண முடியாமல் போனாலும், அரசியலில் சாதிச் சங்கங்கள் செல்வாக்குச் செலுத்துவது வலுவாக நீடிக்கவே செய்கிறது.

நிலவுடைமைச் சமூகத்தில் ஒவ்வொரு சாதிக்கும் இத்தகைய இறுக்கமான ஸ்தாபன பலம் தேவையற்று இருந்தது. அங்கே, தேசத்தின் பரந்த நலம் முக்கியமானதில்லை. கிராமமே பூர்த்தி யடைந்த அமைப்பாக விளங்கியது. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு உடையதாயிருந்தது. நாடு இராமனாலோ அல்லது இராவணனாலோ ஆளப்படுவது பற்றிக் கிராமம் கவலை கொள்வ தில்லை. யார் வந்து போனாலும் கிராமம் அலுங்காமல் குலுங்காமல், தனக்குள் உறவுகளை வரையறுத்துக் கொண்டு இயங்குகிறது.

ஒரு தேசத்துக்குள் சிதறியுள்ள ஒரே சாதியினர் ஒன்றாக ஸ்தாபனப்படுவது என்றில்லாமல் முன்னர், கிராமத்திலுள்ள பல சாதி யினரும், தமது கிராமத் தன்னிறைவின் பொருட்டு, கொண்டும் கொடுத்தும் உறவாடி, உற்பத்தியில் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற் பட்டவாறே, பங்கீட்டிலும் வரையறைப்படி பெற்றதைக் கொண்டு திருப்திப்பட்டுக் கொண்டனர். அதிகம் உழைத்துக் கொஞ்சமாகப் பெற்ற அடிநிலை மக்கள் அதுவே கன்மப்பயன் என்று அடங்கப் பழக்கப்படுத்தியது சாதியப்படிநிலையில் கட்டமைக்கப் பட்ட இந்துமதம்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற முதலாளித்துவ முறை இந்தச் சாதியப் படிநிலையில் சலனத்தை ஏற்படுத்தி, சட்டத்தின் முன் அனைத்துச் சாதிகளும் சமம் என்று சொல்ல வைத்தது. வர்க்கச் சமூகமான ஐரோப்பாவில் தனிமனிதன் வகிக்கும் பாத்திரத்தை, இங்கே சாதி கோரியது. அதாவது ஒவ்வொருவருக்குள்ளும் அவரது சுயத்தையும் விட, அவரது சாதி அடையாளம்தான் வலுவாக இருந்தது. முதலாளித்துவ சட்டத்தின் முன், அனைத்து தனிநபரும் பெற்ற சமத்துவத்தை, இங்கே சாதிகள் பெற்றுள்ளன. ஆகவே பாரம்பரிய சாதித்தொழில்களைக் கட்டாயப்படுத்த முடியாமற் போனதுடன் மட்டுமல்லாது, கிராமத்துக்குள் நிலத்துடன் பிணைக்கப் பட்ட



சாதியினரைத் தொடர்ந்தும் அவ்வாறே கட்டுப்படுத்தி வைக்க இயலாமல் போனது. அனைவருக்கும் கல்வி கிட்டாத போதிலும், அனைத்துச் சாதிகளிலும் இருந்து படித்தவர்கள் சிலர் வந்து கொண்டு தான் இருந்தார்கள்; அனைத்துச் சாதியினரும் வெவ்வேறு பொருளுற்பத்தி முறைகளில் முயன்று, முன்னேற முடிந்தது. கூடவே வாக்குரிமை அனைவர்க்குமாவதைத் தொடர்ந்து, அரசியல் அரங்கில் பலப்பரீட்சையிட்டு தமக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்த பலரும் முன்வந்தனர். அதன் நிர்ப்பந்தத்தின் பேரில், நிலவுடைமைச் சமூகத்தில் தீண்டாமை சார்ந்ததாக இருந்த சாதியக் கருத்தியல், நவீன சமூகத்தில் ஸ்தாபனமயப்படுதல் சார்ந்து, ஒவ்வொரு சாதியினரும் தமக்கான புனிதம் பேசுவதாக மாற்றி கட்டமைக்கப்பட்டது. ஒவ்வொரு சாதி யினருக்கும் தமக்கேயுரித்தான புனிதமும், மற்றவர் சார்ந்த தீட்டும் உண்டு. இது சாதி நிறுவனமயப்படுத்த அவசியமாகிறது. இத்தகைய முதலாளித்துவ முறைமையின் தோற்றம்தான், ஐரோப்பிய சமூகத்தில் வர்க்கப் பிளவுகளை மறந்து ஒரே தேசிய இனமாக ஐக்கியப்பட வழிகோலியது.

இத்தகைய தேசிய உருவாக்கம் ஏற்கெனவே மேற்கு ஐரோப்பாவில் நிறைவேறியது. அதற்குப் பின்னர், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், ருஷ்யாவிலும் நிறைவேறியது. அப்போது அரசியல் செயல் திட்டத்துக்குரிய பிரச்சினையாகத் தேசியப் பிரச்சினை அங்கு முன்னுக்கு வந்தது. அந்நிலையில்தான் ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய இனங்களுக்குரியதான சுயநிர்ணயக் கோட்பாட்டை இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் முன்வைத்தது.

மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் காலத்தில், ஐரோப்பிய நாடுகளின் குடியேற்ற நாடுகளாக ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் அமெரிக்க நாடுகள் இருந்தன. ஆனால் அவைகள் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமை வேண்டும் என்பதை மார்க்ஸோ, ஏங்கெல்ஸோ கருத்தில் கொண்டு பெரிதாகப் பேசவில்லை. அவர்கள் ஐரோப்பிய பாட்டாளி வர்க்கம் ஒரே எழுச்சியில் எழுந்து நடாத்தும் புரட்சியின் சோசலிசத் தாக்கம், குடியேற்ற நாடுகளுக்கும் பரவும் என்று கருதினார்கள். இருபதாம் நூற்றாண்டுத் துவக்கத்தில் ஏகாதிபத்தியம் தோற்றம் பெற்றதும், உலகப் புரட்சிக்கான வாய்ப்பு மங்கிப் போனது. சமனற்ற வளர்ச்சி எங்கும் நிலவ, ஏகாதிபத்தியம் பலவீனப்பட்டுள்ள ருஷ்யா போன்ற தனி நாட்டில் புரட்சி சாத்தியமானது. தனியொரு நாட்டில் சோஷலிசம் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டது. ருஷ்யா ஆக்கிரமித்திருக்கிற நாடுகள் பிரிந்து செல்லும் உரிமையுடையன என வலியுறுத்திய சுயநிர்ணயக் கோட்பாடு அப்போதுதான் வரையறுக்கப் பட்டது. கறாராக தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையுடையன என்ற வரைவிலக்கணத்திற்கு உட்பட்டு, அந்நாடுகள் சோவியத்தில் இணைந்தன.

சென்ற நூற்றாண்டின் மத்தியப்பகுதியில், ஐரோப்பிய காலனிய

படிப்பகம்

www.padippakam.com



நாடுகள் பலவும் சுதந்திரம் பெற்றன. இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் சுதந்திரம் அடைந்த போது, இந்தியத் தேசியம், இலங்கைத் தேசியம் என்ற உணர்வே வியாபித்திருந்தது. இவ்வாறு நாட்டுத் தேசியம் கட்டமைக்கப்பட்டு வளர்ந்தபோது, இந்தியாவில் இந்தித் திணிப்புக்கு எதிராகவும், இலங்கையில் பௌத்த சிங்களப் பேரின அடாவடித்தனங்களுக்கு எதிராகவும், தமிழினத் தேசிய உணர்வு 1930களில் இருந்தே தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளது.

இத்தகைய நாட்டுத் தேசியத்துக்குள், இனத்தேசியத்துக்குள், சாதிகளைக் கடந்த தேசிய ஐக்கியம் சாத்தியப்பட்டதா அல்லது சாத்தியப்படுமா என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. எப்போதும் தேசியப் பண்பாடு ஏற்படுவதற்கு ஈடாக, தனியே பிரிந்த சாதியப் பண்பாட்டுப் பிளவுகளும் வெளிப்பட்டு கொண்டுதான் இருந்தது. அது அரசியல் தளத்தில் பல முரண்களை ஏற்படுத்தியது வெளிப்படை. இந்தியத் தேசியத்தின் உயர்சாதிப் பிரதிநிதியாகக் காந்தி இருந்தார். ஒடுக்கப் பட்ட மக்களின் தலைவராக அம்பேத்கர் திகழ்ந்தார். ஐரோப்பாவிலுள்ள வர்க்கங்கள் போலன்றி, சாதிய சமூகத்தின் பிரச்சினை வேறுபட்டது. இதைத் தீர்க்கதரிசனமாக முன்னுணர்ந்த அம்பேத்கர், அதற்குரிய அரசியல் வடிவத்துக்காகப் போராடினார். அப்போராட்டம் வெற்றிபெறும் நிலையடைந்த போது, சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து, அதனை முறியடித்தார் காந்தி. ஒடுக்கப் பட்டமக்களின் அடிப்படை உரிமைகளை புறம்தள்ளி, ஏனைய விடயங்களுக்காக அரசியலமைப்பை உருவாக்குவதில் அம்பேத்கருக்கு இடமளிக்கப்பட்டது. அவர் அதை உருவாக்குவதில் பங்கெடுத்த போதிலும், அந்த அரசியல் சட்டத்தை எரிக்கும் முதல் ஆளாகவும் தான்தான் இருப்பேன் என முழங்கியதை யாரும் மறந்துவிட முடியாது. அன்று அம்பேத்கர் விட்ட இடத்திலிருந்து, இன்று வரை தலித் மக்கள் விட்டுக் கொடுக்காத போராட்டங்களை முன்னெடுத்து நடாத்த வேண்டியுள்ளது.

முப்பதுகளில் தோன்றி வளர்ந்த தமிழ்த் தேசிய எழுச்சியை, திராவிட இயக்கங்கள் திசை திருப்பிச் சிதைத்துவிட்டதாக, மார்க்சிய வழியில் தமிழ்த் தேசியம் பேசுபவர்களில் சிலர் கூறுகிறார்கள். அவர்கள் இன்று பல படியாக உள்ளனர். அவர்களும் தலித் பிரச்சினை பற்றி தெளிவான வரையறை கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள். இந்தியத் தேசியத்தில் பிராமணிய மேலாதிக்கம் வெளிப்படையாய் இருந்தது. இந்தியா முழுமைக்குமான பொதுச் சாதி பிராமணர்கள் மட்டுமே. இந்தியத் தேசியத்தின் வாயிலாக பிராமணர்கள் தமது நலனை வலுவாகப் பேண முடிந்தது. திராவிடரியக்கங்கள் மூலமாக பிராமணரல்லாதோர் எழுச்சி தமிழகத்தில் நடந்து முடிந்தது. அதனால் தமிழகத்தின் பிராமணரல்லாத உயர்சாதியினர் தலைமையில் அதிகாரத்தை வென்றெடுக்க முடிந்தது.

பிராமணராகட்டும் அல்லது பிராமணரல்லாதவராகட்டும், இவர்களது தலைமையிலான நாட்டுத் தேசியமும் இனத்தேசியமும்



தொடர்ந்து சாதிய அடிப்படையில் கீழ்மட்டத்தில் உள்ளவர்களை ஒடுக்கிக் கொண்டிருந்தன. இந்நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, இனியும் வேறு ஏதாவதொரு தேசியத்தை முன்னெடுப்பதா அல்லது மாற்றுப்பாதை எதுவும் சாத்தியமா என்பதே இன்று தமிழ்ச் சமூகத்தின் முன்னுள்ள வினா.

இதுவரையில் உயர்சாதியினரது சுயநிர்ணயம் சாத்தியப்பட்டது. அம்பேத்கர் தலைமை தாங்கிய இரட்டை வாக்குரிமைப் போராட்டம் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது ஒட்டுமொத்த தேசிய நலன்களைக் காப்பது என்ற பெயரால் முறியடிக்கப்பட்டது. ஆளும் தரப்பில் பிராமணர் மட்டுமே ஒரு பொதுச்சாதி, ஏனைய உயர் சாதிகள் மாநிலத்துக்கு மாநிலம் வெவ்வேறு. ஒடுக்கப்பட்ட சாதிகளின் பெயர்கள் வேறுபட்டாலும், நாடு முழுவதும் அவர்கள் எதிர்நோக்கும் ஒடுக்குமுறை வடிவம் ஒரே மாதிரியானதுதான். அதனாலேயே மராட்டியத்தின் மஹர் சாதியின் தலைவர் அம்பேத்கர், பாரதம் முழுவதும் ஒடுக்கப்பட்ட மக்களின் பெருந்தலைவராய் இன்று கொண்டாடப்படுகிறார்.

தமிழினம் வரலாற்றினுள் பிரவேசித்தபோது, "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" எனப் பிரகடனப் படுத்தியது. இனக்குழு எல்லைகளைத் தகர்த்து அனைத்து ஊர்களையும் பேரரசுக்குள் இணைக்க முடிந்தது. இருப்பினும் இனக்குழு இரத்த உறவைத் தகர்த்து, யாவரும் ஓரினம் என உறவு கொண்டாட முடியவில்லை. வடக்கில் இனக்குழுக்கள் ஏற்கனவே சாதிகளாக வடிவமைக்கப் பட்டிருந்தன. அதே அதிகாரத்துவ சமூகக் கருத்தியலை, தமிழகமும் கையேற்று, தமிழரும் தமக்குள் இருந்த இனக்குழுக்களொவ்வொன்றையும் தனித்தனிச் சாதிகளாக வடிவமைத்தனர். இப்படியாக வேற்றுமைகளுடன் ஒன்றுபட்டு வாழ வகை செய்யப்பட்டனர். இனக்குழுவுக்கேயுரிய இந்த இரத்த உறவுப் புனிதம் பேணுதல்தான், இன்றைய தேசிய உருவாக்கத்தின்போது, ஒரே தேசிய இனமாக ஒன்று கலத்தலுக்குத் தடையாக அமைந்துள்ளது. முதலில் பிராமணர்களால் கட்டியெழுப்பப் பட்ட நாட்டுத் தேசியமும், பின்னர் பிராமணரல்லாத உயர்சாதி யினரின் இனத்தேசியமும், அனைத்துத் தரப்பு மக்களின் தேவை களையும் நிறைவேற்றுவதில் போதாமையுடனே இன்னும் உள்ளன. அதன் நேரடி வெளிப்பாடே எண்பதாம் ஆண்டுகளிலிருந்து தமிழகத்தின் முனைப்படைந்து வளர்ந்து வரும் தலித் எழுச்சி இயக்கங்கள் ஆகும்.

தமிழகத்தில் தலித் எழுச்சி எண்பதுகளிலேயே துவங்கி விட்டது. தமிழ்த் தலித் இலக்கியத்தின் முன்னோடியாக இலங்கையின் டானியல் விளங்கினார். டானியலைக் கையேற்ற இலங்கைத் தமிழ்ச் சமூகம், எண்பதாம் ஆண்டுகளில் தலித் இலக்கியத்தை, பஞ்சமர் இலக்கியம் என வகைப்படுத்தியது. இன ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பு இலக்கியமாக, அவரது எழுத்து மடை மாற்றம் செய்யப் பட்டிருந்தது. அறுபதாம் ஆண்டுகளில் இருந்து இலங்கைத் தமிழ்ச் சமூகம் தலித்

படிப்பகம்

www.padippakam.com



இலக்கியத்தை இழிசனர் இலக்கியம் என அடையாளப்படுத்தி இருந்தது. அப்போது தமிழினத் தேசிய இலக்கியம் சிறு அளவில் இலங்கையில் செயற்படத்தான் செய்தது. இருப்பினும், சாதியத்திற்கு எதிரான இலக்கியம்தான், அங்கு தமிழிலக்கியச் செல்நெறியை வடிவமைத்ததில் பெரும்பங்கு வகித்தது. அப்போது இலங்கையில் இனத்தேசியத்தின் வடிவம் "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை" எனக் கோசமிடத்தக்க வெள்ளாளத் தேசியமாக மட்டுமே விளங்கியது. எண்பதாம் ஆண்டுகளின் பௌத்த சிங்களப் பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையை எதிர்கொள்ளச் சமூகம் முழுவதும் நிர்ப்பந்திக்கப்பட்டன. ஒட்டுமொத்தமான மக்கள் மீதான வலிந்த இராணுவத்தாக்குதல் அனைத்து தமிழ் மக்களையும் தமிழ்த் தேசியத்துக்குள் கட்டமைத்துக் கொண்டது. அதன் காரணமாக எண்பதுகளின்பின் சாதிய எதிர்ப்பு இலக்கியத்தைவிட, பௌத்த சிங்களப் பேரினவாத எதிர்ப்பு இலக்கியம் அதிமுக்கியத்துவ முடையதாக மாறியது.

தமிழகத்தில் நிலைமை இலங்கையைப் போலல்லாமல், சற்று மாறுபட்டதாய் இருந்தது. 1925-ல் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த பிராமணியத் தேசியத்தைத் தகர்க்க, ஈ.வெ.ரா. பெரியார் எடுத்த முயற்சி, தோல்வியடைந்தது. ஆகவே முப்பதுகளில் அவருக்கு பிராமணரல்லாத உயர்சாதித் திராவிட தேசியத்தைத் தனியே வளர்தெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தக்காலத்தில், யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸ் அமைப்பு தனக்குள் வெள்ளாளத் தேசியத்தை உட்கொள்ளாமல், "பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே, வெள்ளைப் பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே" என, அதற்கு இரு தசாப்தங்களுக்கு முன், பாரதி தொடங்கிவைத்த முழுமையான தேசிய உணர்வை உள்வாங்கி, அனைத்து அதிகார முறைகளுக்கும் எதிராகப் போர்க்குரல் எழுப்பியது. யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸ் தொடக்கிவைத்த சாதியத்துக்கு எதிரான போராட்டம், யாழ்ப்பாணத் தேசிய இயக்கத்தின் செல்நெறியாக துவக்கம் பெற்று வளர்ந்தது. அது ஐம்பதுகளின் பிற்பகுதியில், முனைப்படைந்து பிரதான போக்கானது. நாற்பதாம் ஆண்டுகளில் யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரசின் முற்போக்குப் பங்களிப்பை உடைத்து வெளியேறி, அகில இலங்கைத் தமிழ் கொங்கிரஸ் கட்சியை ஜி.ஜி.பொன்னம்பலம் துவங்கினார். அவர் பிரதிநிதித்துவப்படுத்திய வெள்ளாளத் தேசியவாதம் அப்போது முனைப்படைந்து வளர்ந்தது. ஐம்பதுகளின் பிற்பகுதியில், வெள்ளாளத் தேசியத்தின் தலைமையைக் கையேற்ற செல்வநாயகம் - அமிர்தலிங்கம் தலைமை அதற்கு ஒரு வெகுஜனத்தன்மையை ஏற்படுத்த முயன்றது..

ஐம்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில், வெள்ளாளத் தேசியம் தமிழினத் தேசியமாக வெகுஜனப் பரிணமிப்பு எய்திய போது, 1956இல் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. இதனால் இலங்கை அரசியல் சூழல் சிங்களத் தேசியம் - தமிழ்த் தேசியம் எனப் பிளவுபட்டு



இயங்கத் தொடங்கியது. முன்னதாக இலங்கைத் தேசிய உணர்வு தமிழ்மக்களிடையே காத்திரமாய் இருந்தது. இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றில் ஒரு மகத்தான கட்டமாக 1953 ஒகஸ்ட் மறியல் போராட்டம் விளங்கியது. அது இலங்கைத் தேசிய இயக்கத்தின் வீரியமிக்க வெளிப்பாடாக இருந்தது; ஆனால் அதனுள் உறைந்திருந்த தேசியத் தன்மையை இடதுசாரிகள் இனங்காணத் தவறினர்.

வெறும் வர்க்கப்போராட்டம் என அனைத்தையும் மார்க்சியர்கள் குறுக்கிப் பார்த்தனர். அது தொழிலாளர்களது மகத்தான பேராட்டமாக மட்டுமின்றி ஆசிரியர்கள் மாணவர்களுடன் பல்லாயிரக்கணக்கிலான விவசாயிகளது போராட்டமாயும் அமைந்திருந்தது. அந்த மகத்தான ஹர்த்தால் போராட்டத்தால் கிளர்ச்சியுற்ற சிங்கள விவசாயிகளை அணிதிரட்டினார் தேசிய முதலாளிவர்க்கத் தலைவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க. அவர் அதன் மூலம் சிங்கள இனவாதத்தை வளர்த்தெடுத்துப் பயன்படுத்தினார். அந்த 1953 ஒகஸ்ட் எழுச்சியில் பங்கெடுத்த தமிழ் விவசாயிகளில் பெரும் பான்மையினரும் தமிழ்த் தேசியவாத சக்திகளால் அணிதிரட்டப்படும் நிலைமையே காணப்பட்டது. தமிழர் பிரச்சினையை மொழிப் பிரச்சினையாக மட்டுமே பார்த்து, அதை முனைப்பாக்கி தமிழினவாதமாக மட்டுமே வளர்த்தெடுத்தனர் செல்வநாயகம் - அமிர்தலிங்கம் தலைமையிலான இயக்கத்தினர். அதனை முழுமையான தமிழர் தேசியப் பிரச்சினையாகப் போலியாக வடிவப்படுத்தினர்.

தமிழர் தேசியப் பிரச்சினையை முழுமையாக கவனத்திற்கொள்ள மார்க்சியர்கள் தவறிய போதிலும், சாதியத் தகர்ப்புத் தேசியப் பிரச்சினையைச் சரியாகவே இனங்கண்டு கையாண்டனர். சாதியொழிப்பு இயக்க வரலாறு முழுமையிலும் புதிய தடம்பதிக்கும் அத்தியாயத்தை இலங்கை மார்க்சியத் தலைவர்கள் முன்னெடுத்துச் சென்றனர். சாதியத் தகர்ப்புத் தேசியத்திற்கு எதிராக மிகத் தந்திரமாகச் செயற்பட்டது வெள்ளாளத் தலைமையிலான தமிழினத் தேசியவாதம். அதற்குப் பதிலடி கொடுக்கும் எந்தப் போக்கானாலும், அதை ஒட்டுமொத்த தமிழினத்துக்கே எதிரானது போல, தமிழினத் தேசியவாதம் காட்சிப்படுத்தியமை பெரும் வரலாற்றுத் துயர். இதன்பேறாக இன்றுவரை தமிழினப் போராட்டத்தின் செல்நெறியை வெள்ளாளத் தேசியவாதமே வழி நடாத்துவதானது. இதனால் மோசமான பேரிழப்புகளும் அழிவுகளும் ஏற்பட்டு, வெற்றியை எட்ட சரியான திசைமார்க்கத்தை நாட முடியாத இடர்ப்பாடுகள் ஏற்பட்டன.

சாதியத்தகர்ப்புத் தேசிய இயக்கம் அனைத்துச் சாதியினரின் முன்னேறிய பிரிவினரும், ஒடுக்கப்பட்டவர்கள் தலைமையில், கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் வீறுடன் இயங்கிய சிறப்புடையது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் பதாகையின் கீழ், அனைத்துத் தரப்பிலுமுள்ள முன்னேறிய சக்திகள் அணி

படிப்பகம்

www.padippakam.com



திரண்டன. தமது போராட்டத்திற்கு அந்த வெகுஜன இயக்கம், இன-மத பேதங்கடந்து, இலங்கை முழுவதிலுமிருந்து ஆதரவு சக்திகளை வென்றெடுத்து, தனக்குள் இணைத்துக் கொண்டது. சர்வதேச ரீதியில் கிட்டிய ஆத்மார்த்த ஆதரவும், அதற்குச் செய்யப்பட்ட பிரசாரமும், அந்த வெகுஜன எழுச்சி, வெற்றிவாகை சூட, உதவுவதாக அமைந்தது. பின்னால் தமிழினத் தேசியப் போராட்டத்திற்கான வெகுஜன ஈர்ப்பு ஏற்படுவதற்கும், இந்தப் போராட்டம் உதவியாக இருந்தது. இரட்டைக் கலாசாரத்தில் பிளவுபட்டிருந்த தமிழினத்துக்கு, ஒரே தேசிய இன வடிவத்தைக் கொடுப்பதாக இப்போராட்டம் அமைந்தது.

கிழக்குப் பகுதியிலும், வன்னியிலும், பண்பாட்டுரீதியில், இத்தகைய இரட்டைக் கலாசாரம் முனைப்படையாத போதிலும், யாழ்ப்பாணப் பண்பாட்டில் இது தெளிவாக இருக்கிறது. பொதுவாக யாழ்ப்பாணம் கந்தபுராணக் கலாசாரம் உடையது எனலாம். கோயிலினுள் நடத்தப் பட்ட கந்தபுராண விரிவுரையால் கட்டமைக்கப்பட்ட பண்பாட்டை அது வரித்துக் கொண்டது. அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டு, கோயிலுக்கு வெளியே நிறுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் காத்தவராயன் கலாசாரம் சொந்தமாயிருந்தது. அம்மை நோய் பரவுவதைத் தடுக்க ஆடப்படும் காத்தவராயன் கூத்து, ஒடுக்கப்பட்ட மக்களிடம் எதிர்க்கலாசாரக் கட்டமைப்பு ஒன்றை வடிவமைத்திருந்தது. அடிப்படையில் உயர் கலாசார விழுமியங்களையும் ஒழுக்கங்களையும் நிராகரிக்கும், கேள்விக்குட்படுத்தும் ஒருவகைக் கிளர்ச்சிப் பாத்திரம் காத்தவராயன். அதன் எதிர்க் கலாசாரக் கூறு போதிய அளவில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லையென்பதால், அதன் இருப்பு கவனிப்பைப் பெறத் தவறியுள்ளது. யாழ்ப்பாணம் கந்தபுராணக் கலாசாரத்தை மட்டுமல்ல, காத்தவராயன் கூத்தால் கட்டியெழுப்பப்பட்ட எதிர்க்கலாசாரத்தையும் உடையதாக இருந்தது என்பது, அதன் செல்நெறியில் தவிர்க்க முடியாமல் வெளிப் பட்டுள்ளது.

சாதியொழிப்புப் போராட்டத்தில், மாவட்டபுரக்கோயில் பிரவேசம் முக்கியமானது. ஒடுக்கப்பட்டவர்களின் கோயில் நுழைவைத் தடுக்கும் கூட்டத்தை தலைமை தாங்கி முன்னின்று நடத்தியவர் சுந்தரலிங்கம் என்ற வேளாளத் தலைவர். அவரின் எதிரே, ஒடுக்கப்பட்ட மக்களுள் ஒருவராய் கந்தன் வந்து வாதிட்டான். கந்தனது தர்க்கங்களுக்கு ஆயுதந்தரித்த அடாவடித்தனம் பதிலானபோது, கந்தன் வேலெறிந்து கதவு திறப்பான். கந்தன் கருணை நாடகத்தில் இக்காட்சிதான் உருவகப் படுத்தப்பட்டுள்ளது. தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தின் உன்னத கலை வெளிப்பாடான இந்நாடகம் ஊர் தோறும் போடப்பட்டது. இந்தக் கந்தன் கருணை முற்றிலும் காத்தவராயன் கூத்து மெட்டில், அதேபாணியில் வடிவமைக்கப் பட்டது, ஒரு தவிர்க்கவியலா விதி! எதிர்க் கலாசாரக் கலையில் பழக்கப்பட்டிருந்த உழைக்கும் மக்கள், அதே வடிவத்தின் ஊடாக புதிய கலாசாரத் தளத்துக்கு முன்னேறும் இயக்கமாய் கந்தன் கருணை அமைந்தது. (கந்தன் தானே வேல் எறிவதாக அன்றி, மக்கள் போராட்டத்துக்கு ஏற்புடையவகையில்



தனது வேலினை மக்களிடம் கந்தன் கையளித்துச் செல்வதாக நாடகம் கட்டமைக்கப்பட்டிருந்தது).

இத்தகைய புதிய கலாசாரத்துக்கான தளப்பெயர்வு, நுண்அரசியலான பண்பாட்டு தளத்திலும் சரி, அரசியல் தளத்திலும் சரி, பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. யாழ்பாணத்தில், நாற்பதுகளில் சாதிச்சங்கங்களால் பிளவுண்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைக்கப்பட்டு, அறுபதுகளின் முற்பகுதி வரை "சிறுபான்மைத் தமிழர் மகா சபை" எனும் ஒரு அமைப்பில் இயங்கினர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை பொறுத்த வரை ஒடுக்கப்பட்ட மக்களை மட்டுமன்றி, அனைத்துத் தரப்பையும் ஒன்றிணைத்து நடாத்தி, புதிய வரலாறு படைக்க இயலுமாயிருந்தது. ஆகவே சாதிச் சங்கங்களுக்குரிய தேவை அரசியல் - பண்பாட்டுத் தளங்களில் இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு தேவையற்றுப் போனது. இத்தகைய புதிய கலாசாரம் முனைப்பாக்கப்படாத தமிழகத்தில், தலித்தியம் எதிர்க்கலாசாரமாக எண்பதுகளிலிருந்து தோன்றி வளர்ந்தது.

அது குழுநிலைப் பிரிவினைகளுடனும், சாதியரீதியான வெறுப்புணர்வுகளுடனும் செயற்பட நேர்ந்துள்ளது. இலங்கையைப் போல, சாதியத்தைத் தகர்க்கும் போர்க்குரலும், தமிழ் தேசிய இனமாய் அணிதிரள்வதும் தமிழகத்தில் இன்றும் தூரத்துக் கனவுதான்.

இலங்கையில் இப்புதிய கலாசார இயக்கம் தமிழ்த்தேசிய இனத்துக் குச் சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது. இருப்பினும், வெள்ளாளத் தேசியவாதக் கருத்தியலிலிருந்து வளர்ச்சி யடைந்து, பாட்டாளி வர்க்கச் சர்வதேச அணுகுமுறையும் போர்த் தந்திரங்களும், மேற்கொள்ளப்படாதது காரணமாக அனைத்து மக்களும் ஒரே தேசிய இனமாக திரளும் வெகுஜன மார்க்கம் சாத்தியமாகாமலே போய்விட்டது. சாதியத் தகர்ப்புச் சார்ந்த தேசியம் இன்னமும் முனைப்பு அடையாத போதிலும், ஆரம்பத்தில் சாதிக்கெதிராக முனைப்புடன் செயற்பட்டது போல தற்போது முடியாது.

இன்று ஈழக்களத்தில், ஒடுக்கப்பட்ட மக்களுடைய தேசியத்தையும் தீர்த்துவைக்கக்கூடிய நிலைப்பாட்டை காணமுடியவில்ல. அதே சமயம் வெள்ளாளத் தேசியத்தை ஏற்க முடியாத வாழ்முறை யுடன் கிழக்கு மாகாண மற்றும் வன்னிப் பிராந்திய மக்கள் உள்ளனர். அங்குள்ள பெரும்பான்மையான இளைஞர் இளைஞிகள் போராளி களாகக் காணப்படுகின்றனர். இவர்களிடம், முன்னர் போல சாதியத் தகர்ப்புத் தேசியத்துக்கு எதிரான, எந்த இனத்தேசிய வன்மத்தையும் காட்ட முடியாது. அதேவேளை சாதியத் தகர்ப்பு சார்ந்த எந்தவொரு செயற்திட்டத்தையும் இன்றைய போராளித் தலைமை முன்வைக்க முடியாமல் வெள்ளாளத் தேசியத்தால் வரையறைப்பட்டிருப்பதும் வெளிப்படை. தொகைரீதியில் வெள்ளாளத் தேசியத்துக்கு உடன்பாடற்ற போராளிகளையே அதிகம் கொண்டிருந்தபோதிலும் பண்புரீதியாக அடிப்படை மாற்றம் ஏற்படவில்லை என்பதையே இது

படிப்பகம்

www.padippakam.com



காட்டுகிறது.

இந்திய அளவில் சாதியத்துக்கு எதிரான போராட்டத்தில் அம்பேத்கர், பெரியார் முதல் இன்றைய தமிழக தலித் இயக்கங்கள் வரை எதிர்க் கலாசார நிலைப்பாடு சார்ந்து செயற்பட்டதுதான் பொதுப்போக்காக அமைந்தமை கண்கூடு. அந்த வகையில் உயர்சாதி தேசியத்துடன் உடன்பாடு காண்பது கடினமாக இருந்ததில் வியப்பில்லை. இலங்கைச் சூழலில் உயர் கலாசாரத்தின் ஏற்புடைய அவசியமான அம்சங்களுடன், எதிர்க்கலாசாரத்தின் போர்க்குணத்தை யும் சரியான கூறுகளையும் இணைத்து, வீரமிகு போராட்டங்க ளூடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது, தற்போது தமிழ் பகுதியிலுள்ள கம்யூனிஸ்ட்டுகளால் தலைமைதாங்கப்பட்ட புதிய கலாசாரம். இது இனத்தேசியத்துக்கு வாய்ப்பான நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொடுத்துள்ளது. அப்படியிருந்தும் அதனால் சாதியத் தகர்ப்புத் தேசியத்தின் அருகில் கைகோர்த்து நடப்பது கூட சாத்தியப்பட வில்லை. ஒடுக்கும் பெருந்தேசிய இனத்துக்கு எதிராகப் போராடும் இனத்தேசியத்துக்கு அனுசரணை யாக இயங்கும் பண்பு, புதிய கலாசார இயக்கச் செல்நெறியின் பிரதான அம்சமாகும்.

எந்த வகையிலும் உயர் சாதித் தேசியத்துடன் உடன்பட்டு இயங்க முடியாதென்ற நிலைபாடு எடுத்து, அதனையே பிரதான எதிரியாகக் கணிப்பது எதிர்க்கலாசார இயக்கத்தின் பண்புகளில் ஒன்று. இதனால் பெரும் எதிரியான பெருந்தேசிய ஒடுக்குமுறையாளர், ஏகாதிபத்தியவாதிகள் போன்றோருடன் வாய்ப்பான உடன்பாடுகளைக் காட்டி நிற்பதும் எதிர்க்கலாசார இயக்கத்தினருக்கு நேரும். அம்பேத்கர், பெரியார், அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசன் போன்றவர்களில் இருந்து, இன்றைய தலித் இயக்கங்கள் வரை இப்பண்பைக் காண முடியும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக உயர்சாதித் தேசியம் கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறைகளையும், வரலாற்றுத் துரோகங்களையும், ஒப்பிடும்போது எதிர்க்கலாசார சக்திகளின் இந்தத்தவறுகள் பெரிது படுத்தத்தக்கதல்ல. எது எப்படி இருப்பினும், ஏகாதிபத்தியவாதிகளையும், மேலாதிக்க சக்திகளையும், பெருந்தேசிய இன ஒடுக்கு முறையாளர்களையும் பிரதான எதிரியாகக் கணிக்காமல் விட்டதால், அவர்களுக்கு எதிராக அனைத்து இனத் தேசியவாத சக்திகளையும் ஐக்கியப்படுத்த முடியாமல் போனது ஒரு வரலாற்றுத் தவறே.

இங்கு கவனிப்புக்குரிய அம்சம் அவ்வாறு ஐக்கியப்படும் சக்தியாக இயங்கும் புதிய கலாசாரர்களையும் இனத்தேசியவாதிகள் அரவணைக்கத் தயாரில்லை என்பதுதான். குறிப்பாக, சாதியத் தகர்ப்புக் குறிக்கோளில் அடிப்படையான விட்டுக்கொடுப்புகள் எதனையும் மேற்கொள்ள அவர்கள் முன்வருவதில்லை. தமது ஒடுக்கும் உரிமையை முழுதாக அங்கீகரித்து அடங்கி வாழவேண்டியது அவசியம் என்றே ஒவ்வொரு இனத் தேசிய வாத சக்தியினரும் கருதிச் செயற்படுகின்றனர்.



ஆக, தேசிய இனப்பிரச்சினையில் இது மிகமிக அடிப்படையான விடயம், அதிகம் கவனஞ்செலுத்தப்படாததுங்கூட. படாதது மட்டுமன்றி சாதியத் தகர்ப்புப் போராட்டத்தினை ஒடுக்கப்பட்ட மக்களின் சாதிய எதிர்ப்பு தேசியப் பிரச்சினையாக இனங்காணாமல் தேசிய எழுச்சிக்கு எதிரான துரோகப் போக்கு என முத்திரை குத்தப்பட்டு வந்துள்ளது. இந்தியாவின் பிராமண தேசியம், இலங்கையின் வெள்ளாளத் தேசியம் ஆகியன மட்டுமே ஒரேயொரு தேசியப் பிரச்சினை வடிவம் என்று கணிக்கப்பட்டதின் பேறு இது. உண்மையில் நிலத்துடன் பிணிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையுடன் இணைந்த சாதியத் தகர்ப்புத் தேசியமே மிக வலிய பிரச்சினைகளை முகங்கொடுப்பது. ஆரம்பத்தில் பாரதியிடமும் யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரசிடமும் இரண்டும் இணைந்த புதிய கலாசார இயக்க வகைப்பட்ட முழுமையான தேசிய அணுகுமுறை இருந்ததாயினும் தொடர் வளர்ச்சிப் போக்கில் இரண்டும் எதிர் நிலைப்பட்டமை ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

சாதியத் தகர்ப்புத் தேசியத்தைக் கவனத்தில் எடுக்காமல் நாட்டுத் தேசியம், இனத்தேசியம் ஆகியவற்றை மட்டுமே தேசிய இனப்பிரச்சினையாக அணுகியதற்கு மேற்குலக அனுபவத்தை அப்படியே உள்வாங்கியமை பிரதான காரணமாகும். அங்கே நிலவுடைமைச் சமூகத்தைத் தகர்த்து முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது தேசிய அரசுகளை நிர்மாணித்துக் கொண்டன. நிலவுடைமை அமைப்பைத் தகர்க்க வேண்டுமாயின் அதன் அடித்தளமான பண்ணை அடிமை விவசாயிகளை விடுதலை செய்தல் அவசியமாகும். அவர்கள் மத்தியிலிருந்தே சுதந்திரர்களாய்த் தமது உழைப்பு சக்தியை விற்கக் கூடியவர்களான பாட்டாளி வர்க்கம் உதயமாக இயலும். தேசிய எழுச்சி என்பது பண்ணை அடிமைகள் கிளர்ந்தெழுந்து போராடி விடுதலையீட்டுவதும் ஆகும். அந்த வகையில் தேசியப் பிரச்சனையென்பது அடிப்படையில் விவசாயிகள் பிரச்சினையே.

இதேபோன்று இங்கு தேசிய எழுச்சி இருக்க வேண்டுமாயின் பண்ணை அடிமைகள் ஆக இருந்த ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெறவேண்டும். அதுவே அடிப்படையானதாக அமைதல் அவசியம். அத்தகைய சாதியொழிப்புத் தேசியக் குறிக்கோள் இல்லாமலே ஒடுக்கும் தேசத்திலிருந்து விடுதலை பெறுவது என்பது மட்டும் பொருட்படுத்தப்பட்டபோது அது பிளவுபட்ட வடிவிலான நாட்டு விடுதலை அல்லது இனவிடுதலைத் தேசியமாக ஆகியது.

இந்த சாதியொழிப்பும் பிராந்திய விடுதலையுமாகிய இரட்டைத் தேசியம் ஐரோப்பிய சமூகத்தில் இல்லாதவொன்று. அது வர்க்க சமூகமாக மாறியபோது இனக்குழு இரத்த உறவுக் குலங்களைத் தகர்த்து வர்க்கங்களை உருவாக்கிக் கொண்டு சமூக மாற்றங்களுடன் வர்க்க இருப்பு மாற்றங்களை ஏற்படுத்தி வந்த சமூகம். நிலவுடைமைச் சமூகம்

படிப்பகம்

www.padippakam.com



புத்தெழுச்சியடைந்த போது ஆண்டான்கள் ஒழிந்தது போன்றே முதலாளித்துவ உதயத்துடனான தேசிய எழுச்சியில் நிலப்பிரபுக்கள் மறைந்து பண்ணை அடிமை வர்க்கமும் இல்லாமற் போயிற்று. முதலாளிவர்க்கத்துடன் சுதந்திரமான பாட்டாளி வர்க்கம் தோற்றம் பெற்றது.

இங்கு அவ்வாறில்லையென்பதால் வர்க்க சமூக முறைமையோ சமூக மாற்றங்களோ நிகழவில்லையென்பது பொருளல்ல. தமிழர் சமூக வரலாற்றில் வீரயுகம் என்பது வர்க்க ஏற்றத்தாழ்வும் அரசுருவாக்கமும் அடிமைப்படுத்தலும் நடைமுறைப்பட்ட காலந்தான். அறநெறிக் காலத்தில் வணிகவர்க்கம் மேலாண்மை பெற்று மேற்குலகின் அடிமைச் சமூகத்தை நிகர்த்திருந்தது. (அடிப்படையான வேறுபாடுகள் கவனிப்புக்குரியன) பக்திப் பேரியக்கத்துடன் நிலமான்ய முறைக்கான மாற்றம் ஏற்பட்டு சோழப்பேரரசர் காலத்தில் நிலவுடைமைச் சமூகம் பூரணத்துவம் பெற்றது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான விடுதலையுடன் முதலாளித்துவ அமைப்பு நிறுவப்பட்டது. ஆயினும், இவையெல்லாவற்றிலும் குறித்த சில சாதியினர் அதிகாரங் களைக் கையகப்படுத்தினர். அமைப்பு மாற்றத்தின்போது அதிகாரம் இன்னொரு சாதியிடம் கைமாறிய போதிலும் முன்னைய சாதியினர் அழிந்து போகாமல் அடுத்த படிநிலையில் நிலைத்தனர். இந்த மாற்றங்களுக்கூடாகவெல்லாம் ஒடுக்கப்பட்ட சாதியினரும் அதிகாரமற்ற சாதியினரும் சிறிய சிறிய உரிமை வேறுபாடுகளைக் கண்டடைந்த போதிலும் எல்லா சமூக முறைமைகளுக்குள்ளும் அதே சாதிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். இதன் பேறாகவே பிராந்திய விடுதலை கோரிய உயர்சாதியினர் பண்ணையடிமை முறை ஒழிப்பு சாதியத் தகர்ப்பாக ஆகிவிடக்கூடாதென்பதில் கவனம் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களைப் பொறுத்தவரையில் அதிகார நிலைபேறு என்பது சாதியமுறைமையின் இருப்பாகும். இதனால் இங்கு ஒடுக்கப்பட்ட மக்களின் தேசியக் கோரிகைகளையும் உள்வாங்கியதான ஒரே தேசியம் சாத்தியமற்றுப்போனது.

இங்கே வர்க்கச் சமூக மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் புதிய சக்திகள் தோன்றுவதாக இல்லாமல் பழைய சாதிகளே மாறுபட்ட அதிகாரப்படி முறை வேறுபாடு களுடன் இருந்து வந்துள்ளன. இன்னும் இருக்கின்றன. நவீன சமூகத்தில் அலுவலக அதிகாரிகளும் தொழிற்சாலை முதலாளிகளும் பாட்டாளி வர்க்கமும் காணப்படுகின்றனவாயினும் இன்னமும் தனிமனிதர்களில் அந்த வர்க்க அடையாளத்தைவிடவும் சாதி அடையாளம் வலிவுடையதாக இருக்கிறது. சாதி ஒழிந்து சகலரும் சமமென ஆதல் வர்க்க சமூக முறைமை தகர்ந்து சமத்துவ சமூகம் சிருஷ்டிக்கப்படுவதுடன் தொடர்புடையதாயுள்ளது. அப்போதுதான் இரத்த உறவுத் தடைகள் அகன்று யாவரும் கேளிர் ஆதல் சாத்திய மாகும். ஆம், இங்கே வர்க்கங்கள் தோன்றியபோது இரத்த உறவு இனக்குழு முறைமை தகர்க்கப்படவில்லை. இனக்குழுக் குலங்கள் சாதிகள் ஆக்கப்பட்டன.



இந்த அடிப்படையான வேறுபாடு இரட்டைத் தேசியத்துக்கான காரணியாக இருந்து வந்துள்ளது. இலங்கையில் தமிழினம் தனியரசொன்றைக் காணவேண்டும் என அருட்டுணர்வு பெற்ற காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் தமக்குள் தனித்தனிச் சாதிச் சங்கங்களாக இருந்ததைக் கைவிட்டு ஒன்றுபட்டு அமைப்புருவாக்கமடைந்தனர்; அப்போது ஒன்றுபட்ட அமைப்புக்கு சிறுபான்மைத் தமிழர் மகாசபை எனப் பெயர் சூட்டியமை கவனிப்புக்குரியது. தமிழர் சமூகத்தினுள் ஒடுக்கப்பட்டோர் இன்னொரு சிறுபான்மையினர் என்ற புரிதல் இங்கே வெளிப்படுகிறது. தமிழகத்திலும் ஆதி திராவிடர் என்ற அடையாளம் சிந்திக்கத்தக்கது. இவ்வாறு இன்னொரு சிறுபான்மை என்ற விளக்கத்தின்பேறாக இனவிடுதலைக்குரிய அமைப்பில் ஒடுக்கப்பட்டோருக்கு தனி அலகு கேட்கும் அளவுக்கு சுயநிர்ணயக் கோரிக்கை யாழ்ப்பாணத்தில் சிலரால் முன் வைக்கப்பட்டமை நினைவுகூரத்தக்கது. அது சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கோரிக்கை அல்லவாயினும் சிலரிடம் காணப்பட்ட அந்த உணர்வுக்கான தளம் புரிந்து கொள்ளப் பட வேண்டியதாகும். இவ்வாறு இன்னொரு இனம் என்பதாகப் பார்த்தல் தவறாயினும் வேறுபட்ட அரசியல் அபிலாஷைகளைக் கொண்டிருந்த இரட்டைத் தேசிய இருப்பு ஏற்கப்படல் அவசியமானதாகும்.

சுயநிர்ணயப் பிரச்சினையில் முக்கியத்துவம் பெறுகின்ற மற்றொரு வேறுபாடு மேற்கில் சுயநிர்ணயம் பின்னர் ஏகாதிபத்திய நாடுகளாக ஆனவற்றுக்குரியது; இங்கே குடியேற்ற முறையில் ஏகாதிபத்திய சக்திகளால் சூறையாடப்பட்ட நிலையில் சுயநிர்ணயத்தைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் தந்திரம் எமது தேசியப் பிரச்சினையை மேலும் சிக்கல்படுத்தி யுள்ளமையும் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒன்று. பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியாவைத் துண்டாடிப் பாகிஸ்தானை உருவாக்கும் போதும், காஷ்மீர் விவகாரத்திலும் வேண்டுமென்றே பல நெருக்கடிகளைத் தொக்க வைத்தது இரகசியமானதல்ல. ஈழப் பிரச்சினையில் இந்தியத் தலையீடு ஏற்படுத்தியிருக்கும் சிக்கல்கள் பிரதான பங்குப் பாத்திரம் உடையது. அமெரிக்க மேலாதிக்கவாதம் இன்று தலிபான் விடயத்தில் மட்டுமன்றி உலகெங்கும் தேசிய இனச் சிக்கல்களைத் தனக்கமைவாகக் கையாள்வது தெரிந்த சங்கதி.

இத்தகைய அடிப்படை வேறுபாடுகளைக் கவனிக்காமல் சுயநிர்ணயப் பிரயோகத்தை நாம் மேற்கொள்ள முடியாது. துரதிருஷ்டவசமாய் கிளிப்பிள்ளைத்தனமான வாதங்களே இவ்விடயத் திலும் முன்வைக்கப்படுகின்றன. இக்கட்டுரையின் வரையறையில் சுயநிர்ணயப் பிரச்சனை எடுக்கப்படவில்லையாயினும் அதற்கான அடித்தளம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைதிகொள்ள முடியும்.

***- 2001.***

**(எங்கும் பிரசுரமாகாத கட்டுரை).**

படிப்பகம்

www.padippakam.com



# 3

# தேசிய எழுச்சியின் இன்றைய போக்கில் தலித் பிரச்சினை

வட்டுக்கோட்டை மாநாட்டின் பின்னரும், தமிழ்த் தேசியப் போராட்டம் கூர்மைப்பட்டும், மூன்று தசாப்தங்கள் ஓடிவிட்டன. முன்னர் சாதியத் தகர்ப்புப் போராட்டம் யாழ்ப்பாணத்தை உலுக்கி யெடுத்தபோது, அது முழுச் சாதியச் சமூகங்களிலும் காணமுடியா திருந்த பல படிப்பினைகளை வழங்கியது. எங்கும் காணாத வகையில், அனைத்துச் சாதியினரும் ஒன்றுபட்டுச் சாதியத் தகர்வுக்காக அப்போது போராடினர். விரல் விட்டு எண்ணத்தக்க சாதிய வெறியர்கள், தனிமைப்படுத்தப்பட்டுத் தாக்கப் பட்டார்கள். சாதியச் சமூகமுறைமையே தகர்ப்புக்குள்ளாக்க வேண்டிய இலக்காக இருந்ததேயன்றி, எந்தவொரு தனிச்சாதியும் எதிரியாகக் கருதப்பட வில்லை. சாத்தியப்பட்ட சகல சக்திகளும் போராட்ட அணியில் ஐக்கியப்படுத்தப்பட்டார்கள், அல்லது ஆதரவாளர்களாக்கப் பட்டார்கள். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் இவற்றை மிகச் சிறப்பாக முன்னெடுத்துச் சென்றது.

அது பண்ணையடிமை முறையைத் தகர்க்கும் தேசியத்தின் ஒரு பணி. ஆயினும் தமிழ்த் தேசியம் இப்பணிக்கு எதிராகவே செயற் பட்டது. சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை முனைப்புற்றபோது, பண்ணையடிமை தகர்ப்புக்கு எதிராக நின்ற இடதுசாரி சக்திகள் அதற்கு எதிரான போராட்டத்தை உடனடியாக முன்னெடுப்பவர்களாக இருக்கவில்லை. அதன் பொருட்டு தமிழினவாதிகள் இடது சாரிகளைத் துரோகிகள் எனப்புறமொதுக்க முனைந்த போதிலும், தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ அழித்தொழிப்பு வளர்ந்த போது தமிழ்த் தேசியத்தை, தலித் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த சக்திகளும் ஏற்க நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். ஆரம்பத்தில் பல்வேறு இயக்கங்கள் வாயிலாக ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையினர் தமிழ்த்தேசிய எழுச்சியில் பங்கெடுத்தனர்.

ஆயினும், அந்தத் தமிழ்த் தேசியத்தின் இயங்குசக்தியாயும், தீர்மானிக்கும் சூத்திரதாரியாயும், தலைமைப் பிரதிநிதியாயும் இருந்தது யாழ் வெள்ளாளத் தேசியம். அது பிளவுபடுத்தல், அதனைப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்துதல் என்கிற பண்பை தன்னளவில் கொண்டிருந்தது. அந்தக் காரணத்தால் அனைத்து சக்திகளையும் தொடர்ந்து ஐக்கியப்படுத்தி, அதனால் போராட வைக்க முடிய வில்லை.



யாழ் வெள்ளாளத் தேசியத்தை முழுமையாகத் திருப்திப் படுத்தவல்ல ஏதோ ஒரு இயக்கத்திற்கு, ஏனையவற்றைத் துரத்தியாக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

வர்க்கப் பிளவு முழுமையாக நடந்த ஐரோப்பாவில் தேசியம் ஒரு வடிவத்தைப் பெற்றிருந்தது. அதே போன்ற வடிவத்தை, அது இலங்கையிலும் இந்தியாவிலும் பெறமுடியாது. சாதியப் பிளவுடைய நமது சமூகங்களில் இரண்டாயிரம் வருடங்களாக வர்க்கச் சமூக மாற்றங்களூடாக, சாதிகளும் நீடித்து நிலைத்து வருகிறது. தேசியம் அனைத்துச் சக்திகளையும் ஐக்கியப்படுத்தும் வலுவை இழக்கும்போது, சாதிக்குழுக்கள் தேசிய உணர்வு சார்ந்து, தமக்குள் வலுவான ஐக்கியத்தைக் கொள்வதும் ஏனைய சாதிகளில் இருந்து விலகலை ஏற்படுத்துவதும், நிதர்சனமாய் நடக்கிறது. ஒவ்வொரு சாதித் தேசியங் களது கூட்டிணைவாகவே நமது தேசியம் கட்டமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு வர்க்கங்களைத் தேசியத்துக்குள் ஒருங்கிணைப்பதில் இருந்து, இது மாறுபட்ட பண்பாகும். .

ஈழத் தமிழ்த் தேசியம், ஆதிக்கப் பண்புடைய யாழ் வெள்ளாளத் தேசியத்தின் நலன்களை முதன்மையாக நிறைவு செய்வதுடன், அதற்கு உட்பட்டுச் செயற்படுவதாக ஏனைய சாதியத் தேசியங்களை கட்ட மைத்தது. இதுவே ஒருமுகப்படும் தமிழினத் தேசியமாக இருந்தது. இந்தத் தமிழினத் தேசியத்திற்குப் பொது எதிரியான பௌத்த சிங்களப் பேரினவாதம் இருந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை. இந்தப் பொது எதிரிக்கு எதிராகப் போராடுகிற போது, தனது இனத்திற்குள் மேலாண்மை செலுத்துவதில் யாழ் வெள்ளாளத் தேசியம் குறியாக இருந்தது. இவ்வாறாக தனக்குள் அடங்கிய ஏனைய சாதித் தேசியங் களிலிருந்து, யாழ் வெள்ளாளத் தேசியம் தனித்துச் செயற்பட்டு, தனது மேலாண்மையை உறுதி செய்தது. .

இதுபோலத் தனித்து இயங்கும் மற்றொன்றாகத் தலித் தேசியம் உள்ளது. ஆரம்பத்தில் தனித்தனியாக இயங்கிய ஒடுக்கப்பட்ட சாதியமைப்புகள் ஒன்றுபட்டு, "சிறுபான்மைத் தமிழர் மகாசபை" எனும் ஒரு அமைப்பாக வடிவம் பெற்று, தலித் தேசியம் தெளிவான அரசியல் மார்க்கத்தைக் கட்டமைத்துக் கொண்டது. அது தீர்க்கமான போராட்ட வடிவங்களைக் கையாண்டு பண்ணையடிமைத் தனத்தையும் அதன் எச்ச சொச்சங்களையும் தகர்க்கும் பணியைக் கையேற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் சுயநிர்ணயத்தை உறுதி செய்யும் முழுமையான போராட்டங்களை அனைத்து தளங்களிலும் அதனால் முன்னெடுக்க முடியாத எல்லைப்பாடு இருந்தது. இதனால் "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்" தோற்றம் பெற்றது. இந்தப் போராட்டத்தில், தலித் தேசியப் பணி கையேற்கப்பட்டாலும், இங்கு யாருக்கும் ஆக்கிரமிப்பு அல்லது மேலாண்மை அபிலாஷைகள் எதுவுமின்றி, அனைத்து சாதியினரும் ஐக்கியப்பட்டுப் போராடுவது சாத்தியமானது.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வகையில், பல நூறு வருடங்களாய் ஒடுக்கப்பட்டு வந்த மக்களது (தலித்) தேசிய எழுச்சி முன்னெடுக்கப்பட்டபோது, வெளியாரிலிருந்து விடுதலை பெறுவதை மட்டும் குறிக்கோளாக உடைய ஒடுக்கும் தேசியப் பண்புடைய (யாழ் வெள்ளாளர் நலன் பேணும்) மற்றொரு வகைத் தேசியம் சாத்தியப்படும் யதார்த்தம் நமக்கு மட்டுமே உரியதாகும். அதேவேளை இன்று பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் கோரமான ஒடுக்குமுறை, தமிழர் அனைவரையும் ஏதோவொரு வகையில் ஐக்கியப்படுத்துவதைக் காணத் தவறக்கூடாது. அத்துடன், யாழ் வெள்ளாளத் தேசியம் என்பதை இனங்காண முடியாத வகையில் போராட்டத்தை வழிநடத்தும் அமைப்பும் கட்டமைக்கப்பட்டுள்ளதையும் காண வேண்டும்.

தலைமையின் சாதி வேறாக இருப்பதும், களத்தில் போராடும் சக்தியாக தலித் இளைஞர்களும் யுவதிகளுமே அதிகமாக இருப்பதும் சார்ந்து ஒடுக்குமுறைத் தேசியம் என்ற வடிவம் இழக்கப் பட்டுள்ளதாகக் கருதமுடியாது. தலைமையின் சாதிவடிவம் யாழ் வெள்ளாளத் தேசியத்திலிருந்து வேறானதல்ல. பிராமணர்களும் வெள்ளாளர்களும் மட்டுமே சிவன் கோயில் கட்டமுடியும் என்ற ஆகம அனுமதியைத் தமக்கானதாய் முன்னரே ஆக்கிவிட்டவர்களாய் இன்றைய தலைமைச் சக்தி உள்ளது. அவ்வாறு மற்றொரு வெள்ளாளர் எனும் வடிவம் கொண்டவர்கள் தமது யாழ் வெள்ளாளத் தேசியத்தின் தலைமையில் இணைவதில் ஆதிக்க சக்திகளுக்குச் சலனம் எதுவும் இல்லை. அதைவிடவும் இந்தப் போராட்ட வடிவங்கள் யாழ் வெள்ளாளத் தேசிய நலனுக்குப் பாதகமாயில்லை என்பதிலேயே இன்றைய தலைமை ஆதிக்க சக்திகளால் யோசிக்கப்படுகின்றது.

இன்றைய போராட்டத்தின் களத்தில் போராளிகளாக ஏராளமான தலித் இளைஞர்கள், யுவதிகள் உள்ளனர் என்பது தொடர்பாக ஒரு அனுபவத்தை இங்கே எடுத்துக் காட்ட முடியும். இந்த வருடத்தின் தொடக்கத்தில் கொழும்பில், இரு நாட்களுக்கான பெண்ணியக் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றிருந்தது. தேசிய விடுதலைப் போர்க்களத்தினுள் பெண்ணியப் பிரச்சினை தொடர்பாக அந்தக் கருத்தரங்கு ஏற்பாட்டாளரான பெண்ணியச் சிந்தனையாளர் முன்வைத்த கருத்து ஒன்று இங்கே எமது கவனத்துக்கும் உரியதாயுள்ளது. அவர் சமாதான காலத்தில் தனது பெண்ணிய அமைப்புச் சார்ந்து கிளிநொச்சியில் பெண் போராளிகளுடன் தொடர்பாடியிருக்கிறார். அவர்கள் அவர் மூலமாகப் பல காத்திரமான நூல்களைப் பெற்றதுடன் அவை தொடர்பான கருத்தாடல்களையும் செய்திருக்கிறார்கள்.

அத்தகைய ஒரு சந்திப்பின்போது அவர்களிடம் இந்தப் பெண்ணியவாதி அரசியல் செல்நெறிகள் மற்றும் தீர்வுகள் பற்றிய அவர்களது அபிப்பிராயத்தைக் கேட்டுள்ளார். மிகப் பொறுப்பாகக் கதைத்தவர்கள் கூட, அவை தலைவராலேயே தீர்மானிக்கப்படுவன,



அவரால் வெற்றியை நிச்சயமாக ஈட்டித்தர முடியும் என்பதாகத்தான் கூறியிருக்கிறார்கள். சுயமான புரிதலுக்கும் அரசியல் தெளிவுக்கும் இப்போதும் அங்கே இடமில்லை. அந்தப் பெண்ணியவாதியின் அக்கறை, அந்தப் பெண்போராளியிடம் பெண்விடுதலை சார்ந்த நடைமுறைச் சாத்தியமான செயற்பாட்டுக்கான வெளி அங்கு இல்லை என்பதைக் காட்டுவதுதான்.

இன்றைய எமது சமூகத்தில் பெண் போராளிகளுக்கு ஒரு மரியாதை இருப்பதான தோற்றம் உண்டு. அவ்வாறு உண்மையான மரியாதை எதுவும் இல்லை என்பதைப் பெண் போராளிகளே உணர்வதாக அவர்களால் படைக்கப்பட்ட ஆக்கங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. மேலே குறித்த பெண்ணியக் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இதனை எடுத்துக்காட்டின. ஒரு பெண் போராளியின் படைப்பிலிருந்து காட்டப்பட்ட உதாரணமொன்றைப் பார்க்கலாம். விடுப்புப் பெற்றுத் தனது வீட்டுக்கு வருகிறாள் ஒரு பெண்போராளி. அவள் வருவதை அறிந்த தாயார் அவளது தங்கைகளை வேறு உறவினர் வீட்டுக்கு ஏற்கனவே அனுப்பி விட்டாள். "அவர்கள் எங்கே?" என்று கேட்டபோது, "அவர்கள் குமருகள் பிள்ளை" என்கிறார் தாய். திகைத்துப்போன அந்தப் பெண்போராளி, "நானும் குமர்ப் பிள்ளைதான் அம்மா" என்கிறாள். அவர்கள் போராளிகள் என்கிற வகையில் வேறான கருவிகளாகப் பார்க்கப்படுகிறார்கள். அந்தத் தாயின் நிலைப்பாட்டில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. வேறான ஒரு கூட்டுக்குள் ஒரு மகளை தொலைத்துவிட்டவள், ஏனைய பிள்ளைகளையும் இழப்பதற்கு விரும்பவில்லை. சொந்தத்தாய் பெண் போராளியைப் பார்ப்பதில் வேறுபடுகிறபோது சமூகத்தின் பார்வை இரண்டகத் தன்மையாகியுள்ளதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லை. மக்களை விட்டுத் தொலைதூரம் பிரிக்கப்பட்டே போராளிகள் உள்ளனர். மக்களைப் பிரிந்துள்ள இந்தப் போராளிப் படிமம் இழக்கப்பட்டு மீண்டும் சமூகப் பிரசையாக அவர் வரும்போது சமூகத்தின் இயற்கைக்குள் தன்னை அமிழ்த்த வேண்டுமேயன்றி, தான் விரும்பும் மாற்றங்களை அங்கே காணமுடியாது. பல்வேறு வடிவங் களில் பெண் ஒடுக்குமுறைகளைத் தொடரும் சமூகத்தில் கருவிகளைக் கைவிட்ட முன்னாள் பெண் போராளியும் பொருத்தப்பாடு காண முடியுமேயன்றிச் சமூகப் போராளியாகிப் பெண் விடுதலைக்குரலை எழுப்பி எதுவும் ஆகாது. தேசிய விடுதலைப் போராட்டம் பெண் விடுதலைக்கான மாற்றங்களைப் பெரிதாக ஏற்படுத்திவிடவில்லை.

பெண்விடுதலை உணர்வு தொடர்பாகச் சாதித்ததை விடவும் சற்று அதிகமாகச் சாதியத் தகர்வு சாத்தியப்பட்டதான தோற்றம் ஒன்று உண்டு. சீதனம் வாங்குவதும் கொடுப்பதும் தண்டனைக்குரிய குற்றம் என்ற சட்டம் போலவே, சாதி பேசிப் பேதங்கள் வளர்ப்பதும் தடுக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சீதனத்தைச் சட்டத்தில் மாட்டுப்படாமல் கொடுக்கவும் வாங்கவும் செய்யத் தெரிந்த

படிப்பகம்

www.padippakam.com



வர்கள் அந்தளவுக்குச் சாதிபேதச் செயற்பாடுகளுக்குள் செல்வதில்லை. ஓரளவுக்குச் சாதியச் சழக்குகள் உணர்வுபூர்வமாகவே கைவிடப் பட்டதான தோற்றம் உண்டு.

இது மேலோட்டமானது, உள்ளூரச் சாதியக் காழ்ப்புகள் நீறுபூத்த நெருப்பாக இருந்துகொண்டுள்ளது. கண்டநிண்ட சாதிக்காரனும் போராளியாக இருப்பதால் எதையும் கதைக்கப் போய் மாட்டிக் கொள்ளக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு, வெளிப்பார்வையில் சாதியப் பார்வைகள் குறைந்துள்ளதான தோற்றத்தை ஏற்படுத்தியுள் ளது. பொதுவாகவே இருவர் வெளிப்படையாக இந்த விடயங் களைக் கதைக்கும்போது மூன்றாவது ஒருவர் பிரவேசித்துவிட்டால் நிறுத்திக் கதையை மாற்றுவதற்கு எம்மவர் நன்றாகவே பயிற்சி பெற்றிருக்கிறார் கள். அந்த மூன்றாமவருடன் தனித்தனியே முன்னவர் இருவரும் அதே விடயத்தைக் கதைத்தவர்களாயினும் இதுதான் நிலை - மூவர் ஒரு பாதையில் போகக்கூடாது!

இவ்வாறு கதை மாற்றம் பெறும் ஒரு பேசுபொருள் சாதி பற்றியது. குறிப்பாகத் தோல்வி பற்றிய சந்தர்ப்பங்களிலும், தேவையற்ற விடயங்கள் செய்யப்படுவதாகக் காணும்போதும் கண்டநிண்ட சாதிகள் செய்வதான புறுபுறுப்பு இடம்பெறும். அதேயாட்கள் வெற்றிகளை அடுக்கியபோது, எங்கடை பொடியளாக இருந்தவர்கள்; தவறுகளின்போது கண்டநிண்ட சாதிகளாய்க் காணப்படுகிறார்கள். எங்கடை பொடியள் என்பதும், யாழ் வெள்ளாளத் தேசிய நிறைவேற்றத்துக்கான நயினாரின் அடியாட்கள் எனும் பொருளில் பார்க்கப் படுவதை அடியொற்றியதுதான்.

வெறும் சட்டம் போட்டுச் சாதிபேதம் தகர்க்கப்படக் கூடியதல்ல. தமிழ்த் தேசியத்தின் சாராம்சம் வெள்ளாளத் தேசியமாக இருப்பதைத் தகர்ப்பதற்கான அடிப்படை மாற்றங்கள் கொள்கை மார்க்கத்திலும் நடைமுறையிலும் செய்யப்பட்டிருக்கவேண்டும். அது செய்யப்பட வில்லை. இல்லாத பட்சத்தில் வெளிவெளியாகச் சாதி பற்றிப் பேசாததனாலேயே பெரிதாக ஏதோ மாற்றம் ஏற்பட்டு விட்டதாக மயங்க வேண்டியதில்லை.

ஈழத்தமிழ்த் தேசியத்தின் வடிவம் மாறாதபோதிலும் இங்கு சமூக சக்திகளிடையேயான சமநிலையில் சில மாற்றங்கள் இடம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது. இது தொடர்பான கருத்துக்களைப் பலதரப்பட்டவர்களுடனான பேட்டிகாணல் ஊடாகப் பெற்றுக்கொண்டேன். தவிர்க்க முடியாத காரணங்களால் கருத்துக்குரியவர்களது பெயர்களையும் யாரெல்லாம் பேட்டி காணப் பட்டார்கள் என்பதையும் முன்வைக்க முடியவில்லை. குறிப்பாகச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆகியவற்றில் முன்னணியில் இயங்கிய தலித் விடுதலைச் சமூகப் போராளிகளது கருத்துக்கள் இங்கு முன்னுரிமைப்படுத்தி வெளிப்படுத்தப்படுகின்றன.



பிரதான இன்றைய இனத்தேசிய விடுதலைப் போராட்டக் களத்தில் தலித் போராளிகள் பலர் உள்ளமையினால் ஏற்படும் அளவு அதிகரிப்பு உருவாக்கிவரும் மாற்றங்கள் கவனிப்புக்குரியது. முழுமையான சமூகத் தளத்திலும் தலித் பிரிவினர் பல வகைகளில் ஆளுமை விருத்தியைக் கண்டுவருகின்றனர்.

சாதிய ஆதிக்கத்துடன் வெள்ளாளத் தேசியத்தை முன்வைத்த பிரிவினரில் பெரும்பான்மையோர் புலம் பெயர்ந்துவிட்டனர் (இவர்களே கனடாவிலும், ஐரோப்பாவிலும், அவுஸ்திரேலியாவிலும் சாதியவாதம் மேலோங்க காரணமாகியுள்ளனர் ).

இங்கே பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு முகங்கொடுப் பவர்களில் தலித் மக்கள் முன்னிலை வகிக்கின்றனர். இவ்வகையில் இதுவரை ஏற்பட்டுள்ளது அளவு மாற்றமேயன்றிக் குணாம்ச மாற்றம் அல்ல (யாழ் வெள்ளாளத் தேசியமே தலைமை சக்தி எனும் பண்பில் மாற்றம் இல்லை). எதிர்காலத்தில் குணாம்ச மாற்றத்தை ஏற்படுத்தத்தக்க மாற்றம் சாத்தியப்பட இடம் ஏற்படுத்தவல்லதாகச் சமூகத் தளமாற்றம் உருவாகி வருவது கவனிப்புக்குரியது.

இப்போது போராட்டத் தலைமை தோல்வியைத் தழுவும் பட்சத்தில் ஈழத் தமிழினத் தேசியவாதிகள் சர்வசாதாரணமாக, இதெல்லம் அந்தச் சாதி இழைத்த தவறு எனப் பழியைப் போடுவார்கள். இவ்வாறு பழியைப் போட உள்ளவர்களது பிற்போக்குத்தனமான ஆதிக்கத் தேசியவாதத்தை முறியடித்து மக்கள் நலன் சார்ந்த அம்சங்களை முன்னிலைக்குக் கொண்டுவராமல் இருந்ததன் விளைவு இது. இந்தப் படிப்பினைகளுடன் முந்திய சாதியத் தகர்ப்புப் போராட்ட அனுபவங்களையும் உள்வாங்கும் புதிய தலித் போராளிகள் எதிர்காலத்துக்கான நம்பிக்கைகளைத் தருவர்.

இதனைக் கவனத்திற் கொண்டு தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம் மக்களை, கிழக்குப் பிராந்தியத்தை, மலையக மக்களை, பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் பேச்சுவார்த்தைகளில் இடம்பெறுவதைப் போல, தலித் பிரதிநிதிகளும் இடம்பெறுதல் அவசியம். ஐரோப்பாவிலுள்ள தலித் சிந்தனையாளர்கள் முன்வைக்கும் இந்தக் கோரிக்கை இங்குள்ள தலித் போராளிகளாலும் (அவர்கள் தங்களை சமூக விடுதலைப் போராளிகளாகவே அடையாளப்படுத்த விரும்புகின்றனர். தலித் விடுதலை அதன் பிரிக்க முடியாத அம்சம் என்ற காரணத்தாலும், இந்தக் கட்டுரையின் பாடுபொருள் காரண மாகவும் இவ்வாறு நான் குறிப்பிடுவதனை அவர்கள் மன்னிப்பார்கள்) வரவேற்கப்படுகின்றது. ஆயினும் அதனை முதன்மைப்படுத்தி எவரும் இங்கு அந்தக் கோரிக்கையை இயக்கமயப்படுத்தவில்லை. அது கவனிக்கப்படாமலே உள்ளது.

ஐரோப்பியத் தலித் சிந்தனையாளர்களின் இட ஒதுக்கீடு குறித்த கோரிக்கை இங்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சென்ற நூற்றாண்டின்

படிப்பகம்

www.padippakam.com



முப்பதாம் ஆண்டுகளில் இலவசக் கல்வி அறிமுகப் படுத்தப்பட்டதில் இருந்து அதனைப் பெறுவதற்கும், பாடசாலைகளில் பாரபட்சம் காட்டப்படுவதனை முறியடிப்பதற்கும் பல போராட் டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் வாயிலாக இன்று வேறுபடுத்த முடியாத அளவில் தலித் மாணவர்கள் முன்னேறியுள்ளார்கள் என்ற அபிப்பிராயம் உண்டு. அவ்வாறே வேலை வாய்ப்பிலும் சாதிப் புறக்கணிப்பு இந்தியாவில் எதிர்நோக்கப்படுவதுபோல இங்கு இல்லை. அந்த வகையில் இட ஒதுக்கீட்டுக்கான அவசியம் ஏற்படவில்லை.

சாதியத் தகர்ப்புப் போராட்டம் இடம்பெற்றபோதே தலித் சிறப்புரிமைகள் குறித்த கோரிக்கைகளை ஏன் முன்வைக்கவில்லை என்ற கேள்விக்கு, நாங்கள் சமூக விடுதலைக்காகப் போராடி அவற்றை வென்றெடுத்தோம். தொடர்ந்து ஆட்சியதிகாரத்தை வென்றெடுப் போம் என்ற இலக்குத்தான் இருந்ததேயன்றிச் சலுகைகள் எங்களுக்கு அவசியப்படவில்லை எனும் பதில் கிடைத்தது. இந்தியச் சூழலில் அவற்றுக்கான தேவை இருப்பதை அவர்கள் மறுக்கவில்லை. இடைச்சாதியினர் சாதியொடுக்கு முறையில் முனைப்புறும்போது மாயாவதி பிராமணர்களுடன் ஐக்கியப்பட்டுத் தலித் விடுதலைக் குரலை முன்வைப்பதும் தவிர்க்கவியலாத வரலாற்று நிர்ப்பந்தம் எனும் அபிப்பிராயமும் முன்வைக்கப்பட்டது.

தமிழகத்தில் பிராமணியத்துக்கு எதிராகப் போராடிய வெள்ளாளர்கள் இடஒதுக்கீடு போன்றவற்றை தமது நலன்சார்ந்தே முன்வைத்தனர். அவர்கள் அரசியல் அதிகாரத்தை வென்ற பின்னர் தலித் மக்களை ஒடுக்குவதில் வன்மத்துடன் செயற்படுகின்றனர். அவர்களுடன் யுத்தப் பரம்பரையாய் இருந்த ஏனைய இடைச் சாதியினரும் இணைந்து இன்று தலித் மக்களை மோசமாக ஒடுக்கி வருகின்றனர். இங்கு சாதியத் தகர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்ட காலம் இந்த அம்சத்துடன் இணைத்து நினைவுறுத்தப்பட்டது. சைவசித்தாந்த ஆன்மீகத் தலைமை, கல்வி - அரசதிகாரப் பாரம்பரியம், யுத்தப் பரம்பரைக் குணாம்சம் என்பவற்றையுடைய வெள்ளாளச் சாதியவாதம் இங்கு வன்மத்துடன் சாதிய ஒடுக்குமுறையை முன்னெடுத்திருந்தது. பிராமணப் புனிதம் பெறாத தாழ்வு மனப்பான்மையும் இந்த ஒடுக்குமுறையில் பங்கு வகித்துள்ளது.

அதனை முறியடிக்கும் வகையில் பெரும்பாலான வெள்ளாளர் களையும் ஐக்கியப்படுத்தி முன்னெடுக்கப்பட்டது சாதியத் தகர்ப்புப் போராட்டம். இப்போது யாழ் வெள்ளாளத் தேசியவாதம் முனைப்பாகி ஒரு உச்சநிலை அடைந்து இன்று வீழ்ச்சிக் கட்டத்தை அடைந்த நிலையில் தலித் பிரச்சினை அணுகப்படுகின்றது. கூர்மையான போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தபோது சாதி அடையாளங் கவனிக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகள் சமாதான காலத்தில் எதிர்நோக்கிய நெருக்கடிகள் இங்கு கவனத்திற் கொள்ளப்படுதல் அவசியம். குறிப்பாகப் பல காதல் திருமணங்கள்



சாதியைக் கவனிக்காது செய்யப்பட்டவை, சமாதான காலத்தில் குடும்ப அளவில் பழக முற்பட்டபோது திருமண முறிவுவரை சென்றன. அந்த வகையில் நடைமுறையில் இளந்தலைமுறை சாதியத்தைக் கடக்க முனைந்தபோதிலும் பழைய தலைமுறையும், சாத்திர சம்பிரதாயங்க ளும் சாதியத் தகர்ப்புக்குத் தடையாக இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

இதுவும் எதிர்காலத் தலித் இயக்கம் கவனத்திற் கொள்ளவேண்டிய ஒரு அம்சம். யாழ் வெள்ளாளத் தேசியத்தின் வீழ்ச்சியைப் பிற சாதியினர் தலைமீது சுமத்த எடுக்கும் முயற்சி, பழைமைச் சகதியிலான முடக்கம் என்பவற்றுக்கு எதிரான அரசியல் பண்பாட்டு இயக்கங்கள் பூரணத் துவப் பண்புகளுடன் முன்னெடுக்கப்படுதல் அவசியம். தோல்வியை வெற்றியாக மாற்றத்தக்க புதிய அணிதிரட்டல்களைச் சாத்தியமான வடிவங்கள் அனைத்தினூடாகவும் முன்னெடுக்கும் போது மட்டுமே தோல்வி வாதத்தில் மூழ்கிச் சிதைந்து போகாமல் மீள இடம் ஏற்படும்.

## II

முன்னதாக, முதற்பகுதியில் நாம் விவாதித்திருந்த விடயங்களில் இருந்து பிரதானமான மூன்று அம்சங்களைத் தொகுத்து எடுத்துக் கொள்ள முடியும்.

1. ஈழத் தமிழினத் தேசிய எழுச்சி எதிர்நோக்கும் நெருக்கடிக்கான அடிப்படைக் காரணம், அது யாழ். வெள்ளாளத் தேசிய நலனுக்கு ஆட்பட்டுச் செயற்பட்டமை.

2. தலித் தேசிய எழுச்சி 'விடுதலை பிளவுபடாதது' என்பதை உணர்த்துவது.

3. I. சாதியத் தேசியச் சக்திகளிடையே தலித் தேசியம் யாழ் வெள்ளாளத் தேசியத்துடன் சம பலத்துடன் உள்ளது.

3. II. பிளவுபட்ட தேசிய யதார்த்தத்தில் பிரதான எதிரி லாபமீட்டும் முயற்சியில் ஒன்றுடன் ஒன்றை மோதவிடும் தந்திரோபாயத்தைக் கையாளும்.

இந்த விடயங்களை மேலும் விளங்கிக் கொள்ளும் வகையில் இங்கு நடைமுறையிலுள்ள சில சம்பவங்களை எடுத்துக்காட்டாகப் பார்க்கலாம். இவை குறித்து ஏற்கனவே எல்லோரும் அறிந்திருக் கிறீர்கள். ஆயினும் அவசியம் கருதிச் சுருக்கமாக இங்கு அலசுவோம்.

1. யாழ்ப்பாண நூலகத்தை ஒரு தலித் தலைவர் திறந்து வைப்பதைத் தடுத்து நிறுத்துவதற்காக, யாழ் மேயராகத் தலித் ஒருவர் இருப்பதை நீடிக்க விடாமற் செய்த சம்பவம்.

இந்த விடயத்தில் போராட்டத் தலைமையைக் கையகப்படுத்திச் செயற்படும் இயக்கம் வெளிப்படையாகவே சாதியவாதத்துக்கு ஆட்பட்டுள்ளமை தெளிவுபட்டது. சமூக மாற்றச் செயற்பாட்டில்

படிப்பகம்

www.padippakam.com



இந்தத் தேசியப் போராட்டம் சாதகமான திசையில் இல்லை என்பதற்கும், யாழ் வெள்ளாளத் தேசிய மனோபாவத்தைப் பலப் படுத்தும் செயற்பாடுகளே அனுமதிக்கப்படும் என்பதற்கும் யாழ் மேயராக தலித் தலைவர் ஒருவர் நீடிக்க முடியாமை எடுத்துக்காட் டாகியுள்ளது.

2. சாதியத் தகர்ப்புப் போராட்டம் முனைப்படைந்த அறுபது களில் எஸ்.ரி.என். நாகரத்தினம், டானியல் போன்ற தலைவர்கள் சமூகத் தலைவர்களாக எழுச்சி பெற்றனர், அவர்கள் பெரும்பான் மையான மக்களால் மதிக்கப்பட்டனர். மாறாக, சு.ப.தமிழ்செல்வன் அரசியல் பொறுப்பாளராக இருந்தபோது சாதியவாத சக்திகளின் மனோபாவம் ஒருவகையாக இருந்தது. அவரது மறைவு குறித்துத் தலித் மக்களிடையே கடும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

3. மூன்று வருடங்களின் முன்னே தென்மராட்சியில் நடைபெற்ற கால நீடிப்பைக் கொண்டிருந்த சாதிக்கலவரம் மேலே நாம் பார்த்த மூன்றாம் பகுதியின் இரண்டு அம்சங்களையும் உணர்த்துகிறது. அதாவது, சாதிச் சக்திகள் சமபலத்தை எட்டியுள்ளதுடன், சாதிய தேசிய முரண்களை எப்போதும் எதிரிகள் பயன்படுத்துவர் என்பது.

இந்த மூன்றாவது விடயத்துடன் எமது விவாதத்தை இப்போது தொடர முடியும். அந்தக் கலவரம் பற்றி நினைவுபடுத்துவதற்காகச் சுருக்கமாகச் சம்பவத்தை முன்வைக்கிறேன். உயர்தர வகுப்பு மாணவிகள் கூடியிருந்த ஒரு இடத்தில் ஒரு தலித் சக மாணவன் வருகிறான். அவன் சார்ந்த வெற்றிக்கு விருந்து அவசியம் என்று அந்த மாணவிகள் சொல்கிறார்கள். அவன் ஐஸ்கிறீம்களை வாங்கி எல்லோருக்கும் பரிமாறுகிறான். ஒரு மாணவிக்குக் கொடுக்க முயற்சித்தபோது, அவள் தனது அண்ணன் வருவதைக் கண்டுவிட்டதால் வாங்காமல் பின்வாங்குகிறாள். அதனை உணராத தலித் மாணவன் அந்த உயர்சாதி பெண்ணிடம் வலிந்து ஐஸ்கிறீமைக் கொடுக்கிறான். அண்ணனின் சாதி மனோபாவம், அவனது தங்கை உட்படத் தங்கையுடன் இருந்த சக மாணவிகளின் கோரிக்கை யினால் நடந்த விருந்தாக அதனை விளங்கிக் கொள்ள இடமளிக்க வில்லை. தங்கைக்கு ஒரு தலித் வலிந்து ஐஸ்கிறீமைத் திணித்ததாகச் சம்பவத்தைத் திரிபுபடுத்தியது. இது தலித்களின் திமிர் என்பதாகப் பார்க்கப்பட்டது. அது கலவரமாக வெடித்தது. ஓரிரு நாட்கள் அந்தக் கலவரம் நீடித்தது. இரு பகுதிகளிலும் பயங்கர ஆயுதங்கள் புழங்கின. அவை படைத்தரப்பால் இரவலாக வழங்கப்பட்டதாக பின்னர் தெரியவந்தது. இது சமாதானம் நிலவிய காலம் என்பதை மனங்கொள்ள வேண்டும்.

சாதிய முரண்கள் எப்போதும் பிரதான எதிரிக்கு வாய்ப்பானது. உயர்சாதி தேசியம் தலைப்பட்டு இயங்கும்போது பலவீனப்பட்டுள்ள தலித் தேசியத்தை எப்போதும் பிரதான எதிரி பயன்படுத்துவதில் வெற்றிபெறும். இத்தகைய செல்நெறிக்கு மாறாக யாழ்ப்பாணத்தில்



இன்று தலித் தேசியம் வலுவோடு காணப்படுவதனை அவதானிக்க முடியும். அதன் பயனாகத் தலித்கள் மத்தியில் பேரினவாதிகளால் லாபமீட்டவும் முடியவில்லை. உயர்சாதித் திமிரில் ஊறியவர்கள் தலித் மக்கள் சமபலத்துடன் முன்னேறியுள்ளதை அவர்களின் திமிர் என்பதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்கள் சமவலுவுடன் ஈழத் தமிழினத் தேசியப் போர்க்களத்தில் செயற்படுகின்றமையே இன்றுவரை இத்தனை தவறுகளுடனுமுள்ள தலைமையின் கீழான போராட்டம் நீடிக்க முடிகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

தலித்கள் பலவீனமாக உள்ள சந்தர்ப்பத்தைப் பிரதான எதிரி பயன்படுத்துவதற்கு பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்திய உபகண்டம் முழுமையையும் ஆக்கிரமித்து நீடித்து ஆளமுடிந்ததில் காணமுடியும். இது குறித்து பாரதி பஞ்சகோணக் கோட்டை எனும் ஒரு புனைகதை யையும் படைத்தார். இந்தியப் பண்பாடு வலுவானது என்று கர்வத்துடன் இருந்தபோது அரணின் நான்கு சுவர்கள் வலுவுடன் இருப்பதைப் பார்த்தோம். ஐந்தாவது கோணத்துடனான ஒரு மதிலைப் பலவீனமானதாக வைத்திருந்தோம். அதை எதிரி இலகுவாக ஊடுருவும் வழியாகப் பயன்படுத்தினான் எனக் காட்டினார் பாரதி. தீண்டாமையின் பெயரால் தலித் மக்கள் இழிவுபடுத்தப்பட்ட நிலையில், நால்வர்ணத்துக்கு அப்பால் பஞ்சமர்களாய் நடத்தப்பட்ட மக்கள் பிரித்தானிய ஆக்கிரமிப்புக்குக் களமாக இடமேற்படுத் தியிருந்ததை அந்தப் படைப்பில் பாரதி காட்டுகிறார். அங்கே தீண்டாமைக் கொடுமை தகர்க்கப்பட வேண்டும் என்பதையே பாரதி முதன்மைப் படுத்திக் காட்டியிருந்தார். வெள்ளையரின் அடிமைக ளாகப் பார்ப்பன விசுவாசிகள் தரங்கெட்டுப் போய்க்கிடப்பதையும் பல சந்தர்ப்பங்களில் பாரதி வெளிப்படுத்தியிருந்தார்.

இவற்றை கவனத்திற் கொள்ளாமல் இந்தியத் தேசியம் என்பதற்கு எதிராகத் தலித்தியவாதத்தை பயன்படுத்தும் சூழல் இன்று இந்தியாவில் உண்டு. தலித் மக்களின் போர்க்குணத்தை வெளிக் கொணர்ந்து அதன் பலத்தில் காலூன்றிச் செயற்படாத தன்மை இங்கு வெளிப்படுகிறது. தமது சுயநல நாட்டங்களை உலகமயமாதல் வாய்ப்புடன் பெருக்க நினைக்கும் மத்திய தரவர்க்க சக்திகள் இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொள்ள முயல்கிறார்கள். இந்தியத் தேசியம் என்பது எல்லாம் பொய். தலித்துகளுக்குத் தேசம் இல்லை. இதனை உயர்சாதியினன் வைத்திருந்தால் என்ன - பல்தேசக் கம்பனிகள் ஆக்கிரமித்தால் என்ன, எல்லாம் ஒன்றுதான் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.

பிராமணத் தேசியம் கட்டமைத்த இந்தியத் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடித் தலித் தேசிய உணர்வுடன் இந்திய தேசியத்தைப் பிரதான எதிரியிடமிருந்து காப்பது அவசியமானதாகும். பிராமணத் தேசியத்தை அம்பேத்கர் வலுமையாக எதிர்த்தார். அதேவேளை இந்தியா பிளவுபடுவதையும் அவர் நிராகரித்தார். இந்தியா பிளவுபடுவது ஒவ்வொரு பகுதித் தலித்களையும் அவ்வப்பகுதி உயர்

படிப்பகம்

www.padippakam.com



சாதியினர் ஒடுக்குவதை வலுமைப்படுத்தும் என அவர் கருதினார்.தலித் தேசிய வலுவை முழு இந்தியா சார்ந்து ஐக்கியப்படுத்தும் விருப்பம் அவரிடம் காணப்பட்டது. இந்தியா பிளவுபடக் கூடாது என்றபோது பிராமணத் தேசியத்துக்கு விட்டுக் கொடுப்பவராக அம்பேத்கர் செயற்படவில்லை. இந்தியத் தலித் தேசியத்தை வலுமையானதாக்கும் நோக்கத்தையே கொண்டிருந்தார்.

மாறாக, பிராமணத் தேசியத்தைப் பலவீனப்படுத்தும் என்ற நம்பிக்கையில் பிரிவினையை ஆதரித்தார் பெரியார். பாகிஸ்தான் போலத் திராவிடஸ்தான் எனத் தென்னிந்தியா பிரிந்து பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து திராவிடர்கள் விடுதலைபெற வேண்டும் எனப் பெரியார் கருதினார். அதன் சாத்தியமின்மையைப் புரிந்துகொண்டு, திராவிட இனங்கள் அனைத்தும் ஒன்றுபடாதபோதிலும் தமிழகம் தனிநாடாக வேண்டும் எனத் தமிழ்த் தேசியத்தை முன்வைத்தார் அண்ணாதுரை. பெரியாரிடமும், அண்ணாதுரையிடமும் தலித் ஒடுக்குமுறை உணர்வு கிடையாது. ஆயினும் திராவிடத்தின் பெயராலும் தமிழ்த் தேசியத்தின் பெயராலும் தலித் ஒடுக்குமுறை மிக மோசமாக முன்னெடுக்கப்பட்டு வருவதனை அறிவோம். இன்றைய இந்த அவலத்தை வைத்துப் பெரியார் தலித் விரோதி எனக் குற்றம் சாட்டுவது எவ்வளவு தவறோ, அதுபோன்று இடைச் சாதியினரின் தலித் ஒடுக்குமுறையைக் கவனத்திற் கொள்ளாதிருப்பதும் தவறாகும்.

அம்பேத்கர் விரும்பியதைப் போன்ற முழு இந்தியா தழுவிய தலித் தேசிய விழிப்புணர்வு இன்று மேலோங்கி வருவதனை நம்மால் தெளிவாகவே அவதானிக்க முடியும். இனத் தேசியம் சார்ந்த சுயநிர்ணய உரிமையை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் அதேவேளை, இந்தியத் தேசியத்தின் பலத்தைத் தலித் தேசிய ஒன்றிணைப்பாக வலுப்படுத்தவும் இடமுண்டு.

அந்த வகையில் பிரதான எதிரியின் கைப்பாவையாகிவிடாமல் தலித் தேசியம் தனது போட்டியாளரான ஒடுக்குமுறைக் குணாம்சமுள்ள உயர்சாதித் தேசியத்துடன் ஐக்கியமும் போராட்டமும் எனும் கோட்பாட்டைப் பின்பற்றுவது இயலுமாகிறது. எமது கடந்த கால வரலாற்று அனுபவம் இந்தச் செல்நெறியை மிகத்துலக்கமாக உணர்த்தி நிற்கிறது. அது குறித்து அலசுவதற்கு முன்னதாக இங்கு சு.ப.தமிழ்ச்செல்வன் பற்றி நிலவிய சில கருத்துக்களைப் பார்ப்பது உதவிகரமாக அமையும்.

மூன்று வருடங்களின் முன்னர் சமாதான நடைமுறைகள் பல குழப்பங்களுடனாயினும் தொடர்ந்து கொண்டிருந்த நேரம், யாழ்ப் பாணத்தில் மக்கள் சமாதானத்தின்மீதும் தீர்வு சாத்தியம் என்பதாகவும் மயங்கிப் போயிருந்தனர். அரசுத்தரப்பு உண்மையான தீர்வில் அக்கறை கொள்ளாமலே மக்களின் மயக்கத்தை மென்மேலும் அதிகரிக்கும் செயற்பாடுகளை வளர்த்தது. சமாதான வாய்ப்பின் வாயிலாக தீர்வை



வென்றெடுக்கும் அரசியல் போராட்டங்களை முன்னெடுக்கும் ஆற்றல் தமிழ்த் தலைமையிடம் இருக்கவில்லை.

அவர்கள் மக்களைச் சந்தேகப்பட்டார்கள். மக்கள் தங்களைவிட்டு விலகுவதாகத் தலைமை கருதியது. இராணுவத்தைக் கொண்டே மக்களைத் தாக்கச் செய்யும் மலிவான உத்தியைத்தான் அவர்களால் தெரிவு செய்ய முடிந்தது.

அவ்வாறு சமாதானம் குழப்பப்படுவது குறித்து மக்களிடம் அதிருப்தி இருந்தது. அது கண்டநிண்ட சாதியின் கைங்கரியம் என்ற முணுமுணுப்பும் வெளிப்பட்டது. கூடவே அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கருத்துரைகள் தொடர்பாகவும் அதிருப்தி இருந்தது. அவருடைய சாதிப்புத்தி அப்படி என்று சொன்னவர்களும் உண்டு. அவர் வான்தாக்குதலால் கொல்லப்பட்டபோது ஒரு கருத்து மாற்றம் ஏற்பட்டது. இடையில் சமாதானந்தான் காணாமற்போய் விட்டதே. உண்மையில் தமிழ்ச்செல்வன் சமாதானத்தில் அக்கறையாக இருந்தார் என்றும், அதனை விரும்பாமல் அவர்மீது தாக்குதல் நிகழட்டும் என்று இயக்கத்திலுள்ள யுத்தத்தை விரும்பும் சக்திகள் காட்டிக்கொடுத்தனர் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. அதைவிடவும் தலித் மக்களிடம் வேறொரு சந்தேகம் வலுமையாக இருந்தது. அவர் வான்தாக்குதலில் மரணிக்கவில்லை, அத்தாக்குதல் நடந்த பின்னர் தனியாகக் கொல்லப்பட்டார் என்ற கருத்து அத்தகையது. தொடர்ந்து அத்தகைய பொறுப்பான பதவிக்கு ஒரு தலித் சாதியைச் சேர்ந்தவர் இருக்கக்கூடாது என்பதற்காக அவ்வாறு நடந்ததாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. வான்தாக்குதல் நிதர்சனமாய்த் தெரிந்த ஒன்றாக இருந்தபோதிலும் இந்த வதந்திகளைத் தடுத்துவிட முடியவில்லை.

இத்தகைய சந்தேகங்களுக்கு அடிப்படையாக ஆழ வேரூன்றியுள்ள சாதியக் கருத்தியலே அமைந்துள்ளது. போராளிகளது சாதனையின் மீது தெரியாத சாதி, தவறுகளின்போது வெளிப்படுவது ஏன்? சாதியக் கருத்தியலுக்கு எதிரான காத்திரமான போராட்டத்தைத் தமிழ்த்தேசிய போராட்டம் முன்னெடுக்கவில்லை. மட்டுமன்றி, யாழ் வெள்ளாளத் தேசியத்துக்கு விட்டுக் கொடுக்கும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப் பட்டன. அதற்கான வலுமையான எடுத்துக்காட்டு யாழ். மேயராக ஒரு தலித் தலைவர் நீடிக்கமுடியாமை ஆகும்.

இப்போதெல்லாம் சாதிபேதம் பார்ப்பதற்கு இடமேயில்லை. சட்டம் போட்டுப் பூண்டோடு ஒழித்துவிட்டோம் என்று மார்தட்டிக் கொண்ட தமிழ்த் தேசியம் நூலகத் திறப்புவிழா வருகிறது என்றவுடன் தமது சுயரூபத்தை வெளிப்படுத்திக் கொண்டது. அத்தகைய ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வைத் தலித் தலைவர் நிறைவேற்றக்கூடாது என்ற காழ்ப்புணர்வே, அப்போது அந்த நிகழ்வு பகிஷ்கரிக்கப்பட்டதும், பின்னர் மேயராகத் தலித் தலைவர் நீடிக்க முடியாமையும் ஆகும். வேறொரு விடயம், எரிக்கப்பட்ட நூலகம் இரண்டு தசாப்தங்களின் பின்னர் புனருத்தாரணம் செய்யப்பட்டுக்

படிப்பகம்

www.padippakam.com



கோலாகலமாகத் திறக்கப்படுவதான வரலாற்று முக்கியத்துவமுள்ள நிகழ்வொன்று குறுக்கிடாது இருந்திருந்தால் தலித் தலைவர் மேயராக இருப்பதை வேண்டா வெறுப்பாகவேனும் அனுமதித்திருப்பர்; சாதிபேதம் பாராத நமது அரசியல் மேன்மைக்கு அதனை அணிகலமாயும் ஆக்கியிருப்பர்.

உயர் சாதியினர் எல்லோருமே யாழ் வெள்ளாளத் தேசியத்தை முன்னெடுப்பதில் முனைப்பாக இருக்கின்றனர் என்பதற்கில்லை; வெள்ளாளர்களில் மிகப் பெரும்பான்மையினர்கூட உண்மையான விடுதலையை உறுதிப்படுத்தும் சுயநிர்ணய உரிமையை விரும்புகிறார் களேயன்றி சாதி மேட்டிமைத்தனத்துக்காக நிற்க வில்லை. அத்தகைய உன்னதமிக்க ஜனநாயகப் பண்பு காணப்பட்டமையினாலேயே பெரும்பான்மையான வெள்ளாளர்கள் சாதியத் தகர்ப்புப் போராட்டத்தை ஆதரித்திருந்தனர் எனும் உண்மையை மறக்கக் கூடாது. அத்தகைய ஜனநாயக சக்திகளின் வலுவான அடித்தளத்தில் இன்றைய தமிழ்த் தேசியம் கட்டமைக்கப்படவில்லை. இது ஆதிக்கக் குணம்சம் உடைய வேளாளச்சாதி அகம்பாவத்திற்கு விட்டுக் கொடுக்கும், எதிர்காலத்தில் அதன் ஆதிக்கத்துக்கு வழிவகுக்கும் தேசிய உணர்வையே முன்னெடுத்துச் செல்கிறது.

விடுதலையை விரும்பும் ஜனநாயக சக்திகள் மதிக்கப்பட்டிருப்பின் சமாதான சூழலை முன்னெடுத்து அரசியல் தீர்வை எட்டுவதற்கான அரசியல் மார்க்கத்தையும் வெகுஜனப் போராட்டங்களை யும்முன்னெடுத்திருப்பார்கள். சமாதான காலத்தில் அதனை அர்த்த முள்ளதாக்கி அரசியல் தீர்வை எட்டவேண்டும் என்ற வெகுஜன இயக்கங்கள் சிங்கள மக்கள் மத்தியில் முனைப்புப் பெற்றிருந்தன. அதனுடன் இணைந்து தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் எழுச்சி பெற்றுப் போராடும்போது பௌத்த சிங்களப் பேரினவாதத்தை முறியடித்து முற்போக்கு ஜனநாயகச் சிங்கள மக்களைப் பலப்படுத்தி யிருக்க முடியும். சுயநிர்ணய உரிமைத் தீர்வையும் வென்றெடுத்திருக்க முடியும்.

இல்லாமல், சமாதானத்தைப் பயன்படுத்தித் தனது போட்டி யாளர்களான மாற்று இயக்கத்தவர்களைக் கொன்றொழிப்பதையே தலைமை தொடர்ந்து முன்னெடுத்தது. தொடர்ந்து ஏலவே காட்டி யிருந்ததுபோல யாழ்ப்பாணத்தில் வலிந்து யுத்தத்தில் இராணுவத்தை ஈடுபடுத்தியது. தொடர்ந்து இராணுவம் மட்டுமல்ல, தமிழ்த் தலைமையும் யுத்தத்தை மக்கள்மீது திணித்தது.

இன்று சிங்கள மக்கள் யுத்தத்தை ஆதரிக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டு எழுந்துள்ளது. இது எவ்வாறு ஏற்பட்டது என்பது மிகத் தெளிவானது. மேலே காட்டியவாறு தமிழ்த் தலைமை வலிந்து யுத்தத்தை வரவேற்ற நிகழ்வுகள் சிங்கள மக்களுக்குப் பூதாகாரப் படுத்திக் காட்டப்பட்டன. பௌத்த பேரினவாதச் சிங்கள அரசுகள் தீர்வுகளில் விசுவாசமாயில்லை என்பது சிங்கள மக்களுக்குப்



போதியளவு உணர்த்தப்படுவதில்லை. மாறாகத் தமிழ்த் தலைமை கொலைபாதகம் செய்யத் தயங்காத பயங்கரவாத அமைப்பு என்பது பிரசாரப்படுத்தப்படுகிறது.

அத்தகைய தவறான அமைப்பே என்றாலும் அதன் வலுமை காரணமாய்ப் பேசித் தீர்க்க வேண்டும் என்ற கருத்து முன்னர் சிங்கள மக்களிடம் இருந்தது. மிக வலுமையான அரண் என்று சொல்லப் பட்ட தொப்பிக்கலை காட்டுப்பகுதி உட்பட்ட கிழக்கின் பல பகுதி களிலும் அவர்கள் முறியடிக்கப்பட்ட பின்னர் அவர்களை ஒடுக்கிவிட முடியும் என்ற நம்பிக்கை சிங்கள மக்களுக்கு ஊட்டப்பட்டுள்ளது. ஒரு பக்கம் அவர்கள் ஒருபோதும் சமாதானத்தீர்வுக்கு வரமுடியாத பயங்கரவாத மோகமுள்ள அமைப்பு என்ற படிமமும், மறுபக்கமாய் அவர்களை ஒடுக்கியழித்துவிட முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்படுத்தப்பட் டுள்ளதால், அவர்களை அழிக்கும் யுத்தத்தைப் பல சிங்கள மக்கள் ஆதரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். அதற்காகப் பெரும்பாலான சிங்கள மக்கள் நியாயமான அரசியல் தீர்வை விரும்ப வில்லை என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது.

இத்தகைய நெருக்கடிமிக்க சூழலில் தலித் தேசியம் தனது போர்த் தந்திரத்தை முன்வைக்க வேண்டியுள்ளது. தமிழினத் தேசியம் பல தவறான நடவடிக்கைகளினால் தனது இறுதிக்கட்டத்தை எட்டி யுள்ளது. யாழ், வெள்ளாளத் தேசிய நலனின் அடிப்படையில் சாத்திய மற்ற இலக்குக்காகச் செய்திருக்கக்கூடாத பல செயற்பாடுகளைத் தமிழ்த் தேசியத் தலைமை முன்னெடுத்து வந்துள்ளது. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமையானும் கெடும் (குறள் 466) என்பது திருக்குறள். செய்யத் தகாதன செய்து இதுவரையான கேடுகள் பெருகின, இப்போது செய்யப்பட வேண்டியவை செய்யப்படவில்லையெனினும் கேடுகள் பெருகும்.

யாழ். வெள்ளாளத் தேசியத்தின் அகங்காரத் தோரணை சார்ந்து ஒரு இயக்கம் தவிர்த்த மற்றவர்களைத் துரோகிகள் என்பதைப்போல தேசியம் இயங்கமுடியாது. அனைத்து சக்திகளையும் ஐக்கியப் படுத்துவது என்ற பலமான தளத்திலிருந்து தலித் தேசியம் செயற் பட்டாக வேண்டும். சாதித்தூய்மை பேணுவது போல எம்மவர் அல்லாதவர் எல்லாம் துரோகிகள் என ஒதுக்கிவிட முடியாது. மிகமிகக் குறைந்த காரணங்களுக்கான ஐக்கியப்படுத்தத் தக்க சக்திகளையும் ஐக்கியப்படுத்த வேண்டும். பலரை எதிரியாக ஆக்கித் திண்டாடுவதாயில் லாமல், பிரதான எதிரிக்கு எதிரான போராட்டத்தை முதன்மைப் படுத்துவது, ஏனைய முரண்களைத் தீர்ப்பதனை அதன் பொருட்டுக் கவனத்திற் கொள்ளாமல் இருந்து விடாமல், அவற்றுக்கான ஏற்ற போராட்டம் என்ற நடைமுறை யினூடாகத் தவறுகளைக் களைந்து விடுதலைக் குறிக்கோளை நோக்கி முன்னேறுவது. இத்தகையதான ஒடுக்கியவர்களுக்கும் விடுதலையை வழங்கும் அனைத்துத் தளைகளையும் தகர்ப்பதாக அந்தப் போராட்டம் அமைந்திருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



இப்போதுள்ள நிலை சிக்கலானது. அந்த விடுதலை மார்க்கத்தை முறியடித்து ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள முன்னெடுக்கப்பட்ட யாழ் வெள்ளாளத் தேசியம் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை நாசப்படுத்தியுள்ள சூழலில் அதனைத் தலித் தேசியம் கையேற்றுத் தமிழினத்துக்கும் ஏனைய தேசிய இனங்களுக்கும் உரியதான சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க வேண்டியுள்ளது. விடுதலை பிளவுபடாதது என்ற வகையில், அந்தப் போராட்டமே சிங்கள மக்களுக்கான விடுதலை மார்க்கமாயும் அமையும்.

வெள்ளாளத் தேசியம் தலித் தேசியத்துக்கு எதிராக இனவாதத்தை முனைப்பாக்கி இன்றைய நாசங்களை ஏற்படுத்தி வைத்துள்ளது. தலித் தேசியம் வெள்ளாளர்களை எதிரிகளாகப் பார்ப்பதில்லை. சமத்துவ உணர்வுடன் (இதையே தமக்கு எதிரானதெனச் சாதியவாதக் குணாம்சமுடைய வெள்ளாளர்கள் கருதுவர்) வெள்ளாளர்களுக்கும் தமிழின மீட்சி சார்ந்த சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைத் தலித் சக்திகள் முன்னெடுப்பதற்கு இன்றைய வரலாறு நிர்ப்பந்தித் துள்ளது. இதுவரையான தமிழ்த் தலைமைகள் சாதியவாத, இனவாதத் தப்பெண்ணங்களால் ஏற்படுத்தியிருக்கக்கூடிய கேடான பக்கங்கள் அம்பலப் படுத்தப்பட்டு நிராகரிக்கப்பட வேண்டும். எம்மிடமும் ஏற்படக்கூடிய சாதிய உணர்வு முடக்கங்களைக் கடந்து, சாதியத்தை முற்றாக ஒழிக்கும் இலட்சியத்தின் பகுதியாகத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான தலைமையைத் தலித் சிந்தனை கையேற்க வேண்டும்.

இதனை வெறும் கற்பனைவாதமாகக் கருதவேண்டாம். செய்யத்தக்கதாக உள்ள இந்த வரலாற்றுக் கடமை கையேற்கப்படவில்லையெனில் பாரதூரமான தவறுகள் வளரும். இதனைச் செய்வதற்கான சாத்தியமான கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். நடைமுறை சார்ந்த வேலைத் திட்டங்களை அதன் அடிப்படையில் உருவாக்கிப் பிரயோகிக்க வேண்டும்.

அதற்கான அனைத்து விடயங்களையும் கண்டறிய முயற்சிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அது, இத்தகைய மாநாடுகள் வாயிலாக நீண்ட விவாதங்கள் மூலமாகவும் மக்கள் மத்தியிலான தொடர்ச்சியான வேலைகள் ஊடாகவும் கண்டறியப்படவேண்டும். ஆயினும் சாத்தியமான செயற்பாடு சார்ந்து ஒரு விடயத்தை இங்கே வலியுறுத்த முடியும். சாதியவாதக் குணாம்சத்துடன் ஒரு இயக்கத்தைத் துதிபாடி விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதாகக் கொண்டாடுவதால் ஏற்படப்போகும் தவறுகள் பற்றி மக்கள் விழிப்பூட்டப்படாமல் இருக்கிறார்கள். தவறுகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இவர்களும் இல்லை. ஏனையவர்களும் இல்லை. அனைத்துத் தரப்பும் சார்ந்த தீர்வுத்திட்ட வடிவம் பற்றிப் பொதுவான கலந்துரையாடல்கள் கூட எம்மத்தியில் இல்லை. இதனை, எமக்கான தீர்வு வடிவம் எத்தகையது என்பதனைத் தலித் இயக்கம் முன்னெடுக்க வேண்டும். அது எந்த ஒரு தனி இயக்கத்துக்குரியதோ அமைப்புக்குரியதோ அல்ல. அந்தச்



செயற்பாட்டுக்கு ஊடாகவே, தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் தலித் பிரச்சினை குறித்த அக்கறையையும் வெளிப்படுத்த முடியும்.

ஆக, தலித் பிரச்சினைத் தீர்வு என்பது இன்றைய அரசியல் நெருக்கடியின் தீர்வுடன் இரண்டறப் பிணைந்தது. அதன்பால் சில சலுகைகளைக் கோரும் பலவீனமான இடத்தில் இலங்கைத் தலித் வரலாறு இல்லை. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் தலைமை தாங்கத்தக்க ஆற்றல் ஈழத் தலித் இயக்கத்துக்கு உண்டு. முன்னரும் சாதித்துள்ளோம், இனியும் முடியும்!

***செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க***
***செய்யாமை யானும் கெடும்.***

மாநாட்டுப் பிரதிநிதிகளே!

இந்தக் கட்டுரையில் முன்வைக்கப்பட்ட பல கருத்துக்களுடன் உங்களுக்கு முரண்பாடுகள் இருக்கும் என்பதனை அறிவேன். கருத்தாடலின்போது நீங்கள் முன்வைக்கும் ஆரோக்கியமான விமரிசனங்கள் அடிப்படையில் விவாதத்தை முன்னெடுத்து எனது கருத்துக்களைச் செழுமைப்படுத்த ஏற்றதான ஒரு வாய்ப்பை இழந்தமைக்காக வருந்துகிறேன். நேரில் வந்து உங்களுடைய மேலான கருத்துக்களைச் செவிமடுக்காமற் போனமைக்காக மீண்டும் எனது மன்னிப்பை கோருகிறேன். ஆயினும், நீங்கள் முன்வைக்கும் கருத்துகளை மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தொகுத்து வழங்கும் போது அவை தொடர்பான எதிர்வினையை ஏற்ற ஊடகங்கள் வாயிலாக வெளியிடுவேன். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மைக்காகத் தலித் மாநாட்டுக் குழுவினர்க்கும், இதனைச் செவிமடுத்து ஏற்ற எதிர்வினையை ஆற்றவுள்ள உங்களுக்கும் எனது நன்றிகள்!

நாம் இதுபோன்ற ஒரு அமர்வில் கண்டிப்பாகச் சந்திப்போம் என்ற எதிர்பார்ப்புகளுடன்,

**ந.இரவீந்திரன்**

*- 2007 லண்டன் தலித் மாநாட்டில் வாசிக்கப்பட்ட இக்கட்டுரை அது சார்ந்த இணையதளங்களில் வெளியானது. அச்சு வடிவில் பிரசுரமாகாதது.*

படிப்பகம்

www.padippakam.com



# 4

# அம்பேத்கரும் எம்.சி.சுப்பிரமணியமும்

அம்பேத்கரையும் எம்.சி.சுப்பிரமணியத்தையும் ஒப்பாய்வுக் குள்ளாக்குவது தனியொரு நூலுக்குரிய விசாலமான பேசுபொருள். அதனை மேற்கொள்வதற்கான முன்னோடிச் செயற்பாடாக அமையும் வண்ணம் எழுதிச் செல்லும் ஒரு சிறுகுறிப்பு இந்தக் கட்டுரை. இத்தகைய ஒப்பியலுக்கான மிக மிக ஏற்புடைய தருணம் இது. "ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இயங்கிய தமிழகத்தின் தலித் இயக்கம் ஏன் தோல்வியுற்றுள்ளது?" என்ற ஆய்வுத்தேடல் இப்போது தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்விடயத்தில் புதுவிசை சஞ்சிகை காத்திரமான விவாதங்களை முன்னெடுத்துள்ளது.

தமிழகத்தில் தலித்திய எழுச்சி தொந்நூறுகளில் அம்பேத்கர் நூற்றாண்டை ஒட்டித் தோற்றம் பெற்று முன்னேற்றப்படலாயிற்று. உடன் விளைவாகப் பல்வேறு வடிவங்களிலான தலித் இயக்கங்களும் தலித் அரசியல் கட்சிகளும் தோன்றின; அவை சாதித்தவற்றை விட, இயலாமல் முடங்கிய விடயங்கள் பல என்பதோடு, தோல்வியடைந்து விட்டது என இப்போது விசனங் கொள்ளும் கட்டம் தலித் சிந்தனை யாளர்களிடம் தோன்றியுள்ளமை அவதானிப்புக்குரியது.

தலித் இயக்க முன்னோடி அம்பேத்கர்; அவரால் வடிவப்படுத்தப் பட்ட அதன் செல்நெறியில் இருந்த சாதக பாதகங்கள் குறித்த ஆய்வு தலித் விடுதலைக்கு அவசியமாயுள்ளது. அவருக்கு இயங்குவதில் இருந்த நெருக்கடியில் ஒட்டுமொத்த விடுதலையைக் கையேற்றுச் செயற்பட்ட கம்யூனிஸ்ட் இயக்கம் வகித்த பாத்திரம் இன்று மீளாய்வுக்குரியதாகி யுள்ளது. ஒட்டுமொத்த மக்கள் விடுதலைக்கும் தலித் விடுதலைக்கும் இடையேயான உறவு எத்தகையது? ஒன்றில்லாமல், மற்றது சாத்தியமானதா? ஒன்றுக்கு எதிராய் மற்றது இயங்கத்தான் முடியுமா?

அவப் பேறாக அம்பேத்கர் காலத்தில் மேற்படி வினாக்களுக்குச் சாதகமான பதில் பெறப்படவில்லை. அதன் பேறாகவே இன்றைய மீளாய்வில் அம்பேத்கர் - கம்யூனிஸ்ட் இயக்கத் தொடர்பாடல் பற்றிய தேடல் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. ஒருவர் மீது மற்றவர் தாக்குதல் விமரிசனங்களை முன் வைப்பதற்கான விடயமல்ல, இது. எதிர்கால மார்க்கத்தைச் சரியாக வகுக்கும் பொருட்டாகக் கடந்த காலத்தைக் கற்றுக் கொள்ளல் என்ற அடிப்படையிலேயே இந்த மறுமதிப்பீடு முன்னெடுக்கப்பட வேண்டியதாக உள்ளது. சேறள்ளி வீசும் கைங்கர்யங்கள் ஆங்காங்கே இடம்பெற்ற போதிலும், மிக



ஆரோக்கியமான ஆய்வு முயற்சிகளும் வெளிப்படுவதனைக் காணக் கூடியதாயுள்ளது.

அவ்வகையில் ஆனந்த் எழுதியுள்ள "ஏகாதிபத்திய எதிர்ப்பும், சாதி ஒழிப்பும்" என்ற நூல் கவனிப்புக்குரியது. ஆனந்த் டெல்டும்ப்டெ இன் அம்பேத்கரது வாழ்வும் பணியும் பற்றிய சிறு நூல் ஒன்று ஏற்கனவே தமிழில் வெளியாகியுள்ளது. அது மிகச் சிறப்பாகவே அம்பேத்கரைத் தரிசிப்பதற்கான அடிப்படைகளைக் கொண்டுள்ளது. மார்க்சிய நிலைப்பாட்டில் அம்பேத்கரது தலித் இயக்கத்தையும், கம்யூனிஸ்ட் இயக்கம் அதனை எவ்வகையில் முகங்கொள்கிறது என்பதையும் அந்த நூலில் டெல்டும்ப்டெ காட்டியுள்ளார். இக்கட்டுரை இரண்டாவதாய் வெளியான ஏகாதிபத்திய எதிர்ப்பும் சாதி ஒழிப்பும் என்ற நூல் தொடர்பிலானது; இந்நூல் தலித் - கம்யூனிஸ்ட் இயக்கங்களின் உறவாடல்கள், மதிப்பீடுகள் என்பன தொடர்பாக வெளிப்படுத் தியுள்ள கருத்தில் கவனங் கொள்ளப்படுவதுடன், அவை தொடர்பான எமது மறுமதிப்பீட்டுச் செயற்பாடாக இதனை அமைத்துக் கொள்ளமுடியும்.

இந்த மறுமதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான ஆளுமையாக அமைபவர் எம்.சி.சுப்பிரமணியம். இலங்கையின் ஒடுக்கப்பட்ட மக்களது போராட்ட அனுபவங்களின் ஒளியில் இந்தியத் தலித் இயக்கச் செயற்பாடுகள் குறித்த மறுமதிப்பீட்டினை மேற்கொள்வது பயனுள்ளதாக அமையும்; இலங்கையின் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்களில் ஒருவரான எம்.சி.சுப்பிரமணியம் குறித்து, "எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி" எனும் தொகுப்பு நூலினை எஸ்.சந்திரபோஸ் வெளியிட்டுள்ளார். சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தன்னிகரில்லாத் தலைவரான எம்.சி.குறித்த நூல் வாயிலாக மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி, ஒரு பகுதித் தேவையைப் பூர்த்தி செய்வதாக அமையும். முன்னர் கூறியவாறு இருவர் குறித்த பன்மைப் பரிமாண ஒப்பாய்வு முழுமைத் தரிசனத்துக்கு அவசியம் என்றபோதிலும், இங்கு முதல் அடி பதித்தலை மேற்கொள்வோம்.

## I

ஏகாதிபத்திய எதிர்ப்பும், சாதி ஒழிப்பும் நுலாசிரியர் டெல்டும்ப்டெ அம்பேத்கரின் உறவுமுறைப் பெண்ணைத் திருமணம் செய்தவர். இருந்தபோதிலும், அம்பேத்கரியவாதியாக இல்லாமல், மார்க்சிய அடிப்படையில் வலுவாகக் காலூன்றியபடியே தான் தனது நூல்களை எழுதியுள்ளார். அவருக்குள்ள குடும்ப உறவு உள்ளும் புறமும் அம்பேத்கரை விளங்கிக் கொள்ள உதவியுள்ளது. ஆழமான தலித் உணர்வு கைவரப் பெற்றபோதிலும், தலித்தியத்தை நிராகரித்து ஒடுக்கப் பட்ட மக்களின் விடுதலை மார்க்கத்தை மார்க்சிய அடிப்படையில் கண்டடையும் தேடலை மேற்கொள்ளத்தக்க பாட்டாளி வர்க்க நோக்கு அவரிடம் தெளிவாகவே வெளிப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



தலித் இயக்கங்கள் மீதும், கடந்த காலச் செயற்பாட்டில் சாதியச் சமூக யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத கம்யூனிஸ்ட் இயக்கங்கள் மீதும் கடும் விமரிசனக் கருத்துக்களை நூல் பூராவும் ஆனந்த் டெல்டும்ப்டெ முன் வைத்துள்ளார். தலித் மக்களை ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் வெற்றி கொள்ள முடியாமற் போன காரணங்கள் அலசப்பட்டுள்ளன. ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத் திற்குத் தலைமை தாங்கும் கம்யூனிஸ்ட்கள் இனியும் தலித் மக்களை வென்றெடுக்க ஏற்ற செயற்திட்டங்களைக் கண்டடையாமல் காலங் கடத்தக் கூடாது என்பது அவரது அக்கறை.

அந்த உணர்வு நிலையிலிருந்து முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் கவனங்கொள்ளப் படாமல் போகும் அபாயத்தை ஆனந்த் டெல்டும்ப்டெ கருத்திற் கொண்டுள்ளார். அவரது எச்சரிக்கை உணர்வின் வெளிப்பாடாக நூலின் இறுதி வரிகள் இவ்வாறு அமைந்துள்ளது: “இந்த இரண்டு இயக்கங்களிலும் உள்ள பற்றுறுதி மிக்க மக்கள், இந்த நூலை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு, தங்களைச் சூழ்ந்துள்ள புற யதார்த்தத்திற்குப் பொருந்துகின்ற வகையில் அவர்களது செயற்திட்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால், இன்றுள்ள நாட்டு நடப்புகளைக் கருத்தில் கொள்கையில், இந்த நூலுக்கு ஏதேனும் ஒரு வண்ணம் பூசப்பட்டு, இரு தரப்பினராலும் வெறுப்புடன் நிராகரிக்கப்படும் ஒரு சாத்தியப்பாடு இருப்பதைப் புறக்கணித்துவிட முடியாது. அப்படி அது நிராகரிக்கப்படுமேயானால், இந்திய நாட்டிலுள்ள முற்போக்கு வாதத்திற்குத்தான் நிச்சயம் இழப்பு ஏற்படும். ஏனெனில், இந்த நூலை எழுதும் முயற்சி அத்தகைய நிராகரிப்புக்கு உரியதல்ல!” (ஆனந்த். பக்.261-2)

இடதுசாரிகள் தெளிவு பெற அவசியமான விடயங்களை கம்யூனிஸ்ட்டுக்குரிய உணர்வோடு எழுதியபோதிலும், அவர்கள் கவனத்திற்கொள்ளாமல் போவதற்கு இடமிருப்பதாக ஆசிரியர் அச்சங்கொள்ளக் காரணம் உள்ளது. அவரது தாக்குதல் இலக்கு இடதுசாரிகளே! “இந்த நூலின் விமர்சனத்தின் குறியிலக்கு இடதுசாரிகளே; அதற்குக் காரணம், தலித்துகளைவிட, அதிகமாக அவர்கள் உரிமை கொண்டாடுவதாலும், சமூகப் பகுப்பாய்வுக்கான மிக முன்னேற்றமடைந்த, மிகநுட்பமான கருவிகளையும் உத்தி களையும் வைத்திருப்பதாக அவர்கள் உரிமை கொண்டாடுவதாலும் அவர்களது தவறுகளே உண்மையில் விரித்துரைக்கப்பட வேண்டும். மற்ற எவரையும் விட அவர்கள்தான் இந்த விமர்சனங்களை முறையாக உள்வாங்கிக் கொள்வார்கள் என்னும் எதிர்பார்ப்பும் இந்த நூலுக்கு இருக்கிறது” என்பார் ஆனந்த் டெல்டும்ப்டெ. (பக்.25)

ஓரிரு தசாப்தங்களுக்கு முன்வரையிலான கம்யூனிஸ்ட் இயக்கத் தோற்ற - வளர்ச்சிக் கட்டங்களில் பலர் ஆரம்பத்தில் சாதித் தகர்ப்பு உணர்வோடு சமூகச் செயற்பாட்டு ஊடாட்டம் கொண்டிருப்பினும், கம்யூனிஸ்ட் ஆகியதும் வர்க்கப் போராட்ட மார்க்சியத்துக்குச் சம்பந்த



மில்லாததாகச் சாதியப் பிரச்சினையைக் கருதிக் கைவிட்டு இருந்தனர் என்பார் ஆனந்த். குறிப்பாக தென்னிந்தியத் தலைவர்களான ஈ.எம்.எஸ்.நம்பூதிரி பாட், ஏ.கே.கோபாலன், பி.சுந்தரையா, ரவி நாராயண ரெட்டி ஆகியோரை அவர் இது தொடர்பில் சுட்டிக் காட்டுவார்.

இந்தப் பொதுப் போக்கிலிருந்து மாறுபட்டு இயங்கிய ஒரே கம்யூனிஸ்ட்டாக இந்தியாவில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை முடிவுக்குக் கொண்டு வருவதுடன், சாதி - சமய வேறுபாடுகளும் ஒழிந்தாக வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்த சிங்கார வேலரைக் காட்டுகிறார் ஆனந்த். “தமிழ்நாட்டைச் சார்ந்த சிங்கார வேலர் மட்டுமே இந்தப் போக்கிற்கு ஒரே விதிவிலக்கு எனக் கூறலாம். அவர் முன்பு பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சாதி அமைப்பை ஒழித்துக் கட்டுவதற்கும், மக்களிடையே விஞ்ஞான மனப்பான்மையை வளர்ப்பதற்கும், காலங் காலமாக இருந்து வரும் பெண்ணடிமைத் தனத்தை ஒழித்துக் கட்டவும் போராடியவர். 1932இல் சுயமரியாதை சமதர்மக் கட்சி என்னும் ஒரு புதிய அரசியல் கட்சியைத் தொடங்கு வதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர். அன்றைய இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் கோட்பாட்டாளர்களை விட, மிகவும் முன்னேறியிருந்தவர்” எனச் சிங்காரவேலர் குறித்துக் கூறியிருப்பது மனங்கொள்ள வேண்டிய ஒன்று. (ஆனந்த் டெல்டும்ப்டெ, பக்.230)

சிங்காரவேலருடன் இணைந்து 1932இல் சுயமரியாதை சமதர்ம கட்சி உருவாக்கத்தில் பங்கெடுத்துத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் தலைவராக இயங்கிய ப.ஜீவானந்தம், ஆனந்த் டெல்டும்ப்டெ விமர்சனத்துக்கு உட்படுத்தியவாறு சாதித் தகர்ப்புக் குரலை ஆரம்பத்தில் இருந்த உத்வேகத்துடன் முதன்மைப்படுத்திப் பின்னாலே இயங்கவில்லை என்பது கவனிப்புக்குரியது. ஆயினும், தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் வலுவாகக் காலூன்றியிருந்தமையை ஆனந்த் காணத் தவறியுள்ளார். குறிப்பாக அன்றைய தஞ்சை மாவட்டம் பூராவிலும் நிலவிய தலித் மக்களுக்கு எதிரான சவுக்கடி - சாணிப்பால் குடிக்கும் கொடிய தண்டனைகளையும், அவமதிப்புகளையும் முறியடிக்கும் போராட்டங்களை கம்யூனிஸ்ட் கட்சியே முன்னெடுத்தது. கன்னடப் பிராமணரான சீனிவாசராவ் அந்த மக்களோடு கலந்திருந்து, தலைமையேற்றுப் போராடியமையை இன்றும் தஞ்சை மண் நினைவில் கொண்டுள்ளது. கீழ் வெண்மணிப் போராட்டம் அதன் கொடுமுடியாக அமைந்தது.

சாதிய இழிவுகளுக்கு எதிராகப் போராடிய போதிலும், சாதியத் தகர்ப்புக் குறிக்கோளை முன்னிறுத்துவதில் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தயக்கங்கள் இருந்தமை உண்மையே. வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவமாகப் பார்க்கப்பட்ட அளவுக்கு தலித் மக்களது சாதிய இழிவு படுத்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளோடு இணைத்துப் பார்க்கப்படவில்லை என்ற விமர்சனம் புறக்கணிக்கத்தக்கதல்ல. அதே வேளை, தலித் கட்சிகள் இரு தசாப்தங்களாய் இயங்கியபோதிலும்,

படிப்பகம்

www.padippakam.com



அவை முன்னேற முடியாமல் , இடர்ப்படுகையில் இன்று தலித் பிரச்சினைகளை கம்யூனிஸ்ட் கட்சிகளே போராட்ட முன்னெடுப்புக ளாக இயக்கப்படுத்தியுள்ளமையும் மறுக்கவியலாத உண்மையாகி யுள்ளது. தொடர்ந்தும் ஒடுக்கப்பட்ட மக்களில் கணிசமானோர் கம்யூனிஸ்ட் கட்சிகளில் இயங்கியதன் பேறு இது. பறையர் பள்ளர் கட்சி என்று அது அடையாளப்பட்டிருந்ததற்குப் பொருள் இல்லாமற் போகவில்லை.

தென்னிந்தியாவில் மட்டுமன்றி, வட இந்தியாவிலும் கம்யூனிஸ்ட்டுகள் இன்று தலித் பிரச்சினையைக் கரிசனையுடன் கற்றுத் தவறுகளைக் களைய முன்முயற்சி எடுத்து வருவது குறித்து ஆனந்த் குறிப்பிடுகிறார். பலதரப்பட்ட போராட்டங்களை வட இந்தியாவில் அம்பேத்கரும் தென்னிந்தியாவில் பெரியாரும் சாதியத் தகர்ப்பு அடிப்படையில் மேற்கொண்டதன் பேறாக ஏராளமான தலித் மக்கள் மத்திய தர வர்க்க வாழ்முறைக்கு முன்னேறியுள்ளனர் (குறிப்பிடப்பட்ட இரு தலைவர்களுடன் பலர் இத்துறையில் உழைத்துள்ளனராயினும் இவர்களது தலைமைத்துவம் அனைவ ராலும் ஏற்கப்பட்ட ஒன்று; அவ்வாறே சாதித் தகர்ப்பையன்றி, வர்க்க ஒழிப்பையே கம்யூனிஸ்டுகள் முன்னிலைப்படுத்தியபோதிலும், வர்க்க உணர்வுடன் அவர்கள் தலித் மக்கள் மத்தியில் முன்னதாய்க் குறிப்பிட்டவாறு ஆற்றிய பணியினாலும், அவர்களது சமூக அசை வியக்கம் சாத்தியமாயிற்று என்பதையும் எவரும் மறுக்கவியலாது). இவ்வாறு வர்க்கத் தளமாற்றம் பெற்று வளர்ந்தபோதிலும், சமூக, பண்பாட்டு அவமதிப்புகள் மிக நுட்பமாகத் தமக்கு எதிராக மேற்கொள்ளப்படுவதனை அவர்கள் முகங்கொள்ள நேர்கிறது. பொருளாதார ஒடுக்குமுறையின் வெளிப்பாடான தீண்டாமை உள்ளிட்ட அவமதிப்பை விட, இந்த நுண்ணிய அவமதிப்புக் குறைந்த ஒன்றல்ல. அதனை ஒழிப்பதற்கான சமூக மாற்ற அக்கறையுடன் அவர்களில் கருத்தியல் வளர்ச்சி பெற்ற பலர் கம்யூனிஸ்ட்டுகளாய்ப் பரிணமித்தனர்; தலித்தியம் அம்பேத்கர் நூற்றாண்டையொட்டித் தொந்நூறுகளில் முனைப்படைந்தபொழுது, அவர்களது முன்முயற்சியும் உந்திய நிலையில் கம்யூனிஸ்ட்டுகள் சாதியப் பிரச்சினை குறித்துத் தீவிரமாய்க் கற்க முனைந்தனர்.

முன்னேறிய தலித் புத்திஜீவிகளில் வலதுசாரிப் பிரிவினர் மார்க்சிய விரோதத்துடன் தலித்திய வாதத்தை முன்னெடுத்தனர். அம்பேத்கருடன் கம்யூனிஸ்ட்டுகள் முரண்பட நேர்ந்த நியாயப்பாடுகளைப் புறநிலை ரீதியாக அணுகுவதற்கு மாறாக, உயர்சாதி மற்றும் பிராமண ஆதிக்கமே கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நிலவியதால், சாதியவாதப் பார்வை அவர்களிடம் மேலோங்கி இருந்தது என்ற குற்றச்சாட்டைத் தலித்தியவாதிகள் முன்னெடுத்தனர். அம்பேத்கரின் முன்முயற்சி யிலான தலித் இயக்கம் கம்யூனிஸ்டுகளுக்கு அணுக்கமானது எனக் காட்டு வதைவிட, இரு தரப்பையும் நிரந்தர எதிர்நிலையில் வைப்பதையே தமது நலனுக்குரியது எனக் கண்டனர், தலித்திய வாதிகள்.

“தலித் இயக்கத்தால் வென்றெடுக்கப்பட்ட பல உரிமைகள், நன்மைகள் ஆகியவற்றின் காரணமாக உருவான தலித் குட்டி பூர்ஷ்வா வர்க்கம் இந்த வரலாற்று ரீதியான பிளவை மிகைப்படுத்திக் காட்டித் தலித் மக்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்திலிருந்து மேலும் அந்நியப்பட்டிருக்குமாறு செய்தது. இந்தச் சுயநலவாதிகளால் நடத்திச் செல்லப்பட்ட தலித் இயக்கம் துண்டு துண்டாக உடைந்தது. ஒவ்வொரு துண்டும் தனது வர்க்க எதிரியிடமிருந்து தனக்கான அற்ப ஆதாயங்களைத் தேடிக் கொண்டது. தலித்துகளிடையே இந்தச் சந்தர்ப்பவாதம் புரையோடி, தலித் விடுதலை என்னும் கருத்தையே முற்றிலுமாகச் சிதைத்துவிட்டது” என்று ஆனந்த் டெல்டும்ப்டெ குறிப்பிடும் அம்சம் கவனிப்புக்குரியது (பக்.256). “ஆனால், கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றைப் போலவே, சீரான தன்மையற்ற தலித் இயக்கத்தில், தற்போது கம்யூனிஸ்ட் இயக்கம் கற்றுவரும் பாடத்துடன் ஒப்பிடக்கூடிய பாடமெதனையும் கற்றுக் கொள்ளும் போக்கு இல்லாதது வருந்தத்தக்கது” (ஆனந்த் டெல்டும்ப்டெ. பக்.243) எனவும் அவர் கூறத் தவறவில்லை. மக்கள் விடுதலையை நேசிக்கும் அடிப்படைப் பண்பு கம்யூனிஸ்ட்டுகளுக்குரியது என்ற வகையில் சாதியத் தகர்வு குறித்த கற்றலை இன்று அவர்கள் முன்னெடுக் கின்றனர்; தலித்தியர்களில் உண்மையிலேயே தலித் மக்களது விடுதலையின் மீதான அக்கறை விசுவாசமானதாய் அமையும் பட்சத்தில், அவரது தேடல் அவரைக் கம்யூனிஸ்ட் அமைப்புக்கு ஆற்றுப்படுத்தி, சாதிச் சமூகத்தில் மார்க்சியப் பிரயோகம் எவ்வகையில் அமையமுடியும் என்ற கற்றலைத் தீவிரப்படுத்த உதவியிருக்கும். அவ்வாறில்லாத தலித்தியவாதிகள் சாதியவாதப் பிளவையே விரும்புகின்றனர் என்கிற வகையில், அவர்களிடமிருந்து வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது.

பிராமணியம் மட்டுமே சாதியப் பிளவினால் சுரண்டல் அமைப்பைப் பேண முயற்சிக்கவில்லை. எதிர்நிலை போல் காட்டிக் கொள்ளும் தலித்தியவாதமும் அதே போலச் சுரண்டலையும் உலக மேலாதிக்கவாத சக்திகளையும் உரமூட்டிப் பேணவே முயல்வன. தலித்தியவாதம் அம்பேத்கர் நூற்றாண்டின் உந்துதலின் பேறானதல்ல. இந்தியாவினுள் தொந்நூறாம் ஆண்டுகளில் ஊடறுத்துச் சிதைத்த உலகமயமாதலின் வெளிப்பாடு, அது. உலகமயமாதலில் இந்தியப் பெருமுதலாளிவர்க்கம் பல்தேசக் கம்பெனிகளில் சங்கமமாகவும், பல்தேசக் கம்பனிகளின் வேட்டைக் காடாக இந்தியா மாறவும் ஏற்ற இடைவெளியை ஏற்படுத்திக் கொடுக்கும் கருத்தியல் தளமாகவே தொந்நூறுகளில் தலித்தியவாதம் முனைப்படைந்தது. மாறாக, அம்பேத்கர் நூற்றாண்டுக்கான அதே காலப் பகுதியென்பது இடதுசாரி தலித் சிந்தனையாளரிடமும் கம்யூனிஸ்ட்டுகளிடமும், தலித் பிரச்சினையை மார்க்சிய நோக்கில் அணுகும் தூண்டலை உந்தித் தள்ளி, உலகமயமாதலுக்கு எதிராகவும் இந்திய விடுதலைக்காகவும் கம்யூனிஸ்ட்டுகள் தலித் மக்களை அணி திரட்டுவதனை முதன்மைபடுத்த வேண்டும் என்ற கற்றலை ஏற்படுத்துகிறது.

தலித்தியவாதிகளும் தாம் அம்பேத்கர் முன்னெடுத்த தலித்



படிப்பகம்

www.padippakam.com



இயக்கத்தின் பேராலேயே உலகமயமாதலுக்கு முண்டுகொடுப்பதாகக் கூறுகின்றனர். அதன் போலித்தனத்தை அம்பலப்படுத்தும் ஆனந்த், உலகமயமாக்கலுக்கு எதிராய் போராடுவது மட்டுமே தலித் மக்களின் விடுதலையை எட்டுவதற்குரிய ஒரே மார்க்கம் எனவும் வலியுறுத்தி யுள்ளார். தலித் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்காகப் போராடியவர், அம்பேத்கர்; உலகமயமாதலை ஆதரிக்கும் தலித்திய வாதிகள் தலித் மக்கள் பேரால் தமது நலன்களைப் பெற முயலுகிறார் களேயன்றி அவர்களது முன்னேற்றத்துக்காகவோ, விடுதலைக்காகவோ எத்தகைய போராட்டங்களையும் முன்னெடுத்ததில்லை என்று காட்டுவார் ஆனந்த்.

அதேவேளை, அம்பேத்கரது அனைத்து நடவடிக்கைகளையும் நியாயப்படுத்துவது அவசியமற்றதாய்ப்படுகிறது. "தலித்துளும் சூத்திரர் களும் தம்மிடம் ஏற்பட்ட பார்ப்பன - எதிர்ப்பு உணர்வுக்கு பிரிட்டி ஷாருக்குக் கடன் பட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷார் மட்டும் இந்தியாவை ஆளாமல் இருந்திருப்பார்களேயானால், சாதி அடிமைத் தனத்திலிருந்து தங்களால் விடுதலையடைந்திருக்க முடியாது என்பதை அவர்கள் உண்மையிலேயே உணர்ந்திருந்தனர். சாதி எதிர்ப்பு இயக்கங்களின் தலைவர்களான மகாத்மா புலே, அம்பேத்கர் போன்ற அனைவரும், மக்களிடையே உள்ள பிரிவினைகளைத் தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பிரிட்டிஷாரின் காலனிய சூழ்ச்சித் திட்டத்தை நன்கு உணர்ந்திருந்த போதிலும் , தாம் நடத்திய விடுதலைப் போராட்டங்களை நிறைவேற்றுவதற்கான சாதனமாக காலனியாட்சியாளர்களைப் பயன்படுத்திக் கொண்டனர். தலித் உணர்வில் பதிந்துள்ள வரலாற்று ரீதியான புதிரை இங்குதான் காண முடியும்: இந்துக்களின் மேலாதிக்கத்திற்கு (இது தேசிய நலன்கள் என விளக்கப்பட்டுள்ளது) குந்தகமானது எதுவோ அது தலித்து களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருந்தது" எனும்போது தனக்குத் தானே முரண்பட்டுக் கொள்கிறார். (ஆனந்த் டெல்டும்டெ, பக்.125)

அம்பேத்கர் எப்போதுமே வலியுறுத்திய ஓர் அம்சம், சாதிய தகர்வுக்குப் பிரித்தானிய அரசு உதவவில்லை; மாறாக, முழு அளவில் சாதியத்தைப் பயன்படுத்திச் சாதிய இழிவுகள் நீடிக்கவே அவர்களது ஆட்சி வழிகோலியது என்பதாகும். இந்நூலில் ஆனந்த் இந்த விடயத்தை முன் வைத்துத்தான் உலகமயமாதல் எவ்வகையிலும் தலித் மக்களுக்குப் பயனளிக்கப் போவதில்லை என்பதைக் காட்டியு மிருந்தார். ஜோதிராவ் ஃபுலேயினதும் அம்பேத்கரதும் தலித் விடுதலைப் போராட்டத்தில் பிரிட்டிசார் பயன்பட்டதை விடவும், அவர்கள் சாதி முரண்பாட்டைப் பயன்படுத்தியமையே யதார்த்தத்தில் நடந்தேறியது. தவிர்க்கவியலாத சூழலில் அவ்வப்போது அம்பேத்கர், ஆங்கில அரசை ஆதரித்தமையில் இருந்த நிர்ப்பந்தங்களையும் காங்கிரஸாரது தவறுகள் அதற்குக் காரணமானதையும் கூறலாமேயன்றி, அது பயனுள்ளது என நியாயப்படுத்த எந்த அவசியமுமில்லை.

ஜோதிராவ் ஃபுலே, அம்பேத்கர், ஈ.வெ.ரா. பெரியார் போன்றோர்



முன்னெடுத்த தலித் விடுதலை - பிராமண எதிர்ப்புப் போராட்டங் களில் தலித் - சூத்திரர்களது எதிர்நிலையில் பிராமண சார்பு முன்னிறுத்தப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் பார்ப்பனிய எதிர்ப்பே யன்றிக் குறித்த சாதிக்கு எதிரல்ல எனக் கூறப்பட்ட போதிலும், நடைமுறையில் பிராமணரும் ஆதிக்க சாதியினரும் எதிர் நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டமை இரகசியமானதல்ல. இஸ்லாத்திற்கு மதம் மாறிய மேல் சாதி இந்துக்கள் அந்த மதத்திற்குள் மேல் கீழ் சாதி உணர்வைக் கொண்டு வந்து முஸ்லிம் சமுதாயத்தையும் இந்துமய மாக்கியதாலேயே தலித்துகள் இந்து மதத்திலிருந்து வெளியேறி, இஸ்லாத்திற்கு மாறுவது தடைப்பட்டது என ஏகாதிபத்திய எதிர்ப்பும் சாதிய ஒழிப்பும் என்ற இந்த நூலிலும் ஆனந்த் குறிப்பிடுவதைக் கொண்டு இதனைப் புரிந்துகொள்ள முடியும். (பக்.128)

முஸ்லிம்களிடம் சாதி ஊடுருவ முடிந்தது, உயர் சாதிச் சதி காரண மல்ல, அது இந்திய வாழ்முறையின் நிர்ப்பந்தம். இதை ஆழமாகப் புரிந்துகொண்டவர் ஆனந்த். ஆயினும், தலித் இயக்கம் எதிரிச் சாதியை முன்னிறுத்திய இயக்கப் போக்கு அவரில் இந்த மயக்கத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது. வர்க்கப் பிளவை முழுமையாகப் பெற்றுவிட்ட ஐரோப் பிய சமூகம் போலன்றி, இந்தியச் சமூகம் சாதி முறைக்குரிய தனிவகை மானுட அமைப்பு என்பதை விரிவாகவே விளக்குகிறார் ஆனந்த். மார்க்சிடம் ஆசிய உற்பத்தி முறை தனிக் கவனம் பெற்றிருந்தமையை நாம் மேற்கொண்டு ஆய்வுக்குரியதாய் விருத்தி செய்யத் தவறியமையைச் சுட்டிக் காட்டுகிறார். சாதியச் சமூகத்தின் விசேடித்த பண்பை அவரே பாட்டாளி வர்க்க நோக்கில் துலக்கமாக வெளிப் படுத்துகிறார்.

"உழைப்பின் பிரிவினை, ஒரு வர்க்க சமுதாயத்தில்தான் இருக்கமுடியும் என்பதில்லை. சாதிச் சமுதாயத்திலும் அது இருக்கிறது. சாதிச் சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தால் வர்க்கங் களைத் தோற்றுவிக்க இயலாத நிலையை மட்டுமே வெளிப்படுத்து கிறது. இதன் பொருள் வர்க்கம் என்பது கட்டாயமாகத் தோன்ற வேண்டிய ஒன்று என்பதோ, சாதி என்பது வர்க்கத்தின் முன்னோடி என்பதோ அல்ல. சாதியும் வர்க்கமும் ஒன்றுடனொன்று ஒத்திராத இரண்டு தனித் தனியான மானுட அமைப்புகளாகும்" என அவர் வலியுறுத்துவது ஆழ்ந்த கவனிப்புக்குரிய அம்சமாகும். (ஆனந்த் டெல்டும்ப்டெ, பக்.145)

சாதியச் சமூகத்தை இன்னும் ஆழ்ந்து பகுப்பாய்வுக்குள்ளாக்கு வதற்குத் தமிழக வரலாற்றுத் தொடக்கமான திணைக் கோட்பாட்டை சமூகவியல் நோக்கில் விருத்தி செய்யவேண்டும். அதற்குள்ளே செல்ல இக்கட்டுரையின் வரையறை இடமளிக்கப் போவதில்லை. எதிரிச் சாதியைக் கட்டமைக்காமல், சாதியத் தகர்வுக்கான போராட்டத்தை முன்னெடுத்த இலங்கையின் தீண்டாமை ஒழிப்புப் போராட்ட வரலாற்று அநுபவம் சார்ந்து சாதிச் சமூகத்தைப் புரிந்து கொள்ள முயல்வதே இங்கு ஏற்புடையதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



## II

சாதியொடுக்கு முறையைத் தலித் மக்கள் அனுபவித்தமையால் அவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் பேராடியதில்லை என்கிறார் ஆனந்த் டெல்டும்ப்டெ. "தலித்துகள் உள்ளூர் மேட்டுக் குடியினரால் தொல்லைகளுக்குள்ளாகும்போது, அவர்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராட வேண்டும் என கம்யூனிஸ்டுகள் எதிர்பார்க்கின்றனர். தலித்துகளுக்கு அரசியல் முதிர்ச்சி ஏற்படவில்லை என்றோ, இந்த நாட்டின் யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் கம்யூனிஸ்டுகளுக்கு இல்லை யென்றோ எந்தக் காரணத்தைச் சொன்னாலும், கம்யூனிஸ்டுகளின் பார்வையும் தலித் பார்வையும் ஒன்றுக்கொன்று பொருத்தமானதாக இருப்பதில்லை என்பதுதான் உண்மை" எனும்போது இன்றைய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திற்கும் தலித்களை வென்றெடுக்க முடியாதவர்களாகக் கம்யூனிஸ்டுகள் உள்ளாகியுள்ளதாய்க் காட்டுகின்றார் ஆனந்த் டெல்டும்ப்டெ. (பக்.123)

ஆங்கில அரசுடன் அம்பேத்கர் இணக்கமாக இருந்த நாற்பதுகளில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் எழுச்சி கொண்டதைத் தொடர்ந்து அரசுக்கு எதிரான போராட்டத்தில் தலித் மக்களும் மிகப் பெரும்பான்மையாய் அணி திரண்டனர். அத்தருணங்களில் அம்பேத்கர் தான் தனிமைப்பட்டதை உணர்ந்தது தொடர்பாக அவரது வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இன்றைய சாதியவாத முனைப்பைத் தலித்திய வாதச் சந்தர்ப்பவாதிகள் (ஆனந்த் எடுத்துக்காட்டியிருந்தவாறு) பயன்படுத்தித் தலித் மக்களை விடுதலைப் போராட்ட மார்க்கத்திலிருந்து விலக்கத் தற்காலிகமாய் இயலுமாயுள்ளது; இடதுசாரித் தலித் சிந்தனையாளர்களும் சாதிச் சமூகச் சிறப்பம்சங்களை நுண்மாண் நுழைபுலத்துடன் ஆய்வுக் குள்ளாக்கித் தலித் மக்கள் மத்தியில் செயற்படும் கம்யூனிஸ்டுகளும் தொடர்ந்து முன்னெடுக்கத் தொடங்கியுள்ள இயக்கமயப்பட்ட நடவடிக்கைகள் தலித் மக்களை அத்திசை வழியில் அணிதிரட்டப் போவது உறுதி. அதன் அளவுப் பரிமாணம் போதிய திருப்தி தரும் கனதியோடு இல்லை என்பது உண்மையே; அந்த விரக்தியே ஆனந்த் டெல்டும்ப்டெ எழுத்தில் வெளிப்பட்டுள்ளது.

வர்க்க உணர்வுடன் சாதிய இழிவுகளுக்கு எதிராகவும் பொதுப் பிரச்சனைகளுக்காகவும் அனைத்துச் சாதிகளதும் மக்கள் திரள் ஐக்கியமுறுவது சாத்தியமா? பிராமண மற்றும் உயர்சாதி எதிர்ப்பை முன்னிறுத்திய இந்தியப் போராட்டங்கள், இதைச் சாத்தியமற்ற தாகவே காட்டுகிறது. எதிரிச்சாதி என்பது கோட்பாட்டு நிலைக்குரிய தாகும்போது ஆதிக்க சாதிகளல்ல, உரிமைகளற்று வாடும் இடைச்சாதி யினர்கூட, எதிரிகளாய்க் கட்டமைக்கப்படும் நிலை இந்தியாவில் இன்னும் உண்டு. தலித் சாதிகளுக்குள் ஒன்றுக்கு எதிராக மற்றது அணி திரண்டதும் யதார்த்தமாயிற்று. ஒரு தலித் சாதிப்பிரிவு உயர் சாதியினரால் தாக்கப்பட்டபோது, மற்றெந்தத் தலித் பிரிவினரும்



ஆதரவு காட்டாத அவலத்தையும் காண முடிந்தது. இதன் வெளிப் பாடாகச் சாதியத்திற்கு எதிராகப் போராடிய பெரியாரைத் தலித் விரோதி எனக் காட்டிய தலித்தியவாதிகளையும் அங்கே காண முடிகிறது. பெரியாருக்கு எதிராக அயோத்திதாசர் முன்னிறுத்தப் பட்டார். அயோத்திதாசர் பறையர் சாதியினரை மட்டும் புனிதமானதாய்ப் பார்த்தார், அருந்ததியர்கள் ஒடுக்கப்பட தகுதியான வர்கள் என்பதாக எழுதியுள்ளார் எனக்கூறி அயோத்திதாசரும் எதிர்க்கப்பட்டார்; அவருக்கு எதிராக இரட்டைமலை சீனிவாசன் முன்வைக்கப்பட்டார். அவரையும் மறுக்கும்போது, அம்பேத்கர் முன் நிறுத்தப்படுவார். நல்ல வேளையாக அம்பேத்கருக்கு எதிராக எவரும் கொண்டு வரப்படாத அளவில், அவர் வலுவான தலித் விடுதலைச் சிந்தனையாளராக வியாபித்துள்ளார்.

இருப்பினும், தனது காலத்தில் அம்பேத்கரால் தலித் பிரிவினர் அனைவரையும் அல்லது பெரும்பாலான பிரிவுகளை ஐக்கியப்படுத்த முடியவில்லை. அவர் பல்லாயிரக்கணக்கான தனது ஆதரவாளர் களுடன் பௌத்தத்தைத் தழுவியபோது, வேறு எந்தவொரு தலித் சாதிப் பிரிவினரையும் அவரால் அரவணைத்துக் கொண்டு செல்ல முடியவில்லை. அனைவரும் அவருடையமஹர் சாதியினரே என அவரது வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்த உண்மை கவனங் கொள்ளப்படவேண்டிய ஒன்று. எதிரிச் சாதி கட்டமைக்கப்படும் போது அனைவரையும் ஐக்கியப்படுத்துவது என்ற இலட்சியம் நிர்மூலமாகி விடுகின்றது. எந்தச் சாதியும் எதிரியானதில்லை. மக்களைப் பிளவுபடுத்துவதாகிய சாதியத்தைத் தகர்க்க வேண்டும் எனும்போது, அனைத்துச் சாதிப் பிரிவுகளும் ஐக்கியப்பட்டுப் போராடுவது சாத்தியப்படும். சாதிச் சமூக யதார்த்தத்தைக் கம்யூனிஸ்டு களைவிடவும் தீர்க்கமாய்க் கண்டு காட்டிய மேதைமைமிக்க சிந்தனையாளரான அம்பேத்கரின் இந்த அடிப்படைப் புரிதலின்மையே அவரது தலித் இயக்கம் தோல்வியுறக் காரணமானது. சாதிச் சமூகம் குறித்து அம்பேத்கர் அளவு தெளிவைப் பெறாத போதிலும், பாட்டாளி வர்க்க உணர்வோடு அனைத்துச் சாதியினரையும் ஐக்கியப்படுத்தி சாதி இழிவுகளுக்கு எதிராகப் போராடுவது என இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இயங்கியபோது, அனைத்துச் சாதியினரையும் அணி திரட்ட முடிந்துள்ளது.

உண்மையில் கம்யூனிஸ்ட் கட்சி கையேற்பதற்கு முன்னரே அதற்கான புறநிலை சாதகமாகும் வகையில் வரலாற்றுச் செல்நெறி இலங்கையில் அமைந்திருந்தது. பிரித்தாளும் சதியில் கைதேர்ந்த பிரித்தானிய அரசு இந்தியாவில் பிராமண எதிர்ப்பை முன்னிறுத்தும் ஆரிய - திராவிட, மற்றும் இந்து - முஸ்லிம் என்ற சாதி மத மோதல் களைக் கையாண்டது. இலங்கையில் சிங்கள - தமிழ் இன மோதல் களுக்கான அடிப்படைகளை வளர்த்தது (சிங்களவர் மத்தியில் ஆரிய மோகம் தூவப்பட்டிருந்தது). திராவிட உணர்வைக் கருதுவதற்கு இங்கே ஒரு சாதித் தள இருப்பில் பிராமணர் இல்லை. இந்தியாவில்

படிப்பகம்

www.padippakam.com



பிராமணர்கள் ஒவ்வொரு பகுதிகளின் (தமிழகத்தில் வெள்ளாளர் போல) மற்றுமொரு ஆதிக்கச் சாதியுடன் இணைந்தே சாதியப் படிநிலைச் சமூக நியதியைப் பேணி வந்தனர். இங்கு (குறிப்பாகச் சாதியொடுக்கு முறை முனைப்படைந்திருந்த யாழ்ப்பாணத்தில்) அனைத்து அதிகாரங்களையும் வெள்ளாளர்கள் தம்மிடம் மட்டுமே கொண்டு, ஒடுக்குமுறையைத் தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர். இந்தியாவில் சாதிய மோதல் முனைப்பாக்கப்பட்டது போல இங்கே ஆங்கில அரசு வெள்ளாளருக்கு எதிராக ஏனைய சாதியினரைத் தூண்டமினைக்கெடாத நிலையில், முற்போக்கான போர்க்குணமிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு வெள்ளாளர்கள் ஏனைய சாதியினரோடு ஐக்கியமுறும் வாய்ப்புக்குக் கேடு நேரவில்லை.

இத்தகைய சூழலில் 1925இல் எழுச்சியுற்ற யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸ் மாநாடு காத்திரமான வரலாற்றுச் சுவடுகளைப் பதிந்து சென்றது. இந்த மாநாட்டுக்கு விபுலானந்த அடிகள் தலைமை தாங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் சாதியத் தகர்ப்பு, மற்றும் பெண் விடுதலைச் சிந்தனைகள் பின்னாலே வரலாற்றுத் தொடர்ச்சியை முன்னெடுத்த கம்யூனிஸ்ட் கட்சியினால் கையேற்கப்பட்டது. இந்த எழுச்சியோடு சாதியத் தகர்ப்புப் போராட்டங்களை ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னெடுத்தபோது, இடதுசாரி உணர்வு படைத்த வெள்ளாளர் உட்பட அனைத்து சாதியினரும் ஐக்கியப்பட்டு அதன் வெற்றி களுக்குத் தோள் கொடுத்தனர்.

இன்று வரை தமிழகத்தில் அனைத்துத் தலித் பிரிவினரையும் எந்தவொரு தலித்தியவாத வடிவங்களிலும் (கம்யூனிஸ்டுகளால் முடியும், முடிந்திருக்கிறது என்பது வேறு விடயம்) ஐக்கியப்படுத்த முடியாதபோது, நாற்பதாம் ஆண்டுகளில் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினர் அனைவரையும் "சிறுபான்மைத் தமிழர் மகா சபை" என்ற ஒரு அமைப்பில் யாழ்ப்பாணத்தில் ஐக்கியப்படுத்த முடிந்துள்ளது. அதற்கு சாதியப் பிளவுபடுத்தல் கோட்பாட்டுக்கு மாறான ஐக்கியப்படும் முனைப்புச் சாத்தியமான இலங்கையின் புறநிலை யதார்த்தம் காரணமாயிருந்தது. பிளவுபட்டே கிடக்க வேண்டும் என்ற இந்தியச் சூழலுக்கு இது பொருந்தாது எனும் புலம்பலை இங்கும் கேட்க முடிந்தது. அது ஏகாதிபத்திய - உலகமயமாதல் - சாதிய வாதச் சதிகளுக்கு ஆட்படும் குரலே அன்றி வேறல்ல. சாதிச் சமூக ஒடுக்குமுறை தகர்க்கப்பட்டுச் சமத்துவ சமூகம் படைக்கப்பட வேண்டுமாயின் இலங்கையின் இந்த அநுபவத்தை இந்தியா கையேற்றாக வேண்டும்.

இந்தப் படிப்பினையை மிக அற்புதமாய்த் தொகுத்துத் தரும் ஒரு நூல் "எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி". இது எம். சி. சுப்பிரமணியத்தின் மறைவையடுத்துப் பத்தாவது ஆண்டு நினைவாக 1999இல் முதலில் வெளியானது. இன்று அதன் தேவை வலுத்த சூழலில் மேலதிக விடயங்களுடன் மறுபிரசுரம் பெற்றுள்ளது. இதன் தொகுப்பாசிரியர் எஸ்.சந்திரபோஸ் எம்.சி.யின் மகன் ஆவார்; இலங்கையில் ஆசிரியராகப்



பணியாற்றி ஓய்பு பெற்ற சந்திரபோஸ் இன்று கனடாவில் வாழும் சூழலில் தனது எழுத்துகளை வெளியிடுவதுடன் இத்தொகுப்பையும் சமூக அக்கறையுடன் வெளியிட்டுள்ளார். இந்த தொகுப்பு முயற்சிக்கு கம்யூனிஸ்ட் தோழர்களும் சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் சகபாடிகளும் மிகச் சிறப்பாக ஒத்தாசை புரிந்துள்ளனர். இந்நூல் சார்ந்த அனுபவப் பகிர்வை மிகச்சுருக்கமாகக் காண்போம்.

எம்.சி.சுப்பிரமணியம் 27.9.1917இல் பிறந்தவர். சாதிய ஒதுக்கலினுள்ளும் லண்டன் மெற்றிகுலேசன் சித்தியெய்தியவர். அரச உத்தியோகத்தினுள் முடங்காமல் சமூகப் போராளியாகப் பரிணமிக்கப் பல காரணிகள் உந்துதல் அளித்தன. ஒரு சம்பவம் சுவையானது. அவரது பத்தாவது வயதில் காந்தி யாழ் நகர் வந்தபோது, பாடசாலைச் சிறுவரான எம்.சி. அவரால் கவனிக்கப்பட்டுத் தட்டிக் கொடுக்கப் பட்டவர். பின்னரும் காந்தியின் வருகை, கோயில் நுழைவு முயற்சிகளில் ஒடுக்கப்பட்ட மக்களை உட்படுத்திய நிகழ்வுகள் சாதிவெறியர் களுக்கு வெறுப்பையூட்டிய போதிலும், அது ஒடுக்கப்பட்ட மக்களது போராட்ட வரலாற்றுக்கு உத்வேகமூட்டிய ஒன்று. எம்.சி.யின் பொதுவாழ்வு ஈடுபாட்டுக்குக் காந்தி ஈர்ப்பு மையமாக இருந்துள்ளார். ஒரு கம்யூனிஸ்ட்டாகப் பரிணமித்த பின்னரும், காந்தியத் தாக்கம் அவரிடம் இருந்தது. சாதியத் தகர்ப்பை முன்னெடுக்கையில், எதிரி ஆயுதப் பிரயோகம் மேற்கொள்ளும்போது, தவிர்க்கவியலாமல் எதிரிக்கு எதிராக ஆயுதமேந்தப் புரட்சிகரசக்திகள் நிர்ப்பந்திக்கப் பட்டுத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டம் பின்னாலே எழுச்சி பெற்ற போதிலும், எம்.சி. தனது போராட்டத்தை அகிம்சை வழியிலேயே முன்னெடுத்தார்.

கோயில் நுழைவு போராட்டத்தை காந்தி முப்பதுகளில் இந்தியா பூராவிலும் முன்னெடுத்தபோது, அம்பேத்கருக்கு அழைப்பு விட்டிருந்தும் அதை ஏற்க மறுத்தார்; அது பயனற்றது எனக் கூறிய அம்பேத்கர், சாதி உள்ள மட்டும் தீண்டாமை இருக்கும் என வலியுறுத்தினார். முன்னதாக, இருபதாம் ஆண்டுகளின் இறுதியில் குளம் ஒன்றில் சமத்துவ உரிமைக்காகப் போராடி, சாதி வெறியர்களால் முறியடிக்கப்பட்ட அநுபவம் அம்பேத்கரை இவ்வகையில் முடிவு செய்ய உந்தித் தள்ளியது. இந்து மத அடிப்படைகளைத் தகர்க்காமல் தீண்டாமையையோ, சாதிகளையோ ஒழிக்க முடியாது எனக் கருதினார், அம்பேத்கர். அவரது மதமாற்ற அறிவிப்பால் அதிர்ந்த முற்போக்கான இந்துக்களாலும் அவரது அனைத்துக் கோரிக்கைகளுக்கும் இணங்க முடியாமல் போன நிலையில், அவரது இறுதிக் காலத்தில் தனது ஆதரவாளர்களுடன் பௌத்தத்தைத் தழுவினார் அம்பேத்கர்.

"இந்தியாவில் தலித் மக்கள் தலைவராயிருந்த அம்பேத்கர் சாதிச் சாபக்கேட்டை எதிர்த்து மதம் மாறினார். இலங்கையில் இடதுசாரியாகிய எம்.சி. மதம் மாற வேண்டிய தேவை இருக்கவில்லை. இதய சுத்தியான போராட்டங்கள் மூலம் மற்றவர்கள் மத்தியில் மனமாற்றம்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டுவருவதே அவரின் நோக்கமாயிருந்தது" என்பார் வல்லிபுரம் திருநாவுக்கரசு (சந்திரபோஸ், பக். 185). அம்பேத்கர் போன்றே ஈழத்தில் சாதித் தகர்வுக்காக எம்.சி. இயங்கினார். "எம்.சி. காலத்திலேயே சாதி வேற்றுமை அருகத் தொடங்கியதென்பது பெருமைக்குரியது" என்ற ச.வைரமுத்து கூற்றும் கவனிப்புக்குரியது (சந்திரபோஸ், பக்.93).

அம்பேத்கருடன் கைகோர்த்துச் சென்றிருக்க வேண்டிய கம்யூனிஸ்ட் கட்சி, அங்கே அவ்வாறு செயற்பட முடியவில்லை; அதற்கு அம்பேத்கர் தரப்பிலும் விமர்சனத்திற்குரிய விடயங்கள் இருந்தாலும், அதற்குரிய முக்கியத்துவத்தைக் கம்யூனிஸ்டுகள் காணத் தவறியமை சுயவிமர்சன ரீதியில் ஏற்றாக வேண்டிய குற்றச்சாட்டுத் தான். இங்கே எம்.சி. ஒரு கம்யூனிஸ்ட்டாக இருந்தவாறு, தொடர்ந்து சாதித் தகர்வுக்காகப் போராடுவதற்கு இணக்கமாயும் தலைமைப் பாங்குடையதாயும் கட்சி திகழ்ந்துள்ளது. வெகுஜனத் தளத்திலும், சாதி வெறியர்களைத் தனிமைப்படுத்தி முன்னேற முடியும் வகையில் ஒடுக்கும் சாதியினர் மத்தியிலுமிருந்து ஆதரவு சக்தி அணி திரண்டிருந்தது. அம்பேத்கரின் மதமாற்றம் சாதித் தகர்வுக்கு எவ்வகையிலும் உதவவில்லை. அவர் வலியுறுத்தியவாறு, புதிய பௌத்தமாயன்றி அவரும் புத்தரும் கடவுளாக்கப்பட்டு, சாதித்தள மாற்றமும் எதுவுமின்றியே அவரது பௌத்தம் அங்கே தொடர்கிறது என ஆனந்த் டெல்டும்ப்டெவும் குறிப்பிடுகிறார். இங்கேயும் பௌத்த மதமாற்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டனவாயினும், அதனை தலித் மக்களே நிராகரித்தனர். அதற்கு மாறாக, ஆன்மீகத் தளத்தில் சம உரிமைக்காகப் போராடிப் பெற்ற உரிமையே பொதுவிடங்களில் தீண்டாமையை ஒழிப்பதில் சாதனையாக அமைந்தது. மத மாற்றம் நிகழ்ந்திருப்பின் இலங்கையின் 24 வீதமாயுள்ள தமிழ் பேசுவோர் இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத்தவர் என மூன்று தேசிய இனங்களாயுள் ளதைப் போல், தலித் பௌத்தர்கள் என நான்காம் தேசிய இனமாகித் தேசியப் பிரச்சனைத் தீர்வுக்கு மேலும் ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்திருக்க மட்டுமே முடிந்திருக்கும். மாறாக, மார்க்சிய வழிகாட்டலின் சாதியத் தகர்வுக்கு எம்.சி. சுப்பிரமணியம், எஸ்.ரி. என். நாகரட்னம் போன்றோர் தலைமையேற்று முன்னெடுத்த மார்க்கத்தில் தொடர்ந்து போராடுவதால் மட்டுமே இறுதியில் சாதித் தகர்வைச் சாதிக்கவியலும்.

இந்தியாவில் போல, இங்கும் சாதிக்கொரு சங்கம் நிலவிய போதிலும், 1942இல் அவற்றின் முன்னேறிய சக்திகள் ஒன்றிணைந்து சிறுபான்மைத் தமிழர் மகாசபையை உருவாக்க முடிந்தது. அதன் முதற் தலைவர் யோவேல் போல், கம்யூனிஸ்ட் அல்லாத போதிலும், சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கினார். அத்தொடக்கம் முதல் அதனில் சங்கமித்து இயங்கிய எம்.சி. 1957இல் அதன் தலைவரானதைத் தொடர்ந்து சிறுபான்மைத் தமிழர் மகா சபை மார்க்சிய வழிகாட்டலில் நேரடியாக இயங்க முடிந்தது (எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி நூலில் விபரம் காண்க). வில்லூன்றி மயானத்தில் தலித் உரிமை



வென்றெடுக்க இயங்கிய எம்.சி.யின் உடல், 1989இல் முழு உரிமையுடன் அங்கே தீயில் சங்கமித்தபோது, அவரது போராட்டங்களுக்கான அர்த்தம் நிரூபணமாக்கப்பட்டது (சந்திரபோஸ், பக்.162-3).

அம்பேத்கர் தலித் அரசியலை முன்னெடுத்தபோது, பின்னாலே எழுபதுகளில் தலித் இலக்கிய இயக்கம் எழுச்சி பெறுவதற்கான முன்னோடி இலக்கிய முயற்சிகள் ஐம்பதுகளிலிருதே தோற்றம் பெற்றதுண்டு. இங்கேயும் தலித் மக்களது போராட்டம் ஐம்பதுகளில் மார்க்சிய வழிகாட்டலை முழுமையாகப் பெற்றபோதே ஒடுக்கப் பட்டோரதும், ஒடுக்கப்பட்டோருக் கானதுமான மக்கள் இலக்கியங்கள் தோற்றம் பெறலாயின (இங்கேயும் எழுபதுகளில் டானியல் "பஞ்சமர் நாவல் வரிசை"யைப் படைத்தளிக்கத் தொடங்கியிருந்தார் ). "எம்.சி. யின் பாதையில் நின்ற கே.டானியல், டொமினிக் ஜீவா, பசுபதி, இளங்கீரன், எஸ்.பொ., அகஸ்தியர், தெணியான், என்.கே.ரகுநாதன் போன்றோர் தம் முற்போக்கு எழுத்துக்களாலும், பேச்சாலும், ஆராய்ச்சிக் கட்டுரைகளாலும், கவிஞர் செல்லையா, கவிஞர் பசுபதி, கவிஞர் ஐயாத்துரை, புலவர் வல்லிபுரம் போன்றோர் தம் கவிதைத் திறத்தாலும், நடிகமணி வி.வைரமுத்து, அண்ணாசாமி ஆசிரியர், கே.தங்கமணி, கே.நற்குணம் போன்றோர் நாடக மேடைப் பாட்டுகள் மூலமும், அரசடி இராசையா, ஆ.தில்லையம்பலம், ஆரியகுளம் கதிர்காமு, சூ.ஞானப்பிரகாசம், சி.தியாகராசா, ஏரம்பு போன்ற வீரர்கள் கிராமப்புற இன மோதல்கள், வான் கலாட்டாக்களுக்கு முத்திரைச் சந்தியிலும், ஆரிய குளச் சந்தியிலும், யாழ் பஸ் ஸ்டாண்டிலும், அச்சுவேலியிலும் வைத்துப்பதில் கொடுத்தனர். இதனால் வேகம் கொண்டிருந்த இனக் கலவரத் தாக்கங்கள் நெகிழ்ந்தன எனலாம்" என க.செல்லத்துரை காட்டும் பட்டியல் தலித் கலை - இலக்கியக் கர்த்தாக்களை இனங்காட்டுகிறது (சந்திரபோஸ், பக்.169-170). தலித்தல்லாத படைப்பாளிகள் பலரது மக்கள் கலை- இலக்கிய வெளிப்பாடுகள் தலித் போராட்டத்துக்கு இதே போன்ற பங்களிப்பை நல்கியமை சிறப்பம்சமாகும்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் செயற்பாட்டின் பரிணமிப்பாகச் சாதியத் தகர்ப்புக்கான அனைத்துச் சாதியினரையும் உள்ளடக்கிய "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்" தோற்றம் பெற்றது. கோட்பாட்டு ரீதியான வேறுபாடு சி.த.ம. இற்கும், தீ.ஒ.வெ.இ. இற்குமிடையே நிலவிய போதிலும், தலைமைக்கான ஆளுமைப் பண்போடு எம்.சி. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டங்களை ஆதரித்தார். தீ.ஒ.வெ.இ. முன்னெடுத்த "அன்றைய தாழ்த்தப்பட்ட மக்களின் முக்கிய பிரச்சனைகளான ஆலயப் பிரவேசம், தேநீர்க் கடைப் பிரவேசம் என்பவற்றில் அவர்களோடு சேர்ந்து தானும் வடம் பிடித்தார்" என மா.பாலசிங்கம் காட்டியிருக்கும் இந்தப் பண்பு கவனிப்புக்குரியது (சந்திரபோஸ், பக்.165). தீ.ஒ.வெ.இ. தலைவர்களில் ஒருவரான டானியலின் மறைவையொட்டிய "எனது நினைவலைகளில் கே.டானியல்" என்ற அஞ்சலிக் குறிப்பின் முத்தாய்ப்பாக எம்.சி.

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிடும் இக் கருத்து அவரைத் தெளிவுறப் புரிய உதவும்: "எமது பக்கத்தை விட்டு வெளியேறிய போதிலும், சமூக ரீதியான பொதுப் பிரச்சினைகளின் போதெல்லாம் அவ்வப்போது என்னைச் சந்தித்து ஆலோசனைகள், கலந்துரையாடல்கள் செய்யப் பின்னின்றதில்லை. ஆற்றல் மிக்க படைப்பாளியாக, விடாமுயற்சியுடைய உழைப்பாளி யாக, இலட்சியப் பற்றுமிக்க போராளியாக, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் கே.டானியல். சாதாரண ஆசிரியர்களிடம் கூட, முறையாகக் கல்வியினை முழுமையாகப் பெற முடியாத கே.டானியல் இன்று பல்கலைக் கழகப் பேராசிரியர்களால் போற்றிப் புகழப்படுகிறார் என்பதனை நினைக்கும்பொழுது மக்களுக்காக வாழ்பவர்கள் என்றும் மக்களால் மதிக்கப்படுவார்கள் என்ற உண்மை புலனாகிறது. எனது நினைவலைகளில் கே.டானியலின் நினைவுகள் என்றும் பசுமை யானவை." (சந்திரபோஸ், பக்.284)

எம்.சி. தலைமையிலான சிறுபான்மைத் தமிழர் மகாசபை எஸ்.ரி.என். நாகரட்னம் தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்பவற்றின் வாயிலாகக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையில் தலித் மக்களை அணிதிரட்டி அனைத்துச் சாதியின ரையும் ஐக்கியப்படுத்திச் சாதியத் தகர்வுப் போராட்டத்தை முன்னெடுப்பதனூடாகச் சமத்துவ சமூக உருவாக்கத்துக்கான மார்க்கத்தில் முன்னேற முடியும் என்பதை (சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக, ஏனைய சிறுபான்மையினர் ஆகிய அனைத்துத் தரப்பினரும் ஐக்கியப் பட்டுப் போராடிய வகையில்) இலங்கைச் சமூகம் உலகுக்கு உணர்த்தியது. ஆயினும், அப்போது சாதிச் சமூகத் தனித்துவ வேறுபாடு போதிய அளவு புரிந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதுவரையான இந்திய அனுபவங்களும் அம்பேத்கர் - பெரியார் போன்றோரது போராட்ட அநுபவங்களையும் உள்வாங்கிச் சாதிச் சமூகத்துக்கான மார்க்சியப் பிரயோகம் சார்ந்த கோட்பாட்டு உருவாக்கங்களைச் செய்யத்தக்க வரலாற்றுப் பணி இலங்கைக் கம்யூனிஸ்டுகளுக்குரியது. இதன் பொருள், இலங்கை அநுபவம் உள்வாங்கப்படுவது அவசியம் என்பதேயன்றிக் கோட்பாட்டு உருவாக்கம் வேறு எவருக்கும் சாத்தியமில்லை என்பதல்ல. என்ன, நாங்கள் வீழ்ச்சிக்கு மட்டுமே உதாரணர்களல்லர்; நாமும் நமக்கென்றோர் நலியாக்கலை யுடையோம்!

**பார்க்கப்பட வேண்டிய நூல்கள்:**

1. ஆனந்த் டெல்டும்ப்டெ, **ஏகாதிபத்திய எதிர்ப்பும் சாதி ஒழிப்பும்** (தமிழாக்கம் : எஸ்.வி.ராஜதுரை), புத்தா வெளியீட்டகம், கோவை, டிசெம்பர் 2006.
2. எஸ்.சந்திரபோஸ் (தொகுப்பாசிரியர்), **எம்.சி.ஒரு சமூகப் போராளி**, மித்ரா, சென்னை. மே 2008.

- **"மல்லிகை" 45வது ஆண்டு மலர்.** *2009.*



# 5
# சாதியச் சமூகத்தில் தேசியம்

கடந்த வருடம் ஈழத்தமிழ்த் தேசியம் எதிர்பார்த்திராத திருப்பத்தில் முடங்கிப்போய் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனத்துடன் கையறு நிலைக்குள்ளானது. தேசிய இனமொன்று சம உரிமைக்காகப் போராடிய இறுதியில் நாடே தனது இறைமையை இழந்து போயிருந்தது. அது பற்றிய சுரணையே இல்லாமல் பெருந்தேசிய அகங்காரம் மேலும் சிதைவுகளுக்குள் மூழ்கியபடி. ஒரு பக்கம் தோல்வியில் இருந்து கற்றுக் கொள்ளாத சிறு தேசிய இனம், மறுபக்கம் இனங்களின் சமஉரிமையை மறுக்கப்போய்த் தனது சுயாதிபத் தியத்தைத் தன்னுணர்வில்லாமலே இழந்து கொண்டிருக்கும் பெரும்பான்மை இனம்.

ஈழத்தின் இந்த அனுபவங்களை மீளாய்வுக்குள்ளாக்கும் எத்தனம் தொடங்கப்படும்போதே தெலுங்கு மொழித் தேசியம் தகர்க்கப் படுவதற்கான தெலங்கானாப் போராட்டம் எழுச்சி கொண்டது. தேசியமே அர்த்தமற்ற கற்பிதமா? தேசங்களின் இறைமை சுயாதிபத்தியம் என்பவற்றுக்கு இனி இடமில்லையா?

இவை தொடர்பாக முன்னெடுக்கப்படும் விவாதங்களின் அடியொற்றி நமக்கான தேசியத்தின் தனித்துவ வேறுபாடு குறித்து அலச முயல்கிறது இக்கட்டுரை. வர்க்கச் சமூக ஐரோப்பா கண்டறிந்த மார்க்சியத்தை சாதியச் சமூகத்தில் பிரயோகிப்பதில் பிரத்தியேக வேறுபாடு உள்ளதா? வர்க்கப் பிளவுபட்ட ஐரோப்பாவின் தேசியத் திலிருந்து சாதி பேதத்தால் ஏற்றத்தாழ்வைக் கொண்டு இயங்கும் நமது தேசியம் எத்தகைய வேறுபாட்டைப் பெற்றுள்ளது? சாதிப் பிளவுக ளுடைய இந்தியா ஒரு தேசமாக முடிந்தது எப்படி? ஈழத் தமிழ் இனத் தேசியப் போராட்டம், தெலங்கானாப் போராட்டம் என்பவற்றை முன்னிறுத்தி அலசுவோம்.

"அது ஒரு துன்பியல் சம்பவம்" என்ற கூற்று தமிழர் மத்தியில் எத்தகைய கருத்தியல் சார்ந்தவர்களிடமும் ஏதோவொரு வேடிக்கை பொருள் தரும் ஒன்றாக புழக்கத்தில் வந்து விட்டது. இந்தியப் பெருந்தேச உணர்வுக்குச் சவால்விடும் வகையில் அதன் நம்பிக்கைக் குரிய எதிர்காலமாகத் திகழ்ந்த தலைவரைத் தனது தற்கொலைப் படை கொண்டு அவரது மண்ணிலேயே சாய்த்த பிரபாகரன் அதற்கான வருத்தத்தையும் முழுமையாகத் தெரிவிக்க மறுத்துக் கூறியது அந்த

படிப்பகம்

www.padippakam.com



வாசகம்; எல்லோருக்கும் தெரிந்ததுதான். பலருக்கும் ஆத்திரத்தை ஏற்படுத்திய அதேவேளை, அவரைக் கொண்டாடியவர்களையும் நெளிய வைத்த வார்த்தைகள்!

இப்போது மீட்டுச் சொல்லப்படக் காரணமுண்டு. "தீராநதி" ஜனவரி 2010 இதழில் தமிழவன் எழுதும் "மரபும் ஓயாத காற்றும்" தொடரின் 9வது பகுதி "அண்ணா, ஆண்டர்சன், தமிழ்த் தேசியம்" எனும் தலைப்பில் வெளிவந்திருந்தது. இந்தியச் சூழலில் தமிழகத்தை மையமாகக் கொண்ட தமிழ்த் தேசியம் குறித்த சர்ச்சை அக்கட்டுரையின் அடிநாதம். அதற்கான படிப்பினை சார்ந்து ஈழத்தமிழ்த் தேசியமும் பேசுபொருளாகியுள்ளது. தேசியத்தைக் குறுகிய வட்டத்துக்குள் அணுகி முடக்கி விடாமல், சர்வதேச நோக்கில் பார்த்தாக வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் அவரது அக்கறை கவனிப்புக்குரியது. இத்தகைய சர்வதேசப் பார்வையைத் தமிழ்த் தேசியம் போதியளவு கைக்கொள்ளவில்லை. குறிப்பாக ஈழத் தமிழ்த் தேசியத்தின் தோல்விக்கு அதுவே அடிப்படையான காரணியாக ஆனது எனச் சொல்கிறபோது, இந்த சர்வதேசச் சிந்தனையின் பின்னடைவால்தான் ஈழப்போர் ஒரு துன்பியலாக முடிந்தது என்கிறார் தமிழவன்.

இப்படியாக துன்பியல்கள் தொடர்கதையாவதற்கு சர்வதேச அணுகுமுறை இல்லாமற் போனதுதான் காரணமா? அப்படியொன்று இருக்கப் போனதே காரணமாகும் என்பதுதான் துன்பியல்! இதனைத் தமிழவன் காணத் தவறுகிறார். ராஜீவ் படுகொலை வெறும் ஈழப்போர் எதிரடி மட்டுமல்ல, அதற்கு சர்வதேசப் பின்னணி உண்டு என்ற குரல் இந்திய அதிகாரத் தரப்பால் முனகப்பட்டு மூடிக்கட்டப்பட்ட ஒன்று என்பதில் இரகசியம் ஏதுமில்லை; அது இந்தியாவின் சர்வதேச உறவும் எதிர்காலக் கனவும் சார்ந்த மூடுமந்திரம்.

இப்போது ஈழப்போரின் துன்பியல் முடிவுக்குக் காரணம் அதன் சர்வதேச அணுகுமுறையேதான். பிரபாகரன் கடைசிவரை நோர்வே ஊடாக, அல்லது நேரடியாக அமெரிக்கா தம்மை இரட்சிக்க வரும் என்று எதிர்பார்த்து காத்திருந்தவர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு ஊடாகச் சரணடைதல் என்பது குறித்து எடுத்த நடவடிக் கைகள் எப்படிக் கையாளப்பட்டது, சரணடைந்தவர்கள் கொல்லப் பட்டது எவ்வாறு என்பது எல்லாம் சர்வதேசம் உள்விவகாரங்களில் தமது நலன் பேண ஏற்ற பேரப் பேச்சுக்குரிய விடயங்களாக கையாளப்படுவதற்கு உரியனவாக உள்ளனவேயன்றி மக்களது உயிர்ப் பிரச்சினையாக அணுகப்படவில்லை.

ஓடிக்கொண்டிருந்த பிரபாகரன் கூடவே மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் கேடயமாக எடுத்துச் சென்றது சர்வதேசம் வந்து காவாந்து பண்ணும் என்ற நம்பிக்கையோடுதான். பண்ணவில்லை என்பதோடு, அதன் இறுதிக்காட்சியைத் தனக்கு ஏற்றதாக எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் அந்தச் சர்வதேசம் மிகக்கேவலமான



முறையில் பேரம் பேசிக்கொண்டு இருக்கிறது என்பதில் ஈழத்தமிழ்த் தேசிய அக்கறையாளர்கள் கற்றுக்கொள்ள நிறைய உண்டு. கற்கவில்லை என்பது தொடரும் துன்பியல்.

அப்போது முள்ளிவாய்க்காலும் சரி இன்று இலங்கை பூராவிலும் சரி, சர்வதேச வலைப்பின்னலுக்குள்ளேயும் பிராந்திய மேலாதிக்கப் பிடிக்குள்ளேயும் சிக்கித் திணறும் கோரம் உணர்வுமட்டத்திலும் அறிவுத்தளத்திலும் கொண்டு வரப்படுதல் அவசியம். முள்ளிவாய்க்காலில் அரசு முன்னேறித் தாக்குதலில் தொடர்ந்து ஈடுபடும்போது பிரபாகரன் தற்காப்பு நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்த நிலையில் யுத்தம் நிறுத்தப்பட்டு இரத்தம் சிந்தாத யுத்தமான அரசியல் பேரப் பேச்சுத் தொடரப்பட்டிருப்பின் புலிகள் புத்துயிர்ப்புப் பெற்றிருக்க இடம் ஏற்பட்டிருக்கும். இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்துக்கு அது இடைஞ்சல் என்பதனாலேயே ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்படுவது குறித்துக் கவலை கொள்ளாமல் புலிகள் அழிக்கப்படும் இறுதி யுத்தத்தை இந்தியா மிகமூர்க்கமாகவே நடாத்தி முடித்தது.

இலங்கை இராணுவம் நிறைவேற்றியது என்றில்லாமல் இதென்ன புது விண்ணாணம், இந்தியா முடித்தது என்பதாக? இலங்கை இராணுவத்துக்கு அதீத நாயக அந்தஸ்தைக் கொடுத்து ஒரு மாதத்துக்கு மேலாக சிங்களப் பேரினவாதத் தேசியத் தீயை வளர்த்துக் குளிர் காய்ந்த ஜனாதிபதி ராஜபக்ஷவின் கூற்றுத்தான் யுத்தத்தை இந்தியாவே நடாத்தி முடித்தது என்பதும்! முள்ளிவாய்க்காலில் ஒரு இடைத் தங்கலைச் சர்வதேசம் - அதாகப்பட்டது, அமெரிக்க மேலாதிக்கம் விரும்பியது. அந்த விருப்புக்குரிய உள்ளூர் பிரதிநிதி என்பதாலேயே பிரபாகரன் நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பை வளர்த்து வந்தார்; தவிர்க்க வியலாத நெருக்கடியில் சரணடைவு என்ற இடைச்செருகல் மேற்கொள்ளப் பட்டு, துன்பியலில் முடிந்தது. அதிகாரத் தரப்பின் துன்பியல் சம்பவ முன்னெடுப்புகள் பூனையோடு எலி கொள்ளும் உறவு என்பதை முள்ளிவாய்க்கால் போதிய வலுவோடுஎடுத்துக் காட்டியுள்ளது. பிராந்திய மேலாதிக்கம் பூனைப் பாய்ச்சலில் முந்திய போது உலக மேலாதிக்கப் பூனை நல்லபிள்ளைச்சாமி வேடம் போட முடிந்திருக் கிறது. ஈழத் தமிழ்த் தேசியம் இந்த நல்ல பிள்ளை பூனைச் சாமிக்குப் பின்னால், இன்னமும்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஈழத்தமிழ்த் தேசியம் அமெரிக்க மேலாதிக்கத்திற்கே வாக்களித்திருந்தது. அதையும் மீறி பிராந்திய மேலாதிக்கப் பிரதிநிதியான ராஜபக்ஷவே மீண்டும் ஜனாதிபதியாக முடிந்துள்ளது. அவர் மீள எடுத்துக் கொள்வதற்கு சிங்களப் பேரினவாத உணர்வை முழு அளவில் பிரயோகித்துக் கொண்டார். சிங்கள வாக்குகள் அங்கு குவியவும், மேலும் உக்கிரத் துடன் ஈழத்தமிழ்த் தேசியம் அமெரிக்க மேலாதிக்கப் பக்கம் சாயக் காரணமாயிற்று. இப்போது ஜனாதிபதியின் வெற்றிமீது சந்தேகங்கள்

படிப்பகம்

www.padippakam.com



கிளப்பப்படுகின்றன. எதிரணிக் கட்சிகள் இதனை முன்னெடுத்த போதிலும் சிங்கள மக்களிடம் இந்த அதீதப் பெரும்பான்மை யினாலான வெற்றி பற்றிச் சந்தேகங்கள் இருந்த போதிலும், எதிர்ப்பு வலுவான வெகுசன எழுச்சியாக வளர்ச்சி கொள்ள முடியவில்லை. அதற்கான பிரதான காரணி, எதிர்ப்பைத் தூண்டும் எதிரணி அமெரிக்கச் சார்பானது என்பதோடு அது ஈழத்தமிழ்த் தேசியத்துக்கு உயிர்ப்பூட்டும் என்ற அரசு தரப்பின் பிரச்சாரம் ஆகும். (அதைவிடவும் ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்காக எதிரணிக்கு வாக்களிப்போம் எனமிகுந்த ஆர்ப்பாட்டத்துடன் அரசியல் நாகரிகம் பேசிக் கொண்டிருந்த மத்தியதர வர்க்கத்தினரில் பெரும்பான்மையினர் சிங்கள இனமானத்துடன் அரசு தரப்புக்கே வாக்களித்திருந்தமையை உள்ளூரவிளங்கிக் கொண்டமை பிரதான காரணம்.)

இப்படிச் சொல்வதால் சிங்கள மக்கள் அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிரான அரசியல் விழிப்புணர்வைக் கொண்டு இருக்கிறார்கள் என்பதோ, இந்தியச் சார்பை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதோ அல்ல. இந்தியா கவனமாக நிலைமையைக் கையாள்கிறதேயன்றி, அதன் தலையீடு இருப்பதைக் கண்டால் சிங்கள இன உணர்வு அதற்கெதிரா கவும் 'கெம்பியெழும்' . இந்தக் கெம்பியெழல் மேற்கோள் குறிக்குள் முடங்கக் காரணம் உண்டு. சுதந்திரத்தின் பின்னர் மூன்று தசாப்தங்கள் வரை ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வோடு இறைமையும் சுயாதிபத்தியமு முள்ள ஒரு நாட்டுக்கான முற்போக்கு குணாம்சமுள்ள மக்களாக சிங்கள மக்கள் திகழ்ந்திருக்கிறார்கள். கூடவே பேரினவாத அகங்கார மும், ஏனைய தேசிய இனங்களது சமஉரிமை மறுப்பும் வளர்ந்த நிலையில், பிந்திய மூன்று தசாப்தங்களாக அமெரிக்கச் சார்பு உட்பட சுயாதிபத்திய - இறைமை இழப்புகளைக் கண்டு கொள்ளாமல் மோசமான சிதைவுகள் அவர்களிடம் வளர்ந்துவிட்டன. இப்போதும் இனவாதமே எடுபடு பொருளாயுள்ளதால் பிராந்திய மேலாதிக் கத்துக்கு எதிராகவோ, அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிராகவோ, ஒரு துரும்பையும் போட முடியாதவர்களாகவே உள்ளார்கள்.

அத்தகைய பிற்போக்கு நிலைக்குரிய பௌத்த - சிங்களப் பேரின வாதத்துக்கு எதிரான ஈழத்தமிழ்த் தேசியப் போராட்டம் முற்போக் கானதுதானே? அவ்வாறு அமையாமல் போனதுதான் துன்பியல். பேரினவாதத்துக்கு எதிராகப் போராட வேண்டிய தேவைகள் வலுத்து வந்தபோதிலும் அது ஆரம்பம் முதலாகவே முற்போக்கு திசையிலன்றி பிற்போக்கு மார்க்கத்தையே வரித்துக் கொண்டது. ஈழத்தமிழ்த் தேசியத்தின் முதற் கோரிக்கையான ஐம்பதுக்கு ஐம்பதை முன்வைத்த ஜி.ஜி.பொன்னம்பலம் மலையக மக்களது பிரசாவுரிமையைப் பறித்த ஐ.தே.க. அரசில் அங்கம் வகித்தார்; அப்போதே கிழக்கைத் துண்டாடும் நோக்கோடு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதைத் தடுக்க வக்கற்றவராக அந்தத் தமிழ்த் தலைவர் இருந்தார். அவரது தமிழ்த் தேசியம் ஏகாதிபத்திய நலன்



களோடு உறவுடையது என்ற அதன் பிணைப்போடு தொடர்பானது அந்த பலவீனம். இந்தத் தவறான இணைப்பே முன்னேற்றத்துக்கான வலுவான தடை என்பதை உணராமலேதான் இன்று வரை ஈழத்தமிழ்த் தேசியம் முன்னெடுத்துவரப்பட்டுள்ளது.

ஜி.ஜி.க்கு எதிராக அடுத்தகட்டப் போராட்டத்தை சமஷ்டிக் கோரிக்கையுடன் முன்வைத்த செல்வநாயகத்தின் தலைமையிலான அணி தேசிய முதலாளித்துவ உணர்வோடு ஒரு தசாப்தத்துக்காயினும் முற்போக்குப் பாத்திரத்தை வகித்திருந்தது. சிங்களத் தேசிய முதலாளித்துவ சக்தி பண்டார நாயக்க தலைமையில் வெற்றி கொண்ட போது இதுவும் தமிழர் மத்தியில் எழுச்சி பெற்றது. பண்டாரநாயக்க தனிச்சிங்களச் சட்டத்தால் தனது வர்க்கத்தின் பலவீனத்தை வெளிப் படுத்தினார் என்றால், இவர்கள் ஏகாதிபத்திய நலன்களை இங்கிருந்து அகற்றவிடாமல் போராடும் தமது அற்பத்தனமான வர்க்கப் பலவீனத்தை வெளிப்படுத்தினர். இருப்பினும் 1960இல் ஐ.தே.க. அரசு ஏற்படுவதை நிராகரித்ததில் அவர்களுக்கும் ஒரு முற்போக்குப் பாத்திரம் இருந்தது. ஸ்ரீமாவோ பண்டார நாயக்க அரசோடு பேரப் பேச்சில் இறங்கவும் உடன் செல்லவும் அது உதவியது. அந்த முற்போக்குக் குணாம்சம் வளர்த்தெடுக்கப்பட்டிருப்பின் நமது வரலாறு வேறுவகையாக முன்னேறியிருக்க முடியும்.

சிங்கள - தமிழ் தேசிய முதலாளி வர்க்கங்களின் அரசியல் பிரதிநிதிகள் இணைந்து இயங்க முடியாமல் போனதற்கு 1960 - 1965இல் இயங்கிய ஸ்ரீமாவோ அரசு இழைத்த தவறுகள் பற்றி நிறையவே பேசப்பட்டுள்ளன; அதுமட்டுமே காரணி அல்ல. தமிழ்த் தலைமை தனது நிலைப்பாட்டை பெருமுதலாளி வர்க்கச் சார்புக்கு மாற்றிக்கொண்டு, முன்னர் எதிர்த்த ஐ.தே.க. எனும் சிங்களப் பெருமுதலாளித்துவக் கட்சியோடு கைகோர்த்தமையே பின்னடைவுக் குப் பிரதான காரணியாக அமைந்தது. குறைந்தபட்சத் தேசிய முதலாளித்துவ நலனைக் கொண்டிருந்த காலத்திலேயே ஏகாதிபத்திய நலன்களை இந்த மண்ணில் தொடரக் குரல் கொடுத்த இந்தத் தலைமை, பெருமுதலாளித்துவ உள்ளடகத்தை வரித்த பின்னர் முற்றிலும் ஏகாதிபத்தியத்தின் நிழலாகவே தமிழ்த் தேசியப் போராட் டத்தை அடையாளப்படுத்தினர்.

70களின் பிற்கூறில் பிரிவினைக் கோரிக்கையுடன் எழுச்சி பெற்ற இளைஞர் இயக்கங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை வெளிப் படுத்தியதோடு, சோஷலிஸத் தமிழீழம் பற்றிய விவாதங்களையும் முன்னெடுத்தனர். இருப்பினும் அவர்கள் நாடிய சோவியத் யூனியனின் நட்புறவு ஆப்கானிஸ்தானில் ஆக்கிரமிப்புப் படையாக சோவியத் இராணுவம் சமராடிக் கொண்டிருந்த வரலாற்றுக் கட்டத்துக்குரியது. அதைவிடவும், இந்திய அரசு அனுசரணையோடு அவர்கள் தமது இராணுவங்களைப் போஷித்தபோதே இந்தியப் பிராந்திய மேலாதிக்

படிப்பகம்

www.padippakam.com



கத்தின் கருவியாகிவிட்டிருந்தனர். ஆக, அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்பும் மார்க்சிய நாட்டமும் பொருளற்றனவாய் அமைந்தன. அப்பண்பு காரணமாக அவர்களால் சொந்த மக்களை அணிதிரட்ட முடியாமற் போனது. போகவும், அமெரிக்க மேலாதிக்க வாதப் பிரதிநிதிகளான புலிகளால் இலகுவில் களத்திலிருந்து ஓரங் கட்டப்பட்டனர்.

அந்த வகையில் முதற்கோணலோடு முற்றிலுங் கோணலாகவே முடிந்த ஈழத்தமிழ்த் தேசியம் குறித்த கற்றல் மார்க்சிய அணுகு முறையில் இன்னும் ஆழமாக அணுகப்பட வேண்டியதாகும். மார்க்சியர்கள் தேசியம் குறித்துப் போதிய அளவில் அக்கறை கொள்ளவில்லை என்ற குறைபாட்டைத்தான் தமிழவன் முன்வைத்திருந்தார். மொத்தத்தில் நல்ல சிந்தனையாளர்களும், அறிவாளிகளும்கூட தமிழ் பற்றிய விருப்புவெறுப்பற்று யோசிக்கவில்லை. அதன் தமிழ்த்தேசிய உட்கிடைகளை அறிவதில் தடுமாறுகிறார்கள். இதற்கான ஒரு காரணம், அகில உலகப் பேரறிவான மார்க்சியத்தைத் தமிழக இடதுசாரிக் கட்சிகள் கொச்சைப்படுத்தியிருப்பதுதான் எனக் கூறும் தமிழவனும் தமிழ்த்தேசியம் குறித்த ஆய்வுக்கு மார்க்சியத்தைப் பிரயோகிக்க முன்வரவில்லை. தமிழ்த்தேசியத்தைப் புரிந்து கொள்ளத் தனக்கு இயங்கியல் அணுகுமுறையை விட அமைப்பியலே சரியாகப் படுவதாக அவர் கூறுகிறார். இயங்கியல் ரீதியாக விளக்கமுடியும் என்பது குறித்த விவாதத்தை பின்போட்டுக் கொள்வோம். இதுவரை பேசிவந்த விடயம் தொடர்பில் அவரது ஒரு கருத்து இங்கு உடனடி அக்கறைக்குரியதாயுள்ளது.

இந்தியாவின் தமிழ்த் தேசிய உருவாக்கம் தொடர்பாக அவர் கவனங்கொள்ளச் சொல்கிற அம்சத்தை அவரது வார்த்தைகளில் காண்பது அவசியமானதாகும். “சமீபத்தில் ஒரு ஆங்கில நூல் படிப்பதற்குக் கிடைத்தது. ‘அச்சும், நாட்டுப்புறவியலும், தேசியமும் காலனி ஆதிக்கத் தென்னிந்தியாவில்’ என்பது நூலின் நீண்ட பெயர். நூலின் ஆசிரியர் பல தமிழாய்வாளர்களுக்குப் பழக்கப்பட்டவரும் சில ஆண்டுகளுக்கு முன்புவரை லண்டன் எஸ்ஓ.எ.எஸ். நிறுவனத்தில் தமிழ் கற்பித்து வந்தவருமான ஸ்டுவர்ட் பிளாக்பர்ன் அவர்கள். நாட்டுப்புறவியலும், இலக்கியமும் முதன்முதலில் அதாவது 1800 வாக்கில் அச்சுக்கு உள்ளாக்கப்பட்டபோது தமிழ் மனோபாவத்தில் நடந்த மாற்றங்களை முன்வைக்கிறார். தமிழ்த்தேசியம் தமிழில் கட்டமைக்கப்பட்ட முக்கியமான காலகட்டம் இது என்கிறார். 18ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு எழுதியவர்களால் இந்நோக்கு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பல தமிழ் ஆசிரிய ஆய்வுகளைப் போலவே 18, 19ம் நூற்றாண்டு ஆய்வுகள் தமிழில் தரமின்றியே உள்ளன. ஸ்டுவர்ட் பிளாக்பர்ன் அவர்கள் நாட்டுப்புறவியல் கதைகளை முதன்முதலில் தொகுத்த தாண்டவராய முதலியாரை முக்கியப்படுத்துகிறார். இது சரியான பார்வை. நம்முடைய



முதல் நாவல், பிரதாப முதலியார் சரித்திரம் - தாண்டவராய முதலியாரின் தொடர்ச்சி. பிளாக் பர்னிடம் இச்செய்தி இல்லை. ஆனால், தமிழ்மொழியின் பெருமை பற்றிய கருத்துகள் பிரதாப முதலியார் சரித்திரத்தில் பல பக்கங்களுக்கு நீளுகின்றன. அதாவது நான் முன்வைக்க வருவது உரைநடையில் இலக்கியம் தோன்றுவதும் தமிழ்த் தேசியம் தோன்றுவதும் பின்னிப் பிணைந்தவையாகும் என்ற கருத்து. இது இதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பிந்தி காஞ்சிபுரத்தில் பிறந்த தமிழனான அண்ணாத்துரைக்கு தமிழரசியல் தோற்றமளித்ததோடு தொடர்புடையதாகும். தமிழ்பற்றிப் பேசினால் பாசிசம்தான் வரும் என்ற அரைகுறையான, பழைய, இப்போது மார்க்சியர்கள்கூட மறந்துபோன சூத்திரத்தை ஒதுக்கிவிட்டு, எதார்த்த அரசியல், பிராந்திய நிலவரம் போன்றவற்றை கணக்கில் எடுத்துப் பேசவேண்டும்” என்பது தமிழவனின் விவாதம்.

தமிழ் பற்றிப் பேசினால் பாசிசம் வரும் என்ற அரையுண்மையை இப்போது மார்க்சியர்கள் மறந்துபோனது அது தவறு என்பதால் அல்ல; அது ஏற்கனவே நிறைவேறித் தொலைத்துவிட்டது என்பதால்! ஈழத்தமிழ்த் தேசியம் புலிப்பாஸிஸத்தை தாராளமாய் அனுபவித்தது. அதன் துன்பியல் முடிவுக்கும் அந்தப் புலிப்பாஸிஸம் ஒருவகையில் காரணமாய் அமைந்தது; அவர்கள் அரவணைத்த சர்வதேசமே அவர்களைத் தடைசெய்து, எவராலும் அங்கீகரிக்கப்படாமல் போனதாலேயே மிக வலுவான இராணுவமாய் வளர்ந்துங்கூட ஒன்றும் பண்ணமுடியாத கையறு நிலைக்குப் புலிகள் தள்ளப்பட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்வதில் சிரமம் உண்டா? முன்னரும் புலிகள் முன்னேறித் தாக்கிய வேளைகளில் சிங்கள இராணுவத்தினருக்குள் கோடரிக்காம்புகளைத் தேர்ந்தெடுத்துக் காசு கொடுத்து ஓடவைத்துக் கொண்டு இருந்தார்களேயன்றி, புலிகளிடம் பெரும் வீரம் எதுவும் கிடையாது எனக்கூறும் பேரினவாத அடிவருடிகளை இங்கே காணமுடிந்தது. இத்தகையவர்களும் புலிப்பாஸிஸம் பற்றிப் பேசப்பின் னிற்பதில்லை. இத்தனை தீவிரமாகத் தமிழகத்தில் தமிழ்ப்பாஸிஸம் வெளிப்படா வகையில் இந்தியப் போலி ஜனநாயகம் செயற்பட்டபோதிலும், திராவிடர் இயக்கங்களின் கீழான நான்கு தசாப்தங்களின் தமிழகச் சமூகத்தின் பல சிதைவுகளுக்கு திராவிடர் இயக்கக் கட்சிகளது ஜனநாயகமயப்பட்ட பாஸிஸம் காரணமாக அமைந்தமை பற்றிப் பலரும் தமது எழுத்துக்களினூடாக வெளிக்கொணர்ந்துள்ளனர்.

அந்த அரையுண்மை அரங்கேறி மக்கள் விடுதலை மார்க்கங்கள் முடங்கிப் போனதற்கு தமிழ்த் தேசியத்தின் மக்கள் நலன் சார்ந்த பக்கத்தைப் பார்க்கத் தவறிய மீதி உண்மை (அதுவும் பாதிதான்) பற்றிய அக்கறையை மார்க்சியர்கள் இப்போது கவனங்கொள்கிறார்கள். இதிலுள்ள துன்பியல், ஓடுகிற பஸ்ஸைத் துரத்தியோடி ஏற முயல்கிற நிலையில் மார்க்சியர் இருப்பதுதான் . மார்க்ஸ், லெனின் போன்றோரது வசனங்களினுள் முடங்கிப் போய் மார்க்சிய - லெனினிய

படிப்பகம்

www.padippakam.com



சிந்தனைமுறையின்படி இந்தியச் சமூக நியதியைப் பகுப்பாய்வுக் குட்படுத்தாததும் பாட்டாளி வர்க்க உலக நோக்கை ஸ்தூல நிலைமைக்கு அமைவாக பிரயோகிக்கத் தவறியதுமான குற்றம் இந்திய மார்க்சியர்களிடம் உள்ளது; உண்மையில் அர்ப்பணிப்பு, தியாகம், மார்க்சிய விசுவாசம் என்பவற்றில் இந்திய மார்க்சியர்கள் வேறெந்த வொரு நாட்டின் முன்னுதாரணத்துக்கும் குறைவானவர்களல்ல.

தமிழ்த் தேசியம் பாஸிஸ வடிவங்கொள்ளும் என்ற எதிர்வு கூறலை முன் மொழிந்த மார்க்சியர்கள் அதற்கான அடிப்படைக் காரணி யையும் காட்டத் தவறவில்லை. மேலே தமிழவன் காட்டுகிற தமிழ்த் தேசியத்தின் ஊற்றுமூலம் குறித்து கைலாசபதி போன்ற தமிழியல் துறையில் இயங்கிய மார்க்சியர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக, கோ.கேசவனின் "மண்ணும் மனித உறவுகளும்" நூலுக்கான கைலாசபதியின் முன்னுரை இது தொடர்பில் மிகுந்த கவனிப்புக்குரியதாகும். அங்கே தமிழ் தேசியத்தின் முதற்கோணல் எது என்பதை அவர் தெளிவுபடுத்தியிருந்தார். இயல்பாக தமிழ்த் தேசியத்துக்கான தேவை ஒரு பக்கம் இருக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சதிக்கு ஏதுவாக திராவிட மேன்மை பற்றி ஐரோப்பிய சிந்தனையாளர்கள் செயற்பட்ட வாறினைக் கைலாசபதி மிகத் தெளிவாகவே காட்டியிருந்தார்.

ஏகாதிபத்தியத்தின் இந்தக் கையாளல் மிகுந்த கவனிப்புக்குரியது. தமிழவனின் நீண்ட மேற்கோளை காட்டியிருப்பதற்கான பிரதான காரணம், இந்த அம்சமும் செயற்பட்டது என்பதை அவர் எங்காவது சொல்லியுள்ளாரா எனத் தேடிப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே. அக்கட்டுரை முழுமையிலும் எங்குமே இதனை அவர் காட்டவில்லை. கைலாசபதியின் மேலே குறிப்பிட்ட முன்னுரையைப் பார்க்கிற ஒருவர், தமிழ்த் தேசியத்தின் அவசியமான பங்களிப்பாக கால்ட்வெல் போன்றோரது திராவிட மொழி ஆராய்ச்சி அமைந்தமையைச் சொல்லித்தான், பிரதான அம்சமாக இதனை வலியுறுத்தினார் என்பதனைக் காணமுடியும். மாறாக, மார்க்சியர் மீது குற்றம் சுமத்து கின்ற தமிழவன் தனக்கான ஒரு அம்சத்தை வளர்த்துச் செல்கிறாரேயன்றி, வரலாற்றுச் செல்நெறியில் பிரதான அம்சமாக அமைந்த மறுபக்கத்தைக் குறிப்பிடவேயில்லை. ஒரு பக்கக் கட்டுரையேயாயினும் எந்தவொரு விடயத்திலும் இரு அம்சங்களையும் குறிப்பிட்டாக வேண்டும் என மாஓ வலியுறுத்தியிருந்த விடயத்தை மார்க்சியர் பெரும்பாலும் பின்பற்றத் தவறியதில்லை. இருப்பினும் தமிழ்த்தேசியத்தில் ஏகாதிபத்தியச் சதிக்கு ஆட்படும் பக்கத்தை வலியுறுத்திய அதேவேளை, அதன் சரியான அம்சம் சார்ந்து மக்கள் மத்தியில் மார்க்சியர்கள் இயங்காமற் போனதால் தவறு வலுவாய்த் தாக்கியுள்ளது என்ற விமர்சனத்தை இன்று மார்க்சியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். தேசியப் பிரச்சினையின் பன்மைப் பரிமாணங்கள் குறித்த தீர்க்கமான தேடலும்



அவை சார்ந்த கொள்கை வகுப்பும் இன்னமும் சரியான திசைப்பட வில்லை என்பது மெய். நமது சமூக முறைமை சார்ந்த புரட்சியின் வடிவம் இனங்காணப்படாமல் வெறும் புத்தக வாத வாய்ச்சவடால்கள் மேலோங்கியிருப்பதும் உண்மை.

இது தொடர்பில் அக்.2009 "புதிய புத்தகம் பேசுது" இதழில் வெளியான ஜெ.பி.பீ. மொரேயின் நேர்காணல் கவனிப்புக்குரியது. ஜஸ்வந்த்சிங்கின் ஜின்னாவைத் தேசியவாதி என்று எழுதிய சர்ச்சைக்குரிய புத்தகம் தொடர்பானது அந்த நேர்காணல். இன்று பொறுப்பற்ற முறையில் ஜஸ்வந்த்சிங் இந்தியாவின் பிரிவினையின் போது பிரிட்டிஷாரின் பங்கைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஜின்னா ஒரு தேசியவாதி என்று சொல்கிறார் என மொரே கூறும் போது தமிழவனைப் போலன்றி, முஸ்லிம் தேசியவாதத்தைத் தூண்டிப் பிரிவினை வரை வளர்த்ததில் பிரிட்டிஷாருக்குள்ள வலுவான பாத்திரத்தை உணர்த்துகிறார். உண்மையில் பிரிவினையை முஸ்லிம் தேசியத்துக்கு முன்னரே பெரியாரின் திராவிடரியக்கம் முன்வைத்து விட்டது என்பதையும் மொரே எடுத்துக் காட்டியுள்ளார். இங்கே, தமிழவனைப் போலவே திராவிடத் தேசியத்தின் அவசியத்தை மொரே ஏற்றுக் கொள்கிறார் (தமிழ்த் தேசியத்திலிருந்து திராவிடத் தேசியம் பல வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் இரண்டுக்குமான இரத்த பந்த உறவு வலுவானது என்ற வகையில் இங்கு இணக்கமாக நோக்கப் பட்டுள்ளது). இந்தத் திராவிடத் தேசியத்தை மொரே எங்குமே வகுப்புவாதம் எனக் கொச்சைப்படுத்தியதில்லை.

மாறாக, முஸ்லிம் தேசியத்தை அவரால் புரிந்து கொள்ளவே முடிய வில்லை. அகில இந்திய முஸ்லிம் லீக் என்பது ஒரு வகுப்புவாத கட்சி; ஏனெனில், அந்தக் கட்சியில் முஸ்லிம்கள் மட்டுமே உறுப்பினராக முடியும். இந்த வகுப்புவாத கட்சியின் தலைவர் ஜின்னா எனக்கூறி, 25 வீதமான முஸ்லிம் மக்களுக்கு மட்டும் உரியதாக உள்ள வகுப்புவாதக் கட்சியின் தலைவரைத் தேசியவாதி எனக் கூறமுடியாது என்கிறார். "ஒரு வகுப்புவாத கட்சியின் தலைவர், இந்தியாவின் ஒற்றுமைக்காக ஒருவேளை பேசி இருந்தாலும், ஜின்னாவை வகுப்புவாத தேசியவாதி என்றே அழைக்கமுடியும் என்று நினைக்கின்றேன். அவரை நிச்சயமாக ஒரு தேசியவாதி என்று சொல்ல முடியாது. ஒரு மதத்தையோ , ஜாதியையோ சார்ந்து செயல்படும் எந்த ஒரு நபரையும் தேசியவாதியாகக் கூறமுடியாது" என்கிறார் மொரே. பெரியாரது திராவிடரியக்கம் திராவிடர் அல்லாதார் அங்கம் பெறாதவகையில் கட்டமைக்கப்பட்ட போதிலும் அதை வகுப்புவாத அமைப்பாக மொரே கருதவில்லை. அக்காலத்தில் பல மார்க்சியர்கள் திராவிடர் கழகத்தையும் அதன் வழித்தோன்றல்களையும் வகுப்புவாத அமைப்புகளாகவே பார்த்தனர் என்பது கவனிப்புக்குரியது.

ஒருவர் தமிழ்த் தேசியராயும் இந்தியத் தேசியராயும் இருக்க முடியும்

படிப்பகம்

www.padippakam.com



என்பதை ஏற்பதில் சிரமம் இல்லை. பாரதியிடம் இத்தகைய இனத்தேசியமும் நாட்டுத் தேசியமும் சார்ந்த பண்புகள் விரவிக் காணப்பட்டன. பல்வேறு தேசிய இனங்களின் மத்தியிலும் இயங்கிய இந்தியத் தேசியக் கவிஞர்களும் இத்தகைய பண்புகளைக் கொண்ட வர்களே. இரவீந்திரநாத் தாகூர் வங்காளத் தேசியத்தையும் இந்தியத் தேசியத்தையும் அற்புதமாய்க் கவித்துவமாக்கியவர். இந்தியத் தேசிய கீதம் மட்டுமல்ல, இஸ்லாமிய நாடான பங்களாதேஷின் தேசிய கீதமும் இரவீந்திரருடையது என்பது கவனிப்புக்குரியது. மகாகவி இக்பால் இஸ்லாமியத் தேசிய உணர்வுக்கும் இந்தியத் தேசிய உணர்வுக்கும் தலைசிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவர்.

அந்தவகையில் மொரே கருதுவதுபோல தேசியத்துக்கு உட்பட முடியாததாக இனத் தேசியத்தை விலக்கமுடியாது. மதம் தேசிய வடிவத்தைப் பெற முடிந்தது ஏகாதிபத்தியத்துக்கு ஆட்பட்டிருந்த எமது வரலாற்று நிர்ப்பந்தத்தால் ஏற்பட்ட ஒன்று என்பதை ஏற்றாக வேண்டும். இது தொடர்பில் வரலாற்றுத் துறை பேராசிரியர் சி.அரசரத்தினத்தின் கூற்று கவனிப்புக்குரியது: "நாம் எடுத்துக் கொண்ட ஆசிய நாடுகளில் தேசிய இயக்கங்கள் கிறிஸ்தவ வல்லரசுகளை எதிர்த்து நின்றன. அத்துடன் இவ்வியக்கங்கள் பல, சமயம் ஒன்றுதான் மேலானதெனக் கோருவதை எதிர்த்து, தங்கள் சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் நன்னம்பிக்கையூட்டுவதை நாடி நிற்கின்றன. அதன் விளைவாக தேசியவாதமானது எப்படி அரசியலுரிமைகளைப் பெற இயங்கும் ஓரியக்கமாயிற்றோ, அதேபோலக் கலாசார சமய மறுமலர்ச்சி இயக்கமாயிற்று. ஆகையால் இந்நாடுகளில் தேசியவாதம் தோன்றிய காலத்திலேயே, அங்கு பெரும்பாலும் பரவியிருக்கும் சமயங்களாகிய இந்து, பௌத்த, இஸ்லாமிய சமயங்களின் மறுமலர்ச்சியும் ஏற்பட்டதை தற்செயலாக ஒரே காலத்தில் நடந்த இரு சம்பவங்களெனக் கொள்ளலாகாது. சமயத்திற்களித்த இம்முக்கியத்துவம் தேசியவாதத்திற்கு சாதகமாகவும் பாதகமாகவும் முடிந்தது. அது தேசியவாதத்தினை ஒரு விரிவான அடிப்படையுள்ளதாகச் செய்வதற்கு முனைந்தது. அத்துடன் தனி அரசியல் இயக்கம் எதுக்கும் கிடைத்திருக்க முடியாத பொது ஆதரவைத் தேசியவாதம் பெறுவதற்கு உதவியது. உதாரணமாக இந்தியாவிலே காந்தியொருவர் முன்வந்து இந்தியத் தேசியவாதத்தினை இந்துக் கலாசாரத்தின் உயிர்நாடியோடு இணைக்கும் வரை இந்திய தேசியவாதம் பெரும்பாலும் ஒரு மத்திய வகுப்பினரின் இயக்கமாகவே இருந்தது. காந்தி அவ்வண்ணஞ் செய்தபோதுதான் இந்தியாவின் நாட்டு மக்களுள் பெரும்பகுதியினர் தேசியவாதத்தில் ஊக்கங் கொண்டனர். மற்ற நாடுகளிலும் பற்பல அளவுகளில் இப்படியான போக்கு ஏற்பட்டது. தூங்கிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தினைத் தட்டி எழுப்புவதற்குச் சமயத்திற்களித்த முக்கியத்துவம் சரியானதாகவிருந்தது. ஆனால் பல மதங்கள் உள்ள நாடுகளிலே அது பல விபரீத விளைவு களை உண்டுபண்ணக் கூடியதாகும். இதனை இந்தியாவில் நடை பெற்ற சோக சம்பவங்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. அங்கு முஸ்லிம்



மக்களுடைய தேசியவாதமானது, இந்திய ஒற்றுமையின்மீது கொண்ட விசுவாசத்திற்கும் மேலாகச் சமயத்திலே கூடிய ஆர்வங் கொண்டு, இந்திய முஸ்லிம்களின் தேசிய நோக்கங்கள் ஒரு தனி இஸ்லாமிய நாடு அமைப்பதாலேயே சாத்தியப்படுமென்ற முடிவுக்கு வந்தது. இந்திய தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தியத் தேசிய காங்கிரசாலும் இத்தகைய பிளவினைச் சமாளிக்க முடியவில்லை. ஆகவே, தென்கிழக்காசிய நாடுகளின் தேசிய வாதத்தினை உருவாக்கி நின்ற பல்வேறு அம்சங்களும் ஒரே இயக்கத்திலே ஒன்று கூடியிருக்க முடியாத அளவிற்குத் தங்களுக்குள் முரண்பட்ட கோரிக்கைகளை உடையனவாக அமைந்தன" (அரசரத்தினம்.சி., "ஆசியாவில் தேசியவாதத்தின் மூலங்கள்." பார்க்க: **கூடம்,** ஏப்பிரல் - ஜூலை 2009. ப.34).

இது 1960களில் எழுதப்பட்டது. இன்று இன்னும் விரிவாக நமது தேசிய இயக்கங்களில் மதம் வகித்த பாத்திரம் குறித்து பேசப் பட்டுள்ளது. இருப்பினும் இந்து தேசியத்தால் ஒடுக்கப்பட்டபோது இயல்பாக உருவாகத்தக்க இஸ்லாமியத் தேசிய உணர்வை வகுப்பு வாதமாகக் காணும் தவறு, பல அம்சங்களில் மிகுந்த முக்கியத்துவமிக்க விடயங்களை வலியுறுத்துகிற ஒருவரிடமும் ஏற்பட்டுவிடுகிறது என்பதையே புத்தகம் பேசுது நேர்காணலில் மொரே வாயிலாக வெளிப் படக் காண்கின்றோம். அவர் மதத்தையோ சாதியையோ சார்ந்து செயல்படும் ஒருவரை தேசியவாதியாகக் கூறமுடியாது எனக் கூறியிருந் ததையும் கண்டோம். இங்கு பெரியார் வேண்டப்படுகிறார். 1925இல் பெரியார் காங்கிரசைவிட்டு வெளியேறியபோது தமிழகக் காங்கிரஸில் பிராமண ஆதிக்கம் மேலோங்கி இருப்பதாகக் கூறி பிராமணரல்லாதார் சாதி நோக்கைத்தானே முன்வைத்தார்! ஜோதிராவ் புலேயும் இந்தியக் காங்கிரஸ் பிராமணத் தேசியத்தை முன்னெடுப்ப தாகக் கூறித்தானே அதனை எதிர்த்தார். பிராமண ரல்லாதாருக்குள் ஏதாயினும் ஒரு சாதி அல்லது ஆளும் சில சாதிகளது ஒடுக்குமுறையைச் சாத்தியப்படுத்தும் ஆளும் சாதிகளது மேலாண்மை ஏற்படுமாயின், தாம் ஒடுக்கப்படுகிறோம் என உணரும் ஒரு சாதிப் பிரிவு தனது தேசியத்தை முன்வைக்கக்கூடாதா, இஸ்லாமியத் தேசியம் மேலெழுந்தது போல?

## 2

மார்க்சியர்கள் ஒரு கோட்பாட்டு வரையறைக்குள் நிற்பதனால் புதிய விடயங்களைக் காணத்தவறுகிறார்கள் எனக் கூறும், மார்க்சியத்தைக் கடந்து சிந்திப்பவர்களான அமைப்பியல்வாதிகள் பின்நவீனத் துவவாதிகள் போன்றோரும் கூட சாதித் தேசியத்தின் சாத்தியத்தை ஏற்க முடியாதவர்களாகவே உள்ளனர். எவரது விருப்பு வெறுப்புக்கும் அப்பால் யதார்த்தம் தன்பாட்டுக்கு இயங்கிக்கொண்டு இருக்கும். மக்கள் விடுதலைக்கான திசை மார்க்கத்தில் அதனைச் சரியாக அணுகிக் கோட்பாட்டு உருவாக்கம் செய்து இயக்க வடிவப் படுத்துவதற்கு தவறும் போது, ஆதிக்கசக்திகள் மக்களைப் பிளவுபடுத்துவதற்கு அவற்றைக் கையாண்டு தாறுமாறானதாக ஆக்கி விடுவார்கள் -

www.padippakam.com



பாகிஸ்தான் பிளவுபட்டதைப்போல.

தான் செய்த மிகப்பெருந்தவறு பாகிஸ்தானை உருவாக்கியமை என ஜின்னா தனது இறுதிக் காலத்தில் வருத்தப்பட்டதாக அறிய முடிகிறது. உண்மையில் தெற்காசியப் பிராந்தியத்துக்கு கேடாக அமைந்த அதேவேளை, முஸ்லிம் மக்களையே பிளவுபடுத்திப் பலவீனப் படுத்தியதாகவுமே பாகிஸ்தான் உருவாக்கம் அமைந்தது. இது குறித்து மேற்படி நேர்காணலில் மொரே கூறியுள்ளார். எல்லா இடங்களிலுமுள்ள இஸ்லாமியர் நலன்களைப் பாதுகாப்பதே ஜின்னாவின் நோக்கமாக இருந்தது. ஜின்னாவின் சாதனை என்பது முஸ்லிம்களை பிரித்ததுதான். "முஸ்லிம்களை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பிரித்துக்கொடுத்தார். ஆனாலும் இந்தியா ஏறக்குறைய காப்பாற்றப்பட்டது. ஏனெனில், பலுசிஸ்தான் மற்றும் வடமேற்கு மாகாணங்கள் இந்தியாவின் பகுதிகளாக இருந்ததில்லை. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் இந்தப் பகுதிகளை பிரிட்டிஷார் இந்தியாவோடு இணைத்தனர். இந்துக்கள் சற்றே இழந்தார்கள். இஸ்லாமியர்கள் நிறைய இழந்தார்கள்" என்பது மொரேயின் கருத்து.

பிரதேச அளவில் இந்துக்கள் இழந்தது குறைவு எனக்கூற முடிந்தாலும், இன்றுவரை வாழ்வாதாரங்கள் அனைத்தையும் இழப்பதற்கான ஒரு காரணியாய் இப்பிரிவினை அமைந்திருப்பதை மறுத்துவிடமுடியாது. சுதந்திரம் பிளவுபடாதது. இஸ்லாமியர்களின் உரிமை மறுக்கப்படுகிறபோது இந்துக்களுக்கு மட்டும் சுபீட்சமான வாழ்வு சாத்தியப்படப் போவதில்லை. மறுதலையாக சொன்னால், அதிகாரத்துவத் தரப்பு மிகப் பெரும்பான்மையினரான இந்துக்களை ஒடுக்கிச் சுரண்டி சுபீட்சமற்ற வாழ்வுக்கு நிர்ப்பந்திப்பதை மறைக்கவே, இஸ்லாமியர் மீதான வெளிப்படையான ஒடுக்குமுறையைக் காட்டிக் கொள்கின்றது என்பது இன்றைய இந்திய நிதர்சனம்; முஸ்லிம்களது சுதந்திரம் மறுக்கப்படுகிறபோது அங்கு இந்துக்களின் சுதந்திரம் இழக்கப்பட்டிருக்கிறது என்பதே பொருள். இலங்கையில் சிங்களப் பேரினவாத அரசுகள் சிங்கள மக்களது உரிமைகளையும் வாழ்வாதாரங்களையும் பறித்து மறுப்பதை மறைக்கவே ஏனைய தேசிய இனங்கள் மீதான ஒடுக்கமுறை.

இத்தகைய உரிமை மறுப்புகள் இனரீதியாக மட்டுமே நிகழும் என்றில்லை. அதிகாரத்தரப்பு தனக்கு சாதகமான அடையாளம் ஒன்றை வலுவான தளமாக வைத்துக் கொண்டு, ஏனைய அடையா ளங்களுக்குரிய மக்கள் பிரிவினர் மீதான ஒடுக்குமுறைகளைக் கையாண்டு அவர்களது உரிமைப் பறிப்புகளே முந்திய தமக்கான அடையாளப் பிரிவினரது மீட்சிக்கு வாய்ப்பு எனக்காட்ட உள்ள சந்தர்ப்பங்களைத் தவறவிடுவதில்லை. அதற்கேற்ற இன்னொரு பேரடையாளமாக சாதி திகழ்கிறது. அதிகாரத்தரப்பு ஏதாயினமொரு சாதியின் நலன் சார்ந்து செயற்படுகிறபோது, புறக்கணிக்கப்படுவதாக உணரும் மற்றொரு பேரடையாளத்துக்கு வாய்ப்பான சாதி தாம்



பெரும்பான்மையாக உள்ள பிரதேசத்தில் தமது நலன்கள் முன்னுரிமை பெறுவதற்கு ஏற்ற பிரிவினைக்கான சாதகத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கும். மொழிசார்ந்து கட்டமைக்கப்பட்டிருக்கும் பெரிதான பேரடையாளத்தைப் பிளவுபடுத்துவது தவிர்க்கமுடியாது எனக் கருதினால் இத்தகைய சாதியடையாளம் அதற்கான போராட்டத்தை முன்னெடுப்பது தவிர்க்கவியலாததாகும்.

இந்தச் சந்தர்ப்பங்களில் தமிழடையாளம் ஒன்று அரசியல் ரீதியாகக் கட்டமைக்கப்பட வேண்டிய தருணத்தில் டெல்லி மத்திய அரசாங்கத்தை வலிமைப்படுத்தும் தவறான அதிர்ச்சி தரத்தக்க சிந்தனையை பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் (தமிழகத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும்) முன்வைக்கிறார் எனக் குறைபட்டுக் கொள்கிறார் தமிழவன் (மேலே குறித்த ஜனவரி தீராநதி சஞ்சிகை யிலான கட்டுரை). நீண்ட காலமாக மருத்துவர் ராமதாஸ் இந்தக் கோரிக்கையை முன்வைத்து வருகிறார். இருப்பினும் இதனை வென்றெடுப்பதற்கான செயற்பாட்டுக் களத்தில் அவர் இறங்கவில்லை. அதற்கு ஏற்ற அளவில் வட தமிழகத்தில் பெரும்பான்மையினராக உள்ள மருத்துவர் ராமதாஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் சாதிப்பிரிவினர் புறக்கணிப்பை உணரும் பட்சத்தில் பிரிவினைக் கோரிக்கை செயற்பாட்டுக்கான இயக்கமாக வளர இடமுண்டு. வட தமிழகத்துக்கு உட்பட்டே தமிழகத்தின் தலைமையகமாய் சென்னை இருப்பதோடு பல்வேறு வாய்ப்புகள் இப்பிரதேசத்துக்கே அதிகம் உள்ளமையால் பிரிவினை நாட்டம் வலுப்பெறவில்லை. இவர்களுக்கு உள்ள முணுமுணுப்புக்கான அடிப்படை தமிழகத்தின் அரசியல் ஆதிக்கம் தென் தமிழகத்தின் பெரும்பான்மையாகவுள்ள ஒரு சாதிப் பிரிவினரிடம் போயிருக்கிறது என்பதுதான். இவர்களைவிடவும் அந்தத் தென்தமிழக சாதிப் பிரிவினரினர் கூடுதல் பெரும்பான்மை பெற்றுள்ளமையால், அதற்கான சட்டமன்ற உறுப்பினர்களே அதிகம் என்பதால், அரசியல் ஆதிக்கப் பிரச்சனை வந்து தொலைக்கிறது.

"வடக்கு வாழ்க்கிறது, தெற்கு தேய்கிறது" என்பது இந்திய அளவுக்கு மட்டுமன்றித் தமிழக அளவிலும் சொல்லப்படுகிற ஒன்றாகவே உள்ளது. அரசியல் ஆதிக்கப்போட்டி காரணமாக வடதமிழகம் பிரிவினையை விரும்புகிறது என்றால், பிரதேசப் புறக்கணிப்பை முன் வைத்து தென்தமிழகத்தில் பிரிவினை நாட்டம் எழுவதுண்டு. எல்லாவற்றுக்கும் சென்னைக்கா வரவேண்டும், தென்தமிழகத்தில் அதிகாரப் பகிர்வோடுகூடிய அதிகாரமையம் வேண்டாமா என்ற கோரிக்கை அவ்வப்போது தென்தமிழகத்திலும் எழுவதுண்டு. குறிப்பாக உயர்நீதிமன்றம் தொடர்பாக இத்தகைய கோரிக்கை வலுத்த போது சில வருடங்களின் முன்னர் மதுரையில் பல அதிகாரங்களுடன் உயர்நீதிமன்றப் பிரிவு உருவாக்கப்பட்டதை அறிவோம். இவ்வகையில் மேற்கொள்ளப்படும் அரவணைப்பு என்பதோடு தமிழகம் பூராவுமான அரசியல் ஆதிக்கவாய்ப்பும் காரணமாக தென்தமிழகப்பிரிவினை அங்கே செயற்பாட்டுக்கான வளர்ச்சி பெறாது உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



இன்னொரு வலுவான காரணியும் தமிழகத்தில் பிரிவினைக் கோரிக்கை வெகுசன மயப்படுவதுற்கு தடையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனை அ.மார்க்ஸ் எடுத்துக் காட்டியுள்ளார். அதே ஜனவரி தீராநதி இதழில் அவர் எழுதிவரும் தொடரான "பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்" என்பது, "தெலங்கானா கோரிக்கையும் திணைநிலை உருவாக்கங்களும்" என்ற தலைப்போடு வெளிவந்தது. தமிழகப் பிரிவினை சாதியடையாளத்தோடு முன் வைக்கப்படுவதனைக் கூறி ஒன்றுபட்ட தமிழகத்துக்கான வாய்ப்புக் குறித்து அவர் தெரிவிக்கும் கருத்தை காண்பது அவசியமானதாகும்.

"சந்தடிசாக்கில் தமிழ்நாட்டையும் வடக்கு, தெற்கு என இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை இங்கு சிலர் எழுப்பினர். இந்தக் கோரிக்கையை எழுப்பியவர்கள் பெரும்பாலும் சாதிரீதியான பின்புலம் உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டைப் பிரிப்பதற்கு வரலாற்று ரீதியாகவோ, பொருளியல் ரீதியாகவோ ஏதும் நியாயமில்லை. தமிழ்நாடும் கூட இன்றிருக்கும் வடிவத்தில் இணைக்கப்பட்டது சமீபத்தில்தான் என்றபோதிலும் வடக்கே வேங்கடம் முதல் தெற்கே குமரி முனை வரை தமிழ்கூறும் நல்லுலகம் என்கிற அடையாளம் கட்டமைக்கப்பட்டது சமீபத்தில் அல்ல. அதற்கு ஒரு 2000 ஆண்டுகாலப் பாரம்பரியமுண்டு. தவிரவும் இத்தகைய ஒரு பேரடையாளத்தைக் கற்பித்துக் கொண்டவர் களாயினும் புவியியல் அமைப்பு, பண்பாடு, உணவு, உற்பத்திமுறை என எல்லாவற்றிலும் வேறுபட்ட ஐந்து திணை நிலைகளை உள்ளடக்கிய பாரம்பரியம் நம்முடையது. இந்த உள்ளடக்கும் பாரம்பரியத்தை (Inclusive Tradition) காப்பாற்றுவோம்" என்பது அ.மார்க்ஸ் கருத்து.

இந்தளவு இல்லையெனினும் தெலுங்கு மொழி சார்ந்து ஆந்திரா முழுமையையும் ஒன்றிணைக்கும் உள்ளடக்கும் பாரம்பரியம் அவர்களுக்கும் உரியதுதான். இரு பகுதியினரது தெலுங்கு மொழிப் பிரயோகம் - உச்சரிப்பு என்பவற்றில் பாரிய வேறுபாடு இருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழகத்திலும் நான்கு திசைகளது தமிழ் உச்சரிப்புகள் - பிரயோகங்களிடையே வேறுபாடு நிலவத்தான் செய்கிறது. அதைவிட ஆந்திரா ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. தெலங்கானா மன்னராட்சிக்கு உட்பட்டு நீண்ட காலம் இருந்தது எனும் ஆழமான வேறுபாடு உள்ளது. தமிழகத்திலும் நாயக்கர், மராட்டியர் ஆட்சியென வேறுபாடுகள் இருந்தபோதிலும் வெள்ளையராட்சிக்குள் கணிசமான காலம் ஒன்றுபடுத்தப்பட்டிருந்தது தமிழகம். இங்கும் பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாண்டிச்சேரி தனி யூனியனாக இயங்க முடிகிறது. அதைவிட, ஈழத்தமிழ் பலவகைகளில் தமிழகத்தோடு இரத்த உறவையுடையதாயினும், வேறு நாட்டுக்குரியதாய் மிக அருகிலேயே இருக்க முடிகிறது.

இவ்வாறு பல்வேறு காரணங்களால் தெலங்கானா பிரிவதற்கான வாய்ப்புகளை அதிகமாகவே கொண்டிருப்பதைக் காணமுடியும்.



பிராந்தியப் புறக்கணிப்பு, ஒடுக்குமுறை ஆகியன முற்றாக தவிர்க்கப் படும் வாய்ப்பை வெளிப்படுத்தி இணைப்பை நீடிக்க முடியுமேயன்றி அதிகாரப் பிரயோகங்களால் முற்றாக ஒடுக்கிவிட முடியாது. இது ஒரே மொழி பேசும், நிலத்தொடர்பு இணைப்புடைய பிராந்தியம் (திணை) ஒன்று பிளவுபடக் கோருகின்ற சுயநிர்ணயக் கோரிக்கை. இங்கு தேசியம் மேலும் செழுமையோடு செயற்பட ஏற்றதாகப் புதிய வடிவில் வீரியம் கொள்கிறதேயல்லாமல், தேசியமே வலுவிழக்கிறது என்பதில்லை.

இங்கு எமது அக்கறைக்குரிய விடயம் தெலங்கானா தேசியத்தை இயக்குவதில் சாதித் தேசியத்துக்கு ஏதும் இடமுள்ளதா என்பதுதான். இது குறித்து அ.மார்க்ஸிடம் தகவல் ஏதுமில்லை. அவர் சாதித் தேசியத்துக்கான வாய்ப்புக் குறித்த தேடலில் இறங்க விருப்பமற்று இருப்பதால் காண முடியாமலும் இருக்கலாம். ஆயினும் அதற்கான வாய்ப்பு - சாதி சார்ந்து தேசிய உணர்வு வலுப்பெற ஏற்ற நிதர்சனம் குறித்த அருட்டுணர்வு அவரிடம் உண்டு. "சாதி மற்றும் பழங்குடி அடிப் படையிலான அடையாளங்களும் இன்று தம்மை உறுதி செய்யத் தொடங்கியுள்ளன. இந்த வேட்கைகளை இன்று இனம், மொழி ஆகிய மேலிருந்து கட்டப்படும் பேரடையாளங்களால் நசுக்கி விட இயலவில்லை" என அ.மார்க்ஸ் கூறுவதில், இதனைக் கண்டு கொள்ள முடியும். பின்நவீனத்துவப் பேரடையாளக் கதையாடலில் மெனக் கெடுவதால் மார்க்ஸிய அடிப்படையிலான தேசியப் பிரச்சினையின் இன்னொரு வடிவமாக இதனை அவரால் காண முடியாதுள்ளது.

வட தமிழகம் - தென்தமிழகம் எனும் உணர்வுகளில் இரு பகுதி களிலுமுள்ள ஒவ்வொரு அறுதிப் பெரும்பான்மையாகவுள்ள ஆதிக்க வாய்ப்புள்ள சாதிகளுக்கான தேசிய நலன் போல, தெலங்கானாவின் தனிச்சாதி தலைமை சாத்தியமில்லாமல் இருக்கக்கூடும். ஆந்திரா வுக்கான ஆதிக்கச் சாதிகளான ரெட்டி, நாயுடு ஆகிய சாதிகளது தெலங்கானாவிலான செறிவு எத்தகையது? அங்கு மிகமிகச் சிறுபான்மையாக இருந்தபடி இவர்களது பொருளாதார - அதிகார - உத்தியோக அபகரிப்பைக் கொண்டிருக்கிறார்களா? இவற்றுக்கு எதிரான ஏனைய சாதிகளது அணிசேர்க்கை தெலங்கானாவில் ஏற்பட்டுள்ளதா? இவை குறித்த தகவல்கள் இல்லை. "இவை எல்லாம் விட ரெட்டி, நாயுடுகளின் ஜாதிக் கொழுப்பும் இதனை பசைபோல் பற்றியுள்ளதை எத்தனை காலம்தான் மக்கள் பார்க்காதது போலவே நடிப்பார்கள்" என்ற அ.முத்துக்கிருஷ்ணன் கேள்வியில் தொக்கிநிற்கும் சமூகவியல் யதார்த்தம் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. (அ.முத்துக்கிருஷ்ணன், "தெலுங்கானா - நிராகரிப்பின் துர்வாசனை", **உயிர்மை**, ஜனவரி 2010).

இங்கு எமது கவனத்துக்குரிய அம்சம் புறக்கணிப்புக்குள்ளாகும் சாதி அல்லது சாதிகள் தேசிய நலனுக்குட்பட்ட வடிவங்கொள்ள இடமுண்டு என்பதுதான். ஆதிக்கம் செய்யும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சாதிகள் பிரயோகிக்கும் மேலாண்மைக்கு எதிராக

படிப்பகம்

www.padippakam.com



புறக்கணிக்கப்படும் சாதிகளில் வலுவோடுள்ள சாதி ஏனையவற்றை அணிதிரட்டித் தேசிய வடிவமுள்ள கோரிக்கைகளை முன்வைப்பது ஏற்கனவே வரலாற்று அரங்கில் நிதர்சனமாகத் தொடங்கிவிட்டது; அதற்கு வடிவங்கொடுக்கும் சாதி நிலைப்பட்ட கட்சி உருவாக்கமும் இனங்காணப்பட்டுள்ளது. முதலாளி வர்க்கம் தேசிய உருவாக்கத்தில் ஏனைய வர்க்கங்களை அணிதிரட்டித் தலைமை தாங்குவதைப் போலவே பிராந்திய (திணை) பிரிவினைக் கோரிக்கையில் சாத்திய முள்ள ஒரு சாதி ஏனைய சாதியினரை ஐக்கியப்படுத்தி சுயநிர்ணயக் கோரிக்கையை முன்வைக்க ஏற்றதான வாய்ப்பைக் கண்டுகொள்ள விரும்பாமல் மணலுக்குள் முகம் புதைத்துப் பயனில்லை.

எமக்கான ஏற்றத்தாழ்வான சமூக உருவாக்கம் ஆதிக்கச் சாதியாக கட்டமைத்துக் கொண்ட இனக்குழு, வேறும் ஒன்றிரண்டுடன் கூட்டமைத்து தமது திணையின் மேலாண்மையில் ஏனைய திணை களுக்குட்பட்ட இனக்குழுக்களை சாதிகளாக்கிக் கொண்டு ஒடுக்கு வதன் வாயிலாக நிறைவேறிய ஒன்றாகும். இப்போது புறக்கணிக் கப்படும் பிராந்தியம் (திணை) மேலாதிக்கம் செலுத்தும் சாதிய அதிகாரங்களுக்கு எதிராக சுயாட்சி கேட்பது தவிர்க்கவியலாத ஒரு அவசியம். வர்க்கப் பிளவுபட்ட ஐரோப்பியச் சிந்தனைமுறையில் இயங்கியமையால் கோட்பாட்டு உருவாக்கம் செய்து இதற்குரிய நடை முறைப் பிரயோகம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை; இப்போது தன்னெழுச்சியாக உருவாகியிருக்கும் இப்பிரச்சினையைப் புரிந்து கொள்ளவாயினும், சாதிமுறையென்பது தனிவகைப்பட்ட சமூக உருவாக்கம் என்ற உண்மையின்பால் கவனஞ் செலுத்தியாகவேண்டும். திணை மேலாண்மையிலான சமூக ஏற்றத்தாழ்வையுடைய சாதியச் சமூக உருவாக்கம் குறித்த ஆய்வுகள் வெளிப்பட்டுள்ளன; "தீண்டத்தக்கவர்க ளும் தீண்டப்படாதவர்களும் சந்திக்கும் போது, அவர்கள் மனிதருடன் மனிதர் அல்லது தனிநபர் என்ற முறையில் சந்திப்பதில்லை. குழுக்களின் உறுப்பினர்களாக அல்லது இரண்டு தனி நாடுகளின் குடி மக்கள் போலத்தான் சந்திக்கிறார்கள்" எனக்கூறும் அம்பேத்கர் "ஆரம்பகாலச் சமுதாயத்தில் பல்வேறு குலக் குழுக்களுக்கிடையே இருந்த உறவைப் போல இந்த உறவு காணப்படுகிறது" என அதற்கான அடிப்படையையும் எடுத்துக் காட்டியுள்ளார் (டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்: பேச்சும் எழுத்தும் (1999) நூல் தொகுப்பு, தொகுதி 9. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. பக்.96-97) இவ்வாறு இருந்துங்கூட அதன் தனித்தன்மைமிக்க, பண்பு வேறுபாடுகளின் பரிமாணங்கள் சரியாக இனங்காணப்படவில்லை. இத்தகைய சமூக முறைக்கான சமூக மாற்றப் புரட்சிகளுக்கான வடிவ வேறுபாடு குறித்துப் பேசப்பட்டுள் ளது. அந்த வகையில் விரிவாக இங்கு அவை குறித்து விவாதிப்பதைத் தவிர்த்து சாதியிருப்புக் கொள்ளும் தேசியவடிவம் குறித்து அலசுவது அவசியம்.

பாகிஸ்தானின் உருவாக்கம் - யதார்த்தம் ஆக்கிய பிரதான அம்சம், தேசம் மொழியை மையமாக்கியது என்பதைக் கடந்து மதம் தேசியத்



துக்கான அடிப்படையாக முடிந்தது என்பதாகும். இவ்வகையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக புறக்கணிப்பையும் ஒடுக்கு முறைமையையும் உணரும் எவ்வகையிலுமான பிரிவினர் தேசியவடிவம் கொள்ள முடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சாதிகள் தேசியப் பண்புமிக்வை என அம்பேத்கர் வலியுறுத்தியதை இங்கு பொருத்திப் பார்ப்பது அவசியம். அம்பேத்கரது இக்கருத்தினை எடுத்துக்காட்டுகிறவர்களுங்கூட மேலே நாம் பார்த்து வந்தவறான சாதித் தேசியம் என்பதோடு தொடர்புறுத்திப் பார்ப்பதில்லை. ஏகபோக மூலதனத் திரட்சி கைவரப்பெற்ற ஏகாதிபத்திய நாடுகள் ஒடுக்கப்பட்ட தேசங்கள் மீது மேலாதிக்கம் செலுத்திச் சுரண்டுவது போலவே ஆதிக்க சாதிகள் ஏனைய சாதிகள் மீது அதிகாரம் செலுத்தி சுரண்டி வந்துள்ளன என்பதை ஒப்பு நோக்குதல் அவசியம். ஒவ்வொரு விடயத்தையும் அதது சார்ந்ததாகக் குறுக்கிப் பார்த்துப் பகுதி பகுதியாகவே செயற்பட்டுத் தொலைப்பதே நமது பல பின்ன டைவுகளுக்கும் காரணங்களாகின்றன. பகுதி விடயத்துக்கான இயங் காற்றலையும் முழுமை சார்ந்த தொடர்பாடல்கள் - உறவுப் பரிமாற்றங்கள் - செல்நெறியின் தாக்குறவில் ஏற்படத்தக்க புதிய போக்குகள் என்பன கவனங்கொள்ளப்படுவதில்லை. இவை ஒன்றோ டொன்றான சார்புநிலைகளில் நமக்குரியதான சமூக விடயங்களைக் கவனத்திலெடுத்து சாதிச் சமூகத்துக்குரியதான கோட்பாட்டுருவாக்கம் செய்யப்படாமையினால் நமது புரட்சியின் கோரிக்கையை அறியா துள்ளோம். சாதியப் பிரச்சினைகள் குறித்த செயற்பாடுகளில் பற்றார் வத்துடன மார்க்சிய அமைப்புகள் இன்று ஈடுபடத் தொடங்கியுள்ள மையினால் எதிர்காலத்தில் சரியான கோட்பாட்டுருவாக்கமும் நடைமுறைப் பிரயோகமும் சாத்தியமாகும்.

இங்கேதான் மார்க்சிய நிலைப்பட்ட வர்க்கப் பார்வை அவசிய மானதாகின்றது. சாதிச் சமூக இருப்பை மார்க்சியர்கள் கவனத்திற் கொள்ளாத நிலையில் சாதியக் கட்சிகள் இப்பிரச்சினைகளைக் கையில் எடுத்துக் கொண்டன. அவர்களது சாதிய நோக்கு அடிப் படையில் முன்னேற முடியாத இடர்ப்பாடுகளைஇன்று சந்தித் துள்ளனர். பிரதான எதிரியை இனங்கண்டு, அதற்கு எதிராக சாதி பேதங்களைக் கடந்த பரந்துபட்ட ஐக்கிய முன்னணிக்கான சாத்தியம் பற்றிய கோட்பாட்டுத் தெளிவின்மையினால் அவ்வப்போதைக்கான சந்தர்ப்பவாதக் கூட்டுக்களையே அவர்களால் ஏற்படுத்த முடிந்தது. அதுவே அவர்களது அடிப்படைத்தளமான சமூக சக்திகளை நட்டாற்றில் தத்தளிக்க விடுவதற்கும் வழிகோலியது. குறிப்பாக அத்தகைய கட்சிகளை நம்பி அரசியல் அநாதையான தலித் மக்கள் இன்று மீண்டும் மார்க்சியத்தின் பால் கவனஞ் செலுத்த முன் வந்துள்ளனர்.

சாதி வாழ்முறைகளுக்குள் இருக்கும் வர்க்க அமைவின் பிரச்சினையை சாதிய நோக்கிலான ஒரு அரசியல் அக்கறையாளர் எவ்வாறு முகங்கொண்டு அதிர்வுக்கு உள்ளாகிறார் என்பதற்கு

படிப்பகம்

www.padippakam.com



நேர்காணல் ஒன்றில் சிவகாமி வழங்கிய பதில் சிறந்த எடுத்துக் காட்டாகும். “பல்வேறு சமூகத்தினர் எனும்போது சாதியடையாளத்தை அழித்து வருவது அல்லது அதே அடையாளத்தோடு வருவது என்பவை இருக்கும் இல்லையா?” - ஸ்டாலின் ராஜாங்கம் முன்வைத்த கேள்வி இது. இதற்கான சிவகாமியின் பதில் இவ்வாறு அமைந்தது: “அண்மையில் திருச்செந்தூர் போயிருந்தபோது அக்கிரஹாரத்தில் இருப்பவர்கள் திரண்டு வரவேற்றார்கள். நாங்கள் சாதி வித்தியாசம் பார்ப்பதில்லை. பிராமணாளக் காப்பாத்துங்கோ என்றார்கள். இது எனக்குப் புது அனுபவமாகவும் நகைச்சுவையாகவும் இருந்தது. அவர்களை எது துரத்துகிறது என்று பார்த்தால் கோயிலை நம்பித்தான் அவர்கள் வாழ்கிறார்கள். ஏழைகளாய் நிறுத்தப்பட்டவர்களை மீட்பதற்குக் குறைந்தபட்சத் திட்டத்தை நாம் பேசுகிறோம்.” (“எழுத்தாளர்களால் அரசியலை மாற்ற முடியுமா?” **காலச்சுவடு 112**. ஏப்ரல் 2009. ப.30)

முற்று முழுதான ஏற்றத் தாழ்வுகளைத் தகர்க்கும் மார்க்கத்துக்கான நீண்ட கால மூலோபாயங்களையும் குறுகிய காலத் தந்திரோபாயங் களையும் வகுத்துச் செயற்படும் மார்க்சியர்கள் இத்தகைய சமூக யதார்த்தங்களை உள்வாங்கி இயங்குபவர்கள் என்கிற வகையில் அவர்களை இத்தகைய நிலை அதிர்ச்சிக்கு உள்ளாக்குவதில்லை. தவிர, தலித் மக்களது விடுதலை சாத்தியப்படாதபோது பிராமணருக்கான விடுதலையும் பெறப்படவியலாதது எனும் தெளிவும் உள்ளது.

சாதிகளின் தேசியப் பண்பு நிதர்சனத்தை ஏற்பதால் ஒன்றோ டொன்றான மோதல்களை ஏற்க அவசியமில்லை. பொது எதிரிக்கு எதிராக பல்வேறு சக்திகளை ஐக்கியப்படுத்துவதை சாத்தியமாக்கு வதற்கு அமைவான கோட்பாட்டு உருவாக்கலுக்காகவே இந்த ஆய்வில் மார்க்சியர்கள் இறங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஒடுக்கு முறையின் தன்மை, சுயாட்சி கோரும் சக்தியின் சுயநிர்ணயத்துக்கான அவசியம், மக்கள் விடுதலைச் செல்நெறியுடனான தாக்குறவு என்பவற்றைக் கொண்டு பிரிவினைக்கான ஆதரவையோ, ஈடுபாட்டையோ, எதிர்ப்பையோ மார்க்சிய அணி தீர்மானிக்கும்.

இது தொடர்பில் மேற்குறிப்பிட்ட கட்டுரையில் அ.மார்க்ஸ் குறிப்பிட்டிருக்கும் அம்சம் கவனிப்புக்குரியது. “தனி மாநிலக் கோரிக்கைகளை நாம் பொதுவாக ஆதரிப்பதா இல்லையா? புகழ் பெற்ற லத்தீன் அமெரிக்க மார்க்சிய அறிஞர் ஜேம்ஸ் பெட்ராஸ் சமீபத்தில் கூறியுள்ளது போல இம்மாதிரிப் பிரிவினைக் கோரிக்கை களை, அவை பிரிவினைக் கோரிக்கைகள் என்பதற்காகவே ஆதரித்து விடவோ அல்லது எதிர்த்துவிடவோ இயலாது. அந்தக் கோரிக்கைகளை யார் வைக்கின்றனர், அப்பகுதி மக்களின் பூரண ஒப்புதல் அதற்குள்ளதா, இந்தக் கோரிக்கைகளுக்குப் பின்புலமாக ஏதும் சக்திகள் செயல்படுகின்றனவா, அவற்றின் நோக்கம் என்ன, பிரிவினை தவிர்த்த வேறு என்ன சாத்தியங்கள் உள்ளன என்கிற கேள்விகளுக்கான பதிலை



ஒட்டியே இப்போராட்டத்தை நாம் ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ இயலும்”.

“அந்த வகையில் பிரிவினைக்கான கோரிக்கைகள் வலுப்பதாலேயே தேசியப் பேரடையாளம் தகர்ந்துவிடும் எனக் கருத வேண்டியதில்லை. வெறும் தேசம், இனம், மொழி, ஒருமைப்பாடு முதலான பேரடையாள முழக்கங்களின் மூலம், உள்வேறுபாடுகளைப் புறக்கணித்து ஒரு ஒற்றுமையைக் கட்டிவிட முடியும் என்கிற மமதையை நமது தேசியவாதிகள் விட்டுத் தொலைக்கவேண்டும்” என அ.மார்க்ஸ் வலியு றுத்தும்போது மேலே காட்டப்பட்டவாறு அவசியமற்ற பிரிவினையை மக்கள் விடுதலை நலன் அடிப்படையில் மறுக்கவும் உள்ள நியாயங்களை ஏற்கிறார் என்பதே பிரதானமாகும். அனைத்துப் பிரிவினரது சுயநிர்ணய உரிமையின் அங்கீகரிப்பே முக்கியம். தேசம் என்ற வடிவம் சாதி அலகு வரைக்கும் நெகிழ்வுள்ளதாயினும், அனைத்தும் பிரிய அவசியமற்றவை; தேசியம் என்பது வெறும் பேரடை யாளம் அல்லாது குறித்த சூழல் ஒன்றில் வாழும் மக்கள் தமது சுய நிர்ணயத்தை வரையறுப்பதற்கான அரசியல் வடிவம்; அதற்கு பங்கம் ஏற்படுவதனை உணரும் பிரிவினர் தமக்கான சுயாட்சிக்காகப் போராடவும், ஏற்ற வடிவங்களில் சுயநிர்ணயத்தை வரையறுத்து வென்றெடுக்கவும் இயலுமானவர்களாய் இருப்பர். இவ்வாறு காணும் போது பிராந்தியம் (திணை) சார்ந்த தேசியத்திலிருந்து சாதித் தேசியத்துக்கு அடிப்படையான சில வேறுபாடுகள் உள்ளமையையும் கவனத்தில் கொள்வது அவசியம். அந்த வகையில் சாதித் தேசியத்தின் சுயநிர்ணயத்துக்கான வரையறைகள் குறித்து எதிர்காலச் சந்திப்பொன்றில் அலசுவோம்.

- **புதுவிசை**
***இதழ்27***
***ஜனவரி - மார்ச் 2010***

படிப்பகம்

www.padippakam.com



# 6

# சாதி தேசம் பண்பாடு

சாதியத் தேசியம் சாத்தியமாவது குறித்துப் பேசும்போது, அதன் சுயநிர்ணயம் எத்தகையது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. இந்தியா - இலங்கை எனும் நாட்டுத் தேசியங்களினுள் (குறிப்பாக, இங்கே இலங்கையை முன்னிறுத்தி) தமிழ் இனத் தேசியமும், அதனுள் இந்தச் சாதியத்தேசியம் பெறத்தக்க இடம் பற்றியும், பேசவேண்டியுள்ளது. இன்றைய மாறிவரும் சர்வதேச உறவுச் செல்நெறிகளில், இவை குறித்த வரையறைகள், செயற்படும் இயக்கங்களுக்கு அவசியமானதாகின்றது. வர்க்க சக்திகளிடையிலும் தேசங்களினிடையேயும் இடம்பெறும் சமநிலை மாற்றங்களை எவ்வளவு விரைவில் கணிப்பிட்டு ஏற்ற தந்திரோபாயங்களை வகுத்து செயற்பட முடிகிறதோ, அதிலேதான் பாட்டாளி வர்க்க இயக்கமொன்றின் முன்னேறித் தாக்குதலுடனான வெற்றிகள் சாத்தியமாக முடியும். அந்த வகையில், சாதியத் தேசிய இருப்பும் அதன் மீதான பண்பாட்டின் தாக்கமும் குறித்து இக்கட்டுரை அலசும்.

## I

இந்தியா, இலங்கை எனும் நாட்டுத் தேசியம் கட்டமைக்கப்பட்ட போது கூடவே பாகிஸ்தான் உருவாகி ஏற்பட்ட பிரிவினையோடு இணைந்து இனங்களிடையே இடம்பெற்ற வன்முறைக் கொலைத் தாண்டவம் கேடான அனுபவமாய் அமைந்தது. அதன் பேறாக எமது மார்க்சிய அமைப்புகள் இனத் தேசியங்களின் சுயநிர்ணயத்தையே ஏற்க விருப்பமற்ற சூழலைத் தோற்றுவித்தது. இலங்கையில் எழுபதுகளில் தமிழினத் தேசிய எழுச்சியோடு சுயநிர்ணயம் குறித்த தேடல் தொடங்கியபோது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தமிழினம் ஒரு தேசிய இனமேயில்லை என வாதிட்டு சுயநிர்ணயத்தை மறுக்க முயன்றது. பிரிவினையானது ஆபத்தான விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்ற நிலைப்பாட்டிலிருந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. தொடர்ந்த வரலாற்றுப் போக்கு தமிழினம் தனியான தேசிய இனம் என்பதை வலுவாகக் காட்டியதுடன், பிரிவினை மோகம் எத்தனை மோசமான கேடுகளை ஏற்படுத்தும் என்பதையும் காட்டிச் சென்றுள்ளது.

இத்தகைய வளர்ச்சியோடு சுயநிர்ணயம் என்பதைப் பிரிவினையிலிருந்து வேறுபடுத்தும் அதேவேளை முன்னர்போல இறுக்கமாகவன்றி பரந்த தளங்களில் விரிவுபடுத்தி மார்க்சிய அமைப்புகள் பிரயோகிக்க



முன்வந்துள்ளன. இது தொடர்பில் நேபாள அனுபவம் கவனத்திற் கொள்ளத்தக்கது. சாதிக் கட்சிகள் யதார்த்தமாகியுள்ள சூழலில் சாதித் தேசத்துக்கான சுயநிர்ணயத்தை நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் நடைமுறையாக்கும் முயற்சிக்கான தொடக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை கவனிப்புக்குரியது. சாதியத் தேசமும் அதன் சுயநிர்ணயமும் எனும் வகையில் இல்லாதபோதிலும், அ.மார்க்ஸ் நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் புரட்சியில் இடஒதுக்கீட்டு நடைமுறையைப் பிரயோகிப்பது பற்றிக் கூறுவது உண்மையில் சாதித் தேசத்துக்கான சுயநிர்ணயத்தையே காட்டுகிறது (அதன் பொருளில் இன்னமும் விரிவாக்கம் பெற இடமுள்ளது. தவிர நேபாள மாவோயிஸ்டுகள் சமூக மாற்றச் செல்நெறியில் சாதியம் வகிக்கும் நிலைப்பாடு குறித்து ஆழமான புரிதலோடு மேலும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்பதும் கவனத்தில் கொள்ளல் அவசியமானது).

“நேபாள அரசியல் இதற்கு இன்னொரு சான்று. அங்கே 12 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருந்த மாவோயிஸ்டுகள் அங்கு புதிதாக உருவாகியிருந்த அடையாள உறுதியாக்கங்களைப் (Identity Affirmations) புரிந்து, உள்வாங்கி ஏற்றுக் கொண்டனர். இருபதாண்டுகளுக்கு முன் அங்கே மாதேசி, ஜனஜாதி, தலித் முதலான அடையாள உருவாக்கங்கள் வலுவாகச் செயற்பட்டதில்லை. ஜனஜாதி, தலித் முதலான சொற்கள் நேபாளி மொழியிலில்லாதவை. முன்னது வங்க மொழிச் சொல். பின்னது மராத்தி. மாதேசி இந்திய வம்சாவழியினரைக் குறிப்பது. ஆயுதப் போராட் டத்தின் மூலம் சுமார் 9 மாவட்டங்களை மாவோயிஸ்டுகள் விடுதலைப் பிரதேசங்களாக அறிவித்தபோது, ஒன்று தலித் தலைமையில் உருவாக்கப்பட்டது. மேலும், ஐந்திற்கு முன் குறிப்பிட்ட அடையாளங்களின் அடிப்படையில் தலைமைகள் உருவாக்கப்பட்டன. புரட்சியிலும் இடஒதுக்கீடு என்கிற புதுமை அங்கே ஏற்றுக் கொள்ளப்பட்டது” (அ.மார்க்ஸ், 2009, **அரசு, இறையாண்மை, ஆயுதப் போராட்டங்கள்**, புலம், சென்னை, பக்.24-25) என்பார் அ.மார்க்ஸ். மாதேசி, ஜனஜாதி, தலித் போன்ற தேசிய பிரச்சினையின் வடிவத்தை அடையாளங்களாகக் குறுக்கிப் பார்ப்பதில் உள்ள தவறு இங்கு நாம் தொடர்ந்து விவாதித்துச் செல்லும்போது தீர்வுக்குள்ளாக வல்லது. அவ்வாறே, சிறு அடையாளங்களையே முழுதாகக் கவனங்கொண்டு சமூக மாற்றத்துக்கான அக்கறையைப் பெருங்கதையாடலாக நிராகரிப்பது (அல்லது குறைத்து மதிப்பிடுவது) எவ்வகைக் கேடு என்பதையும் பின்னாலே பேசிக்கொள்வோம்.

ஏனைய தேச வடிவங்களை விடுத்து இங்கே சாதித் தேசியம் குறித்து விவாதிப்பது உடனடித் தேவையாக உள்ளது. சாதி எவ்வாறு தேசத்துக்கான பண்பைப் பெறமுடிகின்றது? சாதிகளின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய இயங்காற்றல் என்பனவற்றிலிருந்து இதனைப் புரிந்துகொள்ள முடியும். பல தளங்களில் இவை குறித்த

படிப்பகம்

www.padippakam.com



ஆரோக்கியமான ஆய்வுகள் வெளிப்பட்டுள்ளன. அதிலும் தமிழகத்தில் மிகக் காத்திரமான பங்களிப்புகள் இது தொடர்பில் உண்டு. பிராமணியத்துக்கு எதிரான திராவிடரியக்க எழுச்சி அதற்கான களம் அமைத்துக் கொடுப்பதாக அமைந்தது. தவிர, திணைகளாக இயங்கிய தமிழக வரலாற்றுத் தொடக்கத்தில் மருதத்திணை ஏனைய திணைகளை வென்றடக்கி அரசுருவாக்கத்தை ஏற்படுத்தியதை அறிவோம்; இது சாதித் தோற்றத்தை விளக்குவதற்கான கோட்பாட்டு ருவாக்கத்தை வழங்க ஏற்றதாக அமைந்துள்ளமையும் கவனிப்புக் குரியது. திணைக் கோட்பாடு சார்ந்து சிவத்தம்பி முன்வைத்த கருத்துகள் சாதி குறித்த ஆய்வில் ஏற்கனவே தாக்கம் செலுத்தியுள்ளன. ஆயினும், இலக்கிய - இலக்கண பயன்பாடுகள் சார்ந்து திணைக் கோட்பாடு கவனங் கொள்ளப்பட்ட அளவோடு ஒப்பிடும் போது சமூக உருவாக்கத் தளம் சார்ந்து அதன் பரிமாணங்கள் வெறும் ஆரம்ப மட்டத்திலேயே இருக்கிறது. இங்கும் நமது பேசுபொருள் சார்ந்து சில அடிப்படை அம்சங்களைக் கவனத்திலெடுத்து மேற்கொண்டு ஏனையவற்றையே பேச வேண்டியிருக்கும் (ஆழமான ஆய்வுக்கான அவசியத்தை ஏற்கும்பட்சத்தில் இனிவரும் காலம் அதனைத்தானே வெளிக்கொணரும்).

சங்க காலம் என அறியப்படும் வீரயுகத்தில் ஏற்பட்ட சமூக மாற்றச் செல்நெறியை ராஜ்கௌதமன் தனிநூலாகத் தந்துள்ளார். அது முற்றிலும் இலக்கிய ஆதாரங்களை மட்டும் கவனங் கொண்டு எழுதப் பட்டது. அந்த வகையில் அதன் போதாமை குறித்து விமரிசிக்கப் பட்டதுண்டு. ஏனைய வரலாற்று மூலங்களை கவனங் கொள்ளாத போதிலும் அவரது இலக்கியவழி வெளிப்பாடு ஏனைய ஆதாரங் களால் நிராகரிக்கப்படவல்லதான பலவீனப்பட்ட நிலையில் இல்லை என்பதே நிதர்சனம். ராஜ்கௌதமனின் வெளிப்பாட்டிலுள்ள இடை வெளியை நிறைவு செய்வதாக இலங்கையில் தமிழினத்துவ உருவாக்கம் சார்ந்த இந்திரபாலாவின் நூல் அமைந்துள்ளது. இந்திரபாலா தமிழக வரலாற்றுத் தொடக்கத்தை பல்வேறு வரலாற்று மூலங்களின் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழகத்தின் வரலாற்றுத் தொடக்கம் உலகின் ஏனைய பகுதிகள் போல விவசாய எழுச்சியைத் தொடர்ந்து வணிக எழுச்சியைக் காட்டு வதில்லை. விவசாய எழுச்சிக்கு முன்னரே வணிகம் சாத்தியப்பட்ட வரலாற்றுத் தொடக்கம் தமிழின் பல தனித்துவங்களுக்கு வழிவகுத் துள்ளது. ஐந்து திணைகள் ஆளுமையோடு அடையாளங் காணப்படு வதற்கு அதுவே வாய்ப்பளிப்பதாக அமைந்தது. விவசாயத்துக்கு முந்திய வணிக சாத்தியம் சுமேரிய வணிகக் குழுக்களின் குடியேற்றத்தினாலாக இருக்கும் வாய்ப்பை இந்திரபாலா காட்டி யுள்ளார். அதேவேளை ஏனைய இடங்கள் போல விவசாய எழுச்சியின் பின்னரான வணிக எழுச்சி பற்றியும் பேசும்போது முந்திய வணிக எழுச்சி விவசாயம் சாராமல் இருக்க முடிந்ததன் வரலாற்று முக்கியத்துவத்தைப்



போதியளவு புரிந்துகொள்ளாதவராகிறார். பிந்திய வணிக எழுச்சி சங்க மருவிய காலத்துக்குரியது. இதற்கு நெடுங்காலம் முன்னதாக, சுமேரிய வணிகக் குழுக்களின் வருகைக்குக் காரணமான குறிஞ்சி திணையின் ஏலம், கறுவா, கராம்பு, நீலமணிக்கல் மற்றும் நெய்தலின் முத்து வணிகம் சார்ந்து அந்தத் திணைகள் பெற்ற ஆளுமை பிரத்தியேக கவனிப்புக்குரியது. இவை, விவசாய எழுச்சிக்கு முந்தியவை. இக்காரணத்தினாலேயே வீரயுக இலக்கியத்தில் வணிகக் கருத்தியலுக் கான சமண, பௌத்த, ஆசீவக கவிதைகள் இடம்பெற முடிந்துள்ளன.

சேர அரசுருவாக்கத்தின் போது அதன் சின்னமாக உள்ள அம்பு வில் முல்லையைக் குறிப்பதாக சொல்வோருளர். அது முல்லைக் குரியதல்ல, குறிஞ்சிக்குரியது. சேர அரசுருவாக்க நகர்கள் குறிஞ்சித் திணையோடு தொடர்புபட்டிருக்கக் காணலாம். பாண்டிய அரசுருவாக்கத்தில் மீன்கொடி நெய்தல் திணையை நினைவுபடுத்தியது. அதன் முத்து வணிகம் கவனிப்புக்குரியது. அது தொடர்பில் ஒரு யவன அரசர் தனது மகளை மணமுடித்துக் கொடுத்ததுடன் சீதனமாக பாண்டிய அரசை வழங்கியதான குறிப்பு கவனிப்புக்குரியது. (இதுபற்றி கங்காதரன் தனது நூலில் கூறியுள்ளதை பார்ப்பது அவசியம்).

ஆயினும், குறிஞ்சி, நெய்தல் திணைகள் நேரடியாக அரசுருவாக் கத்தை சாதித்தன எனக் கொள்ளமுடியாது. படை நடத்தவும் குடியோம்பவும் ஏற்ற நெல் உற்பத்தி சாத்தியமான மருதத்திணைப் பண்பு வாய்த்த பின்னரே அரசுருவாக்கம் சாத்தியமாயிருக்க முடியும். குறிஞ்சி, நெய்தல் ஆகிய திணைகளின் வணிக முன்னேற்றத்துடன் ஆற்று நீர்ப்பாசன வாய்ப்புள்ள மருதத் திணைக்கு மாறி வளர்ந்த இனக் குழுக்களிடம் முந்திய தொன்மங்களின் நீடிப்பாக அம்பு, வில், மீன் ஆகிய கொடிகள் தொடர்வதாகவே இதனை விளக்கங் கொள்ள வேண்டும். படை நடத்த வல்லதாக மருதத்திணை ஏற்படுத்தித்தந்த வாய்ப்புடன் குறிஞ்சி, நெய்தல், முல்லை, பாலை ஆகிய திணைகள் வென்றடக்கப்பட்டு சாதிகளாகக்கப்பட்டமை தொடர் வரலாறு. இந்தளவில் திணைக் கோட்பாட்டின் சமூக உருவாக்க விரிவாக்க தேடல் இங்குபோதும்.

“யாதும் ஊரே, யாவரும், கேளிர்” எனும் வீரயுகப் பிரகடனத்தை அறிவோம். தனித்திருந்த இனக்குழு வாழ்முறை பேரரசு எல்லைக்குள் வேறு இனக்குழுக்களுடன் உறவுகொள்ளும் நிர்ப்பந்தத்தின் வெளிப்பாடு இது. பல்வேறு தொழில்சார் கிராமிய வாழ்வின் உறவுக்கு ஏற்புடையதாக இவ்வகையில் மாற்றப்பட்ட இனக்குழுக்கள் சாதிகளாக்கப்பட்டன. விவசாய உற்பத்திக்கு அமைவாக வென்றடக் கப்பட்டு இவ்வாறு சாதிகளாக்கப்பட்ட இனக்குழுக்கள் தாம் இருந்த இடத்துக்கு அமைவான தொழிலைப் பரம்பரை பரம்பரையாகத் தொடர நிர்ப்பந்திக்கப்பட்டதன் பேறுதான்சாதி. மேலாதிக்கம் பெற்ற இனக்குழு ஆளும் சாதியாகவும் ஏனையவை இறங்கு வரிசைப் படிநிலைக்குரிய சாதிகளாகவும் கட்டமைக்கப்பட்டன. இவ்வகையில்

படிப்பகம்

www.padippakam.com



குறித்த தொழில் வம்சாவழியாக நீடிப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் அகமணமுறை கட்டாயமாக்கப்பட்டது. இனக்குழு வாழ்முறையில் இருந்த தீட்டு கோட்பாடு சாதிகள் சார்ந்த வகையில் படிவரிசை இறக்கங்களுக்குரியதாக மாற்றிப் பிரயோகிக்கப் பட்டது.

இத்தகைய இனக்குழு மேலாதிக்கம் சார்ந்த சுரண்டல் அமைப்பு சாதிமுறையாக ஆகியமை சில நூறாண்டுகள் முன்னதாக வட இந்தியாவில் ஏற்கனவே ஏற்பட்டிருந்தது. அதற்கு அமைவாக சாதியக் கருத்தியலைப் பிராமணியம் வழங்கியிருந்தது. இத்தகைய இனக்குழு மேலாதிக்கம் ஆரியர் வருகைக்கு முன்னரே சிந்துவெளிப் பண்பாட்டுக்குரியோரிடம் ஏற்பட்டதாக கூறுவோர் உளர். ஆரியரின் வர்ணாசிரமக் கருத்தியலே சாதியத்தை தோற்றுவித்தது என்பர் வேறு சிலர். இனக்குழுவாழ்முறையுடைய ஆரியர்களதும் முன்னேறிய சுரண்டல் சமூகத்துக்கான மேலாதிக்க இனக்குழுவாழ்முறை சாத்தியமான சிந்துவெளிப் பண்பாட்டுச் சுதேசிகளதும் பண்பாட்டுக் கலப்பில் உருவான புதுவகைப் பிராமணர்கள் இரு வழிமுறைகளதும் இணைப்பில் கண்டு வெளிப்படுத்திய கருத்தியலே சாதியம். ஆக, ஏற்கனவே சாத்தியமான சாதி வாழ்முறையின் வெளிப்பாடே பிராமணியம் முன்வைத்த சாதியக் கருத்தியல்.

சாதியம் தொடர்பான பல்வேறு சிந்தனைப் போக்குகளைத் தொகுத்து வழங்கி இனக்குழு மேலாதிக்க வாழ்முறையின் வெளிப்பாடே சாதியம் என்பதை கோ.கேசவன் தனது "சாதியம்" எனும் நூலில் காட்டியுள்ளார். சரியாகவே அதனை இனங்கண்ட போதிலும் தீண்டாமையுடன் கூடிய நிலவுடைமைக் கருத்தியலாக மட்டுமே சாதியத்தை அவர்காணும் தவறையும் அங்கே வெளிப்படுத்தினார். நிலவுடைமைக்கு முந்திய சாதியத்தை உருவாகிவரும் முன்தேவைப் பாடாகவும், நவீன சமூகத்தில் அதன் நீடிப்பை அரை நிலப்பிரபுத்துவம் இன்னமும் இருப்பதன் பேறான கருத்தியல் எச்சமாகவும் கேசவன் காண்கிறார்.

உண்மையில் மேலாதிக்க இனக்குழுச் சுரண்டலுக்கான அரசுருவாக்கத்தின் உடன் விளைவான பிராமணியத்தோடு வருணக் கருத்தியல் முன்வைக்கப்பட்டபோதே சாதியக் கருத்தியல் தோற்றம் பெற்றுவிட்டது. வர்க்கப் பிளவடைந்த அடிமைச் சமூகத்தை உடைய கிரேக்கம், ரோம் போலத் தனி மனிதர்களாயல்லாமல் ஒடுக்கப்படுகிற உழைக்கும் இனக்குழுக்கள் எனும் சமூக வகை அடிமைப்பாட்டுக்கு ஏற்ப புனிதம் மற்றும் இரத்தக்கலப்பற்ற இனக்குழுத் தூய்மை சார்பான கருத்தியலாக ஆரம்பகாலச் சாதியக் கருத்தியல் தீட்டுக்கோட்பாடாக அமைந்தது. அதுவே நிலவுடைமைச் சமூகத்தில் நிலத்துடன் பிணைக்கப்பட்ட உழைப்போர் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்படுவதான தீண்டாமைக் கருத்தியலானது. வேறு வார்த்தைகளில் கூறின் படியிறக்கத்துடன் புனிதம் குறைவடைந்து செல்வதான நிலவுடைமை வாழ்முறையுடன் பெற்ற பொருளியல் தேவைப்



பரிணமிப்பும் அதற்கேற்புடைய தீண்டாமைக் கருத்தியலும் புதுவகையானது. இத்தகைய பண்புவேறுபாடு கவனிக்கப்படாமல் தீண்டாமையே, அவ்வகையில் நிலவுடைமைக்குரியதே சாதியம் எனப் பலரும் மயங்க நேர்கிறது.

தீட்டுக் கருத்தியல் பிற இனக்குழுக்களிலிருந்து தம்மைத் தனித்து அடையாளப்படுத்தும் உணர்வு சார்ந்தது. அதன் மற்றொரு பரிணமிப்பே தீண்டாமைக் கோட்பாடு.

நவீன முதலாளித்துவ உற்பத்தி முறையில் ஸ்தாபன மயப்படல் பிரதான அம்சம். முதலாளித்துவ சமூகத்துக்கான அரசியல் தேவைகளுக்கு ஏற்ப வர்க்க சக்திகளுக்கானதாக கட்சிகள் அமையும். வர்க்கப் பிளவுபடாத சாதியச் சமூகத்தில் ஒரே சாதியினர் கிராம எல்லைகள் கடந்து ஸ்தாபன மயப்படுவதும் சாதிக்கட்சிகள் சாத்தியப்படுவதுமாக இங்கே சாதியக் கருத்தியல் பரந்த தளத்தில் ஸ்தாபன மயப்படுதல் என்பதாக மாற்றம் பெற்றுள்ளது. நிலவுடைமைச் சமூகத்தில் ஒரு கிராமத்தினுள் விவசாய உற்பத்திக்கு அமைவாக பல்வேறு சாதிகளின் உறவு அமைந்தது. வெவ்வேறு கிராமங்களின் ஒரே சாதியினர் இன்று போல் அப்போது ஒன்றுபடுவதைவிட ஒரு கிராமத்துக்குரிய வெவ்வேறு சாதியினரது தொடர்பாடல் அதிக வலுவுடையது. இன்றைய தேவை கிராம எல்லை கடந்து சாதி உறவை கட்டமைக்க வலியுறுத்துகிறது. இவ்வகையில் ஸ்தாபன மயப்பட்ட கட்சி அமைப்புக்குச் சாத்தியப்படும் முதலாளித்துவக் கருத்தியலை இன்று சாதியம் பெற்றதன் பேறுதான் சாதிக்கட்சிகள்.

ஏதோ சாதிக் கட்சிகள் என அண்மைக்காலங்களில் இனங் காணப் பட்ட சில கட்சிகள்தாம் சாதித் தேசியத்துக்குரியன என்றில்லை, எந்தவொரு கட்சியும் அடிப்படையில் ஏதோவொரு சாதி நலனை முதன்மைப்படுத்தி அதன் தலைமையில் ஏனைய சாதிகளை ஐக்கியப் படுத்துவனவாயே இருந்துள்ளன. யாதும் ஊரே, யாவரும் கேளிர் எனத் தமிழகம் முடிவேந்தர்கள் மூவரது பேரரசு எல்லைக்குள் கொணரப்பட்டபோது, வெள்ளாளர் ஆதிக்கத்துக்குள் அனைத்து சாதிகளும் கொண்டுவரப்பட்டனர், இரண்டாயிரம் வருடங்களின் முன்னர். வெறும் அரசு இயந்திர அடக்குமுறையால் மட்டும் இதனைச் சாதித்துவிட முடியாது. அதுவும் ஒரு பகுதியாக அமைய வேண்டியிருந்ததாலேயே வீரயுக யுத்தப் பேரிகை. அதற்கு உணர்வூட்டும் வீரயுகப் பாடல்கள். மூவேந்தர்கள் இவ்வகையில் பேரரசுகளாக எழுச்சி பெற்றபோது வென்றெடுத்த நிலங்களைப் பிராமணர்களுக்கு வழங்கி ஏற்றத்தாழ்வை வலியுறுத்தும் சாதியக் கருத்தியலையுடைய பிராமணியத்தை இந்த மண்ணுக்குரியதாக்கினர். இவ்வாறு கருத்தியல் ஏற்பை சாத்தியமாக்கியதன் வாயிலாகவே வெற்றிபெற்ற சாதி தனது அதிகாரத்தை நிலைநிறுத்த முடிந்தது.

அண்ணாதுரை தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்த்தேசியத்தை முன்னெடுத்தபோது வெள்ளாளர், முதலியார்,

படிப்பகம்

www.padippakam.com



நாயக்கர் எனும் ஆளும்கூட்டணிச் சாதிகளது தேசியத்தின் தலைமையில் ஏனைய தமிழ்ச்சாதிகள் ஐக்கியப்படுத்தப்பட்டனர். எண்பதாம் ஆண்டுகளில் கள்ளர், மறவர், அகம்படியார் தலைமையில் முக்குலத்தோர் தேசியத் தலைமையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வாயிலாக பிரதிநிதித்துவப்படுத்தி தமிழகத்தை வெற்றி கொள்ள முடிந்தது. இந்தப் பின்னணியிலேயே வன்னியர் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சாதிக்கட்சியென இங்கே முதன் முதலில் வெளிப்படையாக சாதிக்கட்சியாக இனங்காணப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சி தோற்றம் பெற்றது. தொடர்ந்து தலித் கட்சிகளான புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற கட்சிகளும் தோற்றம் பெற்றன.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பாட்டாளி வர்க்கக் கட்சி எனும்போது, ஏனைய புரட்சிகர சக்திகளது இணைவு மறுக்கப்படுவதில்லை. அவ்வாறே முதலாளித்துவக் கட்சிகள் மற்றைய வர்க்கப்பிரிவை அணிதிரட்டியிருப்பதும், இங்கு ஒரு கட்சியில் பிரதானமாக ஒரு சாதி நலன் முதன்மையாவதனால் ஏனைய சாதிகளை ஐக்கியமுறுத்துவதற்குதடையாகாது. ஏனைய கட்சிகளும் உண்மையில் ஒரு சாதி தனது நலனை வென்றெடுக்கும் வகையில் அமைத்துக் கொண்ட அணிசேர்க்கைதான். இதனை சாதிவாத நோக்கில் அணுகக் கூடாது. வர்க்க அடிப்படையிலான காரணிகளும் புறக்கணிக்கத்தக்கன அல்ல.

முன்னதாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா முழுமையையும் ஒன்றுபடுத்த முடிந்தது பிராமணத் தேசியத்தினால் என்பது கவனிப்புக்குரியது. கோகலே, திலகர் போன்றோர் தலைமையில் காங்கிரஸ் பிராமணத் தேசியத்தை முன்னிலைப்படுத்த முடிந்தபோது, அந்தப் பிராமணர் சாதி மட்டுமே முழு இந்தியாவுக்குமுரியது என்றவகையில் இந்தியத் தேசியம் பிராமணத் தேசியமாக பிராமணத் தேசியத் தலைமையில் ஒன்றுபடுத்தப்பட்டது. கோகலே, திலகர் போன்றோரது பிராமணத் தேசியமே தொடர்ந்திருப்பின் இந்திய சுதந்திரத்தை சாத்தியப்படுத்தும் வெகுஜன எழுச்சி சாத்தியப்பட்டிராது. ஏனைய சாதித் தேசிய நலன்களையும் உள்வாங்கிய தாராளவாத அரைப்பிராமணத் தேசியத்தை முன்னிலைப்படுத்திய காந்தி - நேரு தலைமையினாலான காங்கிரஸ் கட்சியே அனைத்து மக்களையும் தலைமை தாங்கி வெகுஜனக் கிளர்ச்சிகளை முன்னெடுத்தது என்பது கவனிப்புக்குரியது (காந்தி - நேரு தலைமையில் காங்கிரசில் தொடர்ந்ததும் பிராமணத் தேசியம் எனக் குறிப்பிட்ட போது, இதனை அவ்வாறன்றி தாராளவாத அரைப்பிராமணியத் தேசியமாக வேறுபடுத்திக் காணவேண்டும் என வலியுறுத்தியவர் போத்துரெட்டி. அவர் முதலில் சாதித்தேசியம் என்ற கருத்தியலை ஏற்கவில்லை. தொடர்ந்த விவாதத்தில் அவர் ஏற்றுக் கொண்ட வகையில் இதனை வலியுறுத்தினார். அவருக்கு நன்றி).

காங்கிரசின் பிராமணத் தேசியத்தை இனங்கண்டு, சாதிகளாய்ப் பிளவுபடுத்தித் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துகின்ற



பிராமணரால் இந்தியாவை ஒரு தேசமாக ஒன்றிணைக்க முடியாது என ஜோதிராவ் புலே, அம்பேத்கர் போன்றோர் குறிப்பிட்டிருந்தனர். ஜோதிராவ் புலே சொன்ன காலத்தில் அது சரியாக இருக்கத்தக்க வகையில் பிராமணத் தேசியம் தனது மேலாண்மைக் குணத்தை முனைப்பாகக் கொண்டிருந்தது. பின்னாலே அம்பேத்கர் காலத்தில் காந்தி - நேரு தலைமையில் தாராளவாத அரைப் பிராமணியம் ஏனைய சாதித் தேசியங்களது நலன்களையும் ஓரளவிலாயினும் வெளிப்படுத்தி, பிராமணத் தேசத்தலைமையில் அனைத்துச் சாதிகளது தேசங்களையும் ஒன்றுபடுத்தியிருந்தது. சமகால இயக்கச் செல்நெறியின் மாற்றப் போக்கை உடனடியாக அம்பேத்கரால் இனங்காண முடியவில்லை. அக்காரணத்தாலேயே தலித் மக்களுக்கான வீரியமிக்க தலைமையை வழங்கிக் காத்திரமான பணிகளை அம்பேத்கர் முன்னெடுத்த போதிலும் பெரும்பாலான தலித் மக்கள் காங்கிரசில் அணிதிரண்டு சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

அம்பேத்கர் காங்கிரசின் பிராமணத் தேசியத்துக்கு எதிராக தலித் மக்களின் எதிர்த் தேசியத்தை முன்வைத்து இயங்கினார். பொதுவாக இந்தியத் தேசியம் சாதிகளின் தேசமாகப் பிளவுண்ட தேசியங்களாய் உள்ளது. இவற்றில் பிராமணத் தேசியம் ஆதிக்க தேசப்பண்பைக் கொண்டுள்ளபோது, அதிகார எதிர்ப்புணர்வுடன் தலித்தேசியம் எதிர்த்தேசியமாக உள்ளது. வெள்ளையனே வெளியேறு இயக்கம் முனைப்படைந்தது போன்ற சில சந்தர்ப்பங்களில் ஆங்கில அரசுடன் அம்பேத்கர் இணங்கி இயங்க முன்வந்தது இந்த எதிர்த் தேசியப் பண்பினாலேயே. அடிப்படையில் தலித் விடுதலைக்கு ஏகாதிபத்தியம் வலுவான பங்களிப்பை நல்கவில்லையென வலியுறுத்திய அதேவேளை, பிராமணத் தேசியத்துடனான முரண்பாட்டின் பேறாக அவர் இவ்வகையிலான உடன்பாட்டை ஆங்கில அரசுக்கு வழங்கினார். முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டு அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களின் தலித்தேசியமே இவ்வாறு முழுமையான எதிர்த் தேசியமாக அமையமுடியும். ஏனைய பிற்படுத்தப்பட்ட சாதிகளது தேசிய உணர்வுகள் குறித்த சில அம்சங்களில் எதிர்த் தேசியமாக முடிந்தாலும், அவை ஆதிக்க சாதித்தேசியத்துடன் சமரசங் கொள்ள ஏற்ற பண்புகளையும் கொண்டுள்ளன. அவ்வகையில் 'ஒருவகை எதிர்த்தேசியப் பண்புடையன' என்றே கூறமுடியும்.

சென்ற நூற்றாண்டின் இருபதாம் ஆண்டுகளில் தமிழகத்தில் வீறுகொள்ளத் தொடங்கிய திராவிடத்தேசியம் இவ்வகையிலான 'ஒருவகை எதிர்த்தேசியமே'. திராவிடர் இயக்கம் பிராமணத் தேசியத்துக்கு எதிரான மிகக் காத்திரமான எதிர்த்தேசியப் பண்பைக் கொண்டிருந்த போதிலும், வெள்ளாளர், முதலியார், நாயக்கர் ஆகிய ஆளும் சாதிகளது கூட்டுத் தேசியம் தலைமை தாங்கிய வகையில் அது தலித் தேசியம் போல முழுமையான எதிர்த்தேசியமாக அமைய வில்லை. திராவிடத் தேசியத்தின் ஆளும் சாதிகளது தேசியப்பண்பு அதன் உடன் பிறப்பான தமிழ்த்தேசியத்திலும் வெளிப்பட்டது. தமிழ் தேசியம்

படிப்பகம்

www.padippakam.com



ஆட்சியதிகாரத்தைப்பெற்ற 1967 இன் பின்னர் வெண்மணியில் தொடங்கிய தலித் மக்களுக்கு எதிரான ஆதிக்கவெறி இன்றுவரை நீடிப்பதில் எத்தகைய பங்களிப்பை வழங்கியது என்பது உலகறிந்த விடயம். அந்த வகையில் திராவிடர் இயக்க தமிழ்த்தேசிய பிராமண எதிர்ப்பானது ஒருவகை எதிர்த்தேசியமாகவே அமைகின்றது. “மதமும் மார்க்சியமும்” நூலுக்கு மார்க்சிஸ்ட் இதழில் குணா காத்திரமான ஒரு விமரிசனம் எழுதியிருந்தார்; அந்த விமரிசனத்தில் ஒருவகை எதிர்த்தேசியம் என்பது போதிய விளக்கமற்று இருப்பதாகக் குணா குறிப்பிட்டிருந்தார், இப்போது தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் எனக் கருதுகிறேன்.

ஆக, யாதும் ஊரே - யாவரும் கேளிர் என விவசாய வாய்ப்பைப் பெற்ற இனக்குழு ஏனையவற்றை வென்றடக்கி ஆட்சிப்படுத்தி உறவு கொண்டாடியபோது வர்க்கப்பிளவடைந்த தனிமனிதர் களாயில்லாமல் இனக்குழுக்களே உழைக்கும் தொகுதியாகும் சுரண்டல் முறை நமக்குரியதாக ஏற்பட்டுள்ளது. இத்தகையதான பிரத்தியேகச் சூழல் அதிக கவனிப்புக்குரியதாகிறது. இனக்குழுப்பண்பு இவ்வகையில் நீடிக்கும்போது தேசிய உணர்வைக் கிளர்த்தும் முதலாளித்துவத்தில் தமக்குள் வலுவான இரத்த உறவைப்பேணும் சாதிகளாக்கப்பட்ட இனக்குழுமுறை வாழ்வுடையோர் தம்மை தேசம் போலக்கருதுதல் தவிர்க்கவியலாததாகிறது. அந்தப் புறநிலையதார்த்தம் நிலவுவதால் கிராம எல்லைகள் கடந்து ஒரே சாதியினர் சாதிச் சங்கங்களாக ஸ்தாபன மயப்பட்டு தமது (தேசிய) நலன்களை முன்னிறுத்திப் போராட வேண்டியவர்களாயினர், வாய்ப்புள்ள பெரும்பான்மைச் சாத்தியமுள்ள வர்கள் தமது சாதிக்கட்சியையும் கட்டியெழுப்பினர். இவ்வாறு பிளவுபட்ட தேசியங்கள் நமது யதார்த்த மாயினும், ஒரு தேசத்தை வடிவப்படுத்தித் தலைமையேற்க வாய்ப்புள்ள ஆதிக்க சாதித் தேசியம் ஒடுக்கப்பட்டு உரிமைகள் முழுமையாக மறுக்கப்பட்ட தலித் தேசியம் எனும் இரட்டைத் தேசியம் எதிரும் புதிருமாக இங்கு வலுவாயுள்ளமை கவனிப்புக்குரியது. இந்த இரட்டைத் தேசியத்தைத் தெளிவுபடுத்திய இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையிலிருந்து இதனைப் புரிந்துகொள்ள முயற்சிக்க முடியும்.

## II

அம்பேத்கரின் தலித் இயக்கம், பெரியாரின் திராவிடரியக்கம் என்பவை காங்கிரசின் பிராமணத் தேசியத்தை நிராகரித்து முன்னெடுக்கப்பட்ட எதிர்த்தேசியங்களாகும். இந்த வரலாற்றுச் செல்நெறி இரட்டைத் தேசியக் கோட்பாட்டு அடிப்படையில் புரிந்து கொள்ளப்படவில்லை. சுதந்திரப் போராட்டத்தை அப்படியே ஆதரித்தவர்கள் ஏதோவொரு வகையில் பிராமணத் தேசியத்தை ஏற்பவர்களாய் இருந்தனர். அவர்கள் அம்பேத்கரது தலித் தேசியத்தையோ பெரியாரின் திராவிடர் தேசியத்தையோ விளங்கிக் கொள்ளாமல் அவர்களை வகுப்புவாதிகளாய்க் கணித்தனர்.



ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலைபெறும் ஆதிக்க சாதித்தேசியத்துக்கு எந்தளவு நியாயப்பாடு உள்ளதோ அதேயளவு பண்ணையடிமைத் தனத்தைத் தகர்க்கும் சாதிய எதிர்ப்புச் சார்ந்த அம்பேத்கர், பெரியார் போன்றோரது எதிர்த்தேசியமும் அவசியமானது. அன்று சுதந்திரப் போராட்டத்தின் பேரால் எதிர்த்தேசியத்தை வகுப்புவாதமாயும், ஏகாதிபத்திய சார்புடையதாயும் பார்த்ததில் தவறுண்டு. அதேபோல எதிர்த்தேசிய நிலைப்பாட்டை தவறற்ற முழுச்சரியான ஒரே நிலைப் பாடெனக் கொண்டாடும் இன்றைய தலித் இயக்கங்கள் சுதந்திரப் போராட்டம் முற்றிலும் பிராமண ஆதிக்கத்துக்கேயுரியது எனக்கூறி அதன் வரலாற்றுப் பங்களிப்பை மறுதலிப்பதும் தவறானதாகும்.

ஆயினும் இன்றுவரை இந்திய இயக்கங்களில் பல இரட்டைத் தேசியப் பிளவுடன் கூடிய இரண்டக நிலையுடையனவாயே உள்ளன. அம்பேத்கரோ, பெரியாரோ ஏகாதிபத்திய சக்திகளிடம் விலை போனவர்களல்ல, தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்காக எதிர்த் தேசிய நிலைப்பாட்டில் உறுதியாக நின்று போராடியவர்கள். இன்று உலகமயமாதலின் கையூட்டில் தொண்டுநிறுவனமாக இயங்கித் தீவிர தலித்தியம் பேசும் சிலரோ மக்கள் விடுதலைக்கு விரோதமாக ஒடுக்கப் பட்ட மக்களைத் தனிமைப்படுத்தி என்றென்றும் இழிவுபடுத்தல் களுக்குள் உழல்வதற்கே வழிகோலுகிறார்கள். தலித் மக்களின் விடுதலை இவர்களுக்கு அவசியமில்லை. ஆண்டாண்டுகால அவமதிப் புகளைப் பேசியே இவர்கள் தம் பிழைப்புவாதத்தை முன்னெடுக்க முயல்கிறார் கள். பிராமணியம் மக்களை சாதிகளாய்ப் பிளவுபடுத்திச் சுரண்டலைப் பேண எந்தளவுக்கு முயல்கிறதோ, அதேயளவுக்கு தலித்தியமும் எதிர்த்தளத்தில் இயங்கியவாறு அதே சாதியவாதப் பிளவுபடுத்தல் தவறையே இழைக்கிறது. இது உலகமயமாதலுக்கு ஆட்படும் அம்சமாகும்.

உண்மையில் மார்க்சியம் மட்டுமே சாதியவாதப் பிளவுபடுத்தலுக்கு இடமற்றவகையில் தலித்விடுதலைக்கு ஏற்றதாக அனைத்து சக்தி களையும் அணிதிரட்ட உதவமுடியும். மார்க்சியர்கள் ஏகாதிபத்தியத் தகர்ப்பை அவசியப்படுத்தும் அதேவேளை, பண்ணையடிமைத் தகர்ப்பையும் வலியுறுத்துபவர்களாயே இருப்பர். கம்யூனிசம் இங்கு வேரூன்றும் முன்னரே பாரதியிடம் இரட்டைத் தேசியப் பிளவின்றி இரண்டு விடுதலைக்கூறுகளையும் இணைத்துப் பார்க்க முடிந்தது. முதல் கம்யூனிஸ்ட்டாக விளங்கிய சிங்காரவேலர் தொடர்ந்தும் சாதியத் தகர்ப்பு - ஏகாதிபத்திய ஒழிப்பு - முதலாளித்துவ எதிர்ப்பு என்பவற்றுக்காகக் குரல் கொடுத்திருக்கிறார். இந்தப் பண்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்த இயக்கச் செல்நெறியில் ஆரம்பம் முதலாகவே இருந்துவந்தது. அதன் வெளிப்பாடாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைமையில் அறுபதுகளின் பிற்கூறில் சாதியத்தகர்ப்புப்போராட்டம் முனைப்படைந்தபோது ஒடுக்கப்பட்ட மக்கள் தனிமைப் பட்டிருக்கவில்லை. அனைத்து சாதி யினரையும்

படிப்பகம்

www.padippakam.com



பிராமணர்களைவிடவும் எல்லா அதிகாரங்களையும் கையகப்படுத்தியிருந்த வெள்ளாளர்களில் முற்போக்கு ஜனநாயகப் பண்புடையோரையும் ஐக்கியப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட சாதிய இழிவுகளுக்கு எதிரான அந்தப் போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சியால் வழிநடத்தப்பட்ட காரணத்தால் இரட்டைத்தேசியப் பிளவற்று வெற்றிகளையீட்ட முடிந்தது.

இத்தகைய பரந்துபட்ட ஐக்கிய முன்னணியானது போராட்டக் களமாகிய யாழ்ப்பாணத்தைக் கடந்து முழு இலங்கை சார்ந்த சாத்தியப்பாடுள்ள பல்வேறு சக்திகளையும் அணிதிரட்டுவதாக அமைந்தது. அதே வேளை சர்வதேசத் தள விரிவாக்கத்துடன் உலகளாவிய ஆதரவுப் பலமும் வாய்த்திருந்தது. பீக்கிங் வானொலி வாயிலாக சீனப் பாட்டாளிவர்க்கம் வழங்கிய ஆத்மார்த்த ஆதரவு முதல் பல்வேறு ஊடகங்கள் ஊடாக சர்வதேச விடுதலைச் சக்திகளது ஆதரவு பெறப்பட்டது. அதேபோல சாதியத்தகர்ப்பு போராட்ட முன்னெடுப்பானது வியட்நாம் மக்களது விடுதலைப் போராட்டம் உட்பட்ட பல்வேறு நாடுகளின் உழைக்கும் மக்களுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் பலதரப்பட்ட ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதாயும் அமைந்தது. வெறும் சாதியவாத முடக்கம் இல்லாத இத்தகைய பரந்த தள விரிவாக்கமுடைய போர்க்குணாம்சம் பிளவுபடாத தேசிய மனப்பாங்கு சார்ந்ததாக அமைந்தது.

அப்படியிருக்க இரட்டைத் தேசியப் பண்பு எங்கே வெளிப்பட்டது? இந்தியாவில் ஆளும் சாதித் தேசியம் பிரதான வரலாற்றுப் போக்காக அமைந்த போது அம்பேத்கர், பெரியார் போன்றோரது எதிர்த்தேசியம் உடன்விளைவாக வெளிப்பட்டன. மாறாக இலங்கையில் ஆளும் சாதியத்தேசியமே பிரதான செல்நெறிக்கு எதிரான உடன் விளைவாக வெளிப்பட்டமை கவனிப்புக்குரியது. மேலே குறித்தவாறு யாழ்ப்பாணத்தில் சாதியத் தகர்ப்புப் போராட்டம் முனைப்படைந்தபோது முழுஇலங்கை சார்ந்த பரந்துபட்ட ஐக்கியம் அவசியப்பட்டவகையில் இலங்கைத் தேசியத்தின் பகுதியாகவே அது அமைவது இயல்பாயிருந்தது. எதிர்த் தேசியத்தை முன்னெடுத்த அம்பேத்கர் இந்தியா முழுமையிலுமுள்ள தலித் மக்களின் ஒன்றுபட்ட பலத்தை முன்னிட்டு இந்தியா பிளவுபடும் பிரிவினை வாதத்தை நிராகரித்தார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. அப்போது தீவிரம் பெறத் தொடங்கிய தமிழ்த்தேசியம் முற்போக்குக் குணாம்சமுடையதாயின் அந்த சாதியத்தகர்ப்புப் போராட்டத்தை ஆதரித்திருக்க வேண்டும். மாறாக யாழ்ப்பாண வெள்ளாளத் தேசியமாயே தமிழ்த்தேசியம் முடக்குவாத முற்றிருந்தமையினால் அவ்வாறு ஆதரவு வழங்க முடியாமல் போயிற்று. சாதியத்தகர்ப்பை உள்வாங்கி இலங்கை முழுமையிலுமான உழைக்கும் மக்களது முற்போக்கான போராட்டங்களுடன் கைகோர்க்கும் பரந்துபட்ட சக்திகளுக்கான ஈழத்தமிழ்த் தேசியமாயின் இத்தனை பேரழிவுகளுடன் கழித்தல் பெறுபேறிலான அவல முடிவு நேர்ந்திராது. யாழ் வெள்ளாளத் தேசியம் பிராமணியத்தை விடவும் கேடான அகம்பாவங்களுடன் ஆண்ட பரம்பரைத் திமிர் மேவியதாய் ஆரம்பம் முதலாகவே மக்கள் விடுதலைக்கு விரோதமான போக்குகளுடன் விளங்கியிருந்தது.



மக்களைப் பிளவுபடுத்தும் சாதிய வெறியுடனான மக்கள் விடுதலைப் பண்பற்ற ஈழத்தமிழ்த் தேசியத்தை நிராகரித்து இலங்கைத் தேசியம் பற்றியே தொடர்ந்து கம்யூனிஸ்ட்டுகள் பேசுவதற்கும் இது காரண மாயிற்று. பௌத்த சிங்களப்பேரினவாத அரசாங்கங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட தமிழ் மக்களுக்கு விரோதமான அரசியல் பொருளாதார நடவடிக்கைகளும், புறக்கணிப்புகளும், இராணுவ அழித்தொழிப்புகளும் ஈழத்தமிழ்த் தேசியத்தை யாழ் வெள்ளாளத் தேசியத் தலைமையில் அணிதிரட்டும் துர்ப்பாக்கியம் வீறுபெற்ற பின்னரே கம்யூனிஸ்ட்டுகள் தேசிய இனப்பிரச்சனை குறித்து அக்கறை கொள்ள நேர்ந்தது.

என்னதான் எதிரியால் ஒன்றுகுவிக்கப்பட்ட போதிலும், மிகப் பிரமாண்டமான வளர்ச்சிகள் எட்டப்பட்டபோதிலும் ஆதிக்க சாதித் தேசியம் என்கிற வகையில் ஐக்கியப்படுத்தும் சக்திகள் பற்றிய அக்கறையின்றி அகங்காரத்தோடு முன்னெடுக்கப்பட்ட முப்பது வருட யுத்தம் அவல முடிவை எய்தியுள்ளது. இப்போதும் கடந்தகால அனுபவங்களைக் கற்று முன்னேறும் அக்கறை ஈழத்தமிழ்த் தேசியத்திடம் இல்லை என்பதே பெரும் துன்பியல். ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற புலம்பெயர் தேசங்களில் இருந்தபடி அதே ஏகாதிபத்திய ஒட்டுறவும், ஆண்ட பரம்பரைக் கனவுகளும் மேவியபடி யாழ்வெள்ளாளத் தேசியத் தவறுகளுடனேயே ஈழத்தமிழ்த் தேசியம்.

அதேவேளை ஒடுக்கப்பட்ட மக்களது சாதியத் தகர்ப்பு போராட்ட சக்திகளும் கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்த் தேசிய நிலைப்பாட்டை மேற்கொள்ளாது தமிழினத்தேசியப் போராட்டத்தின் நியாயங்களை ஏற்க முன்வந்தமை கவனிப்புக்குரியது. தொடர்ந்து தேசிய இனப்பிரச்சனை குறித்த கற்றலை விரிவுபடுத்தி சுயநிர்ணய உரிமை குறித்த ஆழ்ந்த அக்கறையை கம்யூனிஸ்ட்டுகள் முன்னெடுத்தனர். இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அதன் பன்மைப் பரிமாணத் தளங்கள் அனைத்தையும் கவனத்திலெடுத்து தீர்வுத்திட்டம் ஒன்றை புதிய ஜனநாயக கட்சியே (முன்னர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி - சீனசார்பு - இடது) முன்வைத்துள்ளது. இனியும் மாறிவரும் சர்வதேச தேசிய நிலைகளை உள்வாங்கி சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பது அவசியமானது. அந்த வகையில் தலித் பிரச்சனை இன்று ஈழத்தமிழ்த் தேசியப் பிரச்சனையில் வலுவான இடத்தைப் பெற்றுள்ளது. சாதியத் தகர்ப்புப் போராட்டத்தினூடாக ஒடுக்கப்பட்ட மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட காரணத்தால் இலங்கையில் தலித்தியவாதம் காலூன்ற முடியவில்லை. முப்பது வருடங்கள் நீடித்த யுத்தம் மற்றும் புலம்பெயர் சூழல் காரணமாக தலித்தியவாதம்

படிப்பகம்

www.padippakam.com



பேசுபொருளாகியுள்ளது. அதன் பிளவுபடுத்தல் பண்பால் பாதிப்புற்று விடாத வகையில் ஒடுக்கப்பட்ட மக்களின் சுயநிர்ணயத்துக்கான வடிவம் கண்டறியப்படுவது அவசியம்.

இன்று இலங்கையின் யுத்த வெற்றியுடன் ஏற்கப்பட்டுள்ள சர்வதேச உறவுநிலை மாற்றம் கவனிப்புக்குரியது. இது குறித்து வி.சிவலிங்கம் முன்வைக்கின்ற கருத்து கவனிப்புக்குரியது. "நாட்டின் அரசியல் சூழல் அண்மைக் காலமாக புதிய மாற்றம் ஒன்றை நோக்கி நகர்ந்தே விட்டுள்ளது. அதாவது அரசியல் கட்டுமானங்களில் ராணுவ ஆதிக்கம் பலமடைந்து வருகிறது. ராணுவ உயர் அதிகாரிகள் அரசியல் பேசும் அளவுக்கு மாற்றங்கள் காணப்படுகின்றன. அத்துடன் ராணுவ அதிகாரிகள் சிவில் அதிகாரிகளின் பதவிகளை நிரப்பி வருகின்றனர். பாதுகாப்பு என்ற அடிப்படையில் சிங்கள பேரினவாத அரசியல் நிகழ்ச்சி நிரல் அரங்கேறி வருகிறது. இதனால் நாட்டின் சிறுபான்மைக் குழுக்கள் அச்சமடைந்துள்ளன. குறிப்பாக விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தது இலங்கை ராணுவம் எனக்குறிப்பிடுவதை விடுத்து சிங்கள பௌத்த இளைஞர்களின் தியாகங்களே நாட்டைக் காப்பாற்றியதாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவது தேசிய வாதத்தின் புதிய பரிமாணத்தை உணர்த்துகிறது. விடுதலைப்புலிகளின் பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததன் மூலம் நாட்டிற்குப் புதிய சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக விபரிக்கப்படுகிறது. இப்போக்குகள் உள்நாட்டு அரசியலில் மட்டுமல்ல வெளிநாட்டு அரசியலிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மேற்கு நாடுகளின் பிடியிலிருந்து விலகிச் செல்வதாகக் காட்டும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்குலக நாடுகள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுத்தமை, ஐரோப்பிய யூனியன் சந்தை வசதிகளை சலுகை அடிப்ப டையில் பயன்படுத்தும் ஏற்பாடுகளுக்கு தடையாக இருந்தமை, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதிய உதவிகளைத் தாமதப்படுத்தல் என்பன இலங்கையின் மேற்குலக போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை உறுதி செய்கின்றன. அதுமட்டுமல்லாது சமீபகாலமாக இலங்கை அரசு நட்பு பாராட்டும் அரசுகள் மனித உரிமை மீறல்களுக்கு மிகவும் பேர்போன அரசுகளாகும். ஈரான், லிபியா, பாகிஸ்தான், சீனா, பர்மா போன்ற நாடுகளோடு இலங்கையின் உறவுகளும், கூட்டுகளும் ஓர் ஆரோக்கியமான உறவுகளாக கருத முடியவில்லை என்பார் வி. சிவலிங்கம், (வி. சிவலிங்கம் "இலங்கை அரசியல், தேசிய வாதங்களும் அதன் தோல்விகளும்". எதுவரை, செப்டெம்பர் - அக்டோபர் 2009.)

இங்கு காட்டப்பட்டுள்ள நீண்ட பகுதியில் மட்டுமின்றி கட்டுரை முழுமையிலும் இலங்கையின் ஈழத்தமிழினத் தேசியப் பிரச்சனையில் இந்தியாவின் பங்கு குறித்து எதுவுமே பேசப்படவில்லை. இலங்கை யினுள் முஸ்லீம், மலையக மக்கள் உள்ளிட்ட பிரச்சனைகளின் பன்மைத்துவத்தைக் கவனத்திலெடுத்துப் பேசும் கட்டுரை அதன்



இன்னொரு பரிமாணமாகிய இந்தியாவின் தொடர்பைக் காணத் தவறுவது தற்செயலானதல்ல. பெரும்பாலும் பலரும் இது போல முக்கிய அம்சங்களைத் தவறவிட்டு வேறுவிடயங்களில் மிக ஆழமாகவே சென்று நுண்ணாய்வுகள் நிகழ்த்துகின்றனர். இலங்கை யினுள் என்னதான் நுட்பமான புரிதலுடன் தீர்வுகள் முன்னெடுக்கப் பட்டாலும் இயலாவகையில் தடையேற்படுத்தும் அம்சமாக சர்வதேச உறவுத்தளம் அமைந்துள்ளது. மேலைத்தேச ஏகாதிபத்தியப் பிடியி லிருந்து இலங்கை மீள்வதும், ஜனநாயகப் பண்பற்ற நாடுகளோடான அதன் உறவாடல் என்பதும் வெறும் மாயத்தோற்றமே. இலங்கையைத் தன் வழிக்குக் கொண்டுவர மேலைநாடுகளின் ஏகாதிபத்திய சக்திகள் மனித உரிமை ஆயுதத்தை கையாள்கிறபோது இலங்கையின் நாட்டம் இவ்வகையில் அமைகிறது. அதற்காக மிகுந்த சுயாதிபத்தியத்துடன் அது இயங்குவதாகப் பொருளில்லை. ஈழத்தமிழ்த் தேசியம் இன்று மேலைத்தேச ஏகாதிபத்தியத்தின் செல்லப் பிள்ளையாகக் குழைகிறது. இந்தச் செல்லப்பிள்ளையை வைத்து ஊடுருவ அதற்கு உள்ள பல வழிகளில் ஒன்றே மனித உரிமை மீதான அக்கறை.

இலங்கை அரசு முழு இறைமையுடன் மனித உரிமை மீறல்களை யுடைய நாடுகளுடன் உறவாடவில்லை. அதனைத் தனது கட்டுப் பாட்டுக்குள் பூரணமாகக் கொண்டுவந்துவிட்ட இந்தியாவின் ஆணை களுக்குப் பணிந்தபடியே இலங்கையின் எத்தகைய தொடர் பாடலும் அமைய முடியும். யுத்தத்தை இந்தியாவே வெற்றியீட்டித் தந்தது, அக்காரணத்தால் இந்தியா சொல்கிற எதையும் செய்ய வேண்டியேயுள் ளது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறியுள்ளமை கவனிப்புக் குரியது. இத்தகைய நிலைக்கு இலங்கையை ஆட்படுத்த இந்தியா மிகப்பெரும் விலை கொடுக்க வேண்டியிருந்தது. பல்வேறு தந்தி ரோபாயங்களைப் பொறுமையாக முன்னெடுக்க வேண்டியிருந்தது. பல்லாயிரம் உயிர்கள் பலியிடப்படுவது குறித்துக் கவலை கொள்ளாமல் காந்தீயத்தை கடைவீதியில் விட்டுவைத்துக் கடைகோடி இராஜதந்திரங் கள் மேற்கொள்ளப்பட்டன.

அமெரிக்கா - ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய சக்திகளின் வேட்டைக்காடாக இலங்கையை மாற்றுவதற்கு 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா முனைந்தபோது இந்தியாவின் எடுப்பார் கைப்பிள்ளையாக ஈழத்தமிழ்த் தேசியம் இருந்தது. "எங்கள் பையன்கள்" வாயிலாக (இப்படியாக அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி பாராளுமன்றத்தில் சொன்னபோது ஈழப்பத்திரிகைகள் எல்லாம் என்னமாய்ப் புளகாங்கிதமடைந்தன!) இலங்கை அரசு வழிக்குக் கொண்டுவரப்பட்டபோது ஈழப்போராளிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே எந்தப் பேச்சுவார்த்தைக்கும் இடம்வைக்கப் படவில்லை. இலங்கை - இந்திய (ஜே.ஆர்-ரஜீவ்) ஒப்பந்தம் வாயிலாக இலங்கை பூரணமாக இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் 1987ல் கொண்டுவரப்பட்டது. ஆயினும் சிங்கள மக்களிடம் இந்திய ஆதிக்கத்துக்கு எதிரான உணர்வுகள் இருந்தன. இனி இரண்டாவது

படிப்பகம்

www.padippakam.com



காண்டம்; பிந்திய இருபது வருட யுத்தத்தில் புலி மிக மிகப் பிரமாண்டமான சக்தியாக வளர்வதை இந்தியா கண்டுகொள்ளாமல் விட்டது. சிங்களக் கிராமங்களில் புகுந்து தாக்குவது, நகரங்களில் குண்டு வெடிப்பு, தொடர்யுத்தத்தில் சிங்கள இளைஞர் பல நூற்றுக் கணக்கில் மடிந்துகொண்டிருத்தல், இவைசார்ந்து நீடிக்கும் சிங்களப் பண்பாட்டு சிதைவுகள் எனத்தாங்கமுடியாத வேதனையின் உச்சத்தில் சிங்களப் பேரினவாதம் இந்தியாவிடம் தனது இறைமையைத் தாரை வார்த்து இன்று யுத்தத்தில் வெற்றியீட்டியுள்ளது.

இன்று இந்திய எதிர்ப்புப்பேச சிங்கள மக்கள் மத்தியில் சின்னஞ்சிறிய சக்திகூட எதுவுமில்லை. அப்படியொரு பூரண சரணாகதி. ஜனாதிபதி இனப்பிரச்சனைத் தீர்வுக்கு 13வது திருத்தச் சட்டம் என்று எதற்கும் உதவாத ஒரு சரக்கைப்பற்றி பேசியபோது, முன்னர் (1987-1989இல்) தீவிர இந்திய எதிர்ப்புப் போராட்டங்களை நடத்திய ஜே.வி.பி. ஒரு சுவ ரொட்டி இயக்கத்தை செய்துவிட்டு மௌனங்காத்தது. "இந்தியாவின் ஆணைக்குப் பணிந்து 13வது திருத்தத்தை அமுல்படுத் தாதே" என்ற வீரவசனம் மட்டும் சுவரொட்டியில் இருந்தது. மற்ற எல்லாவற்றிலும் இந்திய ஆணைக்கு இலங்கை கட்டுப்பட்டுக் கிடப்பதைத் தீவிர அரசி யல் ஞானம் பெற்ற அவர்கள் காணவில்லை யாம். இப்படிக் கண்டு கொள்ளாமல் இருந்தபடி அற்பவிடய மொன்றை பூதாகாரப்படுத்திப் பூச்சாண்டி காட்டி சிங்கள மக்களை ஏமாற்றுவதற்கு எவ்வளவு வாங்கியிருப்பார்களோ! ஆக, ஈழத்தமிழ்த் தேசியத்தை முறியடித்துக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு சிங்களப் பேரினவாதம் சிங்கள மக்களின் இறைமையைத் தாரைவார்த்துவிட வேண்டிய கையறு நிலை.

## III

என்ன நடந்துவிட்டது? நாம் சிறிய அடையாளங்களுக்குமான கவன ஈர்ப்பை அக்கறையோடு விவாதித்துக்கொண்டிருக்க, பெருங் கதையாடலுக்கான அரங்கு உலக மேலாதிக்க - பிராந்திய மேலாதிக்க சக்திகளால் புரட்டிப் போடப்பட்டுள்ளது. வைத்தால் கூந்தல், அடித்தால் மொட்டை என்று இருந்துவிட முடியாது. இருபக்கங்கள் மீதுமான அக்கறை அவசியம்.

எந்தவொரு போக்கிலும், விடயத்திலும் இரு அம்சங்கள் உள்ளன. ஒன்றைக் கவனித்து மற்றதைத் தவிர்ப்பின் நாம் காண விரும்பிய பெறுபேறன்றித் தீமையே வந்தமையும். தலித் பிரச்சனையில் பின்நவீனத்துவ நிலைப்பாட்டுடன் கவனயீர்ப்பை மேற்கொண்ட போது சோஷலிஸத்துக்கான பெருங்கதையாடல் வேண்டியதில்லை எனப்பட்டது. தலித்தியவாதத்தை உலகமயமாதல் பிளவுபடுத்தல் தந்திரோபாயப்படி மக்கள் விரோத நிலைப்பாட்டிலேயே கையாண் டுள்ளது. அவ்வாறே இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையும் மேலாதிக்க சக்திகள் உத்தரவின்றி உள் வரக் கையாளப்படும் அற்ப விவகாரம் ஆக்கப்பட்டுள்ளது.



மகத்தான ஒக்ரோபர் 1917 புரட்சி வாயிலாக சோவியத் ருஷ்யா உருவானபோது தேசியப் பிரச்சனை சோஷலிஸத்தின் பகுதியாக ஆனது. இன்று அவ்வாறில்லை. மேலாதிக்க சக்திகள் விளையாடும் வேட்டைக்காடாக தேசிய இனப்பிரச்சனை மாறியுள்ளது.

இத்தகைய மாற்றச் சூழலில் பின் நவீனத்துவக் கேடுகெட்ட பெருங் கதையாடல் - அடையாள அரசியல் என்பனவல்ல பேசுபொருட்கள். மக்கள் விடுதலையை நாடும் சக்திகள் சமூக மாற்றத்துக்கான வடிவங்களைத் தேடுகின்ற அதே வேளை ஒவ்வொரு பிரிவினரது சுயநிர்ணயத்தைப் பேண ஏற்ற வழிமுறைகளைக் கண்டடைவதும் அவசியம். மார்க்சிய உலகநோக்கு வழி இயங்கியல் பொருள் முதல்வாத அணுகு முறையில் இவை குறித்த தேடலுக்கான அக்கறை வளர்க்கப் படாமல் இன்னமும் அற்ப விவகாரங்களையே பூதாகாரப்படுத்திக் கொண்டி ருப்போமாயின், ஆதிக்கசக்திகளே ஆதாயங்களைப் பெருக்கிக்கொண்டு போவர்.

இயக்கப் போக்கொன்றில் சரியான இயங்கியல் அணுகுமுறையைக் கையாளும்போது தீய அம்சத்தையும் நல்ல அம்சமாக மாற்ற முடியும்; பின் நவீனத்துவம் பல கேடுகளை விளைத்த போதிலும் சாதிமுறை குறித்த ஆழமான கற்றலுக்கு அதுவே வழிவகுத்துத் தந்தது.

இதன் பேறாக நாம் வந்தடைந்துள்ள ஒரு முடிவு மிக மிக அடிப் படைப் பண்பு வேறுபாடு சார்ந்த ஒன்று. இதனைக் கவனத்திற் கொள் ளாமல் நமது சமூக மாற்றத்துக்கான மார்க்கத்தையோ வழி முறைக்கான தந்திரோபாயங்களையோ கண்டடைய முடியாது. ஆம், நமது சமூக அடிப்படை வர்க்கப் பிளவடைந்த ஏற்றத்தாழ்வைப் பெற்றில்லை, இனக்குழு மேலாதிக்க ஒடுக்கு முறையுடைய சாதியச் சமூகம் எனும் அடிப்படைப் பண்பு வேறுபாட்டைக் கொண்டுள்ளது.

ஐரோப்பிய வர்க்க முறையை அப்படியே பிரயோகிக்க முனைந்தது தோல்வியடைந்ததைப் போன்றே, சாதிச்சமூகம் என்பதற்காக தலித்தியவாதத்தைப் பிரயோகித்தமையும் தோல்வியையே தழுவி யுள்ளது. மார்க்ஸ், லெனின் ஆகியோரது எழுத்துக்களுள் முடங்கி விடாமல் அவற்றினூடே மார்க்சிய லெனினியச் சிந்தனை முறையைக் கற்றுக்கொண்டு நமது சாதியச் சமூகத்துக்கு அமைவாகப் பிரயோகிப்பது அவசியம். அந்தவகையிலும், சாதியத்தகர்ப்பின் பொருட்டும், உழைக்கும் மக்களாகவே மிகப் பெரும்பான்மையினரான தலித் மக்கள் உள்ளமையினாலும் மார்க்சிய அடிப்படையில் தலித் பிரச்சனை அணுகப்படுவது அதிக முக்கியத்துவமுடைய ஒன்றாகி யுள்ளது. அதேவேளை பல்வேறு சாதிப்பிரிவினரும் பாட்டாளி வர்க்கமாக உள்ள காரணத்தாலும், ஏற்றத்தாழ்வைத் தகர்த்து சமத்துவ சமூகம் படைப்பதும் சாதிபேதங்களை ஒழிப்பதும் அதனூடாக மட்டுமே சாத்தியப்படும் என்பதாலும் மார்க்சிய லெனினியக் கற்றலை புதிய நோக்கில் ஆழப்படுத்துவது அவசியமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவம் அனைத்து சாதிகளுக்குள்ளும் பல்வேறு வர்க்கப் பிரிவைச் சாத்தியப்படுத்திவிட்டது என்பது முழு உண்மையில்லை என்பது இன்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் டாலர் பில்லியனர்களில் 5 அல்லது 6 பேரைத் தவிர ஏனைய அனைவரும் பார்ப்பன, பனியா, தாக்கூர் சாதியினர். அதாவது மக்கட் தொகையில் 10% க்கும் குறைவாகவுள்ள பார்ப்பன, பனியா, தாக்கூர் இந்திய ஆளும் வர்க்கத்தின் 90%; மக்கட் தொகையில் 90% ஆன தலித்துகளும் பிற்படுத்தப்பட்ட சாதியினரும் மதச் சிறுபான்மையினரும் 10% க்கும் குறைவு எனக்கூறும் ப.கு.ராஜன், தொடர்ந்து இப்படிச்சொல்வார்: “இந்தப் புள்ளி விவரங்களைத் தொடரலாம், காவல்துறை, நீதி மன்றங்கள், ஊடகங்கள், உயர்கல்வி ஆசிரியர்கள் என எல்லாவற்றிலும் இதுதான் நிலை. இத்தோடு மதம் மற்றும் மதத் தலைமை என்பதையும் கணக்கில் கொண்டால் சித்திரம் முழுமையடையும். அது என்ன? இந்தியாவின் ஆளும் வர்க்கமும் ஆதிக்க சாதியும் ஒன்றுதான், வேறு வேறு அல்ல. ஒரே கட்டமைப்பின் இருவேறு பக்கவாட்டுத் தோற்றம்தான். ஒன்றுக்கெதிரான போராட்டம் தவிர்க்க வொண்ணாத வகையில் மற்றதற்கும் எதிரான போராட்டம்தான். உயர் சாதிகளைச் சேர்ந்தவர்களும் இந்தப் போராட்டத்தில் வருகிறார்களே, அவர்களுக்கு என்ன பதில்? அவர்கள் புரிந்துகொள்வார்கள். பாட்டாளிவர்க்க விடுதலைக்கு மார்க்சும் ஏங்கெல்சும் லெனினும் போராடியது அவர்கள்பால் கொண்ட அனுதாபத்தால் அல்ல. பாட்டாளிவர்க்க விடுதலையில் தான் சகல பிறவர்க்கங்களின் விடுதலையும் அடங்கியுள்ளது என்பதால்தான். இதனைப்புரிந்து கொண்டு நம்மோடு இருந்து பணிபுரியும் பிற வர்க்கத்து தோழர்கள் இல்லையா? அதேபோல எல்லா சாதிகளையும் சேர்ந்த எல்லா மக்களின் விடுதலையும் சாதி அடுக்கின் அடிமட்டத்தில் உள்ள தலித்களின் விடுதலையில்தான் உள்ளது என்பதை அவர்களில் பெரும் பகுதி புரிந்து கொள்வார்கள். பிற்படுத்தப்பட்ட மக்கள் பகுதியிலும் பெரும் பகுதி புரிந்து கொள்வார்கள். புரியச் செய்ய வேண்டியது பெரும் பணிதான். ஆனால் ஒரு சிறுபகுதி புரிந்துகொள்ளவில்லை என்றால் கவலைப்பட வேண்டியதில்லை. இவர்களை உத்தேசித்து சொல்ல வேண்டியதைச் சொல்லாது மென்றுவிழுங்கினால் பெரும்பகுதி தலித், பிற்படுத்தப் பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறுவது இயலாது (ப.கு. ராஜன், “சாதியும் வர்க்கமும்”, **புதுவிசை** இதழ் 21, ஜூலை - செப்டெம்பர் 2008. பக்,43 மற்றும் 49)

அந்தக் கட்டுரை முழுமையும் மிகுந்த முக்கியத்துவம் மிக்க விடயங் களைப் பேசுகிறவகையில் ஆழ்ந்த கற்றலுக்குரியது. ஆயினும், இங்கு காட்டப்பட்டுள்ள பகுதியில் வெளிப்படுமாறு உள்ள ஒரு விடயம் குறித்து எச்சரிக்கை உணர்வு அவசியமாகும். தலித் மற்றும் பிற்படுத்தப் பட்ட மக்கள் சமன் பாட்டாளி வர்க்கம் என்ற தொனி இங்கு மேலோங்குவதைக் காணலாம். இந்த மக்கள் பிரிவினரே பாட்டாளி வர்க்கத்தை மிகமிகப் பெரும்பான்மையினராய்க் கொண்டுள்ளனர்



என்ற போதிலும், சாதித்தளம் சார்ந்ததாகப் புரட்சிகரச் சக்தியை இனங்காண்பது சரியல்ல. மார்க்சிய வடிவிலான பாட்டாளிவர்க்கச் சிந்தனை முறை என்பது மனித குலம் ஏற்றத்தாழ்வைத் தகர்த்தெறியக் கண்டறிந்த உன்னதமான சிந்தனை முறையாகும். இன்று உலக மயமாதல் பாட்டாளிவர்க்கத்தை இழப்பதற்கு எதுவுமற்றவர்க்கம் எனும் நிலையிலிருந்து சிதைத்துப் போர்க்குணத்தை மழுங்கடிக்க சதிகள் பல செய்திருக்கலாம். உழைக்கும் மக்களும் சமூக மாற்றத்தை விரும்புவோரும் பாட்டாளிவர்க்கச் சிந்தனை முறையை வரிப்பதனால் மட்டுமே சமத்துவ சமூகத்தை வென்றெடுக்க முடியும் என்பது கவனிப்புக்குரியது. மாறாக சாதித்தளத்தை புரட்சிக்குரியதாக கருதும் போது, சமூக மாற்றத்தை எட்ட முடியாத தடை அங்கே இருப்பதைக் காணலாம். வெற்றிபெறும் சாதி தனது நோக்கிலான மாற்றத்தை எட்ட முனையும் பட்சத்தில் பழிவாங்கல்களுக்கான வாய்ப்பும் தமது நலன்களைப் பெருக்க முனையும் என்பதும் நிராகரிக்க முடியாதது. பாட்டாளிவர்க்க நிலைப்பாடு என்பது பாட்டாளிவர்க்கம் எந்தச் சொத்தும் அற்றது என்கிற வகையில் வர்க்க ஒழிப்பில் மட்டுமே தனது விமோசனத்தை எட்டக்கூடிய வாழ்முறை உடையது என்ற வகையிலேயே புரட்சிகரச் சக்தியாய்க் கணிக்கப்பட்டது. மாற்றத்தை விரும்பும் வாழ்முறையுடைய தலித் - பிற்படுத்தப்பட்ட சாதியினர் தமது சாதியுணர்வையும் களைந்தெறியும் பண்பாட்டுப் புரட்சியை முதலில் தமக்குள் நிகழ்த்தியாக வேண்டும். எமக்கான சமூக மாற்றவடிவமே சாதியம் காரணமாய்ப் பண்பாட்டுப் புரட்சிதான் என்பதும் கவனிப்புக் குரியது. அனைத்துச் சாதியினரதும் சாதியபிமானங்களை விட்டொழிப் பதற்கான பண்பாட்டுப் புரட்சி வடிவம் கண்டடையப்பட வேண்டும்.

## IV

இனக்குழு வாழ்முறை தகர்வுறாமலே சுரண்டல் அமைப்புக்குரிய வகையில் சாதிகளாக்கப்பட்டுள்ளது என்கிற வகையில் நமது சிந்தனைகள், வழக்காறுகள், பண்பாட்டுக் கோலங்களில் இனக்குழுப் பண்புகள் விரவிக் காணப்படுகின்றன. இதன் பேறாக புதிய வர்க்க உறவு சார்ந்த சமூக மாற்றத்தை எட்டுவதற்கு முன் தேவையாக பண்பாட்டுப்புரட்சியை முன்னெடுக்க வேண்டியுள்ளது. கிரேக்க ரோம் அடிமைப்புரட்சி, பிரான்சிய முதலாளித்துவப் புரட்சிபோல இங்கு ஏற்படவில்லை என்பதால் சமூக மாற்றங்களே இங்கு ஏற்படவில்லை என்பது பொருளல்ல. பௌத்தத்தினூடாக நிகழ்ந்தேறிய பண்பாட்டுப் புரட்சியின் பேறான வணிக எழுச்சி குறித்து எம்.என்.ராய் பேசியுள்ளார். பக்திப் பேரியக்கம் நிலவுடைமை அதிகாரத்துக்கு வழிகோலியதை கைலாசபதி காட்டியுள்ளார். சுதந்திரப் போராட்டத்தில் காந்தி அரசியல் அதனிலும் அறம் ஓங்கும் வகையில் ஆன்மீகப் புரட்சியை இணைத்தது குறித்துப் பலரும் பேசியுள்ளனர்.

ஆக, நமது சமத்துவ சமூகத்தை வெற்றி கொள்ளும் புரட்சியின் வடிவத்தில் பண்பாட்டு இயக்க வேலை முறையொன்றை வகுப்பது

படிப்பகம்

www.padippakam.com



இயங்காற்றல் மிக்க சக்திகளது தேடலுக்குரியதாகும். ஏற்கனவே சமூக மாற்றத்தில் நமக்கான பாதை பண்பாட்டுப் புரட்சி சார்ந்தது என்பது குறித்து நிறைய எழுதப்பட்டுள்ளது. தவிர, நடைமுறைப் பிரயோகம் வாயிலாக கண்டறியும்போது மட்டுமே எதுவும் முழுமை பெற முடியும். சும்மா பேசிப் பேசிப் பயனேதும் இல்லை. செய்தாக வேண்டும், இல்லையெனில் செத்தொழிந்து போவோம்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் (திருக்குறள்.466)

**பிற்குறிப்பு:**

இந்தக் கட்டுரையைப் படித்து முடிக்கிறபோது அடிப்படையான சில விஷயங்கள் போதியளவுக்கு விவாதிக்கப்படவில்லை என்ற குறைபாடு எழுவதற்கு இடமுண்டு. இன்றைய சூழலில் சுயநிர்ணயத்தை எவ்வாறு வரையறை செய்வது? இலங்கையில் முப்பது வருடங்களாக ஆயுதமேந்திப் போராடிய ஈழத்தமிழினத் தேசியத்தின் தீர்வுடன் முஸ்லிம் மலையகத் தமிழ் மக்களது தீர்வுக்கான வடிவம் எது, எவ்வாறு அதனை வென்றெடுப்பது? சாதித்தேசியம் தனது சுயநிர்ணயத்தை எவ்வகையில் வடிவப்படுத்தவும் வென்றெடுக்கவும் இயலும்? பண்பாட்டுப் புரட்சிக்கான வேலைத்திட்டம் எத்தகையது?

இவை விவாதிக்கப்படவேண்டியன எனும் அருட்டுணர்வை ஏற்படுத்த முடிந்திருந்தாலே இக்கட்டுரை தனது பணியைப் பெரும் பகுதி நிறைவு செய்துள்ளது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கட்டுரையை நீட்டிமுழக்க வேண்டாம் என்ற எச்சரிக்கையுடன், இத்தகைய ஒரு களத்திலேயே எல்லாத் தீர்வுகளையும் கண்ட டைந்துவிட முடியாது என்ற எல்லைப்பாட்டையும் புரிந்துகொண்ட காரணத்தால் இவ்வகையாக அமைந்துள்ளது கட்டுரை. இயங்கும் பலதரப்பட்ட சக்திகளும், தலைமைப் பாத்திரத்தை வழங்கவேண்டிய பாட்டாளிவர்க்கக் கட்சிகளும் பரந்தமனப்பாங்குடன் கூட்டு விவாதங்களை நடாத்தி இவற்றை வடிவப்படுத்த வேண்டும்.

“தமிழீழ மக்கள், தமக்கான நேச சக்திகளை தமிழகத்திலும் கொஸோவோவிலும் தேடுவதற்கு முன் சிங்கள, முஸ்லிம் உழைக்கும் மக்களிடையே தேட முயல வேண்டும். ஒடுக்கப்படும் விடுதலைக்கான குறுக்கு வழி ஏதும் இல்லை. பெரிய அண்ணன்களை நாடுவது புதிய அடிமைத்தனத்துக்கு கொண்டு சென்றுவிடும்” என்பார் எஸ்.வி.ராஜ துரை. (எஸ்.வி.ராஜதுரை, “ஒரு மைய உலகமும் தேசிய இனவிடுதலை யும்” ***எதுவரை?*** *செப்டெம்பர் - அக்டோபர், 2009. ப.40*). பெரிய அண்ணன்களுக்கு உதவியாக இருந்து ஐந்தாம் படை நிலைப்பாட்டிலே காட்டிக்கொடுப்பு வேலையைச் செய்வதனூடாக வெற்றிபெறலாம் எனும் நினைப்போடு ஈழத்தமிழ்த் தேசியம் ஆரம்பம் முதல் முழுத் தோல்வியைக் கண்டவரையில் இருந்தமையைக் காட்டி யிருந்தோம், இன்றும் அதே வாய்ப்புகளை நாடியபடி தான்.



இந்த இருப்பினை சிங்கள மக்கள் புரிந்துகொண்டு தீர்வின் அவசியத்தை வலியுறுத்துவதாயும் இல்லை. அவ்வாறு மக்களைச் சிந்திக்கத் தூண்டவல்ல சக்திகள் சிங்களப் பேரினவாதத்தால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டார்கள். அந்நியர்களாய் நாட்டினுள் வந்து குடியேறி, இன்றும் அந்நிய ஊடுருவல்களுக்கு வழிகோலுபவர்கள் என்று சிறு தேசிய இனங்களைச் சிங்கள மக்கள் பார்க்கும் வகையில் ஊடகங்கள் செயற்படுகின்றன. உண்மையில் எதிர்நோக்கும் தேசிய இனப்பிரச்சனை அவர்களுக்குப் போதியளவு புரிய வைக்கப்பட வில்லை. அந்தவகையில் இதுவரை வடிவப்படுத்தப்பட்ட தீர்வுத் திட்டங்களைவிட அனைத்து தரப்பையும் உள்ளடக்கும் விரிந்த தளத்திலான விவாதங்கள் ஊடாகவே சரியான தீர்வுத் திட்டத்தை கண்டடையவும் செயற்படுத்தவும் முடியும்.

இலங்கையில் முஸ்லிம் மக்களும் மலையகத் தமிழர்களும் சிங்கள மற்றும் இலங்கைத்தமிழ் மக்கள் மத்தியில் சிதறி வாழ்கின்றனர். அவ்வகையில் அவர்களுக்கான சுயநிர்ணயம் உள் சுயாட்சி அமைப்பு முறை வாயிலாக தீர்க்கப்படவேண்டும். இதுபற்றிய விவாதங்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. ஏற்கப்படும் வகையில் சரியான வரையறை எட்டப்படவில்லை.

பொதுப்பிரச்சனைகள், ஒத்த பண்பாட்டுக் கூறுகள், வரலாற்றுச் செல்நெறி, ஒடுக்குமுறைக்கு உள்ளாதல் எனும் அம்சங்களை யுடையவை தேசம் என வரையறுக்கப்பட்டு, அவை தமக்கான சுயநிர்ணயத்தை தாமே வரையறுப்பதற்கு உரிமையுடையவர்கள் என்பது இன்று சர்வதேச அளவில் ஏற்கப்படுகின்றது. அந்தவகையில் ஒரே நிலத்தொடர்பு இல்லாதபோதிலும் உள் சுயாட்சி வடிவில் தீர்வை அவர்கள் பெற இயலுமாகியுள்ளது. பல நாடுகளில் செயற் படுத்தப்பட்டு வெற்றிகரமாக இயங்குவதனையும் காணமுடிகிறது.

சாதித் தேசம் என்பதும் இலங்கையின் முஸ்லிம் - மலையகத் தமிழர் அளவுக்கு இல்லையெனினும், தமக்கான சுயநிர்ணயத்தை வரையறுக்க அவசியமுள்ள மக்கள் பிரிவினர் என்பதை இனியும் மறுக்க முடியாது. அம்பேத்கர் இரட்டை வாக்குரிமைக்கோரிக்கைக்காகப் போராடியது முதல் இன்று பல்வேறு சக்திகள் வரையும் சாதித்தேசியத்தின் சுயநிர்ணயத்தைக் கண்டடையும் முயற்சிகளையே மேற்கொண்டு வருகின்றனர். இலங்கையில் ஒடுக்கப்பட்ட மக்கள் மிகுந்த ஆளுமை யுடன் புத்துலகத்துக்கு தலைமையேற்கும் வீறுடன் போராடியதால் சாதிசார்ந்த தனியான தீர்வுத்திட்டம் எதுவும் அன்று முன்வைக்கப் பட்டதில்லை. அந்த மக்களது தலைமைப் பண்பு குறித்த புரிதல் இல்லாமல் உயர்சாதிச் சதியென அதனைக் கொச்சைப்படுத்துவது புலம்பெயர் தலித்தியச்சிந்தனையாளர்களது அறியாமைதான். இன்று அவர்கள் விவாதத்துக்கு உள்ளாக்கும் அனைத்து விஷயங்களை அதற்காக நிராகரித்துவிட முடியாது. இன்று யதார்த்தமாகியுள்ள மேலாதிக்க சக்திகளின் ஊடுருவல்களுக்குக் காட்டிக்கொடுப்பதாக

படிப்பகம்

www.padippakam.com



அல்லாமல், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளின் தீர்வுக்கான தேடல் எனும் அடிப்படையில் ஆரோக்கியமான விவாதங்களை முன்னெடுப்போம்.

விவாதக் களங்களைக் கண்டடைவது, தீர்வு முயற்சிக்கு ஏற்ற வகையில் மக்களை வீதிக்கு கொண்டுவருவது, தோல்விகளால் முடங்கிய உளச்சிக்கல்களை நிவர்த்திப்பதற்கான வெகுஜனப் பங்கேற்பு களங்களை ஏற்படுத்துவது என்பவை வாயிலாக பண்பாட்டு இயக்கக் களங்கள் சாத்தியமாகும். பண்பாட்டுப் புரட்சி வடிவம் அதன் செல்நெறி மூலமாகவே கண்டடையப்படும். இன்னமும் இவைகுறித்து உரையாட நிறையவே உண்டு, நீங்களும் பேசுங்கள்.

**படிக்க வேண்டிய நூல்கள் :**


1. அம்பேத்கர், **டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்: பேச்சும் எழுத்தும்,** நூல் தொகுப்பு. தொகுதி 9. நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.1999.
2. இந்திர பாலா. கா, **இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு (பொ.ஆ.மு.300 - பொ.ஆ.1200).** குமரன் புத்தக இல்லம், சென்னை / கொழும்பு. 2006.
3. கங்காதரன்.கே, **யார் அந்த பஞ்சமர்? ஒரு தொலைந்த உலகு.** கலைவாணி பதிப்பகம், சென்னை. 2009.
4. கேசவன்.கோ, **சாதியம்,** சரவணபாலு பதிப்பகம், விழுப்புரம். 1995.
5. ராஜ்மௌதமன், **பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்.** தமிழினி, சென்னை.2006.


**- புதுவிசை**
**இதழ் 28.**
**ஏப்ரல் - ஜுன் 2010.**



# 7

# மார்க்சியப் பிரயோகத்தில் தேசம் சாதி பண்பாடு

## 1.தேசியம் பற்றிய மார்க்சியக் கேட்பாடு

இன்று இலங்கை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சனை, தேசிய இனங்களின் சுயநிர்ணயம் எவ்வாறு வென்றெடுக்கப்படலாம் என்பது தொடர்பிலானது. அதற்கான கவன ஈர்ப்பின்றி அரசு திசை திருப்பும் முயற்சிகளில் இறங்கியுள்ளமை தெளிவு. முன்னெடுக்கப்பட்ட பிரிவினை யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமையினால் இனிமேல் இனப்பிரச்சனை எழ இடமில்லை எனக் கருதுவர். தமிழ் மக்களை மிகப்பெரும்பான்மையாக கொண்டிருந்த கிழக்கினைத் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சமஅளவில் வாழும் விகிதாசாரத்துக்கு மாற்றிவிட்டதைப் போல வடக்கிலும் திட்டமிட்ட குடியேற்றங்களால் தமிழ்ப்பெரும்பான்மை எனும் அடையாளம் அற்றதாக்க முடியும் என்று நம்புகின்றனர். இந்த மண்ணில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய தெளிவின்றி, அதற்கான தீர்வுக்கு ஏற்ற கோரிக்கைகளையும் போராட்ட மார்க்கங்களையும் வகுக்காமல் அவ்வப்போதைய தமது இருப்பை உறுதிப்படுத்த எடுத்த முயற்சிகளே கடந்த காலத் தமிழ்த் தேசியத் தலைமைகளுக்குரியன என்ற காரணத்தால் இன்றைய அவல நிலை; இன்றும் நாடு கடந்த ஈழம் என்ற வெற்றுக் கனவு மேலோங்கி வரும் சூழலில் வடக்கையும் இழப்பது தவிர்க்கவியலாததே எனும் நிலையே ஏற்படுத்தப்படுகின்றது. அரசும் நாடு கடந்த ஈழப் பூச்சாண்டியைக் காட்டிக் கொண்டு அவசர கால நிலையை நீடித்தபடி தனது திட்டங்களை ஈடேற்றும் முனைப்பில். தமிழ்த் தேசியர்கள் இழைக்கும் தவறுகள் இவ்வகையில் பாதகங்களை வளர்க்கும் என ஆரூடம் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இந்த மண்ணில் வாழும் உழைக்கும் மக்களின் விடுதலை நோக்கில், இனப் பிரச்சினைக்கான தீர்வை வென்றெடுக்கும் மார்க்கத்தைக் கண்டடைவது இடதுசாரிகளது கடமை. அதனைக் கண்டறிந்து செயற்பாட்டுக் களம் விரிவாக்கப்படும்போது மட்டுமே தமிழ்த் தேசியர்களின் கபடத்தனங்களை முறியடித்து மக்களை சாத்தியப்படும் உண்மையான விடுதலை மார்க்கத்தில் அணிதிரட்டி முன்னேற இயலுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



அத்தகையதான அனைத்து வழிமுறைகளையும் தேடும் முயற்சியில் ஈடுபடும் அவகாசம் இங்கு இல்லை. அதற்கு உதவும் வகையில் எமது தேசிய இனப்பிரச்சனையின் அனைத்துப் பரிமாணங்களையும் அலச உதவும் ஓர் இடம் குறித்த அறிமுகத்தை முன்வைக்க இங்கு முயற்சிக்க முடியும். தேசியம் பற்றி மார்க்சியர்கள் அக்கறையற்றவர்களாயும் தெளிவான புரிதலற்றவர்களாயும் உள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக உண்டு. மக்கள் விடுதலைக்கும் அடிப்படைப் பிரச்சனைகளின் தீர்வுக்கும் மார்க்சியம் மட்டுமே வழிகாட்ட முடியும் என்ற உண்மையை மறுக்கும் பொருட்டாக இதனைக் கூறுகிறவர்கள் பற்றி அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. மார்க்சிய வழியில் தேசியப் பிரச்சனைத் தீர்வினை விரும்புகிறவர்களும் இது குறித்த ஆதங்கம் உடையவர்களாய் உள்ளனர். அந்தக் குறையினை தீர்க்கும் வகையில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் (வெளியீடு: டிசெம்பர் 2009) வந்துள்ள ஒரு நூல் ஹொரேஸ் பி.டேவிஸ் எழுதியுள்ள "தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு". சோவியத் தகர்வின் முன்னர் 1978இல் எழுதப்பட்ட இந்த நூல் இன்று இன்னும் அவசியமானது என்ற வகையில் மு.வசந்தகுமாரினால் மொழிபெயர்க்கப்பட்டு விடியல் பதிப்பகம் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது. தேசியத்தின் தோற்றம் முதல் எழுபதுகள் வரையில் உலக அளவிலான அதன் மாற்றச்செல்நெறிகளை உள்வாங்கி மார்க்சிய நோக்கில் கட்டமைத்துத் தரும் நூல் 367 பக்கங்களில் அடங்குகிறது.

## I

## இதுவரை

நூலினுள் நுழைவதற்கு முன்னதாக, எத்தகைய சக்திகள் இது தொடர்பில் ஈடுபாடு கொண்டுள்ளன என்பது குறித்து அலசுவது அவசியம். ஈழத் தமிழ்ப் பிரச்சனையும், அதன் மீதான அக்கறையுடைய மார்க்சிய நோக்குகள் குறித்தும் ஒரு பார்வை பெறப்படுமாயின் அது இந்த நூலினை உள்வாங்குவதற்கு உதவிகரமானதாய் அமையும். அண்மித்த உலகப் பிரச்சனைகளில் ஒன்றாக கவனஈர்ப்பைப் பெற்ற ஈழயுத்தம் பயங்கரவாத ஒழிப்புக்கான ஒன்றாக அக்கறை கொள்ளப்பட்ட அளவில் தேசிய இனப்பிரச்சனையின் இருப்பாக பார்க்கப்படவில்லை. அதனைத் தலைமையேற்று முன்னெடுத்த விடுதலைப் புலிகள் அமைப்பானது அரசியல் செயற்பாடுகளில் பாரிய பலவீனங்களுடன் ஆயுதத்தின் மீதே முழு நம்பிக்கை கொண்டிருந்த நிலை காரணமாக இந்த அவலம். முன்னதாக தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் மக்களது அடிப்படைப் பிரச்சனைகளை இனங்கண்டு அதன் தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஐக்கியப்பட வேண்டிய சக்திகளை இந்த மண்ணில் தேடி அடைவதற்கு முயன்றவர்களில்லை; பழம் பழுத்தால் வெளவால் வரும் எனக்கூறி அந்நிய சக்திகளின் ஊடுருவலுக்கான வாய்ப்பான களமாகவே தமிழீழக் கோரிக்கையைக்



கட்டமைத்தனர். மாற்றுக் கருத்துகளை எழவொட்டாமல் தடுத்து, ஆரோக்கியமான விவாதங்களை முன்வைக்க கூடியவர்களை துரோகிப்பட்டம் கட்டி தனிமைப்படுத்தும் முயற்சியே காணப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் துப்பாக்கி ஏந்தாத பிரபாகரனாயும், விடுதலைப் புலிகளின் தலைவர் துப்பாக்கி ஏந்திய அமிர்தலிங்கமாகவும் செயற்பட்டனர்.

அதன் பெறு பேறு இத்தகைய கழித்தல் பெறுமானத்தில் முடிவெய்துவதில் ஆச்சர்யப்பட ஏதுமில்லை. பிந்திய வழி அடைக்கப்பட்டதால் முந்திய வழியினால் வட்டுக் கோட்டைத் தீர்மானம் கண்டடையப்பட இடமுண்டு எனக் கருதுவது இந்த அடிப்படை அம்சம் கவனிக்கப்படாதமையினால் ஆகும். பாராளுமன்ற மற்றும் ஆயுதப் போராட்ட வழிகள் வாயிலாக முன்னெடுக்கப்பட்ட தமிழீழ விருப்பம் அந்நிய சக்திகள் மீது நம்பிக்கை கொள்வதோடு தொடர்பானது. மிகப்பெரும் ஆயுதபாணியாக தரை, கடல், ஆகாய வழித் தாக்குதல்களில் உலகின் எந்தவொரு விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கும் குறைவில்லாத வலுவோடு போராடிய விடுதலைப் புலிகள் இறுதியில் காவாந்து பண்ண அந்நியர் வருவர் என மயங்கி நின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. என்னதான் சொந்த பலத்தில் பூதாகரமாக வளர்ந்தாலும் அதன் அடிப்படை அந்நிய உறவு சார்ந்தது. இந்த மண்ணுக்குரிய தமிழர் பிரச்சனை முன்னெடுக்கப் பட்டிருப்பின் சிங்கள முஸ்லிம் மக்களோடு ஐக்கியப்பட ஏற்ற வாய்ப்புகளைத் தேடும் போராட்டங்கள் கண்டறியப்பட்டு செயல் வடிவம் பெற்று தமிழர் தாயகம் தனக்கான சுயநிர்ணயத்தை வென்றெடுத்திருக்க முடியும்.

ஆக, மக்கள் விடுதலையின் அடிப்படைகள் மீது அக்கறை கொள்ளாது ஏகாதிபத்திய சக்தியின் பகுதியாக அமைந்த தமிழீழப் போராட்டம் தேசிய இனப்பிரச்சனை தொடர்பில் கனதியான படிப்பினைகளை விட்டுச் சென்றுள்ளது. அதனைக் கற்றுக் கொள்ள முனையாமல் இனியும் அதே இருள் சூழ்ந்த அகங்காரங்களில் மூழ்குவது மேலும் மோசமான கழித்தல் பெறுமானப் பள்ளத் தாக்குகளுக்கு இட்டுச் செல்லும். ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பது சார்ந்து முன்னெடுக்கப்பட்ட யுத்தம் போன்றே நாடு கடந்த ஈழமும் அதே உயர்சாதிய வர்க்கத் திமிரோடு ஆயுதமேந்தாத பிரபாகரன் வழியை மேற்கொள்ள முனைவது பாராமுகமாக விட்டொதுக்கத் தக்க ஒன்றல்ல. அதன் மீதான வலுவான விமரிசனங்கள் அவசியம். இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முன் முயற்சிகளை முன்னெடுத்தவாறே அத்தகைய விமரிசன முயற்சிகள் தொடரப்பட இயலும்.

யுத்தத்தை முன்னெடுத்த தலைமையின் மீது விமரிசனக் கண்ணோட்டமற்று அதீத நம்பிக்கை கொண்டிருந்து, அது நம்பமுடியா வகையில் தகர்ந்துவிட்ட அதிர்விலிருந்து இன்னமும்

படிப்பகம்

www.padippakam.com



பெரும்பாலான மக்கள் மீளவில்லை. களத்தில் இடர்ப்பட்டு இன்னல்களுக்கு உள்ளாகி பல்வேறு இழப்புகளுடன் உறவுகளைக் கண்முன்னே பறிகொடுத்த உளத்தாக்கங்களிலிருந்து மீளமுடியாது திகைப்பிலிருக்கும் மக்கள் பல்லாயிரம். அவர்களது மௌனமே விமரிசனம்தான். மக்களுக்கான இந்த அமுக்கப்பட்ட உளப்பாங்கு செயலற்ற நிலையை உருவாக்கிய சூழலில் சமூக அக்கறைமிக்க சக்திகளாலும் நம்பிக்கையுடனான மார்க்கத்தை முன் வைக்க முடியாத கையறுநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயலற்ற நிலையில் சில மார்க்சிய நிலைப்பாட்டினர் இன்னமும் அந்த ஆயுத மோகம் கலையாமல் விட்டுக் கொடுக்காத போராட்டம் பற்றி கதை பேசுவர்; இன்னும் சிலர் ஈழப்பிரிவினை வேறு வடிவில் தொடர முடியும் என்பர். வெளிப்படையாக இவை பேசப்பட முடியாத இறுக்கம் மக்களிடம் ஏற்பட்டிருப்பதால் இவற்றை மனத்தில் இருத்தியபடி பிராக்காட்டும் தேவையற்ற வேலைகள் முன்னெடுக்கப்படும். மக்களது உறைநிலையைத் தகர்த்து ஏற்ற தீர்வுகளுக்குரிய சாத்தியப்படும் வழிமுறைகளைத் தேடும் அக்கறை இன்னும் மேற்கிளம்புவதாக இல்லை.

இதனை வாய்ப்பாக்கிக் கொண்டு இலங்கை - இந்திய ஆளும் தரப்புகள் சுயநிர்ணயக் கோரிக்கைக்கான அடிப்படைகளைத் தகர்க்கும் செயல் ஒழுங்குகளை நிறைவேற்றியவாறுள்ளன. தமிழகத்தில் இயங்கும் தமிழீழ ஆதரவாளர்களில் ஒரு பகுதியினர் மீட்பர் மீண்டும் வருவார் என முழங்கியபடி புலம் பெயர்ந்தோர் வரும்படியைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள். இன்னொரு பகுதியினர் எப்பாடு பட்டும் ஈழம் அமைப்போம் எனும் பக்கப்பாட்டை விடாமல் எழுப்பி உள்ளூர் அரசியலில் அதனை ஆதாயமாக்கும் வகையில் என்ன பண்ணலாம் என்று அங்கலாய்த்தபடி. இவற்றுக்கும் அப்பால் விலை மதிப்பற்ற போராட்ட அனுபவம் ஒன்று அவமாய்க் கழிந்து போகாமல் உரிய படிப்பினையாக்கப்பட்டு எதிர்கால விடுதலைக்கான மார்க்கம் கற்றுக் கொள்ள அவசியமான ஆய்வுகளில் இறங்கியுள்ள ஒரு சக்தியும் தமிழகத்தில் கணிசமாக உள்ளது. அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தமிழீழம் அமைவதைவிட மாற்று வழி எது எனத் தேடும் முயற்சியில் முனைப்பாவதன் விளைவாக தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு குறித்த தெளிவினைப் பெற முயல்வர்.

இவ்வாறு மார்க்சியத் தேடல் பற்றி கூறும்போது அதன்வழி நாடுவோர் அனைவரும் ஒரே வகைப்பட்டவர் என்பதற்கு இல்லை என்பது தெளிவு. மார்க்சியம் எதனை அடிப்படையாகக் கொண்டது எனும் நிலைப்பாடு ஒருபுறமாக, எத்தகைய தேவைப்பாட்டிலிருந்து, எவ்வகையில் அணுகி, என்ன வடிவில் மார்க்சியமாய்ப் புரிந்து கொள்கிறார்கள் என்பது சார்ந்து பல்வேறு வடிவ மார்க்சியங்கள் நிலவுகின்றன. இவற்றில் எது மார்க்சியம் எனக் குழம்பி ஆளைவிட்டால் போதும் என ஒதுங்குகிறவர்களும் உண்டு. உண்மையில் நிலவுகின்ற



மார்க்சியங்கள் என்பவை பலரும், பல நாடுகளும் தத்தம் வழிகளில் புரிந்துகொண்ட - செயற்படுத்திய வடிவங்களே; அதற்காக அடிமுடி காணவியலா வகையில் சூட்சுமமானது அல்ல மார்க்சியம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதலாளித்துவம் வெற்றி பெற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பாட்டாளி வர்க்கம் மிக மோசமாக சுரண்டப்படலாயிற்று. அதற்கு எதிரான போராட்டங்களிலும் பாட்டாளிகள் ஈடுபட்டனர். அதேவேளை தனது மூலதனத் திரட்சிக்காக தனது நாட்டில் தொழிற்சாலைகளைப் பெருக்குவது மட்டுமன்றி உலகம் முழுவதும் பரந்து சென்று குடியேற்ற நாடுகளை ஆட்படுத்தும் வகையில் விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தியை ஊக்கப்படுத்தும் தேவை முதலாளித்துவத்துக்கு. இதன் பேறாக விஞ்ஞான நோக்கும் தேடலும் புதிய புதிய அறிவுத்துறைகளை வளர்த்தெடுத்தன. அதன் ஒரு பகுதியாக அரசியல் சமூக விஞ்ஞான விருத்தியும், தத்துவத் தேடல்களும் புதிய ஒளி பெறலாயின. விஞ்ஞான மயப்பட்ட அரசியல் பொருளாதார சமூக தத்துவார்த்தத் தேடல்கள் ஆகியன, கொந்தளித்து எழுந்த பாட்டாளி வர்க்கப் புரட்சிகளைக் கவனத்தில் எடுத்து அலசியாய்ந்து கண்டறிந்த சிந்தனை முறையே மார்க்சியம். தத்துவத் தேடலில் திளைத்த ஜெர்மனியில் தனக்கான உலகப் பார்வையை வரித்துக் கொண்டு, பாரிஸ் கம்யூனை வென்றெடுத்து இரண்டு மாதங்கள் ஆட்சிக்குட்படுத்திய பிரான்சியப் பாட்டாளி வர்க்க இயக்க அனுபவங்களால் செழுமை பெற்ற சோஷலிசத்தை உள்வாங்கி, பொருளாதார ஆய்வுக்களமான பிரித்தானியாவின் அரசியல் பொருளாதாரத்தால் வளமூட்டப்பட்டது மார்க்சியம். ஜெர்மனியில் பிறந்து வளர்ந்த மார்க்ஸ் நாடு கடத்தப்பட்டு பிரான்ஸ் சென்று, அங்கிருந்தும் நாடு கடத்தப்பட்டு பிரித்தானியா சென்று, இவ்வகையில் ஐரோப்பியச் சிந்தனைச் செல்நெறியை அனைத்துப் பரிமாணங்களுடனும் உள்வாங்கி வெளிப்படுத்த வல்லவரானார். பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் பேறான அந்த மார்க்சியச் சிந்தனை மார்க்ஸ் எனும் தனிமனிதருக்குரியதல்ல. அதற்கு முன்னிருந்தும், அன்றும் வளர்ந்த சிந்தனைக் களஞ்சியங்கள் பாட்டாளி வர்க்க இயக்கங்களால் மறுவாசிப்புச் செய்யப்பட்டு மார்க்ஸ் என்ற மனிதரால் உள்வாங்கப்பட்ட உருவில் படைக்கப்பட்டது மார்க்சியம். அத்தனை அர்ப்பணிப்போடு ஓய்வொழிவின்றி இயங்கி - கற்று - ஒருமுகப்படுத்திய வடிவில் மார்க்சினால் வழங்கப்பட்டமையினால் அந்தப் பாட்டாளி வர்க்க சிந்தனை முறைமை மார்க்சியம் எனப்படுகிறது. தனக்குள் ஒரு வர்க்கமாக இருந்து பல்வேறு போராட்டங்கள் வாயிலாகத் தனக்கான வர்க்கமாக உருப்பெற்று, வர்க்கங்களை ஒழித்து சமத்துவ சமூகம் படைக்கும் ஆளுமை கைவரப்பெற்ற மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் அதற்காக வலிய ஆயுதமாக மார்க்சியத்தைக் கையேற்றது.

பாட்டாளி வர்க்கப் புரட்சி மையமானது மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து நகர்ந்து ருஷ்யாவை அடைந்த நிலையில் ருஷ்யப்

படிப்பகம்

www.padippakam.com



பாட்டாளி வர்க்கப் புரட்சியானது மார்க்சியத்தை பிரயோகித்துத் தனது நாட்டின் சூழலுக்கும் காலமாற்றத்துக்கும் ஏற்ற வகையில் வளர்த்தெடுத்தது. ருஷ்யப் பாட்டாளி வர்க்க செயலாற்றலுக்கூடாக வெளிப்பட்ட மார்க்சியத்தின் அந்த விருத்தி லெனினிஸம் எனப்பட்டது. இவ்வகையில் செழுமைப்பட்ட மார்க்சியம் லெனினிசம் பின்னர் ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க நாடுகளில் பிரயோகிக்கப்படுகையில் மேலும் வளரலாயிற்று. குறிப்பாக, விவசாய நாடான சீனாவின் தேசிய விடுதலைப் போராட்டத்தை சோஷலிஸம் நோக்கி முன்னெடுத்த சீனாவில் மார்க்சிசம் லெனினிசம், மாஓசேதுங் சிந்தனை எனும் வடிவத்தை பெற முடிந்தது. அவ்வாறே, பிடல் காஸ்ட்ரோ, சேகுவேரா, ஃபனான், கப்ரால் எனப் பலரும் பல்வேறு நாடுகளின் மக்கள் போராட்டங்களில் மார்க்சிசம் லெனினிசத்தை பிரயோகித்து விருத்தி செய்தனர். இவ்வகையில் மார்க்சிசம் பாட்டாளி வர்க்கப் புரட்சி அனுபவங்களது தொகுப்பாக உருவாகி தேசிய விடுதலைப் போராட்டங்களில் பிரயோகிக்கப்பட்ட செழுமைப்பாட்டினை வந்தடைந்தது வரையிலான வளர்ச்சிகளைப் பெற்று வந்துள்ளது. கால தேச வர்த்தமானங்களுக்கு அமைவாக மக்கள் விடுதலையை வென்றெடுக்கும் சிந்தனை முறையாகவே மார்க்சியம் விளங்குகிறது. இருப்பினும் அது வர்க்கப் போராட்டம் குறித்து மட்டுமே அக்கறையுடையது; தேசிய, பாலின, சாதிய, நிற பேத முரண்பாடுகள் குறித்தோ அவற்றின் தீர்வுக்கான மார்க்கங்கள் மீதோ நாட்டங் காட்ட விரும்பாதது என்ற விமரிசனம் மார்க்சியத்தின் மேல் வைக்கப்படுகிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சி வாயிலாக வென்றெடுக்கப்படும் சமத்துவ சமூகத்தில் இரண்டாம் பட்சமான தேசிய, பாலின, சாதிய, நிறபேத முரண்பாடுகள் தீர்க்கப்படும் எனச் சொல்கிற வறட்டுத்தனம் அவ்வப்போது தலை தூக்குவதுண்டு. அதனை முறியடித்து ஏனைய முரண்பாடுகளின் தீர்வுக்கு ஏற்ற போராட்டங்களுக்கான மார்க்சியப் பிரயோகத்தை சாத்தியப்படுத்தி வெற்றிகள் மூலமாக முன்னேறி வளர்ந்த சந்தர்ப்பங்களும் அனந்தம்.

இவ்வாறு சிற்சில தவறுகளும், அவற்றிலிருந்து கற்றுக்கொண்டு புறநிலையின் இருப்பு முரண்களைக் கவனத்தில் எடுத்து அவற்றின் தீர்வுக்கான பிரயோகமாக மார்க்சிய சிந்தனை முறை வளர்க்கப்பட்டமையுமே எப்போதும் நடந்து வந்திருக்கிறது என்பதற்கில்லை. அவ்வப்போது பாரிய திரிபுவாதங்கள் தலைதூக்கி மார்க்சியத் தோற்றம் காட்டியவாறு மார்க்சிய விரோத நிலைப்பாடுகளுக்கு இட்டுச் செல்லும் நடைமுறைகளும் இடம் பெற்றுள்ளன. அவையே மார்க்சியத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தின. புரட்சிகரச் செயற்பாடுகளைக் கைவிட்டு சமாதான வழியெனக் கூறி முதலாளித்துவத்துடன் சமரசங்களுக்கு ஆட்படும் வலதுசாரி திரிபுகளும், அதிதீவிர புரட்சி அதிர்வேட்டுகளுடன் மக்கள் தயாரில்லா நிலையில் வலிந்த வன்முறைப் போராட்டங்களை முன்னெடுத்து ஆயுதவியாபாரிகள் வளம்பெறவும் முதலாளித்துவம் நிலைபேறடையவும் உதவும் இடதுசாரி திரிபுகளும்



மார்க்சியத்தின் பேரால் நடந்தேறியுள்ளன. வலதுசாரித் திரிபுக்கு எதிராக போராடும்போது அதிதீவிர இடதுசாரித் திரிபுவாதம் கரந்துறைந்து செயற்படுவதும், இடது திரிபுக்கு எதிராகப் போராடும்போது வலது திரிபுவாதம் கரந்துறைவதும் கூட பிரச்சனையாக அமைவதுண்டு. ஒருவேளையில் எது அதிக தீங்கினை ஏற்படுத்துமோ அதற்கு எதிரான போராட்டம் முனைப்பாகியிருக்கும் அதேவேளை மற்றையது இடம் எடுத்து வளர்ந்த நிலையில் பின்னர் அதற்கு எதிராகவும் விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடாத்த வேண்டியிருக்கும். அந்த வகையில் வலது - இடது திரிபுவாதங்களுக்கு எதிரான பல்வேறு போராட்டங்கள் மீண்டும் மீண்டும் முன்னெடுக்கப்பட்டதன் வாயிலாகவே மார்க்சியம் விருத்தி பெற்று வந்துள்ளது. பிரயோகச் சந்தர்ப்பம், போராட்ட வடிவம் ஆகியன சார்ந்து பல்வேறு வகைப்பாடுகள் காணப்படினும் மார்க்சியம் ஒன்றேதான். பாட்டாளி வர்க்கப் புரட்சியூடாகத் தோற்றம் பெற்று அனைத்து வகையான ஏற்றத் தாழ்வினையும், மேலாதிக்கங்களையும், சுரண்டலையும் தகர்த்து சமத்துவ சமூகம் படைக்க ஏற்ற விஞ்ஞானபூர்வமான சிந்தனை முறையாகத் திகழ்வது மார்க்சியம்.

ஒன்றரை நூற்றாண்டுகளின் முன் பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் எழுச்சியுடன் திகழ்ந்த சூழல் இன்று இல்லை. ருஷ்யப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் விவசாயி வர்க்கத்துடன் கைகோர்த்து 1917 ஒக்ரோபரில் பெற்ற வெற்றியின் பின்னர் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வாயிலாகவே மார்க்சிய அணிகள் சோஷலிஸத்துக்கான சாத்தியங்களைக் கண்டடைய முடிந்தது. ஒக்ரோபர் புரட்சியின் மூலமாக சோவியத் ருஷ்யா உதயமான பின்னர் முதலாளித்துவம் தனது போர்த்தந்திரங்களை மாற்றிக் கொண்டுள்ளது; அது பாட்டாளி வர்க்கத்தின் இயங்காற்றலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு அமைவாக பாட்டாளி வர்க்கச் சிந்தனை முறையாகிய மார்க்சியப் பிரயோகத்திலும் மாற்றங்கள் தவிர்க்கவியலாதது. தேசியப் பிரச்சினையைக் கையாளுதல் அந்த வகையில் பிரதான கவனத்துக்குரியது.

## II

## திருப்புமுனை

தேசியப் பிரச்சனையை மார்க்ஸ் ஏங்கெல்ஸ் ஓரளவு கவனத்திலெடுத்தது பற்றியும், மார்க்ஸ் அது குறித்து எழுத விருப்பம் கொண்டிருந்தும் இயலாமற் போனது பற்றியும் ஹோரேஸ் பி.டேவிஸ் "தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவம் பூரணவெற்றி பெற்று தேசிய அரசுகளை வடிவமைத்துக் கொண்டிருந்த நிலையில் அது குறித்து மார்க்ஸ் எழுதியிருப்பின் பயனுள்ளதாயிருந்திருக்கும். அதைவிடவும் பாட்டாளி வர்க்க இயக்கங்கள் முன்னுரிமை கோரிய நிலையில் அவருக்குத் தேசியப் பிரச்சினையில் அதிகம் ஈடுபாடு காட்ட முடியாமல் போயிற்று.

படிப்பகம்

www.padippakam.com



ருஷ்யப் புரட்சியை எதிர்நோக்கிய நிலையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தேசியக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டியிருந்த சூழலும், ஜாரிஸ ருஷ்யாவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நாடுகள் குறித்தும் - ஐரோப்பிய நாடுகளது குடியேற்ற நாடுகள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டியிருந்ததாலும் லெனின் சுயநிர்ணய உரிமை குறித்து பேசமுனைந்தார். அவ்வப்போது முனைப்படைந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு நாடும் அளவில் அவரது ஈடுபாடு இருந்ததேயன்றி, "அரசும் புரட்சியும்" "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்" என்பன குறித்து ஆழமான ஆய்வுக்குட்படுத்தியது போன்று தீர்க்கமான பார்வையை தேசியப் பிரச்சனை மீது லெனின் காட்டியிருக்கவில்லை; "தேசியத்தின் தோற்றங்கள் பற்றிய லெனினின் சுருக்கமான சித்திரிப்பு முதலாளிகளின் பாத்திரத்தை அளவுக்கு அதிகமாக வலியுறுத்துகிறது; எதிர்கால சோஷலிச சமூகத்தில் தேசியத்திற்கான இடம் என்பது பற்றி எந்த வழிகாட்டலும் தரவில்லை" (ஹோரேஸ் பி.டேவிஸ், **தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு** , ப. 124)

"மார்க்சியத் தேசியக் கோட்பாட்டைப் பயன்படுத்தும் முயற்சி சமீபத்தில் சீனாவில் மேற்கொள்ளப்பட்டது" (பக். 124-125) எனக் காட்டும் டேவிஸ் எழுபதுகளின் பிற்கூறு நிலவரத்தில் சோவியத் யூனியனைவிட சீனா பாராட்டத்தக்க வகையில் இவ்விடயத்தில் நடந்து கொள்வதைக் கூறும்போது அவரை சீன சார்பினர் என இனங்காண இடமுண்டு. சீனாவின் பல சாதனைகளை அவர் விதந்துரைத்து வந்தபோதிலும் அவர் சோவியத் யூனியனை ஒரு சமூக ஏகாதிபத்திய நாடாக அடையாளப்படுத்தவில்லை; தொடர்ந்தும் சோஷலிசத்தைப் பின்பற்றுவதாகவே காண்கிறார்.

இது மிகப்பிரதான அம்சமாகும். சோவியத் - சீன சார்பு என 1964இல் உலக கம்யூனிஸ்ட் அமைப்புகள் பிளவுபட்டமை மார்க்சியத்துக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவாகும். அடிப்படையான கோட்பாட்டு பிரச்சனைகள் மீதான விவாதத்தின் விளைவாகவே சோஷலிஸ முகாம் பிளவடைந்து சோவியத் சார்பெனவும் சீன சார்பெனவும் உலக கம்யூனிஸ்ட் கட்சிகளை வேறுபடுத்தின. அந்தக் கோட்பாட்டு தளத்தையும் கடந்த தேசிய உணர்வு சோஷலிஸ நாடுகளான சோவியத்திலும் சீனாவிலும் காணப்பட்டிருக்கிறது என்பது மெய். உண்மையில் தேசியவாதத்தை இரு நாடுகளது கம்யூனிஸ்டுகளும் பூரணமாகத் தகர்த்திருப்பின் அந்தக் கோட்பாட்டுப் பிரச்சனையை ஒத்திப் போட்டு இயங்கியிருக்க முடியும். அவ்வாறு செய்திருப்பின் காலவோட்டத்தில் தவறுகளைக் களைந்து தொடர்ந்து பாட்டாளி வர்க்க இயக்கம் உலகின் தலைமை சக்தியாக முன்னேறியிருக்க முடிந்திருக்கும்.

இவ்விடயத்தில் தேசியம் பற்றிய லெனினின் போதாமையைக் காட்டுகிறார் டேவிஸ். சோஷலிஸத்தின் கீழும் தேசிய உணர்வு ஒரு கட்டம்வரை தொடர்ந்து நிலவும் என லெனின் கூறியிருக்கிறார்;



பாட்டாளி வர்க்கத்திடமே (அதன் முன்னேறிய படையணியினராகிய கம்யூனிஸ்ட்டுகளிடமே) இந்த அளவுக்குத் தேசிய உணர்வு தாக்கம் செலுத்தும் என லெனின் கருதியிருக்கவில்லை. "நடைமுறைப் படுத்தலில் முழுமையாக இல்லாவிட்டாலும்கூட சரியாக விளக்கமளிக் கப்பட்டால் லெனினுடைய தேசியக் கொள்கைதான் உலகின் நம்பிக்கையாக உள்ளது" (ப.218) என டேவிஸ் குறிப்பிட்டிருப்பதும் கவனிப்புக்குரியது. பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெற்றி நோக்கி முன்னெடுப்பதிலும், சோஷலிஸத்தின் முதல் அனுபவங்களில் தலைமைப் பாத்திரம் வகித்ததிலும் பல விடயங்களில் நடைமுறை யூடாகவே கோட்பாடுகளை வகுக்க வேண்டியவராக லெனின் காணப்பட்டார்.

"வர்க்கச் சுரண்டல்தான் சுரண்டலின் ஒரே வடிவம் என வலியுறுத்திய மார்க்சியர்கள்கூட, தேசிய இனச் சுரண்டலும் வர்க்கச் சுரண்டலைப் போலவே தீவிரமானதும், நீண்டகாலம் நீடிக்கக் கூடியதும் என்பதை நீண்ட காலத்திற்குப் பிறகு, அங்கீகரிக்கிறார்கள்" (டேவிஸ், பக். 218 - 219). அவ்வாறன்றி லெனின் தேசியப் பிரச்சினையின் தாக்கத்தை முன்னதாக போதிய அளவுக்கு கவனத்தில் எடுத்திருந்தார் என்பதே பிரதானம். முதலாளித்துவத்தின் உருவாக்கம் தேசியத்தை கட்டமைத்த போதிலும், பல்வேறு வர்க்கங்களும் தேசிய உணர்வுக்கு ஆட்படும் என்பது கவனத்துக்குரியது. நிலவுடைமை வர்க்கம் தேசியத்தைக் கட்டமைத்திருந்ததை போலந்தின் அனுபவத்திலிருந்து காட்டுகிறார் டேவிஸ் (பக்.83). தேசிய இயக்கத்தின் 'இயல்பான' தலைவராக ஒரு வர்க்கத்தை குறிப்பிட முடியாது (டேவிஸ், ப.111). அந்த வகையில் பாட்டாளி வர்க்கத் தேசியம் பின்னாலே ஏற்படுத்தப் போகும் பாதிப்பை லெனினினால் முன்னனுமானித்திருக்க முடியவில்லை. அது குறித்த எச்சரிக்கை உணர்வினை லெனின் உரிய வகையில் வலியுறுத்தியிருப்பின் சோவியத் - சீன பாட்டாளி வர்க்க முன்னணிப் படைகள் ஏற்படுத்திய பாதகமான விளைவு குறைக்கப்பட்டிருக்க இயலும். அதேவேளை அந்தப் பிளவுக்கு அடிப்படையாக அமைந்த கோட்பாட்டுப் பிரச்சினையும் இரு அணிகளுக்கும் பாதகங்களையே ஏற்படுத்துவதாயிருந்தது. சோஷலிஸ முகாம் வலுவான சக்தியாக முன்னேறிவருவதனால் ஏனைய நாடுகளில் பாராளுமன்ற ஜனநாயக முறை வாயிலாகவே சோஷலிஸத்தை எட்ட முடியும் எனும் கோட்பாட்டினை சோவியத் யூனியன் முன்வைத்தபோது, சீனா அதனை மறுத்து பலாத்காரத்தின் அவசியம் தவிர்க்கவியலாதது என வலியுறுத்தியது. இந்த விவாதம் இரு கட்சிகளுக்குள் நிலவியதைக் கடந்து 1963இல் பகிரங்கப்பட்ட நிலையிலேயே உலகெங்கிலுமான கட்சிகளிடையேயான விவாதங்களாகி பிளவுகள் ஏற்படலாயின. சோவியத் சார்பு கட்சிகள் பூரணமாக பாராளுமன்றவாதம் சார்ந்த வலதுசாரிச் சந்தர்ப்பவாதத்துக்கு உட்பட்டன; பாராளுமன்றத்தில் வெற்றி சாத்தியப்பட்டு நெருக்கடி ஏற்பட்டபோது சொந்தக் கால்களில் உறுதியாக இருந்து போராட வல்லதாக கட்சி அமைப்பு இல்லாத நிலை

படிப்பகம்

www.padippakam.com



காரணமாக இறுதியில் சோவியத் இராணுவத்தை இறக்குமதி செய்ய நேர்ந்தது; இவ்வகையிலான சோவியத் யூனியனின் இராணுவ முனைப்பு இறுதியில் அதன் அழிவுக்கு வழிகோலியது.

புரட்சிகர எழுச்சி சமாதானமாக அமையினும் அதிகார வர்க்கம் தானாக ஆட்சியிலிருந்து இறங்கிவிடாது, ஆயுதத்தை முன்னிலைக்குக் கொணரும்; அத்தகைய சூழலில் பலாத்காரத்தை புரட்சிகர சக்திகள் பிரயோகிப்பது தவிர்க்க முடியாமல் இருக்கும். மார்க்ஸ், லெனின் ஆகியோர் இதனை வலியுறுத்தினர் என சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த விவாதம் இறுதியில் ஆயுதப் போராட்டம் மட்டுமே என்கிற அளவில் வன்முறை வழிபாடாக ஒடுங்கியது. ஆயுதப் போராட்டத்துக்கு அப்பாலான, பாராளுமன்றத்தை ஒரு பிரச்சார மேடையாகப் பயன்படுத்தும் தேவை என்பது உள்ளிட்ட பல்வேறு போராட்ட வடிவங்களும் ‘புரட்சிகரமற்றது’ எனக் கூறி ஓரங்கட்டப்பட்டன. பாராளுமன்ற வழியினால் மட்டுமல்ல, எந்தவொரு நாட்டிலும் சீனச் சார்புக் கம்யூனிஸ்ட்டுகளாலும் வன்முறைப் போராட்டங்கள் வாயிலாகப் புரட்சியை வெற்றியீட்டி நிலைநிறுத்த முடியவில்லை.

மாறாக, ஜனநாயக வழியின் அனைத்து சாதகங்களையும் கையாண்டவாறு மார்க்சிய வழிகாட்டலில் தென்னமெரிக்க நாடுகள் புரட்சிகரமான வளர்ச்சிகளை எட்டி வருவதனை அவதானிக்க முடிகிறது. இதற்கான தொடக்கம் உணரப்பட்ட நிலையிலேயே தென்னமெரிக்க கம்யூனிஸ்ட்டான டேவிஸ் இந்த நூலினை எழுதுகிறார். அந்தவகையில், சோவியத் - சீனா என்றவாறான எந்தச் சார்பினையும் கொள்ளாமல் மார்க்சிய நிலை நின்று யூகோஸ்லேவாக்கியா, சோவியத் யூனியன், சீனா, தென்னமெரிக்க நாடுகள், ஆபிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள் போன்றனவற்றின் தேசிய இனப் பிரச்சனைகளை மார்க்சிய அணிகள் கையாளுமாறினை முன்னுறுத்தி ஆய்வுக்குட்படுத்தித் தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாட்டினை முன்வைக்கிறார் ஹொரேஸ் பி. டேவிஸ். யூகோஸ்லேவாக்கியாவும் சோவியத் யூனியனும் தகர்வுறுவதற்கு முதல்வரை சோஷலிஸத்தை பேணும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன; தகர்வுக்கான காரணிகளுள் ஒன்றாக தேசியத்தை சரியாகக் கையாள த் தவறியமையும் அடங்கும். ஏனைய திரிபுகளும் அந்தக் கையாளுகைக் குறைபாட்டுக்கு காரணமாக முடியும்; அதேவேளை, அவற்றிடம் காணப்பட்டிருந்த சோஷலிஸக் கூறின் அளவில் முதலாளித்துவ நாடுகளைவிட அந்நாடுகளில் சுயநிர்ணயம் போற்றப்பட்டிருந்தது. முழுதான முதலாளித்துவத்தை வரிக்கும்போது தேசிய இனங்கள் பிளவடைந்து பல நாடுகளாக சிதற நேர்ந்தது. அந்த நாடுகள் திரிபுவாதங்களுக்கு எதிராகப் போராடத் தவறி, மார்க்சியத்திலிருந்து விலகிச் சென்றவாறிருந்தமையும், உலக மேலாதிக்கமான அமெரிக்க முயற்சியும் வகித்த பாத்திரங்களை குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை. அதேவேளை கொர்பச்சேவினால் கம்யூனிஸ்ட் கட்சி



கலைக்கப்பட்ட வரையில் சோவியத் யூனியனில் சோஷலிஸத்துக்கான கூறுகள் காணப்பட்டமையை மறுத்துவிடவும் முடியாது.

மார்க்சிய அடிப்படைகளைப் பாதுகாக்க முனையும் விவாதத்தில் ஈடுபட்ட மக்கள் சீனம் கூடியவரை மார்க்சிய வழிநடத்தலை முன்னெடுக்கும் உறுதியை வெளிப்படுத்தியவாறு இருந்தது. இருப்பினும் வலது விலகலுக்கு எதிரான அந்த விவாதத்தினுள் புகுந்த அதிதீவிர இடது விலகல் சீனாவை இன்னொரு வகையில் பாதித்தது. சர்வதேச செல்நெறியில் வன்முறை வழிபாட்டை ஏற்படுத்தியது போல சீனாவினுள் நவீனமயப்படுத்தலை நிராகரித்துக் கடின உழைப்பே சோஷலிஸம் எனச் சொல்லிக் கொள்வது உள்ளிட்ட அதிதீவிர இடதுசாரித் திரிபுகள் முன்னெடுக்கப்படலாயிற்று. சீன மக்களின் உற்பத்தித் திறன் வீழ்ச்சிக்கும் பண்பாட்டு விருத்திக் குலைவுக்கும் காரணமாய் அமைந்த கலாசாரப் புரட்சி தவறான திசைகளில் சென்ற நிலையில் மாஓ சேதுங்கினாலேயே அது நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. மார்க்சிச லெனினிச மாஓ சேதுங் சிந்தனை குறித்த தொடர்ச்சியான கற்றலும், ஏனைய சோசலிச நாடுகளினது அனுபவப் படிப்பினையும் உள்வாங்கப்பட்டமையினால் 1978இலிருந்து மாற்றுவழிகள் வாயிலாக சோசலிசத்தைப் பாதுகாத்து முன்னெடுக்க சீனாவுக்கு இயலுமாயுள்ளது. அதிதீவிர இடதுசாரித் திரிபுக்கு எதிராக இன்றைய மக்கள் சீனம் போராட்டத்தை முன்னெடுத்துப் பொருளாதார விருத்தியில் வேகமாக முன்னேறும் மாற்று வழியை வென்றெடுத்துள்ள இன்றைய சூழலில் அங்கே வலதுசாரித் திரிபிலான விலகலுக்கு இடமுண்டாயினும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு எதிராகவும் போராடவல்ல தத்துவார்த்த - நடைமுறை அனுபவங்களை உடையது.

இத்தகைய மாற்று வழியை முன்னதாக பின்பற்றிய ஒரு சோஷலிச நாடு யூகோஸ்லேவாக்கியா. அதனை முதலாளித்துவம் நோக்கிய விலகல் என ஐம்பதுகளின் பிற்கூறிலும் அறுபதுகளின் தொடக்கம் முதலாகவும் சோவியத் யூனியனும் சீனாவும் தாக்கியிருந்தன. அப்போதே சோவியத்தின் வலது விலகல் தொடக்கம் பெற்றிருந்தமையினால் யூகோஸ்லேவாக்கியாவை தாக்கும் முனைப்பில் சோவியத் யூனியனையும் அம்பலப்படுத்துகிற வேலையையே சீனா செய்திருந்தது. இந்தத் தாக்குதலைத் தவிர்த்து சோஷலிஸ நாடுகள் தமக்குள் ஒத்துழைத்திருப்பின் யூகோஸ்லேவாக்கியாவின் சோசலிச முன்னெடுப்பை முதலாளித்துவ விலகலிலிருந்து தடுத்துப் பாதுகாத்து வளர்த்திருக்க முடியும். ‘சோசலிச மில்லியனர்கள்’ உருவாகும் பொருளாதார முன்னெடுப்பை மேற்கொண்ட யூகோஸ்லேவாக்கியா (டேவிஸ், ப.203) “லெனினின் தேசிய இனக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த ஒரு சோசலிச நாடாக” திகழ்ந்தது (டேவிஸ், ப.212) என மதிப்பிட வல்லதாயுள்ளது. “வேறு எந்தச் சோசலிச நாட்டையும் விட யூகோஸ்லேவாக்கியாவில் பல்வேறு தேசிய இனங்களும் அதிக அளவு

படிப்பகம்

www.padippakam.com



சமநிலையில் வைக்கப்பட்டுள்ளன" எனக்கூறும் டேவிஸ், அதனை ஒரு சோசலிச நாடாக ஏற்பதற்கு பலரும் மறுத்தபோதிலும் அது தன்னை ஒரு மார்க்சிய அரசாகக் கூறிக்கொள்வதை எடுத்துக் காட்டுவார். "பல்வேறு முரண்பட்ட தேசிய இனங்களைக் கொண்டிருந்தபோதிலும் ஒரு தேசம் என்பது மக்களைப் போராட்டத்திற்குத் திரட்டுவதற்கான ஒரு வழி என்றால் யூகோஸ்லேவியா ஒரு தேசம்" என்பார் டேவிஸ் (ப.188). எழுபதுகள் வரையில் தனது சோசலிசத்தைப் பாதுகாத்து வந்ததோடு சக்திமிக்க தேசமாகவும் அந்நாடு தலை நிமிர்ந்து நிற்க முடிந்தது. உயர்ந்த ஜனநாயகப் பண்புகளுடன் தேசிய இனங்கள் சமத்துவமாக இயங்க முடிந்தபோதிலும், சோசலிசத்தைக் கைவிட்டபோது பகையுடன் மோதிக்கொலை வெறி வஞ்சம் தீர்த்த பகை நாடுகளாய்ப் பிளவுபட்டுப் போயுள்ளது யூகோஸ்லேவியா.

சோஷலிஸ முன்னெடுப்பின்போது சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்ட போதிலும் அங்கு தேசிய இனங்களுக்கான தேசிய உணர்வை டிட்டோ கண்டித்துள்ளார். அவற்றை குறுகிய தேசியவாதமாக கணித்து யூகோஸ்லேவியா முழுவதன் மீதும் தேசப்பற்றுக் கொள்ளும் விசுவாசத்தையே வேண்டி நின்றார் (டேவிஸ், பக். 78-79). தேசிய இனங்கள் மறையவேண்டும் என்ற கருத்து டிட்டோவிடம் இருந்தது (ப.200). இயல்பில் பாட்டாளி வர்க்கம் சர்வதேசக் குணாம்சம் உடையது என முடிவுசெய்து, சோஷலிச நாட்டில் தனித்தேசிய உணர்வு அவசியமற்றது என டிட்டோவைப் போலவே பல்வேறு நாடுகளின் மார்க்சியர்களும் கருதினர். ஆயினும் சோவியத் சீனப் பிளவில் இருநாடுகளினது தொழிலாளர்களும் ஒன்றை மற்றையது பிரதான எதிரியாக கருதியது எனக் காணும்போது "பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசத் தன்மைமீது ஆரம்ப காலத்தில் வைத்திருந்த குருட்டு நம்பிக்கையை மறுபரிசீலனை செய்யவேண்டிய உறுதியான காலம் இது" என்கிறார் டேவிஸ் (ப.79). சோவியத் யூனியன், மக்கள் சீனம் ஆகிய நாடுகளினுள் தேசிய இனங்களின் சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் சோஷலிஸ நிர்மாண வளர்ச்சியின் போது தேசிய இனங்களின் தேசிய உணர்வு கடந்து புறந்தள்ளப்பட்டு சர்வதேச உணர்வு மேலோங்கும் எனக் கருதப்பட்டது. சிறு தேசிய இனங்களைப் பெருந்தேசியத்துடன் கலந்து மறைந்து போகத் தூண்டுவதாகவே இக்கோட்பாடு அமைந்துள்ளது. அதற்கு ஆதாரமாக அமையும் வகையில் சோவியத் யூனியனிலும் மக்கள் சீனத்திலும் பெரிய ருஷ்ய, ஹான் சீனமொழி சார்ந்த கலப்புக்கு ஊக்கமளிக்கப்பட்டதும் உண்டு. யூதர்கள் சுயாட்சி கோராதபோதிலும் தனித் தேசிய இன அங்கீகாரத்தை கோரியபோது லெனின் காலத்திலேகூட ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்படாதிருந்து பின்னரே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இஸ்லாமிய உணர்வு சார்ந்த தேசியம் மறுக்கப்பட்டு முரண்பாடு கூர்மையாவதிலும், ருஷ்ய மேலாதிக்கம் செயலுருப்பட்ட போதும் லெனின் கண்டுகொள்ளாதிருந்தார்; பின்னாலே ஸ்டாலின் அதனை ஒடுக்க முனைந்ததில் இஸ்லாமியர்களுடனான முரண்பாடு



பகைத்தன்மையானதாக மேலும் கூர்மையடைந்தது (ப.139). அத்தகைய மத உணர்வு சார்ந்த தேசியவாதங்கள் இயல்பானவையல்ல என மறுக்கப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணயம் போற்றப்படும் வகையில் சமஉரிமையோடு மதிக்கப்பட்டது. ஸ்டாலின் சிறு தேசிய இனங்கள் மீது கடும் போக்கை கடைப்பிடிப்பதான கண்டனம் லெனினிடம் இருந்தபோதிலும், தொடர்ந்து சோவியத் யூனியனில் சுயநிர்ணய உரிமை மதிக்கப்படும் நிலை நிலவியது. பின்னாலே மேற்கொள்ளப்பட்ட "ஆய்வில் சோவியத்தின் தேசிய இனக் கொள்கை பற்றிப் பரந்த அளவிலான அதிருப்தியைக் காண முடியவில்லை" (டேவிஸ், ப.157).

மக்கள் சீன உதயத்தின்போது தேசிய இனங்களின் சுயநிர்ணயம் பெரிதும் போற்றப்பட்டது. அனைத்து தேசிய இனங்களும் சமஉரிமை உடையன என்ற வலியுறுத்தலுடனான 1955ஆம் ஆண்டு அரசியலமைப்பு தேசியத் தன்னாட்சிப் பகுதிகள் சீன மக்கள் குடியரசின் "பிரிக்க முடியாத பகுதிகள்" என வலியுறுத்தியிருந்தது. இவ்வகையில் சீன நிலவரத்துக்கு அமைவாக சுயநிர்ணயக் கோட்பாடு மாற்றிப் பிரயோகிக்கப்பட்ட போதிலும் சிறு தேசிய இனங்களின் சமஉரிமையும் விருத்தியும் திருப்திகரமான முறையில் கையாளப் பட்டன. அதற்கு அமைவாக 1957இல் தேசிய இனங்களுக்கான மைய அமைப்பு பீகிங்கில் (இன்று பெய்ஜிங்) அமைக்கப்பட்டு சிறு தேசிய இனங்களின் மாணவர்களுக்கு தலைமைப் பண்புப் பயிற்சியும் சொந்தப் பண்பாட்டு உணர்வு விருத்தியும் பெருக வகை செய்யப்பட்டன. அந்த அமைப்பில் 48 சிறுபான்மை இனங்கள் இடம்பெற்றன; அது போன்ற பத்து அமைப்புகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் நிறுவப்பட்டன (டேவிஸ், ப. 242-243).

ஆயினும், 1966இல் எழுச்சி பெற்ற கலாசாரப் புரட்சி இச்செல்நெறியில் சில பாதகங்களை ஏற்படுத்தின. தேசிய இன மக்களிடையில் புரட்சிகர ஒற்றுமை எனும் பெயரில் ஒன்றுகலத்தலுக் கான அதிக அழுத்தம் வலுப்பெற்று தேசிய இனங்களின் சுயநிர்ணயம் பாதிக்கப்படும் நிலை தோன்றியது. இவ்வகையில் பெரும் ஹான் தேசியம் மேலாதிக்கம் கொள்ளும்போது சிறு தேசிய இனங்கள் மத்தியிலும் தேசியவாதம் மேலோங்கியது. சோஷலிஸ நவீனப்படுத்தல் ஹான் மேலாதிக்கத்தோடு முன்னெடுக்கப்பட்டமை சிறு தேசிய இனங்களுக்கு கடும் சிரமங்களை ஏற்படுத்துவதாக அமைந்தது. ஆயினும், எங்கு பெரும் ஹான் தேசியவாதம் ஒடுக்கப்படுகிறதோ, அங்கு மட்டுமே வட்டாரத் தேசியவாதமும் அகற்றப்பட முடிகிறது என்பதை சீனா புரிந்து கொண்டது. அந்தப் புரிதலுடன் சுயநிர்ணயத்துக்கான சமஉரிமை பேணப்பட்டு சோஷலிஸ மாற்றியமைத்தலை முன்னெடுக்கையில் பிரிவினை வாதங்களை முறியடித்து சீனாவினால் முன்னேற முடிகின்றது.

"சீனாவில், லெனினியத் தேசிய இனக் கொள்கை பெரும்

படிப்பகம்

www.padippakam.com



வெற்றியடைந்து உள்ளது. ஆனால், அப்பாதை சில நேரங்களில் கரடுமுரடாக இருந்தது" என்பார் ஹொரேஸ் பி.டேவிஸ் (பக். 245 246).

மக்கள் சீனக் குடியரசை நிர்மணிப்பதில் தலைமைப் பாத்திரம் வகித்த மாஓ, அடிப்படையில் தேசிய உணர்வைக் கொண்டிருக்கும் அதேவேளை பாட்டாளி வர்க்க சர்வதேசத்தை வரிப்பவராக இருந்தார். அவரும், மக்கள் சீனமும் தேசிய உணர்வுக்கு ஆட்பட்டபோதிலும் சோஷலிஸத்தின் மீதான பற்றுறுதியும், பாட்டாளி வர்க்க சர்வதேச உணர்வைப் பயிற்சிகளால் வரிக்கவல்ல ஆர்வமேலீடும் கொள்ளப் பெற்றிருந்தமையினால் கரடு முரடான வழிகளூடாயினும் மக்கள் சீனம் தன்னைத் தகவமைத்து முன்னேற இயலுமாகியுள்ளது. இவ்வகையில் தேசிய உணர்வை உரிய அளவில் முன்னெடுத்து வளர்ப்பதும், ஒவ்வொரு தேசிய இனங்களது சுயநிர்ணய உரிமையை மதிப்பதும், அதனைச் சோஷலிஸத்தோடு இணைப்பதும் சார்ந்த செல்நெறி சாத்தியப்படும்போது மட்டுமே ஒரு நாட்டின் முன்னேற்றம் வாய்க்கப் பெறும். தேசிய உணர்வு என்னும்போது சோஷலிஸ தாயகத் தேசியமும் அவரவரது சொந்தத் தேசிய இன உணர்வு என்பதும் இவ்வகையில் சரிவிகிதத்தில் கலந்து அமைவது என்பதை கடந்த கால சோஷலிச நாடுகளது அனுபவம் உணர்த்தியுள்ளது.

இவ்வாறான தேசியத்துக்கும் சோசலிசத்துக்குமான உறவை கியூபா துலக்கமாக வெளிப்படுத்தி நிற்கக் காணலாம். "மக்களின் பலமான ஆதரவுடன், உறுதியுடன் உருவாக்கப்பட்டிருந்த ஆட்சி இல்லாமலிருந்தால், 1960களில் உள்நாட்டில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகளின் அழுத்தத்தால் அந்த ஆட்சி பாதிக்கப்பட்டிருக்கும். இந்த ஒற்றுமையைச் சாதித்ததில் சோசலிசத்துக்கு பெரும்பங்கு உண்டு. கியூபாவின் தேசிய சுதந்திரம் அதனுடைய சோசலிச அமைப்பால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதே சமயத்தில், மக்களின் உணர்வுபூர்வமான தேசியத்தினாலேயே கியூபாவின் சோசலிச அமைப்பு நிலவி வருகிறது" என்பார் டேவிஸ் (ப.262).

தொடர்ந்து தென்னமெரிக்காவில் தேசியமும் சோசலிசமும் கைகோர்த்தவாறு புரட்சிகர எழுச்சி ஏற்பட்டு வருவதனை பிரேசில், பொலிவிய அனுபவங்கள் வாயிலாக வெளிப்படுத்துகிறார் டேவிஸ். அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த பொருளுற்பத்தி முறையின் மாற்றப் போக்குகளும் அந்நியத் தொடர்பாடல்களும் சார்ந்து தேசியத்தில் வெவ்வேறு வர்க்கங்கள் முனைப்புக் காட்டியமையை வெளிக்கொணர்கிறார். தேசியத்துக்கான விரிந்தபொருள் கொள்ளலுக்கு தென்னமெரிக்கா அடிகோலியுள்ளது. அங்கு முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தோடு கைகோர்த்தவாறு சுரண்டலிலும் ஒடுக்குமுறைகளிலும் ஈடுபட்டு இயங்குகிறதேயன்றி தேசியத்தை முன்னெடுக்க முயலவில்லை. "தேசியத்தின் வர்க்க அடிப்படை பற்றிய லெனினின் பகுப்பாய்வு - ஸ்டாலினால் பின்பற்றப்பட்டது மறுவரையறை செய்யப்பட வேண்டிய அவசியத்தை இலத்தீன்



அமெரிக்கா ஏற்படுத்தி உள்ளது. இலத்தீன் அமெரிக்காவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இயக்கத்தின் படையணியாக பாட்டாளிகளும் விவசாயப் பகுதியினரும்தான் இருக்கமுடியும். மொத்தத்தில் நகரங்களில் இப்பொழுதுதான் உருவாகிக் கொண்டிருக்கிற நடுத்தர வர்க்கமும் ஒரு வெற்றிகரமான சோசலிச தேசிய இயக்கத்திற்கு இன்றியமையாத கூறுகளைக் கொண்டுள்ளதால், அவ்வர்க்கம் பற்றிய இன்னும் கூடுதலான ஆய்வை இலத்தீன் அமெரிக்க மார்க்சியர்கள் மேற்கொள்ள வேண்டும்" என்பார் டேவிஸ் (ப. 272). கடந்த மூன்று தசாப்தங்களில் அத்தகைய வளர்ச்சி எட்டப்பட்டு வருவதை மார்க்சிய வழிகாட்டலிலான தென்னமெரிக்க எழுச்சி காட்டி நிற்கிறது.

இந்நூலில் எமக்கு மேலும் பயனுள்ள தரவுகளை வழங்குவதாக ஆபிரிக்க அனுபவங்கள் அமைகின்றன. இனக்குழு மோதல்களும் இணைவுகளும் சார்ந்த தேசிய உருவாக்கங்களைக் காணும்போது, வர்க்க அமைவுக்கு ஏற்ப சாதிகளாக்கப்பட்ட இனக்குழுப் பண்பு சார்ந்த சாதிய வரலாறைக் கொண்டு இயங்கும் எமது சமூக முறைமையையும் மாற்றச் செல்நெறிகளையும் மேலும் துலக்கமாக அறிய வாய்ப்பாகிறது. ஆபிரிக்க சூழலில் ஒடுக்கும் வெள்ளையர்கள், ஒடுக்கப்படும் ஆபிரிக்கர்கள் எனும் இரு வர்க்கங்களையே இனங்காண முடிவதாக் கருதுவார் கப்ரால் (டேவிஸ், ப.299). முன்னேறிய தொழிற்துறைகளில் இயங்கிய ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கத்தவரை ஒரு புரட்சிகர சக்தியாக ஏற்க முடியாதவராக ஃபனான் காணப்பட்டார். அல்ஜீரியாவில் இருந்த பிரெஞ்சு தொழிலாளர்கள் அல்ஜீரிய விடுதலைப் போராட்டத்தின் எதிரிகளாக இருந்த அதேவேளை, தேசிய விடுதலை இயக்கத்தில் பங்கெடுத்த ஆபிரிக்க தொழிலாளர்களும் புரட்சிகர சக்திகளாய் இல்லையென்பார் ஃபனான். (டேவிஸ், ப.289)

"ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கத்தைக் குறைத்து மதிப்பிடுவதில் கப்ராலும் ஃபனானும் ஒத்துப் போகிறார்கள். ஆனாலும், தேசிய விடுதலைப் போராட்டத்தின் அனைத்துக் கட்டங்களிலும் காலனிய நாடுகளிலுள்ள அந்நாட்டுத் தொழிலாளர்களுக்கு மிகவும் வேறுபட்ட பாத்திரங்களை வழங்குகின்றனர். இந்த வேறுபாட்டிற்குத் தெளிவான முதல் காரணம், அல்ஜீரிய மற்றும் கினி ஆகியவற்றில் வளர்ச்சிக்கட்டத்தில் இருந்த வேறுபாடுதான். அல்ஜீரியாவில் இருந்த தொழிலாளர்கள் ஓரளவு அமைப்பாக்கப்பட்டும், சில தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டங்களையும் வென்றெடுத்து இருந்தனர். அதனால் அவர்களைச் சலுகை பெற்றவர்கள், புரட்சிகரமானவர்கள் அல்ல என ஃபனான் குறிப்பிடுகிறார்; கினியில் இருந்த தொழிலாளர்கள் எந்தச் சலுகையும் பெற்றிருக்கவில்லை; அவர்களிடம் இழப்பதற்கு ஏதும் இல்லை, அடிமைச் சங்கிலிகளைத் தவிர; அவர்கள் உண்மையான

படிப்பகம்

www.padippakam.com



பாட்டாளிகளாக இருந்தார்கள், ஆற்றல்மிக்க போராளிகளாகவும், சோசலிசக் கருத்துகளை ஏற்றுக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். பாட்டாளி பற்றிய மார்க்சின் கருத்தாக்கத்திற்கு நெருக்கமாக இருந்தார்கள்" (ப.306) எனக் கூறும் டேவிஸ் ஏகாதிபத்திய நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினர் தவறுகளுக்கு ஆட்பட்டபோதிலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் சர்வதேச உணர்வுடன் ஒடுக்கப்பட்ட தேசங்களின் மக்கள் விடுதலைப் போராட்டங்களுக்கு ஒத்தாசை புரிந்த சந்தர்ப்பங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆக, பாட்டாளி வர்க்க இயக்கச் செல்நெறியின் வளர்ச்சி நிலைகளில் அவ்வப்போது தடைகள் ஏற்பட்டபோதிலும் அதுமட்டுமே உலகப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காட்டமுடியும் என்பதனை அதன் தத்துவவீச்சான மார்க்சியம் தேசிய இயக்கங்கள் மூலம் பெற்றுள்ள புத்தாக்கச் செழுமை காட்டி நிற்கிறது. இன்றைய பொருளுற்பத்தி முறைமை தேசியத்தைக் கட்டமைக்குமாறு மக்களை இயக்கப்படுத்துகின்றது. அந்தத் தேசியம் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருத்தல் மரணக்குழிக்கு இட்டுச் செல்லும். அந்த வகையில் தேசியத்தை நிராகரிக்கும் சோஷலிஸமோ, சோசலிசத்தை நிராகரிக்கும் தேசியமோ விடுதலைக்கான மார்க்கமாகவியலாது எனும் துலக்கமான உண்மையை இந்நூல் காத்திரமான முறையில் அழுத்தி முன்வைத்திருப்பது ஓர் திருப்புமுனை.

## III

## எங்கிருந்து

ருஷ்யச் சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கும், அங்கு புரட்சி எழுச்சியைத் தட்டியெழுப்பவும் "எங்கிருந்துதொடங்குவது" என்ற ஆய்வு வாயிலாக முயன்றார் லெனின். அவ்வாறே "சீன சமூகத்தின் வர்க்கங்கள் பற்றிய ஆய்வு" சீனப் புரட்சியை வழிநடத்திய மாஓவின் முதல்நிலைத் தேடல்களில் ஒன்றாக அமைந்தது. தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாட்டினை தெளிவாக முன்வைக்கும் இந்நூலினைப் படித்து முடிக்கும்போது எங்கிருந்து தொடங்குவது எனும் வினா தவிர்க்கவியலாது எழும்.

ரோசா லக்சம்பேர்க், ஸ்டாலின், ட்ரொட்ஸ்கி, கிராம்ஸ்கி உட்படப் பலரது தேசியக் கோட்பாடுகளை முன்னிறுத்திய ஆய்வாக இந்நூல் அமைந்துள்ளது. சிற்சில சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவரது பங்கேற்பும் தேசியத்தை மார்க்சிய நிலைப்பாட்டில் புரிந்து கொள்வதற்கான சரியான திறவுகோலை வழங்கக் காணலாம். அதேவேளை, லெனினது நிலைப்பாடு சில போதாமைகளுடன் காணப்பட்ட போதிலும் அதிகம் சரியானதாக அமைந்துள்ளமையை நூல் அழுத்தமாக வலியுறுத்தி யுள்ளது. மார்க்சோ லெனினோ அனைத்துப் பிரச்சினைகளுக்குமான சர்வரோக நிவாரணிகளை முற்று முழுமைப்பாடுகளுடன் முன்வைக்க முயன்ற தீர்க்கத்தரிசிகளல்ல; பாட்டாளி வர்க்க இயக்க



அனுபவங்களை சுரண்டும் வர்க்க எல்லைப்பாடுகளால் வரையறைப் படுத்த இடமளிக்காது, தொடர்ந்து மக்கள் விடுதலைப் போராட்டங் களை முன்னெடுப்பதற்கு அமைவான அனுபவத் திரட்சிகளாக்கி வழங்கிய சிந்தனை முறைமையே மார்க்சியம் லெனினியம்.

அத்தகைய லெனினியப் பிரயோகத்தை முதலாவது சோசலிச நாடான சோவியத் யூனியனில் முன்னனுபவமற்ற பல சந்தர்ப்பங்களில் முன்னெடுத்த வேளைகளில் ஸ்டாலினிடன் தவறுகள் ஏற்பட்டது மெய். அத்தகைய தவறுகளைக் காய்தல் உவத்தலற்ற வகையில் விமரிசனப்படுத்துவது அவசியம். எத்தகைய தனிநபர் வழிபாடுகளுக் கும் மார்க்சிய லெனினிய அமைப்புகள் இடமளிக்க முற்படுவதில்லை. பல்வேறு ஆளுமைகளது பங்கேற்பு என்பது உண்மையில் மக்கள் சக்தியின் இயங்காற்றலினது பிரதிநிதித்துவமாகுமேயன்றி, எந்தவொரு தனிநபர்களது செயல்பாடு மட்டும் வரலாற்றைப் படைத்து விடுவதில்லை எனும் தெளிவு மார்க்சியர்களிடம் உண்டு. அதேவேளை தனிநபரது வரலாற்றுப் பாத்திரம் எத்தகைய தாக்குதலைக் கொண்டுள்ளது எனும் புரிதலும் மார்க்சியர்களுக்கு அவசியம்.

அந்த வகையில் இராணுவச் சுற்றிவளைப்பால் எப்போதும் அச்சுறுத்தப்பட்டு, கையூட்டு பெற்ற சதியாளர்களால் உள்நாட்டில் சோசலிசத்தை நாசப்படுத்த இயலுமாக இருந்த சூழலில், இன்னும்உச்சமாக பாசிச ஆக்கிரமிப்பிலிருந்து மீண்டு சோசலிச நிர்மாணத்தை கட்டியெழுப்ப வேண்டியிருந்த நிலையில் ஸ்டாலினின் பங்களிப்பும் அவ்வாறே தவறுகளும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் அதிகமாகவே இருந்தது. அவரது பங்களிப்பை மிகைப்படுத்துவது எவ்வளவு தவறோ அதேயளவுக்கு தவறுகளைப் பூதாகரப்படுத்துவதும் தவறாகும். பல சந்தர்ப்பங்களில் லெனின் வழியைக் கூடியவரையில் ஸ்டாலின் பின்பற்றியமையை டேவிஸ் எடுத்துக் காட்டியுள்ளார்; அதே வேளை "ஸ்டாலின் பயங்கரம்" குறித்தும் கூறியுள்ளார் (ப.179). பல்வேறு விடயங்களை மிகுந்த நிதானத்துடன் மார்க்சிய நிலை நின்று முன்வைக்கின்ற இத்தகைய ஒரு நூலில் இதனைத் தவிர்த்திருக்கமுடியும்.

ஸ்டாலினாக அல்லாமல் லெனின் தொடர்ந்து வாழ்ந்து தலைமை வகித்திருப்பின் அத்தகைய தவறுகள் தவிர்க்கப்பட்டிருக்க இயலுமாயிருந்திருக்கும் எனும் கூற்றினை பிரிட்டிஷ் மார்க்சிய வரலாற்றியலாளரான கர் மறுத்திருந்தார். லெனினிடம் சற்றுக் குறைவாக வெளிப்பட்டிருக்குமே அன்றி முற்றாக அவராலும் தவிர்த்திருக்க இயலாது என்பார் கர். அத்தகைய நெருக்கடிச் சூழலின் மத்தியிலேயே சோவியத் சோஷலிசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது என்பது கவனிப்புக்குரியது.

தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு எனும் இந்த நூலில் லெனினின் போதாமை குறித்த சொல்லாடல்களும் முதல்வாசிப்பில் நெருடலாக அமைந்தபோதிலும் தொடர்ந்த வாசிப்பிலும் தொடர்புபடுத்தற் சிந்தனை வயப்பாட்டிலும் ஏற்புக்குரியதாக

படிப்பகம்

www.padippakam.com



அமைந்துள்ளன. எவ்வாறெனினும், பல்வேறு நாடுகளது அனுபவங்களை உள்வாங்குவதனை அவசியப்படுத்தும் அதேவேளை, சோவியத் யூனியன் - மக்கள் சீனம் வழங்கியுள்ள பங்களிப்புகளது செழுமையையும் நிராகரித்து விடலாகாது; அல்லது குறைத்து மதிப்பிட்டுவிடலாகாது. முன்னர் சோவியத் - சீன நிலைப்பாடுகளுக்கு (அல்லது அவற்றில் ஏதாயினும் ஒன்றுக்கு) மிகை அழுத்தம் கொடுத்த தவறினைப் போன்று அவை இழைத்த தவறுகளை முன்னிலைப்படுத்தி நிராகரிப்பதும், குறைத்து மதிப்பிடுவதும் ஏற்புடையதாகாது. அந்த வகையில் எங்கிருந்து தொடங்குவது என்பதற்கான தேடலை ஒரு முனைவாத முடக்குதலுக்கு ஆளாக்காது பன்முகப் பரிமாணங்கள் சார்ந்த விரிவான தளத்துக்குரியதாக்குதல் அவசியமானது. சில சொல்லாடல்கள் நெருடலாக அமைந்தபோதிலும், கவனம்பெறத் தவறியவைமீது அழுத்தம் பெறச் செய்யும் முனைப்பில் அவசியமானவை சில குறைமதிப்பீட்டுக்கு உள்ளாகும் தோற்றம் வெளிப்படுகிறதாயினும், அத்தகைய முழுப்பரிமாணங்கள் சார்ந்த ஆய்வினை ஹொரேஸ் பி.டேவிஸ்இன் "தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு" எனும் நூல் முன்வைத்துள்ளது.

## IV

### இனி

மாஓ மற்றும் ஆபிரிக்கர்கள் போன்ற மூன்றாம் உலகச் சிந்தனையாளர்கள் தேசியத்தின் மீது செலுத்திய தாக்கம், தேசியக் கோட்பாட்டின் மையம் ஐரோப்பாவிலிருந்து விலகிச் சென்றுவிட்டமையைக் காட்டுகிறது (டேவிஸ், ப.325). பழங்குடி மக்கள் ஏற்றத் தாழ்வுக்கு உட்படும் போது ஆக்கிரமிப்புக்கு உள்ளாவது முதல் தேசம் சுரண்டப்படுவது வரை கவனிப்புக்குரியன. "பழங்குடிகள் மற்றும் பழங்காலத்தில் நகர அரசுகள், மத்திய காலக் கம்யூன்கள், மற்றும் நிலப்பிரபுத்துவ ஆட்சி ஆகியவற்றிலிருந்து நவீன தேசங்கள் வரை உபரிக்கான போராட்டத்தின் செயல்பரப்பை உழைப்பின் சமூகப் பிரிவினையில் உள்ள அளவே தீர்மானித்துள்ளது" எனும் கர்தேல்ஜ் கருத்தை முன்வைத்த டேவிஸ் தொடர்ந்து கூறுவார்: "இவ்விதமாக உழைப்பின் சமூகப் பிரிவினையால் தீர்மானிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் சமூக உபரியின் பொருத்தமான பகுதியின் மீது மக்கள் தமது உரிமையை வெற்றிகரமாக நிறுவுவதை சாத்தியமாக்கும் பணியைத் தேசம் செய்கிறது என கர்தேல்ஜ் கருதுகிறார். இந்த உழைப்பின் சமூகப் பிரிவினை ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடையும்போது, ஈ.எச்.கர் கூறியதைப் போல மக்கள் நேரடியாக உலகின் மக்களாக மாறிவிடுவர் (ஆனால், அவரைப் பற்றி கர்தேல்ஜ் அறிந்திருக்கவில்லை). இதற்கிடையில், மக்கள் தம்முடைய உரிமைகளை நிறுவவும், ஒடுக்குமுறையை எதிர்க்கவும் பயன்படும் மிகவும் பொருத்தமான வடிவமாக தேசம் உள்ளது" (டேவிஸ், ப.220). தேசியப் பிரச்சினை வெறும் முதலாளி வர்க்கத்துக்கானதல்ல,



முழுச்சமூகத்துக்குமுரியது என்பார் கர்தேல்ஸ் (டேவிஸ், ப.221). யூகோஸ்லேவாக்கியாவுக்கு உட்பட்ட ஸ்லோவேனிய தேசத்துக் குரியவரான கர்தேல்ஜ் அந்த ஸ்லோவேனிய தேசிய உரிமைகளை வலியுறுத்துவதைவிட டிட்டோ போன்று யூகோஸ்லேவிய தேசியத்தையே வலியுறுத்தினார்; "இந்தப் பொருளில் அவரிடம் குறுகிய தேசியம் இல்லை" என்பார் டேவிஸ் (பக்.220-221).

அந்த வகையில் மார்க்சியர்கள் தேசிய இயக்கங்களில் முழு ஈடுபாட்டுடன் பங்கெடுப்பது அவசியம்; அதேவேளை சோசலிசப் பதாகையைத் தொடர்ந்து உயர்த்திப் பிடிப்பதும் அவசியம்; "இல்லாவிட்டால் தேசிய இயக்கங்களுக்குள் ஈர்க்கப்பட்டு, அவர்களுடைய தெளிவான அடையாளத்தை இழக்கும் பெரும் ஆபத்துக்கு உள்ளாவார்கள்" (டேவிஸ், ப.333)

"இன்று மற்றும் இன்றைய காலகட்டத்தில், தேசியம் பற்றிய ஒரு மர்க்சியக் கோட்பாடு என்பது சர்வதேச அளவிலான, சமூகம் முழுமைக்குமான ஒரு கோட்பாடாகும். முதன்மையான பணியிலிருந்து திசைதிருப்பும் ஒரு தொல்லை, ஒரு கிளைப் பிரச்சினை எனத் தேசியத்தைக் கருதுவதற்குப் பதிலாக, மார்க்சியர்கள் போராட்டத்தின் புதிய தன்மையில் தம்மை மீண்டும் பொருத்திக் கொள்ளவேண்டும். அப்போராட்டம் பெரும்பாலும் மற்றெல்லாவற்றையும் விட முதலாவதாக தேசியத்தன்மை கொண்டது. இவ்வாறு செய்வதன் மூலம், வர்க்கச் சுரண்டலுடன் தேசியச் சுரண்டலையும் மார்க்சியக் கோட்பாட்டின் ஒரு அடிப்படைப் பகுதியாக இணைக்கும் முக்கியமான அடியை எடுத்து வைத்த லெனினுடைய உணர்வில் தொடர்ந்து செல்வார்கள்" என்பது ஹொரேஸ் பி.டேவிஸ் நூலின் இறுதிப் பந்தி. (ப.334)

முன்னேறிய இனக்குழு / குழுக்கள் ஏனையவற்றை ஆக்கிரமித்து சுரண்டலுக்கு உட்படுத்திய எமது சாதியச் சமூகத்தில் இப்புரிதலுட னான எமது வரலாற்றின் மீதான மறுவாசிப்பு அவசியம். இனி, அது எமது பணி; ஏற்கனவே இவை தொடர்பில் எழுதப்பட்டபோதிலும் இன்னமும் பயணம் தொடர அவசியமான வெளி விசாலமாயுள்ளது.

## உ.சாதியச் சமுதாயத்தில் மார்க்சியம்

ஆபிரிக்காவின் தேசியப் பிரச்சினை குறித்த அனுபவங்கள் நமது சாதியச் சமூகத்தின் பல அடிப்படைகளைப் புரிந்துகொள்ள உதவிகரமாய் இருக்கும். ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இனமரபுக்குழு ஒன்றை இன்னொன்று சுரண்டும் நிலை ஆபிரிக்காவில் காணப்பட்டுள்ளது. இத்தகைய நிலை காலனியக் காலம் முழுவதும் நிலவியிருந்து, சுதந்திரத்தின் பின்னர் புத்தாக்க வலுவோடு செயற்படலாயிற்று. அரசதிகார வேலைவாய்ப்புகள் சார்ந்து மரபுஇனக்குழு வாதங்கள் இனமரபுக் குழுக்களிடையே எழுச்சிகொள் வதைக் காணமுடியும் (டேவிஸ், ப.281). இன மரபுக் குழு (Tribes) என்பது

www.padippakam.com



இனக்குழுவைக் (Ethnic Group) குறிப்பதல்ல; இனமரபுக்குழுக்களுக்கு பொதுமொழி ஒன்று காணப்படுவதுடன் அவற்றினை ஒன்றுபடுத்துவதில் வலிமை மிக்க ஆயுதமாக மக்களின் மரபுவழி நம்பிக்கைகளும் பழக்கவழங்களும் காணப்படுகின்றன (டேவிஸ், ப.275).

அவ்வகையில், ஆபிரிக்காவில் இனமரபுக் குழுக்களை ஒன்றிணைப்பது வாயிலாக தேசங்களைக் கட்டமைக்கும் பணி நிறைவாக்கப் பட்டது. இன மரபுக்குழு மாந்திரிகப் பொது மூதாதையரைக் கொண்டிருக்கும் அடிப்படையில் பொதுத்தோற்றம் பற்றிய உணர்வை உடையன; தமக்குள் பிரிவும் மோதலும் எற்பட்டபோதிலும் இந்த உணர்வு அடிப்படையில் ஒரு இனமரபுக்குழு பொது எதிரிக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடும் வகையில் ஐக்கியப்படவல்லது (டேவிஸ், ப.273). இவ்வாறு நவீன வரலாற்றுச் செல்நெறியில் இனமரபுக் குழுவுக்கான நிலைத்த தன்மையை அவற்றிடையேயான பண்பாட்டின் ஒத்த தன்மை ஏற்படுத்திவிட்டுள்ளது (டேவிஸ், ப.276).

இத்தகைய இன மரபுக் குழு ஒன்றினுள் வர்க்கப் பிளவு காணப்படாதமையினால் ஆபிரிக்கா ஏற்றத்தாழ்வற்ற சமூக முறையையுடையதாகக் கருதப்பட்டதுண்டு. இதனை மறுத்துரைத்த சமீர் அமீனை முன்னிறுத்தி, "பல இடங்களில் சில இன மரபுக்குழுக்கள் பிற இன மரபுக் குழுக்களை அடிமை நிலையில் வைத்துள்ளன. அதன் விளைவாக ஒரு சாதி அமைப்பு ஏற்பட்டுள்ளது. பொருளாதார உபரி தோன்றும் இடங்களில் எல்லாம் சில உள்ளூர் குழுக்கள் சென்று அதைக் கைப்பற்றி, நிறுவனமாக்கி அந்த உபரியைத் தனது சொந்தக் குழுக்களின் கைக்கு வருமாறு செய்துள்ளது" எனக் காட்டுகிறார் ஹொரேஸ் பி.டேவிஸ் (ப.277). ஐரோப்பியர் வருகையின் பின்னர் உருவாகிவளர்ந்த வணிகமும் நகர்மயமாக்கமும் இன மரபுக்குழுக்களிடையே வர்க்க அமைப்புகளை உருவாக்கியது (டேவிஸ், பக்.277 - 278).

ஆபிரிக்க இன மரபுக்குழு மேலாதிக்கத்தால் ஏற்படும் சாதிமுறை தனக்கான சாதியக் கருத்தியல் பெற்று வலுவடையவில்லை. மாறாக, இந்தியாவில் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக இனமரபுக் குழு மேலாண்மையால் உருவாகிய சுரண்டல் முறை சாதியக் கருத்தியலுடன் இயங்கும் சாதிச் சமூகத்தை ஏற்படுத்தியுள்ளது. சமுதாய உழைப்புப் பிரிவினை தனியாட்கள் சார்ந்தன்றி வெவ்வேறு குலங்கள் சார்ந்து அமையும் சந்தர்ப்பத்தை கார்ல் மார்க்ஸ் காட்டியுள்ளார். குலங்களிடையிலான மோதலில் ஒன்று மற்றொன்றை அடிமைப்படுத்தி அப்பிரிவினை மேலும் விரிவடைய வழிகோலுவதைக் காட்டுவார். இயற்கைச் சுற்றுச் சூழல் சார்ந்து உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திப் பண்டங்கள், வாழ்க்கைமுறை அமையும்போது, குலங்களுக்கான கூட்டுத் தொழிலும் ஏனையவர்களுடன் தேவைக்கு அமைவான பரிமாற்றமும் அமையும் (கார்ல் மார்க்ஸ், பக். 477 - 478). உபரியை அபகரிக்கும் சாத்தியம் தோன்றியபின் மேலாண்மை பெற்ற சாதியினால் ஒடுக்கப்பட்ட சாதி தனக்கான ஒரே தொழிலைத் தொடர்ந்து



மேற்கொள்கையில் அதில் நுட்பத்திறனுடையதாக முடியும். "தலைமுறை தலைமுறையாகப் பேணி வளர்க்கப்படுவதும், தந்தை தனயனுக்குத் தருவதுமான தனித்தேர்ச்சிதான் இந்துவுக்கு இந்தச் செயல் திறமையை அளிக்கிறது; சிலந்திக்கும் இதே தனித்தேர்ச்சிதான் அதன் செயல்திறமைக்குக் காரணமாகிறது. இருப்பினும், இத்தகைய இந்து நெசவாளரின் வேலை பட்டறைத் தொழிலாளியின் வேலையுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் சிக்கலானதாகும்" என்பார் மார்க்ஸ் (ப.462).

"மனிதகுல வளர்ச்சியின் விடியற்போதில் காணும்படியான கூட்டுவேலைக்கு, வேட்டையாடி வாழ்கிற இனங்கள் மத்தியிலோ அல்லது, உதாரணமாக இந்திய கிராம சமுதாயங்களது வேளாண்மையிலோ காணும்படியான கூட்டு வேலைக்கு அடிப்படையாய் அமைவது எது? ஒருபுறம் உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமையும், மறுபுறம் தேனீ ஒவ்வொன்றும் தேன் கூட்டுடனான உறவிலிருந்து எப்படி தன்னைத் துண்டித்துக் கொள்வதில்லையோ, அதுபோல இச்சமுதாயங்களில் தனியாள் எவரும் தனது குலம் அல்லது சமுதாயத்தின் தொப்புள் கொடியிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்வதில்லை என்ற உண்மைதான்" (கார்ல்மார்க்ஸ், ப.453) எனக் கூறுகையில், சாதி முறைமைக்குள் ஆழமாக செல்லாதபோதிலும் வர்க்கப் பிளவடைந்த கிரேக்க ரோம் சமூகங்களிலிருந்து இன மரபுக்குழு மேலாண்மையால் ஒடுக்கப்பட்டு சாதிகளாக்கப்பட்ட சமூக முறைமையின் வேறுபாட்டை எடுத்துக்காட்டுகிறார் மார்க்ஸ். மாற்றமின்றி பொதுவுடைமை நீடிப்பதாகக் கருதப்பட்டுவருவது குறித்த தொடர்ந்த ஆய்வுகள் சாதிமுறை சார்ந்த மாறுபட்ட குணாம்சங்களையும் சமூக மாற்றச் செல்நெறியையும் இனங்காட்டியுள்ளன. சாதிகளுக்கான சமூக உடைமை , சமூக அந்தஸ்து, உற்பத்திமுறை தொடர்பிலான வாழ்க்கை முறைகள் பற்றிய பேதங்கள் தெளிவுறுத்தப்பட்டுள்ளன. (A Dictionary of Marxist Thought. PP 75-76).

இத்தகைய இனமரபுக்குழு மேலாண்மை வாயிலான சாதி முறைமையைத் தோற்றுவிக்க ஏற்ற சாதியக் கருத்தியல் எவ்வாறு தோன்றியது? பெருநிலப்பரப்புடைய நாடு என்ற வகையில் வென்றடக்கப்படுகிற இனக்குழுக்களை வெற்றிபெற்ற இனக்குழுக்கள் தாம் ஆளும் சாதியாகி வெல்லப்பட்டவற்றை உழைக்கும் ஒடுக்கப்பட்ட சாதிகளாக்க முடிந்தது எனும் வகையில் சிந்துவெளிப் பண்பாட்டுக் காலத்திலேயே சாதியம் தோன்றி விட்டதாகக் கருதுவோருளர். ஆபிரிக்கா முதல் கிழக்கில் சீனா - யப்பான் வரையில் இவ்வாறு சாதி தோன்றும் வாழ்முறை காணப்பட்ட போதிலும் இந்தியாவிலேயே சாதியக் கருத்தியல் தோன்ற முடிந்துள்ளது. அதனாலேயே ஏற்றத்தாழ்வுச் சாதிமுறைச் சமூக மாற்றங்களின் செல்நெறியில் வளர்ந்த சீனா, யப்பான் போன்ற நாடுகள் இந்தியச் சிந்தனை மரபான பௌத்தத்தை உள்வாங்க வேண்டியிருந்தது. இந்தியாவில் இந்து மதத்தோடு மேற்கொண்ட கருத்தியல்

படிப்பகம்

www.padippakam.com



போராட்டங்களும், அங்கு நிதர்சனமாகி வளர்ந்த வாழ்முறைகளும் காரணமாக பௌத்தத்தினுள் சாதியம் உள்ளிட்ட இந்துத் தாக்கம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது (அவ்வாறே பௌத்தம் வெற்றி பெற்றிருந்த இந்திய மண்ணை தன் பக்கம் மாற்றும் தேவை அடிப்படையில் பௌத்தத்தின் பல கூறுகளை இந்து சமயம் உள்வாங்க வேண்டியிருந்தது). இவ்வகையில் இந்து மதத்தின் ஒரு பிரிவுபோல ஆன, புத்தரை ஒரு முழு முதற்கடவுள் போல ஆக்கிய பௌத்தமே சீனா, யப்பான் போன்ற நாடுகளினது வாழ்முறைக்கு பொருந்த முடிந்துள்ளது என்பது கவனிப்புக்குரியது.

இவ்வகையில் இந்தியாவில் இந்து சமயம் சாதியத்தை வடிவமைக்க முடிந்தமையில் ஏற்றத்தாழ்வு வாழ்முறையை வந்தடைந்த சிந்து வெளிப் பண்பாட்டினரும், பல பத்தாண்டுகளாய்ப் பல்வேறு இனமரபுக் குழுக்களாக இந்தியாவினுள் நாடோடிகளாக வந்து 'வெளியிலிருந்து வந்தோர்' எனும் பொருள்படும்படியான ஆரியர்கள் புரிந்த மோதலும் தாக்குறவும் கலப்பும் இணைந்து உருவான பிராமணிய மதம் சாதியக் கருத்தியல் தோன்ற ஏற்ற வலுவான காரணி ஆனது. இப்பிராமணிய மதம் நிலவுடைமைச் சமூக உருவாக்கத்தில் ஏனைய இனமரபுக் குழுக்களையும் உள்ளீர்த்த நிலையில் இந்து சமயமாகப் பரிணமித்து சாதியக் கருத்தியலை முழு நிறைவாக்கி வழங்கியிருக்கிறது. சிந்து வெளிப் பண்பாட்டினரது வழிபாட்டு ஆகம முறைகளும், ஆரியரது இனமரபுக் குழுச் சிந்தனைமுறைமையும், ஏனைய இந்திய இனமரபுக் குழுக்களது சிந்தனைகளும் இணைந்த சாதியம் தனக்கான நீண்ட நெடிய வரலாற்றினையுடையது. இவை குறித்து பல்வேறு ஆய்வுகளும் வெளிப்படுத்திய காத்திரமான கருத்துகள் அடிப்படையில், "இந்துத்துவம், இந்துசமயம், சமூக மாற்றங்கள்" எனும் நூலின் "சாதியம்" எனும் இயல் சாதி வாழ்முறையின் தோற்ற வளர்ச்சியினை எடுத்துக் காட்டியுள்ளது.

அங்கு காட்டப்பட்டவாறு "இந்தியாவினுள் நுழையுமுன்னர் மூன்று வர்ணப் பிரிவை ஒன்றிலிருந்து ஒன்றுக்கு இலகுவில் மாறுவதற்கு மனத்தடையற்ற பேதத்துடன் கொண்டிருந்த ஆரியர்கள் இந்தியாவில் புதிய கருத்தியலாக வளர்த்துக் கொண்ட பின் மாறமுடியாத வம்சாவழித் தொடர்ச்சியுடைய கோட்பாடாக்கிக் கொண்டனர். இவ்வாறு முற்றிலும் மாறமுடியாத வர்ணபேதக் கருத்தியலாக்கியத்தில் சிந்துவெளிப் பூசகர்களாக விளங்கிப் புதிய பிராமணர்களாக இணைந்த வர்க்க பேதச் சிந்தனையாளர்களுக்கு முக்கியத்துவம் இருந்தது என்பதைக் குறைத்து மதிப்பிட முடியாது. சாதியம் ஏதாவது ஒரு இனத்தின் சதியல்ல... வர்க்கப் பிளவடைந்த சமூக வளர்ச்சிக்கான ஒரு வாழ்முறையாக இந்திய வரலாறு கண்டு அடைந்த பொருளியல் சமூக அமைப்பும் கருத்தியல் வடிவமும் சாதியம் எனத் திகழ்கிறது. இதன் உருவாக்கத்தில் பல்வேறு இனக் குழுக்கள் பங்கெடுத்துள்ளதைப் போன்றே, சமாதானமாகவோ வன்முறைக்குப் பணிந்தோ இந்தக்



கருத்தியலை இந்திய இனங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வடிவத்தில் வரித்துக் கொண்டன". (இரவீந்திரன், ப.120).

இருக்கு வேதத்தின் பிற்கூறில் புருசசூத்திரம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனும் நான்கு பிரிவுகளைக் கூறியிருந்ததாயினும் அதனை வர்ண அடிப்படையாக்கிக் கொள்ளவில்லை. பின்னர் அதர்வ வேதமே இந்தப் பிரிவுகளை வர்ணக் கருத்தியலோடு இணைத்துக் கூறியது என்பர் (Yalavarthi Naveen Babu. P.95). இவ்வாறு வர்ணக் கருத்தியல் கோட்பாட்டு நிலையில் நான்கு சமூகப் பிரிவுகளை முன்வைத்தபோதிலும் பல நூறு சாதிகளையுடைய நிதர்சனத்தைக் குறிக்க ஏற்றதாக வர்ணக் கோட்பாடு அமையவில்லை. சாதி எனும் சொல்கூட பிராமண மதம் சார்ந்த சமஸ்கிருதத்துக்குரியதல்ல. பௌத்தத்தின் மொழியாகத் திகழ்ந்த பாலி மூலம் சார்ந்ததே சாதி எனும் சொல் (Yatavarthi Naveen Babu, P.86). பிராமண மதத்தின் வர்ணக் கருத்தியலை புத்தர் ஏற்றுக் கொள்ளவில்லை; குறிப்பாக, பிறப்பினால் ஒரு சாதியினர் ஆன்மீகத் தலைமை கொள்ளலை அவர் முற்றாக நிராகரித்தார். அவர் அமைத்துக் கொண்ட ஆன்மீகத் தலைமை மையமான சங்கத்தில் இணையும் பிக்கு - பிக்குணிகளை அனைத்துச் சாதிப்பிரிவினர் மத்தியிலுமிருந்து வரவேற்றார். இவ்வாறு வர்ண பேதத்தை இயல்பற்றதெனக் கண்டித்து விவாதித்த நிலையில், சமூக நிதர்சனமாக வளர்ந்து வந்த சாதி இருப்பினை புத்தரும் பின்னர் பௌத்தர்களும் வலியுறுத்துவாராயினர். பின்னர் இந்து சமயம் சாதிகளை வர்ணக் கோட்பாட்டு நிலை நின்று விளக்க எடுத்த முயற்சிகள் குறித்து அறிவோம். வர்ணத்தைக் காட்டிலும் சாதியே சமூக யதார்த்தமாயினும் இந்து சமயம் வர்ணக் கருத்தியல் வாயிலாக சாதி வாழ்முறையை சுரண்டும் வர்க்க சமூக அமைப்புகளுக்கு பொருத்தமாக தகவமைத்து வழங்கி வந்தமையால் இந்தியாவில் சாதியம் வெற்றிகரமாக இயங்க முடிந்துள்ளது.

"சாதி அமைப்பு, இந்தியாவின் அடிக்கட்டுமான (Base), மேல் கட்டுமானக் (Superstructure) கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ள, இந்திய சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான அமைப்பு ஆகும்" (ஆனந்த் டெல்டும்ப்டெ, ப.28) என்பதனை இன்று பெரும்பாலான மார்க்சியர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இத்தகைய சாதிமுறை இந்தியத் தேசியம் என்பதனைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் மக்களைக் கூறுபோட்டுள்ளது. தேசிய உணர்வென்னும் வலிய பந்தத்தால் பிணைக்கப்படாமல், முன்னாள் காலனியிலிருந்து விடுதலை பெற்று ஐ.நா.சபை அங்கீகாரத்துடன் சட்டரீதியிலான இறைமையும் கொடியும் கொண்டிருப்பதனால் ஒரு தேசம் அமைந்துவிட இயலாது. "இதைக் கருத்தில் கொள்கையில், எண்ணற்ற சாதிகளாக அதாவது பழங்குடி மக்களின் தொகுதிகளாகப் பிளவுண்டு கிடக்கும் இந்தியர்கள் ஒரு தேசமாக இருக்கமுடியாது. ஒரு நிலப் பகுதியும் இறையாண்மையும் அவர்களை ஒரு தேசமாக உருவாக்குவதை

www.padippakam.com



எளிதாக்கலாமேயன்றி அவர்களைக் கட்டாயமாக ஒரு தேசமாக்கிவிடாது. இதற்கு மாறாக, தனித்தனியான சாதிகள் சில, நாமறிந்த வரலாறு நெடுக, தாம் அனுபவித்து வந்த ஒடுக்குமுறை பற்றி நீண்டகாலமாக நீடித்துவரும் உணர்வைப் பெற்றிருக்கின்றன. இச்சாதிகளிடம் தான் ஒரு தேசம் உட்பொதிந்து கிடக்கிறது. எனவே, இந்தியாவில் ஒவ்வொரு சாதியும் ஒரு தேசமே என அம்பேத்கர் கூறியதில் தவறொன்றுமில்லை" எனக் கூறும் ஆனந்த் டெல்டும்டெ, ஒடுக்கப்பட்ட சாதிகள் மீது ஆதிக்க சாதிகள் மேற்கொண்ட அதிகார வெறியும் சுரண்டல் கொடுமையும் சார்ந்து, "தேசம் என்பது சாதி ஏகாதிபத்தியம் தான். வரலாற்று வளர்ச்சியின் இந்தக் கட்டத்தில் வெளி ஏகாதிபத்தியத்தைவிட அதிகமாக எதிர்த்துப் போராட வேண்டியது இந்த சாதி ஏகாதிபத்தியத்தைத்தான்" என்பார் (ஆனந்த் டெல்டும்ப்டெ, பக்.70- 71).

இவ்வாறு 'அதிகம் போராட வேண்டிய' அம்சம் குறித்துக் காத்திர மான முறையில் இடித்துரைத்த போதிலும், வெளி ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தலித் மக்களையும் ஒன்றிணைத்துப் போராடுவதற்குத் தடையாகவுள்ள சாதியவாதப் பிளவு யதார்த்தத்தை உணர்த்தும் பொருட்டாகவே ஆனந்த் டெல்டும்ப்டெ இவ்வாறு கூறுகிறார் என்பது கவனிப்புக்குரியது. "ஏகாதிபத்தியத்தின் சாரம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் மற்றொரு குறிப்பிட்ட மக்கள்மீது, வர்க்க அடையாளங்களுடன் மட்டுமன்றி சமூக அடையாளங்களுடனும் ஆளுகை புரிவதுதான். சமூகக் குழு அடிப்படையில் மட்டுமன்றி வர்க்க அடிப்படையிலும் இந்திய சாதி அமைப்பு ஏகாதிபத்தியத்தின் ஒரு வடிவம் என்பதைப் புரியவைப்பதுதான் மேற்சொன்ன விவாதங்களின் நோக்கம். ஒடுக்கும் தேசங்கள், ஒடுக்கப்படும் தேசங்கள் என்பனவற்றின் அடிப்படையில் ஏகாதிபத்தியம் பற்றித்தரப்படும் மரபான விளக்கத்தின்படி பார்த்தாலும்-கூட, சாதி அமைப்பு என்பது கீழ்சாதிகள் மீதான மேல்சாதிகளின் ஏகாதிபத்தியமே தவிர வேறல்ல. இந்த அப்பட்டமான உள்நாட்டு யதார்த்தத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாம் கவனிப்பதே இல்லை. இந்தப் பிரச்சினைகளைப் பற்றிய அறியாமையில் ஏகாதிபத்திய - எதிர்ப்பு முகாமைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து மூழ்கிக் கிடப்பதால், பலமிக்க ஏகாதிபத்தியச் சக்திகளை எதிர்த்துப் போராடுவதாக அவர்கள் கூறுவதெல்லாம் தலித்துகளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. அதனால்தான் அவர்களது கூற்று களைத் தலித்துகள் புறக்கணிக்கின்றனர். காலனியாட்சிக் காலத்தில் காங்கிரஸ் கட்சியும், இதேபோன்று, தான் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுவதாக உரிமை கொண்டாடிற்று. அதேசமயம் தலித்துகளின் போராட்டங்களை குறுங்குழுப் போராட்டங்கள் எனவும் அவர்களது தலைவர்களை ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள் எனவும் இழிவுபடுத்தியது. ஏகாதிபத்தியத்திய - எதிர்ப்பு முகாமைச் சேர்ந்தவர்களின் செயற்பாடுகள் மீது தலித்துகள் கொண்டிருந்த சந்தேகம் சரியானதே என்பதை வரலாற்று விவரங்கள்



மெய்ப்பிக்கின்றன. இன்றைய ஏகாதிபத்திய - எதிர்ப்பாளர்களைத் தவிர வேறு யாருக்கும் உண்மை எது என்பது தெரியாது!" எனும் ஆனந்த் டெல்டும்டெவின் கருத்து புறக்கணிக்கவியலாதது.

இவ்வகையிலான தலித் தேசம் என்பதிலான யதார்த்தத்தை மறுக்கும் ஒருவர் உயர்சாதி ஆதிக்க மனோபாவத்தின் பாதிப்புக்கு உள்ளாகாமல் தூய மார்க்சிய வாசகங்களுக்குள் இதனைப் பொருத்த முடியவில்லை என்ற இடர்ப்பாடே தடையேற்படுத்துவதாகக் கருதுவாராயின், அவர் மார்க்சியம் குறித்தும் இந்திய சமூக முறைமை மற்றும் வரலாற்றுச் செல்நெறி பற்றியும் அகநிலைவாத முடக்கமற்றுக் கற்பதற்கு முன்வருவது உத்தமம். மார்க்சியம் ஏதாயினும் வசனங்களுக்குள் முடங்கி தனக்கும் அடிப்படைவாதிகளை உருவாக்குவதற்கு உரியதல்ல. சமூக மாற்றம் வர்க்கப் பிளவினால் மட்டுமன்றி குலங்கள் மேலாண்மை பெற்று உபரியை அபகரிப்பது வாயிலான ஏற்றத் தாழ்வு முறை மூலமான இயக்கப் போக்கினை ஏற்படுத்தியமையாலும் சாத்தியமானதை மார்க்ஸ் எடுத்துக் காட்டியிருந்தமையினை ஏற்கனவே பார்த்துள்ளோம்.

வர்க்கப் பிளவுற்ற ஐரோப்பா பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கொந்தளிப்பு நிலையில் இருந்த சூழலில் அதன் முதலாளித்துவ அமைப்பையும் புரட்சியூடாக மலரவுள்ள பொதுவுடைமை அமைப் பையும் பற்றியதான ஆய்வுகளாக மார்க்சின் தேடல்கள் காணப் பட்டன. அவ்வாறே, ஏகாதிபத்தியக் கட்டத்தை அப்போதுதான் அடைந்த சூழலில் லெனின் தேசங்கள் குறித்தும் அவை ஏகாதிபத்தியங்களிலிருந்து விடுதலை பெற்று சுயநிர்ணத்தை வென்றெடுப்பது பற்றியும் தனது ஆய்வினை முன்வைத்தார். நமது சமூக முறையையோ, இன்றைய காலச்சூழலையோ மார்க்சும் லெனினும் எழுதிவைத்துவிட்டுச் சென்றிருக்கவில்லை. எல்லாச் சூழல்களுக்கும் எவ்வெப்போதைக்கும் ஆனவையாக அவர்களது வசனங்களைப் பொருள் கொள்ள முடியாது. குறித்த சூழலின் கால அவசியம் எத்தகைய சிந்தனைக் கோலத்தை அவர்களிடம் வெளிப்படுத்தியதோ, அதனை அவர்களது படைப்புகளில் கண்டறிந்து, அந்தச் சிந்தனை முறையை நமது சமூக முறைமைக்கும் இன்றைய காலத்துக்கும் பொருத்திப் பார்ப்பது அவசியம்.

ஏகாதிபத்தியம் எவ்வாறு தேசங்களை ஒடுக்கி உபரியை அபகரிக்கிறதோ அப்படியே நமது ஏற்றத்தாழ்வு உருவாக்கம் முன்னேறிய இன மரபுக் குழு / குழுக்கள் ஏனையவற்றை ஒடுக்கி உபரியை அபகரித்து வந்துள்ளது. அதற்கு ஏற்புடையதாக சாதியம் வெளிப்பட்டுள்ளது. பல நூறு ஆண்டுகள் உரிமைகள் மறுக்கப்பட்டு உழைப்பை உயர்சாதியினருக்கு தாரை வார்த்து மோசமான வாழ்நிலைக்கு ஆட்பட்டுவந்த தலித் மக்கள் தம்மை ஒடுக்கப்பட்ட தேசம் போல உணர்வதை எப்படி நிராகரிக்க இயலும்? வர்க்கப் பிளவடைந்த ஐரோப்பிய சமூகத்தின் உழைக்கும் வர்க்கத்தினர் போல இங்கு தலித் மக்கள் இல்லை; அங்கே உழைப்பாளர் குடும்பத்திலிருந்து

படிப்பகம்

www.padippakam.com



கற்று முன்னேறி நடுத்தர வர்க்கமாயோ முதலாளியாயோ ஆகிவிட்டால் புதிய அடையாள மாற்றத்தைப் பெற்றுவிட முடியும்; எவ்வளவுதான் மாற்றத்துக்குரிய புதிய தளங்களை எட்டியபோதிலும் தலித் அடையாளத்தை இங்கே அகற்றிவிட முடியாது. பல நூறு வருடங்களாய்க் கல்வியைப் பெறும் வாய்ப்புகளை மறுத்து, விரும்பிய தொழிலைத் தேர்வு செய்யும் உரிமையையும் மறுத்து அடிப்படை நலன்களைப் பெற முடியாதவர்களாக வாழ்ந்த மக்கள் சில பத்து ஆண்டுகள் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி குறைந்த தொகையினரே இவ்வாறு முன்னேறியபோதும், சாதிய இழிவுகளால் துவண்டுபோகும் நிலை நீடிப்பதனை மாற்ற உருப்படியாக எதனையும் செய்ய முடியாதவர்கள் தம்மை ஒடுக்கப்படும் தேசமாக தலித் மக்கள் உணர்வதனை எவ்வாறு தவறெனக் கூற இயலும்? இந்தியத் தேசியத்துக்கும் இனத்தேசியங்களுக்கும் எவ்வகையில் சுயநிர்ணய உரிமை உளதோ அவ்வாறே பல நூறு வருடங்கள் ஆதிக்க சாதிகளது ஆக்கிரமிப்பால் அடிப்படை வாழ்வாதாரங்கள் மறுக்கப்பட்ட தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதிப் பிரிவுகளுக்கும் தமது நலன்களை இனங்காணவும் அவற்றை வென்றடைய ஏற்ற மார்க்கங்களை வகுக்கவும் ஏற்றதான சுயநிர்ணய உரிமை உண்டு.

இனமரபுக் குழுக்கள் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்படுகையில் ஒரே நிலத்தொடர்பு என்பதைக் கவனிப்பதைவிடவும் அவர்களது இரத்த உறவும் தோற்றமூலமும் மதச் சடங்காசாரங்களும் பண்பாட்டு ஒப்புமே அடிப்படையாகக் கருதப்படுவது ஆபிரிக்காவில் பெறப்பட்ட வடிவம். ஒவ்வொரு சாதிகளும் தமக்கேயான தனித்த பண்பாட்டுக் கூறுகளையும் தமக்கான பிரத்தியேகப் பண்புகளையுடைய நாட்டார் மத வழிபாட்டுச் சடங்காசாரங்களையும் கொண்டுள்ளமையுடன் தமது தோற்றம் குறித்த ஐதீகங்களை இன்று வரை பேணித் தமது இரத்த உறவுப் புனிதங்களைப் பேணுவன. சாதிச் சங்கமாக ஒரே சாதியினர் இணைந்து நிறுவனமயப்படுவதும் இயல்பு. அந்தவகையில் சாதித்தேசம் என்பது மறுக்கவியலா நிதர்சனம். அதேவேளை எந்தவொரு சாதித் தேசமும் ஒரே நிலத்தொடர்புடன் தன்னந்தனியாகப் பிரிந்து செல்லக் கூடியவாறான அறுதிப் பெரும்பான்மையுடன் எங்கும் இல்லை. அப்படித்தான் பெரும்பான்மையாக செறிந்துவாழும் பிரதேசங்களும் 20 - 30 வீதங்களுக்கு மேற்படாத வகையில் இருப்பன. இவ்வகையில் பல்வேறு சாதிகளும் கலந்து வாழும் சூழல் காரணமாக சுயநிர்ணய உரிமை என்பதனைப் பிரிவினையாகக் கருதி அச்சம் கொள்ள இடம் இல்லை. பரஸ்பர புரிதல்களுடன் உரிமை மறுக்கப்பட்டு வந்த தத்தம் நலன்களை வென்றெடுக்கும் வகையிலானதாகவே சுயநிர்ணய உரிமையை இங்கு நாம் பொருள் கொள்ள இயலும்.

இவ்வகையில், தமது நலன்களை வரையறைப்படுத்தி அவற்றை வென்றெடுக்க ஏற்ற செயற்திட்டங்களை வடிவப்படுத்தும் முயற்சி இரு தசாப்தங்களுக்கு முன்னர் தலித் அமைப்புகளால் தமிழகத்தில் தொடக்கப்பட்டிருந்தது. பேரா. கல்யாணி அவர்களின் முன்முயற்சியில் தலித் ஆர்வலர்கள் சிலர் உரையாடிப் பெற்ற கருத்தாடலின் பேறாக அ.மார்க்ஸ் எழுதிய “தலித் அரசியல் அறிக்கை” இவ்விடயத்தில் கவனிப்புக்குரியது. இவ்வறிக்கை 12 தலித் அமைப்புகளது பிரதிநிதிகளும் தலித் ஆர்வலர்களும் என மொத்தம் 28 பேர் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் (தஞ்சையில், நவம்பர் 27, 1993) ஒன்றில் விவாதிக்கப்பட்டு திருத்தங்கள் செய்த வடிவில் வெளியாகியுள்ளது. “அம்பேத்கர் அவர்கள் வேறோரிடத்தில் குறிப்பிட்டதுபோல எதிர் சமூகத்தன்மையுடைய (அதாவது ஒற்றைச் சமூகமாக ஒன்றிணைய முடியாத என்கிற பொருளில்) பல்வேறு சாதியச் சிறுபான்மைக் குழுக்களாக இந்தியச் சமூகம் பிரிந்துகிடப்பதால் பெரும்பான்மையான மக்களை முதலாளியத்தைத் தகர்க்கும் குறிக்கோளை மட்டுமே முன்வைத்து ஒருங்கு திரட்ட முடியாது. மொத்த மக்கள் தொகையில் 85 சதமாக உள்ள தலித்கள், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், நகர்ப்புறப் பாட்டாளிகள் ஆகியோரை ஓரணியில் திரட்ட **பார்ப்பனியம் முதலாளியம் என்கிற இரட்டை எதிரிகளைச்** சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இத்தகைய ஒன்றிணைப்பின் மூலமே இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு சமூகப் புரட்சி சாத்தியமாகும்” என தலித் அரசியல் அறிக்கையின் 22ஆவது தீர்மானம் வலியுறுத்துகிறது. (அ.மார்க்ஸ், ப.117)

அதன் 34ஆவது தீர்மானம், ஒவ்வொரு சாதிக்கும் அந்தந்த சாதியின் மக்கட்தொகை வீதப்படி கல்வி, வேலைவாய்ப்புகளை பகிர்ந்தளிக்கும் முடிவையுட்படுத்திய பல்வேறு முடிவுகளுடன் “பார்ப்பன - ஆதிக்க சாதி மேலாண்மையைச் சகல மட்டங்களிலும் தகர்த்தெறியும்” உறுதியினை வழங்கும்; **“தாழ்த்தப்பட்டோர் + பிற்படுத்தப்பட்டோர் + சிறுபான்மையோர் ஒன்றிணைந்த சமூகப் புரட்சியே நமது இறுதி இலக்கு”** (அ.மார்க்ஸ்) எனப் பிரகடனப்படுத்தும். பார்ப்பன ஆதிக்க சாதி மேலாண்மையைத் தகர்ப்பதில் ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் வலுவான ஐக்கியம் பற்றி பேசுகின்றபோது ஜனநாயக நல்லெண்ணம் கொண்ட சாதியத்துக்கு எதிரான அனைத்து சக்திகளுடனான ஒருங்கிணைப்பும் பேசப்பட்டிருக்கவேண்டும். இங்கு வெளிப்படையாகக் கூறப்படாத போதிலும் பார்ப்பன ஆதிக்க சாதிகள் எதிரிகள் எனும் நிலையை உணர்த்தும் நோக்கு வெளிப்படுவதை அவதானிக்க இயலும். யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைத் தமிழர் மகா சபையும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் ஆதிக்க சாதியை எதிரியாகக் கணிக்காமல் சுரண்டல் அமைப்புக்கும் சாதிய முறைக்கும் எதிராக விட்டுக் கொடுப்பற்ற போராட்டங்களை நாற்பதாம் ஆண்டுகளின் ஆரம்பம் முதல் அறுபதாம் ஆண்டகளின் இறுதிவரை முன்னெடுத்துப் பெற்ற அரிய படிப்பினைகளை “சாதி தேசம் பண்பாடு” எனும் இந்நூலின் முந்திய பல கட்டுரைகள் எடுத்துக் காட்டியுள்ளன. இங்கு தமிழகத் தலித் இயக்கம் மார்க்சிய ஒளியில் கவனத்திற் கொள்ளத் தவறிய அடிப்படை அம்சம் எதிரிச் சாதிகளைக் கட்டமைத்தல் என்பதைச்



படிப்பகம்

www.padippakam.com



சுட்டிக்காட்டுதல் அவசியம். ஆயினும், தமிழகத் தலித் இயக்கத்தை முனைப்பாக்கி, தலித் அரசியல் அறிக்கை முன்வைக்கும் பல இலட்சியங்கள் மிகுந்த கவனிப்புக்குரியன. குறிப்பாக, இங்கு எமது பேசுபொருள் விடயத்தில் முக்கியத்துவம்மிக்கது எனும் வகையில் 29ஆவது தீர்மானத்தினை முழுதாகத் தருவது அவசியமாயுள்ளது.

“அகில இந்தியத் தேசியம் என்பதும், இந்தியா முழுமைக்குமான ஒரே பண்பாடு, மொழி என்கிற கருத்துக்களும் இந்துத்துவத்தின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்படுவதால் இவற்றோடு தலித் அரசியல் எந்தவிதத்திலும் சமரசம் கொள்ள முடியாது. எனவே அதிகாரங்கள் மையப்படுதலையும், தேசிய இனங்களுக்கு எதிரான மைய அரசின் செயற்பாடுகளையும் தலித் அரசியல் எதிர்க்கும். இந்தி, ஆங்கிலம் இரண்டுமே மேல்தட்டினரின் மேலாண்மைக்கே சாதகமான கருவிகள் என்பதால் தாய்மொழிக் கல்வி, தாய்மொழி வழி ஆட்சி மற்றும் தொடர்புகள் ஆகியவற்றைத் தலித் அரசியல் முன்வைக்கும். எனினும், பார்ப்பனமயமான பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் தமிழ்த்தேசியத்தை வரையறுக்கும் எந்த ஒரு தன்னுரிமை இயக்கத்தையும் தலித் அரசியல் ஆதரிக்காது. பார்ப்பனமயமாதலுக்கு எதிரான எதிர்க்கலாசாரக் கூறுகளுடன் கூடிய தலித் பண்பாட்டின் அடிப்படையில் ஒரு தமிழ்த் தேசியத்தை தலித் அரசியல் முன்மொழியும். சைவ - பார்ப்பனப் பண்பாட்டுக் கூறுகளுக்கெதிரான அவைதிக மதக் கூறுகளின் அடிப்படையில் ஒரு தமிழ்ப் பண்பாட்டைக் கட்டமைக்க முயன்ற அயோத்திதாஸ பண்டிதரின் முயற்சிகளும் பெரியாரின் எதிர்க் கலாசாரச் சிந்தனைகளும் இந்த வகையில் நமக்கு வழிகாட்டிகளாக அமையும். இங்கும்கூட “தன்னுரிமைக்கு முன்னுரிமை” என்பதாக இல்லாமல் “தீண்டாமை ஒழிப்பிற்கே முன்னுரிமை” என்பதே தலித் அரசியலாக இருக்கும். பார்ப்பனியத்தைக்கட்டிக் காக்கும் அகில இந்திய அரசைப் பலவீனப்படுத்துபவை என்கிற வகையில் இந்திய துணைக்கண்டத்திற்குள் உள்ள பிற தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை மேற்குறித்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரிக்கும்” (அ.மார்க்ஸ், ப.121).

இங்கும் இரு விடயங்கள் பிரச்சினைக்குரியன. தலித் அரசியல் (தலித் தேசிய முன்னெடுப்பு) என்பதன் பேரில் இந்தியத் தேசியத்தை நிராகரிப்பது ஏற்புடையதல்ல. தலித் நிலைப்பாட்டு தமிழ்த் தேசியம் ஒருபோதும் தனிநாடாக உருவாக இயலாது; அம்பேத்கர் போல இந்தியா முழுமையிலுமான தலித் ஐக்கியம் பேணப்படுவதுடன் தலித் மக்கள் தமக்கான சுயநிர்ணயத்தை ஏனைய விடுதலை அம்சங்களுடன் இணைத்து முன்னெடுப்பதே பலமான அடிப்படையை வழங்க உதவும். பிரிவினை அவசியமற்றது எனும்போது இனத்தேசியத்தை நிராகரிப்பதாகப் பொருள்கொள்ள வேண்டியதில்லை. தமிழினத் தேசியத்தின் சுயநிர்ணய உரிமை ஒன்றுபட்ட இந்தியாவினுள் வென்றெடுக்க இயலுமானது; அது தலித் தேசியத்துடனும், ஏனைய



இனத்தேசியங்களுடனும் ஒன்றுபட்டவாறு உலக மேலாதிக்கத்துக்கு எதிராக இந்தியத் தேசத்தின் சுயநிர்ணயத்துக்காகப் போராடியவாறு தனது ஐக்கியத்துக்கான சக்திகளது சமஉரிமையை மதித்தவாறு தன் சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்ளப் போராடியாக வேண்டும். இதனை எதிர்க் கலாசார வடிவிலன்றி பாட்டாளி வர்க்க இயக்கத் தலைமையிலான புதிய பண்பாட்டுப் போராட்டமாக முன்னெடுப்பது வாயிலாகவே வெற்றியை உத்தரவாதப்படுத்த இயலும். இத்தகைய புதிய பண்பாட்டு இயக்கம் சர்வதேச வாதத்தின் பாற்பட்டது என்கிற வகையில் அனைத்துவகைக் குறுகிய தேசிய வாதங்களையும் நிராகரிக்கும். வல்லாதிக்கக் கனவுடன் கூடிய இந்தியப் பெருந்தேசிய அகங்காரம் அற்ற இந்தியத் தேசியம், குறுந்தேசியவாதமாகாத தமிழினத் தேசியம், தலித்திய வாத முடக்கமல்லாத தலித் தேசியம் என்பன ஓரிடத்தில் ஒன்றிணைந்து மனுக்குல விடுதலையின் பகுதியான போராட்டமாக அமையவல்ல களத்தினை சர்வதேசவாதப் புதிய பண்பாட்டு இயக்கம் வழங்க முடியும். அதுவே பொதுவுடைமையை வென்றெடுக்க ஏற்ற மார்க்கமாக அமையும்.

தலித் அரசியல் அறிக்கையின் இறுதி இலக்காக அத்தகைய பொதுவுடைமை அமைப்பே விளங்கக் காணலாம். “சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அனுபவங்களைக் கணக்கில் கொண்டு அத்தகைய தவறுகள் மீண்டும் ஏற்படாவண்ணம் பொதுவுடைமையை நோக்கிய ஒரு சரியான ஜனநாயகத்தையும் அதற்குரிய வடிவங்களையும் நிறுவும்” வகையில் தலித் அரசியல் திகழும் என 34ஆவது தீர்மானத்தில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கக் காணலாம் (அ.மார்க்ஸ், ப.123). அறிக்கையின் இறுதித் தீர்மானம் (36ஆவது) “தீண்டாமை ஒழிப்பு, பார்ப்பன மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஆதிக்க ஒழிப்பு என்பன முதலாளிய ஒழிப்புடனும் இவற்றைக் கட்டிக்காக்கும் அகில இந்திய அரசு எதிர்ப்புடனும் இணைந்தவை என்கிற வகையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையோர், தொழிலாளி வர்க்கம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பார்ப்பனீயம், முதலாளியம் என்கிற இரட்டை எதிரிகளை நோக்கி இயங்கும். ஒடுக்கப்பட்டவர்கள் சாதிய ரீதியில் அடையாளம் கண்டு ஒருங்கிணைதல், ஆதிக்க சாதிகளின் ஆதிக்கத்தை வேரறுக்கும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதனுடன் முதலாளிய எதிர்ப்பை இணைத்தல் என்கிற வகையில் மரபு வழிப்பட்ட இடதுசாரி அரசியலிலிருந்து தலித் அரசியல் வேறுபட்டு நிற்கும்” (அ.மார்க்ஸ், பக்.124-125) எனும் வரிகளோடு நிறைவெய்தியுள்ளது.

இரு தசாப்தங்களில் தலித் அரசியல் எதிர்பார்த்த திசையில் முன்னேற முடியவில்லை. குறைந்தபட்சம் தலித் அமைப்புகளை ஒன்றிணைக்க இயலவில்லை. தீவிரமாக இயங்கிய வகையிலும் அன்றிருந்த நிலையிலிருந்து கடுகளவு முன்னேற்றத்தையேனும் எட்ட முடியவில்லை. ஒரே சாதனையாகச் சொல்லத்தக்க தலித் கட்சிகள் ஓரளவாயினும் ஆளுமையுடன் அரசியல் அரங்கில் தோன்ற

படிப்பகம்

www.padippakam.com



முடிந்துள்ளது எனும் நம்பிக்கையும், அவை இந்துத்துவத்துடனும் ஊழல்கள் நிறைந்த திராவிடரியக்க கட்சிகளுடனும் கூடிக் குலாவிச் சுயமிழந்து போனபோது அற்றுப் போனது. இந்த மூன்று அம்சங்களைத் தலித் அரசியலில் தீவிர ஆர்வங்காட்டிய அ.மார்க்ஸ் உட்பட பலரும் கூறக் கேட்க இயலும். தலித்தியவாத அடிப்படையில் அரசியல் முன்னெடுப்பு சாத்தியமில்லை என்பதனையே இது உணர்த்தி நிற்கிறது. சாதி அடிப்படையாகும்போது தலித்களிலும் எந்த சாதி (அதிலும் எந்த உட்பிரிவு - எந்தப் பிரதேசத்துக்கு உரியது) கையோங்கும் எனும் சந்தேகங்கள் தலைதூக்கும். அவ்வாறே சாதி நோக்கு எதிரிச் சாதிகளாக ஆதிக்க சாதிகளைக் காட்டுகிறபோது அந்தப் பார்வை சமநிலையிலுள்ள அடுத்தவொரு சாதியையும் எதிரியாகக் கணித்து மோதுதல்களுக்கு வழிவகுக்கும். என்னதான் பொதுவுடைமையை கட்டியெழுப்புவது என ஒடுக்கப்பட்ட சாதி முனையினும், தனது சாதி மேலாண்மைக்கான வாய்ப்பை மேற்கொள்ள ஏற்றவகையிலேயே சாதியம் இயங்கி வந்துள்ளது.

அந்தக் காரணங்களினாலேயே பாட்டாளி வர்க்க கட்சியின் தலைமை என்பது வலியுறுத்தப்பட வேண்டியதாகிறது. மரபு ரீதியான பாட்டாளி வர்க்கக் கட்சி மாற்றச் செல்நெறிளை உடன் கவனத்தில் கொண்டு தீர்மானங்களை வகுக்கத் தாமதித்திருக்க இடமுண்டு; அதன் பாதிப்புகளை உணர்ந்து புனர்நிர்மாணமுற்று புதிய வலுவோடு பாட்டாளி வர்க்கக் கட்சி முன்னேறும்போது மட்டுமே விடுதலைக்கான திசையில் மக்களை வழிநடத்த இயலுமாகும். பாட்டாளி வர்க்கம் மட்டுமன்றி பல்வேறு சக்திகளும் புரட்சிகர ஆற்றலில் எழுச்சியுற முடியும் என்பதை ஏற்று அவை அனைத்தையும் கம்யூனிஸ்ட் கட்சி அணி திரட்டி வருகிறது; அதேவேளை மிகுந்த வலுவோடு ஸ்தாபன மயப்பட்ட பாட்டாளி வர்க்கத்தை சார்ந்ததாக, அதன் சிந்தனை முறையோடு புரட்சியை முன்னெடுப்பதே விடுதலைக்கான ஒரே மார்க்கம் என்பதில் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாய் உள்ளது. இன்று தமிழகத்தில் தலித் கட்சிகளால் கைவிடப்பட்ட தலித் மக்களது சாதிய இழிவுகளுக்கு எதிரான போராட்டங்களைத் தீண்டாமை ஒழிப்பு அமைப்புகள் வாயிலாக கம்யூனிஸ்ட் கட்சிகளே முன்னெடுக்கின்றன என்பது கவனிப்புக்குரியது.

## 3.சமூக மாற்றத்திற்கான மாற்றுவழி

உலக முதலாளித்துவம் தனது நிலைபேறின் பொருட்டு புரட்சிகர சக்திகளைப் பல்வேறு வழிகளில் திசைதிருப்பும்போது தனது கொடூரமான உபரி அபகரிப்பைக் கைவிட்டுவிடுவதில்லை. அத்தகைய தாங்கவியலாச் சுரண்டலை அனுபவிக்கும் தேசிய இனங்கள், பாலின நிறபேதப் பிரிவுக்குள்ளாகும் பெண்களும் கறுப்பினர்களும், சாதிய ஒடுக்குமுறைக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகும் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் போன்றோர் புரட்சியுணர்வுந்தி சமூக மாற்றச் செயலாற்றலுக்கு கிளர்ந்தெழத் தயாராகும்போது கம்யூனிஸ்ட் கட்சிகள் அவர்கள் மத்தியிலான வேலைகள் மூலமாக பாட்டாளி வர்க்கப் போர்க்குணமிக்க ஸ்தாபனமயப்படுத்தும் பணிகளை மேற்கொள்வர். இரண்டு மூன்று தசாப்தங்களின் முன்னர் தனியே பாட்டாளி வர்க்க (மிஞ்சிப் போனால் வறிய விவசாயிகளை வென்றெடுத்தலுக்கான) அணியெனத் தனது வேலைப்பாணியை மட்டுப்படுத்தியிருந்த உலக கம்யூனிஸ்ட் அமைப்புகள் மாறிய சூழலில் புரட்சியுந்தலுக்காளான மக்கள் பிரிவுகளினுள் ஆற்றவல்ல வேலைத் திட்டங்களை உள்வாங்கி இயங்க முனைந்துள்ளன.



அத்தகைய புதிய வேலைப்பாணிக்கும், மாறிய உலகச்சூழலுக்கும் அமைவாகக் கட்சி அமைப்பைப் புனர்நிர்மாணம் செய்யும் கடமையும் கம்யூனிஸ்ட்டுகளால் உணரப்பட்டுள்ளது. குறிப்பாக மாற்றுப் போர்த்தந்திரங்கள் வாயிலாக முன்னேறித் தாக்கும் நிலைக்கு வளர்ந்துள்ள தென்னமெரிக்க கம்யூனிஸ்ட்டுகள் இத்தகைய மாற்றங்களில் முன்னுதாரணம் மிக்கவர்களாயுள்ளனர். நூறாண்டின் முன்னர் கட்டியெழுப்பப்பட்ட லெனினியக் கட்சி அமைப்பை இன்றைய மாற்றக் கட்டத்தில் அதேமுறையில் முன்னெடுப்பதில் நெருக்கடிகள் தோன்றியுள்ளன. இவ்வகையில், "அமைப்பியல் நெருக்கடி" குறித்துப் பேசும்போதும் "ஆளும் வர்க்கங்களின் அதிகாரத்திற்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்திய உலகின் முதல் புரட்சியின் வெற்றியில் சக்தி வாய்ந்த சாதனமாக அது இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அதன் காரணமாக அது சொர்க்கபுரிக்கான வாயில்போல் வலுவாக நம்பப்பட்டது" என்பார் மார்த்தா ஹர்னேக்கர். தென்னமெரிக்க மார்க்சியரான அவர் மேலும், "லெனினின் ஒரு புதுவகைக் கட்சி இருபதாம் நூற்றாண்டு" சமூக மறுகட்டமைப்பின் வெல்ல முடியாத ஒரு நூதனக் கண்டுபிடிப்பாகும்... தன்னுடைய உறுப்பினர்களிடமிருந்து அசாதாரணமான அர்ப்பணிப் பையும், சுய தியாகத்தையும், ராணுவத்தைவிடக் கூடுதலான கட்டுப்பாட்டையும், ஒற்றுமையையும் மற்றும் கட்சியின் முடிவை என்ன விலை கொடுத்தேனும் அமுல்படுத்துவதில் பூரணமான கவனம் ஆகியவற்றைக் கட்சியால் பெற முடிந்தது" எனக் கூறுவார் (மார்த்தா ஹர்னேக்கர், ப.67).

"உலகம் முழுமைக்கும் பொருந்தக்கூடிய ஒரு சூத்திரம் என்று எதுவும் இல்லை" எனக் கருதிய லெனினின் கட்சிக் கட்டமைப்புப் பற்றிய கோட்பாடும் கால இடமாற்றங்களுடன் வளர்ச்சியுறக் கூடியதே. எதேச்சாதிகார ஆட்சியின்கீழ் இருந்த பின்தங்கிய ருஷ்யச் சமூகத்தில் தோற்றுவிக்கப்பட்ட கட்சி வடிவம் ஓரளவு ஜனநாயகப் பண்புமிக்க வளர்ச்சியடைந்த தென்னமெரிக்காவில் 21ஆம் நூற்றாண்டிலும் அப்படியே பின்பற்றத்தக்கதல்ல. பாட்டாளி வர்க்க முன்னணிக் கட்சி மாற்றத்துக்கு அமைவான அமைப்பு வடிவங்களைக் கண்டடைய வல்லது. அவ்வாறே புரட்சிகர சக்தியாக பாட்டாளிவர்க்கத்தை மட்டும்

www.padippakam.com



கருதிய நிலையை மாற்றி தென்னமெரிக்காவின் மாறுபட்ட புரட்சிகர சமூகப் பிரிவுகளை கண்டறிவதற்கும் வரலாறு நிர்ப்பந்தித்திருந்தது; குறிப்பாக பூர்வகுடி மக்களும், கிறிஸ்தவர்களும் அங்கு வகித்த புரட்சிகரப் பாத்திரம் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதாயிருந்தது (மர்த்தா ஹர்னேக்கர், பக். 67-69). குறிப்பாக நிக்கரகுவாவின் சான்டினிஸ்டா முன்னணி மத நம்பிக்கைகளை முழுஅளவில் மதித்தது. கிறிஸ்தவர்கள் பலரும், பாதிரிமாரும் சான்டினிஸ்டா உறுப்பினர்களாக (சட்டமன்ற உறுப்பினர்களாகவும்) இருக்க முடிந்ததுடன் “1990 அக்டோபர் மாதம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் கிறித்துவர்கள் தங்களை ஆதரிப்பதை சான்டினிஸ்டாக்கள் அங்கீகரித்தார்கள்.” (மார்த்தா ஹார்னேக்கர், ப.70).

“அதுபோல, பூர்வகுடி மக்களின் நிலை பல பத்தாண்டுகள் லத்தீன் அமெரிக்க இடதுசாரிகளால் அலட்சியப்படுத்தப்பட்டது (மாரியாட்டோகி மற்றும் ஹாயா டி லா டோர்ரெ போன்ற வெகுசில விதிவிலக்குகள் தவிர). பூர்வகுடி மக்களின் விஷயத்தில் கறாரான வர்க்க ஆய்வுமுறையைப் பயன்படுத்துவதன் பொருள், அவர்களையும் ‘சுரண்டப்பட்ட சமூக வர்க்கமாகக்’ கருதுவதாகும். எனவே அவர்கள் தங்கள் நிலத்திற்காக மற்ற விவசாயிகளைப் போலவே போராட வேண்டும் என்பதாகும். இவ்விதம் அவர்களது ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் தொன்றுதொட்டு வரும் பாரம்பரியம் கொண்ட இனக் கலாசாரக் காரணிகளைப் புறக்கணித்தார்கள். இன்று, லத்தீன் அமெரிக்கப் புரட்சி இயக்கம் இரண்டு விஷயங்களைப் புரிந்து கொண்டிருந்திருக்கிறது: முதலாவதாக, ஒடுக்குமுறையாளர்களின் கூட்டாளிகளாகக் கருதப்படாமல் இருக்கவேண்டும் என்றால், இடதுசாரிகள் பூர்வகுடி மக்களின் மொழி, பழக்கவழக்கங்கள், மத நம்பிக்கைகள், மற்றும் கலாசார மாதிரிகளை மதிக்கவேண்டும். இரண்டாவதாக, பொருளாதார ரீதியாக மற்றும் கலாசார ரீதியாக ஒடுக்கப்பட்ட அந்தப் பூர்வகுடி மக்களின் அடக்கி வைக்கப்பட்ட ஆவேசம் அளவற்ற புரட்சிகர ஆற்றலாகப் பொதிந்துள்ளது; அவர்களில் தொன்றுதொட்டு இருக்கும் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் பாரம்பரியத்திலிருந்து இது கிளைக்கின்றது” (பக். 70- 71) என மார்த்தா ஹர்னேக்கர் வலியுறுத்திய அம்சங்களைக் கவனத்தி லெடுத்து இயங்கியதன் வாயிலாக இன்று தென்னமெரிக்காவில் மார்க்சிய இயக்கம் வீறுநடைபோட்டு முன்னேற இயலுமாகியுள்ளது.

பழங்குடி மக்களை ‘சுரண்டப்பட்ட சமூக வர்க்கமாகக்’ கருதி அவர்களது மொழிமுதலான பண்பாட்டு அம்சங்கள் அனைத்துக்கும் உரிய கவனிப்பை வழங்குவதானது அவற்றின் தேசியத் தனித்துவத்தை மதித்தலுக்கு ஒப்பானதே. அவ்வாறு தான் இருதசாப்பதங் களுக்குமுன்னர் தமிழகத்தில் பேசப்பட்ட தலித் அரசியல் என்பது அடிப்படையில் தலித் தேசியம் சார்ந்ததாக அமைந்திருந்தது; தென்னமெரிக்க கம்யூனிஸ்ட்டுகள் பழங்குடி மக்களின் தேசிய



உணர்வைக் கவனங்கொண்டு புரட்சியெழுச்சியைச் சாத்தியப்படுத் தியுள்ளது போன்றே தமிழகத்தில் கம்யூனிஸ்ட்டுகள் தலித் தேசியப் போர்க்குணத்தை மனுக்குலவிடுதலைத் திசையில் ஆற்றுப்படுத்தி வளர்த்தெடுத்து வருகின்றனர்.

இத்தகைய பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு உள்ளாகிற மக்கள் மத்தியிலான பணி வெறும் அரசியல் பொருளாதாரத் தளம் சார்ந்ததாக மட்டும் அமையாது. ‘அரசு அதிகாரக் கோட்டைகளைக் கைப்பற்றுவதே’ புரட்சி என்பது இடதுசாரிகளின் மற்றொரு கோட்பாட்டு ரீதியான முன்முடிவு. அரசில் மட்டுமே அதிகாரம் இருக்கின்றது என்கிற கருதுகோளிலிருந்து இது வருகின்றது. போல்ஷ்விக் கட்சியால் உத்வேகம் பெற்ற கட்சிகள் இந்த அதிகாரக் கோட்டைகளைக் கைப்பற்றுவதிலேயே தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தின. மக்களின் உணர்வைக் கலாசார ரீதியாக மாற்றுவது போன்ற போராட்டத்தின் இதர அம்சங்களைப் புறக்கணித்தனர். இது அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு செய்ய வேண்டியது என்கிற நிலைக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டது” (ப.71) என மார்த்தா ஹர்னேக்கர் குறிப்பிட்ட நிலை தென்னமெரிக்காவில் ஏற்கனவே இல்லாமலாக்கப்பட்டது போலத் தமிழகத்திலும் ஆக்கப்பட்டுவரக் காணலாம்.

“மாற்றப்பட வேண்டும் என்று குறிவைத்துள்ள பகுதிகளை வெறும் பொருளாதாரம் மற்றும் அரசு ஆகியவற்றுக்கு மட்டும் தொடர்புடையவையாக புரட்சிகரப் போராட்டம் சுருக்கிவிட்டது. ஆனால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்நியமாக்கப்பட்ட கலாசாரம் மற்றும் நாகரிகத்தை எதிர்ப்பதற்கு எதுவும் செய்யப்படவில்லை. சோஷலிஸத்தின் கீழும் கூட புதிய சமுதாயம் கடந்த காலத்துடன் மிகக் கடுமையாகப் போரிட வேண்டியிருக்கும் என்பதைத் தொண்டர்கள் மறந்துவிட்டார்கள்; ஏனெனில், கடந்த காலத்தின் குறைகள் தனிநபர்களின் நனவிலியின் மூலம் தற்காலத்திடம் அப்படியே ஒப்படைக்கப்படுகின்றன. ஆதலால் அவற்றை ஒழிப்பதற்குத் தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்” (மார்த்தா ஹர்னேக்கர், பக். 138 - 139) என்கிற வகையில் அனைத்துப் பிரிவு மக்கள் மத்தியிலும் பண்பாட்டுத் தளப்பணி வலுவாக முன்னெடுக்கப்பட வேண்டியதாக உணரப்படும் இவ்வேளையில், அரசியல் பொருளியல் ஒடுக்குமுறைகளைவிட அதிகமாகவே பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள எமது தேசங்களின் பழங்குடி மக்களிடமும் தலித் மக்களிடமும் இன்னும் அதிகமாகவே கவனம் செலுத்தியாக வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வோம்.

அந்நியப் பண்பாட்டுத் திணிப்பானது ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தேசத்தின் (அந்த வகையில் பழங்குடி - தலித் மக்களின்) பண்பாட்டினைச் சிதைத்தும் கீழானதாக உணர நிர்ப்பந்தித்தும் கையறு நிலைக்கு உள்ளாக்கியே ஏகாதிபத்தியச் சுரண்டலைச் சாத்தியமாக்

படிப்பகம்

www.padippakam.com



குகின்றது. அந்த வகையில் விடுதலைப் போராட்டம் என்பது அடிப்படையில் பண்பாட்டுடன் தொடர்புடையது. கப்ரால் கூறுவது போல "அன்னிய ஆட்சியிலிருந்து தன்னை உண்மையிலேயே விடுவித்துக் கொள்கிற ஒரு சமூகம் தனது சொந்தப் பண்பாட்டின் மேல்நோக்கிய வளர்ச்சிப் பாதைக்கு திரும்புவதாலும், சூழலின் வாழும் யதார்த்தத்தால் வளப்படுத்தப்படுவதாலும், அன்னியப் பண்பாட்டின் செல்வாக்குகளையும் அவற்றுக்கு இரையாவதையும் நிராகரிப்பதாலும், விடுதலைப் போராட்டமானது எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பண்பாட்டுச் செயற்பாடாகும்" (அமில்கர் கப்ரால், ப.24).

ஆக, பண்பாட்டுச் சிதைவோடு இணைந்த ஏகாதிபத்தியப் பிணைப்பிலிருந்து தேசிய விடுதலையை வென்றெடுக்கும் செயல் அடிப்படையில் பண்பாட்டுப் புரட்சி வடிவம் சார்ந்ததாகும் வாய்ப்புக்குரியது. அரசியல் - பொருளியல் ஒடுக்குமுறைப் பண்பு அடிப்படையில் அரசியல் புரட்சி முனைப்பாவற்கும் இடமுண்டு; பொருளாதாரப் போராட்டங்களோ அன்றி ஆயுதப் போராட்டங்களோ எழுச்சி கொள்ளவும் இயலும். அவற்றோடு பண்பாட்டுப் போராட்ட வடிவங்கள் இணைக்கப்படுவதல் தவிர்க்கவியலாததாகும். வர்க்கப் பிளவுற்ற ஐரோப்பியச் சமூகத்தின் கிரேக்க - ரோம் அடிமைப்புரட்சி, முதலாளித்துவ ஜனநாயக எழுச்சிக்கான பிரெஞ்சுப் புரட்சி, பாட்டாளி வர்க்கத்தின் சோஷலிஸ உருவாக்கத்துக்கான ருஷ்யப் புரட்சி என்பவற்றில் அரசியல் வகித்த தீர்க்கமான பாத்திரத்துடன் ஒப்பிடுகையில் பண்பாட்டுச் செயற்பாடுகளின் பங்கேற்பு மிகக்குறைவு. புரட்சியின் பின்னரான புதிய சமூக உருவாக்கத்தில் பண்பாட்டுப் போராட்டங்கள் அங்கே வீறுகொள்ள வேண்டியிருந்தது. தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் போதே பண்பாட்டு செயற்பாடு தீர்க்கமாக முனைப்புற்று வெளிப்படுகிறது என்பது கவனிப்புக்குரியது.

இன மரபுக் குழுக்கள் முன்னேறிய இன மரபுக் குழுக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு - ஒடுக்கப்பட்டு உருவான சாதி வாழ்முறைக்கான இந்தியாவின் சமூக மாற்றப் புரட்சிகள் பண்பாட்டு வடிவங்களில் நடந்தேறியுள்ளன. பௌத்த எழுச்சி அத்தகைய பண்பாட்டுப் புரட்சி என்பதை எம்.என்.ராய் காட்டியிருந்தார். பக்திப் பேரியக்கம் நிலவுடைமை எழுச்சிக்கான ஒரு போராட்ட வடிவம் என்பதனை கைலாசபதி காட்டியிருந்தார். அந்த வகையில் மத வரலாறுகளினுள் பொதிந்துள்ள வர்க்கப் போராட்ட அடிப்படைகளை இனங்காணும் வகையிலான மறுவாசிப்புகள் நமது கடந்த காலத்தின் மீது மேற்கொள்ளப்படல் அவசியம். வர்க்கப் பிளவடைந்த ஐரோப்பியச் சமூக வரலாற்றுச் செல்நெறி போன்றே சாதியச் சமூகமான நமது வளர்ச்சிகளும் எட்டப்படவில்லை. சமூக மாற்ற உந்துவிசையாக வர்க்கப் பிளவடைந்த ஐரோப்பிய சமூகத்தில் அரசியல் புரட்சிகளும், சாதியச் சமூகத்தில் பண்பாட்டுப் புரட்சிகளும் அமைந்திருந்தன என்பது அழுத்தம் கொடுத்துக் கவனிப்புக்கு உள்ளாக்க வேண்டிய



ஒன்று. அந்த வகையில் சாதியச் சமூகத்துக்கான மார்க்சியப் பிரயோகம் தனித்துவக் குணாம்சங்கள் பலவற்றை உடையது எனத் தெளிவு கொள்ளல் அவசியம்.

சாதியச் சமூகத்துக்கு எதிர்ப்பண்பாட்டு இயக்கமே பொருத்தமுடையதென இரு தசாப்தங்களின் முன்னர் தலித் இயக்கம் வலியுறுத்தியிருந்தமை குறித்து மேலே பார்த்திருந்தோம். மாறாக, பட்டாளி வர்க்க நோக்கிலான புதிய பண்பாட்டு இயக்கமே அவசியமானது என்பதும் கூறப்பட்டது. "இந்துத்துவம், இந்து சமயம், சமூக மாற்றங்கள்", "மதமும் மார்க்சியமும்" ஆகிய நூல்களில் புதிய பண்பாட்டு இயக்கம் குறித்து அதிகம் பேசப்பட்டுள்ளது. "புதிய பண்பாட்டு இயக்கத்தின் இலக்கு ஒரு பொதுவுடைமைப் புத்துலகம் படைப்பதாகும்; சுரண்டலமைப்பைப் பேணும் அதிகாரங்களைத் தகர்க்கும் அதே வேளை, பாட்டாளி வர்க்கச் சித்தாந்த அடிப்படையில் மக்கள் அரசொன்றைப் புதிய பண்பாட்டியக்கம் வலியுறுத்துகிறது. மக்கள் உழைத்து, உழைப்பின் பயனைத்தாமே அனுபவித்துத் தாம் கண்டடைய வேண்டிய முன்னேற்றத்துக்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் மக்களுக்கான ஜனநாயகத்தையும், சுரண்டலின் மீட்சியைத் தடுக்கும் வகையில் சுரண்டலாளர்களுக்கு எதிராக சர்வாதிகாரத்தையும் பிரயோகிக்கும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை உடையதாகப் புதிய பண்பாட்டு இயக்கம் கட்டமைக்க வலியுறுத்துகின்ற அந்த அரை அரசின் அதிகாரம் அமையும்" என புதிய பண்பாட்டு இயக்கத்தின் இலக்கு குறிப்பிடப்பட்டிருந்தது (இரவீந்திரன் 2006, பக். 254 - 255).

ஆயினும், தென்னமெரிக்க அனுபவங்களில் மிக மோசமான மக்கள் விரோத சர்வாதிகாரங்களை முகங்கொண்ட மக்களிடம் எந்தவகைச் சர்வாதிகாரம் பற்றி பேசிய போதிலும் அதைவிட்டுக் காததூரம் விலகும் விருப்பே மேலோங்குகிறது எனக்கூறுகிறார் மார்த்தா ஹர்னேக்கர். நம் மத்தியிலும் தடா - பொடா உட்பட இலங்கையின் பயங்கரவாத ஒழிப்பின் பேரிலான சர்வாதிகாரங்களால் வெறுப்புற்றுள்ள மக்களிடம் சர்வாதிகாரம் குறித்த அவசியங்கள் பேசு பொருளாக்க வேண்டியதில்லை என்றே படுகிறது. அவ்வாறே கட்சி அமைப்பின் கட்டுக்கோப்புகள் அனைத்தும் வெகுஜனத் தளத்திலான வேலைகளில் பேசப்பட அவசியமில்லை. கட்சி அமைப்பிலும் ஜனநாயக - மத்தியத் துவம் பேசப்பட்ட போதிலும் நடைமுறையில் ஜனநாயகத்துக்கு எத்தகைய இடமும் அற்றவகையில் மத்தியத்துவத்தின் பேரில் அனைத்தும் மேலிருந்து திணிக்கப்படுவதே இடம் பெற்று வந்துள்ளது. ஜனநாயகம் என்பதாக இரண்டாம் மூன்றாம் பட்ச அற்பவிடயங் களைப் பேசியவாறு அடிப்படையம்சங்களில் கட்சிக் கட்டுப்பாடு எனும் பேரில் தலைமைக்கு விசுவாசமாக இயங்குவதே ஊக்குவிக் கப்பட்டது. இதன் காரணமாய் சிந்தனை வீச்சு அற்ற மந்தைப் போக்கான ஊழியர்களே உருவாக்கப்பட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளின் பின்னடைவுக்கு இவ்வாறு வளர்க்கப்பட்ட ஆளுமைக்

படிப்பகம்

www.padippakam.com



குறைபாடுடைய ஊழியர்களையுடைய அமைப்பாக்கமும் அடிப் படைக் காரணங்களில் ஒன்றாயிற்று.

நூறாண்டுகளின் முன்னர் ஏதேச்சாதிகார ருஷ்யாவில் கண்டடையப்பட்ட அதே ராணுவக் கட்டுக்கோப்பான கட்சிமுறை இன்று ஏற்புடையதாக முடியாது. புதிய பண்பாட்டு இயக்கத்தை வெகுஜனத்தளத்தில் முன்னெடுக்க ஏற்ற ஜனநாயகப் பண்புமிக்க கட்சியமைப்பைக் கண்டறிவது அவசியம். சோஷலிஸம் மக்களுக்கான பரந்த தளவிரிவாக்க முடைய ஜனநாயகத்தை வழங்கும் எனக்காட்டும் வகையிலான ஜனநாயகப் பண்புடைய கட்சிமைப்பை வென்றெடுப்பது அவசியம். “ஆனால் இந்த அதிகார வர்க்க மத்தியத்துவப் பிறழ்வை எதிர்த்துப் போராடும் போது, அதிதீவிர ஜனநாயகத்திற்குள் வீழ்ந்துவிடாமல் இருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்; அது செயல்குறைந்து பேச்சு அதிகமாவதில் போய் முடிகிறது; அற்பமான விஷயங்கள் உள்பட அனைத்தும் விவாதப் பொருளாக ஆகிவிடுகின்றன; அது திட்டவட்டமான நடவடிக்கைகளை நீர்க்கச் செய்து விடுகிறது” எனும் மார்த்தா ஹர்னேக்கரின் எச்சரிக்கையையும் கவனத்திற் கொள்வோம் (ப.140).

ஜனநாயக - மத்தியத்துவம் என்பதே எதேச்சாதிகார ஒடுக்கலுக்கு கவர்ச்சியாக வெளிக்காட்டப்படும் போலியான வெற்றுவாய்ச்சவடால் என்பதாக கடந்த காலக் கம்யூனிஸ்ட் கட்சிகள் காட்டிவிட்டன. உண்மையில் சரியாகப் பின்பற்றப்படின் ஜனநாயக - மத்தியத்துவம் என்பது பாட்டாளி வர்க்க முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சிக்கான மிகச்சிறந்த விஞ்ஞானபூர்வக் கோட்பாடு. புரட்சிகர எழுச்சிக்கான காலத்தில் கேடான தனிநபர் மேலாண்மை ஒழிக்கப்பட்டு மத்தியத்துவம் மக்கள் நலன் சார்ந்த வடிவில் வெளிப்பட இயலும். அப்போது வெளிவேடக்காரர்கள் கட்சிக்குள் முக்கியத்துவம் பெற வாய்ப்பின்றி மக்கள் மத்தியிலிருந்தான உண்மையான புரட்சியாளர்களே கட்சி அணிக்குள் வருவர் என்பதால், அவர்களையுடைய ஸ்தாபனத்தினுள் போலித்தனங்களுக்கு இடமின்றி உயிர்ப்பான ஜனநாயக - மத்தியத்துவம் செயற்பட இயலும். அவ்வகையில் செயற்பட்டுள்ளமையைக் கடந்த கால வரலாற்றில் அவ்வப்போது தரிசித்துள்ளோம். பிற்போக்கு மேலோங்கியுள்ள காலங்களில் போலி வேடதாரிகளே தலைமை ஸ்தாபனங்களை நிறைத்துவிடுவதால் அர்த்தமற்ற ஜனநாயக வெற்றுவேட்டுகளும் எதேச்சாதிகார மத்தியத்துவமுமே நிதர்சனமாகும். உண்மையில் ஜனநாயகமற்ற மத்தியத்துவமோ, மத்தியத்துவமற்ற ஜனநாயகமோ உயிர்ப்பற்ற உடலுக்கு அல்லது உடலற்ற உயிரெனப் பேசுவதற்கு சமன். சொற்களுக்கு அப்பால் சமூக மாற்றத்தைச் சாத்தியமாக்கும் பாட்டாளி வர்க்க முன்னணிப் படைக்கான நடைமுறை வடிவத்தை எதிர்கால இயங்காற்றல் கண்டடையும்.

சென்ற நூற்றாண்டின் அறுபதாம் ஆண்டுகளில் ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் புரட்சிப் பண்புகளில் பலவீன முற்றதும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தடம்புரள்வின் ஆரம்பங்களும், செக்கோஸ் லவாக்கியாவினுள் சோவியத் படை பிரவேசித்ததும், உலகெங்கிலுமான கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஜனநாயகப் பண்பற்ற தலைமை மேலாதிக்கம் (மத்தியத்துவத்தின் பேரால்) மேலோங்கியதும் காரணமாக பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பதற்கு அப்பாலான (பாட்டாளி வர்க்கத்தை நிராகரிப்பதான) வேறு புரட்சிகர சக்திகள், குறிப்பாக விளிம்பு நிலை மக்கள் பற்றிய பேச்சு மேலோங்கத் தொடங்கியது. இத்தகைய பின்னணியில் 1968 இல் மாணவர் எழுச்சியுடன் இணைந்த பிரான்சியப் புரட்சி இயக்கங்கள் சமூக மாற்றத்துக்கான புரட்சியைவிட அவ்வப்போதான அதிகாரங்களுக்கு எதிராகப் போராடுவது என்பதான கருத்தாக்கங்களை வெளிப்படுத்தின. ஜனநாயகச் சூழல் அதிகாரத்தரப் புகளின் வெளிப்படையல்லாத ஆதிக்கங்களை மக்கள் ஏற்று ஒழுகும் பண்பை உருவாக்கியுள்ளது குறித்து பேசப்படலாயிற்று. பிரான்சியச் சிந்தனையாளரான ஃபூக்கோ இதுதொடர்பில் முதன்மைக் கவனிப்புக்குரியவர்.



“விஞ்ஞானத்துக்கும் அதிகாரத்திற்கும் உள்ள இறுக்கமான தொடர்பையும், விஞ்ஞானத்திற்கும் சித்தாந்தத்திற்கும் உள்ள பிணைப்பையும் பற்றி கேள்விகள் தொடுத்ததன் மூலம், அதிகாரம் சமூகத்தில் எந்தவகைகளில் தன் போக்குகளை நியாயப்படுத்திக் கொள்கிறது என்பதையும் ஃபூக்கோ விளக்கிக் கூறினார். இந்த வகையில் அவர் கூறுவதாவது: மத்திய காலத்தில் முடியாட்சி இருந்த காலகட்டத்தில் தான் அதிகாரம் என்பது மேலிருந்து செலுத்தப்பட்டு வந்தது. இதனால் அதன் ஒடுக்குமுறைத் தன்மை வெளிப்படையாகப் புலப்பட்டது. ஆனால், பூர்ஷ்வா சமுதாயம் வளர வளர அதிகாரம் என்பது பல விதங்களில் பலமையங்களில், சமுதாயத்தின் எல்லா வட்டாரங்களிலும் நுட்பமான முறையில் நிலவத் தொடங்குகிறது. நாமே அதை ஏற்றுக் கொள்ளும் வகையில், கருத்தாக்கங்களை நமக்குக் கற்பித்து சமூகத்தின் அறிவு வளர்ச்சியைச் சார்ந்த அதிகாரம் வாழ்முறைகளை படைக்கும் ஒன்றாக மாறி இயங்கி வந்தது. இந்த அதிகாரத் தன்மையை நாம் அரசன் இல்லாத அதிகாரமாகவும், ஒடுக்குமுறை இல்லாத சட்டமாகவும் உணர்ந்தறிய வேண்டும் என்கிறார் ஃபூக்கோ” என்பது வகீதா தரும் ஓர் அறிமுகம் (நிகழ், ப.172).

மார்க்சிய மெய்யியலும் அமைப்புகளும் எதிர்நோக்கிய நெருக்கடிகள் குறித்து “நிகழ்” சஞ்சிகை காத்திரமான தேடல்களை பலரிடமிருந்தும் பெற்றுப் பிரசுரித்திருந்தது. “நிகழ் - கட்டுரைக் களஞ்சியம்” இது தொடர்பில் பெறுமதிமிக்க ஒன்று. “மிசேல் ஃபூக்கோ - ஒரு அறிமுகம்” எனும் கீதா வரதராசன் கட்டுரை சுருக்கமாக அடிப்படைப் பிரச்சனைகளை முன்வைத்துள்ளது. “அதிகாரம் மக்கள் மேல் திணிக்கப்படும் ஒன்றல்ல, மாறாக அவர்களே ஏற்கும் வகையில், வாழ்க்கைக்குரிய நெறிகளோடு நியதிகளோடும் இணைந்து செயல்படும்

படிப்பகம்

www.padippakam.com



ஒன்று என்பது ஃபூக்கோவின் மையக்கருத்து" (நிகழ், ப.177) எனக்கூறும் வ.கீதா, "தனித்தனிப் பிரச்சனைகளில் அதிகாரத்தை எதிர்க்க உதவும் ஃபூக்கோவின் கோட்பாடுகள், எந்தக் கட்டத்தில் எந்தப் பிரச்சனை எதார்த்தத்தில் முதன்மை பெறுகிறது, ஏன் முதன்மை பெறுகிறது என்பதை விளக்குவது இல்லை. வர்க்கப் போராட்டம் என்பதற்கு முக்கியத்துவம் வழங்காத ஃபூக்கோ சமூகத்தின் விளிம்பிலிருப் போர்தான் அதிகாரத்தின் பலவடிவங்களை எதிர்ப்போர், எதிர்க்கக்கூடியவர்கள் என்று கூறுவதால் வர்க்கப் போராட்டத்தை இவர் கைவிட்டதாகத்தான் நாம் கொள்ள வேண்டும்" என்பதனையும் எடுத்துக் காட்டத் தவறவில்லை (நிகழ், ப.176). பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியில் சில மாதங்கள் உறுப்பினராக இருந்து வெளியேறிய ஃபூக்கோவில் மார்க்சியம் இறுதிவரை ஆழமான தாக்கத்தைச் செலுத்தியதாகக்கூறும் வ.கீதா, பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட்டுகளால் கடும் விமர்சனத்துக்கு ஃபூக்கோ உள்ளாக்கப்பட்டபோதிலும் அவரது கருத்துக்கள் "மார்க்சிய விரோதமானவையல்ல, மாறாக மார்க்சியத்துக்கு சவால் விடுபவை. மார்க்சியத்தை செழுமைப்படுத்த உதவுகின்றவை" எனக் கணித்துள்ளார் (நிகழ், ப.168).

இன்று வீறுடன் எழுச்சியுறும் மார்க்சியத்தின் உயிர்ப்பாற்றல் தென்னமெரிக்க சிந்தனையாளர்களை மார்ச்சிய அமைப்பை சுயவிமரிசனத்துக்குள்ளாக்கி, புதிதாக்கும் ஆரோக்கியமான வழிமுறைகளைத் தேட வழிகாட்டுகிறது; இது வரலாறு படைக்கும் தென்னமெரிக்க மக்களது படைப்பூக்க வெளிப்பாட்டின் பிரதிநிதித்துவம். அரைநூற்றாண்டின் முன்னர் ஐரோப்பா அதற்கு முன்னர் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆற்றல் மிக்க புது வரலாறு படைத்த வீரியத்தை இழந்தது. வரலாறு படைக்க வக்கற்ற நிலைக்கு ஆளான காலத்தில் வெளிப்பட்டது ஃபூக்கோவின் சிந்தனை. அவரது கருத்துகளின் வீரியமிக்க பக்கங்கள் மார்க்சியத்தின் வாயிலாக பெற்ற, வரலாறு படைத்த ஐரோப்பியச் செழுமையின் பாற்பட்டவை; பலவீனமான அம்சங்கள் வரலாறு படைக்கும் ஆற்றலை இழந்து வந்த ஐரோப்பியச் செல்லரித்த கூறுகள்.

வர்க்கப் போராட்டத்தை நிராகரிப்பதும், அதிகாரத் தைப் பொத்தாம் பொதுவில் நிராகரிப்பதும் ஃபூக்கோவில் வெளிப்படும் அடிப்படைப் பலவீனமாகும். சோஷலிஸ நிர்மாணத்தின் முதல் அனுபவங்களில் முன்னுதாரண நடைமுறைகளோ கோட்பாடுகளோ அற்ற சூழலில் சோவியத் பாட்டாளி வர்க்க முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சி உழைக்கும் மக்களின் சுரண்டலை ஒழிப்பதற்காகப் பிரயோகித்த அரை - அரசுக்கான அதிகாரத்தையும் எதிர்ப்பது என்பது அவர் 'மார்க்சிய விரோதி' ஆகவில்லையெனிலும் மார்க்சியத்தின் அடிப்படையை இழந்துவிட்டார் என்பதைக் காட்டுவது. மார்க்சியச் சாராம்சம் உறுதியாக வலுப்பட்டிருப்பின் அந்தச் சமகால வலாற்றுச் செல்நெறியின் தவிர்க்கவியலாத் தவறுகளை இனங்கண்டு சுய -



விமர்சனப்படுத்தியிருக்க முடியும். சற்று முன்னதாக பிரெக்ட் போன்றோர் அவ்வாறு தவறுகளை ஸ்டாலின் பாரதூரமாக இழைக்கிறார் எனக்கருதிய போதிலும் மார்க்சிய அடிப்படைகளை விட்டுவிலகிவிடாது சோவியத்தின் சாதனைகளை ஆதரிப்பவர்களாய் இருந்திருக்கிறார்கள். அது ஐரோப்பா வரலாறு படைக்கும் ஆற்றலின் இறுதித்தருணம்; ஃபூக்கோவின் காலத்தில் வலுவிழப்பு ஏற்பட்ட சூழலில் இவரின் தடுமாற்றம் புரிந்து கொள்ளக் கூடியதே.

ஐரோப்பாவின் வரலாற்றுப் படைப்பூக்க வலுவிழப்போடு இணைவாக சோவியத் தவறுகளும் வலுக்கவே ஃபூக்கோ அதிகாரம் என்பதை முற்றாக ஒழித்துக்கட்டிவிட முடியாது எனும் விரக்திநிலை கொள்கிறார். அதிகாரமற்ற சமூகம் சாத்தியமில்லை என்றார் (பாட்டாளி வர்க்க ஆட்சியிலேயே அப்படியாக இருக்கிறதே என்ற விரக்தி; வர்க்கங்கள் ஒழிக்கப்படும் எனும் உறுதி ஏன் இல்லாமல் போனது? ஒ, வர்க்கப் போராட்டம் என்பதே மாயையோ?) "அதிகாரமற்ற சமூகம் ஒரு மாயையே என்பதை உணர்ந்து இவற்றின் மூலம் புதிய உண்மையின் ஆட்சியை உருவாக்க வேண்டும்" எனக்கருதிய ஃபூக்கோ, "அதிகாரத்தை எதிர்கொள்ள எதிர் - சிந்தனைகளை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் பேசியுள்ளார்" எனக் காட்டுவார் வ.கீதா (நிகழ், ப.174).

இவ்வகையில் பின்னாலே மிகக் கேடான பாதிப்புகளை விளைத்த பின் நவீனத்துவச் சிந்தனையின் பிதாமகன் ஆனார் ஃபூக்கோ. "உங்களுடைய பின் நவீனத்துவத்தை விளக்குங்கள்" எனக்கேட்கப் பட்ட போது "பின் நவீனத்துவமா, அப்படியென்றால் என்ன?" எனக் கேட்டாராம் ஃபூக்கோ. அந்த வகையில் பின் நவீனத்துவத்தின் அனைத்துக் கேடுகளுக்கும் அவர் பொறுப்பாக வேண்டியில்லாத அளவில் அவருக்குள் மார்க்சியத்தின் எச்சசொச்சங்கள் இருந்துள்ளன. அது அதிகாரத்துவத்தைப் புரிந்து கொள்ள அவருக்கு உதவும் அளவில் இல்லாமல் போனது துரதிர்ஷ்டம். சுரண்டற் சமூகத்தின் ஒரு வெளிப்பாடுதான் அதிகாரத்துவமே அல்லாமல் அதுவே அடிப்படை அம்சம் கிடையாது. சுரண்டல் முறை ஒழிக்கப்பட்டு சமத்துவ சமூகம் படைக்கப்படும் போது அதிகாரத்துவம் முற்றாக இல்லாமல் போகும். ஏற்றத் தாழ்வுச் சமூக முறையைப் பேணும் சுரண்டல் அமைப்பின் பண்பாட்டுச் சூழலில் அனைத்துப் பிரிவினரிடமும் ஏதோவொரு வகையில் வெளிப்படும் அதிகாரத்துவம் என்பது சமூக கட்டுமானத்தின் அடிப்படையாகவுள்ள பொருளுற்பத்தி முறைசார்ந்தவிடயம். அந்தப் பொருளுற்பத்தி முறையை மாற்றி சமத்துவத்தை நோக்கி வளர்த்தெடுத்துச் செல்லும் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான உழைக்கும் மக்களின் அரை - அரசின் அதிகாரம் அத்தகைய சுரண்டல் சமூகத்தில் நிலவும் ஏதோவொரு வகை அதிகாரமல்ல, எதிர் அதிகாரம்; அதிகாரத்தை முற்றாக இல்லாது ஒழிக்கும் தவிர்க்கவியலாத ஒரு செயலொழுங்கு. அங்கு சுரண்டற் சமூக நடைமுறையின்

படிப்பகம்

www.padippakam.com



வெளிப்பாடுகள் தலைதூக்க இடமுண்டு - அதற்கு எதிராக மக்கள் போராடுவதற்கு வழிப்படுத்துவதாகவே மார்க்சியம் உள்ளது. அதற்கான சிந்தனையாளராக ஃபூக்கோ அமையவியலாமற்போனமை அவர்காலத்து வரலாற்று வெளிப்பாடு. இருப்பினும், மார்ச்சியத்தின் சில அடிப்படைகளோடு அவர் கம்யூனிஸ்ட் கட்சிகள் மீது வைத்த விமர்சனங்களைத் தொடர்ந்த வளர்ச்சியின் பொருட்டுக் கவனத்திற் கொள்ளல் அவசியம்.

வர்க்கப் போராட்டம் இன்று பொய்த்துப் போய்விடவில்லை என்பது தொடர்பில் அவதானிப்பைச் செலுத்தித் தற்காலிகமாக எமது விவாதத்தை நிறுத்தி வைக்கலாம். ஏற்றத் தாழ்வான சமூக முறை ஐரோப்பாவில் வர்க்கப் பிளவுடன் ஏற்பட்டது, இங்கே இன மரபுக்குழு மேலாண்மையிலான ஒடுக்குமுறையினால் சாத்தியப்பட்டது எனக் கண்டோம். ஏகாதிபத்தியக் கட்டத்தையடைந்த ஐரோப்பா இந்தியாவில் கற்றுக் கொண்ட ஒரு அடிப்படை விடயம் இன மரபுக்குழு மேலாண்மைச் சமூக உருவாக்கத்தில் பண்பாடு வகிக்கும் அதீத முக்கியத்துவம் - கருத்தியல் ஒடுக்குமுறைக் கருவியாக சாதியம் திகழ்தல். அதன் சாத்தியங்களை அங்கே பிரயோகிப்பதில் அவர்கள் தற்காலிகமாக வெற்றி பெற்றுள்ளார்கள். தவிர, பட்டாளி வர்க்க அணியைச் சலுகைபெற்ற - உலக மேலாதிக்கத்தின் உயர் குழாத்தின் பாற்பட்ட மேலான மக்கள் எனும் தோற்றப்பாட்டினை ஏற்படுத்த முடிந்துள்ளது. இங்கே ஆதிக்க சாதிகள் மத்தியிலும் உழைக்கும் மக்களிடம் சுவறியுள்ள சாதித்திமிர் போல ஐரோப்பாவின் உழைக்கும் மக்களும் ஏகாதிபத்திய ஆளும் சாதித்திமிர் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆயினும், பண்பாட்டுப் புரட்சி வடிவங்களில் உயர்சாதி உழைக்கும் மக்களையும் ஜனநாயக சக்திகளையும் வெற்றிகொள்ள முடிந்த பல போராட்டங்கள் முன்னுதாரணமாயுள்ளது போல அங்கேயும் பண்பாட்டுப் புரட்சிக்கான அவசியம் வலுத்துவரும். வர்க்கப் பிளவு முழுமைப்பட்ட ஐரோப்பாவில் சமூக மாற்ற உந்து சக்தியாக அமையும் அரசியல் புரட்சிபோல, இன மரபுக்குழு மேலாண்மை ஒடுக்கலுக்கான நமக்கு பண்பாட்டுப் புரட்சி சமூக மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் சாதிமுறைக்கான இந்தியா - சீனாவே உலகின் தலைமைக்கேந்திரமாகத் திகழ்ந்தது என்பது கவனிப்புக்குரியது.

இந்த சமூக மாற்றத்தில் ஏற்பட்ட வர்க்க மாற்றத்தினை ஐரோப்பிய வர்க்க முறைச் சமூகம் வழங்கியிருந்த மார்க்சியம் வாயிலாகவே நாம் கற்றுக் கொண்டோம். வெறும் சாதியல்ல, சாதிய வர்க்கம் எனும் பகுப்பை மார்க்சிய ஒளியில் வந்தடைகிறோம் (ஆரம்பத்தில் வறட்டுத்தனமாக வர்க்கத்தை மட்டும் பார்த்த தவறினைத் திருத்தி இன்று சாதிய வர்க்கப் பிரிவுகளை அடையாளம் காணப்பயிற்சி பெற்றுவருகிறோம்). அவ்வாறே அங்கும் ஊடாடும் வர்க்கப் போராட்டம் மீள இனங்காணப்பட்டு, மாறிய சூழலில் பண்பாட்டுப்



போராட்டங்களது அவசியத்தை நமது வரலாற்றின் ஊடாக அவர்கள் கற்றுக் கொள்வர். அதே வேளை நம் விழிப்புணர்வு ஏகாதிபத்தியச் சுரண்டலைத் தகர்க்கும் போது அங்கே வர்க்கப் போராட்டம் கூர்மையாவது தவிர்க்கவியலாததாகும். ஆக, உலக மனுக்குல விடுதலைக்கான அனைத்துத் தரப்பினரது போராட்ட அனுபவங்கள் வாயிலாகப் பொதுவுடைமைப் புத்துலகம் மலர்வது உறுதி. அப்போது தலித் மக்களும் பிற்படுத்தப்பட்டோரும் முழுமையான குடியுரிமைகளைப் பெற்றவர்களாய் மாறவும் இறுதியாகச் சாதி பேதங்கள் தகர்ந்து சமத்துவ வாழ்வில் அனைவரும் மகிழ்வினை எட்டவும் இயலும்.

## உசாத்துணை நூல்கள்


1. அமில்கர் கப்ரால், **விடுதலைப் போராட்டத்தில் பண்பாட்டின் பாத்திரம்,** தமிழில் : எஸ்.பாலச்சந்திரன், விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், 2001.
2. ஆனந்த் டெல்டும்ப்டெ, **ஏகாதிபத்திய - எதிர்ப்பும் சாதி ஒழிப்பும்,** தமிழாக்கம் : எஸ்.வி.ராஜதுரை, புத்தா வெளியீட்டகம், கோவை, 2006.
3. இரவீந்திரன்.ந, **இந்துத்துவம் இந்துசமயம் சமூக மாற்றங்கள்.** சவுத் விஷன், சென்னை. 2003.
4. இரவீந்திரன்.ந, **மதமும் மார்க்சியமும்**. சவுத் விஷன், சென்னை. 2006.
5. மார்க்ஸ்.அ, **தலித் அரசியல்.** எதிர் வெளியீடு, பொள்ளாச்சி. 2009
6. மார்க்ஸ் கார்ல், **மூலதனம்** முதல்பாகம் புத்தகம் ஒன்று, தமிழாக்கம்: தியாகு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 1998.
7. மார்த்தா ஹர்னேக்கர், **இடதுசாரிகளும் புதிய உலகமும்.** தமிழில்: அசோகன் முத்துசாமி, 2010.
8. ஞானி (தொகுப்பாசியர்), **நிகழ் - கட்டுரைக் களஞ்சியம் (மார்க்சியம் - அரசியல் - பொருளியல் - அறிவியல் - கலாசாராம்).** காவ்யா, சென்னை. 2009.
9. ஹொரேஸ் பி.டேவிஸ், **தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு.** தமிழில் : மு.வசந்தகுமார், விடியல் பதிப்பகம். கோயம்புத்தூர். 2009.
10. **A Dictionary of Marxist Thought,** Edited by: Tom Bottomore, Blackwell (Reference), Second Edition.
11. Nizar Ahmad, “A Note on Gandhi, Nation and Modernity”, **Social Scientist** Vol. 34 / Nos. 5 - 6, May - June 2006.
12. Yalavarthi Naveen Balu, **From Varna To Jati : Transformation from pastoral to Agrarian Social Formation, Jawaharlal Nehru university, New Delhi. 1989.**


படிப்பகம்